
# கம்பன்

## எடுத்த முத்துக்கள்



பேராசிரியர்: அ.ச. ஞானசம்பந்தன்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# கம்பன்

## எடுத்த முத்துக்கள்

பேராசிரியர். அ.ச. [redacted]ந்தன் M.A.

**வர்த்தமானன் பதிப்பகம்**
ஏ.ஆர்.ஆர். காம்ப்ளக்ஸ்,
141, உஸ்மான் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி: 8257995.

முதல் பதிப்பு : 1996

உரிமை பதிவு செய்யப்பெற்றது

**விலை: ரூ.75.00**

Laser at: Varthamanan Computer Systems, Madras-17.
Printed at: Varthamanan Printers, Madras-17.



# காணிக்கை

1932 முதல் அவரது இறுதிக் காலம் வரை நேரிடையாகவும், அதன்பிறகு ஆன்ம வடிவில் இருந்துகொண்டே இன்றுவரை நயந்தும், கடிந்தும் என்னை வழிநடத்துபவரும், அண்மையில் இந்நூலை எழுதுமாறு என்னைப் பணித்து ஊக்கியவரும் ஆகிய என் குருதேவர், பல்கலைச் செல்வர், பன்மொழிப் புலவர்

டாக்டர் **தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்** அவர்கள்

திருவடிகட்கு இந்நூலைக் காணிக்கை ஆக்குகின்றேன்.

-ஆசிரியர்.

பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்

ளின் எண்பதாம் ஆண்டு பிறந்த நாளில் இந்
னை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

—பதிப்பகத்தார்.

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆசிரியர் முன்னுரை | 5 |
| 2. | மாணவர் முன்னுரை | 8 |
| 3. | பால காண்டம் | 29 |
| 4. | அயோத்தியா காண்டம் | 59 |
| 5. | ஆரணிய காண்டம் | 101 |
| 6. | கிட்கிந்தா காண்டம் | 133 |
| 7. | சுந்தர காண்டம் | 197 |
| 8. | யுத்த காண்டம் | 247 |

# ஆசிரியர் முன்னுரை

கோவை, கம்பன் அறநிலையத்தார் கம்பனுடைய இராம காதைக்கு, தக்கார் பலரைக் கொண்டு உரைவகுக்க முடிவு செய்தனர். அவ்வுரையாசிரியர் குழுவில் இருந்து கொண்டு பலரும் எழுதுவதை ஒருமுகப்படுத்தும் நெறியாளர் பணியை நான் ஏற்றுக்கொண்டேன். உரை புதியதாக வகுக்கப்படுதலின், ஒவ்வொரு காண்டத்திற்கும் பருந்துப் பார்வையாக ஒரு முன்னுரை எழுதப்பட வேண்டும் என்று **கம்பன் அறநெறிச் செம்மல் திரு. ஜி.கே.சுந்தரம்** விரும்பியதுடன் அப்பணியை நானே மேற்கொள்ள வேண்டும் என்றும் விரும்பினார். ஏனைய உறுப்பினர்களும் இக் கருத்தை ஏற்றுக்கொண்டமையின் ஒவ்வொரு காண்டத்திற்கும் முன்னுரை எழுதத் தொடங்கினேன். ஏற்கனவே கம்பனைப் பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளமையின் இப்புதிய பணியில் சில நன்மைகளும், சில சிக்கல்களும் தோன்றின. முன்னர் எழுதியவற்றை விட்டுவிட்டுப் புதிய சிந்தனையில் நாட்டத்தைச் செலுத்தினேன். அதன் பயனாக ஒவ்வொரு காண்டத்திலும் சில புதிய எண்ண ஓட்டங்கள் தோன்றலாயின.

பால காண்டத்தில் கோசலத்தை, உடையார் இல்லார் இல்லாத சமுதாயமாக ஏன் படைத்தான் என்ற ஒரு வினாவிற்கு ஒரு விடையும், தர்மகர்த்தாத் தத்துவமும் மனத்திடைத் தோன்றலாயின.

அயோத்தியா காண்டத்தில் வாலாயமாகத் "தீயவள்" என்று பட்டம் சூட்டப் பெற்ற கைகேயியைப் புதிய கோணத்தில் பார்க்கத் தொடங்கினேன். அதன் பயனாக அவள் சமதிருஷ்டி உடைய கர்மயோகி ஆவாள் என்ற கருத்து மனத்தில் வலுப்பெற்று எழுத்துவடிவம் பெறலாயிற்று.

ஆரணிய காண்டத்தில் கர தூடணன் வதம் பற்றி ஏன் இத்தனை பாடல்கள் பாட வேண்டும் என்ற வினா என்

மனத்தில் தோன்றவே, அதற்குரிய காரணத்தைச் சிந்தித்ததன் பயன் இக்கட்டுரையில் இடம் பெறலாயிற்று.

கிட்கிந்தா காண்டம் என்றுமே பிரச்சனைக்குரிய ஒரு காண்டமாகும். மறைந்து நின்று அம்பு தொடுத்து வாலியைக் கொன்றது நியாயமா என்ற வினா ஆயிரம் வருடங்களாகக் கேட்கப்பட்டே வந்துள்ளது. பக்தி பூர்வமாக இப் பிரச்சினையை அணுகுபவர்கள் இச் செயலில் தவறு காண்பதில்லை. இலக்கிய பூர்வமாக இதனை அணுகுபவர்கள் இராமன் தவறு இழைத்தான் என்று கூறிவருகின்றனர். இவ் இரு சாராரும் இராமனைப் பற்றித்தான் ஆராய்கிறார்களே தவிர வாலியைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. இராமன் அம்பு பட்டதால் அவன் வீடு பேற்றை அடைந்தான் என்று கூறுபவர்கள் "வாலி மோட்சம்" என்று இப் படலத்திற்குப் பெயர் சூட்டினர். எதிர்த் தரப்பினர் இராமன் தவறு செய்தான் என்று கருதுபவர் ஆதலின் "வாலி வதை" என்றே இப்படலத்திற்குப் பெயர் சூட்டினர். "இவ் விரண்டுக்கும் இடையே நின்று இராமனை விட்டுவிட்டு வாலியைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். அதன் பயனாக இராமன் கூற்றாக வரும் "நீ இது பொறுத்தி" என்ற தொடருக்கும் "நிரம்புவான் ஒருவன் காத்த நிறை அரசு" என்ற தொடருக்கும் பலருடனும் மாறுபட்டுப் பொருள் காணப்பெற்றுள்ளது.

இராம காதையின் பல பகுதிகள் ஆராய்ச்சிக்கும், கருத்து வேற்றுமைக்கும் இடம் தருவனவாகும். வால்மீகியின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் பொழுதும் அத்தியாத்மா இராமாயணம், ஜைனஇராமாயணம் என்பவற்றின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்பொழுதும் கம்பன் செய்த மாற்றங்கள் நம் கருத்தைக் கவர்கின்றன.

பாத்திரப் படைப்பில் ஒரு சில இடங்களில் ,சில சொற்றொடர்களைப் புகுத்துவதன்மூலம் ஏனையோர் படைப்பிலிருந்து தன் படைப்பு மாறுபடுவதைக் கம்பன் வெளிப்படுத்துகிறான். உதாரணமாகக் கைகேயியையும் அவள் செயல்களையும் கூறும்பொழுது" நாடக மயில்" என்றும்

"தூமொழி மடமான்" என்றும் சொற்றொடர்களை அடுக்கி அப் பாத்திரத்தைப் புதிய கோணத்தில் பார்க்குமாறு செய்து விடுகிறான். கன்யா சுல்கக் கதையை அவன் கையாண்ட விதம் ஈடு இணையற்றதாகும். இது போன்ற பல சிறப்புக்களைக் கொண்டது கம்பனுடைய இராம காதை. ஒவ்வொரு காண்டத்திலும் சிறந்த பகுதிகளை ஓரளவு எடுத்து விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

தனித்தனியாக ஒவ்வொரு காண்டத்திற்கும் எழுதப்பெற்ற முன்னுரைகளின் தொகுப்பே ஆகும் இந்நூல் என்றாலும், அவை அனைத்தையும் ஒன்றுசேர்த்துத் தனி நூலாக வெளியிடும்பொழுது சிற்சில மாற்றங்கள் தேவைப்பட்டன. அம்மாற்றங்களுடன் இந்நூல் வெளிவருகிறது.

கிட்கிந்தா காண்டக் கட்டுரையில் வாலியின் வளர்ச்சி பற்றி விரிவாக ஆராயப்பெற்றுள்ளது. ஒரே பாத்திரத்தைப் பற்றிப் பல்வேறு கோணங்களில் நின்று ஆயும்பொழுது கூறியது கூறல் என்ற குற்றம் வந்தே தீரும்; படிப்போர் அதனைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

கோவை கம்பன் அறநிலையத்தார் இப்பணியை எனக்கு இட்டதாலும் என் மாணவர் டாக்டர் ம. ரா. போ. குருசாமியின் தூண்டுதலாலும் தான் இந்நூல் வெளிவருகிறது. அவர்கட்கு என்னுடைய நன்றியும் வாழ்த்தும் உரியனவாகும்.

இந் நூலினை மிகச் சிறந்த முறையில் ஆய்வு செய்து முன்னுரை என்ற தலைப்பில் ஓர் அழகிய கட்டுரையே அளித்துள்ள டாக்டர். ம. ரா. போ. குருசாமி அவர்கட்கு என் நல்வாழ்த்துக்கள் உரியதாகும்.

இதனை நல்ல முறையில் அச்சிட்டு வெளியிட்ட என் மாணவரும், பேராசிரியரும், வர்த்தமானன் பதிப்பக உரிமையாளருமான ஜெ. ஸ்ரீசந்திரன் அவர்கட்கும் என் நன்றி உரியதாகும்.

சென்னை-83
நவம்பர்-96

ஆசிரியன்

# மாணவன் முன்னுரை

**ம.ரா.போ. குருசாமி**

**முன்னும், இனிப் பின்னும்**

*தமிழ்ச் செம்மல் பேராசிரியர்* அ.ச.ஞா. *இதற்கு முன்னரும் கம்பராமாயணம் தொடர்பான நூல்கள் பல எழுதியுள்ளார். மீண்டும் அவர் வாயிலாகக் 'கம்பன் - எடுத்த முத்துக்கள்' என்ற இந்த நூல் வெளிவருகிறது. இது ஏன்? எந்தச் சூழ்நிலையில் உருவாகியிருக்கிறது? இந்த வினாவுக்கு உரிய விளக்கம் நூலாசிரியர் முன்னுரையிலே காணப்படுகிறது.*

*என்னைப் பொறுத்தவரையில் கவிச்சக்கரவர்த்தியின் படைப்பிலே மீண்டும் பல புதிய செய்திகளை அ.ச.ஞா. கண்டிருப்பதால் இந்த நூல் உருவாயிற்று என்றே கொள்கிறேன். 'நவில்தொறும் நூல் நயம்' என்பதற்கு இந்நூலின் தோற்றம் எடுத்துக்காட்டாகும். 'ஒரு காலைக்கு ஒருகால நயம் மிகும்' என்று பரிமேலழகர் எழுதியுள்ள நுட்பம் இங்கே நினையத்தக்கது. அதனால்தான் கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க்கு இதயம் களியாதே என்று தனியுன் கூறுகிறது.*

*கதை இராமாயணம்; கவிஞன் கவிச்சக்கரவர்த்தி. இவ்வாறு நுவலும் பொருளாலும் நுவலும் படைப்பாளியாலும் இரட்டைச் சிறப்புக் கொண்டது இராமாவதாரக் காப்பியம். எனவே, திறனாய்வுச் சக்கரவர்த்தியாகிய அ.ச.ஞா. கற்றனைத்து ஊறும் அறிவினராதலால் நவில்தொறும் நயம் கண்டு, முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர் என்பதற்கேற்பக் கம்ப ராமாயணம் பற்றிப் புதிய நூல் ஒன்றை வழங்குகிறார். முடிவிலவே செய்பவ ராதலின் மேலும் இக்காப்பியம் குறித்து நூல்கள் வழங்குவர் என எதிர்பார்க்கலாம். அள்ள அள்ளக் குறையா வளம் தர வல்லது கம்ப ராமாயணம்; ஆய்வு முயற்சியில் அலுப்பறியாதவர் அ.ச.ஞா.*

தமிழ் முனிவர் கணிப்பு

"ஞானசம்பந்தர் புரட்சி மனப்பான்மை யுடையவர். அவர் இப்பொழுது பச்சையப்பன் கல்லூரியிலே தமிழ்ப் பேராசிரியராய் இருக்கிறார். அவர்தம் மனப்பான்மை அவ்வளவில் நிற்குமா என்று ஐயுறுகிறேன். சம்பந்தர் நாட்டுக்குப் பேராசிரியராகுங் காலம் வரலாம்; வரல் வேண்டுமென்பது எனது வேட்கை. எரிமலை வாளா கிடக்குமோ? அஃது என்றாதல் ஒருநாள் தழல் உமிழ்ந்தே தீரும்" - திரு.வி.க. 1944ல் தம் வாழ்க்கைக் குறிப்புக்களில் தந்த குறிப்பு இது.

எரிமலை வாளா கிடக்கவில்லை. திரு.வி.க.வே இனம் கண்டு பின்னே 1947ல் எடுத்துக்காட்டினார்;

"கம்பர் பெருமானைப் பௌராணிக ஆட்சி சிறைப்படுத்தியது!... கம்பர் இந்நாளில் விடுதலை அடைந்தது கண்டு மகிழ்வெய்துகிறேன்! அவ் விடுதலை நல்கிய தோழர் சரவண ஞானசம்பந்தர்க்கு எனது வாழ்த்து உரியதாகுக!"

இராவணனைக் கொடியவனாக மட்டுமே காட்டிவந்த மேடைகளில், மேற்கு நாட்டுத் திறனாய்வு நோக்கில் அவன் மாட்சியை நிலைநாட்டி அவல வீரனாக அறிமுகப் படுத்தினார் அ.ச.ஞா. கட்டுப்பெட்டித்தனமான கணிப்புகளை உடைத்தெறிந்து பொசுக்கியது, அ.ச.ஞா.வின் எரிமலை மனப்பான்மை.

திறனாய்வுச் செம்மலின் புரட்சி இன்னமும் - எண்பதாண்டு நிறைவுற்றிருக்கிற இந்த 1996ஆம் ஆண்டிலும் - வீறு குறையாமல் விடைத்தே நிற்கிறது.

கைகேயியை மாசற்ற மாபெருந் தியாகியாக அ.ச.ஞா. காண்கிறார்.

பழகிப்போன மரபு வழியிலே கைகேயியைப் பரதனைப் போலவே பழிவளர்க்கும் செவிலியாகவே காண்பதிலும் காட்டுவதிலும் திளைக்கின்றவர்களுக்கு இந்நூலில் வரும் கைகேயி திகைப்பூட்டுவாள் திகைப்பு மேலும் மேலும் திடுக்கிட வைக்கும்.

விவரத்தை மேலே - நூலுள் - காணலாம்.

தமிழ் முனிவர் திரு.வி.க.வின் கணிப்பு இன்றளவும் சரியாகவே இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டவே இதனை இங்கே கூறினேன்.

**இந்த முன்னுரை**

நூலுக்குப் பாயிரம் வழங்கும் உரிமை தகுதியால் மூத்தோர்க்கும் சமநிலையோர்க்கும் மட்டுமன்றி இளையோ ராகிய மாணாக்கர்க்கும் உண்டு என நன்னூல் (51) குறிப்பிடுகிறது. ஆனால், மாணாக்கர்க்கு அந்த உரிமை வழங்கிய ஆசிரியன்மார்களை விரல்விட்டு எண்ணி விடலாம்.

மற்றவர்கள் மற்றும் மாற்றவர்கள் கருத்துகளைப் பொறுமையொடு கேட்டுக்கொள்ளும் பழக்கம் உள்ளவர் அ.ச.ஞா. அந்தப் பழக்கம் இன்றளவும் அவரை விட்டு நீங்காமையால் அவருடைய மாணாக்கனாகிய என்னை ஒரு முன்னுரை எழுதுமாறு கேட்டார்.

அவர் கேட்டுவிட்டார் என்ற பெருமையிலேயே தோய்ந்து, அந்த மிதப்பிலேயே இதனை எழுதுகிறேன்.

இந்த முன்னுரை, நூலின் திறனாய்வு அன்று; நூலை அறிமுகப்படுத்துவதோடு அமைந்துவிடும்.

திசைகாட்டும் கம்பத்தில் ஊர்ப் பெயர் மட்டுமே இருக்கும்; ஊர் இராது. திரைப்படப் பாடல்கள் கொண்ட புத்தகத்தில் கதைச் சுருக்கம் இருக்கும். அச் சுருக்கத்தின் கடைசியில் - கதையை முடிக்காமலேயே - 'மற்றவை எம் வெள்ளித் திரையில் காண்க' என்று எழுதியிருப்பார்கள்.

நூலை முழுவதாகவும் முறையாகவும் படிக்குமாறு தூண்டிவிட்டால் இந்த முன்னுரையின் நோக்கம் நிறைவெய்தியதாகும்.

ஆங்காங்கே சில செய்திகளை மட்டுமே இம் முன்னுரை சுட்டிக் காட்டும்.

## அ.ச.ஞா.வின் புதிய நூல்

*இந்தப் புதிய நூலின் பெரும்பான்மையான செய்திகள் முன்பே தமிழ் ஆர்வலர்கள் அறிந்தனவே. ஆம், கோவைக் கம்பன் அறநிலை வெளியிட்டுவரும் கம்ப ராமாயண உரைப் பதிப்பில் வெளியாகியுள்ள காண் - வாரியான முன்னுரைகளின் தொகுப்பே இந்த நூல். எனினும், ஒரே நூலாக வெளியிடும்போது சில மாற்றங்கள், சேர்க்கைகள் இடம் பெற்றுள்ளன.*

## நூலின் அமைப்பு

*முன்னுரை என்ற பெயரிலே - கம்பன் - எடுத்த முத்துக்கள் என்ற பெயரிலே கம்ப ராமாயணக் கதைச் சுருக்கத்தை எதிர்பார்க்க வேண்டா. இது கம்ப ராமாயண வசன நூல் அன்று.*

*முழுக் காப்பியத்துக்குமான ஆராய்ச்சி நூலும் அன்று. திறனாய்வுக் கூறுகளின் பல்வேறு அணுகுமுறையில் ஆராய்ச்சி செய்வதென்றால் பல நூறு, ஏன், பல்லாயிரம் பக்கங்கள் வேண்டும்; படிக்கும் நேயர்களுக்கு மிகுந்த பொறுமையும் வேண்டும்.*

*கம்பரின் காவியத்தின் உருவக் கட்டமைப்பினைப் புலப்படுத்துவதோடு, ஒவ்வொரு காண்டத்திலும் இடம் பெற்றுள்ள உயிர்நாடியான கூறுகளை ஆய்வு முறையில் புலப்படுத்துகிறார், பேராசிரியர் அ.ச.ஞா.*

*நூலினுள் ஆறு காண்டங்களைப் பற்றி அ.ச.ஞா. தந்துள்ள வாக்கியங்கள் இங்கே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. நிதானமாகப் படித்துப்பார்த்தால், நூலின் அமைப்பைப் புரிந்துக் கொள்ளலாம்.*

> **பாலகாண்டம்** : *"பாலகாண்டம் என்ற பொதுத்தன்மை யுடைய பகுதி போக, ஆற்றுப் படலத்தில் தொடங்கிப் பரசுராமப் படலம் ஈறாக 23 படலங்களாக வகுக்கப்பட்டுள்ளது.*
>
> *இப் பட்டங்கள் (மூன்று அல்லது) நான்கு*

பகுதிகளாகப் பிரித்து அவற்றிலுள்ள அருமைப்பாட்டை ஆராயலாம்.

**அயோத்தியா காண்டம்:** அயோத்தியா காண்டத்தில் பாத்திரங்கள் என்று சொல்லப்படுபவை மிகக் குறைவானவே யாகும். தசரதன், கூனி, கைகேயி, பரதன் என்ற நான்கு பாத்திரங்கள்தாம் இக் காண்டம் முழுவதும் அடைத்துக் கொண்டிருக் கின்றன. இடையில் 'குகன்' வருகின்றான். அவனும் மிக முக்கியமான பாத்திரம்தான் என்பதில் ஐயமில்லை. ஆக, இந்த ஐந்த பாத்திரங்களை மட்டும் வைத்துக்கொண்டு மிகப் பெரிய அயோத்தியா காண்டம் நடைபெறுகிறது.

**ஆரணிய காண்டம்:** .....பதின்மூன்று படலங்களைப் பெற்றுள்ளது, இக் காண்டம். தொடக்கம், முடிவு ஆகிய இரு படலங்களும் இராகவனுடைய அம்பு, கருணை நிறைந்த கண் ஆகிய இரண்டும் பட்டு முறையே விராதனும் சவரியும் பிறப்பு நீங்குகின்றனர் என்பதை அறிவிப்பன.

காப்பியம் என்ற முறையில் பார்த்தால், காப்பிய வளர்ச்சிக்கு இரண்டாவது திருப்புமுனை இக் காண்டத்தின் நடுநாயக மாக அமைந்துள்ளதைக் காணலாம்.

**கிட்கிந்தா காண்டம்:** .....பம்பை வாவிப் படலம் தொடங்கி மயேந்திரப் படலம் முடியப் பதினாறு படலங்களைக் கொண்டுள்ளது. ..... இக் காண்டத்தில்தான் ..... வாலியை

முழுவதுமாகக் காண்கிறோம். ..... கிட்கிந்தா காண்டத்தில் உலக மகா காப்பியங்களில் காணப்பெறாத, காண முடியாத இரண்டு பாத்திரங்கள் பேசப்படுகின்றன. ஒன்று, அனுமன்; இரண்டாவது, வாலி.....

**சுந்தர காண்டம்:** .....இக் காண்டம் முழுவதிலும், கடைசிப் படலத்தைத் தவிர, வேறு எங்கும், காப்பிய நாயகனைக் காணமுடியாது. .....தொண்டின் உறைவிடமாகவும், தன்னை இழந்த பக்திக்கு ஒரு முழு வடிவமாகவும் உள்ள அனுமன் காண்டம் முழுவதும் விசுவரூபம் கொண்டு விளங்குகிறான். ..... சுந்தர காண்டம் கடல்தாவு படலத்தில் தொடங்கித் திருவடி தொழுத படலத்தில் முடிகின்றது.

**யுத்த காண்டம்:** முதல் ஐந்து காண்டங்களின் பாடல் தொகை 6058 ஆகும். யுத்த காண்டம் மட்டும் 4310 ஆகும். என்றாலும், ஆரணிய காண்டத்தில் வரும் கரன் வதை 192 பாடல்கள் சுந்தர காண்டத்தில் வரும் கிங்கரர் வதை முதல் பாசப் படலம் முடிய உள்ள பாடல்கள் 316 - இவற்றையும் யுத்த காண்ட எண்ணிக்கையோடு சேர்த்தால் போர்பற்றிக் கூறும் பாடல்கள் மொத்தம் ... 4818 பாடல்கள் ஆகும். ... காப்பியத்தில் உள்ள 10368 பாடல்களில் போருக்கென்று 4818 பாடல்கள் பாடுவது தேவையா, பொருத்தமா?......

.....யுத்த காண்டம் 39 படலங்களைக் கொண்டது. .... ஒரு படலம் நீங்கலாக ஏனைய அனைத்துப் படலங்களும் ஒன்றுக்கொன்று

> தொடர்புடையதும் பொருத்தமுடையதுமாக அமைந்துள்ளன. ...வ.வே.சு. ஐயர்கூட இப் படலம் (இரணியன் வதைப் படலம்) காப்பியத்தோடு தொடர்பின்றித் தனித்து நிற்பதைச் சுட்டுகிறார். அப்படியானால், உலகில் மிகச் சிறந்த காப்பியப் புலவனாகிய கம்பனுக்கு இப் படலத்தின் பொருந்தாமை தெரியாமலா இருந்திருக்கும்?......
>
> .....எதிரணியில் ஈடு இணையற்று விளங்கும் இராவணன், வீடணன், கும்பகருணன், இந்திரசித்து, என்ற பாத்திரங்கள் இக் காண்டத்தில் படைக்கப்பட்டுள்ளன. ... சில பகுதிகளைமட்டும் தொட்டுக்காட்டுவது பொருத்த முடையதாக இருக்கும்......

மேலே தரப்பட்டுள்ள மேற்கோள்களைக் கவனமாகக்ப்படித்துப் பார்த்தால், இந்த நூலின் கட்டமைப்பும் கருத்தமைப்பும் என்ன என்பது தெளிவாக விளங்கும். காண்டங்களின் அமைப்பை எடுத்துச் சொல்கிறார்; சில காண்டங்களைப் பற்றிச் சொல்லும்போது வடிவமைப்புக்கு (Structure) முதன்மை கொடுக்கிறார்; வேறு சில காண்டங்களில் சில பாத்திரங்களை விதந்து கூறி விளக்குகிறார்; மற்றுள்ள காண்டங்களில் நுவலும் பொருளுக்கு முக்கியத்துவம் தருகிறார். எந்தெந்தக் காண்டத்தில் எந்தெந்தக் கூறுகள் கவனத்துக்கு உரியனவோ அந்தந்தப் பாங்கில் நூல் அமைந்திருக்கிறது.

**பத சாரம் :** திறனாய்வாளரின் விளக்கத்திலே கவிதையின் பல பாங்குகள் விளக்கம் பெறும். அவற்றுள் ஒன்று பத சாரம் காட்டுதல். இந்தச் சொல் ஏன்? வேறு சொல் ஏன் பொருந்தாது? சொல் நிரல் அமைப்பு எந்த நுட்பத்தைக் காட்டுகிறது? சொல் நிரல் மாற்றக்கூடாமைக்கு என்ன காரணம் ? - என்பன போன்ற சிந்தனைகளால் பத சாரம் சொல்வது மரபு. இந்தக் கலையின் எவரெஸ்டு எல்லையைக்

கண்டவர் அ.ச.ஞா. அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டோரும் அவர் படைத்த நூல்களைப் படித்தோரும் இதனை நன்கு அறிவர்.

இந்த நூலிலும் பல இடங்களில் பத சார நயம் உண்டு. ஒரே ஓர் இடத்தைச் சுட்டுவோம். உயிர் பிரியும் நிலையில் அறிவு பெற்றுத் தெளிந்ததாக வாலி பேசுகிறான். இங்கே எழுதியுள்ள வண்ணம் 'வெள்ளை' யாக அவன் சொல்லவில்லை.

ஏவுகூர் வாளியால் எய்து, நாய் அடியனேன்
ஆவி போம் வேலைவாய் அறிவுதந்தருளினாய்

என்கிறான், வாலி. வாளி எய்தவன்தானே கொன்றவன் - ஆவி போக்கியவன்? ஆவி போக்கும் வேளையில் அறிவு தந்தருளினாய் என்றுதானே சொல்லியிருக்க வேண்டும்?

> "அம்புதான் கொன்றது என்று நினைத்திருந்தால் ஆவி போக்கும் வேலைவாய் என்று சொல்லியிருக்க வேண்டும். அதற்கு மாறாக, ஆவி போம் வேலை என்று கூறியதால் 'இவ் உலகை விட்டுப் போகவேண்டிய நேரம் வந்து விட்ட காரணத்தால் என் ஆவி போகின்றது. இதற்கு இராமன் எய்த அம்பு காரணம் அன்று', என்பதை ஆவி போம் வேலைவாய் என்ற சொற்களால் நன்கு தெரியப்படுத்தி விடுகிறான்.....

இந்த விளக்கத்திற்கு முன்னும் பின்னும் உளவியல், ஆன்மீகம் சார்ந்த விளக்கங்களையும் ஆசிரியர் வரைந்துள்ளார். பதத்தின் சாரத்தைப் பிழிந்து காட்ட முன் - பின் விளக்கங்களும் உதவுகின்றன.

இதுபோன்ற இடங்கள் இந்நூலிலே பல உள.

## அமைப்பியல் விளக்கம்

காப்பியக் கவிஞன் கையாளும் சொற்களின் சாரத்தை விளக்குவது போலவே, காப்பிய அமைப்பியலை விளக்கிச்

செல்லும் இடங்களும் இந்நூலில் பல உள்ளன.

> "கம்பனது இராம காதையில் கிட்கிந்தா காண்டம் நான்காவதாகும். மொத்தம் உள்ள ஆறு காண்டங்களில் அயோத்தி, ஆரணியம், கிட்கிந்தை என்ற மூன்று காண்டங்களும் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடம்பற்றிப் பெயர் பெற்றனவாகும்...."

என்ற பெயர் விளக்கத்தோடு,

> காப்பிய வளர்ச்சியில் முதல் திருப்புமைய மாக அமைந்தது கைகேயி வரம் பெறுதலாகும். இரண்டாவது பெரும் திருப்பு மையம் சூர்ப்பணகை சூழ்ச்சியாகும்."

என்று கூறி, காப்பிய நிகழ்ச்சிப் போக்கை எந்தப் பகுதி நடத்திச் செல்கிறது என்பதை அ.ச.ஞா. புலப்படுத்துகிறார். சூர்ப்பணகை சூழ்ச்சி இராமகாதைக்கு ஏன் இன்றியமையாதது என்பதைச் சுட்டுவதோடு அமைந்துவிடவில்லை; உருவக் கட்டமைப்பைப் பற்றி எண்ணிப்பார்க்கும் எவரும் இதனைச் சொல்லிவிடுவார்கள். கிட்கிந்தா காண்டத்தில் வரும் இரண்டாவது திருப்புமையத்தைச் சுட்டியதோடு, அக் காண்ட நிகழ்ச்சிகளிடையே அழுத்தமான இடத்தைப் பெறுகின்ற வாலிவதையின் முக்கியத்துவம் ஒரு நெருடலாக அமைகின்றது என்பதையும் எடுத்துக்காட்டி விளக்குவது பேராசிரியர் அ.ச.ஞா.வின் சிறப்பாகும்.

> "....படிப்பவர்கள், கதை மாந்தர்கள் ஆகிய இரு தரப்பினருள் யாரும் எதிர்பாராத ஒரு தடை இருக்கிறது..."

என்று கூறி, வாலி இடம் பெறும் நிலையை காப்பிய வடிவியல் விளக்கத்தைத் தருகின்ற திறம் நன்கு அமைந்துள்ளது. (விளக்கமும் விரிவும் நூலினுள் காண்க)

கரன் வதைப் படலத்தைப் பின்னர் வரப்போகும் யுத்த காண்டத்திற்கு முன்னுரை என்று குறிப்பது ஆரணிய காண்டப் படலங்கள் பதின்மூன்றில் 1, 12 ஆம் படலங்களை

இணைத்துக் காட்டுவது, 2, 13 ஆம் படலங்களை இணைத்துக் காட்டுவது போன்ற இடங்கள் காப்பிய அமைப்பியல் விளக்கத்துக்கு எடுத்துக்காட்டான இடங்கள் என்பதை உணரமுடிகின்றது.

அமைப்பியல் விளக்கத்தில் வெற்று உருவ விளக்கம் மட்டுமல்லாமல், அமைப்பியல் விளக்கத்திலேயே குறிப்பு நயம் காட்டுவது இந்த நூலின் சிறப்பு என்று கூற வேண்டும்.

> "ஆரணிய காண்டத்தின் பதின்மூன்று படலங்களில் முதற் படலமாகிய விராதன் வதையும் பன்னிரண்டாவது படலமாகிய கவந்தன் படலமும் குற்றத்தைச் செய்து தண்டனை அனுபவித்தவர்க்கு விடுதலை நல்கியதைக் காட்டும். ஒரு பிறப்பிலிருந்து மற்றோர் உயர்ந்த பிறப்பிற்கு இராகவன் இவர்களை அனுப்பியதைக் காட்டும். இரண்டாவது, பதின்மூன்றாவது படலங்கள் ஞானம், பக்தி ஆகியவைகளில் முதிர்ந்து நிற்பவர்களுக்கு இறையருள் தேடிவந்து வீடு நல்கும் என்று அறிவுறுத்தும் பகுதிகளாகும்."

என்ற ஆரணிய காண்ட அமைப்பியல் விளக்கமும்,

> "சுந்தர காண்டம் கடல்தாவு படலத்தில் தொடங்கித் திருவடி தொழுத படலத்தில் முடிகின்றது. இந்தப் பெயர் வைப்பு முறையிலும் கம்பன் ஏதோ உட்கருத்தோடு இப் படலப் பெயர்களை வைத்தானோ என்று நினைக்கத் தோன்றுகிறது. கடல் என்று கூறினவுடன் 'பிறவிக்கடல்' என்பது பலருடைய உள்ளத்திலும் தோன்றி நிற்கும். ...... வள்ளுவன் கணக்குப்படி பிறவியாகிய ஆழியைக் கடப்பவர் இறைவன் அடி சேர்வர் என்பது தேற்றம். இக் கருத்தை மனத்துட் கொண்ட கம்பநாடன் 'கடல்தாவு படலம்' என்று முதற் படலத்திற்குப் பெயரிட்டு,

> தாவினவர்கள் என்ன பயனைப் பெறுவார்கள் என்று கூறுபவன்போலக் கடைசிப் படலத்திற்குத் 'திருவடி தொழுத படலம்' என்று பெயரிட்டான். பிறவிக் கடலைத் தாண்டினால் கிடைப்பது திருவடி என்ற கருத்து இங்கே புதைந்துள்ளமை அறியப்பெற வேண்டும்....."

என்ற சுந்தர காண்ட அமைப்பியல் விளக்கமும் ஆழ்ந்திருக்கும் கவியுளத்தின் குறிப்புப் பொருளைச் சுட்டிக் காட்டுகின்றன.

அயோத்தியா காண்ட அமைப்பியல் விளக்கத்திலும் இதுபோன்ற ஒரு விளக்கம் காணலாம் :

> "இந்தக் காண்டம் 'மந்திரப் படல'த்தில் தொடங்கி, 'திருவடி சூட்டுப் படல'த்தில் முடிகின்றது. கதைப்போக்கில் இந்தப் பெயர்கள் அமைந்திருந்தாலும், கதையை மறந்துவிட்டுப் பெயர்களை மட்டும் எடுத்துக்கொண்டால்கூட, ஒரு புதுமையான சிந்தனையைத் தோற்றுவிக்கின்றது. 'மந்திரத்தில் தொடங்கினால் திருவடி சூடலில் முடியும்' என்ற எண்ணத்தை நம்முடைய மனத்தில் தோற்றுவிப்பது போல இந்தப் படலங்களின் பெயர்கள் அமைந்திருக்கின்றன."

மேற்போக்காகப் பார்த்தால், வலிந்து காணும் நயம் போலத் தெரியும். ஆனால், எதனையும் நுண்மாண் நுழைபுலம் கொண்டு படைப்பவரும் படிப்பவரும் இந்தப் புதைபொருளை எளிதில் புறக்கணித்துவிட முடியாது. நல்ல கவிதை (Good poetry), பெருங்கவிதை (Great poetry) இரண்டின் தரமும் கம்பராமாயணத்தில் காணமுடியும் என்பதை மறந்திடக் கூடாது.

## கட்டமைப்புக்குச் சோதனை

காண்டங்கள்தோறும் அமைப்பியல் / கட்டமைப்புப் பற்றிச் சிந்தனை செலுத்திக் கணிக்கின்ற ஆராய்ச்சியாளர்க்குக் கம்பராமாயண அமைப்பு இரண்டு சோதனைகளை / தடைகளை எழுப்பும்.

கம்பராமாயணக் கட்டமைப்பு முழுவதையும் ஆட்டம் காண வைத்திடுமோ என்ற ஐயத்தை இரணியன் வதைப் படலம் எழுப்பும். செறிவும் இயைபும் கொண்டு இலங்கும் கம்ப ராமாயணத்தில் யுத்த காண்டத்தில் மூன்றாவதாகவுள்ள இரணியன் வதைப்படலம் காப்பியக் கட்டமைப்புக்குத் தொய்வு ஊட்டுவதாக அமைகின்றதே என்ற ஐயம் எழுவதைத் தடுக்க முடியாது.

கொந்தளிப்பு மிகுந்த சூழ்நிலையிலே முதலாம் இராவணனாகிய இரணியனின் கதையை நீளமாக (176 பாடல்கள்)/ நிதானமாகப் பேசிக்கொண்டிருக்க முடியுமா? சொல்லுகிற வீடணன் ஒருகால் பொறுமையாகப் பேசிக்கொண்டிருந்திருக்கக் கூடுமென்றாலும், இராவணனோ அவனுடைய அவைக்களமோ 'கதையளப்பை'க் கேட்டுக் கொண்டு பொறுமையாக இருந்திருக்க முடியாது. எனினும், கவிச்சக்கரவர்த்தி 176 பாடல்களை மற்றொன்று விரித்தல் போலவும் வெற்றெனத் தொடுத்தல் போலவும் எண்ணத்தக்க இப் படலத்தை ஏன் பாடினார்?

"இரணியப் படலம் ஒன்று தவிர ஏனைக் கம்ப ராமாயணம் முற்றும் அழிந்துவிட்டாலும் பெரிதல்ல. கம்பருடைய கவித சாமர்த்தியத்தையும் இயற்கைப் புலமையினையும் காட்ட இப் படலம் ஒன்றுமே போதுமான சான்றாகும்" - எனத் திருமணம் பேராசிரியர் செல்வக்கேசவ முதலியார் நெடும்பல ஆண்டுகளுக்கு முன்னரே கருத்துக் தெரிவித்திருக்கிறார். பேரா. செல்வக்கேசவர் தரும் மதிப்புரை கவிதை நயத்துக்குப் பொருந்தினாலும் காப்பியக் கட்டமைப்புப் பற்றியதாக இல்லை.

இம் முன்னுரைகாரனின் கணிப்பிலும் இப் படலம் சிக்கியதுண்டு. (இராமாயணச் சிந்தனை). அண்மையில் மேதகு நடுவர் இஸ்மாயில் அவர்களும் 'இரணியன் வதைப்படலம் ஏன்' என்ற தலைப்பில் குறுநூலே எழுதியுள்ளார்; விரிவாக எழுதவிருப்பதாகவும் செய்தி.

இந் நூலாசிரியர் அ.ச.ஞா. அவர்களின் திறனாய்வு வலையிலே இரணியன் சிக்காமல் இருப்பானா? பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் (1984ல்) 'கம்பன் - புதிய பார்வை' என்ற நூலிலே இந்தச் சிக்கல் பற்றி ஆராய்ந்திருக்கிறார். (பக் 202 - 206). இப்பொழுது வெளிவருகின்ற இந்த நூலிலும் இரணியன் வதைப் படலம் ஏன்? புதியது புனைதலாக அமைக்க வேண்டும் என்பது பற்றி எழுதியுள்ளார்.

> "அத்வைதமும் உபநிடதங்களும் பக்தி இயக்கத்தை அழுத்திவிட்டு மேலே வர முயன்ற 9ஆம் நூற்றாண்டில், தமிழர்கள் கண்ட பக்தி இயக்கத்திற்குத் தலைமை இடம் தருவதற்காகவே இரணியன் வதைப் படலத்தைக் கவிஞன் பொருத்தினான் என்பதனை அறியலாம். வான்மீகம் உட்பட எந்த இராமாயணத்திலும் காணப்படாத இப் பகுதியைக் கவிஞன் புகுத்துவதற்கு இதுவே காரணமாக இருந்தது போலும்"

இது இந்நூற்றாண்டின் அகத்தியராகிய அ.ச.ஞா. தரும் விளக்கத்தின் முடிவுநிலை.

காப்பியக் கட்டமைப்பு நோக்கில் பேராசிரியர் அவர்கள் இதுபற்றி மேலும் விரிவாக ஆராய்ந்து எழுத இடமிருக்கிறது. பேராசிரியர் அவர்களே "இதுவே காரணமாக இருந்தது" என்று முடித்துவிடாமல், ஒப்பில்போலி இணைத்து, "இதுவே காரணமாக இருந்தது போலும்" என்று வரைந்திருப்பது நம் கவனத்துக்கு உரியது.

இனி, காப்பியத்தின் கட்டமைப்புப் பற்றிய சிக்கல் எழுப்புவது மிகப் பெரிய யுத்த காண்டமாகும். யுத்த காண்டம்

பற்றிய விளக்கத்தின் தொடக்கத்திலேயே பேரா. அ.ச.ஞா. இந்தச் சிக்கலை எழுப்பி விடை கூறுகிறார்.

> "இராமனுடைய சிறப்பையும் பிராட்டியின் சிறப்பையும் கூறவந்த கம்பநாடன் காப்பியத்தில் உள்ள 10368 பாடல்களில் போருக்கென்று 4818 பாடல்கள் பாடுவது தேவையா, பொருத்தமா...."

தமிழக வரலாற்றுச் சூழலை எடுத்துக்காட்டி விளக்கிப் பேராசிரியர் தரும் விடை ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது. வான்மீகத்திலும் யுத்த காண்டம் மிக விரிவாகவும் பெரிதாகவும் இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

நால்வகைப் படைகள் கொண்டு போர் வெற்றி பல பெறுவது உண்மை வெற்றியாகாது அறநெறியையே முதலாகவும் முடிவாகவும் கொள்வதே உண்மையில் ஓர் அரசின் வெற்றியாகும். இக் கருத்தினைப் புறநானூறு, திருக்குறள் செய்திகள் கொண்டு அறம் தலை நிறுத்த வந்த பெருமானின் போர்த் திறத்தையும் அறத் திறத்தையும் ஆசிரியர் யுத்த காண்ட விளக்கத்தில் தெளிவுறுத்துகிறார். அமைப்பியல் நோக்கிலே மேலும் சிந்தனைக்கு யுத்த காண்டம் உரியதாக இருக்கிறது என எண்ண வேண்டியுள்ளது.

### பாத்திர விளக்கம்

பாத்திரங்களின் செயல்பாட்டைப் பொறுத்தே காப்பியக் கதையின் போக்கும் வெற்றியும் அமையும். தத்துவச் செறிவு, சமய நாட்டம் முதலான விழுப்பொருள்களும் சந்த நயம், சொல்லாட்சி முதலான கூறுகளும் மட்டுமே காப்பியத்துக்கு வெற்றி தந்துவிடுவதில்லை. கதை மாந்தர்களைக் கவிஞன் எப்படிப் படைத்து நிறுத்துகிறான் என்பதே காப்பிய வெற்றிக்குக் கட்டளைக் கல்லாக அமைகின்றது.

காப்பிய நாயகன் முதல் பிராட்டி உட்பட கைகேயி, தசரதன், பரதன், இலக்குவன், வாலி, மாருதி, சுக்கிரீவன், வீடணன், இந்திரசித்து, இராவணன் ஆகிய பாத்திரங்களின்

எண்ணம், சொல், செயல்களைக் கொண்டு நம் நெஞ்ச மேடையில் கம்பர் உலவச் செய்த வண்ணத்திலேயே விமரிசன வாசகங்களால் பேராசிரியர் அவர்கள் இந்த நூலிலே ஆங்காங்கே தீட்டிக்காட்டுகிறார்.

சூர்ப்பணகை சூழ்ச்சிப் படல விளக்கத்தில் சூர்ப்பணகை, கரன், இராவணன் ஆகியோர் இயல்புகளை செயல் நோக்கி இயங்கும் தூண்டல்களைத் தெளிவுறுத்துகிறார். இந்த இடத்தில் பாத்திரப் படைப்பு விளக்கத்தைத் தரும்போதே செயல்விளைவுகளையும் விள்க்குகின்றார். தடுக்கவியற் பாங்கில் பேராசிரியரின் எழுத்துத் திறனும் எடுத்துரை திறனும் பொலிகின்ற இடம் இது.

இரக்கம் என்று ஒரு பொருள் இலாத நெஞ்சினர் அரக்கர் என்று உளர் சிலர் அறத்தின் நீங்கினார் என்பது அரக்கர் இனம்பற்றிய பொது இலக்கணம். ஆயினும், கள்ளி வயிற்றின் அகில் பிறக்கும் என்ற உண்மையையும் நீதிநூல்கள் நினைவூட்டியிருக்கின்றன. கும்பகருணன் - வீடணன் பாசப் பாங்கு எத்தனை தடவை நினைந்தாலும் உள்ளத்துக்குக் கனிவூட்டும், அல்லவா? அப்படி ஓர் இடத்தைப் பேராசிரியர் இந்த நூலிலே காட்டி விளக்கியிருக்கிறார்.

> “நிகும்பலை அழிவுக்குப் பின்னர்த் தெய்வப் படைகள் பலவற்றைச் செலுத்திப் பயன்படாமல் போகவே தந்தையை நாடிச் செல்கிறான் இந்திரசித்தன். இந்திரசித்து வதைப் படலத்தின் முதல் பத்துப் பாடல்கள் இந்திரசித்தன் வாழ்க்கையில் ஏற்படாத ஒரு மாற்றத்தை அறிவிக்கின்றன. பிரம்மாத்திரம் என்ற படை போக, புதிதாக நாராயணன் படையையும் ஏவிப் பார்த்துவிட்டான், இந்திரசித்தன். உலகம் மூன்றையும் அழிக்க வல்ல படை, இலக்குவனை ஒன்றும் செய்யாத தோடுமட்டுமல்லாமல் அவனை வலம் செய்து போயிற்று. (9119) என்பதைப் பார்த்தவுடன் இந்திரசித்தன் மனத்தில் பெருமாற்றம்

> ஏற்பட்டது. ......இதுவரை அவன் சிந்தனை செய்யாத பேராற்றல் ஒன்று மேலே இருந்துகொண்டு இங்குள்ள அனைவரையும் இயக்குகிறது என்பதை முதன்முதலாக உணரத் துவங்குகிறான். மக்கள், தேவர், நரகர், அசுரர் முதலிய அனைவரையும் வென்றாலும் அந்த மாபெரும் ஆற்றலின் எதிரே இந்த வெற்றிகள் அர்த்தமற்றவையாகி விடுகின்றன என்பதை உணர்ந்த இந்திரசித்தன் முற்றிலும் மனம் மாறிய நிலையில் இதுவரை செய்யாத செயல் செய்யத் துவங்குகிறான்".

இந்திரசித்து என்ற பாத்திரம் தோல்வி அறியாதது; துணிவு மிக்கது. மேகநாதன் என்ற இயற்பெயர் அவனுக்கே நினைப்பில் இல்லாத அளவுக்கு வெற்றிச் சிறப்பால் இந்திரசித்தன் என்று வந்து ஒட்டிய பெயரே நிலைத்திட்ட நிலையுடையவன் மனத்திலே தொய்வு ஏற்பட்டுவிட்டது, அவனுக்கு. இந்த மாற்றம் அவனுள் ஏற்பட்டதை நிகழ்த்துகிறார், பேராசிரியர்.

முன்னும் வாலிபால் ஏற்பட்ட மாற்றத்தைப் பேராசிரியர் விளக்கியிருப்பதை இங்கே நினைவூட்டிக் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

வாலியிடம் ஏற்பட்ட மாற்றமும் இங்கே இந்திரசித்தனிடம் ஏற்பட்ட மாற்றமும் முற்றிலும் துருவ நிலை மாற்றம்தான். தெய்வ சக்தியை இருவரும் உணர்ந்தனர் என்பதிலும் ஒற்றுமை உண்டு. ஆனால், இருவரிடையே வேற்றுமை உண்டென்பதே இங்கே உணரவேண்டிய செய்தி. முன்னதில் சரணாகதி நிலை விளைந்தது. பின்னதில் அதற்கு இடம் இல்லை. இந்த ஒற்றுமை வேற்றுமைகளை இப்போது இங்கே விரிக்க விரும்பவில்லை. பயில்வோர் ஒப்பிட்டு உணரத் தலைப்படுக.

மேலே இருந்து இயக்கும் ஒரு மாபெரும் ஆற்றலை உணர்ந்த இந்திரசித்துவுக்குத் தன் அழிவு தெளிவாகத் தெரிந்துவிட்டது. இந்த மாறிய சூழ்நிலையில் இந்தப் பாத்திரம்

செயல்படுவதை அ.ச.ஞா. சித்தரிக்கிறார்; திறனாய்வாளனும் ஒரு படைப்பாளி என்பது இங்கே விளங்குகின்றது.

> "இராவணன் மைந்தனாகிய அவன் இன்றுவரை தந்தையை எதிர்த்துப் பேசி அறியாதவன். தான் தெய்வமாக வணங்கும் அத் தந்தையுன் செயல்களை ஆராய்வது தன் கடமை அன்று என்று வாழ்ந்தவனாகிய அவன் இப்பொழுது மனம் மாறுகிறான்..."

ஏன் இந்த மாற்றம்? விளக்குகிறார்.

> "எல்லாவற்றையும் இழந்த இந்த நிலையில் தந்தையையாவது இறுதியில் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கிறான். இந்த மன உறுதியுடன் தந்தையிடம் சொல்கிறான்".

தான் இறப்பது உறுதி என்று தெளிந்த நிலையில் தந்தையாவது காப்பாற்ற நினைத்தது மகன் பாசம். இராவணனுக்கு ஏற்ற வண்ணமாக நிலைமையை விளக்குகிறான். மைந்தனின் பாசம் பயன் தந்ததோ? இராவணன், பாசத்தைக்கூட உணரமாட்டாதவனாகி விட்டான்.

> "தந்தைமாட்டுக்கொண்ட அன்பாலும் மரியாதையாலும் இன்றுவரை வாய்மூடி, அவன் செய்ல்கள்ள யெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்த இந்திரசித்தன் இப்பொழுது வெடிக்கிறான்..."

இந்திரசித்திடம் தோன்றிய பாசமும் பொங்கிய ஆத்திரமும் இராவணனுக்கு நல்ல முறையில் பயன்படவில்லை. முடிவு என்ன என்பதைப் பேராசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> "செவிடன் காதில் ஊதிய சங்காக முடிந்து விட்டது"

ஆம், வெஞ்சின விதியினை வெல்ல வல்லனோ!

**சமய, தத்துவக் கணிப்பு**

இராமாயணத்தைச் சரணாகதி சாத்திரம் என்பர்.

'....ஆக்கலும், நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா அலகிலா விளையாட்டு உடைய தலைவர்க்குச் சரண்படடே காப்பியத்தைக் கவிச்சக்கரவர்த்தி தொடங்குகிறார்; அம்பரத்து அனந்தர் நீங்கிய பெருமானை நினைவில் நிறுத்தியே (10368) காப்பியத்தை முடிக்கிறார். எனவே, கம்ப ராமாயணம் பற்றிய எந்த நூலிலும் சமய, தத்துவ விளக்கம் அமைவதே பொருத்தமாகும். பேரா. அ.ச.ஞா. வின் இந்த நூலிலும் அத்தகைய விளக்கங்கள் பல உள.

வாலியின் மனவளர்ச்சியில் விளைந்த ஆன்மிக மலர்ச்சி அற்புதமாக அ.ச.ஞா. வால் விளக்கப்பட்டுள்ளது.

> ''இந்நிலையில் இராகவன் எதிரே வருகின்றான். வாலி அவனைக் காண்கின்றான்"

இப்படித் தொடங்குகிறது வாலி என்ற பக்தனின் ஆன்ம மலர்ச்சி விளக்கம். முதலில் திருநாமம் தெரிதல், தொடர்ந்து திருவுருவம் காணுதல் என்று படிப்படியே வாலியின் ஆன்மிக ஆளுமையை விளக்கிச் செல்லுகிறார். நீலக் கார்முகில் கமலம் பூத்த திருக்கோலத்தில்,

> "நீல நிறம், சிவப்பு நிறம் என்ற இரண்டும் ஆதியான நிறங்கள் (Primary colours) ஆகும். இவை இரண்டும் மூலப் பரம்பொருளை அறிவுறுத்தும் அடையாளங்கள் ஆகும்.

தொடக்க நிலை ஆன்மிக மலர்ச்சியை அ.ச.ஞா. விளக்கியுள்ள ஒரு வாக்கியம் வருமாறு!

> "இராம என்ற சொல்லைக் கண்ணிற் கண்ட பிறகு, வாலி காணும் காட்சி அம்மந்திரத்தின் சொரூபம் போல் உள்ள நீலம், சிவப்பு என்ற நிறங்களின் கூட்டமும் பேராற்றலின் வடிவமே ஆகும்"

அம்பு தாக்கியதைத் தீட்சையாகவும் மந்திர உபதேசம் பெற்றதாகவும் காட்டி, பெருமான் காட்சியையும் காட்டியபின்

வாலியின் புற / அக மனப் போக்குகளை அற்புதமாக விளக்குகிறார். கடைசியில் வீடுபேறு பெறும் வரையில் ஆன்ம வளர்ச்சியைப் படிப்படியே அ.ச.ஞா. விளக்கும்போது திறனாய்வாளராகிய கல்லூரி ஆசிரியரைக் காணமுடியவில்லை; காட்டாதனவெல்லாம் காட்டிக் கதி கூட்டும் குருநாதரையே காண்கிறோம். கம்பரிடம் உருவான வாலி அ.ச.ஞா.விடம் புதுப்பிறப்பெய்தி வீடுபெறுகிறான். கம்பர் தீட்டிய ஓவியம்தான்; எனினும், கவிதையில் மறைந்திருக்கும் ஆன்மிகச் செல்வனை இவர் உரைநடையில் தெளிவாகத் தெரியும் ஓவியமாகத் தீட்டியிருக்கிறார்.

**எத்தனை எத்தனையோ...**

இந்த நூலில் இன்னும் எத்தனை எத்தனையோ கூறுகள் எடுத்துக்காட்டத் தக்கனவாக உள்ளன. எல்லாவற்றையும் பட்டியலிட்டுச் சுருக்கமாக அறிமுகப்படுத்த முயன்றால்கூட இன்னும் பலப் பல பக்க அளவில் இந்த முன்னுரை பாரித்துப் பெருகிவிடும்.

ஒப்பிலக்கியப் பாங்கு, வாழ்க்கை விளக்கம், கற்பனை பாராட்டல், நாடகச் சுவை ...எனப் பல உள் தலைப்புகளில் எழுதுவதற்கு ஏராளமான குறிப்புகள் இருக்கின்றன. ஆனால், பல சொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற சில சொல்லல் தேற்றாதவர் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக விருப்பம் இல்லை.

**கடைசியாக ஒன்று**

சரணாகதி சாத்திரம் இது என்பார் சிலர்; சிறை இருந்தாள் ஏற்றம் கூறிற்று என்பார் சிலர்; இராமாயணம் என்னும் பக்தி வெள்ளம் என்பார் சிலர். அ.ச.ஞா. இவற்றுள் எதையும் மறுக்கவில்லை. அறம் தலைநிறுத்த வந்த காகுத்தனின் சரித்திரத்தின் பாவிகமாகப் புலனடக்கம் துலங்குகிறது என்பது அ.ச.ஞா. வின் விளக்கம். 'கம்பன் - புதிய பார்வை' என்ற நூலில் இக்கருத்தை விளக்கியிருக்கிறார்; இங்கும் அதன் விளக்கம் உண்டு.

இலங்கை சென்று மீண்ட அனுமன், 'வையகம் தழீஇ நெடிது இறைஞ்சி, வாழ்த்தினான்' என்கிறார், கம்பர். இதனைச்

சொல்வது திருவடி தொழுத படலம். இதற்குப் பொதுவாக 'இராமன் திருவடிகளை அனுமன் தொழுத படலம்' என்றே பொருள் கொள்ளப்படும். அ.ச.ஞா. இதனை ஏற்கவில்லை; பிராட்டியின் திருவடிகளை நினைத்து வணங்கியதாகவே கொள்கிறார். அவ்வாறு கொள்வதற்குரிய விளக்கத்தை இலக்கியப் புலவராகவும் சமய குரவராகவும் இருந்து பேராசிரியர் தரும் விளக்கம் அற்புதமானது.

இப்படி வியப்பூட்டும் அற்புதங்கள் மிகப் பல உண்டு.

நூல் முழுவதையும் படித்த பின் என் நினைவில் நீங்காமல் நிற்கும் ஓர் இடத்தை மட்டும் சுட்டிக்காட்டி, இதனை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

கைகேயியை ஒப்பற்ற பெருந் தியாகியாகப் பேராசிரியர் விளக்கி நிறுவியிருக்கிறார். இன்று நாம் எங்கணும் காணுகின்ற பட்டி மண்டப வாதம்போல் மேற்போக்காகப் பார்ப்போருக்குத் தோன்றும். கைகேயி தூயவள், மாபெரும் தியாகி என்று பேராசிரியர் வெற்று வாதத்திற்காகப் பேசவில்லை. அறிவின் ஆய்வு நெறி பிறழாமல் - இருள் தீர எண்ணிப் பார்த்து, உண்மையாக நம்பியே கைகேயின் தெய்வ மாட்சியை விளக்குகிறார்.

> நேரே நில் - நிமிர்ந்து பார்
>
> நெஞ்சில் பட்டதை வளமாய்ச் சொல் - இதுதான்
>
> எழுத்தின் மங்கள சூத்திம் என்று கவிஞர் சிற்பி, உண்மை எழுத்தின் இலக்கணத்தை வடித்துக் காட்டுகிறார். அ.ச.ஞா. போன்றவர்களே அந்த மங்கள சூத்திரத்தைத் தாங்க வல்லவர்கள். கைகேயி பற்றிய திறனாய்விலே தம் சத்திய தரிசனத்தை நமக்கு அவர் காட்டியிருக்கிறார்.

இராவணன் தொடக்கூடாதே என்பதற்காக நிழலுருவில் சீதையைப் படைக்கிறார், துளசீதாசர். வான்மீகத்தை மாற்றி, பர்ணசாலையோடு தூக்கிச் செல்ல வைக்கிறார் கம்பர்.

இப்படி எந்த மாற்றமும் செய்யாமல், கவிச்சக்கரவர்த்தியின் வாசகங்களைக் கொண்டே கைகேயியைப் புரட்சி வகையிலே சித்தரித்துக் காட்டுகிறார், திறனாய்வு வேந்தராகிய என் பேராசிரியர். எவரும் தலை வணங்க வேண்டும் - கைகேயி நினைப்பிலே. அப்படி ஒரு புரட்சியும் இந்த நூலிலே உண்டு.

இன்னும், இன்னும், இன்னும் .......... இப்போது இது போதும்.

**தமிழ் முனிவர் வாழ்த்து**

அ.ச.ஞா. வின் மற்றொரு புரட்சி நூலைப் படித்துச் சிறப்புரை வழங்கிய திரு.வி.க. பின்வருமாறு வாழ்த்தினார்:

"கம்பர் வளர - சேக்கிழார்
முதலியோர் வாழத்
தோழர் ஞானசம்பந்தருக்கு
நீண்ட நாளும், நோயற்ற
யாக்கையும், வேறு பல
பேறுகளும் பெருக! பெருக!

ஆம், ஆமாம்.

ம.ரா.போ. குருசாமி

# பால காண்டம்

உலக மகா காப்பியங்களுள் தலைசிறந்து விளங்கும் கம்பநாடனுடைய இராம காதை ஆறு காண்டங்களாக வகுக்கப்பெற்றுள்ளது. முதல் காண்டம் பால காண்டம் எனப் பெயர் பெறும்.

வால்மீகி முனிவரின் இராமாயணத்தைப் பெரும்பாலும் அடியொற்றி, அதே நேரத்தில் வேண்டுமான இடங்களில் மாற்றம், திருத்தம் முதலியன செய்து, கம்பன் தனக்கேயுரிய முறையில் இராமாயணத்தைப் படைத்துள்ளான் என்பதைப் பலரும் அறிவர்.

வால்மீகியினுடைய பால காண்டத்தைப் பொறுத்தமட்டில், அது அவர் இயற்றியதுதானா அல்லவா என்ற ஐயப்பாடு இன்றளவும் இருந்துவருகிறது. ஆனா கம்பனைப் பொறுத்த மட்டில் அத்தகைய பிரச்சினை ஒன்று இல்லை. பால காண்டம் அவனுடையதுதான் என்பதி எந்தவித ஐயமும் இல்லை.

அதே நேரத்தில், மிகச் சிறந்த காப்பியமாக இருந்தாலும், இராம காதை நாடு முழுவதும் பரவியிருந்த காரணத்தாலும், பௌராணிகர்கள் இராமாயணத்தை அதிகம் பேசுவதற்கு எடுத்துக்கொண்ட காரணத்தாலும் கம்பனுடைய இராமாயணத்திலும் சில பிரச்சினைகள் தோன்றலாயின. தனித்தனியே பல்வேறு இடங்களிலிருந்து பிரவசனம் செய்கின்றவர்கள் தங்களுக்குத் தேவையான பகுதிகளைப் புதியனவாகப் பாடிச் சேர்த்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இடைச்செருகல்களுக்குப் பஞ்சமே இல்லை. பால காண்டத்திலும்கூட இடைச்செருகல்கள் பல உண்டு. அவற்றை நன்கு ஆராய்ந்து கம்பன் கழகத்தார் சிலவற்றை 'மிகைப் பாடல்கள்' என்று பின்னே கொடுத்திருக்கிறார்கள். என்றாலும், பல படலங்களில் உள்ள சில பாடல்கள் கம்பனுடையனவா என்று ஐயப்படக் கூடிய நிலையில் உள்ளன. இவ் ஐயப்பாடு இன்னும் நீங்கவில்லை என்பது ஒருபுறம். (சான்று - திரு அவதாரப் படலம் 6 முதல் 28 வரை).

பாயிரம் என்ற பொதுத்தன்மையுடைய பகுதிபோகப் பால காண்டம் ஆற்றுப் படலத்தில் தொடங்கிப் பரசுராமப் படலம் ஈறாக 23 படலங்களாக வகுக்கப்பெற்றுள்ளது.

இப்படலங்களை நான்கு பகுதிகளாகப் பிரித்து அவற்றிலுள்ள அருமைப்பாட்டை ஆராயலாம்.

ஆற்றுப் படலம், நாட்டுப் படலம், நகரப் படலம், அரசியற் படலம் என்பன ஒரு தொகுதி.

இதனை அடுத்துத் திரு அவதாரப் படலம், கையடைப் படலம், தாடகை வதைப் படலம், வேள்விப் படலம், அகலிகைப் படலம், மிதிலைக் காட்சிப் படலம் என்பன ஒரு தொகுதி.

இறுதியாக எதிர்கொள் படலம், கோலங்காண் படலம், கடிமணப் படலம், பரசுராமப் படலம் என்பன ஒரு தொகுதி.

இப்படி மூன்று தொகுதிகளாகப் பிரித்தபின்னர் எஞ்சுவன நான்காவதாக உள்ள தொகுதியாகும். அதில் உள்ளவை சந்திர சயிலப் படலம். வரைக்காட்சிப் படலம், பூக்கொய் படலம், நீர் விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம், குலமுறைகிளத்து படலம், கார்முகப் படலம், எழுச்சிப் படலம், உலாவியற் படலம் ஆகியன.

இவ்வாறு பிரிப்பதற்கு ஓர் அடிப்படையான காரணமும் உண்டு. முதலாவதாகவுள்ள நான்கு படலங்களில் கம்பன் தனக்கே உரிய முறையில் ஒரு நாட்டை நிர்மாணிக்கின்றான். கோசலம் என்ற பெயரை அதற்கு இட்டாலும்கூட ஒன்பதாம் நூற்றாண்டுவரை - ஏன், பின்னேயுள்ள 12ஆம் நூற்றாண்டை எடுத்துக்கொண்டாலும்கூட - உலக இலக்கியங்களில் பிற காப்பியங்களில் எங்கும் காணப்பெறாத முறையில் ஒரு நாட்டை அமைத்துக் காட்டுகிறான்.

சங்கப் பாடல்களில் வரும் நில வருணனைகளில் இயற்கைக் காட்சிகளைமட்டும் வருணிக்காமல் அந்த நிலங்களில் வாழும் மனிதர்கள், உணவு வகைகள், வாழ்க்கை முறை, எண்ண ஓட்டம், மேற்கொண்ட தொழில் என்பனபற்றியும் விரிவாகப் பாடியுள்ளனர்.

திணைப் பிரிவு செய்த ஆசிரியர் தொல்காப்பியர், "தெய்வம், உணாவே, மா, மரம் புள், பறை" (அகத்திணை இயல் 18) முதலானவற்றைக் கருப்பொருள் என்ற தலைப்பில் கூறிச் சென்றுள்ளார். எனவே, தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே நில வருணனை என்பது மிக விரிந்த நிலையில் பாடப்பட்டிருக்க வேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை.

உதிரியான சங்கப் பாடல்களில் இடம் பெறாமல் நீண்டிருக்கின்ற 'மதுரைக் காஞ்சி', 'பட்டினப் பாலை', ஆற்றுப் படைகள் ஆகியவற்றுள் காணப்பெறும் நாட்டு (நில) வருணனைகளும், நகர வருணனைகளும் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஒரு திருப்புமுனை ஆகும்.

இந்த வளர்ச்சி காப்பிய வடிவு பெற்ற சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் தனிப்பட்ட முறையில் ஏனோ இடம் பெறவில்லை. மதுரை, காவிரிப்பூம்பட்டினம் என்ற இரண்டு நகரங்களில் வாழும் மேட்டுக்குடி மக்களின் வாழ்க்கை முறையை விரிவாகப் பாடும் சிலம்பு பாண்டிய நாடு, சோழ நாடு என்ற அடிப்படையில் பொதுவாகப் பேசவில்லை.

இவ்விரு காப்பியங்களை அடுத்துத் தோன்றிய உதயணன் கதையில் (பெருங்கதை) தனியாக இவ் வருணனைகள் பாடப் பட்டிருந்தனவா, இல்லையா என்று அறிய வாய்ப்பில்லாமல், காப்பியத்தின் முற்பகுதி கிடைக்கவில்லை.

இதனை அடுத்துத் தோன்றியவை பக்தி இயக்கக் காலப் பாடல்கள். அவற்றுள் இந்த வருணனைகளை எதிர்பார்த்தல் நியாயமில்லை, என்றாலும், மலை வருணனை, மருத நில மக்கள் வருணனை என்பவைபற்றி ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றன திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்கள்.

சங்க இலக்கியங்களில் துளையமாடிய கம்பநாடன், நாட்டையும் மக்களையும் தனித்தனியே வருணிக்க வேண்டும் என்ற புதுமையை முதன்முதலில் புகுத்துகிறான்.

மன்னராட்சி நன்கு வளர்ந்து செம்மைப்பட்ட நிலையில் கம்பன் தோன்றியவன்; ஆதலின், கோசல நாட்டையும்

அயோத்திமா நகரத்தையும் வருணிப்பதில் பெரும் கவனம் செலுத்துகிறான்.

பிற காப்பியங்களில் . தமிழாகட்டும், வடமொழியாகட்டும் பிற மொழியாகட்டும் - நாட்டை வருணிக்கும் போது சிறப்புடைய நாடு என்று சொல்வார்கள். அதில் ஒன்றும் ஐயப்பாடு இல்லை. ஆனால், அந்தச் சிறப்பான நாட்டை வருணிக்கும்போதுகூட உடையார், இல்லார்' பிரிவினை இருந்தே தீரும். அந்த, உடையார் இல்லார் என்ற பிரிவினையை அறவே ஒழித்துப் புதியதொரு சமுதாயத்தை நிர்மாணித்த பெருமை கம்பனுக்கே உரியதாகும்.

அதனை விரிவாகப் பார்ப்பதற்கு முன்னர் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். இப்படி ஒரு நாட்டைக் கம்பன் படைப்பதற்கு எது காரணமாக இருந்திருக்கும் என்று சிந்திப்போமேயானால், ஒரு சில எண்ணங்கள் தோன்றுகின்றன. அந்த எண்ணங்கள் சரியானவைதாம் என்று சொல்வதற்கில்லை. ஆனால், அப்படிப்பட்ட எண்ண ஓட்டம் வருவதைத் தடை செய்ய முடியாது என்பதை மட்டும் நினைவில் கொள்ள வேண்டும்.

கம்பன் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு. பல்லவர்கள் வீழ்ச்சி அடைந்து, சோழர்கள் அப்போதுதான் தலை தூக்கத் தொடங்கினர். இந்த இடைக் காலத்தில்தான் கம்பன் தோன்றியிருக்கிறான். இலக்கியத் திறனாய்வாளர்கள் பெருங்காப்பியம் தோன்றுவதற்குரிய காலகட்டத்தைக் குறிப்பிடும்போது இரண்டு நிலைகளில் பெருங்காப்பியங்கள் தோன்றக்கூடும் என்று சொல்கிறார்கள்.

முதலாவது ஒரு பெரிய சாம்ராஜ்யத்தினுடைய எழுச்சி அல்லது அந்த சாம்ராஜ்யத்தினுடைய வீழ்ச்சி. இந்த இரண்டு நேரங்களில்தான் பெருங்காப்பியங்கள் தோன்றக்கூடும் என்று சொல்கிறார்கள். அதற்கேற்றபடி உலக இலக்கியங்களில் உதாரணங்களை எடுத்துக்காட்டுகிறார்கள்.

அந்த அடிப்படையை வைத்துக்கொண்டு பார்ப்போமேயானால், சோழ சாம்ராஜ்யம் தொடங்குகின்ற அந்தக் காலத்தில் தோன்றியவன் கம்பநாடன்.

சோழ சாம்ராஜ்யம் நானூறு ஆண்டுகள் வாழ்ந்து ஒருவாறு மடிகின்ற காலத்தில் தோன்றியவர் (12ஆம் நூற்றாண்டின் கடைப் பகுதி) சேக்கிழார் ஆவார்.

ஆக, சோழ சாம்ராஜ்யத்தின் தொடக்கத்தில் கம்பனும், அதன் வீழ்ச்சியில் சேக்கிழாரும் இரண்டு பெருங் காப்பியங்களை ஆக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம்.

இனி, சோழ சாம்ராஜ்யம் தொடங்குகின்ற காலம் என்றால் பல்லவ சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக் காலம் என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். அப்போது தமிழ்நாட்டின் நிலை எதுவாக இருந்திருக்கும் என்று சிந்திப்போமேயானால் ஒரு சில எண்ணங்கள் மனத்தில் ஊசலாடுகின்றன.

சமதர்ம சமுதாயத்தைக் கம்பன் படைத்திருப்பதுபோல் முன்னும் இல்லை. பின்னும் இல்லை என்று கூறுகிறோம். அதே நேரத்தில் இப்படி ஒரு கற்பனை அவனுடைய மனத்தில் எப்படித் தோன்றிற்று? அன்றைய வரலாற்று நிகழ்ச்சிகள் இதற்கு இடம் தருகின்றன என்று நினைப்பதில் தவறு ஒன்றும் இல்லை.

கம்பனுடைய காலத்தில் - அதாவது ஒன்பதாம் நூற்றாண்டில் சமுதாயம் உடையவர்கள், இல்லதவர்கள்' என்ற பெரும் பிரிவைக் கொண்டிருந்தது என்பதில் ஐயப்பாடே இல்லை. சங்க காலம் தொடங்கிப் பன்னிரண்டு, பதின்மூன்றாம் நூற்றாண்டு முடியத் தமிழகத்தில் - உலகத்தில் வேறு எல்லாப் பகுதிகளிலும் இருப்பதுபோலத்தான் இவ்வேறுபாடு இருந்திருக்கிறது. உடையவர்கள் ஒரு தனிக் கூட்டமாக இருந்திருக்கிறார்கள்; இல்லாதவர்கள் ஒரு தனிக் கூட்டமாக இருந்திருக்கிறார்கள். இல்லாதவர்களிலே புலவர்களாக, அறிஞர்களாக இருந்தவர்கள் இந்த உடையவர்களை அண்டி வாழ்ந்திருக்கிறார்கள். உடையவர்களும் ஏதோ அந்தப் பெருஞ்சொத்துக்குத் தாங்கள் உரிமைக்காரர்கள் என்ற நினைக்கவில்லை என்று தெரிகிறது.

இக்காலத்தில் மகாத்மா காந்தி சொல்லியதுபோலப் பெரும் சொத்துடையவர்கள் அந்தச் சொத்துக்குத் தாங்கள் உரிமையாளர்கள் என்று நினைக்காமல், அதைப் பாதுகாத்துப் பங்கிட வேண்டிய கடப்பாடு உடையவர்கள் என்ற தர்மகர்த்தா முறையில்தான் பழந்தமிழ்ச் செல்வர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

"செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே (புறம் 189)

என்ற புறப் பாடல் மேலே கூறிய கருத்துக்கு அரணாக இருப்பதைக் காணமுடியும். பெரும்பாலான தமிழக மன்னர்களும் குறுநில மன்னர்களும், செல்வர்களும் வாரி வழங்கும் இயல்புடையவர்களாகவே இருந்தார்கள் என்று சங்கப் பாடல்கள் கூறுகின்றன. அப்படி வழங்குவதை ஏதோ பெரிய அறம் என்று கருதாமல் தங்கள் கடமை என்றே கருதினார்கள். இந்த அறத்தைச் செய்வதால் மறுமையில் வீடுபேறு கிடைக்கும் என்று கருதி வழங்கவில்லை. வழங்குவது என்பது அவர்கள் வழக்கமாக இருந்தது.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் ஆய் அலன் ...
பிறரும் சான்றோர் சென்ற நெறி என
ஆங்கு பட்டன்றுஅவன் கை வண்மையே (புறம் 134)

இதனால் சங்ககால மக்கள் வாழ்க்கை நிலையை ஓரளவு அறிய முடிகிறது.

கம்பனுடைய காலத்திலும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். கம்பனுடைய வரலாறு நமக்குத் தெரியவில்லை. ஆனால், அதே நேரத்தில் அவன் தன் காலில் நிற்க முடியாதவனாய், அதாவது அவனுடைய குடும்பம் அவனைத் தனிப்பட்ட முறையில் வாழ வைக்க வாய்ப்பு இல்லாததாக இருந்திருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், சடையப்ப வள்ளல் என்ற பெரியதொரு ஆலமரத்தை அண்டித் தன் வாழ்நாளைச் செலவிட்டிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. சடையப்பரைப்

பொறுத்தமட்டில் முழுவதும் கம்பனை மகனாகவே ஏற்றுக் கொண்டு அற்புதமாக வளர்த்தார் என்பதில் ஐயப்பாடு இல்லை. அந்த நன்றிப் பெருக்கைக் கடைசிவரை கம்பன் மறக்கவும் இல்லை.

என்னதான் இருந்தாலும் கம்பனுடைய அடிமனத்தில் ஓரோவழி இந்த எண்ணம் தோன்றித்தான் இருத்தல் வேண்டும். 'தன்னுடைய காலில் நிற்க முடியாமல்' தன்னுடைய குடும்பத்தார் தன்னைத் தனிப்பட்ட முறையில் சுதந்திரமாக வாழவைக்க வாய்ப்பு இல்லாத காரணத்தினால்தானே சடையப்பரைப் போன்ற வள்ளலை அண்டியிருக்க வேண்டியிருக்கிறது' என்ற மன நெருடல் ஏற்பட்டிருக்க வேண்டும். இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? உடையார், இல்லார் என்ற இரண்டு பெரும் பிரிவாகச் சமுதாயம் அமைந்திருந்ததுதான் காரணம்.

இந்த நினைவு ஆழமாகப் பதியப் பதியப் பெரும் கவிஞனாகிய அவன், இந்த உடையார் - இல்லார் என்கிற வேறுபாட்டோடு கூடிய சமுதாயத்தில் வாழும்போதே, 'இதெல்லாம் இல்லாத ஒரு சமுதாயம் இருந்தால் எப்படி இருக்கும்' என்ற கற்பனையில் திளைத்திருக்க வேண்டும். அப்படி அவன் கனவு கண்டதனுடைய விளைவுதான் நாட்டுப் படலத்தில் அவன் அமைத்திருக்கின்ற சமுதாயம், இக்கருத்தோடு கம்பன் கோசல நாட்டை எப்படி வருணிக்கிறான் என்பதைப் பார்க்கும்போது வியப்பு ஒன்றும் தோன்றுவதில்லை.

இன்னும் சொல்லப்போனால் வால்மீகி கோசலத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆங்கு அவன் புகழ்ந்த நாட்டை
அன்பெனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேசலுற்றான் என்ன
யான் மொழியல் உற்றேன் (32)

எனக் கம்பன் தனக்கு மூல நூலாகக் கொண்டதாகக் குறிப்பிடும் வான்மீகத்தில் கோசலம் என்ற பெயர்

சொல்வதைத் தவிர வேறு எந்த விதமான வருணனையும் வால்மீகி முனிவர் செய்யவில்லை.

அந்த ஒரு சொல்லை வைத்துக்கொண்டு ஒரு புதிய நாட்டைக் கற்பனை செய்கின்றான் கம்பன் என்றால், ஆழமான தூண்டுதல் ஒன்று ஏதேனும் இருந்திருக்க வேண்டும். அந்தத் தூண்டுதல்தான் அவன் சமைக்கக் கருதிய கற்பனைச் சமுதாய அமைப்பைத் தமிழர்களுக்கு அறிவுறுத்தியது.

அன்றைய நிலையில் வறுமையுடைய மக்கள் தங்கள் பிள்ளைகளைக்கூட விற்கத் தயாராக இருந்தார்கள் என்பதைப் பெரிய புராணத்திலிருந்து அறிகிறோம். 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதியார் - பின்னர்ச் சிறுத் தொண்டர் என்று புகழ்பெற்ற பெருமகனார் - தம்முடைய மகனை அரிவதற்கு முன்னர் மனைவியிடம் பேசுவதைச் சேக்கிழார் அற்புதமாக எடுத்துக் காட்டுகிறார். (சிறுத்தொண்டர் 56)

'மைந்தர் தமை நினைவு நிரம்ப நிதிகொடுத்தால் தருவாருளரே' என்று சொல்கிறார். ஆகவே, நிரம்பப் பொருள் கொடுத்தால் தங்கள் பிள்ளைகளை விற்கத் தயாராக இருந்தார்கள் என்று அறிகிறோம்.

இதற்கு முன்னர், வடநாட்டில் வழங்கும் சுனச்சேபன் கதை இதை நன்கு வலியுறுத்துகிறது. நரபலி இடுவதற்காக ஒரு பிள்ளை வேண்டும் என்று அம்பரீடன் என்ற அரசன் பெரும்பணத்தைக் கொடுத்துப் பிள்ளை வாங்கப் புறப்படுகிறான். மூன்று பிள்ளைகளை யுடைய இரிசிகன் தன் முதல் பிள்ளையையும், அவன் துணைவி தன் கடைசிப் பிள்ளையையும் தாங்கள் வைத்துக்கொண்டு இடையில் நின்ற சுனச்சேபனைப் பொருளுக்கு விற்றுவிட்டார்கள் என்று அறிகிறோம் (கம்பன் 599 - 601) ஆகவே, உடையார் - இல்லார் இருக்கிற சமுதாயத்தில் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்துதான் தீரும்.

இவற்றையெல்லாம் மனத்தில் வாங்கிக்கொண்ட கம்பநாடன் இவற்றுக்கு ஒரு முடிவு கட்டவேண்டு மென்று நினைத்தான் போலும். ஆகவே, தான் பாட எடுத்துக் கொண்ட காப்பியத்தில் கோசல நாட்டில் இப்படி ஒரு

கற்பனைச் சமுதாயத்தை அமைத்து, பிரச்சினையே இல்லாத சமுதாயம் என்று காட்ட முற்படுகிறான்.

அதுமட்டு மன்று. இப்படி ஒரு கற்பனை நாட்டைப் பாடுவதன்மூலம் பின்னே வளர்ந்துவருகின்ற சோழப் பேரரசு சமுதாயத்தை அமைக்கும்போது உடையார் - இல்லார் வேறுபாட்டை மிகுதிப்படுத்தாததாய் இருக்க வேண்டும் என்று அவன் கருதியிருத்தல் கூடும்.

அப்படியானால், அந்தப் பெருங்காப்பியம் ஒரு கலங் கரை விளக்கமாக நின்று, சமுதாயம் எப்படி அமைய வேண்டுமென்று மக்களுக்கு எடுத்துச் சொல்லுகின்ற ஆசானாகவும் அமைந்திருக்கிறது. காப்பியத்தினுடைய பல்வேறு பணிகளில் அறிவுறுத்தல், பயிற்றுவித்தல் முதலான கடமைகளும் இருக்கின்ற காரணத்தினால், தன்னுடைய காப்பியத்தில் தொடக்கத்திலேயே இதனைச் சொல்வதன் மூலம் சோழப் பேரரசில் எப்படிச் சமுதாயம் அமைய வேண்டும் என்பதைக் கவிஞன் கற்பனை மூலம் கண்டான் என்று நினைப்பதிலும் தவறு ஒன்றும் இல்லை.

அதுமட்டு மன்று. இந்தச் சமுதாயத்தை அமைக்கும்போது நாட்டு வருணனை, மக்கள் வருணனை என்ற இரண்டையும் சொல்லும்போது தமிழ் இலக்கியத்தில்மட்டு மல்லாமல், ஏனைய மொழிக் காப்பிய இலக்கியங்களிலும் காணப்படாத சில புதுமைகளைக் கவிச் சக்கரவர்த்தி தன் காப்பியத்தில் புகுத்துகிறான்.

சங்க இலக்கியங்களில் வரும் இயற்கை வருணனை, மக்கள் வருணனை என்பவற்றுள் தன்மை நவிற்சி அணியே இடம் பெற்றுள்ளமையைக் காணலாம்.

மருத நில மக்கள், நகர மக்கள் என்ற வேறுபாட்டை மதுரைக் காஞ்சி முதலிய பாடல்களில் காணலாமேனும், எப்படி வாழ்ந்தார்களோ அதனை அப்படியே கவிஞர் பாடியிருப்பதைக் காணமுடியும்.

15, 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாமஸ் மூர் (1477 - 1535) 'உட்டோப்பியா' (UTOPIA) என்ற பெயரில் ஒரு கற்பனை

நாட்டைப் படைக்கிறார். 'உட்டோப்பியா' வில் ஒரு நகர அமைப்பு. அந்நகரில் வாழ்கின்ற உழவர், தொழிலாளர் முதலியோர் வாழ்க்கை முறை, நீதி பரிபாலனம், ஒருவருக்கொருவர் நட்புக் கொண்டு வாழுமியல்பு, பிறரிடம் அம்மக்கள் கொள்ளும் உறவு முறை போல்வனவற்றைப் பற்றி விரிவாகப் பேசியுள்ளார். இவர் (தாமஸ் மூர்) எந்த அளவு கம்பனைப் பின்பற்றிச் செல்லுகிறார் என்பது கற்று மகிழ வேண்டிய பகுதியாகும்.

நிலம், பொழுது இரண்டனையும் முதற்பொருள் என்று தொல்காப்பியர் கூறியிருப்பினும், நாடு என்று சொல்லும் பொழுது ஏனையோரைப் போல இத் தமிழர்கள் நிலம், இயற்கை என்பவற்றை முதன்மையாகக் கொள்ளவில்லை என்று நினைய வேண்டியுள்ளது.

'நாடு ஆக ஒன்றோ; காடு ஆக ஒன்றோ;
அவல் ஆக ஒன்றோ; மிசை ஆக ஒன்றோ;
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை; வாழிய நிலனே' (ஔவையார்-புறநா-187)

இப் புறப்பாடல் மூலம் அவ்வளவு பழைய காலத்திலேயே ஒரு நாட்டின் சிறப்பு அங்கு வாழும் மக்களைப் பொறுத்தது என்பதனை இத்தமிழர்கள் அறிந்திருந்தனர் என்று அறிய முடிகின்றது.

நாட்டில் வாழுகின்ற மக்களும், அரசர்களும் செம்மை வழி நிற்கவில்லை என்றால், பிற வளங்கள் எவ்வளவு இருந்தாலும் அவற்றால் பயனில்லை என்று மற்றொரு புறப்பாடல் கூறுகின்றது.

'வேந்தரும் பொருது, களத்து ஒழிந்தனர் இனியே
என் ஆவதுகொல் தானே - கழனி
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவல் முக்கி, தண்புனல் பாயும்
யாணர் அறாஅ வைப்பின்
காமர் கிடக்கை அவர் அகன்தலை நாடே' (புறா-63)

இந்த அடிப்படையில் பார்த்தால்,

'நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரு நாடு' (திருக்குறள் 739)

என்று வள்ளுவப் பேராசான் கூறும்போது 'நாடா வளத்தன' என்பதற்கு அதிக முயற்சியில்லாமல் பெரும் பயனைத் தரக்கூடியது என்று உரை ஆசிரியர்கள் பொருள் கூறினாலும், மேலும் ஆழமான பொருள் உண்டோ என்ற நினைக்கத் தோன்றுகின்றது.

நாடு என்ற அதிகாரத்தின் முதற் பாடலில் 'தள்ளா விளையுள் பற்றிக் கூறிய வள்ளுவர், அடுத்துத் தக்கார் என்று கூறுவதன்மூலம் இக்கருத்தை வலியுறுத்துகின்றார்.

விளைச்சல் முதலியவற்றை 1, 2, 6, 8 ஆகிய குறட்பாக்களில் (இயற்கை வளம்) பேசிய வள்ளுவர், ஏனைய பாக்களில் மக்கள் (மன) வளத்தையே பேசுகிறார்.

சிறந்த நாடு மண் வளத்தால் தள்ளா விளையுள் பெற்றிருப்பதுபோல மக்கள் மன வளம் இயல்பாகப் பெற்றிருக்க வேண்டும். அதனைத்தான் நாடா வளம் என்று சொல்கின்றாரோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது.

எத்துணை வளம் இருப்பினும் மக்கள் மனவளம் இல்வழி அது பயனற்றதாகும் என்று கருதிய தமிழர் அந்த இயற்கை வளத்துக்குக்கூட மக்கள் மனவளமே காரணம் என்று கருதினதாக நினைக்க முடிகிறது.

'சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட்டு ஆகக்
காவிரி புரக்கும் நாடு கிழவோனே' (பொருநர். 246-8)

இவ்வடிகள் இவ்வாறு நினைக்கத் தூண்டும். 'ஆக' என்ற வினையெச்சம் 'புரக்கும்' என்ற பெயரெச்சத்தோடு இயைவதைப் பார்த்தால், இந்த விளைச்சலுக்குக் காரணம் சோழனுடைய ஆட்சிச் சிறப்பே என்று ஆசிரியர் பெற வைக்கிறார் என்பது தெரிகிறது.

இக்கருத்துகளை யெல்லாம் நன்கு ஜீரணித்துக்கொண்ட கம்பநாடன், சங்கப் புலவர்களும் ஏனையோரும் காணாத

ஒரு கற்பனை நாட்டை - 15, 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாமஸ் மூர் காண முயன்ற நாட்டைப் படைக்க முயல்கிறான்.

நாட்டின் சிறப்பைக் கூறும்பொழுது மண்வளத்தைவிட, மக்கள் மனவளத்தைப் பெரிதாகப் பாடிய புறப்பாடலோ, திருக்குறளோகூட, கம்பன் மக்களின் தலையாய பண்பு என்று முதல் பாட்டிலேயே, பெரிதாகப் போற்றும் ஒரு பண்பைச் சுட்டிக் காட்டியதாகத் தெரியவில்லை.

உட்பகையின்மை, மடியின்மை, பெருமுயற்சி என்பவற்றை அடிப்படைப் பண்புகளை நாட்டு மக்களின் இலக்கணமாகக் கூறும் இடத்தில் வள்ளுவர் 'புலனடக்கத்தை' உயர்த்திப் பாடவில்லை.

கம்பனோ நாட்டு வருணனை, மக்கள் வருணனை என்ற இரண்டையும் சொல்லும்போது, நாட்டினுடைய வளத்தைவிட, மக்களுடைய மன வளம் சிறப்பாக இருக்க வேண்டும் என்று நினைந்துச் சொல்கிறான் என்று சொல்லத் தோன்றுகிறது. காரணம், முதல் பாட்டின் முதல் வரியிலேயே மக்கள் மன வளத்தை எடுத்துப் பேசுகிறான். கோசலத்தில்,

'ஆசலம் புரி ஐம்பொறி வாளியும்
காசு அலம்பும் முலையவர் கண் எனும்
பூசல் அம்பும் நெறியின் புறஞ் செலாக்
கோசலம் புனை ஆற்று அணி கூறுவாம்' (12)

என்கிறான். எவ்வளவோ வளங்கள் பின்னே கோசலத்துக்குப் பேசப்போகிறான். அவை எல்லாவற்றையும்விட மிகச் சிறந்த வளம் எது என்றால்,

'அம்பு புறஞ் செலாக் கோசலம்'

என்பதுதான். ஆகவே, மக்களாக வாழப் பிறந்தவர்கள் மிகப் பண்புடையவர்களாக, பொறி, புலன்களை அடக்கி ஆள்பவர்களாக வாழ்வதுதான் அவர்கள் சிறந்தவர்களாக ஆவதற்குரிய அடிப்படையாகும் என்பதை வற்புறுத்துவான் போலப் பேசுகிறான்.

வள்ளுவர் காலத்தில் தமிழருடைய நாகரிகமும் வாழ்வு முறையும் மிகச் சிறந்து வளர்ந்திருந்தன என்பதில் ஐயமில்லை.

ஆனால், சமுதாய வாழ்க்கை, நகர வாழ்க்கை என்பவை ஒன்பதாம் நூற்றாண்டில் வளர்ந்திருந்ததுபோல் இரண்டாம் நூற்றாண்டில் இருந்திருக்க வாய்ப்பில்லை. எனவேதான், மெய்யுணர்தல், அவா அறுத்தல் முதலிய அதிகாரங்களை அறத்துப் பாலில், துறவறவியலில் வைத்தாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

சிறிய கிராமங்கள், ஓரளவு வளர்ச்சி அடைந்த சிறு நகர்கள் என்பவைதாம் சங்க காலத்தில் மிகுதியாக இருந்திருக்க வேண்டும். மதுரை, காவிரிப்பூம்பட்டினம், உறையூர், காஞ்சி போன்ற நகர்கள் விரல் எண்ணிக்கையில் அடங்குவனவாகவே இருந்தன.

அதிகப்படியான மக்கள் கூடி வாழும் பெருநகரம், அதனில் இயல்பாகத் தோன்றும் போட்டிச் சமுதாயம் (Competitive Society) என்பவற்றால் விளையும் ஊறுகளைப் பல்லவர் காலத்தை அடுத்து, சோழர் காலத் தொடக்கத்தில் வாழ்ந்த கம்பநாடன் நன்கு அறிய முடிந்தது.

வள்ளுவன் அமைக்காத முறையில், சங்கப் புலவர்கள் கற்பனை செய்யாத வகையில் நாடு, நகர்பற்றிக் கூறத் தொடங்கும் பொழுதே,

'பொறிகள் புறஞ்செலா'

மக்கள் வாழ்கின்ற கோசலம் என்று அமைக்கின்றான். அப்படிப்பட்ட மக்கள் நிறைந்திருந்தார்கள் என்று சொன்னால் - இந்த நாட்டுக்கு வேறு உயர்வு சொல்ல வேண்டிய தேவையே இல்லை.

மண்வளம், நீர்வளம், விளைபொருள் வளம், கனிவளம் முதலானவற்றையெல்லாம் பின்னே விரிவாகப் பேசப்போகின்ற கம்பநாடன் எடுத்த எடுப்பிலேயே நம்முடைய கண்ணைத் திறக்கும்படியாக

'அம்பும் நெறியின் புறம் செலாக் கோசலம்'

என்று சொல்வதன்மூலம் ஒரு நாடு எப்படி இருக்க வேண்டுமென்று எடுத்துக்காட்டுகிறான் என்று நினைக்க வேண்டியுள்ளது.

பல பாடல்களில் இயற்கை வருணனையை ஈடு இணையின்றிப் பேசுகிறான் கம்பன் என்பதனை அறிவோம். அவற்றுள் இரு பாடல்கள் நம் சிந்தனையைத் தூண்டுவனவாக உள்ளன.

'சேல் உண்ட ஒண்கணாரில் திரிகின்ற செங்கால் அன்னம்
மால் உண்ட நளினப் பள்ளி, வளர்த்திய மழலைப் பிள்ளை
கால் உண்ட சேற்றுமேதி கன்று உள்ளிக் கனைப்பச்
சோர்ந்த
பால் உண்டு துயில, பச்சைத் தேரை தாலாட்டும் பண்ணை'

'ஈரநீர் படிந்து இந்நிலத்தே சில
கார்கள் என்ன வரும் கருமேதிகள்
ஊரில் நின்று கன்று உள்ளிட மென்முலை
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே' **(44, 56)**

இவ்விரு பாடல்களும் நாட்டு வாழ்க்கையில் ஒரு சிறப்பான பகுதியைக் குறிக்கின்றன.

மேய வந்த எருமைகள், நன்கு மேய்ந்த பிறகு ஊரில் உள்ள தம் கன்றுகளை நினைக்கின்றன. அந்நினைவு தோன்றியவுடன் அவற்றின் மடியிலிருந்து பால் சுரக்கின்றது. இவ்வாறு ஒழுகிய பால் அன்னத்தின் மழலைப் பிள்ளை உண்பதற்கும், சாலி நெல் நன்கு தழைத்து வளர்வதற்கும் காரணமாக அமைகின்றது.

ஆனால், சாலியும், அன்னக் குஞ்சும் பயன்படுத்துவதற்காக அவ் வெருமைகள் இப்படிப் பாலைத் தரவில்லை. எங்கேயோ இருக்கின்ற கன்றை நினைத்ததால் சுரந்த பால் எருமையோடு எவ்விதத் தொடர்பும் இல்லாத நெல்லுக்கும் அன்னக் குஞ்சுக்கும் பயன்படுகிறது என்று கவிஞன் பாடுவது வெறும் கற்பனையாகமட்டும் தோன்றவில்லை.

சமுதாயத்தில் மேட்டுக் குடியினராகிய பெருவணிகர், பெருந் தொழிலதிபர் என்பவர்கள் ஒரு வணிகத் தொழிலையோ தொழிற்சாலையையோ தொடங்கி நடத்துகிறார்கள் என்றால், அது அவர்களும் அவர்கள்

குடும்பத்தாரும் அவர்கள் மக்களும் பயனடைய வேண்டும் என்ற கருத்தினாலேயே யாம்.

பெரு வணிகம் என்பது சில நூறு பேருக்கும், பெருந் தொழில் என்பது சில ஆயிரம் பேருக்கும் வாழ்வளிப்பதாக அமைகின்றதை இன்றும் காண்கிறோம்.

இப்பெருமக்கள் தம் குடும்பம், உறவினர் என்பவர் வாழ்வு கருதித்தான் தொழிலைத் தொடங்குகிறார்கள். ஆனால், அதனால் பயனடையும் ஆயிரக் கணக்கானவர் தொழில் முதல்வருடன் எவ்விதத் தொடர்பும் உடையவர் அல்லர்.

அதேபோலச் சாலியும், அன்னக் குஞ்சும் எருமையுடன் எவ்விதத் தொடர்பும் பெற்றிராவிடினும் அதன் பயனை அனுபவிக்கின்றன.

வளமுடைய பெருங்குடி மக்கள், மேலும் மேலும் தம் தொழில் முறையைப் பெருக்குவதன்மூலம் பலருக்கு வாழ்வளிக்க வேண்டும் என்ற கருத்தும் கம்பனுடைய இவ்விரு பாடல்களிலும் அமைந்து கிடக்கின்றது என்னலாம். இவ்வாறு பாடுவதை இலக்கியத் திறனாய்வாளர் குறிப்பு (Suggestion) என்று கூறுவர்.

மேலை நாடுகளில் வாஷிங்டன், நியூயார்க், இலண்டன் போன்ற நகரங்களில் குற்றங்கள் பெருகுவதற்கான காரணங்களை ஆய்ந்த உளவியலார் 'வறுமைக் கோட்டிற்குக்' கீழ் உள்ள சிறுவர்கள், இளைஞர்கள் ஆகியோர் பொழுது போக்குவதற்கும், விளையாடுவதற்கும், அறிவு வளர்க்கும் கல்வியைப் பெருக்கிக் கொள்வதற்கும் வாய்ப்பும், வசதியும் பெறாக் காரணங்களாலேயே தம்முள் சண்டை இடுதல், சிறுசிறு குற்றங்கள் இழைத்தல் முதலியவற்றில் ஈடுபடுகின்றனர் என்று கண்டு கூறியுள்ளனர்.

நகர அமைப்பில் சிறார்கள், குழந்தைகள், மகளிர், இளைஞர்கள் - வாழ்வை வளர்த்துக்கொள்ளும் பணியில் ஈடுபட்டுள்ள நேரம் போக - எஞ்சிய நேரங்களில் சிறந்த முறையில் பொழுதுபோக்க விளையாட்டரங்கங்கள்

முதலியன அமைதல் வேண்டும் என்னும் தற்கால மனவியலார். சமுதாய இயலார் ஆகியோர் கூற்றை மெய்ப்பிப்பதுபோல் அமைந்துள்ள பாடல்.

'பந்தினை இளையவர் பயில் இடம் - மயில்உணர்
கந்தனை அனையவர் கலை தெரி கழகம்,
சந்தன வனம் அல, சண்பக வனம் ஆம்
நந்தன வனம் அல, நறை விரி புறவம்' (79)

என்பதாம்.

இப்பாடலின் முதல் இரண்டு அடிகள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை. முதல் அடியையும் இரண்டாம் அடியையும் மாற்றிப் போட்டால் தவறில்லை. ஆனால், கம்பன் அமைத்த முறையில் ஒரு சிறப்பு இருப்பதைக் காணமுடியும். கல்வி கற்கத் தொடங்கும் வயதுக்கு முன்னரே, குழந்தைகள் விளையாட்டில் ஆர்வம் காட்டுகின்றனர். உடல் செம்மையாக அமைந்தால் தான் மனம் செம்மையாகும். செம்மையுடைய மனம், சிறந்த அறிவுக்கு நிலைக்களம். அறிவு, உணர்வு என்ற இரண்டும் சேர்ந்தால் ஒழிய மனிதன் முழுத்தன்மை அடையமுடியாது. "கலை தெரி கழகம்" என்று கூறியதால் அறிவு வழிப்பட்ட கலைகளும் (கட்டிடம், சிற்பம்) உணர்வு வழிப்பட்ட கலைகளும் (இசை கவிதை முதலியன) ஒருங்கே வளர்க்கப் பட்டன என்பதைக் கவிஞன் வலியுறுத்துகிறான். "பல்லுயில் இடத்தால்" சமுதாய மக்களின் உடல் வளர்ச்சியும், "கலைக் கழகத்தால்" அறிவு, உணர்வு, வளர்ச்சியும் பெறுதலின் அயோத்தி மக்கள் முழுத் தன்மையற்ற முழுமை மனிதர்களாக (Full Resonality) வளர்கின்றனர் என்பது குறிப்பதால் இராமன் தோன்ற அயோத்தி சிறந்த இடமாயிற்று.

பொருந்து கல்வியும் செல்வமும் பூத்த பெருந்தடங்கண் பிறை நுதலார்,(67) பந்து பயிலிடம், கலை தெரி கழகம் - இவை மக்கள் வள்ம்; கலம் சுரக்கும் நிதியம், நிலம் பெருக்கும் வளம், நன் மணி சுரக்கும் பிலம் (69) இவை இயற்கை வளம்.

இத்துணை வளம் இருந்தும் நெறி கடவாதவர்களாய், குறிக்கோள் அழியாதவர்களாய், காதைகள் சொரியும்

செவிநுகர் கனிகளை (82) உண்டு தேக்கெறிகின்ற உயர்பண்பு உடையவர்களாய் அந்நகர மக்கள் வாழ்ந்த காரணத்தினாலே தான் அங்குக் குற்றம் இல்லை; கூற்றம் இல்லை, சிந்தையில் செம்மை உடையவர் ஆகலின் சீற்றம் எழ இடம் இல்லை (70). பல் கேள்வி மேவலான் அவரிடை வெண்மை இல்லை.

கீதை கூறும் சம திருஷ்டி வாழ்க்கையை அனைவரும் மேற்கொண்டார்கள் என்று கூறுவதனால் குறிக்கோள் தன்மை பெற்ற ஒரு நாட்டை, அந்நாட்டில் உள்ள நகரத்தை, நகர மக்களை எப்படிப் படைக்க வேண்டும் என்பதனைக் கம்பன் தனக்கே உரிய முறையில் படைத்துக் காட்டுகிறான்.

இத்தகைய குறிக்கோள் தன்மை பெற்ற நாட்டை, மக்களை, அவர்கள் வாழும் முறையைப் படைத்துவிட்ட கவிஞன் இவ்வனைத்தையும் ஒன்று சேர்த்து இவற்றின் எப்பகுதியிலும் எந்த ஒரு சிறு குறைகூட இல்லை என்று நிலை நாட்ட விரும்புகிறான்.

இதுவரை சொல்லிய பகுதிகளில் மக்கள் மனவளம் கூறியிருப்பினும் கோசலம், அயோத்தி மக்களுடைய ஆன்மிக வளம் தனிப்படப் பேசப் பெறவில்லை. எனவே, அதனையும் சேர்த்துச் சொல்ல விரும்பிய கவிஞன் நகரப் படலத்தின் ஆறாம் பாடலில் ஈடு இணையற்ற முறையில் இதனைச் சொல்கிறான்.

அருள், அறம் என்பவற்றைத் துணைக்கொண்டு, ஐந்தும் அவித்து, பொங்கு மாதவமும் ஞானமும் பெற்றவர்கள் அனைவரும் வாழ்வின் குறிக்கோளாகக் கருதுவது வீடுபேறே ஆகும். (98)

கற்றோர், கல்லார், நல்லார், தீயோர், உடையார், இல்லார் ஆகிய அனைவருக்கும் புகலிடமாக அமைவது செங்கண்மால் திருவடியே ஆகும்.

அச்செங்கண்மாலே தன் இருப்பிடத்தை வீட்டு இங்கு வந்து பிறந்து அளப்பருங் காலம் வாழ விரும்பினான் என்று கூறுமுகத்தால் குறிக்கோள் தன்மை பெற்ற நாட்டை, நகரத்தைத் தான் அமைத்த முறை சரியானது என்று

காட்டுவதுபோலச் 'செங்கண்மால் வந்து வாழ்ந்த இடம் இது' என்று கூறுகிறான். (98)

கடவுள் இங்கு வந்து பிறந்தான் என்று கூறாமல், கடவுளே இங்குப் பிறக்க விரும்பினான் என்று கூறும் வகையில் நாட்டு, நகரச் சிறப்பை ஒப்பற்றதாக ஆக்கிக் காட்டுகிறான்.

நான்கு பிரிவுகளாகப் பால காண்டத்தைப் பிரித்தபோது இரண்டாவது பிரிவாகத் திரு அவதாரப் படலம், கையடைப் படலம், தாடகை வதைப் படலம், வேள்விப் படலம், அகலிகைப் படலம், மிதிலைக் காட்சிப் படலம் - இந்த ஆறும் ஒரு தொகுதியாக வந்ததைக் கண்டோம்.

இதனால் முக்கியமான ஒன்றைக் கவனிக்க வேண்டும். முதல் தொகுதியான நான்கு படலங்களில் காப்பிய நாயகன் பேசப்படவில்லை. ஏனென்றால், திரு அவதாரத்திலிருந்து தான் காப்பிய நாயகனைப் பற்றிய பேச்சுத் தொடரும். திரு அவதாரப் படலத்தில் காப்பிய நாயகன் பிறந்தான் என்று சொல்லிய பிறகு அவனுடைய பிள்ளைப் பருவத்தைச் சிறு நூறு பாடல்களிலாவது பாடியிருக்கலாம். என்ன காரணத்தாலோ கவிச்சக்கரவர்த்தி பாடவில்லை. நான்கைந்து பாடல்களில் தசரத குமாரனைப் பதினாறு வயது இளைஞனாக ஆக்கிவிடுகின்றான்.

பல கதைகள் கம்பனைப் பற்றி வழங்குகின்றன. அவற்றில் ஒன்று அவனுக்கு அம்பிகாபதி என்கிற ஒரு மகன் இருந்தான் என்றும், அவன் கம்பன் காலத்திலேயே அவன் கண்ணெதிரில் அரச தண்டனை பெற்று உயிர் இழந்தான் என்றும் சொல்கிறார்கள். ஒருவேளை அந்தக் கதை உண்மையாக இருக்கக்கூடுமோ என்றுகூடத் தோன்றுகிறது. அப்படியானால் குழந்தைச் செல்வத்தினிடத்திலே அவன் மனத்தில் ஆழமாகத் தோன்றிய வடு இராமனைக் குழந்தையாக வைத்துப் பாடுவதற்கு இடந்தரவில்லையோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

நாலாயிர திவ்யப் பிரபந்தத்திலேயே துளையமாடிய கவிச் சக்கரவர்த்தி கம்பநாடன் குழந்தைச் செல்வமே இல்லாத

பெரியாழ்வார். தமிழுலகத்தில் பிள்ளைத் தமிழ் தோன்றுவதற்கு வித்திட்டவர் என்பதை மறக்க முடியாது. கண்ணனைக் குழந்தையாக்கி அவர் பாடுகின்ற பாடல்கள் ஒருமுறை கற்றாரையும் உலுப்பிவிடக் கூடிய அளவு அற்புதமான உணர்ச்சி நிரம்பியவை. அவற்றை நன்கு படித்து மகிழ்ந்திருக்கக் கூடிய கம்பன் அதைப் பயன்படுத்தி இராகவனுக்கு குழந்தைப் பருவப் பாடல்கள் பலவற்றைப் பாடியிருக்கலாம், பாடாமல் விட்டுவிட்டான் என்பதை அறிய முடிகிறது.

பிறந்தான், வளர்ந்தான், வசிட்டனிடத்திலே கல்வி கற்றான். அப்படிக் கல்வி கற்கும்போதே அவன் மேட்டுக்குடி மகனாக - அரச மகனாக வாழவில்லை என்பதையும் பொதுமக்களோடு நெருங்கிய தொடர்பு உள்ளவனாக வாழ்ந்தான் என்பதையும் ஒரு பாடலில் வைத்துக் காட்டுகிறான். தெருவில் வருகின்றவர்களையெல்லாம் சந்தித்து,

எதிர்வரும் அவர்களை எமையுடை இறைவன்
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா
'எது வினை இடர் இலை இனிது நும் மனையும்
மதி தரு குமரரும் வலியர்கொல்' எனவே (311)

'உசாவுவான். இப் பாடலில் பொதுமக்களோடு எப்படி இரண்டறக் கலந்து பழகுகிறான் என்பதைக் கவிச்சக்கரவர்த்தி வைத்துக் காட்டுவது நினைந்து பார்ப்பதற்கு உரியதாகும்.

வால்மீகியின் பால காண்டம் மூன்றாவது சருக்கத்தின் 33வது பாடல் இராமன், சாதாரண மக்களிடம் வலியச் சென்று குசலம் விசாரித்தான் என்று பேசுகிறது.

இராமாயண தனி சுலோகி என்ற பெயரில் வால்மீகியின் சிறந்த பாடல்களுக்கு வியாக்கியானம் எழுதிய பெரியவாச்சான் பிள்ளை, அரச குமாரன் எளிய மக்களிடம் சென்று பேசியதால் அவர்களுடைய மனத்தில் அவனுடைய அன்பு பாய்ந்தது. எதுபோல என்றால், வறண்டு பிளந்து கிடக்கின்ற நிலப்பரப்பில் ஒரு பாட்டம் மழை பெய்தாற்போல

இருந்தது என்று எழுதியுள்ளார். வால்மீகியின் பாடலை, மனத்துள் வாங்கிக்கொண்ட கம்பன் 'எதிர் வரும் அவர்களை' என்ற பாடலை அமைக்கின்றான்.

அதற்கடுத்தபடியாக வசிட்டரிடத்தில் கல்வி கற்ற அவன் விசுவாமித்திரரோடு செல்லுகின்றான். அங்கே தாடகை எதிர்ப்படுகின்றான். மிக நீண்ட பரம்பரையிலே சில அடிப்படையான கொள்கைகள், பண்பாடுகள் போற்றி வளர்க்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்று தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 'சுத்தவீரன் பெண்களைக் கொல்லக் கூடாது' என்பதாகும். அந்த மரபில் வளர்ந்தவனாகிய இராகவனுக்குத் தாடகையைக் கொல்வது என்பது நினைக்க முடியாததாக அமைகின்றது. இந்த நிலையில் விசுவாமித்திரன் மிக அற்புதமான பல காரணங்களைக் காட்டி 'இவள் பெண்ணே அல்லள் - பெண் உருவத்திலுள்ள அரக்கி' என்று எவ்வளவு சொன்னாலும்,

'பெண் என மனத்திடை பெருந்தகை நினைந்தான்' (374).

இப்போது விசுவாமித்திரன் பேசுகிறான். "ஐயா காழ்ப்புணர்ச்சியோடு, வெறுப்புணர்ச்சியோடு, அவள் மாட்டுக் கொண்ட சின உணர்ச்சியோடு நான் இதைச் சொல்லவில்லை.

'சீறி நின்று இது செப்புகின்றேன் அலேன்'

தர்மம் எது என்பதை நன்கு பார்த்துத்தான் சொல்கின்றேன்.

'ஈறு இல் நல் அறம் பார்த்து இசைத்தேன்'

எந்த யோசனையும் வேண்டா!

'ஆறி நின்றது அருள் அன்று அரக்கியைக் கோறி' (382)

எனக் காரணம் கூறி 'இவளைக் கொல்க' என்று கட்டளை இடுகின்றான்.

இன்றும்கூடச் சிறிய நீதிமன்றங்களிலிருந்து உச்ச நீதிமன்றம்வரை பல நீதிமன்றங்கள் உள்ளன. ஏன்? மாவட்ட, மாநில நீதிமன்றங்கள் தரும் தீர்ப்பை உச்ச நீதிமன்றம்

மறுத்து, மாறுபட்ட தீர்ப்பை வழங்கக் காண்கிறோம். பின்னர் அதுவே முடிவான தீர்ப்பாகிவிடுகிறது.

இவ்வாறு மாறுபட்ட தீர்ப்பை வழங்குவதற்குச் சிறப்பான காரணங்கள் இருத்தல் வேண்டும். ஒரு காலத்தில் ஒரு சூழ்நிலையில் இயற்றப்பட்ட சட்டங்களைக் காலம் சூழ்நிலை என்ற இரண்டும் மாறிவிட்டபொழுதும் அச்சட்டத்திற்குப் பழைய பொருளைக் காண்பது பொருத்தமாகாது. எனவே, உச்ச நீதிமன்றம் பழைய சட்டத்திற்குப் புதிய பொருளைக் காண முற்படுகிறது.

பெண்ணின் மேல் அம்பு எய்யக்கூடாது என்பது பழைய சட்டம். அச்சட்டத்தில் பெண் என்பவள் யார் என்ற விளக்கம் தரப்படவில்லை. பெண் உடம்பும் வடிவும் பெற்றவர்கள் எல்லாம் ஒன்றாகவே மதிக்கப்பெற்றனர். பெண் தன்மை அற்ற, கொடுமை நிறைந்த மனமும் செயலும் உடையவர்கள் பெண் வடிவு பெற்றிருந்தாலும் பெண்கள் அல்லர். வடிவு கொண்டு மட்டும் ஒன்றை முடிவு செய்யக் கூடாது என்ற புதிய விளக்கம் விசுவாமித்திரனாகிய உச்ச நீதிமன்றம் வழங்கியதாகும்.

இந்த விளக்கத்தை, தீர்ப்பை இராகவன் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு வருகிறான். அத்தீர்ப்பின்படி அவன் நடந்துகொள்ளும்பொழுது அதனால் விளையும் நன்மை தீமைகளுக்கு இராகவன் பொறுப்பாகாமல் விசுவாமித்தி ரனைப் பொறுப்பாக்கிவிடுகிறான். அதனாலேயே "நின்னுரை வேதம் எனக் கொடு" அதன்படி நடத்தலே என் கடமை என்று கூறிவிடுகிறான்.

இங்கு இராமன் தர்மசங்கடமான நிலையில் அகப்பட்டுக் கொள்கிறான். அவன் பரம்பரையில் வந்த, ரத்தத்தில் ஊறிய பண்பாடு பெண்ணைக் கொல்லக் கூடாது என்று சொல்கிறது. எதிரிலே இருக்கிற விசுவாமித்திரன் தாயாக, தந்தையாக, குருவாக, தெய்வமாக மதிக்கப்பட வேண்டியவன் என்று தசரதன் கட்டளை இட்டு அனுப்பினான். ஆதலால், இந்த நான்கு இடமும் ஒன்றாக இருக்கிற இந்த விசுவாமித்திரன் இப்போது 'கோறி' என்று கட்டளை இடுகிறான்.

இந்தத் தர்மசங்கடத்தில் அகப்பட்ட இராகவன் மிகச் சிறந்த முறையில் ஒரு முடிவுக்கு வருகின்றான். இதில் தன்னுடைய விருப்பு வெறுப்பு என்பதைக் காட்ட விரும்பாத இராகவன் - 'கடமை' என்ற உணர்ச்சியின்பாற்பட்டு, தான் என்பதைப் புறத்தே தள்ளிவைத்துவிடுகின்றான். மிக அற்புதமாகப் பேசுகிறான். 'ஐயா

.................... அறன் அல்லவும்
எய்தினால், அது செய்க என்று ஏவினால்
மெய்ய நின் உரை வேதம் எனக் கொடு
செய்கை அன்றோ அறம் செயும் ஆறு' (383)

'நிறைவேற்றுவதுதான் என்னுடைய கடமை' என்று முடிக்கின்றான். எனவே, தர்ம சங்கடமான நிலை வரும்போது மிக ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு எப்படி இராகவன் முடிவெடுக்கின்றான் என்பதை மிக அற்புதமாக வைத்துக் காட்டுகிறான் கம்பநாடன். முதன்முதலாக அரச குமாரனாகிய இராகவன் எப்படிப் பிற்காலத்தில் வளரப் போகின்றான், எப்படிப் பிரச்சினைகளைச் சமாளிக்கப் போகிறான் என்பவற்றை நாம் அறிந்துகொள்வதற்கு முதல் வாய்ப்பாகும் இது.

இதற்கு முன்னர் அவன் தனிப்பட்ட முறையில் தானே சிந்தித்துச் செயல்படுகிற எந்தச் சூழ்நிலையும் ஏற்படவில்லை. அப்படி ஒரு சூழ்நிலை ஏற்படும்போது இவன் எப்படி நடந்து கொள்கிறான் என்பதை வைத்துத்தான் இவனுடைய பிற்கால வாழ்க்கை அமையும் என்பதை எடுத்துச் சொல்பவன்போலக் கம்பநாடன் இந்த அற்புதமான காட்சியை நமக்குக் காட்டுகிறான். ஆகவே, இராகவன் இக்கட்டான சூழ்நிலையில் எப்படிச் சிந்தித்துச் செயல்படுகிறான் என்பதைக் காட்டுவதற்குத் தாடகை வதை நமக்கு ஒரு பாடமாக அமைகின்றது. அவனுடைய வளர்ச்சி முறையில் ஒப்பற்ற திருப்பு மையமாக அமைந்துவிடுகிறது தாடகை வதம் என்பதை அறிகின்றோம். இதை ஒரு தொகுப்பாக வைத்துச் சிந்தித்தோம்.

மேலும் ஒரு சிந்தனையோட்டம் இதில் கிடைக்கின்றது. வளர்ந்து, காளைப்பருவம் அடைந்த ஒருவன் தனக்கென்று சில எண்ணங்கள், நினைவுகள், குறிக்கோள்கள் முதலியவற்றை உடையவனாக இருப்பான். முதன்முதலாக இப்போது அந்நிய மனிதனோடு பழகுகிறான் இராகவன். விசுவாமித்திரன் முன்பின் பழக்கம் இல்லாதவன். அப்படிப்பட்ட ஒருவன் ஒன்றைச் சொன்னான் என்றால், சாதாரண மனிதர்கள்கூட அதை ஏற்றுக்கொள்வது கடினம். அப்படியிருக்க, அரச குமாரன் எப்படி ஏற்றுக்கொண்டான் என்று சிந்திக்கத் தோன்றுகிறது அல்லவா? அதிலும் ஓர் அடிப்படை இருக்கின்றது. கீதையில் சொன்னபடி சமதிருஷ்டி உடையவனாக, ஸ்திதப்பிரக்ஞனாக ஒருவன் வாழ்வானே யானால் அவன் தான், தனது, தன்னுடைய எண்ணம் என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. எது கடமை என்று சொல்லப்படுகிறதோ அதை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பான். அந்தக் கடமையை நிறைவேற்றும்போது தன்னுடைய விருப்பு வெறுப்புகள் குறுக்கிட அவன் இடம் கொடுப்பதே இல்லை. இராமன் தனது கருத்து எதுவாயினும் உலகங்களை யெல்லாம் சிருஷ்டித்தவனும், காயத்ரீ மந்திரத்தைத் தோற்றுவித்தவனும், யாவராலும் போற்றப்படுகின்றவனும், பிரும்மரிஷி என்று பட்டம் பெற்றவனுமாகிய விசுவாமித்திரன் 'இதுதான் அறம்' என்று சொல்வானேயானால், இதுவரையில் அறம் என்பதற்குத் தான் கொண்டிருந்த கருத்தை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, விசுவாமித்திரன் 'இவளைக் கொல்வதுதான் அறம்' என்று சொல்லும்போது அதனை ஏற்றுக்கொள்கிறான் என்று காணுகின்றோம்.

அப்படி ஏற்றுக்கொள்ளும்போது இராமனுடைய வளர்ச்சியையும் நாம் அறியமுடிகிறது; உண்மையில் சமதிருஷ்டி உடையவனாக அவன் வளருகிறான் என்பதைக் காணமுடிகிறது. இப்படிச் சமதிருஷ்டி உடையவனாக வளருகின்ற இந்த வளர்ச்சி பிற்காலத்தில் அவனுக்கு உதவப் போகிறது என்பதையும் காணுகிறோம்.

இனி, அடுத்தபடியாக மூன்றாவது பகுதிக்குச் செல்லுகிறோம். கடிமணம் நடைபெறுகிறது. மணத் தம்பதிகள் தசரதனோடு சேர்ந்து அயோத்தி திரும்புகிறார்கள். இராமன், தசரதன் ஆகிய இருவரும் ஒரு தேரில் இருக்கிறார்கள். அந்த நிலையில் ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது. சற்றும் எதிர்பாராத வகையில், உலகம் எல்லாம் கண்டு அஞ்சத்தகுந்த முறையில், பூமி நடுங்குகின்ற முறையில், திக் கஜங்களெல்லாம் கலங்குகின்ற வகையில் பரசுராமன் வருகின்றான்.

பரசுராமனைப் பற்றி இராகவனுக்கு ஒன்றும் தெரியாது என்பது நன்றாகத் தெரிகின்றது. பரசுராமன் என்றால் யார், எத்துணை ஆணவமும், தவ பலமும் உடையவன், அரசர்களை 21 தலைமுறை கருவறுத்தவன் என்பதெல்லாம் தசரதனுக்குத் தெரியுமேயொழிய இராகவனுக்குத் தெரியக் காரணமே இல்லை.

வந்த பரசுராமனும் மிகத் தடபுடலாகத் தன்னுடைய ஒவ்வொரு சொல்லிலும் தன்னுடைய ஆணவமும் தவ பலமும் வெளிப்படுகின்ற முறையில் பேசுகிறான். அவனைக் கண்டமாத்திரத்தில் தசரதன் நடுங்கி, அஞ்சி அடைக்கலம் என்று எவ்வளவோ சொல்லியும் அதைப் பரசுராமன் காதில் வாங்கிக்கொள்ளாது. இராமனைப் பார்த்துப் பேசுகிறான். 'நீ ஒட்டைவில்லை ஒடித்த ஓசை கேட்டு இங்கே வந்தேன். இங்கே நான் உண்மையான வில்லை வைத்திருக்கிறேன்.

'வல்லையாயின் வாங்குதி தனுவை' (1293)

என்று சொல்லுகிறான்.

இந்தக் காட்சி நடைபெறுவதற்கு முன்னர்த் தசரதனுக்கும், பரசுராமனுக்கும் நடைபெறும் உரையாடல்களைப் பார்ப்போமே யானால் வியப்பில் ஆழ்ந்துவிடுகிறோம். இந்த நிலையிலும்கூட இராமன் ஒரு சிறிதும் அலட்டிக்கொள்ளாமல் "யாரோ இவன்?" என்கிற ஒரு வினாவோடு நிறுத்திவிடுகின்றான். இப்பொழுது பரசுராமன் நேரடியாக இவனைப் பார்த்து,

'வல்லையாயின் வாங்குதி தனுவை'

என்று சொல்லும்போது இமயமலைபோல உயர்ந்து நிற்கின்றான் பரசுராமன். ஆணவம், தவபலம், சினம் ஆகியவற்றில் ஈடு இணை இல்லாதவனாக வளர்ந்து நிற்கின்றான். அவன் எதிரே ஒரு சிறிதும் மனக்கலக்கமோ அச்சமோ அல்லது விதிர்விதிர்ப்போ இல்லாமல் இராமன் பேசுகின்ற பேச்சுகள் அவன் யார் என்பதை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. "வல்லையாயின் வாங்குதி தனுவை" என்று சொன்னவுடன் அந்த வில்லைக் கையில் வாங்குகிறான்.

பரசுராமன் என்ன கருத்திலே 'வாங்குதி' என்று சொன்னான் என்றால், இந்த வில்லைக் கையில் வாங்கக்கூட யாருக்கும் தைரியம் இல்லை என்ற எண்ணத்தில், 'உனக்கு உடம்பில் பலம் இருந்தால், மனத்தில் தைரியம் இருந்தால் இந்த வில்லைக் கையில் வாங்குவாயாக' என்று சொன்னான் 'வாங்குதி' என்ற தமிழ்ச் சொல்லுக்கு இரண்டு பொருள்கள் உண்டு. கையில் வாங்குதல் என்பது ஒரு பொருள். 'வளைத்தல்' என்பது மற்றொரு பொருள்.

முதல் பொருளில்தான் பரசுராமன் வில்லைக் கொடுத்தான். ஆனால், பெற்ற இராமன் இரண்டாவது பொருளும் வெளிப்படுகின்ற முறையிலே வில்லை வளைத்துவிட்டான். வில்லை வளைத்ததுமட்டு மன்று, வளைத்து நாணேற்றி இறுதியாகப் பேசத் தொடங்குகிறான். இராமன் பரசுராமனிடம் பேசிய நீண்ட தொடர்கள் இவைதாம்.

'பூதலத்து அரசை எல்லாம் பொன்றுவித்தனை'

ஆகவே மற்றொரு அரசனாகிய நான் உனக்குத் தண்டனை கொடுப்பது தகுதியாகும். பூதலத்து அரசை எல்லாம் பொன்று வித்தனை என்பது முதல் வாக்கியம். ஆகவே, தண்டிப்பதற்கு நான் உரிமை உடையவன் என்பது ஒரு பொருள்.

இனி அடுத்தபடியாக, வேத வித்து ஆய மேலோன் மைந்தன் என்பதாலும் நீ விரதம் பூண்டாய் என்பதாலும் கொல்லல் ஆகாது என்ற இந்த வாக்கியங்களில் இராமனுடைய உயர்வையும், பரசுராமனுடைய மனப் பான்மையையும் நாம் அறிந்துகொள்ள முடிகின்றது.

வேதவித்து ஆய மேலோன் மைந்தன் நீ. ஆகவே, உன்னை மன்னிக்கின்றேன். அதுமட்டு மன்று, விரதம் பூண்டாய் - தவக்கோலம் கொண்டிருக்கிறாய். ஆகவே, உன்னைக் கொல்லக் கூடாது.

'ஆதலின் கொல்லல் ஆகாது'

என்று புன்சிரிப்பு மாறாமல், இராமன் பேசுவதையும் சினத்தின் எல்லையிலே நிற்கின்ற பரசுராமனையும் நம்முடைய மனக்கண்ணால் பார்க்கின்றோம்.

இப்பொழுது வேறு ஒன்றும் சொல்ல முடியாத நிலையில், இமயமலை உயரத்தில் இருந்த பரசுராமன் கடுகாகச் சிறுத்து விடுகிறான். சாதாரண மனிதனாக நின்ற இராகவன் இமயமலை அளவுக்கு உயர்ந்துவிடுகிறான். ஆகவே, ஸ்திதப்பிரக்ஞ மனோநிலை என்பதை வெளிக்காட்டுவதற்கு மிகச் சிறந்த இடமாக இதனைக் கம்பன் வைத்துக் காட்டுகிறான்.

பரசுராமன் எதிரே, 'வேத வித்து ஆய மேலோன் மைந்தன் நீ, விரதம் பூண்டாய், ஆதலின் கொல்லல் ஆகாது' என்று கூறிவிட்டு இராமன் நிறுத்தினான். 'தப்பித்தோம், பிழைத்தோம்' என்று பரசுராமன் நினைக்கின்ற நிலையில் ஒரு வார்த்தை சேர்க்கின்றான் இராமன்.

'அம்பு இது பிழைப்பது அன்றால்'

அம்பைப் பூட்டிவிட்டேன். இனி அந்த அம்பைச் சும்மா எடுத்துத் தூணியிலே போடுவது இயலாத காரியம். இந்த அம்பு ஏதாவது ஒன்றை அழித்துவிட்டுத்தான் வரும். ஆகவே, யாரை, எதனை, எவ்வாறு அழிக்க வேண்டுமென்று சொல்வதை உனக்கே விட்டுவிடுகிறேன்' என்று சொல்லுகிறான்.

'அம்பு இது பிழைப்பது அன்றால்
யாது இதற்கு இலக்கம் ஆவது இயம்புதி விரைவின்'

என்றான்.

அப்போது பரசுராமன் 'என்னுடைய தவத்தை யெல்லாம் உன்னுடைய அம்புக்கு இரையாக்குகிறேன்' என்று சொல்லும் போது பரசுராமன் வீழ்ச்சி, இராமனின் உயர்ச்சி என்ற இரண்டையும் கம்பன் அற்புதமாக வைத்துக் காட்டுகிறான்.

ஆகவே, இராமகாதையில் உள்ள ஆறு காண்டங்களில் இராகவனை வளர்த்துக் காட்டுவதற்குப் பதிலாக, பால காண்டத்திலேயே தாடகை வதைப் படலம், அகலிகைப் படலம், பரசுராமப் படலம் என்ற மூன்று படலங்களில் இராமன் எத்தன்மையன், எத்தகைய மனோ நிலை உடையவன், என்ன பண்பாட்டை உடையவன். சமதிருஷ்டியை எப்படிப் பெற்றிருக்கிறான். மெய்யுணர்வு பெற்றவனாக எப்படி வாழ்கின்றான் என்பதை எடுத்துக் காட்டுவதன்மூலம் பின்னே இவன் என்னென்ன செய்யப்போகிறான் என்பதை நமக்கு அற்புதமாக வைத்துக் காட்டுகிறான் கவிச்சக்கரவர்த்தி.

இராகவனுடைய இந்த வளர்ச்சியைக் காட்டக் கம்பன் பயன்படுத்திய நிகழ்ச்சிகள் மூன்று. கைவண்ண நிகழ்ச்சி, (தாடகைவதம்), கால் வண்ண நிகழ்ச்சி (அகலியை எழுச்சி) மன வண்ண நிகழ்ச்சி (பரசுராமன் வீழ்ச்சி) என்ற மூன்றிலும் ஓர் உண்மை மறைந்திருத்தலை, காண முடியும். திருத்த முடியாத கொடுமை (தாடகை) அழிக்கப்படுகிறது; ஒருமுறை சிறுதவறு செய்த பிழைக்கு வருந்திய அகலிகை புதுவாழ்வை நோக்கிச் செல்லப் படைக்கப்படுகிறாள். (அகலிகை எழுச்சி) பெருந்தவம் புரிந்து அகங்காரத்தை மட்டும் அடக்க முடியாத பரசுராமன் மன்னிக்கப் படுகிறான். ஆனால், அகங்காரத் திற்குக் காரணமான தவம் அழிக்கப்படுகிறது; அவன் காக்கப்படுகிறான். பால காண்டத்தில் இராகவன் தசரதன் மைந்தன்மட்டும் என்று யாரும் எண்ணிட வேண்டா. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முச் செயல்களையும் செய்யும் பரம்பொருள் இவன் என்ற உண்மையை குறிப்பாக உணர்த்துகிறான் கவிஞன்.

இதே கருத்தை அனுமன் கூற்றாக வைத்துப் பின்னர்

.................................... கை வில் ஏந்தி,
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு
அயோத்தி வந்தான்

என்ற பாடலில் விளக்கமாகக் கூறிவிடுகிறான் (5884) கவிஞன். பாத்திரப் படைப்பில் எவ்வளவு நுணுக்கமாகவும், நினைவாற்றலோடும் கவிஞன் பாடுகிறான் என்பதை அறிந்து வியப்படைகின்றோம். முத்தொழிலுக்குப் பதிலாக ஐந்தொழில் என்று கொண்டாலும், பரசுராமனிடம் தன்னை மறைத்துக் கொண்டதை மறைத்தல் என்றும், அவனுக்கு அருள் செய்தமையை அருளல் என்றும் கொண்டால், இராமன் ஐந்தொழில் புரியும் பரம்பொருள் என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றான்.

இனி, நான்காவதாக உள்ள தொகுப்பைப் பார்க்க வேண்டும். சந்திரசயிலப் படலம், வரைக்காட்சிப் படலம், பூக்கொய் படலம், நீர்விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம் முதலிய படலங்கள் காப்பியத்தின் வளர்ச்சிக்கு எந்த வகையிலும் துணை புரியவில்லை என்பது உண்மைதான். இந்த ஐந்து படலங்களையும் எடுத்துவிட்டால் எந்தவிதமான குறைபாடும் இல்லாமல் காப்பியம் நடைபெறும். அப்படியிருக்க மாபெரும் கவிச்சக்கரவர்த்தி ஏன் இந்த ஐந்து படலங்களையும் சேர்க்கவேண்டும் என்று நினைப்பதும் வினாவுவதும் நியாயமானவையே யாகும்.

இரண்டு காரணங்கள்தாம் சொல்ல முடியும்-பிற்காலத்திலே ஒரு காப்பியம் என்றால் காப்பியத் தலைவன் புனல் விளையாட்டு, மலைவளம் காணல் முதலானவையெல்லாம் இருக்க வேண்டும் என்று இலக்கணம் வகுக்கப் பட்டிருக்கிறது. அந்த இடைக் காலத்தில் தோன்றிய இலக்கணத்தைத் திருப்திப்படுத்துவதற்காகக் கம்பன் பாடினான் என்று சொல்வதிலே ஒரு குறை ஏற்படுகிறது. காப்பியத் தலைவனாகிய இராமன் இந்த ஐந்து படலத்திலும்

இல்லவே இல்லை. ஆகவே, காப்பியத் தலைவன் புனல் விளையாட்டு, முதலானவற்றில் ஈடுபட்டான் என்று பாடுவது தான் காப்பியம் என்றால், அதற்கு இங்கே இடமில்லை. பின்னே ஏன் இதை இங்கே சேர்க்கின்றான்?

ஏதோ ஒரு கால கட்டத்தில் மக்கள் மனத்தில் ஒரு கிளுகிளுப்பை உண்டாக்க வேண்டும் என்று இந்த நான்கைந்து படலங்களையும் பாடியிருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அதுமட்டு மன்று, பல்லவ சாம்ராஜ்யம் மிகப் பெரிதாக வளர்ந்திருந்த நிலையில் மற்றது எப்படி இருந்தாலும் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் ஓர் இன்ப வாழ்க்கை. இன்ப வேட்டையில் புகுந்துவிட்டார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

அதுபோலச் சோழர்கள் காலத்திலும் அது தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது. ஆகவே, மக்கள் குறிக்கோள் இல்லாமல் இன்ப வேட்டையில் தலைதெறிக்கச் செல்லுகின்ற சூழ்நிலை அப்போது இருந்திருக்க வேண்டும். அதைப் பிரதிபலித்துக் காட்டுகின்றவன்போல இங்கே தமிழ் மக்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதைக் கோசல மக்களைக் காட்டுவதன் மூலம் கம்பன் காட்டினானோ என்று நினைக்கத் தோன்றுகிறது. அன்றியும், காப்பியத் தலைவனாகிய இராமன் தாதை தயரதன் பல மனைவியரை மணந்து இன்ப வாழ்க்கை வாழ்ந்தான் என்று அறிகிறோம்.

'கருத்து முற்றத் தோய்ந்தே கடந்தான் திருவின் தொடர் போக பௌவம்' (172) என்று கம்பன் பாடிவிட்டான்.

ஆகையால், செல்வரில் சிலர் இப்படியும் வாழ்ந்தனர் என்று எடுத்துக்காட்ட இப் படலங்களை அமைத்தானோ என்று நினைப்பதில் தவறில்லை.

இம்மாதிரி அவர்கள் வாழ்ந்ததனால்தான் 7ஆம் நூற்றாண்டில் தோன்றிய அப்பர் பெருமான் தமிழ்நாடு முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டு, 'மக்கள் தேனும் பாலும் பெருக்கெடுத்து ஓடுகின்ற முறையிலே மிகச் சிறப்பாக வாழ்கிறார்கள். ஆனால், என்ன பயன்? குறிக்கோள்

இல்லாமல் வாழ்கின்றார்கள்' என்பதைச் சொல்லாமல் சொல்லிக் காட்டுகின்றார்.

'குறிக்கோள் இலாது கெட்டேன்'

என்று, திருநாவுக்கரசருடைய தேவாரத்தில் வருகின்ற இந்த ஒரு அடியை மனத்தில் வைத்துக்கொண்டுதான்

'ஆசலம் புரி ஐம் பொறி வாளியும்'

என்று ஆரம்பிக்கின்றான் கம்பன் என நினைக்கின்றோம்.

அதே நேரத்தில் குறிக்கோள் இல்லாமல் கெடுவதற்குக் காரணம் என்ன? இன்ப வாழ்க்கை, இன்ப வேட்கை எனபனவாம். அந்த இன்ப வாழ்க்கை, இன்ப வேட்கை என்ன என்பதை விஸ்தாரமாக நமக்கு விளக்குவதற்காகத்தான் இந்த ஐந்து படலங்களையும் இங்கே கம்பன் வைத்திருக் கிறான் என அறிய முடிகின்றது.

இந்தப் படலங்கள் காப்பிய வளர்ச்சிக்கு உதவி பண்ணவில்லை என்றாலும், காப்பியம் என்பது அது தோன்றுகிற காலத்தில் உள்ள மக்கள் வாழ்க்கை முறையை, மனக் கருத்தை, குறிக்கோளை, எண்ண ஓட்டங்களை, சிந்தனையைப் பிரதிபலிக்கின்ற ஒன்று என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைகின்றன என்பதைக் காணுகின்றோம்.

ஆகவே, பால காண்டம் 23 படலங்களில் தமிழ்நாட்டின் நிலை, தமிழ்மக்களின் நிலை, காப்பிய நாயகனுடைய தோற்றம், அவனுடைய வளர்ச்சி, அவன் எப்படி உயர்ந்து வருகின்றான் என்பதைக் காட்டுவதோடு அதுவரையில் எந்தப் புலவனும் காணாத முறையில் ஒரு குறிக்கோள் தன்மைபெற்ற சமுதாயத்தை, உடையார் - இல்லார் இல்லாத ஒரு சமுதாயத்தை எல்லாரும் எல்லாப் பெரும் செல்வமும் எய்தியிருந்தால் எப்படி வாழ்வார்கள் என்கிற ஒரு சமுதாயத்தைக் கம்பன் அமைத்துக் காட்டியிருக்கிறான்.

ஆக, பால காண்டம் என்பது கம்பனுடைய ஆறு காண்டங்களிலும் இது ஏதோ ஒதுக்கிவிடப்படக்கூடிய ஒன்று என்று இல்லாமல் மிக அற்புதமான பல நுணுக்கங்களைப் பெற்றிருக்கின்ற காண்டம் என அறிய முடிகின்றது.

# அயோத்தியா காண்டம்

கம்பனுடைய இராம காதையில் இரண்டாவதாக அமைந்துள்ளது அயோத்தியா காண்டமாகும். இராம காதையின் வளர்ச்சி முழுவதற்கும் உள்ள கருவைத் தாங்கி நிற்பது அயோத்தியா காண்டமாகும்.

இந்தக் காண்டம் 'மந்திரப் படல'த்தில் தொடங்கி, 'திருவடி சூட்டு படல'த்தில் முடிகின்றது. கதைப் போக்கில் இந்தப் பெயர்கள் அமைந்திருந்தாலும், கதையை மறந்துவிட்டுப் பெயர்களைமட்டும் எடுத்துக் கொண்டால் கூட, ஒரு புதுமையான சிந்தனையைத் தோற்றுவிக்கின்றது. 'மந்திரத்தில் தொடங்கினால் திருவடி சூடலில் முடியும்' என்ற எண்ணத்தை நம்முடைய மனத்தில் தோற்றுவிப்பது போல இந்தப் படலங்களின் பெயர்கள் அமைந்திருக்கின்றன.

அயோத்தியா காண்டத்தில் 'பாத்திரங்கள்' என்று சொல்லப்படுபவை மிகக் குறைவானவையே யாகும். இராமன், இலக்குவன், சீதை என்ற மூவரும் நீங்கலாக - தசரதன், கூனி, கைகேயி, பரதன்' என்ற நான்கு பாத்திரங்கள்தாம் இக் காண்டம் முழுவதும் அடைத்துக்கொண்டிருக்கின்றன. இடையில 'குகன்' வருகின்றான். அவனும் மிக முக்கியமான பாத்திரம்தான் என்பதில் ஐயமில்லை. ஆக, இந்த பாத்திரங்களை மட்டும் வைத்துக்கொண்டு மிகப் பெரிய அயோத்தியா காண்டம் நடைபெறுகின்றது.

கம்பனைப் பொறுத்தமட்டில் மூலநூலிலுள்ள 'கன்யா சுல்கக் கதை'யை முழுவதுமாக மறைத்துவிட்டான். தசரதன் கைகேயியைத் திருமணம் செய்துகொள்ளும்பொழுது, 'உன்னுடைய வயிற்றில் பிறக்கும் மகனுக்குப் பட்டத்தைத் தருகிறேன்' என்று அவளிடம் அப்போது சொல்லியிருக்கிறான். அதனை இப்போது கைகேயி நினைவூட்டுகின்ற நிலையில் இருக்கிறாள். அவன் வாய்மை தவறி விடாதிருக்க, 'ஏற்கெனவே நீ அப்படிச் சொல்லியிருக்கிறாயே', என்று சொல்லிக்

காட்டாமல், வரமாகப் பெற்றுக்கொள்கின்ற முறையில், தசரதனை ஒரு பெரிய இக்கட்டிலிருந்து கைகேயி காப்பாற்றுகிறாள், என்றுதான் நினைக்கவேண்டியுள்ளது.

வாய்மையுடையவன் தசரதன் என்றால், அந்த வாய்மையைக் காப்பதற்கு அவனே முயன்றிருக்க வேண்டும். அவ்வாறு முயலவில்லை என்றால், அவனுடைய மனைவியாகிய கைகேயி அதனை எவ்வாற்றானும் நினைவூட்டி நிறைவேற்ற வேண்டும் என்ற முறையில் அவள் பேசினாளோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

இனி, மந்திரப் படலத்தின் தொடக்கத்தைப் பார்ப்போமேயானால், தசரதனுடைய பாத்திரப் படைப்பை அறிந்துகொள்ள முடிகின்றது. நான்கு பிள்ளைகளைப் பெற்றான் தசரதன். என்றாலும், இராமனைத் தவிர, ஏனைய மூன்று பிள்ளைகளை அவன் நினைவில் கொண்டிருப்பதாகவே தெரியவில்லை. பால காண்டத்திலேயே இந்தக் குறிப்பை வைத்துக் காட்டுகிறான். கம்பன், உதவியை கேட்க வந்த விசுவாமித்திரன்.

"நின் சிறுவர் நால்வரினும்
கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி" (324)

என்றுதான் கூறினானே தவிர, 'இராமன்' என்று பெயரிட்டுச் சொல்லவில்லை. 'கரிய செம்மல்' என்றால் பரதனும் கரிய செம்மல்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. அப்படியிருக்க, 'கரிய செம்மல்' என்று விசுவாமித்திரன் கூறியவுடன், இராமனைத்தான் தசரதன் நினைத்தானே தவிர, பரதனைப் பற்றி நினைத்ததாகவே தெரியவில்லை. இந்த எண்ணம் அவனுடைய மனத்தில் வேரூன்றி நாளாவட்டத்தில் பெரிய மரமாக வளர்ந்துவிட்டது என்றுதான் நினைக்க வேண்டியுள்ளது.

"மைந்தனை அலாது உயிர் வேறு இலாத மன்னன்" (1514)

என்று இந்தக் காண்டத்தில் கம்பன் இதனை நினைவூட்டுவான். நான்கு பிள்ளைகளை உடைய தசரதன், ஒரு பிள்ளையிடத்தில்மட்டும் அன்பு செலுத்தி, ஏனைய

மூன்று பேரைத் தன் பிள்ளைகளாகவே கருதவில்லை என்றால், இந்த மாபெரும் குற்றத்திற்கு அவன் தண்டனை அநுபவித்தே தீரவேண்டிய சூழ்நிலை உருவாகின்றது.

இனி, அயோத்தியா காண்டத்தின் தொடக்கத்தில் ஒரு பெரிய நிகழ்ச்சி நடைபெறுகின்றது. மந்திரக் கிழவர் அனைவரையும் கூட்டி 'இராமனுக்கு முடிசூட்ட வேண்டும்' என்ற தன்னுடைய எண்ணத்தைத் தசரதன் வெளிப்படுத்துகின்றான். இதற்கு முன்னரே ஒரு காரியத்தைச் செய்துவிடுகிறான். பரதனை அவனுடைய பாட்டன் வீட்டுக்கு அனுப்பிவிடுகிறான். இந்தச் செயல்தான் கொஞ்சம் விந்தையாக இருக்கின்றது. இத்தனை நாளும் பரதனை அவனுடைய பாட்டன் வீட்டிற்கு அனுப்பி வைக்காத தசரதன், அவன் திருமணம் செய்துகொண்டு அப்போதுதான் திரும்பியிருக்கிறான், 'மனைவியை விட்டுவிட்டுப் பாட்டன் வீட்டிற்குப் போய்வா' என அவனை அனுப்பிவைக்க வேண்டிய சூழ்நிலை என்ன ஏற்பட்டது என்ற சிந்தனை ஓடத்தான் செய்கிறது. நம்முடைய மனத்தில் தோன்றுகின்ற இந்த ஐயத்தினைக் கூனி வெளிப்படுத்துகின்றாள்.

"பாக்கியம் புரிந்திலாப் பரதன்தன்னை, பண்டு
ஆக்கிய பொலங் கழல் அரசன், ஆணையால்
தேக்கு உயர் கல் அதர், கடிது சேணிடைப்
போக்கிய பொருள் எனக்கு இன்று போந்ததால்" (1465)

'ஏன் பரதனைப் பாட்டன் வீட்டிற்கு அனுப்பினான் தசரதன் என்பது எனக்கு இப்போது புரிந்துவிட்டது. இராமனுடைய பட்டாபிஷேகம்பற்றிப் பேசுகின்ற நேரத்தில் பரதன் இங்கிருந்தால் அது பிரச்சினைக்கு இடமாகும் என்று கருதித்தான் கேகய நாட்டிற்கு அனுப்பினான் என்று சூழ்ச்சிக்காரியாகிய கூனி பேசுகிறாள். அவள் பேசுவதிலும் ஓரளவு நியாயம் இருக்கிறது. மந்திரப் படலத்தில், தன் எண்ணத்திற்குத் தடையாக இருக்கக் கூடியவன் யார் என்று சிந்தித்து, பரதனை அப்புறப்படுத்திவிட்டுத் தசரதன் மந்திராலோசனை நடத்துகின்றான். மந்திராலோசனையின் முடிவில் தசரதனுடைய மனக்கருத்தை அனைவரும் ஏற்றுக்

கொள்கிறார்கள். எனவே, மந்திரப் படலத்தைப் பொறுத்த மட்டில் கதை சுமுகமாகத்தான் போகின்றது.

இனி, 'மந்தரை சூழ்ச்சிப் படலம்' என்பது அடுத்து நிற்பதாகும். இந்த மந்தரை என்ற பாத்திரம் ஒரு விநோதமான பாத்திரமாகும். அவளுடைய நிலை என்னவென்றால், கைகேயியுடன்கூட அவளது பிறந்தகத்திலிருந்து வந்த பணிப் பெண்தான். பணிப் பெண்ணாக இருக்கின்ற ஒருத்தி ஒரு மாபெரும் சூழ்ச்சியைச் செய்து, இராம காதையையே திசை மாற்றம் செய்கின்ற அளவுக்கு, ஒரு பெரிய காரியத்தைச் சாதிக்கின்றாள் என்றால், அது நம்முடைய மனத்தில் எளிதில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. அதுமட்டுமல்ல,

"அரசர் இல் பிறந்து, பின் அரசர் இல் வளர்ந்து
அரசர் இல் புகுந்து, பேர் அரசி" (1467)

யாக இருக்கின்ற கைகேயியின் மனத்தைக் கேவலம் ஒரு பணிப் பெண் மாற்றிவிட்டாள் என்று சொல்வதைக், கம்பனும்கூட ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. 'மந்தரை துணைக் காரணமாக இருந்தாள். இந்த மாபெரும் காரியம் நடைபெறுவதற்கு அடிப்படையாக இருந்தாள்' என்பது தவிர, கைகேயியின் மனமாற்றம் கேவலம் கூனியினால் ஏற்பட்டதல்ல என்பதை அறுதியிட்டுக் கூறுபவன் போலக், கம்பன் பேசுவான்,

"அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க, நல் அருள் துறந்தனள் தூ மொழி மடமான்" (1484)

என்பதாக.

கைகேயியின் மனம் திரிந்தது என்றால், அது கேவலம் கூனியினுடைய சூழ்ச்சியால் அன்று. அரக்கருடைய பாவமும், அல்லவர்களுடைய தவமும் சேர்ந்து கைகேயியின் மனத்தை மாற்றின என்று சொல்லுகின்ற முறையில் கைகேயியினுடைய பாத்திரப் படைப்பை மிக உயர்த்திவிடுகின்றான் கம்பநாடன்.

கூனியைப் பொறுத்தமட்டில் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க முடிகின்றது. ஒரு சிலர் எக்காரணமும் இல்லாமல் பிறருக்குக்

கெடுதல் செய்ய முற்படுகின்றதைக் காணுகின்றோம். தங்களுக்குத் தீங்கு இழைக்கப்பட்டால் அதற்குப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணத்தில் தீங்கு செய்வது ஒரு முறை. அதன் மறுதலையாக எவ்வித் காரணமும் இல்லாமல் பிறருக்குத் தீங்கு செய்தல் என்பது ஒரு சிலரின் படைப்பு ரகசியமாகும். ஷேக்ஸ்பியருடைய மிகப் பிரசித்தி பெற்ற 'ஒதெல்லோ' நாடகத்தில் வருகின்ற 'அயோகோவை'ப் போல,

உள்ளமும் கோடிய கொடியாள் (1487)

ஆகிய கூனி 'தன் மனத்தே நினைந்து செய்யும் கொடுமை உடையவள்' என்று கொள்வதில் தவறு இல்லை. இவள் இந்தக் காண்டத்திலேயுள்ள 2வது படலமாகிய 'மந்தரை சூழ்ச்சிப் படலத்தில்' காணப்படுகிறாள். இந்தப் பாத்திரப் படைப்பு உலகத்திலுள்ள மக்களுள் இப்படியும் ஒரு சிலர் உண்டு என்பதற்கு ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாக அமைவது தவிர, வேறு ஒன்றும் இல்லை. இவள் கைகேயியினிடம் சென்று, மிக மென்மையாகப் பேசி, அவள் மனத்தைக் கலைத்து, திரித்து, வரங்களின் மூலமாக இராமன் காட்டாட்சியும் பரதன் நாட்டாட்சியும் பெறுமாறு செய்துவிடுகிறாள் என்பதோடு இந்தப் படலம் முடிந்துவிடுகின்றது.

இந்தப் பாத்திரம், இந்தக் காரியத்தைச் செய்தது தவிர, இராம காதை முழுவதிலும் ஒரே ஒரு இடத்தில்தான் தலைகாட்டுகிறது. 'இராமனை அழைத்துவரப் பரதன் காட்டுக்குப் போகும்போது அனைவரும் அவனுடன் செல்கிறார்கள். கூனியும் செல்கிறாள். சத்துருக்கனன் அவளைத் தண்டிக்கப் புறப்படுகின்றான். ஆனால், பரதன் தடுத்து நிறுத்திவிடுகிறான்' என்ற அளவிலே கூனிப் பாத்திரம் மறைந்துவிடுகின்றது.

இனி கதாநாயகனுடைய தந்தையாகிய தசரதன் இறுதியாக இந்தக் காண்டத்தில் காட்சியளிக்கின்றான். 'அவன் செய்த செயல்கள் அவனுடைய வாழ்வுக்கு ஒரு முடிவைத் தந்துவிட்டன' என்று கம்பன் பேசுகின்றான்.

"மைந்தன் அலாது உயிர் வேறு இலாத மன்னன்" (1514)

என வளர்ந்துவிட்ட காரணத்தால், அவன் உயிர் போன்று இருக்கின்றவ னாகிய இராமன் காட்டுக்குப் போகிறான் என்று அறிந்தவுடனேயே மயக்கமடைகின்றான். எப்படியாவது திரும்பி வந்துவிடுவான் என்ற நைப்பாசையில் உயிரைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு இருக்கின்றான். தேரோட்டிச் சென்ற சுமந்திரன் 'இராமன், சீதை இலக்குவன்' ஆகிய மூவரையும் விட்டுவிட்டு நகருக்குத் திரும்பி வந்துவிடுகின்றான். இரதம் திரும்பிவந்தது என்று கேள்விப்பட்டவுடன் தசரதன் மூர்ச்சை தெளிகின்றான். 'ஒருவேளை இராமன் வந்துவிட்டானோ' என்று சுமந்திரனாகிய தேரோட்டியை அழைத்து,

'வீரன் வந்தனனோ' (1896)

என்று கேட்கின்றான். தேர்வலானும்

"வேய் உயர் கானம் தானும் தம்பியும் மிதிலைப் பொன்னும்
போயினன் என்றான்" (1898)

அவ்வளவுதான்.

"போயினன் என்றான் என்ற போழ்தத்தே ஆவி
போனான்" (1898)

என்று கம்பன் முடிப்பான். இராமன் கானம் போய்விட்டான் என்று சொன்னவுடனேயே தசரதனுடைய ஆவி பிரிந்துவிட்டது என்று பேசுகிறான்.

தன்னால் பேரன்பு செய்யப்பட்ட இராமன் எத்தகையவன், எத்தகைய பண்பு நலமுடையவன், என்ன குறிக்கோளுடையவன் என்பதையெல்லாம் தசரதன் நன்கு அறிந்திருந்தானா என்பது ஐயத்திற்குரியது. அறிந்திருப்பானே யானால் இராமன் மீண்டு வருவான் என்ற எண்ணத்திற்கு இடமே கொடுத்திருக்கமாட்டான். எனவே, தசரதன் இராமனை முழுவதுமாக அறிந்தான் என்று சொல்வதற்கில்லை. பரதனைப்பற்றியாவது தசரதன் அறிந்திருந்தானா என்றால், அதுவும் இல்லை.

பரதனை நன்கு அறியாத காரணத்தால் எல்லா விதத்திலும் இராமனை ஒத்தவனாகிய பரதனால் தனக்கு நீர்க்கடன்கூடச் செய்யப்பட முடியாத ஒரு நிலையைத் தசரதனே ஏற்படுத்திக்கொண்டுவிட்டான். வசிட்டனை நோக்கி,

"சொன்னேன் இன்றே; இவள் என் தாரம் அல்லள்
துறந்தேன்;
மன்னே ஆவான் வரும் அப் பரதன் தனையும் மகன் என்று
உன்னேன்; முனிவா! அவனும் ஆகான் உரிமைக்கு" (1654)

என்று தசரதன் கூறிவிட்ட காரணத்தால் இறுதியாக நீர்க்கடன் செய்வதற்குக்கூடப், பரதனுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. தசரதனுக்கு நீர்க்கடன் செய்யப் பரதனுக்கு வாய்ப்பில்லை என்று கூறுவதைக் காட்டிலும், பரதன் கையினால் நீர்க்கடன் பெறுகின்ற வாய்ப்பைத் தசரதன் இழந்துவிட்டான் என்று கூறுவது முற்றிலும் பொருத்தமாகும்.

இவ்வாறு தசரதனுடைய வாழ்க்கை அயோத்தியா காண்டத்தில் முடிந்துவிடுகின்றது. ஒப்பற்ற,

"தள்ள அரிய பெரு நீதித் தனி ஆறு புக மண்டும்
பள்ளம் எனும் தகையான்" (657)

ஆன பரதனைத் தசரதன் நன்கு அறியாத காரணத்தால்

"நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்" (2332)

என்றபடி இராமனுக்கு எந்த விதத்திலும் குறைந்தவன் என்று கூற முடியாத அளவிற்கு இராமனோடு சமநிலையுடையவனாகிய பரதன் கையினால் நீர்க்கடன்கூடப் பெறமுடியாத நிலையைத் தசரதன் அடைந்தான் என்றால், இந்தப் பாத்திரப் படைப்பின் அமைப்பில் கம்பன் சில உத்திகளைக் கையாளுகின்றான். எல்லை மீறிய பாசம் என்பது யாரிடத்தில் வைக்கப்பட்டாலும் அது இறுதியில் பெருந்துன்பத்தைத் தரும் என்பதற்குத் தசரதனையே எடுத்துக்காட்டாக அமைத்து விடுகின்றான்.

மூலநூலிலுள்ள கன்யா சுல்கக் கதையை மறைத்து விட்டானாயினும் முழுவதுமாக மறைக்க முடியவில்லை,

கம்பனால். ஆகவே, வேறு வழியே இல்லா நிலையில் தசரதன் வரம் கொடுக்க ஒத்துக்கொண்டான் என்று கதையைக் கொண்டுசென்றான் கம்பன்.

இனி வசிட்டன் முக்காலத்தையும் உணர்ந்தவனாயிற்றே, அப்படியிருக்க, கைகேயி செய்த இந்தக் காரியத்திற்காக ஏன் அவளை ஏசினான் என்று ஒரு சிலருடைய மனத்தில் ஐயம் எழலாம். வசிட்டனைப் பொறுத்தமட்டில் இதுதான் நடைபெற வேண்டியது என்பதை நன்கு அறிந்தவன். ஆதலால், கைகேயியை அவன் குறை கூறுவதற்கு இடமே இல்லை. என்றாலும், 'தன்னுடைய முக்கிய சீடனாகிய தசரதன் படும் பாட்டைப் பார்த்து, எவ்வாறாயினும் அவனுடைய துயரத்தைப் போக்கவேண்டு மென்ற ஒரே நோக்கத்தில் வசிட்டன் கைகேயியிடம் கேட்கின்றான். 'நீ இந்த வரத்தைத் திருப்பித் தந்துவிடு' என்று. உறுதியாகக் கைகேயி மறுத்துவிட்டாள். ஆகவே, அவளை ஒரு வகையாகப் பார்த்துவிட்டு வசிட்டனும் நீங்கிவிடுகின்றான் என்று கதையை அமைத்துச் செல்கிறான் கவிச்சக்கரவர்த்தி.

இந்தக் காண்டத்தின் முற்பகுதியில் மந்தரை வருகின்றாள். மாபெரும் சூழ்ச்சி செய்கின்றாள். அதோடு மறைந்துவிடுகின்றாள். கதைத் தலைவ னாகிய இராமனைப் பெற்ற தசரதன் நான்கு பிள்ளைகளைப் பெற்றும், அவனால் விரும்பப்பட்ட இராமனாலோ அல்லது இராமனையே ஒத்த பரதனாலோ நீர்க்கடன் செய்யப்பெற முடியாத நிலையில் பரிதாபமாக உயிரை விட்டுவிடுகின்றான். ஆகவே, இந்த இரண்டு பாத்திரங்களும் போக எஞ்சி இருப்பவை கைகேயி, கங்கைத் தலைவனாகிய குகன், பரதன் ஆகிய மூவருமேயாவர்.

கைகேயி என்ற பாத்திரத்தை ஒரு புதிய கண்ணோட்டத்துடன் பார்ப்பது பொருத்தமாகும். என்று நினைக்கின்றேன். இதுவரையில் கைகேயியைப் பெருங் கொடுமைக்காரியாக, கருணையற்றவளாக, பண்பற்றவளாகவே கண்டோம். தான் கொண்ட கருத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகக் கணவனை இழப்பதைக்கூடப் பெரிதாகக் கருதவில்லை என்றுதான் கூறிக் கொண்டிருந்தோம். ஆனால்,

கம்பனுடைய பாத்திரப் படைப்பை ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது கைகேயியை அவன் வேறு வகையில் அமைத்தானோ என்று நினைக்கத் தோன்றுகிறது. இராமன் எப்படி ஸ்திதப்ரக்ஞனாக அமைக்கப்படுகின்றானோ அப்படியே ஒரு ஸ்திதப்ரக்ஞ மனோநிலை யுடையவளாகக் கைகேயியும் படைக்கப்பட்டிருக்கின்றாளோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

நன்மை எது, தீமை எது என்பதை நன்கு அறிந்து கொண்டாள் கைகேயி. கூனியினுடைய சூழ்ச்சி, அவள் அந்த அடிப்படையை அறிவதற்கு ஓரளவு துணை செய்தது; அந்த அளவோடு அது நின்றுவிட்டது.

தசரதனைப் பொறுத்தமட்டில் ஒரு மாபெரும் தவற்றைச் செய்ய முற்பட்டு விட்டான். இராமனுக்குப் பட்டம் சூட்ட வேண்டும் என்று முடிவு செய்துவிட்டதால், அந்தத் தவறான முடிவை அவன் கைவிட்டா லொழிய அவனுடைய பெயருக்குப் பெருங்களங்கமும் பாவமும் வந்து சேரும். தான் முன்பு சொல்லிய சொல்லை மறந்து இப்போது புதிய ஒன்றினைத் தொடங்கி விட்டான் தசரதன். ஆகவே, அவனை வழி திருப்ப வேண்டும்.

கம்பனுடைய கைகேயி கன்யா சுல்க்க நிகழ்ச்சியை அடியோடு மறந்து விட்டாள். மாற்றாள் பெற்ற பிள்ளையாகிய இராமனை வளர்க்கத் தொடங்கி, முழு அன்பையும் அவன் மாட்டுச் செலுத்தியதால் சுல்க்க நிகழ்ச்சி அவள் மனத்தில் இல்லை. இராமன் பட்டம் சூட்டிக்கொண்டால் பரதன் செல்வாக்கு இழப்பான். தான் சக்களத்தியிடம் அடிபணிய வேண்டும் என்பதையெல்லாம் கைகேயி ஏற்றுக்கொண்டதாக தெரியவில்லை. இராமன் தன் பிள்ளை (இராமனைப் பயந்த எற்கு) என்ற கருத்துடன் வாழும் கைகேயிக்குக் கூனியின் சொற்கள் மனத்தில் பதியவில்லை. ஆழ்ந்து சிந்தித்து, சூழ்ச்சி செய்து தர்க்க ரீதியில் கூனி பேசியவை கைகேயியைப் பாதிக்க வில்லை. இதன் எதிராகப் போகிற போக்கில் "பரதனைப் பாட்டன் வீட்டிற்கு அனுப்பிய காரணம் எனக்கு இப்பொழுது புரிந்துவிட்டது" என்ற கூனியின் சொற்கள்

கைகேயியின் அடி மனத்தில் வேலை செய்யத் தொடங்கிவிட்டது. பரதன், கேகய நாடு என்ற இரண்டையும் கூனி சொல்லியவுடன் கைகேயிக்குச் சுல்க்க நிகழ்ச்சி நினைவுக்கு வந்துவிட்டது. இதன் பிறகு கூனியின் பேச்சுகள் அனைத்தும் கைகேயியின் காதில் விழுந்தனவே தவிர மனத்தில் புகவில்லை. அறிந்தோ அறியாமலோ தன் எஜமானியாகிய கைகேயியின் மனத்தில் முழுவதுமாக மறக்கப்பட்ட கன்யாசுல்க்க நிகழ்ச்சியை நினைவூட்டி விட்டாள் கூனி. "பரதனைப் போக்கிய பொருள் எனக்கு இன்று போந்ததால்" என்ற தொடர் காதில் விழுந்ததி லிருந்து கைகேயியின் மனம் ஆழமாக வேலை செய்யத் தொடங்கி விட்டது. வாக்குறுதியை மறந்து எதிர்வழி செல்லும் கணவனைக் காக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்த கற்பரசியாம் கைகேயி எப்படிக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்ற சிந்தனையில் ஆழ்ந்துவிட்டாள்.

கன்யா சுல்க்கத்தை அவனுக்கு நினைவூட்டி யிருக்கலாம். அவ்வாறு செய்தால் தசரதன் அது வரையில் செய்ததெல்லாம் பெருஞ் சூழ்ச்சிகளாக முடிந்துவிடும். பெரும் பழி அவனுக்கு ஏற்பட்டுவிடும். அப்படியுமில்லாமல், (கன்யா சுல்க்கத்தையே நினைவூட்டாமல்) என்ன காரியத்தைத் தசரதன் செய்ய வேண்டுமோ அதைத் தான் பெற்ற வரத்தின் மூலமாகச் செய்து கொண்டவளாகக் கைகேயியைக் கம்பன் படைத்துக் காட்டுகிறான்.

இவ்வாறு செய்ததால் தசரதனுடைய பெயர், குற்றத்தி லிருந்து விடுவிக்கப்படுகிறது. அதே நேரத்தில் எவ்விதக் குற்றமும் செய்யாத கைகேயியின் பெயர் மண்ணில் ஆழ்த்தப் படுகிறது. இதனை நன்கு அறிந்திருக்கின்றாள் கைகேயி என்பதில் ஐயமே இல்லை.

இறுதியாகத் தசரதன் 'நீ உன்னுடைய முடிவிலிருந்து மாறவில்லையானால் நான் இறந்துவிடுவேன்'.

"உன் கழுத்தின் நாண், உன் மகற்குக் காப்பின் நாண்
ஆம்" (1653)

'உன் கழுத்தில் அணிந்திருக்கும் மங்கல நாண், உன் மகன் கைக்குக் காப்பு நாண் ஆகக் கடவ்து' என்று தசரதன் கூறிய பொழுதும்கூட, ஒருத்தி பிடிவாதமாகத் தான் கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கின்றாள் என்றால், இது வெறுந் தாய் அன்பினாலோ தன் மகனுக்குப் பட்டம் சூட்ட வேண்டுமென்ற எண்ணத்தினாலோ எடுத்த முடிவாகச் சிந்திப்பதற்கில்லை. 'பரதனுக்குப் பட்டம் சூட்ட வேண்டு மென்றால் உன் கழுத்திலுள்ள திருமாங்கல்யச் சரடே அவன் கைக்குக் காப்பாகக் கடவது' என்று கணவனாகிய தசரதன் சொல்லிவிட்டான் என்றால், இதைவிடப் பெரிய சாபத்தைப் பெற்றுக்கொண்டு, பரதனுக்குப் பட்டம் சூட்ட வேண்டுமென்று கைகேயி நினைத்தாள் என்று நினைப்பது அவளுடைய அறிவுக்கும், பண்புக்கும் பொருத்தமில்லாத தாகப் படுகின்றது.

ஆகவே, வேறு ஏதோ ஒரு காரணம் இருந்திருக்க வேண்டும். அந்தக் காரணத்தைத் தன் அடிமனத்தில் வைத்துக்கொண்டு, அதனை வெளியில் சொல்ல முடியாத நிலையில், தன்னுடைய கணவனாகிய தசரதனைப் பெருங் குற்றத்திலிருந்து காப்பாற்றவேண்டு மென்று நினைக்கின்றாள் கைகேயி என்று நினைப்பது பொருத்தமுடையதோ என்று தோன்றுகிறது.

இராமனது அவதார நோக்கத்தை அவள் அறிந்திருந்தாள் என்று சொல்வதற்கில்லை. 'இராகவன் காட்டிற்குச் செல்வது தான் அவன் பிறந்ததனுடைய நோக்கம்', என்பதைக் கைகேயி அறிந்திருந்தாள் என்று சொல்வது கதைப் போக்கில் இடையூறு விளைவிக்கும். ஆகவே, அந்தக் கருத்தை விட்டுவிடலாம்.

அவளைப் பொறுத்தமட்டில் தசரதன் தன்னுடைய திருமணத்திற்கு முன்னால் கொடுத்த வாக்கை மீறி (கன்யா சுல்க்கம்) இப்பொழுது அதற்கு மாறுபட்ட ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குகிறான். இதனைச் செய்து முடிப்பானே யானால் உலகமுள்ளளவும் தசரதனுடைய பெயர் பெரும் பழிக்கு உள்ளாகும். அதுமட்டு மல்ல, பெரும் பாவத்திற்கும் அவன் ஆளாவான். பரம்பொருளை மகனாகப் பெற்றுங்கூ

இத்தகைய குற்றத்திலிருந்து அவன் விடுபட முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கும்.

இப்பொழுது ஒன்று, தசரதனை அவனுடைய வழிப்படி விட்டு அதனால் வருகின்ற பெருங் குற்றத்தினையும், பழி பாவங்களையும் அவனே ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும். இல்லையானால் அவன் செய்ய முனைந்த காரியத்தைச் செய்யவிடாமல் தடுத்து அதனால் வருகின்ற பழி பாவங்கள், குற்றங்கள், கெட்ட பெயர் அனைத்தையும் கைகேயி தானே ஏற்றுக்கொண்டு, தசரதனைக் காப்பாற்ற வேண்டும். இந்த இர;ண்டின் இடைப்பட்டு, 'இருதலைக் கொள்ளி எறும்பாக' இருந்த கைகேயி, ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வருகின்றாள் என்று நினைக்கவேண்டியுள்ளது.

மந்தரை சொல்லிவிட்டுப் போன பிறகு தசரதன் வருவதற்கு இடைப்பட்ட நேரத்தில் கைகேயியினுடைய மனத் திரையில் இந்த எண்ண ஓட்டங்கள் நன்கு பதிந்திருக்க வேண்டும். 'வாய்மையும் மரபும் காத்தவனாக' அவனை ஆக்க வேண்டும். 'பொய் உரையாத புண்ணியனாக' அவனை ஆக்க வேண்டும் என்று கைகேயி முடிவுக்கு வந்துவிட்டாள். கற்புடைய மனைவியின் கடமை அது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. 'தற்காத்துத் தற்கொண்டானைப்' (குறள்-56) பேண வேண்டிய கடப்பாடு அவளுடையதாக ஆகிறது.

தான் எந்த நிலையை அடைந்தாலும், தனக்கு எத்தகைய அவப்பெயர் வந்தாலும், தான் எந்தப் பாவத்திற்குப் போவதாக இருந்தாலும் அதுபற்றிக் கவலைப்படாமல், தன்னைக் கைப் பிடித்தவனாகிய கணவனுடைய குற்றங்களை நீக்கி, அவனுக்குப் பழி வராமல் செய்து அவன் நரகத்தை அடையாமல் செய்யவேண்டியது தன்னுடைய கடமை என்று கைகேயி முடிவு செய்திருத்தல் வேண்டும்.

இந்த முடிவை அவள் மேற்கொண்ட பிறகு, அந்த முடிவைக் கொண்டுசெலுத்துகின்ற முறையில் அவள் ஒப்பற்ற ஸ்திதப்ரக்ஞ நிலையில் நின்று கர்மயோகியாகச்

செயலாற்றுகின்றாள். இவ்வாறு செய்வதனால் கணவன் உயிர் போய்விடும் என்று முதலில் அவள் நினையாமல் இருந்திருக்கலாம். ஆனால், கணவன் அதை எடுத்துக் காட்டிய பிறகு, 'கணவனுடைய உயிரா? அல்லது அவன் பழிக்கு ஆளாகாமல் இருப்பதா?' என்ற ஒரு வினா கைகேயியின் மனத்தில் தோன்றியிருத்தல் வேண்டும்.

தசரதன் அறுபதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவன். இன்னும் சில ஆண்டுகள் வாழ்வதில் அவனுக்கு எந்த விதமான சிறப்பும், பெருமையும் இருக்கப்போவ தில்லை. ஆனால், இத்தனை ஆண்டுகள் வாழ்ந்தும், அவன் இராமனுக்குப் பட்டம் கட்டிவிட்டு உயிர் துறப்பானேயானால் வார்த்தை தவறிய பெரும் பழி அவனைச் சூழத்தான் செய்யும். இந்தப் பழியிலிருந்து நீங்கவேண்டு மானால், அவன் உயிர் போவதாக இருந்தாலும் சரி அதைப்பற்றிக் கவலையில்லை. இந்தப் பழி பாவங்கள் அவனை அடையா திருத்தல் வேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு கைகேயி செயல்பட்டாள் என்று நினைக்கவேண்டி யிருக்கிறது.

ஆகையினால்தான், தசரதன் எவ்வளவு எடுத்துக் கூறியும் வசிட்டன் வந்து கூறியும் - கோசலை வந்து அழுதும் - கைகேயி எதற்கும் அசையாமல், தான் கொண்ட கொள்கையில் உறுதிப்பாட்டோடு நின்றுவிட்டாள். ஆகவே, இந்த அடிப்படையை வைத்துக்கொண்டு பார்ப்போமேயானால் கைகேயி செய்த தியாகம் மாபெரும் தியாகமாகும். இந்த மாபெரும் தியாகத்தில் தன்னைச் சூடமாக ஆக்கி எரித்துக் கொண்டு, கணவனைக் காப்பாற்றுகின்றாள் என்று நினைக்கத் தோன்றுகிறது.

கைகேயி இவ்வாறு நினைந்துதான், ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு இந்த முடிவிற்கு வந்து கணவனைக் காப்பாற்று வதற்காகத் தன்னையே சர்வ பரித்தியாகம் செய்து கொண்டாள் என்ற முடிவுக்கு அரண் செய்கின்ற முறையில் பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் அமைகின்றன.

பரதன் வருகிறான். தாயிடம் பேசுகிறான், 'தந்தை வானத்தான். அண்ணன் கானத்தான்' என்று அவள்

பேசுகிறாள். அதனைக் கேட்ட பரதன் துணுக்குறுகின்றான். சிறிதும் உணர்ச்சியில்லாமல், 'ஒருவன் கானத்தான், ஒருவன் வானத்தான்' என்று சொல்கிறாளே என்று நடுங்குகின்றான் பரதன். உடனே காரணங்கள் கேட்டறிந்தவுடன்

"ஆயவன் முனியும் என்று அஞ்சினேன் அலால்
தாய்எனும் பெயர் எனைத் தடுக்கற்பாலதோ" (2173)

'தாய் எனும் பெயர் என்னைத் தடுக்கவில்லை. அண்ணன் இராமன் கோபித்துக்கொள்வானே என அஞ்சுகிறேன். அதனால்தான் உன்னைக் கொல்லாமல் விட்டு விடுகிறேன்' என்று பேசுகிறான் பரதன். அந்த நிலையிலும் கைகேயி வாய் திறக்கவேயில்லை.

இனி, அனைவரும் இராமனை அழைத்து வருவதற்காகச் செல்லும்போது கைகேயியும் செல்கிறாள். குகனிடம் தன் தாய்மார்களை அறிமுகம் செய்துவைக்கின்ற பரதன், கைகேயியை அறிமுகம் செய்துவைக்கும்பொழுது

"படர் எலாம் படைத்தாளை, பழி வளர்க்கும்
செவிலியை, தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
உயிர்ப் பாரம் குறைந்து தேய
உடர் எலாம் உயிர் இலா எனத் தோன்றும்
உலகத்தே ஒருத்தி அன்றே
இடர் இலா முகத்தாளை அறிந்திலையேல்
இந் நின்றாள் என்னை ஈன்றாள்" (2371)

என்றெல்லாம் பேசுகின்றான். இந்த நிலையிலும் கைகேயி வாயைத் திறக்கவேயில்லை. இறுதியாக அவள் பேசிய பேச்சு - பரதனிடம் 'வானத்தான், கானத்தான்' என்று சொன்னாளே ,அதுதான். அதன் பிறகு அவள் வாயே திறக்கவில்லை என்பதை அறியும்போது கொஞ்சம் வியப்புத் தோன்றுகிறது.

மிக எளிதான முறையில் தன் கணவன், கொடுத்த வாக்கை மறந்து செய்ய இருந்த தவற்றிலிருந்து அவனைக் காப்பதற்காகத்தான் அதனைச் செய்ததாக அவள்

சொல்லியிருக்கலாம். சொல்லியிருந்தால் பரதனோ, கோசலையோ யாருமே அவளைக் குற்றம் சொல்வதற்கில்லை. அந்த நிலையில், 'அவள் ஏன் அதனைச் சொல்லித் தப்பித்துக் கொண்டிருக்கக் கூடாது' என்று நினைக்கும்பொழுதுதான் அவளுடைய பெருமை நமக்குத் தெற்றெ‌ன விளங்குகிறது.

இத்துணையும் மனத்திற் கொண்ட கம்பநாடன் கணவன் வருவதற்கு முன்னர் அணிகளைப் பறித்து எறிந்துவிட்டுக் கீழே கிடக்கும் கைகேயியை அறிமுகம் செய்யும்பொழுது "நாடக மயில் துயின்றென்ன" (1494) என்று பேசுகிறான். நாடக மயில் என்று கூறியது விரிவாக ஆயப்படவேண்டிய பகுதியாகும். 'அரசியர் மூவர்' என்ற என் தனி நூலில் இது பேசப்பெற்றுள்ளது.

இதனை அவள் சொல்லியிருப்பாளேயானால் தன் பழியிலிருந்து விலகிக்கொள்ளலாமே தவிர, தசரதனுடைய புகழ் மங்கியிருக்கும். அந்த நிலை வரக்கூடாது என்பதற்காகத் தான் கைகேயி இவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்தாள். வாய் திறந்து, 'வேண்டுமென்றேதான் செய்தேன். இதனை நான் செய்யாமல் இருந்திருப்பேனேயானால் தசரதன் வாய்மையும், மரபும் காத்தவனாக இருந்திருக்க மாட்டான்' என்று சொல்லியிருப்பாளேயானால் மறுபடியும் தசரதனுக்குப் பழி ஏற்பட வழிசெய்தவள் ஆகிவிடுவாள். ஒரு கடுகளவு கூடக் கணவனுக்குப் பழி வராத முறையில் அவனைப் பாதுகாத்து, அதன் விளைவாகத் தன்னையே தியாகம் செய்துகொண்டு வாய் திறவாமல் கடைசிவரை இருந்த பாத்திரமாக அமைகின்றாள் கைகேயி. இவளுடைய இந்த மாபெரும் தியாகத்தைப் பரதன் உணர்ச்சிவசப்பட்ட காரணத்தால் அறிந்துகொள்ள வில்லை. ஏனையோரைப் பற்றிக் கவலையேயில்லை. ஆனால், இராகவனைப் பொறுத்த மட்டில் நன்கு அறிந்திருந்தான் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

இராகவனைப் பிள்ளையாகப் பெற்றுங்கூட, தசரதன் வீடுபேற்றை அடையக்கூடிய நிலையைப் பெறவில்லை. தேவர் உலகத்தில்தான் சென்று தங்குகின்றான். இராகவன் கானகம்

"போயினான் என்றான்; என்ற போழ்தத்தே ஆவி போனான்"
(1898)

என்றுதான் கம்பன் கூறுகின்றானே தவிர, 'வீடுபேற்றை அடைந்தான்' என்று சொல்லவில்லை. ஏன் தெரியுமா? மனத்திலே கைகேயி, பரதன் என்ற இருவர் மாட்டுக் கொண்ட காழ்ப்புணர்ச்சியோடு இறுதிவரையிலும் தசரதன் இருந்து விட்டான். கைகேயிமாட்டுக் கொண்ட காழ்ப்புணர்ச்சியும், பரதன்மாட்டுக் கொண்ட கசப்புணர்ச்சியும் அவனுடைய மனத்தில் நிறைந்திருந்த காரணத்தால்தான் அவன் வீடுபேற்றை அடைய இயலவில்லை. ஆகவே, இந்தக் காழ்ப்புணர்ச்சி அவனிடமிருந்து நீங்கினாலொழிய அவன் வீடுபேற்றை அடைய முடியாது என்ற இந்த நாட்டுக் கொள்கையை வலியுறுத்துவதற்காக, மூல நூலில் இல்லாத ஒரு பகுதியைப் புகுத்துகிறான் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன். அனைத்தும் முடிந்து வெற்றி வாகை சூடிய இராமனிடம் தசரதன் வருவதாக ஒரு புதிய காட்சியை உண்டாக்குகின்றான். தசரதன் வந்து,

"அன்று கேகயன் மகள் கொண்ட வரம் எனும் அயில் வேல்
இன்றுகாறும் என் இதயத்தினிடை நின்றது, என்னைக்
கொன்று நீங்கலது, இப்பொழுது அகன்றது, உன் குலப்பூண்
மன்றல் ஆகம் ஆம் காந்த மா மணி இன்று வாங்க"
(10068)

என்று சொல்லி, 'நீ வரத்தைக் கேள்' என்று சொல்லுகின்றான். அப்போது இராமன் கேட்கின்ற வரம் வியப்பை உண்டாக்குவதாக அமைகின்றது. 'ஐயா,

"தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும், மகனும்
தாயும் தம்பியும் ஆம் வரம் தருக" (10079)

என்று கேட்கின்றான்.

"தீயள் என்று நீ துறந்த என் தெய்வம்" (10079)

என்ற வார்த்தைகள் ஆழ்ந்து சிந்திப்பதற்குரியன. தெய்வத்தைப் போல - தன்னுடைய நலத்தைக் கருதாமல், பிறருக்காகவே மாபெரும் காரியத்தைச் செய்தவள் கைகேயி என்பதை இராகவன் உணர்ந்த காரணத்தால்தான்

"என் தெய்வம்"

என்று பேசுகின்றான்.

அந்தத் தெய்வத்தை உள்ளவாறு உணராமல் ஏசி, காழ்ப் புணர்ச்சியோடு இறந்துவிட்ட காரணத்தால், தசரதனைச் சுட்டிக் காட்டுபவன் போல,

"தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம் வரம் தருக" (10079)

என்று கேட்பதன்மூலம், கைகேயி என்ற பாத்திரத்தைக் கவிச்சக்கரவர்த்தி என்ன அடிப்படையில் படைத்தான் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

இராகவனைப் பொறுத்தமட்டில் கைகேயியின் தியாகத்தை நன்கு அறிந்திருந்தான் ஆதலால் அவளைத் தெய்வம் என்று கூறுகின்றான். அந்தத் தெய்வம் தன்னுடைய கடமையை நிறைவேற்றுகின்ற முறையில் பேசவேண்டியபொழுது பேசிற்று. கொண்ட கொள்கையில் உறுதிப்பாட்டோடு இருந்தது. கொள்கையை நிறைவேற்றும்பொழுது தனக்கு வருகின்ற பழி பாவம் முதலிய அனைத்தையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தது. எந்தச் சூழ்நிலையிலும் வாய் திறந்து பேசித் தன்னுடைய பழியைப் போக்கிக்கொள்ள வேண்டுமென்று அந்தப் பாத்திரம் கருதவே இல்லை. அதற்குரிய சந்தர்ப்பங்கள் பல முறை கிடைத்தும் வாய் திறவாமல் இருந்துவிட்ட ஒரே காரணத்தால் இறுதிவரையில் தன்னுடைய கணவனை மாசு மறுவு அற்றவனாக ஆக்க வேண்டுமென்ற தன்னுடைய குறிக்கோளில் வெற்றி பெற்றவளாக ஆகிவிடுகின்றாள் கைகேயி. ஏனையோர் யாருக்கும் தராத அந்தப் பட்டத்தை, இராகவன் கூற்றாகவே அமைக்கின்றான் கவிச்சக்கரவர்த்தி

"என் தெய்வம்"

என்று.

கைகேயி என்ற பாத்திரப் படைப்பை எந்த அளவுக்குக் கவிஞன் புதிய முறையிலே படைத்திருக்கின்றான் என்பதை இந்தக் கண்ணோட்டத்துடன் பார்ப்போமேயானால் கொஞ்சம் வியப்பைத் தருவதாகவே அமைகின்றது. மூல நூலில் அமைந்துள்ள முறையை விட்டுவிட்டுப் புதிய முறையில் கன்யா சுல்க்கத்தை ஓரளவு மறைத்து, அதே நேரத்தில் 'கைகேயியை ஒரு மாபெரும் தியாகியாக - ஸ்தித ப்ரக்ஞையாக - கடமையை நிறைவேற்றுவதற்காகப் பழி பாவங்களை ஏற்றுக்கொள்ளுகின்ற ஒரு பாத்திரமாக அமைத்துவிடுகின்றான் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன்.

'இந்த அடிப்படையில்தான் அந்தப் பாத்திரத்தை அமைக்கின்றேன்' என்பதைச் சுட்டிக் காட்டுபவன் போல, அப் பாத்திரத்தை அறிமுகம் செய்கின்றபோதே மிக அற்புதமான முறையில் அறிமுகம் செய்துவைக்கின்றான். மந்தரை வந்தபொழுது கைகேயி உறங்கிக்கொண்டிருக்கிறாள்.

"கடைக்கண் அளி பொழிய, பொங்கு அணை
மேல் கிடந்தாள்" (1448)

என்று கைகேயியை முதன் முதலாக அறிமுகம் செய்வான் கம்பநாடன். உறங்கும்பொழுது ஒருவருடைய அக மனத்தில் என்ன எண்ணம் நிறைந்திருக்கிறதோ அதுதான் அவரது முகத்தில் வெளிப்படும். கைகேயி உறங்கிக்கொண்டிருந்தபோது அவள் கடைக்கண் வழி அருள் சுரந்துகொண் டிருந்தது என்றால், அவளுடைய அகமனம், ஆழ்மனம், சிந்தை ஆகிய அனைத்திலும் அருள் நிரம்பி இருக்கின்றது என்பதைச் சொல்லாமல் சொல்லுகின்றான் கவிச்சக்கரவர்த்தி. இப்படி மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக்கரணங்கள் நான்கிலும் அருள் நிறைந்திருப்பவளாகிய ஒருத்தி, எவ்வாறு கொடுமையான காரியத்தைச் செய்ய முடியும் என்று சிந்திப்போமேயானால் உண்மையை விளங்கிக்கொள்ள

முடியும். கொடுமை என்பது நாம் பார்க்கும் பார்வையில் இருக்கின்றதே தவிர, செயலில் இல்லை. இப்பொழுது அவள் வாய் திறவாமல் இருந்திருப்பாளேயானால் தசரதன் பழிக்கு ஆளாவான். வாய் திறந்து பேசியதனால் பழியை அவள் ஏற்றுக்கொள்கிறாள். தன்னுடைய அருள் நிரம்பிய உள்ளத்தால், ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு, கணவனைக் காப்பாற்றுவதுதான் தன்னுடைய கடமை - தற்கொண்டா னைப் பேணுவதுதான் தன்னுடைய கடமை - கற்புடைய மனைவியின் கடமை என்ற முடிவுக்கு வந்து, ஒப்பற்ற தியாகத்தைச் செய்பவளாக - ஓர் உறுதிப்பாட்டோடு செயல் பட்டவளாகத்தான் - இந்தப் பாத்திரத்தை அமைத்திருக்கிறான் கம்பன் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

கன்யா சுல்க்கக் கதை வெளிப்படையாகக் கம்பனால் பேசப்படாவிட்டாலும், அயோத்தியா காண்டம் முழுவதையும் பார்க்கும்போது இதனை ஏற்றுக் கொண்டுதான் அவன் பேசுகின்றான் என்பதை அறிய முடிகின்றது.

கன்யா சுல்க்க நிகழ்ச்சியைத் தசரதன், கைகேயி என்ற இருவர்மட்டும் அறிந்ததோடு அல்லாமல் இராகவனும் அறிந்திருந்தான் என்பதைச் சந்தர்ப்பம் வரும்போது அவன் கூற்றாகவே வைத்துப் பேச வைக்கின்றான் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன் மூல நூலாகிய வான்மீகத்தில் இந்நிகழ்ச்சி இராமனும் பரதனும் காட்டில் சந்திக்கின்ற காலத்தில் பரதனிடம் இராமனே கூறுவதாக அமைந்துள்ளது. பரதன் கூட அதை ஓரளவு அறிந்திருந்தான் என்பதையும் அந்தப் பாடலின் மூலமே தெரிவிக்கின்றான். ஆழ்ந்து சிந்தித்தால், மந்திரப் படலத்தில் வருகின்ற பாடல் இந்தக் கருத்தை வலியுறுத்துவதாக அமைந்திருப்பதைக் காணமுடியும்.

மைந்தனை அழைத்து 'நீ இந்த அரசை ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் தவம் செய்யப் போகிறேன்' என்று 14 பாடல்களில் தசரதன் பேசுகிறான். மூத்த பிள்ளையாகிய இராகவனே பட்டத்தை ஏற்கக் கடப்பாடுடையவன்; இதை உலகம் அறியும். 'மயில் குல முறை' என்று சொல்லப்படுகின்ற

முறையில் தந்தைக்குப் பின் மூத்த மைந்தன் என்பது மரபு பற்றி வருவதேயாகும். இந்த அடிப்படை அனைவரும் ஏற்றுக் கொண்ட ஒன்றுதான் என்பதில் ஐயமே இல்லை.

அப்படியிருந்தும் மூத்த மைந்தனாகிய இராகவனை அழைத்துப் பதினான்கு பாடல்களில்

"சொல் மறா மகப் பெற்றவர் அருந்துயர் துறந்தார்" (1380

'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று ஏற்றுக்கொள்ளக் கூடிய பிள்ளைகளைப் பெற்றவர்கள்தாம் உயர்ந்தவர்கள்,' என்றெல்லாம் மிகப் பெரிதாக ஒரு முன்னுரை பேசிவிட்டு, 'இந்தப் பட்டத்தை ஏற்றுக்கொள்' என்று சொல்லுகிறான் தசரதன்.

இவ்வாறு சொல்வதற்குத் தேவை என்ன ஏற்பட்டது?

இராகவன் தன் வேண்டுகோளை ஒருவேளை மறுத்துவிடுவானோ என்ற அச்சத்தினால்தான் தசரதன் இவ்வளவு பெரிய முன்னுரை பேசுகிறான். அப்படியும் அச்சம் நீங்காமல் இறுதியாக, இந்தப் பதினான்கு பாடல்களில், 'மைந்தர்கள் என்பவர்கள் தந்தைமார்கள் என்ன ஆணை இடுகின்றார்களோ அதைச் செய்ய வேண்டிய கடப்பாடு உடையவர்கள்' என்று கூறுவதோடு "நான் இவ்வளவு காலம் வானப்பிரஸ்தம் செல்லாமல் இல்லறத்தில் தங்கிவிட்டது பெருந்தவறு. ஐந்து பொறி புலன்களை அடக்கியாள வேண்டிய தவ வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். அதற்குரிய காலம் இப்போது வந்துவிட்டது" என்றெல்லாம் விரிவாகப் பேசி, இறுதியாக,

"அருந் துயர்ப் பெரும் பரம், அரசன்
வினையின் என்வயின் வைத்தனன்' எனக்கொள
வேண்டா;
புனையும் மா முடி புனைந்து, இந்த நல் அறம் புரக்க
நினையல் வேண்டும்; யான் நின்வயின் பெறுவது ஈது
(1381)

என்று சொல்லுகின்றான் தசரதன். இந்த வார்த்தைகள் ஆழ்ந்து நோக்கற்குரியன. மைந்தனை அழைத்து,

"நின்னை வேண்டி, எய்திட விழைவது ஒன்று உளது"

(1373)

எனவும்,

"ஓர் நெறிபுக உதவிட வேண்டும்" (1374)

எனவும் கெஞ்சி, 'நான் வானப்பிரஸ்தம் செல்ல வேண்டும், நீ பட்டத்தை ஏற்றுக்கொள்'

"யான் நின்வயின் பெறுவது ஈது" (1381)

என்று கேட்க வேண்டிய தேவை என்ன வந்தது? ஆகவேதான், இதில் ஆழமான பொருள் ஏதோ புதைந்திருக்க வேண்டும்.

"இராகவன் கன்யா சுல்க்க அடிப்படையை அறிந்திருந் தான். எனவே, ராஜ்யத்தை மறுத்துவிடுவான்" என அஞ்சிய தசரதன், அவன் மறுப்பதற்கு வாய் திறக்கும் முன்னரே இதை வரமாகக் கேட்கின்றான்.

"யான் நின்வயின் பெறுவது ஈது" (1381)

என்று சொல்வானேயானால், மைந்தன் வாய் திறப்பதற்கு வழியே இல்லாமல் போய்விடுகிறது.

இந்த நிலையில் இராகவனுடைய மனநிலை என்ன என்பதைச் சொல்லவருகின்ற கம்பன் மிக அற்புதமான ஒரு பாடலைப் பாடுகின்றான். அனைவரும் அறிந்ததுதான் அந்தப் பாடல் என்றாலும் அதிலுள்ள ஒரு சில சொற்கள் ஆழ்ந்து சிந்திப்பதற்குரியன வாகும்.

'தாதை அப் பரிசு உரைசெய தாமரைக் கண்ணன்' (1382)

தந்தையாகிய தசரதன் பதினான்கு பாடல்களில் விரிவாகப் பேசி, 'நீ இந்த வரத்தைத் தருவாயா' என்றவுடன், தாமரைக் கண்ணன் - இராகவன்

'காதல் உற்றிலன் இகழ்ந்திலன்' (1382)

பட்டம் வருகிறது என்பதற்காக அதை விரும்பவும் இல்லை. அதை இகழ்ந்து நோக்கவும் இல்லை.

"கடன் இது என்று உணர்ந்தும்

யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ
நீதி எற்கு என நினைந்தும் அப்பணி தலைநின்றான்."
(1382)

என்கிறான், கவிச்சக்கரவர்த்தி.

கடன் இது என்று உணர்ந்தும் (1382) என்பதற்கு மூத்த மகனாகிய தனக்கு இது கடமை என்று உணர்ந்தான் என்று பொருள் கூறினால் உணர்ந்தும், என்பதில் உள்ள உம்மை பொருள் அற்றதாகிவிடும். உணர்ந்தும் என்பதற்கு வேறு ஒன்றைச் செய்வதுதான், அதாவது பரதனுக்குப் பட்டத்தைத் தருவதுதான் கடமை என்பதை உணர்ந்தும், அரசன் ஆணையை மறுக்க அஞ்சி ஏற்றுக் கொண்டான் என்று பொருள் கொள்வதுதான் பொருத்தமுடையதாகும். இவ்வாறு இல்லாமல் மூத்தவனாகப் பிறந்ததால் முடிசூட வேண்டியது தனது கடன் என்று உணர்ந்துகொண்டான் என்று பொருள் கூறினால் வரும் இடையூற்றைச் சிந்திக்க வேண்டும். இதுதான் தன் கடன் என்று உணர்ந்த பிறகு அரசன் ஏவலின்படி நடப்பதுதான் தனக்கு நியதி என்று பொருள் கூறினால் பின் இரண்டடிகள் அர்த்தமற்றுப் போவதைக் காணலாம்.

"கடன் இது என்று உணர்ந்தும்" (1382)

என்ற சொல்லுக்கு வேறு பொருள் காண்டல் தேவைப் படுகிறது. 'கடன் இது என்று உணர்ந்தும்' என்றால் 'தசரதன் செய்தது அவ்வளவு சரியில்லை. பரதனுக்குத்தான் இப் பட்டம் உரியது என்று உணர்ந்தான். உணர்ந்தும் - உணர்ந்து விட்ட பிறகு இரண்டு வகையில் இராகவன் செயல்படக் கூடும்.

ஒன்று, தந்தை என்ற முறையிலே உறவு வைத்துக்கொண்டு, தந்தையைப் பார்த்து, "தாங்கள் செய்வது அவ்வளவு சரியாக இல்லை. இப்பட்டம் பரதனுக்கே உரியது" என்று கூறி மறுத்திருக்கலாம். அது ஒருவகை. இராகவன் அவ்வாறு செய்யவில்லை. மறுத்துப் பேசுவதற்கும் தசரதன் வாய்ப்பே கொடுக்கவில்லை. எனவே, அடுத்த வழி என்ன? "சக்ரவர்த்தியின் ஆணை எதுவோ அதனைக் கேள்வி கேட்காத

முறையில், '..........Yours is not to question why, but to do and die' என்று ஏற்றுக்கொள்வதுதான் மற்றொரு வகையாகும்.

"யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ
நீதி எற்கு" (1382)

என்ற இந்த இரண்டாவது வழியை மேற்கொள்கிறான்.

"யான் நின்வயின் பெறுவது ஈது" (1381)

என்று தந்தையோ கெஞ்சுகிறான். மகனோ 'கொற்றவன் ஏவியது' என்று சொல்லுகிறான். இந்த இரண்டுக்குமுள்ள மாறுபாட்டை நன்கு சிந்தித்தல் வேண்டும்.

"யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ
நீதி எற்கு" (1382)

என்று நினைக்கின்றான் இராகவன். ஆகவே, தசரதன் வரம் கொடு என்று கெஞ்சினாலும், அதை அப்படியே எடுத்துக் கொள்ளாமல் 'சக்கரவர்த்தி தனக்கு ஆணையிட்டதாகவே நினைக்கின்றான் தசரத குமாரன். கொற்றவனுடைய ஆணையை மீறுதல் என்பது யாருக்கும் இயலாத காரியம். அந்த முறையில் 'அது சரியோ, தவறோ அதைப்பற்றிக் கவலைப்படாமல் 'இது சக்கரவர்த்தியினுடைய ஆணை. அதை நிறைவேற்றுவதே தன்னுடைய கடமை, அதுவே தர்மம்' என்ற கருத்தில் இருந்தான்' என்று கம்பன் மிக அற்புதமாகச் சொல்வான்.

இராமனுக்கு ஏற்பட்ட இரண்டாவது தர்ம சங்கடமான நிலை இது. தாடகை வதத்தில் ஏற்பட்ட தர்மசங்கடத்தையும் இப்படித்தான் தீர்த்துக்கொள்ளுகிறான் இராகவன். "அறம் அல்லவும் எய்தினால், அது செய்க என்று ஏவினால் நின்னுரை வேதம் எனக்கொடு" செய்வதே எனக்கு நீதி என்று ஒரு முடிவுக்கு வந்தான். அதாவது தான் விருப்பத்தோடு முழு மனத்தோடு செய்ய விரும்பாத ஒன்றைச் செய்ய நேரிட்டால் குருவாகிய விசுவாமித்திரர் ஆணை வேதமாகிறது. இங்கேயும் இப்படித்தான், பரதனுக்கு உரியது என்று உணர்ந்தாலும் முழுமனத்தோடு அரசை ஏற்கத் தான் விரும்பாவிட்டாலும்

"கொற்றவன் ஏவியது அதன் வழி நிற்றலே எனக்கு நியதி" என்று ஒரு முடிவுக்கு வருகிறான். தர்மசங்கடங்களிலிருந்து மீளும் ஒரு மாபெரும் தலைவனைப் பாலகாண்டத்தை போலவே, அயோத்தியா காண்டத்திலும் கம்பநாடன் நமக்குக் காட்டுகிறான்.

'அப்பணி தலைநின்றான்' (1382)

அவன் இட்ட பணியை மேற்கொண்டான்' என்று பேசுவதனால் இந்தக் கன்யா சுல்க்கக் கதை எந்த அடிப்படையில் இராகவனுடைய மனத்தில் வேலை செய்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

இதற்கு இதுதான் பொருள் என்று அரண் செய்கின்ற முறையில் பின்னர் இராகவனுடைய கூற்று அமைந்திருத்த லைக் காண்டல் கூடும். சித்திரகூடத்தில் இராகவன் தங்கியிருக்கிறான். அவனை அழைத்துப் போவதற்காகப் படைகளோடும், நகர மக்களோடும் வந்த பரதன், நிமிர்ந்த சேனையைப் பின்வருக என்று கூறி அவர்களை நிறுத்திவிட்டு, முன்னே தனியாக வந்து இராகவனை வணங்குகிறான்.

பரதனுடைய மாசு படிந்த மேனியையும், தவக்கோலத் தையும் பார்த்து அசந்துபோனவனாகிய இராகவன், அவனிடம் பல கேள்விகளைக் கேட்டு, தந்தையினுடைய இறப்பு முதலானவற்றையெல்லாம் தெரிந்து வருந்திய பிறகு, 'நீ இந்தத் தவக்கோலாம் பூண்டதன் காரணம் என்ன?' என்று கேட்கின்றான். அப்போது 'நீ வந்து ஆட்சியை மேற்கொள்ள வேண்டும்' என்று பரதன் கூற, அதற்கு இராகவன் கூறுவதாக உள்ள பாடல் ஆழ்ந்து சிந்திப்பதற்குரிய தாகும்.

'வரன் இல் உந்தை சொல் மரபினால் உடைத் தரணி நின்னது என்று இயைந்த தன்மையால் உரனின் நீ பிறந்து உரிமை ஆதலால் அரசு நின்னதே ஆள்க' (2485) என அந்தப் பாடலில் சொல்கிறான் இராகவன். 'நீ பிறந்து விட்டதனாலே இந்த ராஜ்யம் உன்னுடையது ஆகிறது' என்று இராகவன் பேசுகிறான் என்றால், என்ன பொருள்? கன்யா சுல்க்கக்

கதையை வேறு முகமாக, வேறு விதமாக இங்கே புகுத்துகிறான் கவிச்சக்கரவர்த்தி. அதை நன்கு அறிந்திருந்தவனாகிய இராகவன் பேசுகின்றான்.

இப்பாடலுக்க பலரும் வேறுவிதமாகப்பொருள் கொள்வர். அதாவது, 'உன் தந்தை கொடுத்த வரத்தின் படி, இத்தரணி உனக்கு என்று இயைந்த விட்டது. இரண்டாவதாக, நீ பிறந்த காரணத்தால் இப்பூமி உனக்கு உரியது' என்று பொருள் கூறுவர். ஆழ்ந்து நோக்கினால் இப்பொருள் பொருந்தாமையை அறிய முடியும். மூன்றாவது அடியை முதலில் எடுத்துகொண்டு, 'நீ பிறந்த காரணத்தால் இப்பூமி உனக்கு உரிமை ஆகிவிட்டபடியாலும், தந்தை உன் தாய்க்கு வரம் என்ற பெயரில் கொடுத்தமையாலும் இந்த பூமி உனக்கு என்று இயைந்து விட்டது'. இதில் இரண்டு கருத்துக்கள் பேசப்படுகின்றன. ஏனையோர் பொருள்கொண்டபடி இதற்கு பொருள் கொண்டால், முதலிரண்டு அடியோடு கருத்து முடிந்துவிடும். தந்தை உன் தாய்க்குக் கொடுத்த வரத்தின் அடிப்படையில், இப்பூமி உனக்கென்று இயைந்துவிட்டது என்றுமட்டும் பொருள்கொண்டால், மூன்றாவது அடிக்கு பொருளே இராது. வரத்தினால் இத்தரணி நின்னது என்று இயைந்து விட்டது என்று பொருள் முடிந்துவிடுகிறது. அப்படியிருக்க, நீ பிறந்ததனால் இப்பார் உனக்கு உரிமையாயிற்று என்று சொல்வது அர்த்தமற்றதாகிவிடுகிறது. பார் உனது என்று இயைந்து விட்டது என்று கூறியபிறகு, நீ பிறந்ததால் இப்பார் உனக்கு உரிமையாயிற்று என்று தேவையில்லாமல் கூறுவது கம்பன் பாடலுக்கு பொருத்தமாகாது. பிறந்ததினால் உரிமை வந்தது என்று பேசும் மூன்றாவது அடிதான் உயிர்நாடியாகும். இனி, பரதன் பிறந்ததினாலேயே அவனுக்கு இப்பார் உரிமையாயிற்று என்று இராமன் கூறக் காரணமென்ன? உரிமையாயிற்று என்பதைக் கூறிவிட்டு, அல்லாமலும் தந்தையின் வரம் கொடுத்ததினாலும் இப்பார் உனக்கு இயைந்தது என்று பேசுகிறான் இராமன். நீ பிறந்ததினால் உனக்கு உரிமையாயிற்று என்று பொருள்தரும் மூன்றாவது அடி

கன்யா சுல்க்கம் அல்லது ராஜசுல்கம் என்று வால்மீகி கூறுவதை அடியொன்றிப் பிறந்த ஒரு தொடராகும்.

வான்மீகத்தில் (தென்பிராந்தியப் பகுதியில் வழங்கும் வான்மீகம்) அயோத்தியா காண்டத்தில் நூற்றி ஏழாவது சருக்கத்தில் மூன்றாவது பாடலாக வரும் சுலோகத்தைக் கவனத்தில் கொள்வது நல்லது. “உடன் பிறந்தவனே! நம் தந்தையாகிய தசரதன், உன் தாயாகிய கைகேயியை மணக்கும் பொழுது உன் தாத்தாவாகிய கேகேய மன்னனுக்கு மிக உயர்ந்த ராஜசுல்கமாகக் கொடுக்கப்பட்டது இந்நாடு”. கைகேயிக்கு இராஜசுல்கமாகக் கொடுக்கப்பட்ட கோசலம் அவருக்கொரு மைந்தன் (பரதன்) பிறந்த காரணத்தால், தாயின் சுல்கம் அவனுக்கு உரிமையாகிவிடுகிறது. இந்தக் கருத்தைத்தான் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன், ‘உரனின் நீ பிறந்த உரிமை ஆதலால்’ என்று கூறுகிறான். அப்படியானால் முதல் இரண்டு அடிகளில் தந்தை கொடுத்த வரத்தால் உனக்கு இயைந்தது என்று கூறுவதன் நோக்கம் என்ன? உரிமை என்ற சொல்லுக்கும், இயைந்தது என்ற சொல்லுக்கும் உள்ள மலைபோன்ற வேறுபாட்டை மனத்தில் கொள்ளவேண்டும். தந்தை வரங்கொடுக்காவிட்டாலும் இந்தப் பார் உனக்கு வரங்கொடுத்தபடியால் இப்பூமி உனக்குக் கிடைப்பது இன்னும் பொருத்தமாகப் போயிற்று.

வான்மீகத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்ட இப்பகுதியைத் தானும் விளக்கமாகச் சொல்லாமல் ‘உனக்கு உரிமையாய் விட்டது’ என்று இராமனைப் பேச வைத்தது கம்பனுடைய அற்புதமான சித்திரமாகும். இதனை விளக்கமாகக் கூறியிருந்தால், சுல்கமாகக் கொடுத்ததைக் கைகேயிக்குத் தெரியாமல் திரும்ப எடுத்து இராமனுக்குக் கொடுத்தான் என்ற அவப்பெயர் தசரதனுக்கு ஏற்பட்டுவிடும். இராமனைப் பெற்றவனுக்கு இப்படி ஓர் அவப்பெயர் வரக்கூடாது என்பதற்காகவே கம்பன் இதனை மறைத்துப் பேசுகிறான். கூனியின் தூண்டுதலின் பேரில் சிந்திக்கத் தொடங்கிய கைகேயிக்குச் சுல்க்கம் நினைவுக்கு வர, அதை நேரடியாகக் கேட்டிருந்தால் அதை மறைத்த தசரதனுக்கு அவப்பெயர் வருமென்ற அச்சத்தால் வரம் என்ற பெயரில்

பூமியைப் பரதனுக்குப் பெற்றுக்கொடுத்தார். இவ்வாறு செய்யவில்லை என்றால் சுல்க்கத்தைத் திருப்பி எடுத்துக்கொண்ட பாவத்திற்குத் தசரதன் ஆளாக நேரிடும். கைகேயியின் பாத்திரத்திற்கு மெருகூட்டுவதாகும் இப்பகுதி.

தசரத குமாரன் அவ்வாறு பேசியவுடன் 'அது எப்படி?' என்று பரதன் கேட்டதாக இல்லவே இல்லை. அதற்குப் பதிலாக 'நீ பிறந்துவிட்ட காரணத்தால் இந்த அரசு உனக்குச் சொந்தமானது' என்று இராகவன் சொன்னதை ஏற்றுக் கொள்கிறான் பரதன். அதுதான் ஆச்சரியம். முன்னர் வந்து உதித்து உலகம் மூன்றிலும் நின்னை ஒப்பு இலா நீ பிறந்த பார் என்னது ஆகில் யான் இன்று தந்தனென் மன்ன! போந்து நீ மகுடம் சூடு (2486). என்று பேசுகிறது கம்ப ராமாயணம். இராகவன் சொன்னதை ஏற்றுக்கொண்டு, "நான் அரசன்தான். இப்போது நான் ஆணையிடுகின்றேன். நீ போய் ராஜ்யத்தை ஆள்வாயாக" என்று பரதன் கூறும்போது இராமன், பரதன் ஆகிய இருவருமே இந்தக் கன்யா சுல்க்கக் கதையை ஏற்றுக்கொண்டு அதற்கு வழி செய்கின்றார்கள் என்பதை அறிய முடிகின்றது. இப்படி வெளிப்படையாகச் சொல்லாமல் அதனை யார் யார் அறிந்திருக்க வேண்டுமோ அவர்களெல்லாரும் அறிந்திருந்தார்கள் என்று குறிப்பாகக் கவிச்சக்கரவர்த்தி கதையைக் கொண்டுசெல்லுகின்ற முறையில் பற்பல வெற்றிகளைப் பெற்றுவிட்டான் என்றுதான் சொல்ல வேண்டும். தசரதனைப் பழிக்கு ஆளாக்காமல், 'வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்தவனாகச் செய்துவிட்டாள் கைகேயி.

"படர் எலாம் படைத்தாளை, பழி வளர்க்கும் செவிலியை"
(2371

என்று பரதன் கூறினாலும் உண்மையில் அத்தகையவள் அல்லள் அவள். மாபெருந் தியாகத்தைச் செய்த ஸ்திதப்பிரக்ஞ மனோ நிலையில் உள்ள ஞானியாக அவளை ஆக்கிப் படைத்துவிட்டான். அந்த அடிப்படையில் அவள் மனமாற்றத்தைக் குறிக்கவந்த கவிஞன்,

"அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல் அருள் துறந்தனள்"

என்றுமட்டும் கூறி நிறுத்தாமல்

"தூமொழி மடமான்" (1484)

என்று அவளுக்கு அற்புதமான அடைமொழி சூட்டுகின்றான் கவிச்சக்கரவர்த்தி.

எனவே, அவள் கூறிய கடுஞ்சொற்கள் எல்லாம் மேலோட்டமாகப் பார்ப்பதற்குக் கடுஞ்சொல்லாக அமைந்தனவே தவிர, உண்மையில் அவை மாபெரும் தியாகத்தை அடிப்படையாகக் கொண்ட 'தூய மொழிகள்' என்பதை

"தூ மொழி மடமான்" (1484)

என்ற சொல்லின்மூலம் பெறவைத்துவிடுகின்றான். ஆக, இந்தக் கன்யா சுல்க்கக் கதையை வெளிப்படையாகச் சொல்லாமல், மறைமுகமாகவே கொண்டுசெல்வதில் இத்தனை பல வெற்றிகளைக் கவிச்சக்கரவர்த்தி பெறுகின்றான் என்பதை நாம் அறியமுடிகின்றது.

இனி அடுத்தபடியாக அயோத்தியா காண்டத்தில் வருகின்ற ஒப்பற்ற பாத்திரம் குகன் என்ற பாத்திரமாகும். இந்தப் பாத்திரத்தை வால்மீகியை அடியொற்றிப் படைத்திருந் தாலும், ஈடு இணையற்ற முறையில் உலக இலக்கியத்தில் காணமுடியாத அளவுக்கு அற்புதமான ஒரு படைப்பாகக் குகனைப் படைத்துவிடுகிறான் கவிச்சக்கரவர்த்தி.

இப்படி ஓர் அன்பின் வடிவாகவுள்ள பாத்திரத்தைப் படைத்ததன் மூலம் அன்பு வழி செல்கிறவர்களுக்கு கல்வி, கேள்வி முதலிய கலையுணர்வு தேவையில்லை என்பதையும் வைத்துக் காட்டுகிறான் கவிச்சக்கரவர்த்தி. தாயினும் நல்லானாக ஒரு பாத்திரத்தைப் படைத்துக் காட்டுவதன் மூலம் அயோத்தியா காண்டத்தில் ஒரு சிறந்த பாத்திரமாக அமைந்துவிடுகிறான் குகன்.

அதுமட்டு மல்ல, ஆழ்வார்கள் பாடலில் ஆழங்கால்பட்ட வனாகிய கவிச்சக்கரவர்த்தி வான்மீகத்தில் இல்லாத சில

பகுதிகளைப் புகுத்தும்போது ஆழ்வார் பாடலில் காணப்பட்ட ஒன்றைத் தனக்கு முன்னோடியாக எடுத்துக்கொள்கிறான்.

ஏழை ஏதலன் கீழ் மகன் என்னாது
இரங்கி மற்று அவற்கு இன்னருள் சுரந்து,
'மாழை மான் மடநோக்கி உன் தோழி;
உம்பி எம்பி' என்று ஒழிந்திலை உகந்து,
தோழன் நீ எனக்கு இங்கு ஒழி, என்ற
சொற்கள் வந்து அடியேன் மனத்து இருந்திட,
ஆழி வண்ண! நின் அடியிணை அடைந்தேன்
அணி பொழில் திரு அரங்கத்து அம்மானே!

(நாலாயிரம் 1418)

என்ற ஆழ்வாரின் பாசுரத்தை மனத்தில் வைத்துக்கொண்டு, பிராட்டியைக் குகனுக்கு அறிமுகம் செய்துவைக்கிறான் இராகவன் என்ற ஒரு நிகழ்ச்சியை உண்டாக்கி, படகிலே சென்றபோது சீதையைக் காட்டி 'இவ் ஒ உன் கொழுந்தி', எனவும், இலக்குவனைக் காட்டி 'இவன் உன்தம்பி', எனவும் இராமன் அறிமுகம் செய்துவைப்பதாக ஒரு நிகழ்ச்சியைக் கம்பன் படைக்கிறான்.

"இளவல் உன் இளையான்இந்
நன்னுதலவள் நின் கேள்" (1994)

என்பதாகப் பிராட்டியை அறிமுகம் செய்து வைக்கப்படுகின்ற - அரச குடும்பத்தை அல்லாத - பாத்திரங்களில் தன்னந்தனியாக நிற்பவன் குகப்பெருமான்.

இந்த நிகழ்ச்சியைப் பின்னர்க் கேள்விப்பட்டனனாகிய பரதனும்கூட,

"இன் துணைவன் இராகவற்கு; இலக்குவற்கும்,
இளையவற்கும், எனக்கும் மூத்தான்" (2367)

என்று குகனைக் கோசலைக்கு அறிமுகம் செய்துவைக்கின்ற போது அன்பின் வடிவாகவே இருக்கின்ற பாத்திரம் எவ்வளவு எளிதாகச் சக்கரவர்த்தி குடும்பத்தில் உறவு வைத்துக்

கொள்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்ற முறையில் அமைத்து விடுகிறான்.

குகன் இராமனை முதன்முதலில் காண வருகின்றபோது தேனும் மீனும் திருத்திக் கொணருகிற காட்சி வான்மீகத்தில் இல்லாத முறையில் இங்கே கம்பன் புகுத்துகிறான். அவனைப் பொறுத்தமட்டில் உணவு என்பது தேனில் ஊறவைத்த மீனாகும். அந்த உணவைக் கொண்டுவரும்போது இராகவன் அதை உண்பானா, மாட்டானா என்ற ஆராய்ச்சிக்கே இடமில்லை. அங்கே தன்னுடைய எல்லையில் நின்று தான் உண்ணுகின்றதை இறைவனுக்குப் படைப்பதுபோல அவன் கையில் கொண்டுவருகின்றான்.

"தேனும் மீனும் அமுதினுக்கு அமைவது ஆகத்
திருத்தினென் கொணர்ந்தேன்; என்கொல் திருவுளம் ?"
(1966)

என்று பேசுகின்றான் குகன். 'நான் கொண்டுவந்திருக்கிறேன், உன்னுடைய விருப்பம் எதுவோ அதன்படி செய்வாயாக' என்று அந்த உரிமையை இராகவனுக்கே கொடுக்கிறான்.

ஏனையோர் அதனைப் பார்த்து முகம் சுளிக்கிறார்கள். இராகவனைப் பொறுத்த மட்டில் அதை முழு அன்பின் வடிவாக வந்ததாக ஏற்றுக்கொள்கிறான்.

சர்க்கரையால் செய்யப்பட்ட மிளகாய் எப்படி உறைக்காமல் இனிக்குமோ அதுபோல "நீ கொண்டு வந்த இந்தத் தேனும் மீனும் அன்பு என்ற ஒன்றினாலே முற்றிலும் சமைக்கப்பட்டுவிட்டது."

"பரிவினில் தழீஇய என்னின் பவித்திரம்" (1967)

யாக குண்டத்தில் சொரியப்படுகின்ற அவிஸ் மிக உயர்ந்த தாகும் என்று இராகவன் பேசும்போது குகனுடைய அன்பைப் பரிபூரணமாக அறிந்து ஏற்றுக்கொண்டவனாகிறான். இப்படி ஒரு பாத்திரத்தைத்

"தன்பரிசும் வினை இரண்டும் சாரும்மலம் மூன்றும் அற
அன்புபிழம்பாய்த் திரிவார்" (பெ. 803)

என்று கண்ணப்பரைப்பற்றிச் சேக்கிழார் பின்னே 12ஆம் நூற்றாண்டில் பாடுவார். அந்தப் பாடலுக்கு முழு இலக்கணமாக முன்னர்க் குகனை வகுத்துவிட்டான் கவிச் சக்கரவர்த்தி கம்பநாடன்.

குகன் என்ற பாத்திரம் மறுபடியும் விடைகொடுத்த படலத்தில்தான் காணப்படுகிறது என்றாலும், மறக்க முடியாத பாத்திரமாக - தசரதனுடைய பிள்ளைகள் நால்வரும் வளர்ச்சி அடைந்து ஐவராக வளர்வதற்கு முதல் இடம் கொடுத்தவனாக - அமைகின்றான். குகன் என்ற பாத்திரம் அயோத்தியா காண்டத்தில் அமைந்துள்ள அற்புதமான ஒரு படைப்பு ஆகும்.

கல்வி கேள்வி அரசியல் நுணுக்கங்கள் ஆகியவற்றை அறியாதவனாகிய குகன் பரதனுடைய சேனை வருகிறது என்று கேள்விப்பட்டவுடன்

"ஆழ நெடுந் திரை ஆறு கடந்து இவர் போவாரோ?" (2317)

என்று சினக்கின்றான்.

இப்படி முன்பின் தெரியாத ஒருவனிடம் பகை கொள்ளக் காரணம் யாது என்று சிந்தித்தல் வேண்டும்.

குகனைப் பொறுத்தமட்டில் பரதனை முன் அறியாதவன். ஆனால், பரதன் என்ற பெயருடைய ஒருத்தன் சூழ்ச்சியின் விளைவாக அரசைப் பிடுங்கிக்கொண்டு இராகவனைக் காட்டிற்கு அனுப்பிவிட்டான் என்ற எண்ணத்தில் குகன் இருக்கிறான். 'இந்த எண்ணம் அவனுடைய மனத்தில் எப்படித் தோன்றிற்று, இதற்கு யார் காரணம்' என்று ஆராய்வோமேயானால் கம்பநாடன் அயோத்தியா காண்டத்தில் அதற்கு இடம் வகுத்துத் தருகின்றான்.

இராகவனும் பெருமாட்டியும் உள்ளே உறங்க, வெளியே இளைய பெருமாள் காவல் காத்துக்கொண்டு நிற்கின்றான். அவனோடு உடன் நிற்கின்றான் குகன். அந்த நிலையில் இராகவன் எப்படி அரசைத் துறந்து வந்தான் என்று கேட்க, இலக்குவன் சொல்கிறான்.

முன்கோபக்கார னாகிய இலக்குவன் பரதனை இன்னான் என்று புரிந்துகொள்ளவில்லை. புரிந்து கொள்ள முயலவும் இல்லை. அதற்குப் பதிலாகக் கைகேயியின் சூழ்ச்சியில் அவனும் ஒரு பங்குதாரன் என்றுதான் நினைத்திருந்தான். ஆகவே, தன்னுடைய மனத்தில் தோன்றிய கசப்புணர்ச்சியைப் - பரதன்மாட்டுக் கொண்ட காழ்ப்புணர்ச்சியை - கோபத்தை முழுவதுமாகக் குகனிடம் விளக்கிவிட்டான். அதனால்தான் பரதனைப்பற்றி முன்பின் அறியாதவனாகிய குகன், இந்தப் படத்தைத் தன் மனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறான். ஆகவே,

"ஆழ நெடுந் திரை ஆறு கடந்து இவர் போவாரோ"

என்று சினக்கின்ற சூழ்நிலை உருவாகின்றது.

ஆயினும், தன்னைக் காண வருகின்ற பரதனைத் தூரத்தில் இருந்து பார்த்தபோது, பரதன் அணிந்திருக்கிற தவக் கோலத்தையும், அவன் முகத்தில் தேங்கியிருக்கின்ற துக்கத்தையும் பார்த்தபோதே

"நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான், அயல். நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்" (2332)

என ஓரளவு பரதனை அடையாளம் காணக்கூடிய சூழ்நிலைக்கு வந்துவிடுகின்றான்.

பரதனைப் பற்றி அவன் கேள்விப்பட்டதை வைத்துக் கொண்டு பரதன் எத்தகையவனாக இருத்தல் வேண்டும் என்று நினைத்திருந்த நினைவுக்கும், நேரிடையாகத் தான் பரதனைக் காணும்போது மனத்தில் தோன்றிய நினைவுக்கு முள்ள மாறுபாட்டை நன்கு உணர்ந்துவிட்டவ னாகிய குகன் உடனே

"எம்பெருமான் பின் பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு"
(2332)

என்று பேசுகின்றான்.

அதுமட்டு மல்ல. பின்னர்ப் பரதனோடு உரையாடிக் கொண்டிருந்த நேரத்தில், அவனுடன் இருந்து பரதனுடைய

பண்பு நலன்களை யெல்லாம் அறிந்துகொண்டவனாக - தன்னுடைய நுண்மாண் நுழைபுலம் காரணமாக அற்புதமாக எடைபோட்டு

"ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ, தெரியின் அம்மா!" (2337)

என்று சொல்லுகின்ற அளவுக்குப் பரதனை உயர்த்தி விடுகின்றான் என்பதை அறிய முடிகின்றது.

ஆக, அயோத்தியாகாண்டத்தில் - வான்மீகத்தி லிருந்து கொஞ்சம் மாறுபட்ட முறையில், ஈடு இணையில்லாப் பாத்திரமாக தமிழகத்தில் முதன்முதலாகக் காணப்பட்ட பக்தி இயக்கத்தின் அல்லது அன்புவழி இறைவழிபாட்டின் அடிப்படையில் குகன் என்ற ஒரு பாத்திரத்தைப் படைத்துக் கம்பன் அதில் முழு வெற்றி அடைகின்றான் என்பதை அறிய முடிகின்றது.

இனி அடுத்தபடியாக அயோத்தியா காண்டத்தில் எஞ்சி நிற்கின்ற பாத்திரம் பரதனாவான். முதல் மூன்று நான்கு படலங்கள் தாண்டி, பள்ளிபடைப் படலத்தில்தான் பரதனைச் சந்திக்கின்றோம். பாட்டன் வீட்டில் இருந்த அவனைத் தூதுவர்கள் சென்று அழைத்துவருகின்றார்கள். அயோத்திக்குள் நுழைகின்ற வரையில் தவறு ஏதும் நிகழநததாகப பரதனுக்குத் தெரியவில்லை. ஊருககுள நுழைந்ததும் ஒளி இழந்து நிற்கும் ஊர் நிலை கண்டு ஆச்சரியப்பட்டு, நேரே தசரதனைக் காணச் செல்கின்றான். தசரதன் இல்லாதபோது தாயைக் கண்டு விசாரிக்கின்றான். அப்போதுதான் தந்தை 'வானத்தான்' என்றும் அண்ணன் 'கானத்தான்' என்றும் அறிந்துகொள்ளுகின்றான். இந்த நிலையில் பரதனிடமிருந்து வருகின்ற ஆவேசமான சொற்கள் அவனுடைய இயல்புக்கு மாறுபட்டவை. அதற்குரிய காரணம் வேறு எதுவும் இல்லை. தாய், தந்தை, குரு, தெய்வம் ஆகிய அனைவரும் இராமனே என்று நினைக்கின்ற பரதனுக்கு இராமன் கானம் போயினான் என்று கேள்விப்பட்டவுடன் எல்லையில்லாத சினம் வருவது நியாயமானதாகும். அதுமட்டுமல்ல.

'வரம் கொண்டு அவனைக் காட்டுக்குப் போக்கினேன்' என்று கைகேயி பேசுவதைக் கேட்டபோது அவனுடைய சினம் எல்லையில்லாமல் வளர்கிறது. ஆகவே, இயல்பாக எல்லையற்ற பண்புடையவனாய் அடக்கத்தின் உறைவிடமாக இருக்கின்ற பரதன் இப்போது இவ்வளவு சினம் கொள்ளும் போது நம்மையும் அறியாமல் ஒரு குறள் நினைவுக்கு வருகின்றது.

"குணம் என்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது" (குறள் 29)

தன் எதிரே நின்று, மனத்தில் சிறிதும் கலக்கம் இல்லாமல், 'நான்தான் இராமனைக் காட்டுக்குப் போக்கினேன், தந்தை 'வானத்தான் ஆனான்' என்று சொல்லுகின்ற ஒருத்தியைக் கொன்றுவிட வேண்டுமென்று பரதன் நினைப்பதில் தவறு இல்லை. ஆனால், அந்த நிலையில்கூடத் "தாய் என்னும் பெயருக்காக உன்னைக் கொல்லாமல் விடவில்லை. என்னுடைய முன்னவனாகிய இராகவன் முனியும் என்று அஞ்சின காரணத்தால்தான் உன்னைக் கொல்லாமல் விடுகின்றேன்" என்று கூறுகிறான் - தன் சினம் எல்லை மீறிப் போகாதபடி, எல்லை கடந்து போய் ஊறு விளைக்காதபடி அவன் இராமனிடத்தே கொண்டிருந்த அன்பும், பக்தியும், பண்பாடாகிக் குறுக்கே நின்று காக்கின்றன.

பரதனை முதன்முதலாக நாம் பார்க்கின்றபோது அளவு கடந்த சினத்தின் எல்லையில் நிற்கின்ற பாத்திரமாகத்தான் கம்பன் படைத்துக் காட்டுகிறான்.

தன் தாயாகிய கைகேயியைக் காணும்போது சினத்தின் எல்லையில் நிற்கின்ற பரதன், அடுத்துப் பெரிய தாயாராகிய கோசலையைப் பார்க்கும்போது கோபம் கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்துவிட, சோகத்தின் எல்லைக்கே சென்று விடுகின்றான்.

"கைகயர் கோமகள் இழைத்த கைதவம்,
ஐய! நீ அறிந்திலை போலுமால்? (2197)

என்று கோசலை பேசியது அவனுடைய மனத்தைப் புண்ணாக்கிவிட்டது.

பாட்டனுடைய ஊருக்குச் சென்று பலநாள் தங்கியிருந்த தன்னைப் பார்த்து, 'கைகேயி செய்த காரியத்தில் உனக்குப் பங்கு இல்லையோ' என்று கோசலை கேட்டது அவனிடம் மாபெரும் துயரத்தைத் தோற்றுவித்துவிட்டது.

பல பாடல்கள் வஞ்சினம் கூறுவது போல, 'அதனை நான் அறிந்திருப்பேனேயானால் இன்ன இன்ன பாவத்தைச் செய்தவர்கள் போகின்ற நரகத்திற்குப் போவேனாகவும்' எனப் பரதன் பேசும்போது கோசலை பதறிவிடுகின்றாள். 'இவ்வளவு தூய மனம் படைத்தவனையா நாம் சந்தேகப்பட்டு விட்டோம்' என்று நினைக்கின்றாள்.

பரதனைப் பொறுத்தமட்டில் ஒரு புதுமை என்ன வென்றால், பெற்ற தந்தையாகிய தசரதன் பரதனை அறியவில்லை; வளர்த்த தாயாகிய கோசலைகூட முதலில் அவனை நன்கு அறிந்துகொள்ளவில்லை; உடன்பிறந்தவ னாகிய இலக்குவனும் அவனை அறிந்துகொள்ளவில்லை. இலக்குவனைப் பொறுத்தமட்டிலும் எல்லையற்ற கோபம் உடையவனாய், பரதனை வெறுக்கின்றவனாய், குகனுடைய மனத்தில்கூட தன்னுடைய முரண்பட்ட கருத்தைப் புகுத்து பவனாகத்தான் இருக்கின்றான். இந்த நிலையில் கூட்டுக்குள் வாழும் பறவை போன்று பரதன் வாழ்கிறான். ஆக, புதிரான அந்தப் பாத்திரத்தை உள்ளபடி எடைபோட்டவர்கள் விசுவாமித்திரனும் இராகவனும் ஆவர்.

அரசவையைக் கூட்டிய முறையில் வசிட்டன், 'நீ பட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று சொல்லும் போது பரதன் துடித்துவிடுகின்றான்.

'மாபெரும் தவறு இழைத்துவிட்டார் தந்தை. அதைப் போக்கி மன்னரைக் கொணர்வதற்காக நான் கானம் போகின்றேன்' என்று பரதன் சொல்லும்போது பரதனிடத்தில் இதுவரையிலும் யாரும் எதிர்பார்க்காத புதுமை தோன்று வதைக் கண்டு அனைவரும் வியப்படைகின்றனர்.

பரதன் பட்டத்தை ஏற்றுக்கொள்வானா, மாட்டானா என்ற ஐயத்தில்தான் மக்கள் இருந்தார்களே தவிர, இப்படி

ஒரு வழியில் 'நான் கானகம் சென்று அண்ணனை அழைத்துவரப் போகின்றேன். 'எல்லோரும் புறப்படுக' என்று ஆணையிடுகின்ற அளவுக்கு அவன் போவான் என்று யாரும் நினைத்ததாகத் தெரியவில்லை. அவன் இந்த முடிவுக்கு வந்தபோது அயோத்தியா நகரம் முழுவதும் அவன் மாட்டு எல்லையற்ற மதிப்பும், மரியாதையும் கொண்டதாகப் புலப்படுவதைக் காணுகின்றோம்.

பரதன் புறப்பட்டுச் செல்கின்றான். குகனைச் சந்திக்கின்றான். அந்தச் சந்திப்பு எவ்வாறு நிகழ்ந்தது என்பதை முன்னரும் பார்த்தோம். குகன் இவனை அறிந்துகொள்வதற்கு வாய்ப்புகள் கிடைத்தபோது

"ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ?" (2337)

என்று குகனால் பாராட்டப்படுகின்ற அளவுக்குப் பரதனுடைய பண்பாடு வெளிப்படுகின்றது.

இனி, பரத்துவாசனுடைய ஆசிரமத்தில் படைகள் எல்லாம் விருந்துண்ண, காயும் கனியும் கிழங்கும் அருந்தித் தரையிலே படுத்துத் தன்னுடைய அண்ணன் மேற்கொண்ட தவத்தைத் தானும் மேற்கொண்டவனாகப் பரதன் காட்சியளிக்கின்றான்.

சித்திரகூடத்தை நெருங்குகின்ற காலத்தில் அங்கே படைகள் வரும் தூசிப்படலத்தைப் பார்த்து இலக்குவன், 'பரதன் போருக்கு வருகிறான்' என்று சொல்லி யுத்த சன்னத்தனாகிறான். அப்போது இராகவன் புன்சிரிப்போடு அவனைப் பார்த்துப் பேசுகிறான். 'ஐய! நீ என்ன நினைத்தாய் பரதனைப் பற்றி, சற்றுப் பொறுத்துப் பார்' என்று சொல்லுகின்றான். அப்போது படைகளை எல்லாம் ஓர் எல்லையில் நிறுத்திவிட்டு, தவக் கோலத்தோடு நடந்து வருகின்ற பரதனைப் பார்த்தபோது இலக்குவன் ஆடிப்போகிறான்.

நெருங்கி வந்த பரதனுக்கும் இராமனுக்கும் நடைபெற்ற உரையாடலில் இருவரைப் பற்றியும் அறிந்துகொள்ள

முடிகின்றது. அன்பின் எல்லையில் நிற்கின்றவனும் - மாபெரும் தவற்றைத் தசரதன் இழைத்துவிட்டான், அதை எப்படியாவது போக்க வேவண்டுமென்கிற முடிவோடு இருக்கின்றவனும் - அது முடியாவிட்டால் இராமனைப் போலத் தவக்கோலம் பூண்டு காட்டிலே தங்கிவிட வேண்டும் என்ற முடிவோடு வந்தவனு மாகிய பரதன் ஒரு புறம், அமைதியே வடிவாக நடப்பனவற்றையெல்லாம் சாட்சி மாத்திரையாகப் பார்த்துக் கொண்டு, இடையே வருவனவற்றுக்கு எவ்விதத் தடையும் செய்யாமல் 'ஆருயிர் முறைவழிப்படூஉம்' என்று கருதும் இராமனையும் ஒருசேரக் காணுகின்றோம்.

தசரதன் இறந்தது முதலான செய்திகளை யெல்லாம் கேட்டு ஒருவாறு ஆறுதல் அடைகிறான் இராகவன். அடுத்துப் பரதனை நோக்கி "இந்தத் தவக்கோலம் பூண்டு நீ ஏன் வந்தாய்? நீ அரசாள வேண்டியவன் அல்லவோ?" என்று கேட்கின்ற கேள்வியும் அதற்குப் பரதன் தருகின்ற விடையும், அந்த விடையில் இராகவனே சிக்கிக்கொள்வதையும் காண்கின்றோம்.

'நீ பிறந்ததனால் இந்தப் பூமி உனக்குச் சொந்தம். ஆகவே, இதனை ஆள்வாயாக' என்று இராகவன் சொல்லிய வுடன், அதனை அப்படியே ஏற்றுக்கொள்கிறான் பரதன்.

'ஆம், இப்போது நான் சக்கரவர்த்தி. சக்கரவர்த்தியாகிய நான் உன்னைக் கேட்டுக்கொள்கிறேன். நீ வந்து ஆட்சி செய்வாயாக' என்று தானே அரசன் என்ற முறையிலே ஆணையிடும் பரதனைப் பார்த்து இராகவன் நெகிழ்ந்து விடுகிறான்.

"ஐய! சரி, உன்னுடைய ராஜ்யத்தை இப்போது நீ எனக்குத் தந்துவிட்டாய் அல்லவா? நான் இப்போது சக்கரவர்த்தியாகிவிட்டேன். இப்போது நான் சொல்வதை நீ கேட்பாயாக. பதினான்கு ஆண்டுகள் முடிந்து நான் திரும்புகிற வரையில் எனக்காக நீ இருந்து ஆட்சி செய்வாயாக" என்று சொல்லுகின்ற அந்த உரையாடலைப் பார்க்கும்போது சேக்கிழார் கூறும்,

"அளவிலாப் பரிவினால் வந்த இடுக்கண்"
(பெ.பு. எறிபத்தர்-47)

என்ற தொடர் நினைவிற்கு வருகிறது. எல்லையில்லாப் பரிவினால் இவர்களின் இடையே நடைபெறுகின்ற உரையாடல், கற்பவர் மனத்தைக் கரைத்துவிடுவதைக் காண்கின்றோம்.

தேவர்கள் குறுக்கிட்டுப் பரதனைப் பார்த்து, 'நீ நாட்டைச் சென்று ஆள்வாயாக. இராகவன் தன் தந்தை சொல்லைப் புரக்கும் கொள்கையுடையவன்' (2505) என்று சொல்லுகின்ற வரையில் பரதனை அமைதிப்படுத்த முடியவில்லை. அந்த நிலையில் வேறு வழியில்லாமல் அரசை ஏற்றுக்கொள்ளுகிற பரதன், இராமனைப் பார்த்து, "நான் உன் ஆணையின்படி செல்லுகிறேன். நீ உன் திருவடியைத் தரவேண்டும். உன் திருவடிதான் ஆட்சி செய்யும். அதன் பிரதிநிதியாக நான் இருந்து 14 ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பை நடத்துகிறேன்" என்று சொல்லும்போது பரதனது புதிய பரிமாணத்தைக் காணமுடிகின்றது.

அயோத்தியா காண்டத்தி னிடையே காட்சி தருகிற பரதன் எல்லையற்ற வேகத்தோடு வளர்வதையும், வளர்ந்து இறுதியாக ஆயிரம் இராமரும், அவனுக்குச் சமமில்லை என்று சொல்லுகின்ற புதிய பரிமாணததை அடைகின்றதை யும் அயோத்தியா காண்டத்திலேயே பார்த்துவிடுகின்றோம். பரதனின் முழு வளர்ச்சியைக் காட்டுவது அயோத்தியா காண்டமாகும். இவ்வளவு வளர்ச்சி பெற்றுவருபவனைப் பின்னே வரும் காண்டங்களில் காட்டாமல் இறுதிவரையில் கம்பன் கொண்டுசெலுத்துகிறான் என்றால், அது மிகமிகக் கடினமான ஒன்றாகும். இதே வளர்ச்சிப் போக்கில் நந்திக்கிராமத்தில் சென்று, ஆமைபோல் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டு, சர்வ பரித்தியாகம் செய்து, இராகவன் ஆணையைச் சிரமேற்கொண்டு வாழ்கின்ற தீவிர பக்தனாக விருப்பு, வெறுப்பு அற்றவனாக - கடமையைச் செய்பவனாகப் பரிணமிக்குமாறு கம்பன் படைக்கின்றான்.

இக் கருத்துக்கு அரண்செய்கின்ற முறையில் பரதனைப்பற்றி விசுவாமித்திரன் கூறும்,

"தள்ள அரிய பெரு நீதித் தனி ஆறு புக மண்டும்
பள்ளம்" (657)

எனும் சொற்கள் அமைந்துள்ளன. அது முற்றிலும் பொருத்த மானது என்பதை நாம் அறிய முடிகின்றது. அத்தகைய ஒரு சிறப்பை அயோத்தியா காண்டத்தில் வைத்துக் காட்டிவிடுகின் றான் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன்.

இந்தப் பாத்திரங்கள் தவிர, இலக்குவனையும் ஓரளவு உணர்ந்துகொள்வதற்கு அயோத்தியா காண்டம் பெரிதும் உதவுகின்றது

பட்டம் இராமனுக்கு இல்லை என்றபோது, இலக்குவன் கொண்ட சீற்றம், துடிக்கின்ற துடிப்பு, எப்படியாவது பரதனையும், கைகேயியையும் வென்று பட்டத்தை இராமனுக்கு வாங்கித் தருகிறேன் என்று அவன் செய்கின்ற ஆர்ப்பாட்டம், அதன் எதிரே இராகவன் அவனைச் சமாதானப்படுத்த முயல்வது எல்லாவற்றையும் அயோத்தியா காண்டத்தில் காண்கிறோம்.

"நதியின் பிழை அன்று நறும் புனல் இன்மை; அற்றே
பதியின் பிழை அன்று; பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழை அன்று; மகன் பிழை அன்று; மைந்த!
விதியின் பிழை; நீ இதற்கு என்னை வெகுண்டது?"
(1734)

'ஐய! கைகேயி, பரதன் இருவரும் எந்தவிதமான பிழையும் செய்யவில்லை. விதியின் விளையாட்டு இது' என்று இராகவன் சொல்கின்றான். அப்போதும்கூட இராகவனுக்கு எதிரே இலக்குவன் பேசுகின்றான்.

"விதிக்கும் விதியாகும் என் வில் தொழில் காண்டி"
(1735)

என்று. இதைக் கேட்டு, 'என்ன செய்வது' என்று தெரியாமல் தவிக்கின்றான் இராகவன்.

எல்லையற்ற அன்பினால் மூண்டதுதான் இந்தச் சினம். இதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால், நடைபெற்றுவிட்ட செயலின் அடித்தளம் எங்கே இருக்கிறது, அதனுடைய ஆணிவேர் எங்கே இருக்கிறது என்பதைத் தன் முன்கோபம் காரணமாக இலக்குவன் அறிந்துகொள்ள மறுக்கிறான். இந்த அளவில் மேலே இருக்கின்ற நிகழ்ச்சிகளை மட்டும் பார்த்து அவற்றைச் செய்கின்றவர்மேல் சினங்கொள்கிறான். எய்தவன் இருக்க அம்பை நோவது போல், கைகேயி, பரதன் ஆகிய இருவர்மீதும் சீற்றம் கொள்கிறான். இதன் மூல காரணம் எங்கே உள்ளது என்பதைப்பற்றி அவன் கவலைப்படவே யில்லை. இராகவன் தன் கூர்த்த மதியால் அதனை எடுத்துச் சொன்னபோதும் இலக்குவன் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இல்லை.

இறுதியாக இலக்குவனை அடக்குவதற்கு இராகவன் ஏவுகின்ற பிரம்மாஸ்திரம் வியப்புக்குரிய தாகும்.

"நன் சொற்கள் தந்து ஆண்டு, எனை நாளும் வளர்த்த தாதை
தன் சொல் கடந்து, எற்கு அரசு ஆள்வது தக்கது அன்றால்;
என் சொல் கடந்தால், உனக்கு யாது உளது ஊற்றம்"
(1741)

"தந்தையின் சொல்லைக் கேட்பது எனது கடமை. என் சொல்லைக் கேட்பது உனது கடமை. என் சொல்லை மீறினால் அதனால் உனக்கு வரப்போகின்ற இலாபம் என்ன?" என்று சொன்னவுடனே, கொதித்துப் பொங்கிவருகின்ற பாலில் ஒரு சொட்டுத் தண்ணீர் விட்டவுடன் எப்படி அடங்கிவிடுகின்றதோ அதுபோல இலக்குவன் சீற்றம் எப்படி அடங்கிவிடுவதைக் காண்கின்றோம்.

இராகவனுடைய ஒரு சொல்லுக்கு, இலக்குவன் தன் வாழ்க்கையையே - தன் எண்ணத்தையே - தான் கொண்டிருந்த குறிக்கோளையே பலியாக்கிவிடுகிறான். இராமன் மாட்டு அவன் கொண்டிருந்த மாபெரும் அன்பை எடுத்துக் காட்டக் கவிச்சக்கரவர்த்தி இதனைப் பயன்படுத்துகின்றான்.

இத்துணைப் பேராற்றலும் - பெருஞ்சினமும் உடையவனாகிய இலக்குவன் இராமனின் நிழல்போல் உறைந்தவன் என்பதை அனைவரும் அறிவர். என்றாலும், இலக்குவனின் கைங்கரியப் பெருமிதம் புலப்படுகின்ற நிகழ்ச்சி மிகவும் நெகிழ வைப்பதாகும் என்பதை நினைதல் வேண்டும். யமுனை ஆற்றில், குகன் முதலானவர்களுடைய உதவி எதுவும் இல்லாத நிலையில், மூங்கில் கழிகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து, மாணைக் கொடியால், தெப்பமாகக் கட்டி அதில் பிராட்டியையும், பெருமானையும் ஏற்றிவைத்து அக்கரைக்குத் தன் இரு கையால் இழுத்துக்கொண்டு நீந்திப்போகிறான். அதைப் பார்த்து இராகவன் தழுதழுத்து விடுகின்றான்.

அக்கரைக்குச் சென்றால், அங்கே ஒரு தவச்சாலை, பிராட்டியும் பெருமானும் தங்குவதற்குத் தயாராய் இருக்கிறது. இலக்குவனால் கட்டப்பட்டிருந்த அந்தத் தவச்சாலையைப் பார்த்த இராகவன் தம்பியை ஏற இறங்கப் பார்த்து,

"என்று கற்றனை நீ இதுபோல்" (2096)

"தம்பி, ஒரு வினாடிகூட என்னை விட்டுப் பிரிந்தவன் இல்லையே! நீ எங்குக் கற்றாய் இதனை?" என்று இராகவன் தழுதழுத்துப் பேசுகின்றபோது அண்ணன் தம்பியிடையே இருக்கின்ற எல்லையற்ற அன்பின் பரிமாணத்தைக் காண முடிகின்றது.

மிதிலையர் கோன் மகள் பாதம் காட்டில் நடந்தன; குற்றமே இல்லாத என் தம்பியின் கை இந்தத் தவச்சாலையை அமைத்தன. ஒன்றுமே இல்லாதவற்குக் கிட்டாத பொருள் இல்லை என்று இராகவன் பேசுகின்றான்.

"மேவு கானம் மிதிலையர் கோன் மகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன;
தா இல் எம்பி கை சாலை சமைத்தன -
யாவை யாதும் இலார்க்கு இயையாதவே" (2095)

இராமானுஜனாகிய இலக்குவன்பற்றி இராமன் என்ன நினைக்கிறான் என்பதை அயோத்தியா காண்டத்தில் நன்கு அறியமுடிகிறது.

எப்படிப் பார்த்தாலும் இராம காதையின் கரு முழுவதும் அயோத்தியா காண்டத்தில் அடங்கியிருக்கிறது என்பதும் அதில் வருகின்ற பாத்திரங்கள் அனைத்தும் ஈடு இணையற்ற முறையில் படைக்கப்பட் டுள்ளன என்பதும் காணக் கிடக்கின்றன.

இந்தக் காண்டத்திலேயே உயிர்நீத்துவிடுகின்ற தசரதன், தன் செயலை முடித்துக்கொண்டு மறைந்துவிடுகின்ற கூனி, யாரும் எதிர்பாராத முறையில் புதிய திருப்பங்களை உண்டாக்கி உலகம் முழுவதும் பழி சொல்லும் என அறிந் திருந்தும், பழிகளை எல்லாம் வாங்கித் தோளில் போட்டுக் கொண்டு தான் எது நியாயம் என்று நினைத்தாளோ அந்த நியாயத்திற்காகப் போராடி இறுதிவரை கல்தூண்போல் நிற்கின்ற ஞானியாகிய கைகேயி, அவள் மைந்தனாய் ஆயிரம் இராமனுடைய வளர்ச்சியை அடைகின்ற பரதன், அன்பின் வடிவாக இருக்கின்ற குகன் ஆகிய பாத்திரங்களை யெல்லாம் காண்பதற்கு அயோத்தியா காண்டம் உதவுகிறது.

மந்திரப் படலத்தில் தொடங்கி, திருவடி சூட்டு படலத் திற் முடிகின்ற அயோத்தியா காண்டம் கம்பனுடைய பேராற்றலுக்கு ஒப்பற்ற எடுத்துக்காட்டாக இருப்பதையும், பாத்திரப் படைப்பில் உலகக் காப்பியங்களுள், இப்படிப் பாத்திரப் படைப்பைச் செய்தவர் யாரும் இல்லை என்று சொல்லத்தக்க அளவில் பாத்திரங்களைக் கவிச்சக்கரவர்த்தி அமைத்திருக்கிறான் என்பதையும் அறியும்போது அயோத்தியா காண்டம் உண்மையிலேயே ஆறு காண்டங் களில் மிகச் சிறந்த ஒரு காண்டம் என்பதை உணர முடிகின்றது.

# ஆரணிய காண்டம்

கம்பநாடனின் இராமகாதையில் மூன்றாவதாக அமைந்துள்ளது ஆரணிய காண்டமாகும். காடு என்ற பொருளைத் தரும் ஆரண்யம் என்ற வடசொல் அப்படியே எடுத்தாளப் பெற்றுள்ளது. விராதன் வதைப் படலத்தில் தொடங்கி, சவரி பிறப்பு நீங்கு படலம்வரை உள்ள பதின்மூன்று படலங்களைப் பெற்றுள்ளது, இக்காண்டம். தொடக்கம், முடிவு ஆகிய இரு படலங்களும் இராகவனுடைய அம்பு, கருணை நிறைந்த கண் ஆகிய இரண்டும் பட்டு முறையே விராதனும் சவரியும் பிறப்பு நீங்குகின்றனர் என்பதை அறிவிப்பன.

காப்பியம் என்ற முறையில் பார்த்தால், காப்பிய வளர்ச்சிக்கு இரண்டாவது திருப்புமுனை இக்காண்டத்தின் நடுநாயகமாக அமைந்துள்ளதைக் காணலாம். அயோத்தியா காண்டத்தில் கைகேயி செயல் காப்பிய நோக்கத்திற்கு முதல் திருப்புமுனை யாகும். அப்பெருமாட்டி இராகவனை வனத்திற்கு அனுப்பவில்லை யானால் திருமகள் கேள்வன் இவ்வுலகிடை இராகவனாக அவதரித்ததன் நோக்கம் நிறைவேறாமல் போய்விடும். அதனால்தான் அதனை முதலாவது திருப்புமையம் என்று கூறுகிறோம். வனத்திடை வந்தும் சிற்றன்னை பணித்ததுபோலத் தாழிரும் சடைகள் தாங்கி, தாங்கரும் தவம் மேற்கொண்டு பதினான்கு ஆண்டுகள் கழிந்து திரும்பவும் அயோத்திக்குச் சென்றிருந்தால் அதனால் என்ன பயன் விளையமுடியும்? தவம் மேற்கொள்பவருக்கும் புண்ணிய நதிகள் ஆடுவோருக்கும் அவற்றின் பயனை நல்குகின்ற பரம்பொருளே இப்பொழுது இராகவனாக அவதரித்துள்ளான். தவம் மேற்கொள்ளுதலும் புண்ணிய நீராடுதலும் அவனுக்குத் தேவையில்லாதன வாகும். இந்நிலையில் அவதார நோக்கம் நிறைவுபெற வேண்டுமானால் ஓர் இன்றியமையாத திருப்புமுனை தேவைப்படுகிறது.

அறம் தலை நிறுத்தி, தீயோர் இறந்து உக நூறி, தூயவர் துயர் துடைக்கப் பிறந்தவன் அப்பெருமான். தீயோர் அழிவும்,

தூயவர் துயர் துடைப்பும் பின்னிப் பிணைந்துள்ளன. தீயவர் அழிவில்தான் தூயவர் துயர் துடைப்பு இணைந்துள்ளது. கரன், தூடணன் முதலியோரில் தொடங்கி இராவணன் வரை அழிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அவதார நோக்கம் முழுமையாக நிறைவெய்தும்.

இந்த அரக்கர்கள் தீயவர்கள் என்பது உலகறிந்த உண்மை. தீயரே எனினும், மாதவங்கள் செய்து எண்ணரிய வரங்களைப் பெற்றுள்ளவர்கள். புலனடக்கம் செய்து மாபெரும் தவத்தை மேற்கொண்டு அளவற்ற வரங்களைப் பெற்றார்கள் என்றால், இவர்கள் சாதாரணமானவர்கள் அல்லர். காட்டிலுள்ள முனிவருக்கும் இருடிகட்கும் காரணமின்றி இவர்கள் தீங்கிழைத்தனர் என்பதும் உண்மை தான். வர பலம் பெற்ற இவர்கள் ஏன் முனிவர் முதலாயி னோர்க்குத் தீங்கிழைக்க வேண்டும்? இவ்வினா நியாயமானதே யாகும். தேவர்கட்கும் அசுரர்கட்கும் பரம்பரையாகப் பகைமை உண்டு. முனிவர்கள் தாம் மேற்கொண்ட வேள்விகளை முடித்துத் தேவர்களாக ஆகப்போகிறார்கள். எனவே, அசுரர்களின் உறவினராகிய அரக்கர்கள் இம்முனிவர்களையும் அவர்கள் மேற்கொண்டுள்ள வேள்விகளையும் அழிக்க முயல்வதில் வியப்பு ஒன்றுமில்லை. பெருந்தவங்கள் செய்து சாப, அனுக்கிரக ஆற்றலைப் பெற்றுள்ள இம்முனிவர்கள் தம் ஆற்றலால் இவ் அரக்கர்களை ஏன் அழிக்கவில்லை? இவ்வினாவிற்குச் சிறந்த முறையில் விடை கூறியவர் வள்ளுவப் பெருந்தகையாவர்.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு" (குறள் - 261)

இந்த இரண்டு பண்புகளையும் ஒருங்கே பெற்றவர்கள் முனிபுங்கவர்கள். ஆதலால் தமக்குத் தீங்கு இழைத்தவர்களைப் பொறுத்துக்கொண்டு, எதிர்த்து ஒன்றும் செய்யாமல் இருந்து விட்டனர். அதன் மறுதலையாக இறைவனை வேண்டி, அவன் கீழிறங்கி வந்து அரக்கருடன் போர் செய்யவேண்டிய நிலை ஏன் ஏற்படுகிறது? இவ்வினாவிற்கு விடை காண்பது சற்றுக் கடினம்தான். என்றாலும், சில அடிப்படைகளை நினைவிற்குக் கொண்டுவருவதில் தவறில்லை.

வர பலம் என்று எடுத்துக்கொண்டால், இம்முனிவர்கள் இவ்வரக்கர்களின் வர பலத்திற்குச் சமமாகவோ அன்றி அதிகமாகவோகூடப் பெற்றிருக்கின்றனர். என்றாலும், அவ்வரத்தைப் பயன்படுத்தித் தம் பகைவர்களை அழிக்க விரும்ப வில்லை. பகைவர்களே யாயினும் - ஓயாமல் தமக்குத் தீங்கிழைப்பவர்களேயாயினும் அவர்களுடன் மாறுபட்டுப் போரிடுவதி லும் சாபமிடுவதிலும் தம் ஆற்றலைச் செலவழிக்க அப் பெருமக்கள் விரும்பவில்லை. அவர்களுடைய புலனடக்கமும் தவ பலமும் பிறர் செய்யும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளவும் மனத்தில் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் இருக்கவும் பயன்பட்டன. எனவே, எக்காரணத்தைக் கொண்டும் - தம்மால் முடியுமேனும் - தமக்குத் தீங்கிழைக்கும் அரக்கர்களை அவர்கள் ஒடுக்க முன்வரவில்லை. மேலும் ஒருவரை அழித்தல் என்பது முத்தொழிலை உடைய பரம்பொருளுக்கு உரியதே தவிர மனிதர்க ளாகிய தமக்கு அவ்வுரிமை இல்லையென அப் பெருமக்கள் கருதினர். அன்றியும், அகங்கார, மமகாரங்களை (யான், எனது) அறவே ஒழித்த அவர்கள், யார்மேலும் வெறுப்போ சினமோ கொள்ளுவதில்லை. எந்த இறைவனிடத்தில் தம்மை ஒப்படைத்தார்களோ அந்த இறைவனுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு விருப்பு வெறுப் பின்றி வாழ்தலே தம் கடமை என இவர்கள் எண்ணினர். இதனாலேயே இவர்கள் துயர் துடைக்க இறைவன் அருள் பெற்ற பலர் பல காலங்களில் தோன்றி அவனிட்ட பணியை நிறைவேற்றுகின்றனர். பகைவர்களின் வர வலிமைக்கேற்ற முறையில் இறைவன் ஒரு சிலரை அனுப்பியோ அன்றித் தானே இவ்வுலகிடைப் பிறந்தோ இவர்களை அழிக்க வேண்டியுள்ளது.

இறைவன் இச்சா மாத்திரத்தில் ஆக்கல், காத்தல், அழித்தல், ஆகிய முத்தொழிலையும் செய்கிறான். எனினும் கர தூடணர்கள் இராவணன் ஆகியோரை அழிக்கத் தானே அவதாரம் எடுக்கவேண்டி யுள்ளது. ஆழ்ந்து நோக்கினால் இதற்குரிய காரணங்களையும் அறிந்துகொள்ள முடியும். இரணியன், இராவணன் போன்றவர்கள் எல்லையற்ற வர

பலம் கொண்டோராகவும் ஆயிர மறைப்பொருள் உணர்ந்த வர்களாகவும் இருக்கின்றனர். யான் என்ற அகங்காரத்தை அழித்துவிட்டிருப்பின் அந்த வினாடியே இறைவனை அடைய முடியும். அந்த 'நானை' அழித்திருப்பின் உலகம் முழுவதும் இறைவடிவாக இருப்பதை உணர்ந்திருப்பர். அதன் மறுதலையாக உலகம் முழுவதும் தானே நிறைந்திருப்பதாக இவர்கள் கருதிவிட்டனர். இவர்களுடைய 'நான்' ஈடு இணையற்ற பேரகங்காரம் (Universal Ego) ஆகும். இந்த அகங்காரத்தை அகற்ற இராமனாகவோ, நரசிம்மமாகவோ இறைவன் வடிவெடுத்து வரவேண்டி உள்ளது.

பரம்பொருள் இராகவனாக வடிவெடுத்துள்ளதால் குகன் போன்ற அன்பு வடிவமானவர்கள் பயனடைகின்றனர். அன்பே வடிவான குகனும், அறிவே வடிவான வீடணனும் ஒரே நேரத்தில் பயன் பெறுகின்றனர். விராதன், கவந்தன், அகலிகை முதலியோர் சாபம் நீங்கப் பெறுகின்றனர். சரபங்கன், சவரி முதலியோர் இவ்வுடலை விட்டுச் சென்ற பிறகே அடைய வேண்டிய இறையனுபவத்தை, இறைக்காட்சியை இந்த உடலுடனேயே பெறுகின்றனர். சரபங்கனையும் சவரியையும் தேடிச் சென்று காட்சி தருகிறான் பரம்பொருள். தீயோரை அழிப்பதுடன் நல்லோருக்கு அருள் வழங்கவும் இறைவன் எடுக்கும் அவதாரம் பயன்படுகிறது.

பால, அயோத்தியா காண்டங்களில் காப்பியத் தலைவனின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றை மிக அற்புத மாகக் கம்பநாடன் படைத்துவிட்டான். காப்பிய நோக்கம் நிறைவேற வேண்டுமானால் பிராட்டியைப் பிரிந்து இராகவன் தொழிற்பட வேண்டும். கர, தூடணர்களை அவன் அழிப்பதற்குச் சூர்ப்பணகை பயன்பட்டாள். அவர்களை இராகவன் தேடிச் சென்று அழிக்கவில்லை. அதன் எதிராக அவர்களே இராகவனைத் தேடி வந்து அழிகின்றனர். நேரிடையாக அவர்கள்மேல் போர் தொடுக்க இராகவனுக்கு எந்த முகாந்தரமும் இல்லை. முனிவர்கள் வேண்டிய போது, 'இவர்களை அழிக்கின்றேன்' என்று இராகவன் அபயம் கொடுத்தான் எனினும், காரணமின்றிப் போரிடச் செல்ல

அவன் ஒருப்படவில்லை. எனவேதான், கர, தூடணர்கள் வலுச்சண்டைக்கு வந்து அழிகின்றனர்.

இந்தப் படலத்தை இத்துணை விரிவாக 192 பாடல்களில் பாட வேண்டிய இன்றியமையாமை என்ன? இப்போர் மூன்று நாழிகையுள் முடிந்தது என்று சூர்ப்பணகையே கூறுகிறாள். "வில் ஒன்றில் கடிகை மூன்றில் ஏறினர் விண்ணில்" (3130) என்று அவளே கூறியிருக்க, இதனைக் கூற இத்தனை பாடல்களைக் கம்பன் ஏன் பயன்படுத்துகிறான்? சற்று ஆய்ந்தால், இதன் காரணத்தை அறிய முடியும். காப்பியத்தின் பாதியை யுத்த காண்டம் என்ற பெயரில் படைக்கப் போகும் கவிஞன், அதற்கு முன்னர்ப் போட்டுக்கொண்ட சிறிய வரைபடம் ஆகும் இது.

இரண்டாவது திருப்புமுனை யாகிய சூர்ப்பணகை சூழ்ச்சி ஒரு படலமாக விரிகின்றது. அடுத்து, மாபெரும் இராவணன் தான்* பெற்றிருந்த மிக உயர்ந்த நிலையிலிருந்து கீழே விழுவதற்கு எடுத்துக்கொண்ட முதற்படியாவது இராவணன் சூழ்ச்சிப் படலமாகும். இதிலொரு வியப்பு என்னவெனின், அண்ணன் தங்கை என்ற இருவருடைய சூழ்ச்சியும் கேவலமான காமத்தை அடிப்படையாகக் கொண்டதே யாகும். இக்காண்டத்தின் தொடக்கத்திலுள்ள விராதன் வதையும், சரபங்கன் பிறப்பு நீங்குதலும் காப்பிய வளர்ச்சிக்கு எந்த விதத்திலும் துணை செய்யவில்லை. பின்னர் இவற்றை முறையே 70, 44 பாடல்களிலும் பாட வேண்டிய இன்றியமையாமை யாது? இராமனை இன்னார் என இனங் கண்டுகொண்டு, இறைத் தன்மையை விரித்துப் பாட முதலிரண்டு காண்டங்களிலும் இடம் இல்லை. பரம்பொருள் எதன்பொருட்டு இவ்வுலகிடைத் தோன்றினானோ அப்பெருங் காரியத்தைச் செய்வதற்குப் புறப்பட்டு விட்டான். இந்நிலையில் நாமேகூட இராமனின் உண்மையான சொரூபத்தை மறந்து, அவன் அழகிலும், அவனுடைய அன்பிலும், எளிவந்த தன்மையிலும் மயங்கிவிடுகிறோம். நம் அன்பில் அகப்பட்டுக்கொண்ட தோழனாக நினைத்து விடுகிறோம். மணிவாசகப் பெருமான் கூறியபடி "மழக் கை இலங்கு பொற்கிண்ணம் என்றலால் அரியை என்று உனைக்

கருதுகின்றிலேன்" (திருச்சதகம் 92) என்ற முறையில் தசரத குமாரனைக் குழந்தையாகவும் இளைஞனாகவும் வைதேகி கேள்வனவாகவும் காண நேர்ந்ததே தவிர, அப்பெருமகனின் மற்றொரு பக்கத்தைக் காணவோ அறியவோ நமக்கு வாய்ப் பில்லை. இந்த நிலையில் இராகவனை யாரென்று நாம் அறிந்துகொள்ள வேண்டும். அந்த அறிவுறுத்தலை இரண்டு வகையாகச் செய்யலாம். முதலாவது வகை, கவிஞன் படர்க்கைப் பரவலாகப் பரம்பொருள் இலக்கணங்களைக் கூறி, அவன்தான் இராமன் என்று கூறலாம். இம்முறை அழகுடையதேனும் காப்பிய இலக்கணத்திற்கு அதிகம் பொருந்தி வராது. நாடகங்களைப் போலல்லாமல் காப்பியங்களில் கவிஞன் ஒரோவழி தானே ஒரு சூழ்நிலை அமைத்துக்கொண்டு பாத்திரப் பண்பை விளக்குகிறது முறைதான். ஆனால், கம்பநாடன் இதனைச் செய்யாமல் இரண்டாவது வகையைக் கையாளுகிறான்.

இந்த இரண்டாவது வகையில், காப்பியத்தில் வரும் பாத்திரங்கள் காப்பியத் தலைவன் பண்புநலன்களை விளக்க உதவுகின்றன. அந்த முறையில்தான் கம்பநாடன் இக்காண்டத் தின் முதலிரண்டு படலங்களில் இராமனின் மறைந்துள்ள பகுதியை விளக்க முற்படுகிறான். விராதன், சரபங்கன் இருவரும் இராமனின் அறியமுடியாத பகுதியை எடுத்து முன்னிலைப் பரவலாகப் போற்றுகின்றனர். விராதன் என்பவன் சாபத்தால் அரக்க உருவில் வாழும் கந்தர்வன். சரபங்கன் நம்மைப்போல் மனிதனாகப் பிறந்து தவ முனிவனாக வளர்ந்துள்ள சான்றோனாவான். விராதனைப் பொறுத்தமட்டில் இராமன் வாளால் கைகள் துண்டிக்கப் பட்ட நிலையில் பெரிய குழிதோண்டி அவனைப் புதைக்க வேண்டுமென்பதற்காக இராமன் தனது காலால் விராதன் உடலை எட்டித் தள்ளுகிறான். இராமனுடைய திருவடி சம்பந்தம் (திருவடி தீட்சை) பெற்றவுடன் அரக்க உடலிலிருந்து பிரமனை யொத்த ஒளி பொருந்திய ஒரு கந்தருவன் விண்ணிடைத் தோன்றுகிறான். பரமனுடைய திருவடி தீட்சை கிடைத்தற் கரியதாகும். ஒப்பற்ற அப்பெரும்பேற்றை நல்லூழ் காரணமாகப் பெற்ற விராதன், அதன் பயனாக

மெய்யுணர்வு பெற்றுப் பாடத் தொடங்குகிறான். 'துறப்பதே தொழிலாக' என்ற பாடலில், "எவர்க்கும் தாம் பெற்ற பதம் பெறல் அரிதோ!" (2566) என்று கூறும்பொழுது, தான் பெற்ற திருவடி தீட்சை பிறர்க்குக் கிட்டாத ஒன்று என்று கூறுகிறான். அவன் இராகவனைத் துதிக்கத் தொடங்குகையில்

"வேதங்கள் அறைகின்ற உலகு எங்கும் விரிந்தன உன்
பாதங்கள் இவை என்னின், படிவங்கள் எப்படியோ?
ஓதம் கொள் கடல் அன்றி, ஒன்றினோடு ஒன்று ஒவ்வாப்
பூதங்கள்தொறும் உறைந்தால். அவை உன்னைப்
பொறுக்குமோ?
(2563)

என்ற பாடலில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட குணமுடைய பஞ்சபூதங்களிலும் பரம்பொருளே நிறைந்துள்ளான் என்றும், எல்லா உலகங்களிலும் அவன் திருவடிகளே விரிந்துள்ளன என்றும் பேசுகிறான். இங்குத் திருவடி என்று விராதன் கூறும்பொழுது அச் சொல்லுக்குத் திருவருள் என்ற பொருளையே கொள்ள வேண்டும். இச்சொல்லுக்கு இதுதான் பொருள் என்று சமயத் துறையினர் கூறியிருத்தல் நினைவில் கொள்ளத் தக்கது. 'மாறுபட்ட குணமுடைய பூதங்கள் தோறும் நீயே நிற்கின்றாய்' என்று விராதன் கூறுவதில் ஓர் ஆழமான பொருள் இருத்தலை அறிய வேண்டும். முரண்பாட்டில் முழுமுதலைக் கண்டவர்கள் (finding unity in diversity) இத்தமிழர் ஆவர். அக் கருத்தைத்தான் பாடலின் மூன்றாம் நான்காம் அடிகள் விளக்குகின்றன. இவ்வாறு கூறியவுடன் உயிர்களின் கற்பனைக்கும் அப்பாற்பட்டதாய், கருத்துள் அடங்காததாய், பற்றிக்கொள்வதற்கு இடம் தராததாய் அவ்விறைவனின் திருவடி (திருவருள்) இருந்து விடுமோ என்ற அச்சம் யாவர்க்கும் உண்டாவதே ஆகும்.

இறப்ப உயர்ந்து நிற்கும் அப்பரம்பொருள் சிற்றுயிர்கள் மனமுருகி வேண்டும்பொழுது தன் உயர்ந்த நிலையிலிருந்து கருணை காரணமாகக் கீழிறங்கி அச்சிற்றுயிர்க்கு உற்ற துணையாய் வருகின்ற எளிவந்த தன்மை (சௌலப்பியம்) உடையது என்பதைக்,

"கடுத்த கராம் கதுவ, நிமிர் கை எடுத்து, மெய் கலங்கி,
உடுத்த திசை அனைத்தினும் சென்று ஒலிகொள்ள
உறுதுயரால்,
"அடுத்த பெருந்தனி மூலத்து அரும்பரமே! பரமே!" என்று
எடுத்து ஒரு வாரணம் அழைப்ப, நீயோ அன்று "ஏன்?"
என்றாய்?
(2564)

*என்ற பாடலில் விராதன் பேசுகிறான். நீண்டு செல்கின்ற விராதனுடைய துதியில் உலகம் தோன்றிய நாளிலிருந்து இன்றும் விடை காணமுடியாமல் இருக்கின்ற ஒரு வினாவை விராதன் எழுப்புகிறான். எத்தனை பசுக்கள் நிறைந்திருந்தாலும் ஒரு கன்று தவறாமல் தன் தாய்ப் பசுவைச் சென்றடையும். ஆனால், அனைத்துயிர்களையும் படைத்த தாயாகிய உன்னை அவ்வுயிர்கள் ஏனோ அறிந்துகொள்ளவில்லை. கேவலம் ஐந்தறிவு படைத்த பசுங்கன்றுக்கு உள்ள உள்ளுணர்வு* (intution) *ஆறறிவு படைத்த மக்களிடம் இல்லையே, இது என்ன மாயை என்று வருந்துகிறான் விராதன்.*

'தாய் தன்னை அறியாத கன்று இல்லை; தன் கன்றை
ஆயும் அறியும்; உலகின் தாய் ஆகின், ஐய!
நீ அறிதி எப் பொருளும்; அவை உன்னை நிலை அறியா;
மாயை இது என் கொலோ? - வாராதே வரவல்லாய்!
(2570)

*பலபடியாகத் திருவடிப் பெருமை பேசிய விராதன், தன்மாட்டுக் கொண்ட பரிவுணர்ச்சியால் அரக்க உடம்பி லிருந்து வேறு பல பிறவிகள் எடுத்து வளர்ந்து செல்லாமல் நேரிடையாக வீடுபேற்றை அடைய வழிசெய்தது பெருமானுடைய திருவடி சம்பந்தம் என்ற கருத்தை,*

"ஒப்பு இறையும் பெறல் அரிய ஒருவா!
முன் உவந்து உறையும்
அப்பு உறையுள் துறந்து, அடியேன்,
அருந் தவத்தால் அணுகுதலால்,

இப் பிறவிக் கடல் கடந்தேன்;
இனிப் பிறவேன்; இருவினையும்
துப்பு உறழும் நீர்த்த சுடர்த் திருவடியால்,
துடைத்தாய் நீ." (2576)

என்ற பாடலால் விளக்குகிறான்.

விராதனைப் பொறுத்தமட்டில் வேதங்களைக் கற்று அறிவின் துணை கொண்டு, உயிர்கள் யாவை, இவ்வுயிர்களுக்கும் பரம்பொருளுக்கும் உள்ள தொடர்பு யாது என்று ஆராய்ந்து ஞானத்தைப் பெற்றவன் அல்லன். பக்தியின் அடிப்படையில் இறைவனுடைய சௌலப்பியத்தையே துணையாகக் கொண்டு வீடு பெற்றவன் ஆவான் எனலாம். எனவே, இவனை ஞானி என்று கூற முடியாது. விராதன் என்ற பெயரில் அரக்கனாக வாழ்ந்தபொழுது பிற உயிர்களைக் கொன்று தின்பதையே தொழிலாகக் கொண்டவன் இவன். அப்படியிருக்க அப்பிறப்பிலிருந்து உடனே வீடு பெற்றான் என்றால், அந்த இழிபிறப்பு உடம்புக்கே திருவடி சம்பந்தம் கிடைத்தது என்றால், இது எப்படிப் பொருந்தும்? இந்த அரக்க உடம்பில் போவதன் முன் பரம்பொருளிடம் எல்லை யற்ற பக்தி உடையவனாக அவன் இருந்திருத்தல் வேண்டும். எனவே, எவ்வித நெறிமுறைகளுக்கும் கட்டுப்படாமல் இழி பிறவி எய்தினும் இறைவனின் இணையடிகளை மறவாத மனம் ஒன்றுமாத்திரம் இருப்பின் அவர்கட்கும் வீடுபேறு உண்டு என்பது இந்நாட்டின் பழைய கொள்கை ஆகும். தமிழர் கண்ட பக்தி மார்க்கத்திற்கு எடுத்துக்காட்டுகளாகக் குகனையும், விராதனையும் கவிஞன் எடுத்துக்கூறுகிறான். குற்றம் ஒன்றும் புரியாத குகன், கொலைத் தொழிலில் ஈடுபட்ட விராதன், வேட்டைத் தொழிலையே தொழிலாகக் கொண்ட கண்ணப்பன் ஆகியோர் இந்நாட்டவர் பெரிதெனப் போற்றிய பக்தி மார்க்கத்திற்கு எடுத்துக்காட்டாவர்.

"ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்"

என்பது (5-91-3) நாவுக்கரசர் பெருமானுடைய திருவாக்காகும். இவ்வடிக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவன் சரபங்க முனிவன் ஆவான். பல்லாண்டுகள் வேதம் முதலிய நூல்கள் பயின்று, மாபெரும் தவங்களைச் செய்து, உண்மைப் பொருளைத் தன் அறிவின் துணைகொண்டு அறிந்தவன் சரபங்கன். அவனது தவத்தை மெச்சிய இந்திரன் அவன் ஆசிரமத்திற்கு வந்து அவனை வணங்கி "ஐயனே, இந்திர லோகமும் அதற்கும் மேம்பட்ட பிரமலோகமும் உன்னை வரவேற்கக் காத்திருக்கின்றன; வருக" என்று வேண்டுகிறான். இவ்வாறு இந்திரன் வேண்டுகிற அதே நேரத்தில் சரபங்க னுடைய ஆசிரமத்தின் வெளியே இராம இலக்குவர்கள் நிற்கின்றனர். அதனைத் தன் ஞானத்தால் உணர்ந்து சரபங்கன் "எனக்கு வரவேண்டிய வீடுபேற்றை அளிப்பவன் வெளியே நிற்கின்றான். நீ தர வேண்டிய பதங்கள் எனக்குத் தேவை யில்லை" என்று பேசுகிறான். அதே நேரத்தில், வீடுபேற்றின் இலக்கணத்தைக் கீழ்வரும் பாடலில் அற்புதமாக எடுத்து விளக்குகிறான்.

"சிறு காலை இலா, நிலையோ திரியா,
குறுகா, நெடுகா, குணம் வேறுபடா,
உறு கால் கிளர் பூதம் எலாம் உகினும்
மறுகா, நெறி எய்துவென்; - வான் உடையாய்;" (2606)

சரபங்கன் ஆசிரமத்தை விட்டு வெளியே வந்த இந்திரன் இராமனை இன்னான் என்று அறிந்துகொண்டு 2610 முதல் 2617 வரை உள்ள எட்டுப் பாடல்களில் பரம்பொருளின் தன்மையைப் பேசுகிறான். ஆயிரம் யாகங்கள் செய்து இந்திரப் பெரும்பதத்தில் இருக்கும் அவனும் விராதனைப் போலவே முரண்பாட்டில் முழுமுதலைக் காண்கிறான். அவ்வெட்டுப் பாடல்களுள் ஈடுஇணையற்று விளங்குவது.

"மேவாதவர் இல்லை, மேவினரும் இல்லை;
வெளியோடு இருள் இல்லை, மேல் கீழும் இல்லை;
மூவாதமை இல்லை, மூத்தமையும் இல்லை;
முதல் இடையோடு ஈறு இல்லை, முன்னொடு பின்
இல்லை;

தேவா! இங்கு இவ்வோ நின் தொன்று நிலை என்றால்,
சிலை ஏந்தி வந்து, எம்மைச் சேவடிகள் நோவக்
காவாது ஒழியின், பழி பெரிதோ? அன்றே;
கருங் கடலில் கண்வளராய்! கைம்மாறும் உண்டோ?"
(2614)

என்ற பாடலாகும்.

விராதன், இந்திரன் ஆகியோர் பாடிய இவ்விரு துதிகளிலும் நம்மை வியக்க வைக்கும் செய்தியும் உண்டு. அரக்க வடிவிலிருந்து திருவடி சம்பந்தம் பெற்ற விராதன் வீடுபேற்றை அடைகிறான். முழு ஞானியாகிய சரபங்கனோ வீடுபேற்றின் இலக்கணத்தை மிக அற்புதமாக 2606 ஆம் பாடலில் கூறி, இந்திரப் பதத்தையும் பிரம லோகத்தையும் உதறிவிட்டு இராமனைத் தரிசித்து வீடுபேற்றை அடைகிறான். இவர்கள் இருவர்மட்டு மல்லாமல் இந்திரனும் இராமனைத் தரிசிக்கிறான். இவர்களைப் போலவே அவனும் இறை இலக்கணத்தைப் பேசுகிறான். என்றாலும், தான் பெற்ற இந்திரப் பதத்தை உதறிவிட்டு வீடுபேற்றை அடைய அவன் விரும்பவில்லை.

கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன் இந்த இரண்டு படலங்களில் உபநிடதங்களைச் சாறாகப் பிழிந்து இந்நாட்டுக் கடவுட் கொள்கையையும் அதனுடன் குழைத்து ஏறத்தாழ 24 பாடல்களில் தந்துவிடுகிறான். அம்மட்டோடு இல்லாமல், குற்றமே குணமா வாழ்ந்த விராதன், மாபெரும் ஞானியின் வாழ்க்கை வாழ்ந்த சரபங்கன் ஆகிய இருவரும் வீடுபேற்றைப் பெரிதென மதித்துப் பெறுதலையும், தேவர்கோன் ஆகிய இந்திரன் இவர்களோடு ஒப்பிடுகையில் சிறியவனாக ஆகிவிடுதலையும் குறிப்பால் உணர்த்துகிறான்.

ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பநாடனைப் பொறுத்தவரையில் இரண்டு பெரிய கொள்கைகளின் தாக்கத்திற்கு இலக்காயினான். கம்பனுக்கு முன்னர் இரண்டாயிரம் ஆண்டுகளாக இத்தமிழகத்தில் தோன்றி வளர்ந்து நிலைபெற்ற பக்தி இலக்கியத்தின் தாக்கம் ஒன்று. மற்றொன்று, உபநிடதங்களின் தாக்கம் ஆகும். சங்க காலத்திற்கு முன்னர்த் தொடங்கி, சங்க காலத்தில் ஓரளவு

வளர்ச்சி அடைந்து ஆறு முதல் எட்டு வரையுள்ள மூன்று நூற்றாண்டுகளில் பெரும் புயலாக மாறியது பக்தி இயக்கம் ஆகும். "குவியிணர்ப் புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை கடவுள் பேணேம் என்னா" என்பது முதலாகச் சங்கப் பாடல்களில் (புறநா.106) நூற்றுக்கணக்கான இடங்களில் இத்தமிழர் கொண்ட கொள்கை பரந்து காணப்படுகிறது.

"......யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்
அருளும், அன்பும், அறனும், மூன்றும்-
உருள் இணர்க் கடம்பின் ஒளி தாராயோ!
(பரிபாடல் 5 : 77-80)

அன்னை ஆகலின், அமர்ந்து யாம் நின்னைத்
துன்னித் துன்னி, வழிபடுவதன் பயம்
இன்னும் இன்னும் அவை ஆகுக-
தொன்முதிர் மரபின் நின் புகழினும் பலவே!
(பரிபாடல் 14 : 29-32)

செரு வேல் தானைச் செல்வ! நின் அடி உறை,
உரிதினின் உறை பதிச் சேர்ந்தாங்குப்
பிரியாது இருக்க-எம் சுற்றமோடு உடனே!
(பரிபாடல் 18 : 54-56)

பரிபாடலில் காணப்படும் இவ்வரிகளால் இத்தமிழரின் பக்தி வழியில் பொன், பொருள், போகம், இந்திரப் பெரும்பதம் ஆகிய எவற்றுக்கும் இடமில்லை என்பது நன்கு வெளிப்படும். இக்கொள்கைகள் நாளாவட்டத்தில் வளர்ந்து, ஆறு முதல் எட்டாம் நூற்றாண்டுகளில் பக்தி இயக்கப் பெரும்புயலாக மாறியது. முதல் எட்டுச் சைவத் திருமுறைகளும், நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்களும் தோன்றியது இக்காலகட்டத்தில்தான்.

பரிபாடலில் கண்ட இக்கருத்து குலசேகரப் பெருமானின் உள்ளத்தில் ஊறி, மூன்று பாடல்களில் வெளிவருவதைக் காணலாம்.

"ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்"
(நாலா. 678)

"கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேலிருந்து
இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்"
(நாலா. 681)

"வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ் மன்னவர்தம்
கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்"
(நாலா. 683)

இப்பாடல்களிலிருந்து பக்தி இயக்கத் தாக்கம் எட்டாம் நூற்றாண்டு அளவில் எத்தனை ஆழமாகப் பதிந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

இந்திரன், வருணன் முதலியவர்களை முன்னிட்டுப் பல வகையான வேள்விகளை இயற்றி, அவர்கள் பதத்தை அடைய வேண்டும் என்ற கருத்து ரிக்கு, யசுர் ஆகிய வேதங்களில் பரவலாகக் காணப்படுகிறது. அதன் மறுதலையாக இந்த இன்பங்கள் நிலைபேறுடையன அல்ல. எனவே நிலைபேறுடைய மாறுபாடில்லாத வீட்டின்பத்தையே பெரிதெனக் கருதிப் போற்றும் கருத்து தமிழகத்தில் தொன்றுதொட்டு இருந்துவந்திருக்கிறது என்பதை முன்னர்க் கண்டோம். அதே நேரத்தில் முழுமுதற் பொருளைப் பற்றி இத் தமிழர்கள் கொண்ட கருத்தையும் உபநிடதங்கள் கூறும் கருத்தையும் ஓரளவு இணைத்து விராதன் வதையிலும், சரபங்கன் பிறப்பு நீங்கு படலத்திலும் விரிவாகக் கம்பநாடன் பேசுகிறான். உபநிடதங்களின் தாக்கம் அவனை ஓரளவு பாதித்துள்ளது என்பதைப் பின்னர் யுத்த காண்டத்தில் வரும் இரணியன் வதைப் படலத்தில் 6249 முதல் 6264 வரையுள்ள 15 பாடல்களில் பரக்கக் காணலாம்.

அறிவுக்கும், கற்பனைக்கும், சொல்லுக்கும் கடந்து நிற்கும் ஒரு பொருளை எவ்வளவு முடியுமோ அவ்வளவு துல்லியமான முறையில் அப்பொருளின் இலக்கணத்தை விராதன், சரபங்கன் படலங்களில் கவிச்சக்கரவர்த்தி வைத்துக் காட்டுகிறான். ஆயிரம் வருடங்களாகப் பௌராணிகர்களும், தமிழ்ப் புலவர்களும் கம்பனைப் படித்து, சொற்பொழிவு செய்துவந்திருப்பினும் இந்தப் பகுதியில் அவர்கள் ஈடுபட்டார்கள் என்று கூற எவ்விதச் சான்றும் இல்லை. ஆனால், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கம்பனில்

ஈடுபட்டு அவனுடைய கடவுள் கொள்கையில் மனத்தைப் பறிகொடுத்த கவிச்சக்கரவர்த்தி பாரதி இப் பகுதியில் தன்னையே மறந்துவிடுகிறான். "தமிழச்சாதி" என்ற தலைப்புடன் முதலும் முடிவும் அழிந்துபோன நிலையில் உள்ள பாடலின் சிலவரிகள் கீழே தரப்பெற்றுள்ளன:

"எல்லை யொன் றின்மை" யெனும்பொரு ளதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும், முன்பு நான்தமிழச்
சாதியை யமரத் தன்மைவாய்ந்து வென்று'
உறுதி கொண் டிருந்தேன்."

(பாரதி - இருதலைக்கொள்ளி 24-28)

முன்னிரண்டு காண்டங்களைப் போல் அல்லாமல் ஆரணிய காண்டம் நம் கவனத்தை இழுத்துப்பிடித்து மேலே செல்ல ஓடாமல் தடுத்துவிடுகிறது.

மூன்றாவதாக உள்ள அகத்தியப் படலம் இராகவனுடைய வன வாழ்க்கையில் பத்தாண்டுகளை இரண்டொரு பாடல்களின்மூலம் நடத்திச்செல்கிறது. இராவணன் முதலியோருடன் தசரத குமாரன் போர் தொடுக்க வேண்டுமானால் அதற்கொரு காரணம் வேண்டும். இதுவரையில் அக்காரணம் வெளிப்படையாகப் பேசப்படவில்லை. அது மிக இன்றியமையாது தேவைப்படுதலின், கவிஞன் அகத்தியப் படலத்தில் அதற்குரிய நிலைக்களனை அமைக்கின்றான். பஞ்சவடியில் முனிவர்கள் பலரும் அரக்கரால் தாம் படும் துன்பத்தை விரிவாகக் கூறி 'அருளுடை வீர! நின் அபயம் யாம்' என்றார் (2646) என்று பேசவைக்கிறான் கம்பன். அபயம் என்று அடைந்தவர்களை எப்படியும் காப்பது என் கடனாகும் என்று பேசிய கார்வண்ண மேனியான், 'வேந்தன் வீயவும், யாய்துயர்மேவவும்' (2648) என்ற பாடலில் காட்டிற்கு வந்தது தான் செய்த புண்ணியம் என்று கூறுகிறான். அபயம் என்று வந்துவர்களைக் காப்பதுதான் அரசனாகப் பிறந்தவனின் தலையாய அறம் என்று கூறி, அரக்கர்களை அழித்துவிடுகிறேன் என்று உறுதி கூறுகிறான். இவ்வாறு தசரத குமாரன் உறுதி கூறும்பொழுது முனிவர்களின்

பகைவர்களாகிய இராவணாதியர் ஆற்றலை, தவவலிமையை அறிந்திருக்க வாய்ப்பில்லை. பகைவரைக் குறைத்து மதிக்கும் தவறு நேர்ந்துவிடாமல் காக்க ஒரு வாய்ப்பு வேண்டும். அதனைத்தான் அகத்தியன் செய்கின்றான். மந்திர வலிமை பெற்ற பேராற்றல் உடைய பல படைக்கலங்களை அகத்தியன் இராமனுக்குத் தருகிறான். அவற்றின் ஈடு இணையற்ற சிறப்பை (2685, 2686) அகத்தியன் கூறுவதாகக் கவிஞன் அமைக்கிறான்.

ஆரணிய காண்டத்தில் மூன்று படலங்களில் இரு பெரிய காரியத்தைக் கவிஞன் சாதித்துவிடுகிறான். தசரத குமாரனும் வைதேகி கணவனும் இலக்குவன் தமையனும் ஆகிய ஒருவனை எத்தகையவன் என்பதை நாம் அறியுமாறு முதலிரண்டு படலங்களில் காட்டிய கவிஞன், மூன்றாவதாகிய அகத்தியப் படலத்தில் பரம்பொருளே யாயினும் மானுட உருத் தாங்கி வந்தமையானும் வில்லெடுத்துப் போர் செய்ய வேண்டிய நிலையில் உள்ளதாலும், அதற்குரிய படைக்கலங்களை அகத்தியன் வழங்கினான் எனக் கூறிவிடுகிறான். இராவணவதத்திற்கு வேண்டிய அனைத்தும் தயாராக உள்ளன. அந்த வதம் நிகழ ஒரு காரணம் வேண்டியுள்ளது. அக்காரணத்தின் விரிவை எஞ்சியுள்ள படலங்களில் கவிஞன் விவரிக்க முற்படுகின்றான்.

ஆரணிய காண்டத்தில் நான்காவது படலமாக அமைந்துள்ளது சடாயு காண் படலம். பத்தாவதாக உள்ளது சடாயு உயிர் நீத்த படலம். உலக இலக்கியங்களில் விலங்குகளும், பறவைகளும் இடம் பெறுகின்றன என்றாலும், கம்ப நாடன் கற்பித்தது போன்று ஓர் அற்புதத்தை உலக இலக்கியங்களில் மட்டும் அல்லாமல் மூலநூலாகிய வான்மீகத்திலும் காண்டல் அரிதாகும். சடாயு என்ற பறவையை ஒப்பற்ற முறையில் உருவாக்கி, தன் உயிர் புகழ்க்கு விற்ற (5305) சடாயு என்று பேசுமாறு அப் பாத்திரத்தை அமைத்து விடுகிறான். தந்தையை இழந்து வருந்தும் இராகவன், தசரதனின் உயிர்த் தோழனாகிய சடாயுவைச் சிறிய தந்தையாகவே ஏற்றுக் கொள்கிறான்.

பிராட்டியின் அலறலைக் கேட்ட சடாயு, 'அஞ்சேல்' என்று கூறி மேலெழுந்து வந்து அவளைத் தூக்கிச் செல்லும்

பகைவன் இராவணன் என்பதை உடனே அறிந்து கொள்கிறான். பல்லாண்டு வாழ்ந்தவனாகிய சடாயு, இராவணன் யார் என்பதையும் அவனுடைய ஆற்றலையும் "முக்கோடி வாழ் நாளையும், பெருந்தவத்தையும் யாராலும் வெல்லப்படாய்" என்ற வரத்தையும் நன்கு அறிவன். இவற்றை அறிந்தும் துணை இலக்கணத்தை மனத்துட் கொண்ட சடாயு, இராவணனிடம் பெரும்போர் நிகழ்த்தி அவனுடைய தோர்க்கொடி, பத்துக் கிரீடங்கள் அவனுடைய வில், சாரதி, குதிரைகள் என்ற அனைத்தையும் வீழ்த்தினான் என்றால், அக்கழுகின் வேந்தன் செயற்கரும் செயல்கள் செய்து பெரியவன் ஆகிறான். சிவபெருமானிடம் பெற்ற சந்திரகாசம் என்ற வாளை இராவணன் பயன்படுத்தியிராவிட்டால், இராவணன் பிராட்டியை இலங்கைவரை கொண்டுசென்றிருப்பானா என்பது ஐயத்திற்குரியது. இத்துணைச் சிறப்புகளையும் ஒரு பறவைக்கு ஏற்றி, உலக இலக்கியங்களில் வேறு எங்கும் காணப்படாத நிலையில் அப்பாத்திரத்தைப் படைக்கிறான் கவிச் சக்கரவர்த்தி..

அச் சிறிய தந்தையும் மைந்தர்களைத் திருத்த வேண்டிய சூழ்நிலையில் கருணை காட்டாமல் கண்டித்துத் திருத்துமாறு ஒரு காட்சியை அமைத்துக் காட்டுகிறான். சினம் என்ற சொல்லுக்கே பொருள் தெரியாதவன் இராகவன். மிகக் கடுமையான இராம - இராவணப் போர்பற்றிக் கூறவந்த இராவணன் அப்போரின் இடை இராகவன் மன நிலையையும், முக பாவத்தையும் பின்வருமாறு கூறுகிறான்:

எறித்த போர் அரக்கர் ஆவி எண்
இலா வெள்ளம் எஞ்சப்
பறித்த போது, என்னை அந்தப்
பரிபவம் முதுகில் பற்றப்
பொறித்த போது, அன்னான் அந்தக்
கூனி கூன் போக உண்டை
தெரித்த போது ஒத்தது அன்றிச் சினம்
உண்மை தெரிந்தது இல்லை (7288)

இந்நிலையில்கூடச் சினம் கொள்ளா இராகவன் ஒரு முறை சினம் கொள்கிறான். பிராட்டியை இராவணன்

வஞ்சனையால் கவர்ந்து சென்றபொழுது அதனைப் பார்த்துக் கொண்டு வாளாவிருந்த மக்கள், தேவர்கள், ஓரறிவுடைய மரஞ் செடி கொடிகள் ஆகிய அனைவரிடத்திலும் சினம் கொண்டு 'இவர்களை அழித்துவிடுகிறேன்' என்று புறப்படுகிறான். காப்பவனாகிய அவன் (திருமால்) அழிப்பேன் என்று தொடங்கினால், யார் அவனைத் தடுக்க முடியும்? உலகமெல்லாம் கலக்கிமுடிக்கும் இலக்குவன் சினந்தால் இராகவன் அவன் சினத்தை மாற்றமுடியும். இராகவனே சினந்தால், அவனை மாற்றுபவர் யார்? இத்தகைய அற்புதமான சூழ்நிலையை உண்டாக்கி, கவிஞன் தான் படைத்த சடாயுவைப் பேசுமாறு செய்கிறான்.

இப்பொழுது இராகவன் கொண்ட சினம் நியாய மற்றது என்பதை நாம் அறிவோம். தசரதன் ஒருவனைத் தவிர இராகவனை யார் கண்டிக்க முடியும்? தசரதனோ இப்பொழுது இல்லை. எனவே, தந்தை செய்யவேண்டிய கடமையைச் சிறிய தந்தையாகிய சடாயு செய்கிறான்.

வம்பு இழை கொங்கை வஞ்சி வனத்திடைத் தமியள்
வைக,
கொம்பு இழை மானின் பின் போய், குலப் பழி கூட்டிக்
கொண்டீர்;
அம்பு இழை வரிவில் செங்கை ஐயன்மீர்! ஆயும் காலை,
உம் பிழை என்பது அல்லால், உலகம் செய் பிழையும்
உண்டோ? (3526)

இராகவன் சினத்தைப் பற்றிக் கவலைப்படாமல் சடாயு பேசத் தொடங்குகிறான். "மைந்தர்களே, அழகிய பெண் ஒருத்தியை எவ்விதக் காவலும் இன்றிக் காட்டில் விட்டு விட்டு, ஒரு மானைத் துரத்திக்கொண்டு சென்றதால் உங்கள் குலம் முழுவதற்கும் பழி தேடிக் கொண்டீர்கள். அவ்வாறு சென்றதற்கும் அதனால் விளைந்த விளைவுகட்கும் நீங்கள்தான் காரணம். நீங்கள் செய்த இப்பெரும் பிழையைத் தவிர உலகத்தார் செய்த பிழை வேறு என்ன இருக்க முடியும்?இதனைக் கேட்ட இராகவன் சினம் முற்றிலுமாக

அடங்கிவிட்டது. இராம காதை முழுவதிலும் இராகவனை தட்டிப் பேசி அடக்கியவன் சடாயு ஒருவனே ஆவான்.

இக் காண்டத்தின் ஐந்தாவது படலம் சூர்ப்பணகைப் படலம் ஆகும். இராவணன் தங்கையாகிய சூர்ப்பணகை வனத்திடைத் திரிந்து வேண்டுவன கொண்டு மனம் போன வழியில் வாழ்பவளாவாள். இராமனிடம் அவள் வரும்போது கொண்ட கோலமும் நடையும் இராம இலக்குவரை அல்லாமல் வேறு யாராக இருப்பினும் மயக்கும் தன்மை உடையவாகும். அவளைக் கண்டு இராமனே வியக்கின்றான் என்கிறான் கவிஞன். அத்தகைய ஒருத்தியைக் கவிஞன் அறிமுகப்படுத்தும் முறை வியப்பைத் தருவது ஒன்றாகும்.

நீல மா மணி நிற நிருதர் வேந்தனை
மூல நாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள்
மேலை நாள் உயிரொடும் பிறந்து, தான் விளை
காலம் ஓர்ந்து, உடன் உறை கடிய நோய் அனாள் (2739)

ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரோடி, மூன்று உலகங்களிலும் ஆட்சி செலுத்தும் நிருதர் வேந்தனாகிய இராவணனை அழிக்க அவன் தங்கையாகிய பெண்ணே வந்தாள் என்று கூறுவது வியப்பு. இத்துணைப் பேராற்றல் படைத்த ஒருவனை - அவனைமட்டு மல்லாமல் அவன் குலமுழுவதையும் - வேரும் வேரடி மண்ணும் அழிக்க ஒரு பெண்ணால் இயலுமா என்ற ஐயம் நம் மனத்துத் தோன்றுமானால், அதற்கு விடை கூறுபவன்போல், இவள் அதனைச் செய்வது உடல் வன்மையாலோ தவ பலத்தாலோ அல்லது வரத்தின் மேன்மையாலோ அல்ல என்று காட்ட வந்த கவிஞன், முடிக்கும் மொய்ம்பினாள்' என்ற ஒரு சொல்லால் விடை கூறுகிறான். மொய்ம்பு என்ற சொல்லுக்கு வலிமை என்பதே பொருளாயினும் இந்தச் சந்தர்ப்பம் நோக்கி மனவலிமை, அறிவு வலிமை, சூழ்ச்சி வலிமை என்று பொருள் கொள்ளவும் தகும். வடிவத்தால் பெண், உருவத்தால் சிறியோள் என்று எண்ணிட வேண்டா என்று நம்மை எச்சரிப்பதற்கு அற்புதமான உவமையைக் கையாள்கிறான். எண் சாண் உடம்பில் ஒரு சிறு உறுப்பின் உள்ளே மறைந்து ஒளிந்து காலம் நோக்கிக் காத்திருக்கும் ஒரு நோய், தக்க

காலம் வந்தவுடன் அவ்வுடலை அழிப்பது போல இவள் உள்ளாள் என்கிறான் கவிஞன்.

சூர்ப்பணகையைப் பொறுத்தவரை, இராமனது அழகில் ஈடுபட்டு அவனை அடைய விரும்பினாள். பிராட்டியைக் கண்டு திடுக்குற்றாள். இப்படியும் ஓர் அழகி இவ்வுலகிடை இருக்க முடியுமோ எனக் கருதினாள். இந்த நிலையில் பெண்களுக்கே உரிய ஒரு தருக்கத்தைத் தன்னுள் தோற்றுவித்துக்கொள்கிறாள்; மூன்று உலகங்களிலும் காணப்பெறாத இத்தகைய அழகி இராமன் மனைவியாய் இருப்பாளோ என்று ஐயுற்றறாள். இவள் இவன் மனைவியக இருப்பின், அவளைப் பெற்ற இராகவன் பிற பெண்களை ஏறெடுத்தும் பாரான் என்ற முடிவிற்கு வந்துவிட்டாள். இது நியாயமானதும் பொருத்தமானதும் ஆன வாதம் ஆகும். ஆனால், அவள் காம வெறி காரணமாகத் தான் கொண்ட இம் முடிவைப் புறத்தே ஒதுக்கிவிட வழி தேடுகிறாள். அம்முயற்சியின் பயனாக ஒரு குதர்க்க வாதம் அவள் மனத்தில் தோன்றுகிறது. இவ்வளவு அழகு உடையவள் மனைவியாக இருப்பின் எந்த ஒரு மனிதனும் காட்டுக்கு அழைத்து வந்து பர்ணசாலையில் குடியேற்றியிருக்க மாட்டான் (2790) என்பது அவளுடைய வாதம். இந்த முடிவிற்கு அவள் வர எந்த ஆதாரமும் இல்லை. இந்தத் தவறான முடிவிற்கு வந்தவுடன் அவள் மனம் இதற்கடுத்து ஒரு முடிவிற்கு வந்தவுடன் அவள் மனம் ஒரு விநோதமான முடிவிற்கு வருகின்றது. காட்டிலே மனைவியைக் கொண்டு வரமாட்டான் என்ற தவறான முடிவிற்கு வந்த பிறகு, அந்த தவற்றிலிருந்த பல தவறுகள் பிறக்கின்றன. காட்டிலுள்ள இவன் அவன் மனைவி அல்லள் என்றால், இவள் யார் என்ற வினா அடுத்து நிற்கிறது. அவள் தமையனாகிய இராவணனுடைய அத்தாணியில் அரம்பை, ஊர்வசி, திலோத்தமை ஆகிய அனைவரையும் இவள் பன்முறை கண்டிருக்கிறாள். இப்பெண்ணின் அழகு அவர்கள் ஒருவரிடமும் இல்லை. அப்படியானால் இவள் யார்? யாரென்பதை இவளால் யூகிக்க முடியவில்லை என்றாலும், மனைவி அல்லள் என்ற தவறான முடிவிற்கு அவள் ஏற்கனவே வந்துவிட்டமையின், அவள் யார் என்ற வினாவிற்கு

ஒரேயொரு விடைதான் மிஞ்சுகிறது. இவளும் தன்னைப்போல இடையே வந்த ஒருத்தியாகும் என்ற கருத்தில் 'என்னைப் போல இடையே வந்தாள்' (2793) என்ற முடிவிற்கு வந்துவிட்டாள். இந்த முடிவிற்கு வந்த பிறகு தன்னுடைய பணி சுலபமானது என்று கருதுகிறாள். இவளும் இடையில் வந்தவள். இருவரும் சமநிலையும் உரிமையும் பெற்றுள்ளதால் முதலில் இடையே வந்த அவளை விட்டுவிட்டு இந்த அழகன் என்னை ஏன் விரும்பக்கூடாது என்ற ஆராய்ச்சி அவள் மனத்தில் பிறக்கின்றது. அவளது மனத்தில் தோன்றிய வாதம் முழுவதும் தவறான அடிப்படையில் தோன்றியதாகும். 'ஒருவேளை மனைவியாக இருப்பாளோ' என்ற ஐயம் அவள் மனத்தில் ஏன் வலுப் பெறவில்லை? மனைவியாக இருப்பின் பிற மாதரை ஏறெடுத்தும் பார்க்க மாட்டான். இந்த ஐயமும் இதன் விடையும் அவள் மனத்தில் கால் கொள்ளாதது ஏன்? நடுவுநிலைமையோடு சிந்தித்திருப்பின், இந்த வினாவும் விடையும் அவள் மனத்தில் கால்கொண்டு இருக்கும். இத்தனை வாதங்களையும் மீறி இராகவன்மீது கொண்ட காமவெறி அவள் அறிவை மயக்குகிறது. அண்ணன் தங்கை இருவரும் காமவெறிக்கு ஆளாகும்போது எந்தத் தர்க்கத்தையும் எந்த விவாதத்தையும் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை.

இலக்குவனிடம் மூக்கறுபட்ட நிலையில் 'உங்களை மாய்ப்பதற்குக் காலனைக் கொண்டுவருகிறேன்' என்று கூறிவிட்டுக் கரன் முதலானவர்களிடம் செல்கிறாள். இந்த வினாடி வரை தன் காமவெறியைத் தணித்துக்கொள்வதற்கு வழி தேடினாளே தவிர, இராமனுடன் தங்கியுள்ள பிராட்டியை இராவணனிடம் கொண்டு செல்லவேண்டு மென்ற எத்தகைய எண்ணமும் இல்லை. தன் காமவெறி நிறைவேறாத போது, தன் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே மிகுந்திருந்தது.

கரனிடம் சென்று, 'எனக்குத் துயரிழைத்த இருவரையும் அழிக்க வேண்டும் வா' என அரற்றினாள். 'இந்நிலையில் உன்னை இவ்வாறு செய்ய நீ அவருக்கு என்ன பிழை செய்தாய்' என்று அவன் கேட்காமலேயே சந்தர்ப்பத்திற்கேற்பப் பல பொய்களை அடுக்குகிறாள்.

நிருதர்களை அழிக்கவே தசரதன் புதல்வராகிய இருவர் வந்தனர் என்று (2878) கூறியது உண்மையானது ஆகும். இதனை முதலில் கூறுவதன் நோக்கம் 'உங்கள் குலத்தை அழிக்க விரதம் பூண்டவனை நீ அழிக்கப் புறப்படுக' என்று கூறுவதாகும். இந்நிலையில் கரன் உடனே புறப்பட்டிருந்தால் அடுத்து ஒரு பொய்யைச் சொல்லத் தேவை ஏற்பட்டிருக்காது. தலைவனாகிய இராவணனிடம் கொண்டு சேர்ப்பதற்குரிய ஒரு பரிசுப் பொருளை (அழகே வடிவான பிராட்டியை)த் தூக்கிக் கொண்டு மேலெழுந்தேன்: அவர்கள் என்னை இவ்வாறு செய்துவிட்டார்கள் என்ற இந்தச் சமயோசிதமான கரனைத் துடித்தெழச் செய்தது. இராமன்மாட்டுத் தான் கொண்ட காமவெறியால் நிகழ்ந்தது என்பதை முழுவதுமாக மறைத்துத் தன்னுடைய அண்ணனுக்குச் சிறந்த பரிசுப் தரப் புறப்பட்டதாகக் என்று கூறி முடிக்கிறாள்.

இதனைக் கேட்ட கரன், 'இவள் எத்தகைய பிழையும் செய்யவில்லை. 'மையின் மதியின் விளக்கு முகத்தாரை வெளவிக் கொளலும் அறன்' (குறிஞ்சிக்கலி) என்ற முடிவில் கரன் போருக்குப் புறப்பட்டுவிட்டான். இந்த நிலைவரை சூர்ப்பணகைக்கு எவ்விதச் சூழ்ச்சியும் மனத்தில் தோன்றவில்லை. தன்னை அவமானப்படுத்தியவர்களைப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணமே அவளிடம் இருந்தது.

அடுத்துள்ள படலம் கரன் வதைப் படலமாகும். மூன்று நாழிகையில் முடிந்த போரை ஏறத்தாழ 192 பாடல்களில் கவிஞன் சொல்லக் காரணமென்ன என்ற வினாவை எழுப்பி இக்கட்டுரையின் முற்பகுதியில் விடை கண்டுள்ளோம். காப்பியத்தில் ஏறத் தாழச் சரி பாதி இடம் கொள்ளும் யுத்த காண்டம் பாட, வரையப்பட்ட வரைபடமாகும் இது என்று கூறினோம்.

சிலப்பதிகாரம், உதயணன் கதை, சீவக சிந்தாமணி இவை அனைத்திலும் அங்கங்கே போர் பற்றிய பகுதி இடம் பெறுகிறது. செங்குட்டுவன் போரைப்பற்றிப் பாடவந்த அடிகள், அதில் அதிகக் கவனம் செலுத்தவில்லை. முன்னும் பின்னும் கிடைக்காத உதயணன் கதையில் இதைப் பெரிதாகப் பாடினாரா என்பதை அறிய வாய்ப்பில்லை.

தேவர் பாடிய சிந்தாமணியில் போருக்கு நிரம்பச் சந்தர்ப்பம் உண்டென்றாலும் சச்சந்தன் செய்த போரையோ, இறுதியில் சீவகன் செய்த போரையோ தேவர் விரிவாகப் பாடவில்லை. அன்பு நெறி, உயிர்கள்மாட்டு இரக்கம், துறவு, தவம் ஆகியவற்றிற்கே முதலிடம் தரும் சமண சமயத்தின் ஈடு இணையற்ற காப்பியமாகிய சிந்தாமணியில் போர் பற்றி விரிவாகப் பாடத் தேவர் பெருமான் விரும்பவில்லை. பின்னே வருகின்ற பெரிய புராணத்திலும் இதற்கு வாய்ப்பே இல்லை. எஞ்சியுள்ளது கம்பனது இராமகாதைதான். தனக்கு முன்னும் பின்னும் எந்தக் காப்பியத்திலும் காணப்பெறாத போர் பற்றிப் பாடுவதற்கு இக் கவிச்சக்கரவர்த்திக்குத் தமிழிலக்கியத்தில் முன்னோடி யாருமில்லை. முதல் நூலாகிய வான்மீகத்தில் இது விரிவாக உள்ளது. எனவே, கம்பநாடன் அரிதின் முயன்று ஒரு காண்டம் முழுவதும் போர் பற்றிப் பாட முடிவு செய்துவிட்டான்.

அக்காலத்தில் போர்கள் இரண்டு வகையாகச் செய்யப்பெற்றன. முதலாவது வகை, பகை என்றவுடன் தன்வலி, துணை வலி ஆகிய அனைத்தையும், ஒன்று திரட்டி முழுமூச்சாகச் சென்று போரிடுவதாகும். இரண்டாவது வகை, போர் என்று வந்தவுடன் அமைச்சர்கள், அறிஞர்கள், ஆகியோரைக் கூட்டித் தன்வலி, துணைவலி என்பவற்றோடு மாற்றான் வலிமையையும் ஒப்பிட்டு எவ்விடத்தில் ,எப்பொழுது, எவ்வாறு போர்புரிய வேண்டும் - பகை தம்மைத் தாக்குகின்றவரை பொறுத்துப் போரிடுவதா அல்லது பகை மேற்சென்று போரிடுவதா என்றெல்லாம் தக்காரோடு கூடி ஆய்ந்து பின்னர்ப் போரிடுவதாகும்.

கம்பநாடனைப் பொறுத்தவரை இந்த இருவகையையும் கையாள்கிறான். கர தூடணர் போர் முதல் வகையைச் சேர்ந்தது. இராவணனது போர் இரண்டாவது வகையைச் சார்ந்தது ஆகும். சூர்ப்பணகை சொல்லியவுடன் பகைவர் யார் எவர் என்ற ஆராய்ச்சியில் ஈடுபடாமல், படை முழுவதையும் ஒருசேரத் திரட்டிக் கொண்டு சென்று போர் தொடங்க ஆயத்தமானான். படைத்தலைவர் தூடணன், திரிசிரா ஆகியோர் ஒருவர் பின் ஒருவராகச் சென்று மடிய

,இறுதியில் கரன் போரிட்டு மாள்கிறான். இந்தப் போரில் தன்னை அனுப்புமாறு இலக்குவன் பல முறை வேண்டியும் அதனை மறுத்து இராகவன் தானே போரிடுகிறான். இலக்குவன் ஒருவனே இதனைச் செய்து முடிப்பான் என்பதை அறிந்திருந்தும் இராமன் அவனுக்கு இடங்கொடாமல் தானே போருக்குப் புறப்படுவது ஏன் என்பது வெளிப்படையாகத் தெரியவில்லை. அரக்கர்களை அழிக்க வேண்டும் என்பது இராகவனுடைய குறிக்கோளாக நிலைபெற்றுவிட்ட நிலையில் அரக்கர்களின் வன்மை எத்தகையது, வர பலம் எத்தகையது, போராற்றல் எத்தகையது என்பதை அறிந்துகொள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள இராகவன் துணிந்திருக்க வேண்டும். அதனால்தான் தம்பியை நிறுத்தி, தானே புறப்பட்டான்போலும், இவ்வாறு நினைப்பது சரியே என்பதற்கு ஒரு காரணமும் உண்டு. கரனுடன் போர் செய்கையில் அம்புமாரியால் இராமனையே மறைத்துவிடுகிறான். வெகுண்டெழுந்த இராமன் வில்லை வளைக்க அது முறிந்துவிடுகிறது. அரக்கருடன் போர் செய்தால் அது எத்தகையதாக இருக்கும் என்பதைக் கவிஞன் இங்கே கோடிட்டுக் காட்டுகிறான். கரன் வதைப் படலம் பின்னர் வரப்போகும் யுத்த காண்டத்திற்கு முன்னுரையாக அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

அடுத்து வருவது சூர்ப்பணகை சூழ்ச்சிப் படலமாகும். சூர்ப்பணகை, கரன் முதலியோர் இவ்வளவு விரைவில் மடிவர் என்பதைச் சற்றும் அவள் எதிர்பார்க்கவில்லை. இப்பொழுது அவள் மூளை வெகுவிரைவாகப் பணிபுரிகிறது. இராவணனிடம் சென்று முறையிட்டு இராமனுடன் அவனைப் போர் செய்யுமாறு தூண்டிப் பழி தீர்த்துக் கொள்ள முடிவு செய்கிறாள். இராவணனைப் பற்றி நன்கு அறிவாள். அறுபட்ட மூக்கைப் பார்த்துக் கரன் புறப்பட்டது போல அறிவில் மேம்பட்டவனாகிய இராவணன் புறப்பட மாட்டான். அவனைப் புறப்படச் செய்ய வேண்டுமானால் அவனுக்கு ஏதாவது நன்மை உண்டு என்று காட்டினால் ஒழியத் தங்கையின் அவமானத்தை ஒழிப்பதற்காகமட்டும் அவன் புறப்படமாட்டான் என்பதை நன்கு அறிந்து

கொண்டாள். ஒருவன் இவ்வுலகில் பெற விரும்பும் பேறுகள் அனைத்தையும் பெற்று வாழ்பவன் இராவணன். அவனுடைய ஆசையைத் தூண்டுவது என்பது அவ்வளவு எளிதான காரியம் அன்று. கூர்மையான அறிவு படைத்தவளாகிய சூர்ப்பணகை அண்ணனுடைய வாழ்வின் நொய்ம்மையான பகுதி (weak spot) எது என்பதை நன்கு அறிந்திருந்தாள். காமவெறி என்பதே அண்ணன் தங்கை இருவருக்கும் பொதுச் சொத்து. எனவே, அதனைக் கருவியாகக் கொண்டு இராவணனைத் தூண்டிவிட வேண்டும் என்ற முடிவிற்கு வந்தாள். அந்த முடிவுடன் இலங்கை சென்ற அவள், எடுத்த எடுப்பிலேயே சீதையைப் பற்றிச் சொன்னால், அவன் ஆசை தூண்டப் படுமோ படாதோ என்று சந்தேகிக்கிறாள். அதற்காக அவள் கையாளும் சூழ்ச்சி மிக அற்புதமானது.

அண்ணனிடம் சென்று இழந்த மூக்கைக் காட்டினாள். சற்றும் அலட்டிக்கொள்ளாமல் இலங்கையர் கோன் 'யாவர் செயல்' *(3115)* என்றான். 'மானிடர் துடிந்தனர்கள் வாள் உருவி என்றாள்' *(3116)* விடையாக இராவணன் அதை நம்பத் தயாராக இல்லை. இவ்வளவு பெரிய அவமானம் கேவலம் இரண்டு மனிதர்களால் நடந்துவிட்டது என்பதை அறிந்தும் இராவணன் கொதித்தெழவில்லை. கர தூடணர்களிடம் ஏன் உதவிக்குச் செல்லவில்லை என்ற வினாவைத் தங்கையிடம் கேட்கிறான். ஒரே வரியில், 'வில் ஒன்றில் கடிகை மூன்றில் ஏறினர் விண்ணில்' என்றாள். *(3130)* இந்த விடை இராவணனை ஆழ்ந்த சிந்தனையுள் செலுத்திவிட்டது. கரன் முதலியோரையும் அவர்களுடைய ஆற்றலையும் நன்கு அறிந்தவன் இராவணன். அப்படியிருக்க மூன்று நாழிகையில் இரண்டே மனிதர்கள் கரன் முதலிய அனைவரையும் விண்ணில் ஏற்றினர் என்றால், இது நம்பக் கூடியதாக இல்லை. ஆனாலும், இதனை நேரில் பார்த்த தங்கை இதற்குச் சான்று பகர்கின்றாள். எனவே, இது மறுக்க முடியாத உண்மை யாகும். பகைவர் களாகிய இந்த இருவர் யார், எத்தகைய ஆற்றல் உடையவர்கள், மனிதர்களில் இத்தகையோர் இருக்க முடியுமா?, இவர்களை எப்படிச் சந்திப்பது, சமாளிப்பது என்ற நீண்ட யோசனையில் மூழ்கிய

இராவணன், 'இவ்வளவு ஆற்றல் உடையவர்கள் யாதொரு காரணமுமின்றி ஒரு பெண்ணுக்கு இத்தகைய தீங்கு இழைத்திருக்க மாட்டார்கள். அந்தக் காரணத்தை அறிய வேண்டும்'என்றஎண்ணத்தினால்தான், இராவணேசுவரனாகிய தன்னுடைய தங்கையை மானுடர் இருவர் மூக்கரிந்தார் என்றால், "அவர்களிடையே நீ செய்த குற்றம் யாது" (3132) என்று வினவினான். இத்தகைய தண்டனை கிடைக்கவேண்டுமானால் அதற்குரிய குற்றத்தைத் தன் தங்கை இழைத்திருப்பாள் என்று கருதினான் இராவணன். இதுவரை ஒரு சிறந்த அரசன் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படியே நடந்துகொள்கிறான் இராவணன். 'நீ இழைத்த குற்றம் யாது' என்ற வினாவைச் சூர்ப்பணகை எதிர்நோக்கியிருந்தாள்.

உடனே பதின்மூன்று பாடல்களில் சீதையைப் பாதாதிகேசமாக வருணித்து இராவணன் மனத்தில் காமவெறி காட்டுத் தீப்போல் பரவ வழி செய்துவிட்டு, இறுதியாக,

> "அன்னவள் தன்னை நின்பால் உய்ப்பல் என்று அணுகலுற்ற
> என்னை அவ் இராமன் தம்பி இடைப் புகுந்து, இலங்கு வாளால்
> முன்னை மூக்கு அரிந்து விட்டான் முடிந்தது என் வாழ்வும் உன்னின்
> சொன்ன பின் உயிரை நீப்பான் துணிந்தனென் என்னச் சொன்னாள். (3147)

என்று கூறுவதன் மூலம் தன் எண்ணத்தை முடித்துக்கொண்டு விட்டாள். இனி எவ்விதத் தூண்டுதலும் இல்லாமல் இராவணன் சீதையைக் கவர்வதும், இராமனுடன் போர் புரிவதும் நடைபெறும் என்று எதிர்பார்த்தாள்.

கரனைப் போல இராவணன் முன்யோசனை இல்லாமல் எதனையும் செய்யத் தொடங்கமாட்டான் என்பதை அவள் நன்கு அறிந்திருந்தாலும் இராவணன் சூழ்ச்சி எந்தத் திசையில் செல்லும் என்பதை அவள் அறிய முடியவில்லை. தங்கை மூக்கினை அரிந்து அரக்கர் குலத்திற்கு

அவமானம் இழைத்தவர்களை அழிப்பதா அல்லது தங்கையால் புகழப்பெற்ற அப்பெண்ணைக் கவர்வதா - எது முதலில் செய்யப்படவேண்டியது என்ற வினாவிற்கு இராவணன் விடை காணமுடியால் தவிக்கிறான். குலமானம், காமவெறி என்ற இரண்டின் இடையே;நடந்த போட்டியில் காமவெறி வென்றுவிட்டது.

இந்நிலையில் இராவணன் மனத்தில் சீதையைக் கவர்ந்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் வேரூன்றிவிட்டது. அவனுடைய மனநிலையை,

> கரனையும் மறந்தான்; தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
> உரனையும் மறந்தான்: உற்ற பழியையும் மறந்தான்: வெற்றி
> அரனையும் கொண்ட காமன் அம்பினால், முன்னைப் பெற்ற
> வரனையும் மறந்தான்: கேட்ட மங்கையை மறந்திலாதான் (3149)

என்ற பாடலால் கவிஞன் அற்புதமாக விளக்குகிறான்.

இந்த நிலையில் கேவலம் இரண்டு மனிதர்களை மட்டும் காவலாகக் கொண்டுள்ள அப்பெண்ணை (சீதையை) சென்று கவர வேண்டியதுதானே? அதை ஏன் இராவணன் செய்யவில்லை? அதற்கொரு தக்க காரணமும் உண்டு. 'ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தவன்'(6118) ஆகிய இராவணன் தங்கையிடம் கேள்விப்பட்ட செய்திகளில் ஒரு செய்தி அவனுடைய மனத்தை மிகவும் கலக்கிவிட்டது. கரன் முதலியோரின் பலத்தை நன்கு அறிந்த இராவணன், அவர்கள் அனைவரும் அம்மானுடர் இருவரில் ஒருவனாலேயே வெல்லப்பட்டனர் என்றால், இத்தகையதொரு அதிசயத்தை இதுவரை அவன் கேள்விப் பட்டதில்லை; கற்பனைகூடச் செய்துபார்த்தது இல்லை. அத்தகைய இருவரின் காவலிலுள்ள ஒருத்தியைக் கவரவேண்டுமானால் தன் ஆற்றலைப் பயன்படுத்திப் போரிட்டுக் கவர்வது என்பது இயலக் கூடிய காரியமா என்ற ஐயம் அவனுடைய ஆழ்மனத்தில் நிலைபெறத்

தொடங்கிவிட்டது. இந்த நிலையில் அமைச்சர்களை அழைத்துப் பேசுகிறான் இராவணன். என்ன பேசுகிறான் என்று கவிஞன் கூறவில்லை. என்றாலும், அந்த ஆலோசனையின்போது அவன் மனம் குழம்பியிருந்தது. அவன் அறிவில் தெளிவில்லை என்பதை மட்டும் "சிந்தையில் நினைந்த செய்யும் செய்கையன், தெளிவுஇல் நெஞ்சன்" (3236) என்று கவிஞன் கூறுகிறான்.

தெளிவில்லாத அறிவோடும் குழம்பிய மனத்தோடும் இராவணன் செய்த முடிவுதான் மாரீசனைத் துணைக்கு அழைக்கின்ற செயலாகும். மாரீசனிடம் சென்ற இராவணன் தன் குலத்திற்கும் தங்கைக்கும் ஏற்பட்ட அவமானத்தை இரண்டு பாடல்களில் கூறி, 'அப்பழிமொழியைத் துடைக்க இராமனின் மனையிவியக் கவரவேண்டும். அதற்கு நீ துணை செய்க' என்கிறான். மாரீசன் இதனை ஏற்கவில்லை, பழி துடைக்கப் போர் செய்வது வேறு, ஆனால் ஒருவன் மனைவியைக் கவர்வதனால் குலத்திற்கேற்பட்ட பழியை எவ்வாறு துடைக்க முடியும்? பிறர்மனை நயந்த பழியும் அல்லவா உடன் சேரும் என்று பலபடியாகக் கூறுகிறான். கர தூடணர் வதையால் தன் ஆழ்மனத்தில் ஏற்பட்ட கலக்கத்தை வெளிக் காட்டிக்கொள்ளாத இராவணன், இழித்தவர்களாகிய மானுடருடன் போரிடுவது என்பது தனக்கும் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த தன் கைகளுக்கும் அவமானம் என்று பேசுகிறான். இறுதியாக மாரீசன் பொன் மானாக வடிவெடுத்துச் செல்கிறான்.

அடுத்துள்ள இராவணன் சூழ்ச்சிப் படலத்தில் தற்பெருமையும் அதங்காரமும் உடையவர்கள் எளிதில் தம்மைக் காட்டிக்கொள்வர் என்ற கருத்துப் பேசப்படுகிறது. துறவி வேடத்தில் பிராட்டியை அணுகிய இராவணன் மிக நல்லவன்போல் நடித்துப் பேசுகிறான். துறவி என்று நினைத்து அப்பேதைப் பெண் அரக்கர்களைப்பற்றி இழிவாகப் பேசுகிறாள். துறவி வேடத்தில் இருக்கும் ஒருவன் அப்பேச்சைக் கேட்டுக்கொண்டு, கண்டும் காணாமல் இருந்திருத்தல் வேண்டும். தற்பெருமையும், அகங்காரமும் கொண்ட இராவணன் தன்னை இன்னான் என்று காட்டிக்

கொள்கிறான். இப்படலத்தின் பெயர் இராவணன் சூழ்ச்சிப் படலம் என்று இருந்தாலும், இராவணனுடைய உண்மையை சூழ்ச்சி மாரீசன் வதைப் படலத்தோடு முடிந்துவிடுகிறது.

அடுத்து வரும் சடாயு உயிர் நீத்த படலத்தில், சடாயு தந்தையின் இடத்தில் இருந்த மைந்தனாகிய இராமன் சினத்தைத் தணித்தது மிகச் சிறந்த பகுதியாகும். பிராட்டியைக் கொண்டு சென்றவன் யார் என்பதைக் கூறுவதற்கு முன்னர் அவன் ஆவி பிரிந்துவிடுகிறது. 'அபயம்' என்று கூவி அழுத ஓர் அபலைப் பெண்ணுக்காக மாபெரும் தலைவனுடன் போரிட்டு உயிர் நீத்த காரணத்தால் பரம்பொருளின் கைகளால் நீர்க்கடன் பெறுகின்ற வாய்ப்பைப் பெறுகின்றான், சடாயு. பெற்று வளர்த்த தந்தையாகிய தசரதனுக்கு, தந்தை உரிமைபற்றிக் கிடைக்க வேண்டிய இந்தச் சிறப்புக் கிடைக்கவில்லை. அதுமட்டு மல்ல, " எண்ண அரிய குணத்தாலும் எழிலாலும் இவ் இருந்த வள்ளலையே அனைய்" (657) பரதனாலும்கூட நீர்க்கடன் பெறவில்லை தசரதன் என்பதை நினைக்கும்பொழுது, "வகுத்தான் வகுத்த வகையல்லால்" என்ற குறள் நினைவிற்கு வருகின்றது. இராம காதையில் இராமாவதாரம் எடுத்த பரம்பொருளின் கையினால் நீர்க்கடன் செய்யப்பெறும் பேறும் தந்தை முதலாகிய எந்த மனிதருக்கும் கிட்டவில்லை; எங்கோ காட்டில் வாழ்ந்த பறவைக்குக் கிடைத்தது என்றால், இறைவனுடைய கருணை எங்கு, எப்பொழுது, யாரிடம் பாய்கிறது என்பதைச் சொல்லமுடியாது என்பதை அறிந்துகொள்கிறோம்.

அடுத்துள்ள அயோமுகிப் படலத்தில் இலக்குவனுடைய பண்பாட்டின் சிறப்பை அறிய ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. விசுவாமித்திரனுடைய ஆணையைச் சிரமேற் கொண்டு தாடகைமேல் அம்பு செலுத்தி அவளைக் கொன்றான் இராகவன். இப்பொழுது அயோமுகி என்ற பெண் அரக்கியைக் கொல்லாமல் மூக்கரிந்து அவளிடமிருந்து தன்னை விடுவித்துக்கொள்கிறான் இலக்குவன். அவள் அரற்றிய சத்தத்தைக் கேட்ட இராகவன், பின் தன் தம்பியிடம் 'நிகழ்ந்தது யாது' என்று கேட்கிறான். அடுத்துப் "போர்வல்

அரக்கியைக் கொன்றிலை போலுமால்" (3630) என்று இராகவன் கேட்க,

துளைபடு மூக்கொடு செவி துமித்து உக,
வளை எயிறு இதழொடு அரிந்து, மாற்றிய
அளவையில், பூசலிட்டு அரற்றினாள்'. (3631)

என்று விடையிறுத்தான். இங்கே இளையவன் இரு கை கூப்பியதற்கு ஒரு காரணம் உண்டு. 'கொன்றிலை போலுமால்' என்ற அண்ணன் வினாவிற்குத் தம்பி விடையிறுக்கத் துணியவில்லை. உண்மையான விடையைக் கூறுவதாக இருப்பின் அரக்கியேயாயினும் அவள் பெண் என்றகாரணத்தால் கொல்லாமல் விட்டு விட்டேன் என்று கூறியிருக்க வேண்டும். அப்படிக் கூறியிருப்பின் தாடகை வதம் செய்த அண்ணனைச் சுட்டிக் காட்டுவது போல் இருக்கும். தான் வழிபடும் தெய்வமாகிய இராகவன் எதிரே அதனைச் சொல்லத் துணியாமல் 'அன்பு கூர்ந்து' மேலே ஒன்றும் கேட்க வேண்டாம்' என்று கூறுபவன் போல இளையவன் இரு கை கூப்பினான். தம்பியின் பண்பாட்டினை அறிந்துகொண்டு பெரு மகிழ்வுற்ற இராகவன் அவனை இறுகத் தழுவிக் கொண்டு 'மனுநெறி தவறாதவனே' என்று வாழ்த்துகிறான். இதனைக்கூற வந்த கவிஞன் மிக அற்புதமாக, அண்ணன் தம்பி இருவரிடையே நடைபெற்ற நாடகத்தையே பின்வரும் பாடலில் காட்டுகிறான்.

" தொல் இருள், தனைக் கொலத் தொடர்கின்றாளையும்
கொல்லலை; நாசியைக் கொய்து நீக்கினாய்:
வல்லை நீ; மனு முதல் மரபினோய்! என,
புல்லினன்- உவகையின் பொருமி விம்முவான்" (3632)

அடுத்து வருவது கவந்தன் படலமாகும். இதுவரை கண்ட பகுதிகளில் இராம இலக்குவர்கள் தனித்தனியே போரிட்ட நிகழ்ச்சியைக் கண்டோம். தமையன் தம்பி இருவரும் 'கூட்டு ஒருவரையும் வேண்டாத கொற்றவர்கள்' என்பது உண்மைதான். என்றாலும், பின்னே நிகழப்போகும் பெரும்போரில் இருவரும் சேர்ந்து பணியாற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகப் போகிறது. எனவே, இருவரும் ஒன்றாக

இணைந்து ஒருமுகமாகப் (co-ordinated action) பணிசெய்ய வேண்டிய சூழ்நிலைக்குக் கவந்தன் வதை முன்னோடியாகும். சகோதரர்கள் இருவரும் மாபெரும் வடிவுடைய கவந்தனின் தோள்கள்மேல் ஒரே நேரத்தில் ஏறி, ஒரே நேரத்தில் அவனுடைய இருதோள்களையும் வெட்டி வீழ்த்துகின்றனர். இதற்கு அப்பாலும் இப்படலத்தில் ஒரு சிறப்பு உண்டு. இப்படியே பெண்ணைத் தேடிக்கொண்டு இருவரும் சென்றால், கிட்கிந்தையைக் கடக்க நேரிடும். வாலி இவர்களைச் சந்தித்தால் அவதார நோக்கம் நிறைவேறாமல் போய்விடும். எனவே, கந்தருவ வடிவில் தோன்றிய கவந்தன், இரலைக் குன்றில் அஞ்சி வாழும் சுக்கிரீவனிடம் செல்லுமாறு வழி கூறுகிறான். அன்றியும், இடையே மதங் காசிரமத்தில் சவரியைப் பற்றியும் கூறி, அவளைச் சென்று சந்திக்குமாறு பரிந்துரை செய்கிறான். இவன் இவ்வாறு கூறும்பொழுது சகோதரர்கள் பெருமை அறியாது குரங்குப் படைகளை உதவிக்கு அழைத்துக்கொள்ளப் பரிந்துரை செய்தான் என்று யாரும் நினைத்துவிடக் கூடாது. இதனை மனத்துட் கொண்ட கவந்தன் ஐயனே! உனக்கு எவ்விதத் துணையும் தேவையில்லை, என்றாலும், ஒன்று கேள். 'திரிபுரம் எரிந்த விரிசடைக் கடவுள் தன் கணங்களையெல்லாம் படைகளாக்கி அழைத்துச் சென்றான்' என்று எடுத்துக் காட்டிக் கூறுவதில் ஒரு நயம் உள்ளளது. மேருவை வில்லாகவும் உலகைத் தேராகவும், கணங்களைப் படைகளாகவும் கொண்டு சென்றான். எனினும் இவற்றுள் ஒன்றின் உதவி கூட இல்லாமல் திரிபுர சம்ஹாரம் செய்தான். இந்த உதாரணத்தினால் 'குரங்குப் படைகள் உடனிருப்பது உன்னைக் காப்பதற்கல்ல. நீ ஒருவனே இராவண வதம் செய்யப்போகின்றாய், என்றாலும், அப்படை உடனிருப்பது பொருத்தமானதாகும்' என்ற கருத்து கவந்தன் சொற்களில் வெளிப்படுகிறது.

அடுத்துள்ள சவரிப் படல்ம், சவரி பிறப்பு நீங்கு படலம் எனப் பெயர் பெறும். சரபங்கன், சவரி என்ற இருவரையும் இராகவன் தானே தேடிச் செல்கிறான். ஞானியாகிய சரபங்கனும், கல்வி அறிவின்றேனும் ஒப்பற்ற பக்தையாகிய

சவரியும் திருவடி தரிசனம் பெற்ற பிறகு பிறப்பு நீங்குகின்றனர். அறிவின் துணை கொண்டு ஞானம் அடைந்த சரபங்கனும், உணர்வின் துணை கொண்டு பக்தையாக மாறிய சவரியும் ஒரே வீடுபேற்றை அடைகின்றனர். இது, இத்தமிழ் நாட்டின் தனிப்பெருங் கொள்கையாகும்.

கவந்தன், சவரி இருவரும் சகோதரர்களைச் சுக்கிரீவனிடம் போகுமாறு பரிந்துரை செய்ததில் ஒரு நுணுக்கம் இருப்பதை அறிய வேண்டும். பிறன்மனை நயந்தவனாகிய இலங்கை வேந்தனைத் தண்டிக்கப்போகின்ற இராகவன், அதே குற்றத்தைச் செய்த வாலியைச் சந்திக்கவோ, நட்புக் கொள்ளவோ கூடாது. கிட்கிந்தைச் சமுதாயத்தை முன்பின் அறியாத இச்சகோதரர் வாலியைச் சந்திக்க நேர்ந்தால் அவன் அந்தரங்க வாழ்க்கையின் ரகசியம் தெரியாமல் அவனிடம் நட்புச் செய்யலாம். வாலியின் வாலுக்குக் கட்டுப்பட்டவன் இராவணன். ஆதலின் போர் நிகழாமலேயே சீதை விடுவிக்கப்படலாம். இவற்றையெல்லாம் உள்ளடக்கித்தான் சுக்கிரீவனிடம் செல்லுமாறு கவந்தனும் சவரியும் பரிந்துரை செய்கின்றனர்.

ஆரணிய காண்டத்தின் பதின்மூன்று படலங்களில் முதற் படலமாகிய விராதன் வதையும் பன்னிரண்டாவது படலமாகிய கவந்தன் வதைப் படலமும் குற்றத்தைச் செய்து தண்டனை அனுபவித்தவர்க்கு விடுதலை நல்கியதைக் காட்டும். ஒரு பிறப்பிலிருந்து மற்றோர் உயர்ந்த பிறப்பிற்கு இராகவன் இவர்களை அனுப்பியதைக் காட்டும். இரண்டாவது, பதின்மூன்றாவது படலங்கள் ஞானம், பக்தி ஆகியவைகளில் முதிர்ந்து நிற்பவர்களுக்கு இறையருள் தேடி வந்து வீடு நல்கும் என்று அறிவுறுத்தும், பகுதிகளாகும்.

காப்பிய வளர்ச்சிக்கு மிக முக்கியமான இரண்டாவது திருப்பு மையத்தைத் தன்னிடையே கொண்டு விளங்குவது ஆரணிய காண்டமாகும். உலகத்தில் காட்டுப் பகுதியாயினும், நாட்டுப் பகுதியாயினும் நல்லவர், அல்லவர் இருவருமே வாழ்கின்றனர். இந்த இரு கூட்டத்தாரிடையேயும் ஒரு சமநிலை இருந்துவருகிறது. ஏதாவது ஒன்று தன்

சமநிலையிலும் மீறி வளரத் தொடங்கினால் இறையருள் அதைத் தடுத்து நிறுத்திச் சமநிலைக்குக் கொண்டுவருவதை ஆரணிய காண்டத்தில் காண்கிறோம். சரபங்கன், அகத்தியன், சவரி போன்ற நல்லோர்களும், கரன் தூடணன் சூர்ப்பணகை போன்ற தீயவர்களும் இக்காட்டிடை வாழ்கின்றனர். கரன் முதலியோர் தாங்கள் செய்கின்ற தவற்றை உணராமலேயே மேலும் பாவம் செய்கின்றனர். விராதன், கவந்தன் முதலியோர் தாம் செய்த பிழைக்குத் தண்டனை பெற்றுத் தண்டனையின் பின்னே நல்லோர் ஆகின்றனர். மாரீசன் போன்றோர் நல்லது எது என்பதை நன்கு அறிந்திருந்தும் தீமையைத் தடுத்து நிறுத்த ஆற்றலின்மையின் வேண்டாவெறுப்புடன் வேறு வழியின்மையின் தீமைக்குத் துணை போகின்றனர்.

இன்றைய சமுதாயத்தில் வாழும் நம்மில் பலர் மாரீசனுடைய நிலையில்தான் இருக்கின்றோம். காப்பிய மாந்தரில் மனித சமுதாயம் பிரதிபலிக்கப்படுகிறது என்பது ஆரணிய காண்டத்தில் நன்கு அறியப்படுகிறது.

# கிட்கிந்தா காண்டம்

கம்பனது இராம காதையில் கிட்கிந்தா காண்டம் நான்காவதாகும். மொத்தம் உள்ள ஆறு காண்டங்களில் அயோத்தி, ஆரணியம், கிட்கிந்தை என்ற மூன்று காண்டங்களும் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடம்பற்றிப் பெயர் பெற்றனவாகும். மூலநூலை மிகப் பெரிய அளவில் பின்பற்றிய கம்பநாடன், காண்டப் பெயர்களையும் மூலநூலில் கண்டவண்ணம் அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளான்.

காப்பிய வளர்ச்சியில் முதல் திருப்புமையமாக அமைந்தது, கைகேயி வரம் பெறுதலாகும். இரண்டாவது பெரும் திருப்பு மையம் சூர்ப்பணகை சூழ்ச்சி ஆகும். அதன் பயனாகப் பிராட்டி சிறையெடுக்கப்பட்டவுடன் காப்பிய வளர்ச்சிக்குத் திருப்புமையம் எதுவும் தேவைப்படவில்லை. எனவே, இராகவன் பிராட்டியைத் தேடிச் செல்லுதல், இராவணனுடன் போர் செய்தல், பிராட்டியை மீட்டல் என்ற முறையில் காப்பியம் தங்கு தடையின்றிச் செல்லும், என்றாலும், படிப்பவர்கள், கதைமாந்தர்கள் ஆகிய இரு தரப்பினருள் யாரும் எதிர்பாராத ஒரு தடை இருக்கிறது. 'கிட்டுவார் பொரக் கிடைக்கின் அன்னவர் பட்ட நலவலம் பாகம் எய்தும்' (3825) வாலியே அந்தத் தடை. அத்தடையை இராகவன் நீக்க வேண்டும். இன்றேல், இராவண வதம் நிகழாது. இத்தடையையும் அதை நீக்க வேண்டிய இன்றியமையாமையையும் அறிந்தவர்கள் இருவர் உளர். கவந்தன் என்ற பூதமும், சவரி என்ற வேடர்குலப் பெருமாட்டியும் சுக்கிரீவனிடம் செல்லும் வழியையும், அவன் நட்பைப் பெறவேண்டிய இன்றியமையாமையையும் இராம இலக்குவர்க்கு வலியுறுத்திக் கூறுகிறார்கள். வாலியினிடம் அஞ்சி ஒடுங்கி இரலைக் குன்றத்தில் மறைந்து வாழும் சுக்கிரீவனிடம் போகுமாறு சொல்லியது ஏன்? வாலி, சுக்கிரீவன் என்ற இருவரையுமே இராம இலக்குவர் அறிந்திலர்.

அப்படி இருந்தும், இராவணனை வெல்லும் ஆற்றல் படைத்த வாலியிடம் செல்லுமாறு கூறாமல் சுக்கிரீவனிடம் செல்லுமாறு சவரி பணித்தது ஏன்? மிகச் சிறப்பான ஒரு காரணம் இதனுள் மறைந்துகிடப்பதை அறிய வேண்டும். சவரியைப் பொறுத்தமட்டில் 'இராவணனை வெல்லுவதற்கு வாலியின் துணையைப் பெறுக' என்று கூறியிருக்கலாம். அவ்வாறு செய்வதில் மாபெரும் பிழையொன்று ஏற்படும். பிறன்மனை நயந்தவனாகிய இராவணனைத் தண்டிக்கப் பிறன்மனை நயந்த மற்றொருவ னாகிய வாலியைத் துணைக் கொண்டான் இராமன் என்ற பெரும்பழி வருவதற்குச் சவரி காரண மாகிவிடுவாள். வாலியைப்பற்றி ஒன்றும் அறியாத இராகவனை அவனிடம் போகுமாறு பணிப்பது பெரும் பிழையாகும். இவ்வழி தவறு என்றால், சவரி மற்றொரு வழியைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். சவரி இராகவன் யாரென்று அறிந்தவள். அவன் கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவன் (4023) என்பதை நன்கு அறிவாள். எனவே சுக்சிரீவனுடைய குரக்குப் படை இராமனுக்குத் தேவை இல்லையென்பது உண்மைதான். இராகவன் தனியே சென்று இராவணனிடம் போரிட்டால், இராவணனை வென்றிருக்கலாம். ஆனால், அவனுடன் நட்புக் கொண்ட வாலி இராவணனுக்குத் துணையாகிக் களத்தில் இறங்கினால் இராகவனுக்கே பெரும் தொல்லையாக முடியும். காரணம் வாலி, " கிட்டுவார் பொரக் கிடைக்கின் மற்றவர் பட்ட நல்வலம் பாகம் எய்துவான்" என்ற உண்மை தெரியாத இராகவன், சிக்கலில் அகப்பட்டுக் கொள்ள நேரிடும். எனவே இந்த இரண்டு வழிகளையும் தவிர்த்துச் சுக்கிரீவனைத் துணை கோருமாறு வழி கூறினாள் சவரி. அன்றியும் சீதையைத் தேடுதல் இராம இலக்குவர் ஆகிய இருவர்மட்டுமே செய்யக்கூடிய செயலுமன்று. மேலும் தொண்டு என்ற ஒரு பொருளுக்கு முழு இலக்கணமாக வாழ்கின்ற அனுமனின் துணையும் தசரத குமாரர்க்குக் கிட்டாமல் போய்விடும். அனுமன் சுக்கிரீவனிடம் பணி புரிகின்றவ னாதலின் சுக்கிரீவன் துணையை அனுமன் பொருட்டாக இராமன் நாட வேண்டியதாயிற்று.

இதனாலேயே, தொடக்கத்திலேயே கிட்கிந்தைப் படலம் சிறப்புப் பெறுகிறது. இக்காண்டம் பம்பைவாவிப் படலத்தில் தொடங்கி மயேந்திரப் படலம் முடியப் பதினாறு படலங்களைக் கொண்டுள்ளது. இக்காண்டத்தில்தான் ஈடு இணையற்ற வீரனும், பாற்கடலைத் தன் இரு கைகளால் கடைந்தவனும், இராவணனை வாலில் கட்டி எட்டுத் திக்குகளிலும் சென்றவனும், அட்டமூர்த்தி தாள் பணிபவனும், இராமபாணத்தின் செயலைத் தடுத்து நிறுத்தும் ஆற்றலனும் ஆகிய வாலியை முழுவதுமாகக் காண்கிறோம். வாலி வதைப் படலம் ஏழாவது படலமாக அமைந்துள்ளது. வாலியின் வரலாற்றை முழுவதும் அறிந்துகொள்ளாமல் போரில் இறங்கினால் இராகவனும் அல்லற்பட நேரிடும். எனவே, பகைவலிமையை இராகவன் நன்கு அறிந்துகொள்ள வேண்டும் என்ற கருத்தில் சொல்லின் செல்வனாகிய அனுமன் (3821 முதல் 3834 முடிய) பதினான்கு பாடல்களில் வாலியின் வரலாற்றை விரிவாகக் கூறுகிறான். இதனை மனத்துள் வாங்கிக்கொண்ட இராகவன், வாலியின் எதிரே சென்று போர் புரிதல் பயன் விளைக்காது என்பதை நன்கு அறிந்துகொள்கிறான். நீண்ட யோசனைக்குப் பிறகு, சுக்கிரீவனைப் பார்த்து "நீ சென்று வாலியைப் போருக்கு வலிய அழைத்து அவனிடம் போரிடுக. அப்பொழுது நான் மறைந்திருந்து அம்பு தொடுத்து வாலியைக் கொல்வேன். இதுவே, என்னுடைய முடிவாகும்" என்று கூறுகிறான். இப்பாடல் ஆழ்ந்து சிந்தித்துப் பொருள் கூற வேண்டிய ஒன்றாகும். அப்பாடல் வருமாறு:

> அவ் இடத்து, இராமன், நீ அழைத்து, வாலி ஆனது ஓர்
> வெவ் விடத்தின் வந்துபோர் விளைக்கும் ஏல்வை, வேறு நின்று
> எவ்விடத் துணிந்து அமைந்தது ; என் கருத்து இது என்றான்;
> தெவ் அடக்கும் வென்றியானும், 'நன்று இது' என்று சிந்தியா. (3944)

இப்பாடலில், இரண்டு, மூன்றாம் அடிகளில் வரும்

'வேறுநின்று ஏ விடத் துணிந்து என் கருத்து இது' என்ற பகுதி வாலி வதையின் அடித்தளத்தை நன்கு விளக்கப் பயன்படும். சுக்கிரீவனைப் பார்த்து, 'வாலியை வலியச் சென்று போருக்கு அழைப்பாயாக' என்று கூறுகின்ற அதே நேரத்தில், தான் எவ்வாறு போர் செய்து வாலியைக் கொல்ல வேண்டும் என்ற திட்டத்தையும் (strategy) இராமன் வகுத்துக் கொண்டான். 'மறைந்து நின்றுதான் அம்பு எய்யப் போகிறேன் (ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு) நான் கண்ட முடிபாகும் இது' வென்று பேசுகிறான். 'வேறு, நின்று' என்ற சொற்கள் மறைவாக நின்று என்பதையும் 'ஏ (அம்பை) விடத் துணிந்தது' (எய்ய முடிவு செய்துவிட்டேன்) என்ற சொற்கள் நீண்ட சிந்தனைக்குப் பிறகு இராகவன் கொண்ட முடிவு என்பதையும் காட்டும். இவ்வழியைத் தவிர வேறு வழியில் வாலியைக் கொல்ல இயலாது. வாலி இறந்தால் ஒழிய இராவண வதம் தடையின்றி நடைபெற இயலாது. எனவே, இம்முடிவுக்கு இராகவன் வருகிறான். ஒரு பெரு நன்மையை முடிக்க வேண்டிய இடத்தில் சிறு தவறுகளைச் செய்துதான் அந்த நன்மையை விளைவிக்க முடியும் என்ற நிலை ஏற்படும்பொழுது, அத்தவறுகளைச் செய்வது நியாயமேயாகும். இப்பாடலை இவ்வளவு விரிவாகக் காண்பதற்கு ஒரு காரணம் உண்டு. அதனைப் பின்னர்க் காணலாம்.

மூலநூலின்படி, வாலி வலிமை பெற்றவனாயினும், வரங்கள் பெற்றவனாயினும் சாதாரணக் குரங்காகவே பேசப்படுகிறான். கம்பநாடனைப் பொறுத்தமட்டிலும், வாலி வதை பல சிக்கல்களை உண்டாக்கிவிடுகிறது. அறத்தின் மூர்த்தியாகிய இராகவன் வாலியைக் கொன்றால் ஒழிய, முனிவரிடம் வாக்குக் கொடுத்தபடி இராவணனைக் கொல்ல முடியாது. எனவே, வாலியைக் கொன்றே தீர வேண்டும். மரபுப்படி வாலியோடு போர் செய்வது என்பது இயலாத காரியம். இரண்டு தீமைகளுள் குறைந்த தீமையை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் (choose the lesser evil) என்ற முடிவுக்கு இராகவன் வந்துவிட்டான் என்பதைத்தான் 'வேறு நின்று ஏ விடத் துணிந்தது' என்ற அவன் சொற்கள் வெளிக்காட்டுகின்றன.

இந்த நிலையில், வாலியின் குணநலத்தைக் காட்ட விரும்புகிறான் கவிச்சக்கரவர்த்தி, அவனைப்பற்றி அனுமன் தந்த தகவல்கள் ஒரு சார்பு (biased conclusion) பற்றியன. அதனை அப்படியே நம்பித்தான் இராகவன் போருக்குத் துணிகிறான். அதை நாமும் அப்படியே ஏற்றுக்கொண்டு விட்டால், வாலி என்ற பாத்திரப் படைப்பை நன்கு அறிய முடியாமல் போய்விடும். எனவேதான், வாலி வதைப் படலத்தின் முற்பகுதியில் வாலி - தாரை உடையாடலைப் புகுத்துகிறான் கம்பன். வந்திருக்கின்றவர் வலிய துணைவர் என்ற அளவில்தான் தாரை இராம இலக்குவர்களைப்பற்றி அறிந்திருந்தாள். மேலும், இராமன் என்பவனைப்பற்றித் தன் கணவனுக்கு ஒன்றும் தெரியாது என்ற கருத்தில்தான் அவள் பேசுகிறாள். ஆனால், வாலியோ இராமனுடைய வரலாற்றை மிக நன்றாக அறிந்திருந்தான். இராகவனுடைய பண்புநலன்களைத் துல்லியமாக எடை போட்டு அறிந்திருந்தான் என்பதை (3965 முதல் 3969 வரை) ஐந்து பாடல்களில் நாம் அறிகிறோம். சுக்கிரீவனுக்குத் துணையாக இராகவன் வந்துள்ளான் என்று அவள் கூறியும், இராகவனைப் பற்றி இவ்வளவு உயர்வாக வாலி பேசுகிறான் என்றால், அவனுடைய குணாதிசயங்களை விளக்க இப்பாடல்கள் போதுமானவை யாகும்.

தன் மார்பில் அம்பு வந்து தைத்தபோதுகூட, அது இறைவனின் சூலமோ, முருகனின் வேலோ என்று ஐயுறுகிறானே தவிர, அந்த நேரத்தில்கூட இராகவனை அவன் நினைக்கவில்லை. தன் மார்பை துளைத்துச் செல்ல முற்படும் அம்பை வாலினாலும் கைகளினாலும் பற்றிப் பிடித்து வெளியே இழுத்து, அதில் பொறிக்கப்பட்ட பெயரை அறிய முற்படுகிறான் வாலி. அம்பை நிறுத்தி ஓரளவு வெளியே இழுத்து அதில் பொறிக்கப்பட்ட 'செம்மைசேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்' (4013). 'கண்களில் கண்டான்' என்று கூறினாலே போதுமானது என்பதை விட்டுத் 'தெரிய' என்ற சொல்லைக் கவிச்சக்கரவர்த்தி வேண்டுமென்றே பயன்படுத்துகிறான். 'இராகவன் பெயரை அம்பில் எதிர்பார்க்காத வாலிக்கு

அம்பில் பொறிக்கப்பட்ட பெயர் நம்பிக்கை தரவில்லை. தான் கண்ணால் காண்பது பொய்யோ என்று பலமுறை பார்த்து அறிவினால் ஆராய்ந்து, இறுதியாக அது மெய்தான் என்ற முடிவிற்கு வந்தானாதலின், அதனை விளக்கவே 'கண்களில் தெரியக் கண்டான்' என்கிறான் கம்பன்.

அம்பை எய்தவன் இராமன்தான் என்ற முடிவு ஏற்பட்டவுடன் வாலியின் மனநிலையை மிக அற்புதமாகக் கவிச்சக்கரவர்த்தி ஒரு பாடலில் படம் பிடித்துக் காட்டுகிறான். 'பிறர்பழியும் தம் பழியும் நாணுவார், நாணுக்கு உறைபதி என்னும் உலகு' (1015) என்ற குறளுக்கு விளக்கவுரையாக இப்பாடலை அமைக்கிறான் கவிஞன்.

இல்லறம் துறந்த நம்பி, எம்மனோர்க்காகத் தங்கள்
வில் அறம் துறந்த வீரன் தோன்றலால், வேத நல்நூல்
சொல் அறம் துறந்திலாத சூரியன் மரபும், தொல்லை
நல் அறம் துறந்தது என்னா நகை வர நாண்
உட்கொண்டேன்.
(4014)

அம்பு பட்டதால், தன் உயிருக்கு ஊறு நேர்ந்தது என்ற எண்ணம் வாலிக்குத் தோன்றவே இல்லை.

மாபெரும் வீரனாகிய அவன், சுக்கிரீவனைப் போல, உயிருக்கு அஞ்சினவனும் அல்லன். எனவே, அவனுடைய மனத்தில் தோன்றிய முதலாவது எண்ணம் 'இந்த அம்பை யார் எய்திருக்க முடியும்' என்ற வினாவாகும். அந்த வினாவிற்கு விடை, அம்பைத் தெரியக் கண்டவுடன் கிடைத்தது. உடன் ஏற்பட்ட எண்ணம் நாணமாகும். சூரிய குலத் தோன்றல் ஒருவன்கூட 'வில் அறம்' துறந்தானே என்ற எண்ணம் தோன்றியவுடன் நகைப்பும் நாணமும் ஒருங்கே தோன்றின என்கிறான் கவிஞன்.

இராகவனைப்பற்றி அவன் கொண்டிருந்த எண்ணங்கட்கு முற்றிலும் மாறான ஒரு செயல் இப்பொழுது நிகழ்ந்துவிட்டது. சூரிய குலத் தோன்றலாகிய இராகவன் வீழ்ச்சியை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. கதிரவனே

விண்ணிலிருந்து மண்ணில் வீழ்ந்துவிட்டது போன்ற ஒரு வீழ்ச்சி என்று நினைக்கிறான். அதனாலேயே, "சொல் அறம் துறந்திலாத சூரியன் மரபும், தொல்லை நல் அறம் துறந்தது" என்று நினைக்கின்றான். இந்த இடத்தில் ஷேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீசர் என்ற நாடகத்தில் சீசரின் இறப்புப் பற்றிப் பேசுகின்ற ஆன்ட்டனியின் ஒரு தொடர் ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

" What a fall was there, my countrymen

When the great Ceaser fell, you and I and all of us fell

'சொல் அறம் துறந்திலாத' சூரியன் மரபில் வந்த நம்பியாகிய இராகவன் 'வில் அறம் துறந்தான்' என்ற எண்ணம் தோன்றிய அளவில் வாலியின் மனத்தில் பகைமையோ காழ்ப்புணர்ச்சியோ சினமோ தோன்றவில்லை. அவற்றின் எதிராக நகைப்பும் நாணமும் தோன்றின; கவிக்கூற்றாக வருவது இப்பாடல். வாலியை எடை போட இப்பாடலைப் பயன்படுத்துகிறான் கவிஞன்.

இந்நிலையில் இராகவன் எதிரே வருகின்றான். வாலி அவனைக் காண்கின்றான். வாலியினுடைய கண்கள், புற மனம் ஆகியவை இராமனை இகழ்ந்து காண்கின்றன. ஆனால், அவனுடைய அக மனம் அக்காட்சியில் லயித்து எங்கோ செல்கிறது. அகமனம் கண்ட காட்சியைத்தான், கவிஞன்

கண்ணுற்றான் வாலி, நீலக் கார்முகில் கமலம் பூத்து
மண் உற்று, வரிவில் ஏந்தி, வருவதே போலும் (4016)

என்ற அடிகளில் கூறுகிறான். 'செம்மைசேர் நாமத்தைக் கண்களில் தெரியக் கண்ட' தற்கும், இப்பொழுது 'மண்ணுற்று வரிவில் ஏந்தி வருகின்ற' வடிவத்தை அக மனம் கண்டதற்கும் ஒரு தொடர்புண்டு. மந்திரங்கட்கு வடிவம் உண்டு என்று மந்திரநூலார் கூறுவர். 'ஸ்ரீராம' என்ற தாரக மந்திரத்தை வரிவடிவமாக முதலில் காண்கிறான் வாலி. அந்தப் பெயர் அவனுடைய புற மனத்தில் இகழ்ச்சி, நாணம் என்பவற்றை

உண்டாக்கியது உண்மைதான். ஆனால், அதே நேரத்தில் அந்த மந்திரம் அவனது அக மனத்தில் புகுந்து வேலை செய்யத் தொடங்கியது. இராமன் எதிரே வந்து தோன்றியவுடன் அக மனம் 'ராம' என்னும் மந்திரத்தின் பரு வடிவம் எவ்வாறு இருக்கும் என்பதை அறிவிப்பதுபோல அவ்வடிவம் காட்சி அளித்தது. "நீலக் கார்முகில், கமலம் பூத்து, மண்ணுற்று, வரிவில் ஏந்தி வருவதே போலும்" என்ற சொற்களை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். நீல நிறம், சிவப்பு நிறம் என்ற இரண்டும் ஆதியான நிறங்கள் (primary colours) ஆகும். இவை இரண்டும் மூலப்பரம்பொருளை அறிவுறுத்தும் அடையாளங்கள் ஆகும். வரிவில் என்பது பேராற்றலை அறிவுறுத்தும் அடையாளம் ஆகும். எனவே, 'இராம' என்ற சொல்லைக் கண்ணிற் கண்ட பிறகு, வாலி காணும் காட்சி அம்மந்திரத்தின் வடிவம்போல் உள்ள நீலம், சிவப்பு என்ற நிறங்களின் கூட்டமும் பேராற்றலின் வடிவமே ஆகும். இராமன் என்ற தசரதகுமாரனைக் கண்டான் என்று கூறாமல், 'கார்முகில் கமலம் பூத்து வரிவில் ஏந்தி மண்ணுற்றது' என்று கம்பன் கூறும்பொழுது 'ஒரு நாமம், ஓருருவம் இல்லாத பரம் பொருளை'க் குறிக்க மனித வடிவத்தையே விட்டுவிட்டுக் கமலம் பூத்த கார்முகில் என்றும், அக்கார்முகில் வில் ஏந்தி மண் உற்றது என்றும், இராம என்ற சொல்லின் சொரூபம் இதுதான் என்றும் வாலி புரிந்துகொண்டான் என்று கூறவந்த கம்பன், நம்மையும் ஓரளவு புரிந்துகொள்ளுமாறு செய்கிறான்.

இந்த நிலை வாலிக்கு எவ்வாறு வந்தது என்ற வினாத் தோன்றுவது இயல்பேயாகும். வாலியைத் தவிர ஏனையோர் இதற்கு விடை கூறுவது இயலாது. எனவே, அந்த அனுபவத்தில் திளைத்த வாலி இம்மனநிலை தனக்கு வந்த காரணத்தையும் போகிற போக்கில் உணர்த்துகிறான். ஓர் உயிருக்கு இறை அனுபவம் கிட்டவேண்டுமே யானால், இறைவன் நேரடியாகவோ, குருமுகமாகவோ வந்துதான் அதனை தரமுடியும். அப்படி வருகின்ற நேரத்திலும் தீட்சை என்ற ஒரு முறையைக் கையாள்வர். இது ஸ்பரிச தீட்சை, நயன தீட்சை, திருவடி தீட்சை என்று பலவகைப்படும். இந்த உபதேசம் பெற்ற பிறகு, பெற்றவர்கள் மனநிலையில் மாபெரும்

மாற்றங்கள் தோன்றி இறையனுபவம் கிட்டும். அதன் பிறகு, அவர்கள் காட்சியே மாறிவிடும். அதற்கு முன்னர் அவர்கள் கண்டவை, கேட்டவை அனைத்தும் புதிய பொருளைத் தரும். வாலியைப் பொறுத்தமட்டில், கார்முகில் கமலம் பூத்து வரிவில் ஏந்தி மண் உற்று 'இராமா' என்ற மந்திரத்தை வாலிக்கு உபதேசம் செய்தது; முற்கூறிய ஸ்பரிச, நயன தீட்சை முறைகளை மேற்கொள்ளாமல் அவனுடைய மார்பில் அம்பைச் செலுத்தி உபதேசம் செய்யும் புதிய முறையைக் கையாண்டது புதிய முறையாகும். இதனை நன்கு உணர்ந்துகொண்ட வாலி, இராமனிடம் பேசும்போது,

ஏவுகூர் வாளியால் எய்து, நாய் அடியனேன்
ஆவி போம் வேலைவாய், அறிவு தந்து அருளினாய் (4063)

என்று கூறுகிறான்.

இப்பாடலில் உள்ள 'ஆவிபோம் வேலைவாய்' என்ற சொற்களையும் 'ஏவுகூர் வாளியால் அறிவு தந்து அருளினாய்' என்ற சொற்களையும் கவனிக்க வேண்டும். இதுவரையில் தன் மருமத்திடை இராமன் தன் அம்பைச் செலுத்திக் கொல்ல முனைந்தான் எனவும் அதுவும் மறைந்திருந்து இதனைச் செய்தான் எனவும் பல பாடல்களில் இராமனைக் கடுமையாகச் சாடியுள்ளான் வாலி. ஆனால், இப்பொழுது இராமன் அம்பால் தான் சாகவில்லை என்பதை நன்கு உணர்ந்துகொண்ட காரணத்தால் 'ஆவிபோகின்ற வேளையில் வாளியால் அறிவு தந்தாய்' என்று பேசுகிறான். அம்புதான் கொன்றது என்று நினைத்திருந்தால் ஆவி போக்கும் வேலைவாய் என்று சொல்லியிருக்க வேண்டும். அதற்கு மாறாக, ஆவி போம் வேலை என்று கூறுகிறான். 'இவ்உலகை விட்டுப் போக வேண்டிய நேரம் வந்துவிட்ட காரணத்தால் என் ஆவி போகின்றது. இதற்கு இராமன் எய்த அம்பு காரணம் அன்று' என்பதை 'ஆவிபோம் வேலைவாய்' என்ற சொற்களால் நன்கு தெரியப்படுத்திவிடுகிறான். அப்படியானால் இராமன் எய்த அம்பு என்ன செய்தது? இராகவன் ஏவிய கூர்வாளி அறிவு (பர ஞானம்) தந்து அருளியது. 'அருளினாய்' என்ற சொல்லை அவன்

பயன்படுத்தும்போது "கண்ணுற்றான் வாலி" என்ற பாடலில் காணப்படும் வாலிக்கும் இப்பாடலில் காணப்படும் வாலிக்கும், மலைக்கும் மடுவுக்கும் இடையே காணப்படும் வேற்றுமையை அறியலாம்.

"ஏவுகூர் வாளியால் ஆவிபோம் வேலைவாய் அறிவு தந்து அருளினாய்" என்ற சொற்றொடர்களை வாய்விட்டு உரக்கப் படித்தால் - பலமுறை படித்தால் - அத்தொடரில் மறைந்துள்ள ஓர் உணர்ச்சி வெளிப்படக் காணலாம். ஆழ்ந்த வருத்தம் அல்லது ஏக்கம் இத்தொடரில் தொனிப்பதை உணரவும் -அறியவும்-முடியும். மனம் முற்றிலும் மாறி, விருப்பு வெறுப்பற்ற மிக உயர்ந்த நிலையை - ஸ்திதப் பிரக்ஞை மனநிலையை - அடைந்தபிறகு வாலி பேசும் வார்த்தைகள் இவை. இந்த மனநிலையை அடைந்தவிட்ட ஒருவன் எப்படி ஏக்கத்தோடு பேசமுடியும் என்ற வினாத் தோன்றுவது இயல்பே. சம திருஷ்டி நிலையை வாலி அடைந்துவிட்டான் என்பதைக் கவிஞன் இங்கே, எப்போது, எவ்வாறு செரிவிக்கிறான்? அறிவு தந்து அருளினாய் என்ற வாலியின் கூற்று முற்றிலும் உண்மையானதே என்பதை இச்சொல்லை அடுத்து வரும்,

"மூவர் நீ! முதல்வன் நீ! முற்றும் நீ! மற்றும் நீ!
பாவம் நீ! தருமம் நீ! பகையும் நீ! உறவும் நீ!" (4063)

என்ற அடிகள் மூலம் நிலைநாட்டுகிறான். இந்நிலையை அனுபவ ரீதியில் அடைந்த ஒருவன் எப்படி ஏக்கத்தோடு பேச முடியும்? என்றாலும், இப்பாடலின் முன்னிரண்டு அடிகளில் ஓர் ஏக்கம் தொனிப்பது மறுக்க முடியாததாகும். அந்த ஏக்கம் எதுவாக இருக்கும் என்று ஆராயத் தொடங்கினால், விடை காண்பது எளிது, 'அறிவு தந்து அருளினாய்' என்ற சொற்களில் தன் தகுதியைப் பாராது அறிவை (பர ஞானத்தைத்) தன் கருணை காரணமாகத்தான் இறைவன் அளித்தான் என்று சொல்கிறான். இதில் ஏக்கம் எங்கே வந்தது? இந்தப் பர ஞானத்தைப் பெற்ற பிறகு-அதாவது சம திருஷ்டி, விருப்பு வெறுப்பற்ற நிலை பெற்ற பிறகு ஒரு மனிதன் இவ்வுலகில் உள்ள பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் காண்பானேயானால், அக்காட்சி முற்றிலும்

புதிதாகவே இருக்கும். இஞ்ஞானத்தைப் பெறுவதற்கு முன் காணப்பட்ட அதே நிகழ்ச்சி, ஞானம் பெற்றபின்னர் வேறு மனநிலையை உண்டாக்குகிறது. நிகழ்ச்சி ஒன்றுதான். ஆனால், அதைப் பார்ப்பவனுடைய மனநிலை மாறிவிட்டதால் காட்சி அனுபவமே மாறிவிடுகிறது. இப் பார்வை கிடைக்குமுன்னர் இராமன் பகைவனாக இருந்தான், 'அற வேலியைப் படுத்தான்' (4031) 'மறைந்து இருந்து அம்பு எய்து வில்லறம் துறந்தான்' என்ற முடிவுகள் அறிவு பெற்றபின்னர் முற்றிலும் மாறிவிடுகின்றன. இப்பொழுது வாலி என்று யாருமில்லை. அம்பு என்று ஒன்றுமில்லை. குற்றம் என்று ஒன்றுமில்லை. குணம் என்று ஒன்றும் இல்லை. மறைந்திருந்து அம்பு எய்தல், நேரே நின்று அம்பு எய்தல் ஆகியவை அர்த்தமற்ற வேறுபாடுகள்; வில்லறம் என்ற ஒன்று தனியே இல்லை. பற்றற்ற பரம்பொருள் ஒன்றைச் செய்யுமானால் அச்செயலுக்கு ஒரு நோக்கம் கற்பிப்பது - நேரே பொருதல், மறைந்து நின்று பொருதல் என்ற வேறுபாடுகளைக் கற்பிப்பது என்பவையெல்லாம் தவறாகும். இந்தப் பார்வை வந்தபிறகு உலகத்தில் வாழ்ந்தால் பகை, நட்பு என்று பாராமல் அன்பினால் அணைக்க முடியும். அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையை வாழ்ந்துபார்க்க முடியாதபடி சாவு வந்து விட்டதே என்று வருந்துகிறான்.

இந்த அறிவு பெறும்முன்னர்ச் சாவு வந்திருப்பின் வாலி கவலைப்பட்டிருக்கமாட்டான். அற்புதமான இறையனுபவம் கிடைத்தும் அந்த அனுபவத்தோடு இவ்வுலகிடை வாழமுடியாமல் போயிற்றே, 'வாழமுடியாமல் போகிறதே என்பதுதான் அவனுடைய ஏக்கம். ஜென்மப் பகை என்ற சுக்கிரீவன், அன்புத் தம்பியாகக் காட்சி அளிக்கிறான். காரணமின்றித் தன்னைக் கொன்ற பகைவனாகிய இராகவன், வில்லறம் துறந்தான் என்று ஏசப்பட்ட இராகவன் இப்பொழுது மூலப் பரம்பொருளாகக் காட்சி அளிக்கிறான். இதனை அனுபவிக்கவும் உலகிடை உள்ள உயிர்களிடம் சம நோக்கால் வந்த அன்பைப் பகிர்ந்துகொள்ளவும் வாய்ப்பில்லாமல் போகிறதே (சாவு காரணமாக) என்பதே அவனுடைய ஏக்கம். இவ் அருளைப் பெறாத சுக்கிரீவன்

தனக்குத் துணையாக வந்த இராகவனை, இன்னும் யாரென்று தெரிந்துகொள்ளாமல், தசரத குமாரன் என்றும், இலக்குவனின் அண்ணன் என்றும், தன் நண்பன் என்றும், தன் பகையாகிய வாலியைக் கொன்று தனக்கு ஆட்சியைத் தந்தவன் என்றும்தான் நினைக்கிறானே தவிர, இத்தனையும் செய்த இராகவன் மூலப் பரம்பொருள் என்றோ பகை, நட்புகள் கடந்த பரம்பொருள் என்றோ அவன் அறிந்துகொள்ளவில்லை. பேரறிவு படைத்தவனாகிய வாலி, இராகவனை யாரென்று உணர்ந்துகொண்டான். அதே கணத்தில் தன் தம்பியையும் அறிந்தவன். ஆதலால், தன் உயிர் போவதற்குள் தன் தம்பிக்குப் பிறர் புகட்ட முடியாத நல்லறிவைப் புகட்ட விரும்புகிறான். பகைமை உணர்ச்சி அறவே நீங்கிவிட்ட நிலையில் தன் தம்பியாகிய சுக்கிரீவனை, "வன் துணைத் தடக்கை நீட்டி வாங்கினன் தழுவி, மைந்த! 'ஒன்று உனக்கு உரைப்பது உண்டால்; (4072) உறுதி அது உணர்ந்துகோடி" என்று சொல்லத் தொடங்கினான். தான் சொல்லப்போகும் உறுதிப்பொருளை அறிவு கொண்டு ஆராய்ந்து பயனில்லை. அதனை உணர்ந்துகொண்டால் தவிர, கடைப்பிடிக்க முடியாததலால் 'உணர்ந்து கோடி' என்று கூறத் தொடங்குகிறான். நான்கு, ஐந்து பாடல்களில் அவன் கூறப்போகும் உறுதிப் பொருள் வெறும் சாத்திரங்களைப் படித்தாலோ கற்றாரை அண்டிக் கேட்டதாலோ கிடைத்தது அன்று. இராமன் அம்பினைமூலம் புகட்டிய ஞானமாகும் இது. பன்னூறு ஆண்டுகள் வாழ்ந்து அன்றாடம் எட்டுத் திக்குகளிலும் சென்று அட்டமூர்த்தியாகிய பரம்பொருளை மன, மொழி, மெய்களால் வழிபட்டு அதன் பயனாக இப்பொழுது பெற்ற அறிவாகும் (ஞானம்) இது. தான் ஒருவனாகவே பாற்கடலைக் கடைந்து அமிழ்தத்தை எடுத்தாலும், நன்று எனத் தான் உண்ணாமல் தேவருக்கு ஈந்த பரோபகாரச் சிந்தையால் வாலிக்கு இந்த விநாடி கிடைத்தற்கரிய பர ஞான அனுபவம் கிடைத்துள்ளது.

மேலே கூறிய எச்செயலையும் செய்யாதவன் சுக்கிரீவன், இன்ப வேட்டையிலும், நறவம் மாந்திப் புல்ன்கள் தரும்

இன்பத்திலும் இருக்கின்றவன் ஆவான். எனவே, அவனாகத் தன் சுய முயற்சியால் இந்த அனுபவத்தைப் பெற முடியாது. இதனை நன்குணர்ந்த அண்ணனாகிய வாலி தம்பியின்மாட்டுக் கொண்ட பரம கருணையால் ஐந்து பாடல்களில் இவ் அருங்கருத்தை விளக்கத் துவங்குகிறான்:

மறைகளும் முனிவர் யாரும், மலர்மிசை அயனும், மற்றைத்
துறைகளின் முடிவும், சொல்லும் துணி பொருள், துணி வில் தூக்கி,
அறைகழல் இராமன் ஆகி, அறநெறி நிறுத்த வந்தது;
இறை ஒரு சங்கை இன்றி எண்ணுதி; எண்ணம் மிக்கோய். (4073)

இப்பாடலின் கடைசி அடி தன் தம்பியின் குண நலன்களைத் துல்லியமாமக எடை போட்டிருந்தான் வாலி என்பதை அறிவிக்கின்றது. இராமனைத் தனக்குத் துணையாக வந்த வலிமை மிகுந்த அரச குமாரன் என்றுமட்டுமே கருதி யிருந்தான் சுக்கிரீவன். "மழ க்கையிலங்கு பொற்கிண்ணம் என்று அலால் அரியை என்று உனைக் கருதுகின்றிலேன்" (திருவாசகம், திருச்சதகம் 92) என்று மணிவாசகப் பெருமாள் கூறியதற்கு ஒப்ப, இளங்குழந்தையின் கையில் கிடைத்த பொற்கிண்ணத்தின் அருமைப்பாட்டைக் குழந்தை அறிய வில்லையாதலால், இப்பாடலில் முதல் மூன்று அடிகளில் இராமன் யாரென்பதைத் தம்பிகு உணர்த்தத் தொடங்கு கிறான். அவன் பரம்பொருள்தான் என்பதைக் காட்சிப் பிரமாணத்தாலும் நிறுவுவதற்காகத் தன் மார்பில் அம்பு எய்தமையைக் குறிப்பிடுகிறான்.

நிற்கின்ற செல்வம் வேண்டி நெறிநின்ற பொருள்கள் எல்லாம்
கற்கின்றது இவன்தன் நாமம்; கருதுவது இவனைக் கண்டாய்;
பொன் குன்றம் அனைய தோளாய்! பொதுநின்ற தலைமை நோக்கின்
எற்கொன்ற வலியே சாலும்: இதற்கு ஒன்றும் ஏது வேண்டா. (4074)

காட்சிப் பிரமாணத்தால் இராகவன் யாரென்பதை நிறுவிய பிறகு, அவனுடைய பரம கருணையை, வள்ளன்மையை, மன்னிக்கும் தன்மையைப் பின்வரும் பாடலில் முதல் மூன்றடிகளில் குறிப்பிடுகிறான். தவறிழைத்தவர்களே மன்னிக்கப்பட்டு அவனருளைப் பெறுவர் என்றால், அவனுடைய திருவடியைப் பற்றிநின்று அவன் எவலைப் புரிபவர் பெறப்போகும் பேற்றைச் சொல்லவும் வேண்டுமோ என்று எடுத்துச்சொல்வதன் நோக்கம் தனக்குக் கிட்டாத வாய்ப்பு அதர்வது, அவனது அருகிலிருந்து அவன் குற்றேவலைச் செய்யும் வாய்ப்புத் தம்பிக்குக் கிடைத்திருக்கிறது என்று காட்டி, இச்சந்தர்ப்பத்தை அவன் நழுவவிடக்கூடாது என்ற ஆதங்கத்தோடு வாலி பேசும் பாடல் வருமாறு:

கைதவம் இயற்றி, யாண்டும் கழிப்ப அருங்கணக்கு இல்தீமை
வைகலும் புரிந்துளாரும், வான் உயர் நிலையை, வள்ளல்
எய்தவர் பெறுவர் என்றால், இணை அடி இறைஞ்சி, ஏவல்
செய்தவர் பெறுவது ஐயா! செப்பல் ஆம் சீர்மைத்து ஆமோ? (4075)

ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு இராமனுக்குக் குற்றேவல் செய்யும் இந்த வாய்ப்பு - தனக்குக் கிட்டாத இந்த வாய்ப்பு - தம்பிக்கு எவ்வாறு கிட்டியது என்று சிந்தித்து, அதற்குரிய விடையையும் கண்டுகொள்கிறான் வாலி. சுக்கிரீவன் முன்னர்ச் செய்த நல் ஊழ் காரணமாகவே இந்நிலை அவனுக்குக் கிட்டியது என்பதை எடுத்துக்காட்டும் முகமாக,

அருமை என், விதியினாரே உதவுவான் அமைந்த காலை?
இருமையும் எய்தினாய்; மற்று இனிச் செயற்பாலது எண்ணின்,
திரு மறு மார்பன் ஏவல் சென்னியில் சேர்த்தி, சிந்தை
ஒருமையின் நிறுவி, மும்மை உலகினும் உயர்தி அன்றே (4076)

என்ற சொற்களைக் கூறுகிறான்.

*இத்துணை ஏதுக்களையும் காட்சிப் பிரமாணத்தையும் காட்டி, இராமன் யாரென்பதையும் அவனுக்கு அடிமை செய்து வாழ்வதே வாழ்வின் குறிக்கோள் என்பதையும் ஆணித்தரமாக எடுத்துக் கூறிய பிறகும் வாலியின் மனத்தில் நிறைவு ஏற்படவில்லை. தன் தம்பியாகிய சுக்கிரீவன் 'பெருங்குடி' மகன் என்பதையும், சலன புத்தி உடையவன் என்பதையும், இன்பத் துறையினில் எளியன் ஆவன் என்பதையும் நன்கு அறிந்த வாலி, இறுதியாக நேரிடையாகவே இடித்துக் கூறும் முறையில் தம்பிக்குச் சில சொல்ல முற்படுகிறான்.*

"மதஇயல் குரக்குச் செய்கை மயர்வொடு மாற்றி, வள்ளல்
உதவியை உன்னி, ஆவி உற்றிடத்து உதவுகிற்றி;
பதவியை எவர்க்கும் நல்கும் பண்ணவன் பணித்த யாவும்
சிதைவு இல செய்து, நொய்தின் தீர்வு அரும் பிறவி தீர்தி"
**(4077)**

"அரசியல் பாரம் பூரித்து அயர்ந்தனை இகழாது, ஐயன்
மரைமலர்ப் பாதம் நீங்கா வாழுதி..." **(4078)**

*இவ்வளவு விரிவாகவும் அழுத்தமாகவும் உபதேசம் செய்த பிறகும் தன் தமிபி அதிகாரம் கைக்கு வந்தபிறகு என்ன ஆவான் என்பதை முன்னறிவு படைத்த வாலி நன்கு அறிந்திருந்தான்.*

*எனவே, தன் தம்பி தன் வாழ்வில் கிடைத்த பெறற்கரும் இந்த நல்வாய்ப்பை இழக்கும்படியான காரியம் யாதேனும் செய்துவிட்டால் நன்றி கொன்றவன் ஆய்விடுவான். அப்பொழுது அதற்குரிய தண்டனையை இராமன் வழங்க முற்பட்டால் யாரும் அதனைத் தடுத்து நிறுத்த முடியாது. எனவே, உடன்பிறந்தானிடம் ஒப்பற்ற அன்பு கொண்ட வாலி இவனுக்கு உபதேசம் செய்வதைவிட இராமனிடமே இவனைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறான். அந்த நிலையில் வேண்டுகோளாக இராகவனிடம் கேட்பதைவிட வரமாகவே பெற்றுவிட வேண்டுமென்ற முடிவிற்கு வந்த வாலி, இராகவனை நோக்கிப் பின்வருமாறு வரம் வேண்டுகிறான்.*

ஓவிய உருவ! நாயேன் உளது ஒன்று பெறுவது உன்பால்,
பூ இயல் நறவம் மாந்தி, புந்தி வேறு உற்றபோழ்தில்,
தீவினை இயற்றுமேனும், எம்பிமேல் சீறி, என்மேல்
ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல்' என்றான் (4068)

*பின்னர் நடந்த நிகழ்ச்சிகளைப் காணும்போது வாலியின் அறிவுத்திறமும், எதிரது கண்டு போற்றும் நுண்மாண் நுழைபுலமும் அவன் தம்பிமாட்டுக் கொண்ட ஈடு இணையற்ற அன்பும் நன்கு வெளிப்படுகின்றன.*

*வாலியைப்பற்றி இதுவரை கூறிவந்தவை கம்பனுடைய 'சான்றோர் கவியெனக் கிடந்த' சில பாடல்களில் புதைந்து கிடக்கும் உட்பொருளை அடியொற்றி எழுந்த சிந்தனைக்கு வடிவு கொடுத்தமையே ஆகும். இக்கருத்துகள் காட்டப்பெற்ற பாடல்களில் வெளிப்படையாக எங்கும் காணப்படா. முன்னும் பின்னுமாக உள்ள பாடல்களை ஒன்று கூட்டி வாலி என்ற பாத்திரப் படைப்பின் நுணுக்கத்தை ஆய முற்பட்டதன் விளைவே ஆகும். இது 'இராம' என்ற பதத்தைக் காண்பதற்கு முன்னுள்ள வாலிக்கும் 'சிறியன சிந்தியாத வாலிக்கும் இடையே உள்ள வளர்ச்சியைக் கூறியதே ஆகும் இது. இந்த வளர்ச்சி சில மணித்துளிகளில் நடைபெற்றதாகும். அம்பு பட்டதே விதையாகி 'இராம' என்ற பெயரைக் கண்டதே செடியாக வளரத் தொடங்கிய நிலையாகி, கார்முகில் கமலம் பூத்து மண்ணுற்றதைக் கண்ணுற்றான் வாலி என்ற நிலையில் அந்தச் செடி மரமாக வளர்ந்துவிட்டது. ஆனாலும், இந்த விதை விதைப்பும், அது செடியாகி மரமாதலும் வாலியின் புற மனத்திற்குத் தெரியாமல் அவனுடைய அக மனத்தின் ஆழத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் ஆகும். அக மனத்தின் ஆழத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி நடைபெறுகின்ற அதே நேரத்தில் வாலியின் புற மனத்தில் ஒரு பெரும் போராட்டமே நிகழ்கிறது.*

*அப்போராட்டத்தின் தொடக்கம், வளர்ச்சி, முடிவு என்பவற்றைச் சற்று விரிவாகக் காண்பது பயன் உடையதாகும். சுக்கிரீனுடன் போருக்குப் புறப்படுமுன் தடுத்து நிறுத்திய தாரையிடம் வாலி பேசிய பேச்சுகள் தசரத*

குமாரனைப் பற்றி அவன் கொண்டிருந்த மிக உயர்ந்த எண்ணங்களின் வெளிப்பாடு ஆகும். அந்த நிலையில், தாரையை விட்டுப் புறப்பட்டவுடனேயே தம்பிக்குத் துணைவர்கள் வந்துள்ளார்கள் என்ற செய்தியை அடியோடு மறந்துவிட்டான் வாலி.

தம்பியர் அல்லது தனக்கு வேறு உயிர்
இம்பரின் இலது என எண்ணி ஏய்ந்தவன். (3969)

தாரையிடம் இறுதியாக வாலி கூறிய சொற்கள் இவையென்பதை நோக்கும்பொழுது இராகவன் போரின் இடையே சுக்கிரீவனுக்குத் துணையாக வரமாட்டான் என்ற உறுதிப்பாடு (conviction) வாலியின் மனத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது.

இந்த முடிவுடன் போர் செய்கின்ற வாலிக்கு மார்பில் பாய்ந்த அம்பில் 'இராம' என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்தது எல்லையற்ற அதிர்ச்சியைத் தந்தது. தன்னால் கோபுரத்தின் உச்சியில் வைத்து வணங்கப்பட்ட இராமன் என்னும் மனிதன் வீழ்ச்சியுற்றுவிட்டானே என்று எண்ணுகிறான் வாலி. இராமனைப்பற்றி அவனுடைய கணிப்பு இப்படி நொறுங்கும் என்று அவன் கனவிலும் கருதவில்லை. இதனால் ஏற்பட்ட மாபெரும் அதிர்ச்சியே வாலியை நிலை குலையச் செய்து விட்டது. தன்னால் பெரிதும் *மதிக்கப்பட்ட இராமன் இப்பொழுது மாறிவிட்டதை அவனால் தாங்கவே முடியவில்லை, என்ன செய்வது என்று புரியாத நிலையில், இராமன் மறைந்துநின்று அம்பு எய்ததும் கேலிக்கு இடமாக அமைந்துவிட்டது. 'தம்பியும் தானும் எதிர்ந்த போரிடை அம்பு இடை தொடுக்குமோ; தொடுக்கமாட்டான்' என்ற முடிவோடு வந்தவனுக்கு அம்பு இடையே தொடுக்கப்பட்டது முதல் அதிர்ச்சி.; அதுவும் மறைந்துநின்று தொடுக்கப்பட்டது இரண்டாவது பேரதிர்ச்சி. இந்த இரண்டு அதிர்ச்சியும் சேர்ந்து வாலியை நிலைகுலையச் செய்து, இவ்விரண்டிற்கும் காரணமான இராமன் எதிர்ப்பட்டவுடன் இருபது (4014 முதல் 4033 முடிய) பாடல்களில் எள்ளி நகையாடச் செய்கிறது. அவற்றுள் கீழே கொடுக்கப்பட்டுள்ள வரிகள் மிக இன்றியமையாதவை:

தீமைதான், பிறரைக் காத்து, தான் செய்தால் தீங்கு அன்று
ஆமோ (4018)
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலும்,
செய்கை. (4020)
இரக்கம் எங்கு உகுத்தாய்? என்பால் எப்பிழை கண்டாய்?
அப்பா! (4021)
மெலியவர் பாலதேயோ, ஒழுக்கமும் விழுப்பம்தானும்?
(4022)

....... "இலங்கை வேந்தன்
முறை அல செய்தான்" என்று முனிதியோ? - முனிவு
இலாதாய்! (4024)
ஒருவர்மேல் கருணை தூண்டி, ஒருவர்மேல் ஒளிந்து நின்று
வரிசிலை குழைய வாங்கி, வாய்அம்பு மருமத்து எய்தல்
தருமமோ? .......(4025)

சூரியன் மரபுக்கும் ஓர் தொல் மறு
ஆரியன் பிறந்து ஆக்கினையாம் அரோ! (4029)

வாலியைப் படுத்தாய் அலை: மன் அற
வேலியைப் படுத்தாய்-விறல் வீரனே! (4031)

*இங்கே வாலியால் கேடகப்பட்ட வினாக்கட்கு இராமன் மட்டும் அல்ல, யாராலும் விடை கூற முடியாது என்பது உண்மைதான்.*

*அடுத்தப்படியாக, இராமன் வாலிமேல் சார்த்திய குற்றச்சாட்டுகள் இரண்டு. ஒன்று, அடைக்கலம் என்று வந்த தம்பியை அடித்துத் துன்புறுத்தியது; இரண்டாவது, அவன் மனைவியைச் கவர்ந்தது. இவை இரண்டிற்கும் வாலி கூறும் சமாதானம் பொருத்தமாகவே தோன்றுகிறது. இவற்றுள் தம்பி மனைவியைக் கவர்ந்தது பெருங்குற்றமே என்பதில் ஐயமில்லை. ஆனால், அதற்கு வாலி கூறிய விடையும் சிந்திக்கத் தக்கதேயாம்.*

'ஐய! நுங்கள் அருங் குலக் கற்பின், அப்
பொய் இல் மங்கையர்க்கு ஏய்ந்த புணர்ச்சிபோல்

செய்திலன் எமைத் தே மலர் மேலவன்;
எய்தின் எய்தியது ஆக, இயற்றினான். (4046)

மணமும் இல்லை, மறைநெறி வந்தன;
குணமும் இல்லை, குல முதற்கு ஒத்தன;
உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கு அலால்.....
நிணமும் நெய்யும் இணங்கிய நேமியாய். (4047)

மனித சமுதாயத்தில்கூட அவ்வச் சமுதாயங்கள் உறையும் இடத்திற்கு ஏற்ப ஒழுக்கங்கள் மாறுபடுகின்றன. அப்படி இருக்க, மனித சமுதாயத்தின் நெறிமுறைகளை விலங்குச் சமுதாயத்திற்கு ஏற்றுவது சரியன்று என்ற வாலியின் விளக்கத்தை ஏற்றுக்கொள்ளாமல், 'விலங்குகளேயாயினும் கற்றறிந்தவர்கள் புத்தேளிரே; எனவே, நீ செய்தது குற்றம்தான்' என்கிறான், இராகவன். இப்போது இவ்வாறு கூறும் இராகவன் வாலி-சுக்கிரீவப் போர் தொடங்குவதற்கு முன்னர்ப் பேசிய பேச்சுகள் வேறானவை யாகும். அண்ணனைக் கொல்லத் துணை தேடிய சுக்கிரீவனை வெறுத்து இலக்குவன் மனம் நொந்துள்ளான். தமையனைப் பார்த்து, ''தன் உடன்பிறந்தவனைக் கொல்ல "யமனை அழைத்து வந்திருக்கும் இப்புல்லிய குரங்காகிய இச்சுக்கிரீவன் தஞ்சம் பெறுதற்குத் தகுதியுடையவனோ" (3976) என்று இலக்குவன் கேட்க. அதற்கு விடையாக இராகவன் கூறிய சொற்கள் இப்போது நினைவுகூரத் தக்கன ஆகும். 'ஐயனே! மனித சமுதாயத்தில் காணப்பட வேண்டிய உறவுமுறையின் சிறப்பை, செய்வதறியாது நினைத்தபடி வாழும் இவ் விலங்குகள் சமுதாயத்தில் ஏற்றிப் பேசுவது முறையாகாது என்ற கருத்தில்,

'அத்தா! இது கேள்' என, ஆரியன் கூறுவான், 'இப்
பித்து ஆய விலங்கின் ஒழுக்கினைப் பேசல் ஆமோ?
எத்தாயர் வயிற்றினும், பின் பிறந்தார்கள் எல்லாம்
ஒத்தால், பரதன் பெரிது உத்தமன் ஆதல் உண்டோ?
(3977)

என்று கூறுகிறான்.

போரின் முன்னர் இவ்வாறு பேசிய இராகவன், அது முடிந்த பிறகு வாலியிடம் 'கற்றறிந்த நீ விலங்கன்று; தேவர்களோடு ஒப்பு ஆவாய்' (4054).. எனவே, நீ செய்தது தவறுதான்' என்று கூறுவது பொருந்துவதாக இல்லை.

மாபெரும் அறிஞனாகிய இராகவன் இவ்வாறு பேசலாமா என்று நம் மனத்தில் தோன்றுவத நியாயமே யாகும். கம்பன் பாடல் முறையில் இதற்கும் ஓர் அமைதி காணமுடியும். "பித்தாய விலங்கின் ஒழுக்கினைம் பேசலாமோ" என்று இலக்குவனிடம் இராமன் கூறும் பொழுது வாலியைப் பற்றி ஒன்றும் அறியாத நிலையில் இருந்தான். அனுமான் கூற்றே, வாலியைப் பற்றி இராகவன் மனத்தில் ஒரு வரைப்படம் அமைந்திருந்தது. சுக்கிரீவனிலிருந்து வாலியை வேறுபடுத்தி அந்நிலையில் இராமன் கானவில்லை. அதனால்தான் 'பித்தாய விலங்கு' என்று இருவரையும் ஒரே தட்டில் வைத்தும் பேசினான்.

தன் அம்பைத் தடுத்து நிறுத்தயதால் வாலியின் பேராற்றலையும், பல வினாக்களைக் கேட்டுத் தன்னைத் திணறச் செய்ததால், வாலியின் அறிவாற்றலையும் தன் உயிர் போவதைப் பற்றிச் சற்றும் கவலைப்படாததால் வாலியின் மனத்திண்மையையும் இராகவன் நன்கு அறிந்து கொண்டான். அதனாலேயே நீ "விலங்கு அன்று புத்தேனிரே" என்று பேசுகின்றான்.

இறுதியாக, வாலி மிகவும் சங்கடமான வினாவை எழுப்புகிறான். இராமனை நோக்கி, வாலி, 'போனவை போகட்டும். இனி நான் கேட்கப்போகும் ஒரு வினாவிற்குமட்டும் விடை தருவாய்' என்ற முறையில், "வெவ்விய புளிஞர் என்ன, விலங்கியே மறைந்து வில்லால், எவ்வியது என்னை?" என்று வினாவுகிறான். இந்த வினாவிற்கு இலக்குவன் முன்னே வந்து, "உன்னைக் கொல்வதாக உன் தம்பிக்கு வாக்குக் கொடுத்துவிட்டபடியால், நீயும் வந்து சரணம் என்று அடிவில் வீழ்ந்தால் என்ன செய்வது என்ற கருத்தில்தான் மறைந்து நின்று அம்பு தொடுத்தான்" என்று விடை கூறியதாகப் பாடல் அமைந்துள்ளது. இவ் விடை எவ்வளவு போலித்தனமானது என்பதை எளிதில் விளங்கிக்

கொள்ள இயலும். மறைந்துநின்று அம்பு எய்யவேண்டு மென்று இராமன் எப்போதோ முடிவுசெய்து விட்டான். சுக்கிரீவனிடம் பேசிக்கொண்டிருந்த போதே "வேறுநின்று எவ்விடத் துணிந்து அமைந்தது; என் கருத்து இது" *(3944)* என்று கூறுகிறான். ஆதலால்; அண்ணன் தம்பி போர்க் களத்தில் இராகவன் திடீரென்று இம்முடிவிற்கு வந்தான் என்று கூறுவதுபோல இலக்குவன் பேசுவது பொருத்த மற்றதாகும். இராகவன் இவ்வினாவிற்கு விடை கூற முடியாமையால்தான் இலக்குவன் முன்வந்து இந்தச் சமாதானத்தைக் கூறுகிறான். இதனை அடுத்து வரும் பாடலுக்கு உரை காண்பது சற்றுக் கடினமாக உள்ளது.

கவி குலத்து அரசும் அன்ன கட்டுரை கருத்தில்
கொண்டான்
அவியுறு மனத்தன் ஆகி, 'அறத் திறன் அழியச் செய்யான்
புவியுடை அண்ணல்' என்பது எண்ணினன் பொருத்தி,
முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியின் இறைஞ்சிச்
சொன்னான் (4060)

இப்பாடலில், வாலியின் மனமாற்றம் பேசப்படுகிறது. இராமனை இதுவரை இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டும் விடை கூற முடியாத சங்கடமான வினாக்களைத் தொடுத்தும் இராம-இலக்குவர்க்குப் பிரச்சினையை உண்டாக்கிக் கொண்டிருந்த வாலி, திடீரென்று மனம் மாறி, இதுவரை தான் சென்ற திசையிலிருந்து நேர் எதிர்த்திசையில் செல்லத் தொடங்குகிறான்.

இப்பாடலின் முதலடியில் வரும் 'அன்ன கட்டுரை கருத்துள் கொண்டான்' என்ற சொற்றொடருக்கு - கோவைக் கம்பன் அறநிலையப் பதிப்பின் உரை கண்டவர்கள் உள்பட அனைவருமே 'இலக்குவன் கூறிய சொற்களைக் கருத்துள் வாங்கிக்கொண்டான்' என்றே பொருள் கொண்டனர். இவர்கள் கூறும் பொருளை ஏற்றுக்கொண்டு, வாலியின் வளர்ச்சியைக் காண்பதே பின்வரும் சில பக்கங்களில் பேசப்படும் செய்திகள்.

இலக்குவன் கூறிய விடையைப் பொருத்தமற்றது என்ற அடிப்படையிலேயே இதுவரை வாலியின் செயல் ஆயப்பெற்றது. அதன் விளைவாகவே, 'அன்ன கட்டுரை கருத்தில் கொண்டான்' என்ற தொடருக்கு இலக்குவன் கூறிய சொற்களைக் கருத்துள் கொண்டான் என்று பிறர் கூறும் பொருளை மறுத்து 'அன்ன கட்டுரை' என்பதை இராமன் கூறிய சொற்கள் எனப் பொருள் கூறப்பெற்றது.

இவ்வாறு பொருள் கொள்ளாமல் 'அன்ன கட்டுரை' என்பதற்கு இலக்குவன் கூறிய சொற்கள் என்றே டாக்டர் ம.ரா.போ.குருசாமி கூறியுள்ளார். அவர் கருத்தை ஏற்றுக்கொண்டால் அதற்குரிய விளக்கம் வருமாறு: மார்பில் அம்பு எய்யப் பெற்ற வாலி புறத்தே இராமனை ஏசினாலும் அகத்தே ஞானம் பெற்று விரைவாக வளர்கிறான் என்று கூறும் கருத்தை இவரும் ஏற்றுக்கொள்கிறார். அந்த நிலையில் இராமனுடைய அம்பு 'ஸ்பரிச தீட்சை' செய்வித்தது. கார்முகில் கமலம் பூத்து நின்ற வடிவம் 'நயன தீட்சை' செய்வித்தது. இவை இரண்டும் போக வாலியின் செவிகளில் இலக்குவனால் மந்திர தீட்சையும் செய்யப் பெற்றது என்று கூறுகின்றார். இந்த அடிப்படையை ஏற்றுக்கொண்டு இந்த ஆசிரியன் தரும் விளக்கம் வருமாறு:

மந்திர தீட்சை என்று கூறியவுடன் ஏதோவொரு குறிப்பிட்ட மந்திரத்தைத்தான் கூறவேண்டும் என்பது பொருளன்று. ஆன்மாவின் பக்குவத்திற்கு ஏற்ப இந்த உபதேசம் எந்தச் சொல்லாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஏனையோரைப் பொறுத்தமட்டில் அச்சொற்கள் வாலாயமாக வழங்கும் பொருளைத் தரலாம். ஆனால் அதே சாதாரணச் சொற்கள் சீடனின் பக்குவத்திற்கேற்ப மந்திரமாக மாறிவிடும். இது ஆன்மீகவாதிகள் அறிந்த ஒன்றாகும். அருணகிரி நாதரைப் பொறுத்தமட்டில் குருவாக வந்த பெருமான் செய்த உபதேசம் "சும்மா இரு, சொல் அற" என்ற நான்கு வார்த்தைகளே ஆகும். சாதாரண மக்களைப் பொறுத்தமட்டில் 'ஒன்றும் பேசாதே சும்மா இரு' என்ற பொருளைத் தரும் இந்த நான்கு சொற்கள் அருணகிரியின் ஆன்மீக வளர்ச்சிக்கு ஒரு பாலமாய்

அமைந்தது. அதே போல மகாகவி பாரதியாரைப் பொறுத்தமட்டில் மாங்கொட்டைச் சாமி என்ற சித்தர், "முட்டாள் அழுக்குமூட்டையை நீ உள்ளே சுமக்கிறாய்; நான் வெளியே சுமக்கிறேன், போடா" என்று கூறிய சொற்களே மந்திரமாக அமைந்து, பாரதியின் வாழ்க்கையில் மாபெரும் திருப்பத்தைத் தந்தன. "சும்மா இரு சொல் அற" என்பதும், "நான் வெளியே சுமக்கிறேன் போடா" என்பது எப்பொழுது, எப்படி மந்திரம் ஆகின்றன? இச்சொற்களைக் கூறியவர்கள் நம்மைப் போன்ற குறைமொழி மாந்தர்கள் அல்லர். அவர்கள் நிறைமொழி மாந்தர்களாவர். அவர்கள் ஆணையால் இந்தச் சாதாரணச் சொற்கள் மறைமொழியாக, அதாவது மாபெரும் சக்தி ஊட்டப் பெற்ற மந்திரங்களாக மாறிவிட்டன. சக்தியூட்டப் பெற்ற மந்திரங்கள் எப்பொழுது அந்தச் சக்தியை வெளிப்படுத்துகின்றன? இச்சொற்கள் சென்று சேரும் இடம் பக்குவப்பட்ட ஆன்மாக்களாக இருப்பின், இவை மந்திரங்களாக மாறி ஆன்மாக்களை வழி நடத்துகின்றன. ஓர் ஆன்மா நல்முறையில் பக்குவப்பட்டிருப்பின் அந்தச் சொல்லையும் மந்திரமாக மாற்றி நிறைமொழி மாந்தராகிய குருமார்கள் அம் மந்திரச் சொற்களையே உபதேசமாக மாற்றிவிடுவர். இந்த அடிப்படையைப் புரிந்துகொண்டால் ம.ரா.போ. போன்றவர்களின் விளக்கத்தையும் ஏற்றுக் கொள்ள முடியும். இந்த விளக்கத்தின் உயிர்நாடி.

> முன்பு, நின் தம்பி வந்து சரண் புக, முறை இலோயைத்
> தென் புலத்து உய்ப்பென் என்று செப்பினான்; "செருவில்,
> நீயும்,
> அன்பினை உயிருக்கு ஆகி, அடைக்கலம் யானும், என்றி"
> என்பது கருதி, அண்ணல், மறைந்து நின்று எய்தது
> என்றான். **(4059)**

என்ற பாடலின் மூன்றாவது அடியில் உள்ளது. இம் மூன்றாவது அடியிலுள்ள 'என்றி' என்ற சொல்லை, 'என்பது கருதி' என்ற வினை எச்சத்தோடு தொடர்புபடுத்தி 'என்று சொல்லிவிடுவாயோ என்பது கருதி' என்றுதான் அனைவரும் பொருள் கூறியுள்ளனர். மேலோட்டமாகப் பார்ப்பதற்கு

இப்பொருள் நியாயமானதே ஆகும். வாலியைப் பொறுத்த மட்டில் அவன் காதுகளில் விழுந்த இந்தச் சொற்களுக்கு இப்படித்தான் பொருள் கொண்டிருப்பான். காதில் விழுந்த சொற்களுக்கு அறிவு பொருள் செய்துகொள்ளும் முறை இதுதான். இவ்வாறு பொருள் கொள்ளும்போது புறமனத்தில் இச்சொற்களின் பொருள் இவ்வாறுதான் படுகிறது.

அப்படியானால், ‘அன்ன கட்டுரை கருத்துள் கொண்டான்’ என்ற சொற்கள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. வாலியைப் பொறுத்தமட்டில் முதலில் காதின் வழிப் புகுந்த சொற்கள் நாம் கூறும் அதே பொருளைத்தான் தந்தன. ஆனால், இந்த நேரத்தே வாலி அகமனத்தில் முழு வளர்ச்சி பெற்றவன் ஆகிவிட்டான். ஸ்பரிச தீட்சை, நயன் தீட்சை என்ற இரண்டும் பெற்று அந்த ஆன்மா வளர்ச்சியடைந்து குருவின் ஒரு சொல்லுக்காக (மந்திர உபதேசத்திற்காக)க் காத்துக்கொண்டு நிற்கிறது. அந்தச் சொல் இலக்குவன் என்ற குருவின் மூலமாக வழங்கப்படுகிறது. இப்பொழுது அந்த மூன்றாவது அடியினைச் சிந்தனைக்குக் கொண்டு வந்தால் வேறு பொருள் தொனிப்பதைக் காண முடியும்.

அன்பினை உயிருக்கு ஆகி, ‘அடைக்கலம் யானும் என்றி’ - இதன் பொருள் வருமாறு: உடலை விட்டுப் பிரிந்துபோகப் போகின்ற உன் உயிருக்கு இவ் உடம்பு இருககுமபொழுத நீ அனபுடையவனாக இருததல வேணடும. உடலோடு இருக்கும்வரைதான் உயிரின வளர்ச்சியைக் காண முடியும். ஆகவே, இப்பொழுது உன் உயிருக்கு நிறைந்த அன்பினைச் செலுத்துவாய் ஆக. அப்படிச் செலுத்த வேண்டுமேயானால், அதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. கிடைத்தற்கரிய ஒரு சந்தர்ப்பம் உனக்குக் கிடைத்திருக்கிறது. மூலப்பொருள் உன் எதிரே நிற்கின்றது. அப்பொருளினிடத்து “அடைக்கலம் யானும் என்றி”- யான் உன்னிடம் அடைக்கலமாக வந்துள்ளேன் என்பாயாக. இவ்வாறு பொருள் கொள்கையில் ‘என்றி’ என்பது ‘என்பாயாக’ என்ற வியங்கோள் பொருளில் பொருள் பண்ணப்பட வேண்டும். சாதாரண முறையில் பொருள் செய்யும்போது ‘என்று சொல்வாயேயானால்’ என்று பொருள்படும். மந்திரமாகும்

பொழுது 'அடைக்கலம் யானும் என்றி', 'யான் உன் அடைக்கலம் என்று சொல்வாயாக' என்ற பொருளைத் தந்து நிற்கின்றது. இப்படிச் செய்வதால் அந்த மூலப்பொருளுக்கு நீ ஏதோ உபகாரம் செய்துவிட்டாய் என்று நினையற்க. அடைக்கலமாக உன்னைக் கொடுப்பதால் அந்த மூலப் பொருளுக்கு எவ்வித லாபமும் இல்லை. 'தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச் சங்கரா யார்கொலோ சதுரர் அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்; யாது நீ பெற்றது என்பால்" (கோயில் 10) என்ற திருவாசகத் தொடர் இங்கு ஒன்று ஒப்பு நோக்கத்தக்கது. அதன் எதிராக முழுப்பயனும் உன் உயிருக்கே வந்து சேரும் என்ற பொருள் படும்படி 'அன்பினை உயிருக்கு ஆகி' என்ற பொருளில் உயிர்க்கு அன்பினை ஆகி இருக்கவேண்டுவாயானால் 'யானும் அடைக்கலம் என்றி' (என்பாயாக),

இவ்வாறு இலக்குவன் கூறிய அடுத்த விநாடியே வாலி சிறியன சிந்தியாதவனாகி முழுவளர்ச்சி பெற்று, சம திருஷ்டி உடையவனாக மாறி ஸ்திதப்பிரக்ஞ மனநிலையை அடைந்தவன் ஆகிவிட்டான். மறைந்து நின்று ஏன் அம்பு எய்தாய் என்ற வினாவிற்கு விடை எதிர்பார்க்கும் நிலையில் இப்பொழுது வாலி இல்லை. அந்த வினாவே பொருளற்ற வினாவாக மாறிவிட்டது. இந்நிலையில் அடுத்த பாடலில் வாலியின் சொற்களும் கவிஞனால் பேசப்படுகின்றன.

கவி குலத்து அரசும் அன்ன கட்டுரை கருத்தில்
கொண்டான்;
அவியுறு மனத்தன் ஆகி, 'அறத்திறன் அழியச் செய்யான்
புவியுடை அண்ணல் என்பது எண்ணினன் பொருந்தி,
முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியின் இறைஞ்சி,
சொன்னான். **(4061)**

தாய் என உயிர்க்கு நல்கி, தருமமும், தகவும், சால்பும்
நீ என நின்ற நம்பி! நெறியினின் நோக்கும் நேர்மை

நாய் என நின்ற எம்பால், நவை அற உணரலாமே?
தீயன பொறுத்தி' என்றான் - சிறியன சிந்தியாதான். (4061)

உலகிடைத் தோன்றிய எல்லா உயிர்களும் எடுத்துக்கொண்ட உடல் காரணமாக அந்தந்த உயிர்களின் மேல் அன்பு செலுத்துகின்றன. செலுத்தப்படும் இவ்வன்பு காரணமாக இந்த உயிர் நற்கதி அடைய வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் அன்பு செலுத்தப்பட வேண்டும். அரும் பாடுபட்டுப் பல பிறவிகளில் தவம் முதலிய பலவற்றைச் செய்து உயிர்க்கு உய்கதி நாட வேண்டிவரும். இதுதான் அனைவரும் அறிந்த வாழ்க்கை முறை. இவ்வாறில்லாமல் சில உயிர்கட்குச் சில் நேரங்களில் ஓர் ஒப்பற்ற வாய்ப்புக் கிடைக்கிறது. எந்தப் பரம்பொருளை அடைய உயிர் பல்வேறு முயற்சிகளைச் செய்கிறதோ அந்தப் பரம்பொருள் அதிர்ஷ்ட வசமாகத் தானே இறங்கிவந்து (அவதரித்து) அந்த உயிரின்முன் நிற்கின்றது. இதிலொரு துரதிருஷ்டம் என்னவென்றால், பல பிறவிகளிலும் தான் தேடும் அப்பொருள்தான் இப்பொழுது தன்முன்னே நிற்கின்றது என்பதை அறிய அஞ்ஞானத்தால் மூடப்பெற்ற அந்த ஆன்மாவுக்கு வாய்ப்பில்லாமல் போகின்றது. கிடைத்தற்கரிய இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்ட ஆன்மா பின்னர் வருந்துகிறது. "பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற்கரியன் பெம்மானே" (யாத்திரைப் பத்து 7) என்று மணிவாசகர் இந்தப் பரிதாப நிலையைச் சுட்டிக்காட்டுகிறார். இந்த இக்கட்டான நிலையில் குரு அருள் முன்னின்று எதிரே நிற்பவன் யார் என்பதை விளக்கி, 'உடனே அவனிடம் உன்னை அடைக்கலமாகத் தந்துவிடு' என்று குறிப்பால் உணர்த்துகிறது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான் "அன்பினை உயிர்க்கு ஆகி அடைக்கலம் யானும் என்றி" என்கிறான் இலக்குவன்.

வாலியின், 'மறைந்து நின்று கொன்றதேன்?' என்ற வினாவிற்கு விடையை எதிர்பார்த்துக் கொண்டு அவனுடைய அறிவும் புறமனமும் நிற்கின்றன. ஆனால் விடை வரவில்லை. அதற்குப் பதிலாக 'யான் உன் அடைக்கலம் என்றி' என்ற உபதேசம் வருகிறது. பழைய வாலியாக இருப்பின், 'என்

வினாவிற்கு என்ன விடை' என்று மறுபடியும் கேட்டிருப்பான். 'மறைந்து நின்று கொன்றது ஏன்' என்ற வினா எந்த விநாடி வாலியின் வாயிலிருந்து புறப்பட்டதோ, அந்த விநாடியே பழைய வாலி மறைந்து ஆன்ம வளர்ச்சி பெற்ற வாலி அங்கே தோன்றிவிடுகிறான். இப்புதிய வாலிக்குப் பழைய வாலி கேட்ட அந்த வினா நினைவில்கூட இல்லை. அதற்கு விடையை எதிர்பார்க்கும் சூழ்நிலையும் இல்லை. நயன, ஸ்பரிச தீட்சைகள் பெற்று வளர்ந்துள்ள வாலி என்ன செய்ய வேண்டுமென்பதை இலக்குவன் வடிவில் குரு அருள் நின்று 'யான் உன் அடைக்கலம் என்றி' (என்பாயாக) என்று உபதேசம் செய்கிறது.

'உயிர்க்கு அன்பினை ஆகி யானும் அடைக்கலம் என்றி' என்ற சொற்கள் புதிய வாலியின் அகமனத்தின் ஆழத்தில் சென்று பதிகின்றன. அடுத்த விநாடியே வாலி முழுமாற்றம் பெற்றவனாகிப் பேசத் தொடங்குகின்றான். இந்தக் கருத்தை நுண்மையாகக் கூறவந்த கவிஞன், 'அன்ன கட்டுரை கருத்தில் கொண்டான்' என்று பேசுகிறான். அக மனத்தின் ஆழத்தில் சென்ற சொற்கள் அவனை அவியுறு மனத்தனாக மாற்றிவிட்டன என்பதையும் கவிஞன் தெரிவிக்கின்றான். 'அவியுறு மனத்தன்' என்பதற்குத் துயரத்தால் முறிந்த மனத்தை உடையவன் என்று பிறர் பொருள் கூறியுள்ளனர். இவ்வாறு கூறுபவர் வாலியின் ஆன்மீக வளர்ச்சியை அறிந்து கொள்ளவில்லை. என்பது தெளிவு. 'அவியுறு' என்பது 'அவித்தல் உற்ற' என்று விரிந்து தல் விகுதிபெற்ற தொழிற் பெயராக அவித்தல் என்று நிற்கும். நெல்லை அவித்தல் என்றால் முளை விடுகின்ற அதன் இயல்பை மாற்றுதல் என்ற பொருள் தந்து நிற்கும். அதுபோலப் பல்வேறு முரண்பாடுகளுக்கும் இடந்தருகின்ற மனத்தைத் தன் ஞானத்தால் அவித்துப் பதப்படுத்திவிட்டான் என்ற பொருளில்தான் அவித்தலையுற்ற மனத்தன் என்று சொல்ல வந்த கவிஞன், 'அவியுறு' என்று கூறுகிறான். இவ்வாறு கூறுவதால் வாலியின் மனநிலையில் ஏற்பட்ட மாற்றத்தை இரண்டு சொற்களால் கூறுகின்றான். மனத்தை அவித்து விட்டான் என்பதால் பழைய வாலியினுடைய மனம் மீட்டு

புதிய வாலியிடம் தோன்றப்போவதில்லை என்பதையும் கவிஞன் விளக்கிவிடுகிறான்.

அவியுறு மனத்தனாக மாறிவிட்ட ஒருவன் சிறியன சிந்திக்கமாட்டான் என்று சொல்லத் தேவையில்லை. அப்படியிருக்க, சிறியன சிந்தியாதான் என்று கவிஞன் தரும் அடைமொழி வாலி முழு ஆன்மீக வளர்ச்சி பெற்று, சமதிருஷ்டி உடையவனாக ஆகிவிட்டான் என்று உடன்பாட்டுமுகமாகக் கூறாமல், கவிஞன் தனக்கே உரிய பாணியில் 'சிறியன சிந்தியாதான்' என்று கூறுகிறான்.

'அன்ன கட்டுரை' என்பதற்கு இலக்குவன் கூற்று என்று பொருள் கொள்ளாமல், இராமன் சொற்கள் என்று பொருள் கொண்டு, வாலியின் மனமாற்றம் இனிப் பேசப்படுகின்றது. நகைப்பைத் தரக் கூடிய இலக்குவன் விடையைப் பேரறிவாள னாகிய வாலி மனத்துள் வாங்கிக்கொண்டவுடன் மனம் மாறினான் என்ற கூற்றை மறுத்து, இனி வரும் பகுதியில் வாலியின் மனமாற்றத்திற்குக் காரணம் ஆயப்படுகின்றது. அவ்வாறாயின் 'அன்ன கட்டுரை' என்ற தொடருக்கு வேறென்ன பொருள் கூற முடியும்? இலக்குவன் விடையைத் தொடர்ந்து இப்பாடல் வருதலின் 'அன்ன' என்ற சுட்டுச் சொல்லுக்கு இவ்வாறு பொருள் கூறினர். உண்மையில், 'அன்ன' என்ற சுட்டு இராமனுக்கும் வாலிக்கும் நடந்த வாதங்களையும் அதில் இராமன் கூறிய விடைகளையும் மனத்துட் கொண்டான் என்றே பொருள் கொள்ளல் வேண்டும். இராமனுடன் வாதிடுகின்றவரையில் இராமன் கூறுகின்ற சொற்கள் வாலியின் காதுகளுள் புகுந்து அவன் புற மனத்திலேயே தங்கிவிட்டன. உடனே எதிர்வாதம் செய்ய வேண்டும் என்ற கருத்தோடு இராமன் சொற்களை வாலி கேட்டான் ஆதலின் இதுவரை, அச்சொற்கள் 'மனத்தில்' (புறமனத்தில்) பதிந்தனவே யல்லாமல் 'மனத்துள்' (அகமனத் தில்) புகவே இல்லை. வாதப் பிரதிவாதங்கள் அனைத்தும் ஓய்ந்து விட்ட நிலையில் இராமனுடைய சொற்கள் வாலியின் மனத்துள் (அகமனத்துள்) செல்ல முற்பட்டன. அவை செல்லுமாறு வாலியின் மனநிலை மாற்றம் கொண்டுவிட்டது.

வாலியின் இந்த மனமாற்றம் எவ்வாறு ஏற்பட்டது என்பதை முன்னர் விரிவாகக் கண்டோம். வாலியின் புற மனம், அவன் கூர்த்த அறிவு, வாய் என்ற மூன்றுமே இராமனுடன் வாதம் செய்து, அவன் தவறிழைத்தான், வில்லறம் துறந்தான் என்பவற்றை நிலைநாட்டுவதிலேயே முற்பட்டிருந்தன. எனவேதான், இராமன் கூறிய கட்டுரைகள் அகமனத்துக்குள் போகவில்லை. இந்த வாதம் நடைபெறுகின்ற நேரத்திலேயே வாலியை அறியாமல், அதாவது அவனுடைய புற மணம், அறிவு என்பவற்றிற்கு அப்பாற்பட்டு அக மனத்தின் ஆழத்தில், உணர்வுகளின் அடிப்படையில், ஓர் வளர்ச்சி, செடியாக மரமாக முளைத்துக்கொண் டிருந்தது என்று முன்னர்க் கூறினோம். அகமனத்தின் ஆழத்தில் உணர்வுகளின் மோதலில் நான்கு கரணங்களில் மனம் போக, எஞ்சிய சித்தம், புத்தி, அகங்காரம் என்ற மூன்று கரணங்களும் ஒருமுனைப்பட்ட நிலையில் 'இராம' என்ற சொல்லும், அந்தச் சொல்லின் வண்ணமான நீலக் கார்முகில் கமலம் பூத்து வரிவில் ஏந்தி மண்ணில் வந்த காட்சியும் வாலியை மாற்றத் தொடங்கி, "அன்ன கட்டுரை கருத்துள் கொண்டான்" என்று கூறப்பெறும் அந்த விநாடியில் வாலியை முழுவதுமாக மாற்றிவிட்டன. இந்த மாற்றம் புற மாற்றமோ, செயற்கை மாற்றமோ, அரைகுறை மாற்றமோ அல்ல; மீள முடியாத முழுமாற்றம் இது. இத்தகைய மாற்றம் பெற்றவர்கள், மாற்றம் பெறுவதற்குமுன் காணுகிற காட்சிக்கும், பெற்றபின் காணுகின்ற காட்சிக்கும் கடல் அனைய மாறுபாடு உண்டு என்று கூறினோம். இப்புதிய காட்சியில் பழமையிற் கண்ட பகைமை, சிறுமை, அற்பத்தனம், நியாயமற்றது, கொடுமை என்பனவெல்லாம் மாறிவிடுகின்றன. பகைமை என்ற ஒன்றோ, கொடுமை என்ற ஒன்றோ இவற்றின் மாறாக நட்பு என்ற ஒன்றோ, நன்மை என்ற ஒன்றோ தனியே ஒன்று இல்லை என்பதை இக்காட்சி கண்டவர்கள் அறிய முடியும். இது எவ்வாறு என்பதும், இது இயலுமா என்பதும் புரிந்துகொள்வது கடினம். ஓர் உதாரணத்தின் மூலம் ஓரளவு விளங்கிக் கொள்ளலாம்.

சென்னை போன்ற பெருநகரத்தின் நடுவே நிற்கின்ற ஒருவன் வானளாவிய கட்டடங்களையும் காண முடிகின்றது. ஒரே இடத்திலும் அகல நீளங்களிலும் ஒன்றிற்கொன்று முற்றிலும் மாறுபட்டு மனத்தில் வேறுபாட்டு உணர்ச்சியைத் தோற்றுவிக்கின்றது. இரண்டு கட்டடங்களில் ஒன்றை மிக உயர்ந்தது என்றும், மற்றொன்றை மிகக் குட்டையானது என்றும், ஒன்றை நீள அகலங்களில் மிகப் பெரியது என்றும், மற்றொன்றை மிகக் குறுகியது என்றும் அறிகிறோம். இவை அவனுடைய கற்பனை அன்று; உண்மையே ஆகும். ஆனாலும் அதே மனிதன் ஜெட் விமானத்தில் ஏறி நாற்பதினாயிரம் அடி உயரத்தில் பறக்கும்பொழுது இதே கட்டடங்களைக் காண நேர்ந்தால் வியப்படைவான். எல்லாக் கட்டடங்களும் ஒரே உயரமும், ஒரே அகல நீளமும் பெற்றிருப்பதாகத் தெரிவதைக் காணமுடியும். முன்னர்க் கண்டதும் உண்மைதான்; இதுவும் உண்மைதான். வேறுபாடு எங்கே நிகழ்ந்தது? தரைமட்டத்தில் இருக்கும்பொழுது காணப்பட்ட வேறுபாடுகள், விமானத்தில் பறக்கும்பொழுது மறைகின்றன. உலகியல் நிலையில் அறிவைமட்டும் வைத்துக்கொண்டு, தன் பலத்தைமட்டும் நம்பி வாழ்ந்து கொண்டிருந்த வாலி, சராசரி மனிதனாவான். அந்நிலையில் அறம்-மறம், நேர்மை-நேர்மையின்மை, நீதி-அநீதி, பகை-நட்பு, பகல்-இருள் என்பவற்றிடையே மிகுந்த வேறுபாட்டை அவனால் காணமுடிந்தது. ஜெட் விமானத்தில் போகின்றவனைப் போல, 'உபதேசம்' பெற்றுப் பரஞானம் பெற்ற வாலி கற்பனைக்கு அடங்காத அளவு வளர்ச்சி பெற்ற நிலையில் மேலே கண்ட வேறுபாடுகள் மங்கி மறைந்து விடுகின்றன. எனவே, இராம என்ற மந்திரத்தைக் கண்ணுற்றதும், கூர்வாளியால் அறிவு பெற்றதும் நடைபெற்ற பிறகு இராமன் கூறிய சொற்கள் (அன்ன கட்டுரை) கருத்துள் புகுந்தவுடன் முழுமன மாற்றம் ஏற்பட்டுவிடுகிறது. அந்த நிலையில் வாலி பேசத்தொடங்குவது நம்மை அதிர்ச்சி கொள்ளச் செய்கிறது. வாலியின் மனமாற்றத்தை அறிந்துகொள்ளக்கூடிய அளவு நாம் உயர்ந்தாலொழிய நாம் புரிந்துகொள்ள முடியாது. 'அற வேலியைப் படுத்தாய்', 'பண்பு ஒழிந்தாய்' என்பன போன்ற

சொற்களால் எந்த இராமனைச் சாடினானோ அதே இராமனை 'உயிர்கட்குத் தாய் போன்றவன்', 'சாத்திரங்களின் அறநெறியில் நிற்பவன்' என்றெல்லாம் பேசத் தொடங்குகிறான்.

தாய்என உயிர்க்கு நல்கி, தருமமும், தகவும், சால்பும்
நீ என நின்ற நம்பி! நெறியினின் நோக்கும் நேர்மை
நாய் என நின்ற எம்பால், நவை அற உணரலாமே?
தீயன பொறுத்தி என்றான் - சிறியன சிந்தியாதான். **(4061)**

சில விநாடிகளுக்குமுன்னர் அம்பின்மூலம் தன் உயிரைப் போக்கி நிற்கும் ஒருவனைப் பார்த்து 'உயிரைக் காப்பதில் தாய் போன்றவனே! தருமம், சால்பு உடைமை என்பவற்றின் மொத்த உருவாக உள்ளவனே!' என எப்படிக் கூற முடிந்தது? குழந்தையின் தேவைக்கு அவசியமானால் அக்குழந்தையின் கால்கைகளைப் பிடித்துக்கொண்டு தாங்கமுடியாத கசப்பு மருந்தைப் புகட்டுவதைக் காண்கிறோம். கசப்பு மருந்தைப் புகட்டுவதால் தாய் அன்பில்லாதவள் என்று கூறுவது எவ்வளவு அறிவீனமோ அவ்வளவு அறிவீனமானது இராமன் செயலைக் குறை கூறுவது. கசப்பு மருந்து குழந்தையின் நோயைப் போக்கி வாழ வைக்கின்றது. வாலியைப் பற்றியிருந்த நோய்கள் பல. கல்வி கேள்விகளால் வந்த ஆணவம். தோளினால் வந்த ஆணவம் (3823), உலைவுஇல் பூதம் நான்கு உடைய ஆற்றலினால் (3824) வந்த ஆணவம், பொரக் கிட்டுவாரின் வலிமை பாகம் எய்துவதனால் வந்த ஆணவம் (3825).. இவை அனைத்தையும்விட, 'நான் இறைவனுக்குப் பணி செய்கின்றேன்' என்ற எண்ணத்தால், அதாவது அட்டமூர்த்தி தாள் பணியும் ஆற்றலால் (3825) வந்த ஆணவம் ஆகிய பல நோய்கள் அவனைப் பற்றியிருந்தன. உடல் வன்மை உடையவர்களின் உள்ளே இருந்து அரிக்கும் நோய்களை எளிதில் அறிந்துகொள்ள முடியாது. மருத்துவன் ஒருவனே அறிய முடியும். ஆணவம், கன்மம், மாயை என்னும் முக்குற்றங்களில் கன்மம், மாயை என்ற குற்றங்கள் வாலியைப் பற்றவில்லை. ஆனால், அவனையும் அறியாமல் அகந்தை என்ற கிழக்கு அவனுள் வேரோடித் தழைத்து நின்றது.

வேரோடிய இந்த அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் பணியைத்தான் இராகவன் ஏவிய கூர் வாளி செய்தது. இக்கிழங்கு எடுபட்டவுடன் தன்னை நாய் போன்றவன் என்ற கருத்தில், 'நாய் என நின்ற எம்பால்' என்று பேசத் தொடங்குகிறான். இந்த மனமாற்றம் ஏற்பட்டுவிட்டது என்பதை - வாலியின் காட்சியில், எண்ணத்தில், சொல்லில் இம்மாறுபாடு தோன்றிவிட்டது என்பதைக் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன் 'சிறியன் சிந்தியாதான்' என்ற ஒரே தொடரில் விளக்கிக் காட்டிவிடுகிறான்.

பெரிய கோடு என்ற ஒன்றை நினைத்துப் பேசுகின்றோம். அக்கோடு தனியே இருக்கும் வரையில்தான்; அக்கோட்டின் பக்கத்தில் அதைவிடப் பெரிய கோடு வரையப்பட்டவுடன் இதுவரை எதனைப் பெரிய கோடு என்று கூறினோமோ, அதுவே சிறிய கோடு ஆகிவிடுகிறது. உண்மையில் முதல் கோட்டில் மாற்றமில்லை; நம் பார்வையில் வேறொரு கோட்டின் வரவால் மாற்றம் ஏற்படுவதுதான் அதனைச் சிறிய கோடு என்று அழைப்பதற்குக் காரணமாகும். அதே போலப் பகையின்றி அம்பு எய்தல், சோதரர் சண்டையுள் குறுக்கிடுதல், ஒருவன் பேச்சைமட்டும் நம்புதல், மறைந்து நின்று அம்பு எய்தல் ஆகிய செயல்கள் மன மாற்றம் ஏற்படுவதற்கு முன்னர் உள்ள வாலிக்கு மிகப் பெரியனவாகக் காணப்பட்டன. ஆனால், அக்கட்டுரை மனத்துள் கொண்டு ஆன்மீகத்தில் 'மாலெனா' வளர்ந்து விட்ட வாலிக்கு இதே செயல்கள் மிகச் சிறியனவாகவும், அர்த்தமற்றவையாகவும் மாறிவிட்டன.

கிட்கிந்தா காண்டத்தின் உயிர்நாடியாக உள்ள வாலி வதைப் படலத்தில் கல்வி, கேள்வி, தவம், ஆற்றல் ஆகிய அனைத்தும் நிரம்பப் பெற்று இவற்றின் விளைவாலேயே ஆணவத்தால் மறைப்புண்டு கிடக்கும் ஓர் ஆன்மாவின் வளர்ச்சி, விடுதலை என்பவற்றை வாலியைக் கொண்டு விளக்க முற்படுகிறான் கவிஞன். ஆன்ம விடுதலைக்கு இறுதித் தடையாக நிற்பது ஆணவமே ஆகும். இறையருள் குருவடிவாக வந்து பரிசம், நயனம் முதலியன ஏதாவதொரு வழியில் தீட்சை செய்தவுடன் ஆணவம் கரைந்துவிடுகிறது.

உன்னை யார் என்று நான் அறிவேன். ஆனால் இப்பொ
என்னை யாரென்று நீ அறியமாட்டாய்' என்று பேசும் ப
நாம் முன்னர்க் கூறிய கருத்துக்கு அரண் செய்வதா
மனிதனாக, 'நடையில் நின்றுயர் நாயக'னாக வாழ்
காட்டும் இராகவன் ஒன்றிரண்டு இடங்களில் மனிதனாக
நடந்துகொள்வது கம்பனது படைப்பு முறைக்கு ஏற்றதா
இலக்குவன் தடுத்தும் மாய மான் பின்னே சென்ற
சூர்ப்பணகையிடம் 'அந்தணர் பாவை நீ அரசரின் வந்த
யான்' (2780) எனப் பேசுவது அவன் மனிதனாக நட
கொள்ளக் கூடிய பகுதி ஆகும். அதேபோன்று வ
வதையிலும் அவன் நடந்துகொள்வதாக நினையவேண்
யுள்ளது.

சவரியின் அறிவுரைப்படி சுக்கிரீவன் இருக்கும் இ
வந்த இராமனை முதன் முதலாகச் சுக்கிரீவன் சந்திக்கிறா
அவனிடம் இராமன் பேசிய முதல் வார்த்தை,

> கை அறு துயரம் நின்னால் கடப்பது கருதி வந்தோம்
> ஐய! நின்-தீரும்' (38

இந்த அடிகள் தன் துயரைப் போக்க உதவும் மலை பே
நம்பி வந்தான் என்பதைக் குறிக்கின்றன. அதனா
இராகவனுடைய இந்த வேண்டுகோளைக் காதிற்க
வாங்கிக்கொள்ளாத சுக்கிரீவன், ஒரு பாடல் முழுவது
தான் படும் துன்பத்தைப் பெரிதாகக் கூறி, 'உயிரை விட
தைரியம் இல்லை. ஆகவே நின்னிடம் சரணம் புகுந்தே
என்று கூறுகிறான். இந்த நிலையில் யாரால் இந்தத் துய
சுக்கிரீவனுக்கு நிகழ்ந்தது என்பதை அரைகுறையாக இராம
அறிந்திருந்தானே தவிர, வாலி சுக்கிரீவர் பகைவ
முதலியனவற்றையும் அதன் காரணத்தையும் இராம
அறிந்திருக்கவில்லை. அப்படியிருந்தும், இரண்டு பாடல்கள்
இராமன் சுக்கிரீவனுக்குக் கொடுத்த வாக்குகள் நடுநிலையுட
காப்பியத்தைக் கற்பவருக்கு வியப்பைத் தருவதாகு
சுக்கிரீவனுடைய துன்பத்திற்குக் காரணம் யார் என்பத
அறிந்துகொள்ளும் முன்னரே தசரத குமாரன்,

உன்னை யார் என்று நான் அறிவேன். ஆனால் இப்பொழுது என்னை யாரென்று நீ அறியமாட்டாய்' என்று பேசும் பகுதி நாம் முன்னர்க் கூறிய கருத்துக்கு அரண் செய்வதாகும். மனிதனாக, 'நடையில் நின்றுயர் நாயக'னாக வாழ்ந்து காட்டும் இராகவன் ஒன்றிரண்டு இடங்களில் மனிதனாகவே நடந்துகொள்வது கம்பனது படைப்பு முறைக்கு ஏற்றதாகும். இலக்குவன் தடுத்தும் மாய மான் பின்னே சென்றதும் சூர்ப்பணகையிடம் 'அந்தணர் பாவை நீ அரசரின் வந்தவன் யான்' (2780) எனப் பேசுவது அவன் மனிதனாக நடந்து கொள்ளக் கூடிய பகுதி ஆகும். அதேபோன்று வாலி வதையிலும் அவன் நடந்துகொள்வதாக நினையவேண்டி யுள்ளது.

சவரியின் அறிவுரைப்படி சுக்கிரீவன் இருக்கும் இடம் வந்த இராமனை முதன் முதலாகச் சுக்கிரீவன் சந்திக்கிறான். அவனிடம் இராமன் பேசிய முதல் வார்த்தை,

கை அறு துயரம் நின்னால் கடப்பது கருதி வந்தோம்
ஐய! நின்-தீரும்' (3809)

இந்த அடிகள் தன் துயரைப் போக்க உதவும் மலை போல நம்பி வந்தான் என்பதைக் குறிக்கின்றன. அதனால் இராகவனுடைய இந்த வேண்டுகோளைக் காதிற்கூட வாங்கிக்கொள்ளாத சுக்கிரீவன், ஒரு பாடல் முழுதும் தான் படும் துன்பத்தைப் பெரிதாகக் கூறி, 'உயிரை விடத் தைரியம் இல்லை. ஆகவே நின்னிடம் சரணம் புகுந்தேன்' என்று கூறுகிறான். இந்த நிலையில் யாரால் இந்தத் துயரம் சுக்கிரீவனுக்கு நிகழ்ந்தது என்பதை அரைகுறையாக இராமன் அறிந்திருந்தானே தவிர, வாலி சுக்கிரீவர் பகைமை முதலியனவற்றையும் அதன் காரணத்தையும் இராமன் அறிந்திருக்கவில்லை. அப்படியிருந்தும், இரண்டு பாடல்களில் இராமன் சுக்கிரீவனுக்குக் கொடுத்த வாக்குகள் நடுநிலையுடன் காப்பியத்தைக் கற்பவருக்கு வியப்பைத் தருவதாகும். சுக்கிரீவனுடைய துன்பத்திற்குக் காரணம் யார் என்பதை அறிந்துகொள்ளும் முன்னரே தசரத குமாரன்,

"உன் தனக்கு உரிய இன்ப துன்பங்கள் உள்ள, முன்நாள்
சென்றன போக, மேல் வந்து உறுவன தீர்ப்பல்" (3811)

என்றும்,

"மற்று, இனி உரைப்பது என்னே? வானிடை, மண்ணில், நின்னைச்
செற்றவர் என்னைச் செற்றார்; தீயரே எனினும் உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார்...." (3812)

*என்றும் அவசரப்பட்டு, இரக்கம் காரணமாக, இராகவன் கொடுத்த வாக்கே பெருவியப்பைத் தருவதாகும். ஒரு பொருளை முழுவதும் அறியாமல் வாக்குக் கொடுத்துவிட்டுப் பிறகு அந்த வாக்கைக் காப்பதற்காகச் சில வேண்டாத செயல்களையும் செய்ய நேரிடுகிறது. சுக்கிரீவன் பகைவன் யாராக இருப்பினும், அவனை ஓர் அம்பால் விண்ணுலகம் உய்ப்பதும், கூட்டு ஒருவரையும் வேண்டா அக்கொற்றவனுக்கு இயலும். அளவு மீறிய இரக்கமும் தன் ஆற்றல்பால் கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையும் சேர்த்து இராமனை 'நின்னைச் செற்றார் என்னைச் செற்றார், தீயரே எனினும் நினக்கு உற்றார் எனக்கும் உற்றார்' எனப் பேச வைக்கிறது. இவ்வாறு வாக்குக் கொடுத்த பிறகுதான் சுக்கிரீவனின் பகைவன் யாரென்பதை முதன்முதலாக இராகவன் அறிகிறான். வாலியின் வீரம்பற்றி அனுமன் கூறிய அத்துணைச் செய்திகளும் சிவ தனுசை ஒடித்து, பரசுராமன் வில்லை வளைத்து, கர தூடணர் முதலியவர்களை விண்ணுலகம் அனுப்பிய வீரனுக்கு வாலியின் வீரம்பற்றிய வரலாறு எவ்வித அதிர்ச்சியையும் வியப்பையும் தரவில்லை என்பது உண்மைதான். அனுமன் கூறிய் வரலாற்றில் இடையே இராகவனை அசத்துகின்ற ஒரு செய்தியும் அனுமனால் கூறப்பெற்றது.*

கிட்டுவார் பொரக் கிடைக்கின், அன்னவர்
பட்ட நல் வலம் பாகம் எய்துவான்;
எட்டு மாதிரத்து இறுதி, நாளும் உற்று,
அட்ட மூர்த்தி தாள் பணியும் ஆற்றலான். (3825)

என்ற செய்திதான் அது. இந்தப் பாடலை நன்கு சிந்தித்தோமானால், முதலிரண்டடிகளால் வாலி ஆற்றலின் தனிச்சிறப்பையும், பின்னிரண்டு அடிகளால் அவ் ஆற்றலுக்குரிய காரணத்தையும் உணர முடிகிறது. மேலும், இராவணன் போன்ற அரக்கர்களைப் போல என்றோ ஒரு காலத்தில் தவம் செய்து அதனால் பெற்ற வரங்களை முதலாக வைத்துக்கொண்டு, பிறர்க்குக் கொடுமை செய்யும் கொடுமையுடையவன் அல்லன் வாலி என்ற உண்மையான கருத்தும் இப்பாடலின் மூன்றாவது அடியில் நுணுக்கமாக வைக்கப்பட்டுள்ளது. எட்டுத் திசைகளின் எல்லை இறுதிவரை சென்று அட்ட மூர்த்தியாகிய சிவபிரானை நாள்தோறும் (நாளும் உற்று) வழிபாடு செய்வதால் பெறும் வலமாகும், கிட்டுவார் பட்ட நல்வலம் பாகம் எய்தும் சிறப்பு. இதனால் இராகவற்குச் சிந்தனை பிறந்தது. அனுமன் கூறிய வரலாற்றில் வாலி யாருக்கும் தீமையோ கொடுமையோ செய்ததாகக் கூறவில்லை. சுக்கிரீவன்மாட்டு அவன் கொண்ட பகைமைக்கும், காரணம் விளக்கப்பெற்றுவிட்டது. தான் கடைந்தெடுத்த அமிழ்தத்தைத் தான் உண்ணாமல் தேவர்களுக்குத் தந்துவிட்ட ஒருவனை எப்படித் தவறாக எடைபோட முடியும்? தம்பி மனைவியை நயந்தான் என்பது விலங்குகளின் வாழ்க்கை முறை, அதனைப் பெரிதுபடுத்த இயலாது என்பதையும் இராகவன் அறிந்திருந்தான்.

'பகைவன் யார், ஏன் பகைவன் ஆனான் என்பவற்றை அறியும் முன்னரே 'உன் பகைவர் என் பகைவர்' என வாக்குத் தந்ததாலும் வாலியைக் கொல்வது இன்றியமையாக் கடமை யாகிவிட்டது. வாலியைக் கொன்றால்தான் 'தாரமோடு தலைமையும் சுக்கிரீவனுக்குத் தர முடியும்'. வாலியைக் கொல்லவேண்டு மென்றால் பட்ட நல்வலம் பாகம் எய்தும் ஒரு வரம் குறுக்கே நிற்கிறது. வரத்தைத் துஷ்பிரயோகம் செய்திருந்தால், அவ்வரங்கள் பலமிழந்திருக்கும். இராவணன், இந்திரசித்துப் போன்றவரின் வரங்கள் பலமற்றுப் போனமைக்கு இதுவே காரணமாகும். ஆனால், வாலியைப் பொறுத்தமட்டில் அவன் வரத்தைத் தவறான வழியில் பயன்படுத்தினான் என்று ஒரு நிகழ்ச்சியைக்

கூட அனுமனாலோ, சுக்கிரீவனாலோ சொல்ல முடியவில்லை. இந்த நிலையில் உண்மையான தர்மசங்கடத்தில் அகப்பட்டுக்கொள்கிறான், தசரத குமாரன். தம்பியிடம் யோசனை கேட்கலாம் என்றால், தொடக்கத்தி லிருந்தே சுக்கிரீவன் செயலை வெறுப்பவனாகவே உள்ளான். ஆகவே, இராமனின் தர்மசங்கடம் வலுவாகிவிட்டது. சவரி முதலானவர்கள் தன்னைச் சுக்கிரீவனிடம் அனுப்பியதில் ஏதோ ஒரு காரணம் இருப்பதை இராகவன் நினைக்கிறான். பிராட்டியை மீட்க வாலி ஒருவனே போதுமானவனாக இருக்க, அவனிடம் போகச் சொல்லாமல் அஞ்சி வாழும் அப்பாவியாகிய சுக்கிரீவனிடம் போகச் சொல்லியதற்குத் தக்கதொரு காரணம் இருத்தல் வேண்டும் என்பதைச் சிந்தித்த இராகவன், சுக்கிரீவனுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும் என்ற முடிவிற்கு வந்ததில் தவறொன்றும் இல்லை. அதைக் காப்பாற்ற வேண்டுமாயின் வாலியின் வரம் மலைபோலக் குறுக்கே நிற்கின்றது. என்ன செய்வது?

இராகவனுடைய வாழ்க்கையில் இதுபோன்ற தர்மசங்கடம் முன்னரும் எழுந்துள்ளது. ஆனால், அந்தத் தர்மசங்கடத்திலிருந்து விடுவிக்க ஒரு பெருந்துணை இருந்தது. அந்தத் தர்மசங்கடத்தை உண்டாக்கிய தாடகை பிறர்க்கு இன்னா செய்கின்றவள். வாலியைப் பொறுத்தமட்டில் அதுவும் இல்லை. இந்த நிலையில் வாலியைக் கொல்வதற்கு, சுக்கிரீவனிடம் கொடுத்த வாக்கைக் காப்பதற்கு, - சவரி கூறியன அறிவுரையை ஏற்பதற்கு. ஒரே வழிதான் உண்டு. அந்த வழியை மேற்கொள்வதானால் நல்வலம் பாகம் எய்துகின்ற ஒரு தடையுளது. இத்தடையை மீறவேண்டுமானால் ஒரே வழிதான் உண்டு. அந்த வழிதான் நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு இராமன் மேற்கொள்கின்ற முடிவாகும். அந்த வழி 'வேறு நின்று எவ்விடத் துணிந்தது' என்பதாகும். நீண்ட யோசனைக்குப் பிறகு தான் இம்முடிவுக்கு வந்தேன் என்பதைச் சுக்கிரீவனுக்குச் சொல்லும்பொழுது 'இது என் கருத்து என்று கூறி முடிக்கின்றான்.

எதிர்ப்பட்ட தர்மசங்கடத்திலிருந்து மீள மறைந்து நின்று அம்பு தொடுத்து வாலியைக் கொல்வது என்ற முடிவிற்கு

இராமன் வந்துவிட்டான். இம்முடிவை இராமன் விரும்பி ஏற்றுக்கொண்டான் என்றோ கடமையை நிறைவேற்றப் போகிறோம் என்று மகிழ்ந்து ஏற்றுக்கொண்டான் என்றோ கூறுவது பெருந்தவறாகும். மறைந்து நின்று அம்பு எய்தல் வில் அறம் துறப்பதாகும். வில் அறம் துறக்காமல் இருக்க வேண்டுமானால் வாலியைக் கொல்ல இயலாது. அது நடைபெறவில்லையானால் 'தாரமோடு தலைமையும் தருகிறேன்' என்று சுக்கிரீவனுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற முடியாது.

வாக்கை நிறைவேற்றுவதா? அல்லது வில்லறம் துறப்பதா? என்பதுதான் இராமன் அகப்பட்டுக்கொண்ட தர்மசங்கட நிலையாகும். சுக்கிரீவனுக்குக் கொடுத்த வாக்கின் அடிப்படையில் சவரியும் கவந்தனும் ஆற்றுப்படுத்தியதன் நோக்கம் அமைந்துள்ளது. எனவே, சுக்கிரீவனைத் துணைகோருவது இன்றியமையாதது என்ற கருத்தில்தான் அவனுக்கு வாக்குக் கொடுத்தான் இராகவன். யாராக இருப்பினும், அவர்களைத் தன் வில் கொண்டு வெல்ல முடியும் என்ற துணிவுடன், இராகவன் சுக்கிரீவனுக்கு வாக்குக் கொடுத்தான். அவன் சற்றும் எதிர்பாராமல் பகைவனாகிய வாலிக்கும் அவனுக்கும் இடையே 'நல்வலம் பாகம் எய்தும்' தடை ஏற்பட்டது. இராகவனேயானாலும் இத்தடையை வெல்ல முடியாது. தன் வலியும் பகைவலியும் தீர எண்ணிப் பார்த்த இராகவன் மறைந்து நின்று அம்பு தொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பிறகு அறிந்துகொண்டான். ஆதலின் 'இது என் கருத்து' என்று கூறிவிட்டான். இச்செயல் வில்லறம் துறக்கும் செய்கையாகும் என்பதையும் இராகவன் நன்கு அறிந்திருந்தான். அறிந்தே செய்த செயல் ஆகும் இது.

வில்லறம் துறந்து ஏதோவொரு குரங்கை-சுக்கிரீவன் பகைவனாகிய வாலியைக் கொல்லப் போகிறோம் என்று நினைத்தானேயொழிய, அத்தகைய பகைவன் கல்வி, அறிவு, பண்பாடு, உபகாரச் சிந்தை, தன்னலமின்மை, அஞ்சாமை ஆகிய பண்புகளில் தலைநின்றவன் என்பதையும் சுக்கிரீவனுக்கும் வாலிக்கும் மடுவுக்கும் மலைக்கும் உள்ள

வேறுபாடு இருப்பதையும் அறியவில்லை. வாலியின் முற்பகுதி உரையாடல் பிற்பகுதி உரையாடல் என்பவற்றின் மூலமே இராகவன் அவற்றை அறிந்துகொண்டான்.

நுண்மாண் நுழைபுலம் மிக்கவனும், தேர்ந்த அரசியல் ஞானியும், எதிர் நிற்பவனை ஒரு கணத்தில் எடைபோட வல்லவனும் ஆகிய தசரதன் தோன்றல் வாலியின் உரையாடலை வைத்துக்கொண்டே 'இவன் இத்தகையவன்' என்பதையும் அவன் அரசாட்சி எவ்வாறு இருந்திருக்கும் என்பதையும் ஒரு விநாடியில் அறிந்துகொள்கிறான். அவனுடைய வருத்தத்திற்கும், அங்கதனிடம் ' நீ இது பொறுத்தி' என்று கூறுவதற்கும் இதுவும் ஒரு காரணமாய் அமைந்தது. சுக்கிரீவனுக்கு முடிசூட்டி அவனைக் கிட்கிந்தைக்கு அனுப்பும் போது அவன் அரசியல் அறிவோ, புலமையோ, ஞானமோ அறிந்தவன் அல்லன் என்பதை அறிந்திருந்த இராமன் அரசனுக்குரிய அறவுரைகள் பலவற்றை அரசியற் படலத்தில் (4121 முதல் 4131 முடிய) 11 பாடல்களில் சுக்கிரீவனுக்குக் கூறுகிறான். எல்லையற்ற செல்வம் திடீரென்று வந்தால் அத் னைக் காத்தலும் வகுத்தலும் எவ்வளவு கடினமானது என்பதைக் (4124) கூறுகிறான். இத்துணை அறவுரைகள் கூறும் இராகவன் வாலியைப் பற்றியும், அவன் அரசாட்சியைப்பற்றியும் சுக்கிரீவனிடம் ஒரு வார்த்தை பேசவில்லை. ஆனால், அதே நேரத்தில் சுக்கிரீவனை அனுப்பிய பிறகு அனுமனைத் தனியே அழைத்து அச்சொல்லின் செல்வனிடம் நுண்மையான கருத்து ஒன்றை இராகவன் பேசுவது நமது சிந்தனைக்குரிய ஒன்றாகும்.

நிரம்பினான் ஒருவன் காத்த நிறை அரசு இறுதி நின்ற
வரம்பு இலாததனை, மற்று ஓர் தலைமகன் வலிதின் கொண்டால்
அரும்புவ, நலனும், தீங்கும்; ஆதலின், ஐய! நின்போல்
பெரும் பொறை அறிவினோரால், நிலையினைப் பெறுவது அம்மா! **(4143)**

இப்பாடலின் ஆழமான பொருளையும் அது பாடப்பட்ட நிலைக்களம், சூழ்நிலை என்பவற்றையும் புரியாமலே பலர்

உரையெழுதி உள்ளனர். நிரம்பினான் என்பது அனைத்துப் பண்புகளும், ஆட்சித் திறமையும் உள்ளவனாகிய வாலியைக் குறிப்பதாகும். அவனால் ஆட்சி செய்யப்பெற்ற அரசு எவ்விதக் குறையும் இல்லாத நிறை அரசு என்று கூறுகிறான் இராகவன், எல்லாச் செல்வங்களும் எல்லையில்லாமல் நிறைந்துள்ள அவ் ஆட்சியை, மற்றோர் தலைமகனாகிய சுக்கிரீவன் வலிதிற் பற்றித் தனதாக்கிக் கொண்டான். இவன் ஆட்சி செய்யும்பொழுது பழைய ஆட்சிபோலில்லாமல் நன்மையோடு தீமையும் கலந்தே தோன்றும். அதாவது மக்கள் பழைய ஆட்சியின் சிறப்பையும், புதியவன் ஆட்சியையும் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். ஆதலினால் நிரம்பினான் செய்த நல்லரசு போல நிரம்பாத புதியவன் செய்யும் ஆட்சி அமையாது. ஆதலால் அங்கே மனக் கசப்பும் புரட்சியும் தோன்றக் கூடும். (அரும்புவ நலனும் தீங்கும்). "அதனைத் தடுக்கவேண்டுமானால் அமைச்சருக்குரிய பண்புகள் அனைத்தும் நிரம்பிய பண்புள்ளவனும், எதிரது போற்றும் நுண்மாண் நுழைபுலம் உடையவனும், சொல்லின் செல்வனும், தரும வடிவினனும் ஆகிய உன்னைப் போன்ற அமைச்சர்கள் இருந்து அப்பாரத்தைத் தாங்குவதே முறைமையாகும்" என்று அனுமனிடம் கூறும்பொழுது, வாலியின் ஆட்சிக்கு இராகவன் தரும் நற்சான்றிதழ் "நிரம்பினான் ஒருவன் காத்த நிறை அரசு" என்பதாகும்.

வாலியின் பெருமை தெற்றெனத் தெரியவே, இராகவன் மனம் கசிவதாயிற்று, வில்லறம் துறந்து வாலியைக் கொன்ற செயலுக்கு இராகவன் வருந்தியிருத்தல் வேண்டும். அவ்வருத்தத்தைப் போக்கிக்கொள்ள இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று வாலியின் உயிரை மீட்டுத் தருவதாகும். "ஆருயிர் துறக்கல் ஆற்றேன்" (3810) என்று சொல்லிக்கொள்ளும் சுக்கிரீவனைப் போல வாலிக்கு உயிர்மேல் ஆசையில்லை என்பதை 'வீட்டரசு எனக்கு நல்கினான் எம்பி', என்ற வாலியின் கூற்றால் இராமன் நன்கு அறிந்துகொண்டான். அப்படியானால் தன் செயலுக்கு வருந்தும் மனநிலையை எவ்வாறு வாலிக்குத் தெரிவிப்பது என்று எண்ணம் உற்றான் போலும். இராகவன் தன் கருத்தை வாலிக்கு வெளிப்படுத்த

வேண்டும் என்று நினைத்து அதனைச் செயலாற்ற நினைப்பதற்கு முன்னர் நிகழ்ச்சிகள் தொடர்ந்து விரைவாக நடைபெற்றுவிட்டன. அதன் முடிவில் வாலி "வானுக்கு அப்புறத்து உலகன்" (4093) ஆகப்போகிறான். எனவே, இராமன் தன் மனத்தில் தோன்றிய எண்ணத்தை நிறைவேற்ற வகையறியாது மன வருத்தத்தோடும் மயக்கத்தோடும் இருக்கின்ற நிலையில், வாலியின் மைந்தனாகிய அங்கதன் அடைக்கலப் பொருளாக இராமனிடம் ஒப்புவிக்கப் படுகிறான். தந்தையாகிய வாலியிடம் சொல்ல வேண்டியதை மைந்தனிடம் எவ்வாறு சொல்வது? தன் மனநிலையைச் சில சொற்களில் கூறவேண்டும். வாலியிடம் கூறியிருந்தால் அதன் உட்பொருளை அவன் அறிந்துகொண்டிருப்பான். ஆனால், முன்பின் அறியாத சிறுவனாகிய அங்கதனிடம் அதுபற்றிப் பேசுதல் முறையன்று என்றாலும், ஏதாவது ஒரு வகையில் தன் செயலுக்குக் கழுவாய் தேடவேண்டும். என்று நினைத்த இராகவனுக்குச் சட்டென்று ஓர் யோசனை தோன்றுகிறது. ஓரளவு பழகியவனும், தம்பியருள் ஒருவனாக ஏற்றுக் கொள்ளப்பட்டவனும், தன்னால் தாரமும், தலைமையும் பெற்றவனுமாகிய சுக்கிரீவனிடத்தில்கூடக் கூற முடியாதவைகளை, செய்ய முடியாதவொரு செயலை, முன்பின் தெரியாதவனும், சில விநாடிகளுக்கு முன்னரே தன்பால் ஒப்புவிக்கப்பட்டவனுமாகிய அங்கதனிடம் கூறுகிறான்: ஒப்பற்ற ஒரு செயலைச் செய்கிறான்.

இராகவன் தன் உடைவாளை அங்கதனிடம் தந்து 'நீ இது பொறுத்தி' என்று கூறியதாகக் கவிஞனின் பாடல் அமைந்துள்ளது. இச்செயலைச் செய்கின்ற விநாடியில் வாலி உயிரை விடும் நிலையில் உள்ளான் என்பதும் அறியத்தகும். இதனைக் கவிஞன், ஒரு நாடகமுறையில் ஒரு பாடலில் வெளிப்படுத்துகிறான். நாட்கப் பாத்திரங்கள் மூவர்: முக்கியப் பாத்திரமாகிய இராகவன், எல்லாவற்றையும் கண்டு கேட்டுக்கொண்டே சில விநாடிகளில் உயிர்த் துறக்கப் போகும் வாலி, நடந்தது இன்னதென்று புரிந்துகொள்ள முடியாமல் குழப்பமானவொரு மனநிலையில் இராமனிடம் அடைக்கலப்படுத்தப்பட்ட சிறுவன் அங்கதன். குழம்பி

இருக்கின்ற சிறுவனிடம் - ஏன் இது நடைபெறுகிறது என்று அறிந்துகொள்ள முடியாத மன நிலையில் உள்ள அங்கதனிடம் - தசரத குமாரன் தன் வாளை நீட்டி "நீ இது பொறுத்தி" என்று சொல்வதாகவும், இதனைப் பார்த்துக்கொண்டே வாலி உயிர் நீத்ததாகவும் பாடல் அமைந்துள்ளது.

தன் அடி தாழ்தலோடும், தாமரைத் தடங் கணானும்
பொன் உடைவாளை நீட்டி, 'நீ இது பொறுத்தி' என்றான்;
என்னலும், உலகம் ஏழும் ஏத்தின; இறந்து, வாலி,
அந்நிலை துறந்து, வானுக்கு அப்புறத்து உலகன் ஆனான்.
(4093)

பல கருத்துவேறுபாடுகளுக்கு இடம் தரும் பாடலாகும் இது. 'பொன் உடைவாளை நீட்டி நீ இது பொறுத்தி என்றான்' என்ற தொடருக்கு 'இதனை வைத்துக் கொள்' என்றே பலரும் பொருள் கூறியுள்ளனர். பொறுத்தி என்ற சொல்லுக்கு வைத்துக்கொள் அல்லது ஏற்றுக்கொள் என்றுபொருள் கொள்வது பொருத்தமாகப் படவில்லை. இவர்கள் கருத்துப்போல் நீ இதை வைத்திருப்பாயாக என்ற பொருளில் இராகவன் கூறியிருந்தால் 'உலகம் ஏழும் ஏத்தின' என்று கம்பன் அடுத்தாற்போல் கூறுவதற்குப் பொருளே இல்லாமல் போய்விடும். மாபெரும் நிகழ்ச்சியொன்று நடைபெற்ற இக்களத்தில் இராகவன் திடீரென்று தன் உடைவாளைக் கொடுக்க வேண்டிய தேவை என்ன? அதுவும் சில விநாடிகளுக்கு முன்னரே அறிமுகப்படுத்தப்பெற்று, அடைக்கலப்படுத்தப்பெற்ற ஒரு சிறுவனிடம் அரசனின் அதிகாரத்தின் அடையாளமாக உள்ள (symbol of authority) வாளை ஏன் தர வேண்டும்? வாளை வைப்பதற்கு இடமில்லாமல் அங்கதனிடம் தந்தானா? அரசனின் உடைவாளை ஏந்திச் செல்பவர்கள் அரசனிடம் அதிகாரப் பொறுப்பைப் (power of authority) பெற்றவர்கள்போல் கருதப்படுவர். அவனது முழு நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் மட்டுமே உடைவாளை ஏந்தும் பொறுப்பினை வகிப்பார்கள். அரசனுடைய முத்திரை மோதிரம் பெற்றவர்களைவிட அதிக அதிகாரப் பொறுப்பை

வாளேந்தியவர்கள் வகிப்பார்கள். அவ்வளவு சிறப்பு வாய்ந்த ஒரு பொறுப்பைக் கிட்கிந்தையில் அங்கதனிடம் இராமன் ஒப்படைப்பதற்கு ஏன்ன நிகழ்ந்தது? ஒரு காரணமோ நிகழ்ச்சியோ இல்லாமல் திடீரென்று தன் உடைவாளை நீட்டி 'நீ இதை வைத்துக்கொள்' என்று இராகவன் கூறினால், அர்த்தமற்ற செயலாக ஆகிவிடும்.

கம்பன் இத்தகைய பாடல்களை மறந்தும் பாடமாட்டான். எனவே, இத்தொடருக்கு ஆழமான பொருள் இருத்தல் வேண்டும். முன்னர்க் கூறப்பெற்ற அம்பு தொடுத்ததற்குப் பின்னர் வாலியின் மனநிலை மாற்றத்தையும் அதனால் இராமனுக்கு ஏற்பட்ட மனநிலை மாற்றத்தையும் மனத்தில் வாங்கிக்கொண்டால், இத்தொடரின் உண்மைப் பொருளை அறிந்துகொள்ள முடியும். மனம் வருந்திய இராகவன் நேரிடையாக, சிறுவனாகிய அங்கதனிடம் மன்னிப்புக் கேட்பது பொருத்தமற்ற தாகிவிடும். எனவே, நேரிடையாக, 'நடைபெற்ற செயலைப் பொறுத்துக்கொள்க' என்று கூறாமல், அரசனாகிய தன்னுடைய தலைமை அதிகார அடையாளப் பொருளாகிய வாளை வாலியின் மைந்தனாகிய அங்கதனிடம் நீட்டி, 'இங்கே நடைபெற்றவற்றை நீ பொறுத்துக் கொள்க' என்று கூறினான். வாளையொருவனிடம் நீட்டும்போதே அதனை அவன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது சொல்லாமல் விளங்கும். அப்படியிருக்க, 'நீ இது பொறுத்தி' 'நீ இதனைப் பொறுத்துக் கொள்வாயாக' என்பது பலனில்சொல் பாராட்டுதலாகும். "தென்சொற் கடந்து வடசொற்கடற்கு எல்லை தேர்ந்தவனாகிய" இராகவன் திருவாயில் இத்தகைய வெற்றுச் சொற்கள் வரா. மேலும், பக்கத்தில் நின்ற சுக்கிரீவன்கூடத் தன் சொல்லின் ஆழத்தைப் புரிந்துகொள்ளா வகையில் அறத்தின் நாயகன், இம்மறச் செயலுக்கு வருத்தத்தைத் தெரிவிக்கிறான். உடனிருந்த சுக்கிரீவனுக்கோ பக்கத்தில் நின்ற இலக்குவனுக்கோ, குழம்பிய மனநிலையில் ஏற்றுக்கொண்ட அங்கதனுக்கோ, 'நீ இது பொறுத்தி' என்ற சொற்களின் ஆழமும், பொருட் செறிவும் தெரிந்திருக்கா என்று நினைய வேண்டியுள்ளது. ஆனால், இச்சொற்கள் யார் காதில் விழவேண்டுமென்றும், யார்

மனத்தில் துயரம் நீங்க வேண்டுமென்றும் பெருமான் நினைத்தானோ அந்த வாலியின் காதில் இச்சொற்கள் அமுததாரை போல் வீழ்ந்தன. இச்சொற்கள் காதில் வீழ்ந்த அந்த விநாடியே மன அமைதி பெற்றவனாய் வாலி வானுக்கு அப்புறத்தன் ஆகிவிட்டான். வாலியே அல்லாமல் இச்சொற்களின் பொருளைத் தேவர்களும் அறிந்தனர். அதனாலேயே இராகவன் 'நீ இதை வைத்துக் கொண்டிரு' என்று கூறியவுடன் 'உலகம் ஏழும் ஏத்தின' என்று கவிஞன் பாடுகிறான். சாதாரணமாக உடைவாளைத் தந்து 'நீ இதை வைத்துக்கொண்டிரு' என்று கூறியிருந்தால், உலகம் ஏழும் இராமனை ஏத்திப் புகழ வேண்டிய சூழ்நிலை ஒன்றும் இல்லை என்று எளிதில் யூகிக்கலாம். 'பொறுத்தி' என்ற சொல்லுக்கு 'வைத்துக்கொள்' என்று பொருள் கூறிவிடக் கூடாது என்பதற்காகவே உலகம் ஏழும் ஏந்தின என்று கவிஞன் தொடர்ந்து கூறுகிறான்.

'பொறுத்தி' என்ற சொல்லுக்கு இதுதான் பொருள் என்பதையும் பொறுத்தருள்க என்ற பொருளிலேயே கவிஞன் இச்சொல்லைக் கையாள்கிறான் என்பதையும் துணிந்து கூறக் கம்பநாடனின் மற்றொரு பாடல் துணைபுரிகிறது. தான் செய்யும் வேள்விக் காவலுக்கு இராமனை அனுப்புமாறு விசுவாமித்திரன் தசரதனிடம் கூற முற்பட்டு, 'நின் சிறுவர் நால்வரினும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி' (324) எனக் கேட்டான். அதனை மறுத்த தசரதன், 'நானே வந்து காவல் புரிகிறேன்' என்கிறான். அதனைக் கேட்ட விசுவாமித்திரன் மிக்க சினம் உடையவனாய், புருவங்கள் மடிய, உதடுகள் துடிக்க, திசைகளும் மருள, கோபத்தின் எல்லைக்கே சென்றுவிட்டான். நிலைமையை உணர்ந்த குலகுருவாகிய வாகிய வசிட்டன் கூறும் வார்த்தைகளைக் கம்பன் பாடலில் காண்கிறோம்.

கறுத்த மா முனி கருத்தை உன்னி, 'நீ
பொறுத்தி' என்று அவற் புகன்று, 'நின் மகற்கு
உறுத்தல் ஆகலா உறுதி எய்தும் நாள்
மறுத்தியோ?' எனா, வசிட்டன் கூறினான் (328)

கறுத்த மாமுனி கருத்தை உன்னினான் வசிட்டன் என்று கவிஞன் கூறுவதால், சினத்தின் உச்சியில் நின்ற விசுவாமித்திரன் தசரதனைச் சபித்துவிடுவானோ என அஞ்சிய வசிட்டன், விசுவாமித்திரனை நோக்கிப் ‘பொறுத்தி நீ” எனக் கூறுகின்றான். ‘நீ இதனைப் பொறுத்தருள்வாயாக’ என்பதே இதன் பொருளாகும். அறியாமை காரணமாகவும், பிள்ளைப் பாசம் காரணமாகவும் தசரதன் செய்த பிழைக்கு அவன் சார்பாக வசிட்டன் ‘நீ பொறுத்தி’ என வேண்டுகிறான். இராகவன் செய்த செயல் அறியாமையால் செய்ததன்று; அறிந்தே செய்ததாகும். பிள்ளைப் பாசம் போல அங்கே பாசம் எதுவும் இல்லை. அவதார நோக்கம் நிறைவேற வேண்டும் என்று அகமனத்தின் அடியில் தோன்றிய எண்ணத்தை நிறைவேற்றவே வேறு நின்று எவ்விடத் துணிந்தான். அது வில்லறம் துறந்த செய்கை என்பதை உணர்ந்தே செய்தானாகலின், அங்கதனிடம் ‘நீ இது பொறுத்தி’ எனக் கேட்டுக்கொள்கிறான். பெரியதொரு நன்மை பெறவேண்டிச் சிறிய தவறுகளைச் செய்வது அரச நீதிகளுள் ஒன்று, என்றாலும் நடைபெற்ற பிறகு ‘நீ இது பொறுத்தி’ என்று தசரத குமாரன் கூறுவதால் அவன் பெருமை மலையை விட உயர்ந்துவிடுகிறது என்பதை மனத்திற் கொள்ள வேண்டும்.

இதனையடுத்து அரசியற் படலத்தில் காணப்படும் மற்றொரு பாடலும் பலரைக் குழப்புவதாக உள்ளது. அனைத்தும் முடிந்த பிறகு சுக்கிரீவனுக்கு முடிசூட்டும் பணியும் நிறைவேறிவிட்டது. அந்த நிலையில் இரா இலக்குவர்களைக் கிட்கிந்தைக்கு வருமாறு சுக்கிரீவன் அழைக்கிறான். அப்போது இராமன் பல்வேறு காரணங்களைக் காட்டி, கிட்கிந்தையில் வந்து அரச போகங்களை அனுபவிக்க முடியாத நிலையில் தான் இருப்பதைக் கூறுகிறான். மேலும், மற்றோர் மலையிடைச் சென்று தங்கித் தவம் மேற்கொள்ளப்போவதாகவும் கூறுகிறான். அவன் கூறிய பல்வேறு காரணங்களுள் ஒரு காரணத்தைத் அறிவிக்கும் பாடல் வருமாறு:

இல்லறம் துறந்திலாதோர் இயற்கையை இழந்தும், போரின்
வில்அறம் துறந்தும், வாழ்வேற்கு, இன்னன மேன்மை
இல்லாச்
சில்அறம்; புரிந்து நின்ற தீமைகள் தீருமாறு,
நல்அறம் தொடர்ந்த நோன்பின், நவை அற நோற்பல்
நாளும் (4137)

இப்பாடலில், தான் தவம் மேற்கொள்ளவதற்கு இரண்டு காரணங்களைக் கூறுகிறான் இராமபிரான். முதலடியில் முதல் தவற்றைப் பேசுகிறான். இல்லறம் துறந்து துறவை மேற்கொள்ளாமல் இல்லறத்திலேயே இருப்பவர்களின் முதற் கடமை தன்னை நம்பி வந்த மனையாட்டியைக் காப்பதாகும். அதுதான் இயல்பானது. அதைத் தான் செய்யவில்லை என்பதை 'இல்லறம் துறந்திலாதோர் இயல்பை இழந்தேன்' என்று முதற்கன் கூறுகிறான். இரண்டாவதாக, போரில் 'வில் அறம் துறந்தும் வாழ்வேன்' என்பதாகும். இதுவரை கர தூடணர்கள் வதை தவிர இராகவன் வில்லெடுத்துப் போர் செய்தது வாலியினிடமே ஆகும். கர தூடணர் வதத்தில் வில் அறம் துறக்கும் வாய்ப்பு ஏதும் ஏற்படவில்லை. வாலி வதத்தில்தான் வில் அறம் துறந்து மறைந்து நின்று போரிட வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. 'அதனைச் செய்தும் வாழ்கின்றேன்' என்ற சொற்கள் இராகவன் கழிவிரக்கத்தில் கூறியதாகும். இப்பொருளை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள், 'மனைவியைக் காப்பாற்ற முடியாத வில்லை வைத்துக்கொண்டு இருக்கிறேன்' என்று கழிவிரக்கத்தில் கூறியதாகப் பொருள் கூறுவர். அச்செயலால் தன் கடமை தவறியதைத்தான் குறிக்கிறான் என்று கூறனப்படுமே தவிர, விற்போரில் மேற்கொள்ள வேண்னடிய அறத்தைத் துறந்ததாகக் கூற முடியாது. அன்றியும், 'வில் அறம் துறந்து வாழ்வேற்கு' என்ற சொற்றொடர் கவனிக்கப்பட வேண்டியதாகும். துறத்தல் என்றது தன்வினை; எனவே, துறந்தும் என்ற சொல், 'வில் அறம் எது எனத் தெரிந்தும் வேறு காரணங்களுக்காக அதனை விட்டுவிட்டேன்' என்ற பொருளைத்தான் தரும். ஒரு வீரன் வில் அறம் துறந்து போர்

செய்யவேண்டிய நிலை வந்தால், அவ்வாறு போர் செய்தால் பின்னர் உயிரை வைத்திருக்கமாட்டான். நானோ இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். அதாவது, 'இல்லறத்தால் இயற்கையை இழந்தது நானே விரும்பிச் செய்ததன்று; அது என்னையும் மீறி நடைபெற்றது' என்ற பொருளில் 'இயற்கையைத் துறந்தேன்' என்று கூறாமல் 'இழந்தேன்' என்று கூறுகிறான் பெருமான். வில் அறத்தைப் பொறுத்தமட்டில் தெரிந்தே செய்தது ஆகலின் 'துறந்தேன்' என்று கூறுகிறான்.

தன்னொடு செய்த போரில் இராமன் வில் அறம் துறந்தான் என்பது மெய்ஞ்ஞானம் வருவதற்குமுன்னர் வாலி பேசும் பேச்சுகளில் இதே சொறகளில் பேசப்படுவதைக் காணலாம்.

> 'இல்லறம் துறந்த நம்பி, எம்மனோர்க்காகத் தங்கள்
> வில் அறம் துறந்த வீரன் தோன்றலால், வேத நல் நூல்
> சொல் அறம் துறந்திலாத சூரியன் மரபும், தொல்லை
> நல் அறம் துறந்தது' என்னா, நகை வர நாண்
> உட்கொண்டான். (4014)

இப்பாடலின் முதலடியில் இராமன் செய்யாததொரு குற்றத்தை இராமன்மீது வாலி ஏற்றுகிறான். 'இல்லறம் துறந்த நம்பி' என்று கூறும்பொழுது வேண்டுமென்றே பிராட்டியைப் பிரிந்தான் என்ற பொருளில் வாலி பேசுகிறான். (துறந்த என்ற சொல், தன்வினை யாதலின் இவ்வாறு பொருள் கொள்ள வேண்டும்). 'இல்லறம் இழந்தேன்' என்று இராகவன் கூறுவதற்கும் 'இல்லறம் துறந்த என்று வாலி கூறிய பொருளுக்கும் வேறுபாடு அறிய வேண்டும். இராமன்மேல் கொண்ட சினத்தால் இழந்தான் என்று கூறாமல் துறந்தான் என்று கூறுவது அவன் மனநிலையைக் காட்டும். ஆனால், அடுத்து வரும் அடிகள் உண்மையைக் காட்டும். 'எம் மனோர்க்காகத் தங்கள் வில் அறம் துறந்த வீரன்' (4014) என்ற அடியில் உள்ள ஒவ்வொரு சொல்லும் மிகமிக ஆழமான பொருட்சிறப்பைப் பெற்று விளங்கக் காணலாம். எம்மனோர்க்காக என்ற சொல்லினால் இராமன் செயலில்

தன்னலம் என்பது கடுகளவும் இல்லையென்பதை வாலி உணர்ந்து பேசுகிறான். அடுத்து வரும், 'தங்கள் வில் அறம்' என்னும் சொல் நன்கு சிந்திக்கத்தக்கது. குரங்குச் சண்டையில் கடித்தல், கையை மடக்கிக் குத்துதல், எட்டி எறிதல் என்பன போன்ற பலவகை உண்டேனும் வில்லெடுத்துப் போர் செய்தல் இல்லை. வானரங்கள் கையாண்ட கருவிகள் இவையென்பதைச் சுட்டும் ஒரு பாடல் உள்ளது:

பல்கொடும், நெடும் பாதவம் பற்றியும்
கல்கொடும் சென்றது - அக் கவியின் கடல்.

எதிர்த்துப் போரிடும் அரக்கர் சேனை கையாண்ட கருவிகளை மேற்குறித்த பாடலின் பின் இரண்டு வரிகள் குறிக்கின்றன.

வில்கொடும், நெடு வேல் கொடும், வேறு உள
எல்கொடும் படையும் கொண்டது - இக் கடல் (7035)

எனவே, வில்லெடுத்துப் போர் செய்தல் என்பது மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் அரக்கர்கட்கும் உரியதாகும் என்பதை வாலி ஒப்புக்கொள்கிறான். அரக்கர் விற்போரில் அறவழி நின்று போர் புரிவர் என்று கூறமுடியாது. இந்திரசித்தன் மறைந்து நின்று போர் புரிவது இதற்கு எடுத்துக்காட்டாகும். எனவே, அவர்களைப் பொறுத்தமட்டில் வில் அறம் என்று ஒன்றும் கிடையாது. தேவர்கள் யுத்தத்தைப் பற்றி நாம் அறிய முடியாது. எனினும், அவர்களும் அறவழி நின்றே போர் புரிவர் என்று கொள்ளலாம். எஞ்சி நிற்பது மனிதர்கள் செய்யும் விற்போர்மட்டுமே யாகும். தாங்கள் மட்டுமே செய்யும் விற்போருக்குச் சில சட்டதிட்டங்களை வகுத்துக் கொண்டு, 'இதுதான் அறவழி நின்று செய்யப்படும் விற்போர் ஆகு' மென்று உயர்ந்த பண்புடைய மனிதர்கள் வகுத்துக்கொண்ட சில அறவழிகள் உண்டு. அதனைத்தான் இங்கே வாலி 'தங்கள்... வில் அறம்' என்ற சொற்களில் கூறுகின்றான். அப்படிக் கூறும்பொழுதுகூடக் கேவலமான குரங்குகளின் பொருட்டாக ஒரு மாமனிதன் (இராமன்) வில் அறத்தைத் துறந்தானே என்ற கழிவிரக்கத்தில்தான்

பேசுகிறான் என்றால், சுத்த வீரனாகிய வாலி இராமனைக் குறைத்து எடைபோடவில்லை. தன் வாயாலேயே வீரன் என்ற அடைமொழியை இராமனுக்குத் தருகின்றான். மனக் கசப்பிலும், சொல்லப்படுகின்ற நிலையிலும், கழிவிரக்கத்திலும் ஒரு சுத்த வீரன் மற்றொரு சுத்த வீரனை மதித்துப் பேசும் இயல்பை வாலியின் கூற்றில் காண்கிறோம்.

இதுகாறும் கூறியவற்றால் வில் அறம் துறந்த வீரன் என்று எந்தப் பொருளில் வாலி கூறினானோ அதே பொருளில் தான் 'வில் அறம் துறந்து வாழ்வேற்கு' என்று இராகவனும் கூறுகிறான் என்பது தெளிவாகும். காப்பிய அமைதியில் பாத்திரப் படைப்பு, உரையாடல், நிகழ்ச்சிகள் அமைப்பு என்பவற்றை வைத்துக்கொண்டு செய்யப்படும் திறனாய்வாகும் இது. இவ்வாறு கூறுவதனால் இராமன் புகழுக்கோ அவன் பரம்பொருள் என்று கூறுவதற்கோ எவ்விதக் குறைபாடும் இல்லை என்பதை அறிதல் வேண்டும். இத்தனையையும் அனுமன் கூற்றாகக் கவிதையில் கூறிய கம்பநாடனே "மூலமும் நடுவும் ஈறும் இல்லது. ஓர் மும்மைத்து ஆய, காலமும் கணக்கும் நீத்த காரணன், கைவில் ஏந்தி அயோத்தி வந்தான்" (5884) என்று கூறுவதால் இராமன் புகழுக்கு இத்திறனாய்வு எவ்வித இழுக்கையும் தராது என்பது தெளிவு. மேலும் கவிஞனே இராமன் பரம்பொருள் என்பதை 'வான்நின்று இழிந்து வரம்பு இகந்த மாபூதத்தின் வைப்பு எங்கும் ஊனும் உயிரும் உணர்வும் போல் உள்ளும் புறத்தும் உளன்' என்று அயோத்தியா காண்டக் கடவுள் வாழ்த்திலும், "அலங்கலில் தோன்றும் பொய்ம்மை அரவு என, பூதம் ஐந்தும் விலங்கிய விகாரப்பாட்டின் வேறுபாடு உற்ற வீக்கம் கலங்குவது எவரைக் கண்டால்? அவர் என்பர் கைவில் ஏந்தி இலங்கையில் பொருதார் அன்றே மறைகளுக்கு இறுதி ஆவர்" என்று சுந்தர காண்டக் கடவுள் வாழ்த்திலும் குறித்தவாறு காண்க.

கிட்கிந்தா காண்டத்தில் உலக மகா காப்பியங்களில் காணப்பெறாத, காண முடியாத இரண்டு பாத்திரங்கள் பேசப்படுகின்றன. ஒன்று, அனுமன், இரண்டாவது வாலி,

வாலியைப் பற்றி விரிவாகக் கண்ட பிறகு, அனுமனைப் பற்றி இக்காண்டத்தில் உள்ள அளவிற்குச் சிந்திப்பது பொருத்தமான தாகும். வாலியைப் பொறுத்தமட்டில் வெறும் குரங்காகக் காணப்படும் வான்மீக வாலி, கம்பன் கைபட்டு ஒப்புயர்வின்றி விளங்கக் காண்கிறோம். அனுமனைப் பொறுத்தவரையில் கம்பன் அவனுக்கு ஏற்றிச் சொல்லும் அனைத்துக் குணங்களையும் செயல்களையும் வால்மீகியே ஒரளவு கூறியுள்ளார். என்றாலும், அப்பாத்திரத்திற்கு வான்மீகி தராத புதிய வடிவத்தைக் கம்பநாடன் தருகிறான். தொண்டு, அதாவது உயிர்களுக்குப் பணிபுரிதல் என்றவொரு கொள்கை சங்ககாலம் தொட்டுத் தமிழினத்தில் ஊறி வந்த ஒன்றாகும். தன்னலம் அற்றுப் பிற உயிர்களுக்குத் தொண்டு செய்வதையே தம் குறிக்கோளாகக் கொண்ட இப்பெருமக்களைப் பற்றிக் கூற வந்த புறநானூறு "தமக்கென முயலா நோன்தாள், பிறர்க்கு என முயலுநர்" (182) என்று இலக்கணம் வகுக்கின்றது. தொண்டு செய்பவர்களுக்குத் தன்னலம் இருப்பின் தொண்டு செய்ய இயலாது. எனவே, இவர்களைப்பற்றிக் கூறவந்த இப் புறப்பாடல் " இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும், நன்று எனத் தமியர் உண்டலும் இலர்" எனக் கூறுகிறது. அதாவது, தேவர்களுக்குரிய கிடைத்தற்கரிய அமிழ்தமே கிடைத்தாலும்கூடப் பிறர்க்குத் தராமல் தாங்களாகவே அதனை உண்ணமாட்டார்கள். வலிமையான முயற்சியை யுடையவர்கள், உழைக்கவும் செய்பவர்கள். ஆனால், இந்த உழைப்பு, முயற்சி என்றவற்றின் பலன்களைத் தமக்கு என்று கொள்ளாமல் பிறருக்காகவே அர்ப்பணிக்கின்றவர்கள். இவர்களே தொண்டர்கள் என்று புறப்பாடல் கூறுகின்றது. ஆறாம் நூற்றாண்டின் கடைப் பகுதியில் வாழ்ந்த திருநாவுக்கரசர் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று தொண்டின் பெருமை பேசுகின்றார். தொண்டு வாழ்வே அனுமன் வாழ்வு என்பதைச் சுவாமி விவேகானந்தரும் விளக்கியுள்ளமை இங்கே நினைக்கத் தக்கது. "...கரும வீரமாவது தன்னலம் கருதாது பிறர் நன்மையின் பொருட்டே கருமத்தில் இறங்குதல் என்பர். இவருடைய பக்தி மதுர பாவனை யன்று; அனுமன் காட்டிய பக்தி

வீரமேயாகும். ஞானத்தில் வீரம் காட்டுவது தன் முத்தியை நாடாது பிறருடைய பிறவித் தளைகளை அறுப்பதே என்று மொழிவர்.

-விவேகானந்த ஞான தீபம் XV

மேலும் விவேகானந்தர் கூறுவது: ...அநுமானை ஒரு கோணத்திலிருந்து நோக்கினால், அவர் சேவை என்னும் உயர்ந்த கொள்கையே உருவானாற்போலக் காணப்படுகிறார்.

ஷ V பக். 218

சங்க காலத்தில் தொடங்கிப் பாரதியார் காலம் வரை தமிழர்களால் போற்றிப் பேசப்படும் தொண்டு என்ற பண்பிற்கு வடிவு கொடுத்தவன் கம்பநாடனே ஆவான். வடிவு கொடுப்பதிலும் ஒரு தனிச்சிறப்பைக் காண்கிறோம். எதிலும் நிலையில்லாமல் தாவித் திரியும் மனப்பான்மையைக் குரங்கு மனப்பான்மை என்று கூறுவது மரபு. அப்படியிருக்கக் குரங்குப் பாத்திரம் ஒன்றை எடுத்துக்கொண்டு, தொண்டு என்னும் பண்பிற்கு ஒரு வடிவமாக அமைத்துவிட்டான் கவிச்சக்கரவர்த்தி. இராமபிரானுக்குத் தொண்டு செய்தவர்கள் மிகப் பலர் ஆவர். மிக முக்கியமாகக் கருதப்பட வேண்டிய இலக்குவன், குகன், சுக்கிரீவன், அனுமன் ஆகிய நால்வருள்ளும் தொண்டின் சிறப்பைக் காண முடிகிறது. இராம அனுஜனாகிய இலக்குவனைப் பொறுத்தமட்டில் அவன் தொண்டின் ஆழத்தில் 'நான்' என்பது தலை நிமிர்ந்து நிற்கக் காணலாம். கைகேயியையும், 'பரதனையும் கொன்று, பட்டத்தை இராமனுக்குத் தருகிறேன்' என்னும்போதும், காட்டிலுள்ள தங்களை வெல்லப் பரதன் வருகிறான் என்று இராமனை எதிர்த்துப் பேசும்போதும் அவனது தொண்டிற்குச் சிறிது குறை ஏற்பட்டுவிடுகிறது.

குகனது தொண்டு ஈடு இணையற்ற தாயினும் இராமனை யாரென அறிந்துகொள்ள முற்படாது தாய் அன்புபோல் உள்ள தொண்டாகும். அறிவினால் ஆய்ந்து பார்க்கும் இயல்பு அவனிடம் இல்லை. சுக்கிரீவனைப் பொறுத்தமட்டில் தொண்டு செய்வதாக நினைத்துக் கொண்டு இராகவனுக்கே

பிரச்சினையை உண்டாக்கும் தொண்டனாவான் அவன். ஆனால், அனுமனுடைய தொண்டு தனியான ஒன்றாகும். 'நான்' என்ற அகங்காரத்தையும், 'எனது' என்ற மமகாரத்தையும் அறவே போக்கியவன் அனுமன். இவன் 'கல்லாத கலையும் வேதக் கடலுமே இல்லை' (3768) என்றும் 'உலகுக்கெல்லாம் ஆணி' (3769) என்றும், 'நாட்படா மறைகளாலும், நவைபடா ஞானத்தாலும், கோட்படாப் பதமே ஐய! குரக்கு உருக் கொண்டது' (3783) என்றும் இராமனால் வருணிக்கப்படும் பாத்திரம் ஆவான். கோட்படாப் பதம் என்று இராமபிரானால் வருணிக்கப்படுதலின் இப்பாத்திரம் யான், எனது என்று செருக்கறுத்த பாத்திரம் என்பது சொல்லாமலே விளங்கும். குகனும் செருக்கறுத்த பாத்திரமேயாவான். குகனும் செருக்கறுத்த பாத்திரம்தான் என்றாலும், செருக்கைத் தரக்கூடிய கல்வி, கேள்வி அவன்மாட்டு இல்லை. ஆனால், அனுமனைப் பொறுத்தமட்டில் கலைக்கடல், வேதக் கடல் ஆகியவற்றைக் கரைகண்டவன் என்று வேத நாயகனே கூறுகிறான். அப்படியிருந்தும் அதனால் பெறும் செருக்குச் சிறிதுமின்றி ஒரு தொண்டனாக வாழ்கிறான் என்றால், அவனைப் படைப்பதன்மூலம் தொண்டு என்ற பண்பிற்கே ஒரு வடிவம் தந்துவிடுகிறான் கம்பநாடன் என்பதை அறியமுடிகிறது. சுக்கிரீவன் உயிர் வாழ்வதற்கும் இராமன் உதவியை நாடுவதற்கும் அவன்மூலமாகத் தாரத்தோடு தலைமையும் பெறுவதற்கும் காரணமாக இருந்தவன் அனுமன் ஒருவனே ஆவான்.

அனுமனுடைய அபர ஞானம், பர ஞானம் என்ற இரண்டும் எத்தகையன என்பதைக் கவிச்சக்கரவர்த்தி கோடிட்டுக் காட்டிவிடுகிறான். தூரத்தே வரும் இராம -இலக்குவரைக் கண்டு ஓடி மலை முழைஞ்சில் ஒளிந்து கொள்கிறான் சுக்கிரீவன். அவனுக்கு ஏவல் கூவல் பணி செய்பவன் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் அனுமன் மறைந்துநின்று இருவரையும் நோக்குகிறான். வருகின்றவர்களுடைய அங்க அடையாளங்கள் சாமுத்திரிகா லட்சணம், அவர்கள் பாதம் பட்டவுடன் பூமியில் தோன்றும் மாறுதல்கள், அவர்கள் உடம்பு பட்டவுடன் பட்டுப்போன

கிளைகளும் துளிர்விடுதல் என்பவற்றையெல்லாம் கண்டு, அவர்களைப்பற்றிய சில முடிவுகளுக்கு வருகிறான். இன்னும் அண்மையில் வந்தவுடன் அவர்கள் முகத்திலுள்ள உணர்ச்சிகளைக் கொண்டே உயிரினும் சிறந்த பொருளை இழந்துவிட்டு அதனைத் தேடி வருகின்றவர்கள் என்ற முடிவுக்கு வருகிறான். மறைந்திருந்து காணும்போதும் தன் கூரிய பார்வையால் (observations) இத்துணை முடிவுகளுக்கும் வருகின்ற ஒருவனைத் தொண்டன் என்று கூறுவதா, அமைச்சன் என்று கூறுவதா, ஞானி என்று கூறுவதா, இவையனைத்தும் ஒன்று சேர்ந்த வடிவம் என்று கூறுவதா என்பதில் நமக்கே ஐயம் ஏற்படுகிறது.

மூவர் என்றும், மும்மூர்த்திகளோ என்றும் (3755) முதலில் ஐயுற்றுப் பின்னர்த் தேவர்கள் அல்லர், மானுடரே; ஆயினும் சிந்தனைக்கு உரிய பொருள் ஒன்றை இழந்து தேடுகின்றனர் (3756), தருமத்தின் வடிவான இவர்கள் அருமருந்தனைய ஒன்றை இழந்து தேடுகின்றனர். (3757) சினத்தை வென்றவர்கள்- கருணையின் கடல் அனையர் - இதமான பண்பு உடையவர்கள் இவர் - இந்திரன் அஞ்சும் வலிமையுடையவர் - மன்மதனையும் வெல்லும் அழகுடையவர் (3758) - புலி முதலிய கொடிய விலங்குகளும் மயில் முதலிய பறவைகளும் இவர்கள் மாட்டு அன்பு செய்து உருகுகின்றன (3760-61 நெருப்பைக் கக்கும் கற்கள் இவர்கள் பாதம் பட்டவுடன் மலர்கள் போன்று மென்மை அடைகின்றன. (3762) - என்றெல்லாம் கணிக்கிறான். இங்குக் கூறப்பட்ட அனைத்தும் அவன் கூரிய பார்வையில் கண்டு நிகழ்ச்சிகள் ஆகும். இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் கண்ட மெய்ம்மைகளின் பட்டியலாக (statement of facts) அடுக்கிவிடுகிறான் வாயுவின் மைந்தன். இந்த மெய்ம்மைகளிலிருந்து ஒரு முடிவை வடித்து எடுப்பது (deduction from these facts) எளிதன்று. திடீரென்று புறத்தே காணப்பட்ட இந்நிகழ்ச்சிகள் தன்னையும் தன் புறமனத்தையும் அகமனத்தையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை அறிவு கொண்டு ஆராய்வதுமட்டு மல்லாமல் தன் உணர்வை எவ்வாறு தாக்குகின்றன என்பதையும் உணர்ந்த பிறகே ஒரு முடிவுக்கு வருதல் பொருத்தமாகும். இவ்வாறுதான்

அனுமன் செய்தான் என்பதை அடுத்த பாடலில் கவிஞன் கூறும் நுண்மையான வாதம் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

துன்பினைத் துடைத்து, மாயத் தொல்வினை தன்னை நீக்கி,
தென்புலத்து அன்றி மீளா நெறி உய்க்கும் தேவரோ தாம்?
(3763)

இந்த முடிவுக்கு அனுமன் எவ்வாறு வருகிறான்? 'தம்மை அடைந்தவரின் துன்பங்களைப் போக்கி, அத்துன்பங்களின் மூலமான பழ வினைகளைப் போக்கி, சாதாரணமாக இறந்து எமலோகம் சேராமல் மீண்டும் பிறவாத வீடுபேற்றை 'நல்க வல்லவர்கள்' என்பதே இவ் அடிகளின் பொருளாகும். இது கொஞ்சம் விந்தையான முடிவே ஆகும். இங்குக் கூறப்பட்ட, செயல்களைச் செய்ய வல்லவன் பரம்பொருள் ஒருவனே யன்றி, இந்திரன் முதலிய தேவர்களாலும் இயலாது என்பதை அறிதல் வேண்டும். அப்படியிருக்க எதை வைத்துக் கொண்டு பேரறிஞனான அனுமன் இந்த முடிவுக்கு வருகிறான்? அவன் கண்டதாக முன் பாடல்களில் கூறப்பட்டுள்ள மெய்ம்மைகள் அனைத்தும் மனிதருள் தலைசிறந்த மாமனிதர்கள் என்ற முடிவிற்கு வரவைத்ததே தவிர, அவர்களைப் ப்ரம்பொருள் என்று நினைப்பதற்கு எவ்வித ஆதாரமும் தரவில்லை. புறத்தே நிகழும் இந் நிகழ்ச்சிகளை மட்டும் வைத்துக்கொண்டு பரம்பொருள் என்று முடிவிற்கு வருவது ஆதாரம் அற்றதாகும். ஆனாலும், அம் முடிவுக்கு அனுமன் வந்துவிட்டான் என்று கூறியவுடன், நம் மனத்தில் எழும் ஐயத்தைப் போக்க இப்பாடலின் பின்னிரண்டு அடிகளில் கவிஞன் விடை கூறுகிறான். இவர்கள் பரம்பொருள்; மானிட வடிவம் தாங்கிய பரம்பொருள் என்ற முடிவிற்கு அனுமன் வந்த காரணம் இதோ வருகின்றது:

என்பு எனக்கு உருகுகின்றது: இவர்கின்றது அளவு இல் காதல்;
அன்பினுக்கு அவதி இல்லை; அடைவு என்கொல்? அறிதல் தேற்றேன் (3763)

ஓர் ஆன்மாவின் எதிரே பரம்பொருள் காட்சி அளிக்குமே யானால் என்பு உருகுதலும், மனத்தில் அளவில்லாத காதல்

வளர்தலும் இரண்டுமே இலக்கணங்கள் ஆகும். இந்த விளக்கத்தை அனுபவ ஞானிகளாகிய மணிவாசகர் போன்றோரின் நூல்களில் பரக்கக் காணலாம். "அற்புதமான அமுத தாரைகள், எற்புத் தொளைதொறும் ஏற்றினை ஏற்றினை" (திருவாசகம் திருவண்ட. 174) என்பது திருவாசகம். மறைந்து நின்று தூரத்தில் கண்டபோதேகூட இராகவன் யாரென்பதை அறிவாலும் உணர்வாலும் அறிந்துகொண்டான் அனுமன் என்கின்றான் கவிஞன். இந்தப் பர ஞானம், அனுபவத்தின் வெள்ளம் அனுமனுடைய முகத்திலும் படர்ந் திருக்க வேண்டுமென்று நினைய வேண்டியுள்ளது. கண்ட சில மணித்துளிகளிலேயே அனுமனை எடை போட்டு "நாட்படா மறைகளாலும், நவைபடா ஞானத்தாலும், கோட்படாப் பதமே ஐய! குரக்கு உருக் கொண்டது" (3783) என்று பரம்பொருளின் அவதாரமாகிய இராகவனே சான்றிதழ் வழங்குகிறான் என்பதையும் கருத வேண்டும். இவ் அனைத்தும் நடைபெற்றிருக்கக் கூடிய நேரம் சில மணித்துளிகளே ஆகும். தொண்டன் பரம்பொருளையும் பரம்பொருள் தொண்டனையும் - இனங் கண்டுகொள்கிற மாபெரும் நிகழ்ச்சி, நடைபெற்று முடிந்துவிடுகிறது.

இந் நிகழ்ச்சிகளில் மற்றொரு புதுமையையும் காண முடிகின்றது. பக்தன் இறைவனைக் கண்டு உணர்வதையும் இறைவன் பக்தனை அறிந்துகொள்வதையும் பக்கத்தில் நிற்பவர்கள்கூட அறிந்துகொள்ள இயலாது. இராமனை யாரென்று நன்கு அறிந்திருந்த இராமானுஜனாகிய இளைய பெருமாள்கூட அனுமனை யாரென்று அறியவில்லை; அறிந்து கொள்ள முயலவும் இல்லை. 'இச்சிறு வடிவினன் உலகுக் கெல்லாம் ஆணி, கோட்படாப் பதம்' என்றெல்லாம் இராகவன் கூறியும்கூட இலக்குவன் கணிப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அதனை அறிந்த இராகவன் 'வில்லார் தோள் இளைய வீர!' (3768) என்று விளித்து, அவனை இடித்துரைக்கும் முறையில், 'இவன் பெருமையை நான் அறிந்துகொண்டேன். நீ அறிந்துகொள்ள முற்பட வில்லை. போகப்போக அறிந்துகொள்வாய்' என்னும் வகையில்,

..........ஆற்றற்கு ஏற்ற
சேண் உயர் பெருமைதன்னைச் சிக்கு அறத் தெளிந்தேன்; பின்னர்க்

காணுதி மெய்ம்மை' என்று தம்பிக்குக் கழறி (3769)

என்ற பாடலை அமைக்கிறான் கவிஞன்.

இதற்கு முந்தைய பாடலில் இலக்குவனைப் பார்த்து இராகவன் 'வில்லார் தோள் இளைய வீர!' என விளிப்பது கருத்துடை அடை கொண்ட விளியாகும். போருக்கு உரிய எவ்வித நிகழ்ச்சியும் நடைபெறாத இந்த நேரத்தில் 'வில் ஆர் தோள்' என்று விளிப்பது ஒரு காரணம்பற்றியே ஆகும். எதிரே உள்ளவனைக் கூர்ந்து பார்த்து அவன் யாரென்பதை எடை போட முயலாமல் ஏதோவொரு பிரமச்சாரி வடிவம் என்று அலட்சியமாக நிற்பதும், அவன் தமையன் 'விரிஞ்சனோ? விடைவலானோ?' என்று கூறியபோதும் அதுபற்றிச் சிந்திக்காமல் இருப்பதும் இராகவனுக்குத் தம்பியினிடம் ஏமாற்றத்தை உண்டாக்குகிறது. மறைமுகமாக அவனை இடித்து அறிவு புகட்ட விரும்பிய பெருமான் 'வில்லையும் புயத்தையும் மட்டும் நம்பிக்கொண்டு அனுபவத்தால் பெறவேண்டிய அறிவை இளமை காரணமாகப் பெற முயலாமல் தன் வீரத்தைமட்டுமே நம்பி வாழ்கின்றவனே' என்று பொருள் பொதிந்த அடைமொழி களால் இளவலை விளித்துப் பேசுகிறான் இராகவன். இவ்வளவு சொல்லியும் இலக்குவன் மனத்தில் ஏதும் மாற்றம் இல்லை ஆதலால், அடுத்த பாடலில் இடித்துப் பேசுகிறான். 'கழறி' என்றால் இடித்துச் சொல்லி என்று பொருள்படும். 'இப்பொழுது புரியவில்லையாயினும் நான் சொல்வது உண்மையென்பதைப் பின்னர்க் காண்பாய்' என்று பேசுகிறான் இராமபிரான்.

கண்டமாத்திரத்திலேயே ஒருவரை யொருவர் நன்கு புரிந்துகொண்டனர். தன்னை மீளா நெறிக்குச் செலுத்தும் பரம்பொருள்தான் மானுட வடிவம் தாங்கிவந்தது என்பதை அறிந்த அந்த விநாடியிலேயே யான் எனது என்ற அகங்கார மமகாரங்களையும் மனம், மொழி, மெய் என்ற மூன்றையும்

இராமன் திருவடிகளில் சமர்ப்பித்துவிட்டு, அப் பெருமானுக்குத் தொண்டு செய்வதையே தன் வாழ்நாளின் குறிக்கோளாக ஏற்றுக்கொண்டுவிட்டான் அனுமன் என்றாலும், தான் பணிபுரியும் சுக்கிரீவனை விட்டு அகன்று விட இத்தொண்டன் விரும்பவில்லை. சுக்கிரீவன்மீது கொண்ட இராச விசுவாசம் இப்பரம்பொருளோடு அவனைச் சேர்த்துவைத்து, இந்த உலகில் அவன் குறை தீர்த்துவைக்க வேண்டும் என்ற முடிவிற்கு வருகிறது.

சந்தேகப் பிராணியாகிய சுக்கிரீவனிடம் இராம-இலக்குவர் வருகையை அறிவிக்கச் சென்ற அனுமன், சுக்கிரீவனிடம் பேசும் முதல் வாக்கியம் அவனுடைய பெருமையையும், நுண்மாண் நுழைபுலத்தையும், தன் தலைவனான சுக்கிரீவனை எவ்வளவு துல்லியமாக எடையிட்டிருந்தான் என்பதையும் அறிவிக்கின்றன. இராமன் பரம்பொருள் என்பதையோ, தன்னை அண்டியவர்களை மீளா நெறியுய்ப்பவன் என்பதையோ அனுமன் முதலில் கூறவில்லை. காரணமென்ன? உயிரின்மீது பெரும்பற்றுக் கொண்டவனும், இன்ப வேட்டையில் முனைந்து செல்பவனும், பதவி எப்போது கிடைக்கும் என்று ஓயாது எண்ணுபவனும், தன் பகைவனை யார் துணை கொண்டு எப்போது அழிக்க முடியும் என்று ஓயாமல் சிந்திப்பவனுமாகிய சுக்கிரீவனிடம் பரம்பொருள் மானுட வடிவம் தாங்கி வந்துள்ளது என்றால், அச்சொறகள் அசசெவியில ஏறா. அதுபற்றி அவன் கவலைப்படப்போவதும் இல்லை; என்றாலும், இராகவனிடம் சுக்கிரீவனை அனுப்ப வேண்டும். அதற்கு வழி யாது என்று ஆராய்ந்த அனுமன் நல்லதொரு முடிவிற்கு வருகிறான். ஒவ்வொரு விநாடியும் வாலிபாற் கொண்ட அச்சத்தால் நைந்து கொண்டிருக்கும் சுக்கிரீவனிடம் இவன் பகைவனாகிய வாலியை ஒழிக்க ஒருவன் வந்துள்ளான் என்றால், அவனைக் காண உடனே சுக்கிரீவன் புறப்பட்டு விடுவான் என்பதை நன்கு அறிந்த அனுமன், சுக்கிரீவனிடம் சென்று தசரத குமாரர் யாவரென்று அவர்கள் வரலாற்றை முதலில் கூறாமல் வாலிபற்றிப் பேசுவது மனவியலை நன்கு அறிந்த அனுமனின் சாதுரியத்திற்கும் சமயோசித புத்திக்கும் எடுத்துக்காட்டாகும்.

மேலவன், திருமகற்கு உரைசெய்தான், 'விரை செய் தார்
வாலி என்ற அளவு இலா வலியினான் உயிர் தெறக்
காலன் வந்தனன்; இடர்க் கடல் கடந்தனம், எனா,
ஆலம் உண்டவனின் நின்று, அருநடம் புரிகுவான் (3787)

வாலி விண் பெறக் காலன் வந்தனன் என்றதொடு அமையாமல், தன் தலைவனாகிய சுக்கிரீவன் எதிரே சிவபெருமான் போன்று நடனம் ஆடினானாம். 'காலன் வந்தனன்' என்ற சொல்லின் பொருளைச் சுக்கிரீவன் அறிவதுடன், அனுமனின் மனநிலையை, மகிழ்ச்சியை அறிவிக்கும் அவனது நடனம் சுக்கிரீவனை நம்பிக்கை கொள்ளச்செய்தது.

சுக்கிரீவனுக்கு ஏவல் கூவல் பணி செய்பவனாகவும், அமைச்சனாகவும் இருந்த அனுமன், தங்கள் கட்சிக்கு இராகவனை அழைத்ததே ஒரு சிறப்பாகும். அவர்களிடம் பேசியதிலிருந்து வாலி - சுக்கிரீவர்களைப் பற்றியோ அவர்கள் பகைமைபற்றியோ சுக்கிரீவன் மனைவியை வாலி கவர்ந் துள்ளான் என்பதுபற்றியோ இராம-இலக்குவர்க்கு ஒன்றும் தெரியாது என்பதை அனுமன் தெரிந்துகொண்டான். புதிதாக வந்தவர்களைச் சுக்கிரீவனிடம் நட்புக் கொள்ளுமாறு செய்வது ஒன்று. ஆனால், வாலியைக் கொன்றாலொழிய இந்நட்பின் உடனடிப் பயனைச் சுக்கிரீவன் அடைய முடியாது. அதே நேரத்தில் நட்புச செய்துகொண்ட உடனேயே 'என் பகைவன வாலி இருக்கிறான். அவனைக் கொல்ல வேண்டும்' என்று சொன்னால், இராமன் உடன்படுவானா என்பது ஆராய்ச் சிக்கு உரியது. இந்நிலையில், மாபெரும் அறிவாளியாகிய அனுமன் ஒரு வழி காண்கிறான். மனைவியை இழந்து அவளைத் தேடி அலைய நெடுந்தூரம் வந்துவிட்ட இராகவன் மனத்தில் தன்னைப்போன்ற அதே துயரத்தை இப்பொழுது நண்பனாகக் கொண்ட சுக்கிரீவனும் கொண்டுள்ளான் என்றால், சுக்கிரீவன்மாட்டுப் பரிவும், வாலியைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணமும் இராகவனுக்கு வருவது உறுதி. என்றாலும், சுக்கிரீவன் மனைவியை வாலி கவர்ந்தா னென்பதை எப்பொழுது, எங்கே, எவ்வாறு சொல்வது என்பதை ஆராய்ந்து முடிவு கண்ட பெருமை அனுமனுக்கே

உரியது. காலம் கருதி இடத்தாற் செய்தால் ஞாலம் கருதினும் கைகூடும் என்பர் வள்ளுவர். அதனை அற்புதமாகக் கையாளுகிறான் அனுமன்.

இராம-இலக்குவர்களை விருந்துண்ணுமாறு தன் இருக்கைக்கு அழைத்தான் சுக்கிரீவன். அவர்களை அமரச் செய்து தானும் உடன்அமர்ந்து உண்ண, அனுமன் முதலியோர் பரிமாறினர். பெரியோர்களை விருந்துக்கு அழைத்தால் இல்லத்தரசிதான் பரிமாற வேண்டும். பெண் வாடையே இல்லாமல் ஆண்களே பரிமாறுவதைக் கண்ட இராகவன் மனம் மிகவும் கவன்று, நொந்து,

விருந்தும் ஆகி, அம்மெய்ம்மை அன்பினோடு
இருந்து, நோக்கி, நொந்து, இறைவன், சிந்தியா
'பொருந்து நன் மனைக்கு உரிய பூவையைப்
பிரிந்துளாய்கொலோ நீயும் பின்?' (3820)

என்று கேட்கிறான்.

இத்தகையதொரு சந்தர்ப்பத்தை உண்டாக்கியவன் அனுமனே ஆவான். இராகவன் கேளாமல் தானே வாலியின் வரலாற்றையும் அண்ணன் தம்பி பகைமையையும் தம்பி மனைவியை அண்ணன் கவர்ந்தமையும் கூறினால் அது எந்த அளவுக்கு இராமனைப் பாதிக்கும் என்று தெரியாது. வாலியைக் கொல்ல வேண்டுமென்ற எண்ணம் இராகவன் மனத்தில் தோன்ற வேண்டுமேயானால் அதற்குரிய நிலைக் களத்தை அமைக்க வேண்டும். இந்த விருந்தை ஏற்பாடு செய்து, ஆண்களே பரிமாறும் சூழ்நிலை உருவாக்கி, இராகவன் மனத்தில் எல்லையற்ற துயரத்தையும் நோவையும் உண்டாக்கி, 'நீயும் பூவையைப் பிரிந்துளாயோ' என்று கேட்குமாறு செய்து, அற்புதமான நிலைக்களத்தை உருவாக்கிவிட்டான் அனுமன். இந்த நிலையில் பூவையை இழந்ததற்குரிய காரணத்தையும், அதனைச் செய்தவன் யாரென்பதையும் கூறினால் இராகவன் மனத்தில் வாலியைக் கொன்று சுக்கிரீவன் தாரத்தை மீட்டுத் தருதல்வேண்டும் என்று உறுதிகொள்வது நிச்சயமாக நடந்தே தீரும். இந்த மாபெரும் செயலைச் செய்தவன் அனுமனாகிய தொண்டனே ஆவான்.

இராகவனைக் கண்டபோது தன் எலும்பு உருகுவதாகவும் காதல் மீதூருவதாகவும் கூறியதுடனல்லாமல், இராகவனைப் பற்றித் தன் மனத்தில் தோன்றிய எண்ணம் உறுதிப்படும் வகையில் இராகவனுடைய தடக்கையில் சங்கு சக்கரக் குறி உள என்றும் கண்டவன் அனுமன் ஆவான். அப்படியிருந்தும் மராமரத்தில் அம்பைச் செலுத்தி இராகவனுடைய ஆற்றலை அறியலாம் என்று சுக்கிரீவனிடம் அனுமன் ஏன் கூற வேண்டும்? இராகவனுடைய ஆற்றலில் அனுமனுக்கே ஐயம் வந்துவிட்டதா என்ற வினாத் தோன்றினால் அது நியாய மானதே யாகும். இந்த நிலையில் யாருக்காக எப்பொழுது எந்த நிலையில் அனுமன் இந்த உத்தியைக் கூறினான் என்பதை ஆராய வேண்டும். அவனுடைய தலைவனாகிய சுக்கிரீவன் ஒரு சந்தேகப் பேர்வழி. எவ்வளவு கூறினாலும் சான்றுகள் எடுத்துக்காட்டினாலும், அவனது அடிமனத்தின் சந்தேகம் போவது கடினம். "வேறுஉள குழுவையெல்லாம் மானுடம் வென்றதன்றே" (3804) என்று கூறினாலும் வாலியினிடம் உதைபட்டவன் ஆதலாலும் எதிரே நிற்பவர் பலத்தில் பாதியை வாலி பெற்றுவிடுவான் ஆதலாலும் இராமன் வாலியை வெல்லமுடியுமா என்ற ஐயம் அவன் அடிமனத்தில் இருந்ததில் வியப்பில்லை. அனுமன் பரம் பொருளின் இலக்கணத்தை, ஆற்றலை அறிந்தவன்; ஆதலால் அனுமன் ஐயம் கொள்ளவில்லை. ஆனால், இவை இரண்டையும் அறியாத காரணத்தால் சுக்கிரீவன் ஐயம் கொண்டது நியாயமானதே ஆகும். இராமனின் ஆற்றலைக் காட்சிப் பிரமாணமாகக் கண்டாலொழியச் சுக்கிரீவன் நம்புவது கடினம். அதை நம்பாதவரையில் வாலியுடன் போருக்குச் செல்வதும் இயலாத காரியம். சுக்கிரீவனிடம் வாலி போரிட்டா லொழிய இராமன் வாலியைக் கொல்வதற்கு இயலாது. எனவே, நுண்மாண் நுழைபுல மிக்க அனுமன், சுக்கிரீவன் மனத்தில் ஒரு நம்பிக்கையை, அண்ணனிடம் போர் செய்யும் துணிவை வரவழைக்க இந்த உபாயத்தைக் கூறுகிறான். மரா மரத்தில் அம்பு எய்து துளைப்பது, இராமனுக்கு எளிய செயல் என்பதை அனுமன் அறிவான். அதனை நேரில் கண்டாலொழியச் சுக்கிரீவன் நம்பமாட்டான்.

இவ்வாறு செய்வதில் ஒரு சங்கடமும் உண்டு. "தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பதம் பார்ப்பது போல" எவ்விதக் கைம்மாறும் கருதாமல் வாலியைக் கொன்று. தாரமொடு தலைமையும் தருகிறேன் என்று முன்வந்துள்ள இராகவனுக்கு ஒரு பரீட்சை வைத்தால், அதனை எப்படி ஏற்றுக்கொள்வானோ? அதனால் வருத்தம் அடைவானோ? சினம் கொள்வானோ? 'எனக்கே பரீட்சை வைக்கும் உங்கள் நட்பே வேண்டாம்' என்று சொல்லிவிடுவானோ என்பன போன்ற ஐயங்கள் ஏனையோருக்கு இருந்திருக்கலாம். ஆனால், இறை இலக்கணத்தை நன்கு அறிந்திருந்த அனுமனுக்கு இந்த ஐயங்கள் எதுவும் எழவில்லை. இறைவனுடைய பல்வேறு குணங்களில், 'சௌலப்பியம்' என்று கூறப்படும் எளிவந்த தன்மையும் ஒன்றாகும். குழந்தை தந்தையை நோக்கி 'இந்தப் புத்தக மூட்டையை உன்னால் தூக்க முடியுமா' என்று கேட்டால், எந்தத் தந்தையும் குழந்தையினிடம் கோபித்துக் கொள்ளமாட்டான். அதேபோல இராமனும் கோபித்துக் கொள்ளமாட்டான் என்ற எண்ணம் உடையவனாதலால், இராமனை ஐயப்படும் சுக்கிரீவனை நோக்கி,

'பிறிதும், அன்னவன் பெரு வலி ஆற்றலை, பெரியோய்!
அறிதிஎன்னின், உண்டு உபாயமும்; அஃது அரு மரங்கள்
நெறியில் நின்றன ஏழில், ஒன்று உருவ, இந் நெடியோன்
பொறிகொள் வெஞ் சரம் போவது காண்!"...... (3863)

என்று அனுமன் பேசுகிறான்.

அனுமன் பணிபுரிந்தது சுக்கிரீவனிடமே ஆகும். சுக்கிரீவனிடம் கொண்ட இராச விசுவாசத்தால் வாலியையும் பகைத்துக்கொண்டு வாழ்ந்தான் அனுமன். இராமனை நண்பனாகக் கொள்வதற்கும் அவன் உதவியைக் கொண்டு வாலியைக் கொல்வதற்கும் கிட்கிந்தை அரசை மீட்டுத் தருவதற்கும் சுக்கிரீவனுக்கு உதவி செய்த ஒரேயொருவன் அனுமனே ஆவான். அத்தகைய அனுமன் அருமை பெருமைகளை, ஆற்றலை, நுண்மாண் நுழைபுலத்தை ஒரு சிறிதும் அறிந்தவனாகச் சுக்கிரீவன் காணப்படவில்லை. தன்பால் நேயம் கொண்டு பணிபுரிந்த அனுமனை முழுவதும்

அறிந்துகொள்ளாதவன் சுக்கிரீவன். ஆனால், சுக்கிரீவனுக்கும் அனுமனுக்கும் பகையாகிய வாலியோ அனுமனையும் அவனது ஆற்றலையும் அறிந்திருந்தான். அனுமனை இராமன் அறிந்ததுபோல இராமகாதையில் அனுமனை அறிந்த வேறொருவன் உண்டென்றால் அது வாலியே ஆவான். அதனால்தான், தன் இறுதிக் காலத்தில் தன்னைக் கொன்றவனாகிய இராமனை நோக்கி, "உனக்குத் துணைபுரிய வந்துள்ள அனுமனைச் சாதாரணமானவன் என்று நினைத்து விடாதே. நின்செய்ய செங்கைத் தனு என நினைதி' (4071) என்று அறிமுகம் செய்துவைக்கிறான். இராமனின் கோதண்டம் அனைவரும் அறிந்த பேராற்றல் உடையது என்றாலும், இராமன் கையிலிருக்கும்போதுதான் அது அவன் விருப்பப்படி பணிபுரிய முடியும். அனுமன் என்றால் இராமனை விட்டுப் பிராட்டியைத் தேடிக்கொண்டு நீண்ட தூரம் சென்றுகூடப் பெரும்பணி புரியும் பேராற்றல் உடையவன்; எனவே, நின்று பணிபுரியும் செங்கைத் தனுவைவிட் நின்றும் சென்றும் பணிபுரியும் அனுமன் ஒருபடி உயர்ந்தவன் என்று சொல்லாமல் சொல்லிக்கொள்கிறான் வாலி.

கிட்கிந்தா காண்டத்தில் கலன்காண் படலம் தவிர எல்லாப் படலங்களிலும் அனுமனைச் சந்திக்கின்றோம். அனுமன் அரும்பாடுபட்டு வாங்கித் தந்த அரசையும் சுக்கிரீவன் 'பூவியல் நறவம் மாந்திப் புந்தி வேறு உற்று' இழக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. 'கார்காலம் முடிந்தவுடன் படையுடன் வருகிறேன்' என்ற வார்த்தைகளை மறந்து மதுமயக்கத்தில் கிடக்கின்றான் சுக்கிரீவன். இராமன் ஏவலால் புயல் போலச் சீறி வரும் இலக்குவனைச் சந்திக்க யாருக்கும் நெஞ்சுரமோ சூழ்ச்சியோ இல்லை. கைம்பெண் கோலத்தில் தனியே வாழ்ந்துவரும் தாரையை அனுப்பி இலக்குவன் கோபத்தைத் தணித்து இரண்டாம் முறையாகச் சுக்கிரீவன் உயிர் பிழைக்குமாறு செய்தவன் அனுமனே ஆவான்.

இராவண வதந்தான் காப்பிய நோக்கம் என்றால், அது நிறைவேற ஒரு மாபெரும் சிக்கல் இடையே உள்ளது.

இராவணனிடம் நெருங்கிய தொடர்புடைய வாலியைக் கொன்றால் ஒழியக் காப்பிய நோக்கம் நிறைவேறாது. இந்த மாபெரும் தடையை அதாவது வாலி வதை வாயிலாக நிகழச் செய்தவன் அனுமனேயாவான். வாலி என்பவன் யார் என்று தெரியாத இராமனை இவ்வதத்தைச் செய்யுமாறு தன் அறிவின் திறத்தாலும் சூழ்ச்சியாலும் தூண்டியவன் அனுமனே ஆவான். இம் மாபெரும் திட்டத்தைத் தன் அறிவின் துணைக் கொண்டு தீட்டி, காலம், இடம் என்பவற்றை நுண்ணிதின் தேர்ந்து அத்திட்டத்தைச் செயற்படுத்தியவன் அனுமனே ஆவான் என்பது இதுகாறும் கூறியவற்றால் நன்கு விளங்கும். கம்பநாடன் கருத்தும் இதுவேயாகும் என்பதை

'அறிந்து திறத்து ஆறு எண்ணி அறத்து ஆறு அழியாமை
மறிந்து உருளப் போர் வாலியை வெல்லும் மதி வல்லீர்;
(4723)

என்ற பாடல் அறிவுறுத்துகின்றது.

நாலா திசைகளிலும் பிராட்டியைத் தேடப் பலர் அனுப்பப்படுகின்றனர். ஆனால், பிராட்டியைக் கொண்டு சென்றவன் இராவணன் என்பதால் கவிஞரின் அறிவுமிக்க அனுமனைத் தேர்ந்தெடுத்துத் தென்திசைக்கு அனுப்புகின்றனர். பல்வேறு வீரச் செயல்களைச் செய்துகொண்டு அனைவரையும் அழைத்துக்கொண்டு மயேந்திரமலைமீது தங்குகிறான் அனுமன். கடலைக் கடப்பது யார் என்ற வினாத் தோன்றிய பொழுது "தன் பெருமை தான் அறியாத் தன்மையினானாகிய மாருதிக்குச் சாம்பன் அவனுடைய பெருமையை எடுத்துக் கூறுகிறான். விண்ணில் சஞ்சரிக்கும் ஆற்றலை வாயுவின் மைந்தன் பெற்றுள்ளான் என்பது உண்மையே. ஆனால், இராவணன் முதலானோர் பெற்ற ஆற்றலைத் தவறான வழியில் சென்று பாழாக்கியது போன்று மாருதி தன் ஆற்றலை, வலிமையை வீணடிக்க வில்லை. ஓர் ஆன்மா கீழே இழுக்கப்படாமல் மேலே செல்ல வேண்டுமென்று விரும்பினால் அது கைக்கொள்ள வேண்டிய முதற்பணி - முக்கியப் பணி புலன் அடக்கமாகும். அந்தப்

புலனடக்கம் முற்றிலும் கைவரப் பெற்றவன் - 'ஐந்தவித்து' அதனால் பெறும் ஆற்றலையும் பெற்றிருந்தவன் அனுமன். பதினொரு பாடல்களில் அனுமனின் ஆற்றலை அவனுக்கே நினைவூட்டிய சாம்பன் மிக நுண்மையான கருத்தை ஒரு பாடலில் வைத்துப் பேசுகிறான்:

நீதியில் நின்றீர்; வாய்மை அமைந்தீர்; நினைவாலும்
மாதர் நலம் பேணாது வளர்ந்தீர்; மறை எல்லாம்
ஓதி உணர்ந்தீர்; ஊழி கடந்தீர்; உலகு ஈனும்
ஆதி அயன்தானே என யாரும் அறைகின்றீர் (4725)

வரம்பிகந்து, மதுவிலும் மாதர்களிடத்தும் பொழுதைக் கழிக்கும் இலங்கைக்கு ஒரு பெண்ணைத் தேடிச் செல்பவனுக்குப் புலனடக்கம் தேவை என்பதைச் சாம்பன் அறிவுறுத்துகிறான். "நினைவாலும் மாதர் நலம் பேணாது வளர்ந்தீர்" என்ற தொடர் இதுவரை நாம் கண்டிராத அனுமனின் பண்பாட்டின் ஒரு பகுதியை, மிக இன்றியமையாத பகுதியை எடுத்துக்காட்டுகிறது. கிட்கிந்தா காண்டத்தில், இறுதியில் வரும் படலத்தில் வரும் இப்பாடல் சுந்தர காண்டம் முழுமையும் ஆக்கிரமித்திருக்கும் அனுமனைப் பற்றிய முன்னுரையாக அமைகிறது.

இவ்வாறு விலங்கு வடிவங் கொண்ட இரண்டு பாத்திரங்களை ஈடு இணையற்ற முறையில் படைத்து உலகக் காப்பியங்களுள் வேறு எங்கும் காணமுடியாத சிறப்பினைத் தனதாக்கிக் கொண்டான் கம்ப நாடன்.

# சுந்தர காண்டம்

கம்பநாடனின் இராமாவதாரத்தில் ஐந்தாவதாக உள்ளது, சுந்தர காண்டம். இப்பெயர் வால்மீகி இட்ட பெயராகும். ஏனைய காண்டங்களுக்கு வால்மீகி இட்ட பெயர்களை அப்படியே எடுத்துக்கொண்ட கவிச்சக்கரவர்த்தி இக்காண்டப் பெயரையும் அப்படியே ஏற்றுக்கொள்ளுகிறான். இக் காண்டத்தின் பெயர்பற்றியும், பொருள்பற்றியும் பல வகையான கருத்து வேறுபாடுகள் உண்டு. இக்காண்டம் முழுவதிலும் கடைசிப் படலத்தைத் தவிர வேறு எங்கும் காப்பிய நாயகனைக் காணமுடியாது. அதற்குப் பதிலாகத், தொண்டின் உறைவிடமாகவும் தன்னை இழந்த பக்திக்கு ஒரு முழு வடிவமாகவும் உள்ள அனுமான், காண்ட முழுவதும் விசுவரூபம் கொண்டு விளங்குகிறான். கிட்கிந்தா காண்டத்தின் தொடக்கத்தில் மாணி வடிவமாக (பிராமண பிரம்மச்சாரி) நம் முன்னர்க் காட்சித் தருகிறான். அனுமன், இராமனுடைய கடைக்கண் பார்வை கிடைத்தபிறகு கொஞ்சம் கொஞ்சமாக வளர்கின்றான், அனுமன். அக்கடைக்கண் பார்வை அனுமனையும் அவன் உடலையும் எவ்வளவு உயரத்திற்கு வளர்த்தது என்பதைக் கிட்கிந்தா காண்டத்தில் காணமுடிகின்றது. இராமன் எதிரே இருக்கின்றவரையில், அனுமன், அடக்கத்தின் உறைவிடமாய்ச் சாதாரண வடிவுடனேயே காணப்படுகின்றான். அங்கதன் முதலாயினோரை அழைத்துக்கொண்டு தென்திசை நோக்கிப் புறப்பட்ட அனுமன், மயேந்திர மலையில் வந்து தங்குகிறான். இராமனுடைய கடைக்கண் நோக்கம் தன்னை எவ்வளவு தூரத்திற்கு வளர்த்துள்ளது என்பதை அவனேகூட அறியவில்லை. கடலைத் தாண்டுவது எப்படி என்ற ஆராய்ச்சியில் அனைவருடனும் சேர்ந்து அனுமனும் மருள்கிறான். இந்நிலையில் சாம்பன், தன் பெருமை தான் அறியா அனுமனுக்கு அவனுடைய ஆற்றல்களை

வரிசைப்படுத்தி நினைவூட்டுகிறான். (4719 - 4729) இந்த நிலையிலும் அடக்கத்தின் உறைவிடமாக உள்ள அனுமன் சாம்பவனை நோக்கி,

இற்றை நும் அருளும், எம் கோன் ஏவலும், இரண்டு
பாலும்
கற்றை வார் சிறைகள் ஆக, கலுழனின் கடப்பல் காண்டிர்
(4734)

என்றான். 'கருடனைப் போலக் கடப்பல்' என்ற உவமையே அனுமனின் மனநிலையை நன்கு அறிவிக்கின்றது. கருடனின் இரு சிறகுகள்போல, உடன்வந்தவர்களின் அன்பும், இராகவனின் ஏவலும் உள்ளன என்பது இவ் உவமையால் கிடைக்கின்ற பொருள். இவை இரண்டும் சிறகுகளாயின், அனுமன் கருடனாக ஆகிவிடுகின்றான். கருடன் மேல் எப்போதும் செல்பவன் திருமாலாதலின் கடலைத் தான் கடந்தாலும் தன்னைக் கடக்குமாறு செலுத்துபவன் திருமாலே என்று உணர்ந்து அனுமன் பேசுகிறான் என்பதை இவ்வுவமை நினைவூட்டும்.

இராமனை முதன்முறை காணும்பொழுதும், அவனுடன் இருக்கும்பொழுதும் சாதாரண வடிவுடன் இருந்த அனுமன், இப்பொழுது அவன் ஏவலைத் தாங்கி அவன் திருவடிகளை மனத்துட் கொண்டு அவனுடைய திருநாமத்தை உச்சரித்துக் கொண்டிருப்பதால் வளரத் தொடங்குகிறான். இப்பொழுது அவன் எடுக்கின்ற விசுவரூபம் சுந்தர காண்டம் முழுவதும் வியாபித்துநிற்கிறது. சாதாரணக் குரங்கு உருவத்தைச் சுந்தர வடிவம் என்று யாரும் கூறமாட்டார்கள் இப்பொழுது இராகவன் அருளை முற்றிலும் பெற்று 'யான்', 'எனது' என்ற அகங்கார மமகாரங்களை அறவே நீக்கியபொழுது அக்குரங்கு உருவே அழகிய வடிவமாகக் காட்சி தருகின்றது. 'யாது ஒன்று நினைக்கத் தான் அதுவாதல்' உயிர்கட்கு இயல்பு என்று சைவ சித்தாந்தம் பேசும். அழகின் எல்லையாக உள்ளவன் இராமன். "அந்த இராம செளந்தரியம்" என்று அருணாசலக் கவி பாடுகின்றார். எனவே, இராம செளந்தரியத்தில் முற்றிலுமாகத் தன்னை ஆட்படுத்திக்கொண்ட அனுமனும்

அகத்திலும் புறத்திலும் அழகனாக (சௌந்தர்யனாக) மாறுவதில் வியப்பொன்றுமில்லை. வான்மீகியின் சுந்தர காண்டத்திற்கு விளக்கம் எழுதியவர்கள் பக்தி சௌந்தரியம், வீர சௌந்தரியம் என்ற இரண்டும் நிறைந்தமையின் அனுமன் 'சுந்தரன்' எனப்பட்டான் என்று கூறுவார்கள். எனவே, சுந்தர காண்டத்தின் பெயர்ப் பொருத்தத்தை ஒருவாறு அறிய முடியும்.

மன்னன் மகளாகத் தோன்றி ஒரு மன்னனை மணம் புரிந்து அரண்மனையில் வாழ்ந்த பிராட்டியின் அழகை முதலிரண்டு காண்டங்களில் கண்டோம். சிறையெடுக்கப் பட்டு அசோகவனத்தில் எவ்விதத் துணையுமின்றி அல்லற்பட்ட நிலையில் அவளுடைய சௌந்தரியம் என்ன ஆயிற்று என்று கேட்பவர்க்கு விடை கூறுகிறான், அவளை நேரே கண்ட அனுமன். முழு அலங்காரங்களோடு இருந்த பிராட்டியைத்தான் இராமன் அறிவான். காட்டிடை வாழ்ந்தபோது ஒருசில அணிகளுடன் பிராட்டி இருந்தாளேனும் அவள் அழகிற்கு எவ்விதக் குறையும் இல்லை. இவ் அணிகள் பூண்டிருந்த காலத்திலும் அவை பிராட்டிக்கு அழகு சேர்க்காமல் அவள் அழகை மறைக்கவே பயன்பட்டன என்பதையும் கம்பநாடன் 'உமிழ் சுடர்க் கலன்கள், நங்கை உருவினை மறைப்பது ஓரார்' (1119) என்ற அடியில் குறிப்பிடுகிறான். இத்துணை அழகையும் இராகவன் கண்டிருப்பினும் பிராட்டியிடம் அவன் கண்டிராத ஓர் அழகைத் தொண்டனாகிய அனுமன் காணுகிறான். 'தவம் செய்த தவமாம் தையலின் அழகை இராகவன் "காண நோற்றிலன் கமலக் கண்களால்" (5141) என்று அனுமனே பேசுகிறான். சீதையினுடைய வடிவழகை ரூப சௌந்தரியம் என்பர் வடமொழியாளர். அசோகவனத்திற்கு வருகின்றவரை அவள் தவத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டதே இல்லை. ஆனால், அசோகவனத்தில் இராகவனைப் பிரிந்து பிராட்டி இருக்கும்பொழுது தவம் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. அதன் விளைவாக அற்புத ரூப சௌந்தரியம் அவளிடம் தோன்றலாயிற்று. அதனைக் காணும் பேறு பெற்றவன் அனும்ன் ஒருவனே யாவான். அந்தத் தவ

சௌந்தரியத்தை மனத்தில் கொண்டுதான் அவளைப் பற்றி இராகவனிடம் பேசும்போது 'தவம் செய்த தவமாம் தையல்' என்று பேசுகிறான்.

பிராட்டியிடம் தவ அழகு மிளிர்ந்தது என்றால் அவளைக் காத்து நின்ற அரக்கியர்களும் தவறான எண்ணத்துடன் அவளிடம் பேசவந்த இராவணனும் ஏன் இதனைக் காணவில்லை என்ற வினாத் தோன்றுவது இயல்பே. இராவணனைப் பொறுத்தமட்டில் வடிவழகைமட்டும் கண்டானே தவிரத் தவ அழகைக் காணவில்லை. காரணமென்ன? தவம் என்றால் புலனடக்கம் என்று பொருள் கொள்ளலாம். புலனடக்கம் இல்லாதவர்கள் தவம் செய்யவும் முடியாது: தவத்தால் தோன்றும் அழகைக் காணவோ, அறியவோ, தெளியவோ, உணரவோ முடியாது. பிராட்டியின் தவ அழகை இராவணன் காண முடியாமைக்குக் காரணம் புலனடக்கம் என்பது அவனிடத்தில் இல்லை. புலன்களின் வெறியாட்டத்தில் சிக்கிச் சுழல்பவன் அவன். எனவே, அவனால் பிராட்டியின் வடிவழகைக் கடந்த தவ அழகைக் காணும் வாய்ப்பே இல்லை. அனுமனைப் பொறுத்த மட்டில் புலனடக்கத்தின் மொத்த உருவாக வாழ்ந்தவ னாதலின், பிராட்டியின் வடிவழகைக் காணாது தவ அழகையே கண்டான். அதனாலேயே 'தவம் செய்த தவமாம் தையல்' என்று கூறுகிறான்.

சுந்தர காண்டத்தின் 14 படலங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் அனுமன் வீர சௌந்தரியம், பக்தி சௌந்தரியம், புலனடக்கச் சௌந்தரியம் ஆகிய மூன்றும் மிளிரும் சுந்தரனாகக் காட்சியளிக்கிறான். பிராட்டியைப் பொறுத்தவரை காட்சி, உருக்காட்டு, சூடாமணி ஆகிய மூன்று படலங்களில் தவ சௌந்தரியத்துடன் காணப்படுகிறாள். எனவே, இக்காண்டம் சுந்தர காண்டம் என்று பெயர் பெறுவதற்கு முறையே அனுமனும் பிராட்டியும் காரணமாகின்றனர்.

சுந்தர காண்டம், கடல் தாவு படலத்தில் தொடங்கித் திருவடி தொழுத படலத்தில் முடிகின்றது. இந்தப் பெயர்

வைப்பு முறையிலும் கம்பன் ஏதோ உட்கருத்தோடு இப்படலப் பெயர்களை வைத்தானோ என்று நினைக்கத் தோன்றுகிறது. கடல் என்று கூறினவுடன் 'பிறவிக் கடல்' என்பது பலருடைய உள்ளத்திலும் தோன்றி நிற்கும். பிறவி என்பது ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர்வரை பல்வேறு பிறவிகளையும் குறிக்கும். அதனாலேயே வள்ளுவப் பேராசான் பிறவிக் கடல் என்று கூறாமல், 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்' (10) என்றும் 'பிறவாழி (பிறவு ஆழி) என்றும் கூறிப்போனார். வள்ளுவர் கணக்குப்படி பிறவியாகிய ஆழியைக் கடப்பவர் இறைவன் அடி சேர்வர் என்பது தேற்றம். இக்கருத்தை மனத்துட் கொண்ட கம்பநாடன் 'கடல் தாவு படலம்' என்று முதற் படலத்திற்குப் பெயரிட்டு, தாவினவர்கள் என்ன பயனைப் பெறுவார்கள் என்று கூறுபவன்போலக் கடைசிப் படலத்திற்குத் 'திருவடி தொழுத படலம்' என்று பெயரிட்டான். பிறவிக் கடலைத் தாண்டினால் கிடைப்பது திருவடி என்ற கருத்து இங்கே புதைந்துள்ளமை அறியப்பெற வேண்டும். சுந்தர காண்டத்தின் முதற்படலம் கடல் தாவு படலமாகும். பிறவிக் கடலையும் தாண்டுவதற்கு என்ன தேவையென்பதைக் கிட்கிந்தா காண்டத்தின் மயேந்திரப் படலம் கூறுகிறது. பிறவிக் கடலை ஒருவன் தாண்டவேண்டுமேயானால் அதற்குச் சில அடிப்படையான பண்புகள் தேவை. முதலாவது, யான், எனது என்னும் செருக்கற்ற நிலை (5-6). அடுத்தபடியாக வேண்டப்படும் பண்பு, புலனடக்கம் ஆகும். அதை வலியுறுத்த வந்த வள்ளுவப் பேராசான். 'அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல் வேண்டும் வேண்டிய வெல்லா மொருங்கு' (35.3) என்றும், 'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப்பு உடைத்து' (13.6) என்றும் கூறியவற்றால் அறியலாம். அடுத்துள்ள பண்பு தொண்டு மனப்பான்மை யாகும். இதில் முற்றிலுமாக ஈடுபட்டவர்களை இறைவன் ஆட்கொள்கிறான் என்பதை, 'தன் கடன் அடியேனையும் தாங்குதல் என் கடன் பணி செய்து கிடப்பதே' (தேவாரம் 5.19.9) என்ற நாவுக்கரசர் வாக்கால் நன்கு அறியலாம். பிறவிக் கடலைத் தாண்ட மேலே கூறிய அனைத்தும் தேவை யென்பதை நன்கு அறிந்த

கம்பநாடன், இத்தனை பண்புகளும் அனுமனிடம் உள்ளன என்பதைக் காட்டவே மயேந்திரப் படலத்தில் சாம்பவன் கூற்றாகப் பத்துப் பாடல்களில் விளக்கமாகக் கூறுகிறான். இராமகாதை கூறிச்செல்வதோடு மட்டுமல்லாமல் வாய்ப்புக் கிடைக்குமிடங்களிலெல்லாம் இந்நாட்டின் பெரியோர் கண்ட தத்துவங்களையும் சாம்பன் கூறிச் செல்வதைக் காண முடியும். கதைப் போக்கு என்று விட்டு விடாமல் படலப் பெயர்களைக்கூடச் சிந்தித்துக் கூறியுள்ளான் என்ற நோக்கத்தோடு காண்போமேயானால் இத் தத்துவங்களை நன்கு அறிய முடியும்.

கடலைத் தாண்டப் புகுந்த அனுமன் முதலாவது சந்திப்பது மைந்நாக மலையே யாகும். அம்மலை மானுட வடிவு தாங்கி அனுமனை விருந்துண்ணுமாறு அழைக்கின்றது. 'கடமையை முடித்தலது உண்ண மாட்டேன்' என்று கூறும் அனுமன், 'என் பணி முடித்து மீண்டும் வந்தால் உன் விருந்தினை ஏற்றுக்கொள்கிறேன்' என்று வந்துவிட்டான்.

அடுத்து அனுமன் சந்திப்பது சுரசை என்னும் அரக்கியை ஆகும். தேவர் உலகப் பெண்ணாகிய இவள் அனுமனின் ஆற்றலை அறிவதற்காக அரக்கி வடிவுடன் தேவர்களால் அனுப்பப் பெற்றவள் ஆவாள். 'இவ்வரக்கியின் ஆற்றலை வெல்ல முடியுமா' என்பது தேவர்களின் ஐயம். என்றாலும், சுரசைக்கும் அனுமனுக்கும் இடையே நடக்கும் உரையாடல் அனுமனின் பண்பு நலன்களில் ஒரு பகுதியை விளக்குகிறது. கோர வடிவத்துடன் நின்ற சுரசை 'மிகக் கொடிதாகி வருத்தும் இப்பசியைப் போக்க உன்னை உண்ணப்போகிறேன். நீயே வந்து என் வாய்க்குள் நுழைந்துவிடு' என்று கூறுகிறாள். (4807) அரக்கர் நாட்டில் புகப்போகும் அனுமன் - அரக்கர் குலத்தை வேருடன் களைய வேண்டும் என்று நினைத்து வரும் அனுமன் இவ்வரக்கியைக் கண்டவுடன் சினம் கொள்ளாமல் நின்றது ஏன்? இதேபோன்ற ஒரு சந்தர்ப்பம் அனுமனின் தலைவனாகிய இராமனுக்கும் ஏற்பட்டது உண்டு. அப்பொழுதும் அவன் பகைமை பாராட்டவோ சினம் கொள்ளவோ இல்லை. காரணம், தாடகை அரக்கி என்று அறிந்திருந்தும் 'பெண்ணென மனத்திடை பெருந்தகை

நினைத்தான்' (374) என்கிறான் கவிஞன். இராம பக்தனான அனுமன் சுரசை என்ற அரக்கியைப் பார்த்தவுடன் சினம் கொள்ளாமல் இருந்ததற்குக் காரணம் பெண்ணென நினைத்ததே ஆகும். சுரசையின் பேச்சிலிருந்து ஒன்றை அறிந்துகொள்கிறான், அனுமன். பெரும்பசியால் வாடுவதாக அவள் கூறுகிறாள். மானுடவர் குரக்கினத்தவர் ஆகிய அனைவருக்கும் பசி என்பது ஒன்றுதானே. எனவே, அரக்கியே யாயினும் பசி என்று கூறியவுடன் அனுமன் உருகி விடுகின்றான். "இப் புன்புலால் யாக்கையை உனக்கு இரையாக ஆக்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், நான் மேற்கொண்டு வந்த காரியம் என் ஆண்டானுக்குச் செய்யும் தொண்டாகும். அத்தொண்டு நிறைவேறவேண்டுமானால் இந்த யாக்கை தேவைப்படுகிறது. அதை முடித்துவிட்டு யானே வந்து உனக்கு இரையாக ஆவேன்" என்ற பொருளில் பின்வருமாறு கூறுகிறான்:

> பெண்பால் ஒரு நீ; பசிப் பிணி ஒறுக்க நொந்தாய்;
> உண்பாய் எனது ஆக்கையை; யான் உதவற்கு நேர்வல் -
> விண்பாலவர் நாயகன் ஏவல் இழைத்து மீண்டால்,
> நண்பால்' எனச் சொல்லினன், நல் அறிவாளன்; நக்காள்
> **(4808)**

யான் மேற்கொண்ட வினையை முடித்துவிட்டு மீண்டால் "நண்பால் என் உடம்பை யானே உனக்கு உண்ணத் தருவேன என்று கூறும் ஒருவன் பண்புடைமையின் சிகரத்தை அடைந்தவனாகிறான்.

மூன்றாவதாக அனுமன் சந்திப்பது அங்காரதாரை எனும் அரக்கியை. இவளும் பெண்தான். அனுமனுடைய இயல்பை அறிந்திருந்த அங்காரதாரை தான் யார் என்பதை அனுமனுக்குக் கூறத் தொடங்குகையிலேயே 'பெண்பால் எனக் கருது பெற்றி ஒழி' (4821) என்று கூறிவிட்டாள். ஆதலின், அவள் வாயிடைப் புகுந்து குடலைக் கிழித்து வெளிவருவது அனுமனுக்கு எளிதாகிறது.

இந்த இரண்டு செயல்களையும் செய்தபிறகு இது மாதிரி எத்தனை இடையூறுகள் வழியிலுண்டோ என்று நினைத்தான்

அனுமன். அதே நேரத்தில் இந்த இரண்டு இடையூறுகளையும் தான் எவ்வாறு வெல்ல முடிந்தது என்று சிந்தித்தான். விடை எளிதாகக் கிடைத்துவிட்டது. வன்மையும், கொடுமையும், பூண்ட சுரசையும் அங்காரதாரையும் பின்னர் அவன் காணப்போகும் அரக்கர்களின் பிரதிநிதிகளாக இருந்தனர். இவர்களை வெல்ல முடிந்ததென்றால் அரக்கர் கோட்டைக்குள் புகுவதும் எளிதாகும். விண்ணுற உயர்ந்து மலையெனப் பெருகும் தன் உடல் ஆற்றலைமட்டும் நம்பி இவ் இருவரையும் தான் அழித்ததாக அனுமன் கருதவில்லை. இதன் பின்னே தனக்குத் தோன்றாத் துணையாக இருந்து, இவர்களை வெல்லுமாறு செய்தது எது என்ற வினாவை எழுப்பி விடை கூறுகிறான்:

தேறல் இல் அரக்கர் புரி தீமை அவை தீர,
ஏறும் வகை எங்கு உளது? "இராம" என எல்லாம்
மாறும், அதின் மாறு பிறிது இல் என வலித்தான் (4828)

என்ற கருத்தை அனுமன் இவ்வளவு துணிவோடு கூறுவதற்குக் காரணம் யாது என்று சிந்திப்போமேயானால், இந் நிகழ்ச்சிகட்குச் சற்று பின்னர் (சம்பாதிப் படலம்) அனுமன் கண்ட காட்சியே இந்த உறுதிப்பாட்டை அவனுக்குத் தந்தது. சடாயுவின் சகோதரனாகிய சம்பாதி (என்ற கழுகு) நீண்ட காலமாகத் தன் சிறகுகள் இரண்டும் அற்ற நிலையிலேயே இருந்தான். பன்னெடுங் காலமாகவும் அச்சிறகுகள் வளரும் வழியை அறிந்தான் இல்லை. மயேந்திர மலையில் அனுமன் முதலியோர் ஒன்றுகூடியபொழுது இராம நாமத்தின் மகிமையைச் சம்பாதி கூறினான்.

'எல்லீரும் அவ் இராம நாமமே
சொல்லீர்; சொல்ல, எனக்கு ஓர் சோர்வு இலா
நல் ஈரப் பயன் நண்ணும்' (4695)

என்று சம்பாதி கூறவும்,

அன்னது காண்டும் யாம்' எனா,
நின்றார் நின்றுழி, நீல மேனியான்

நன்று ஆம் நாமம் நவின்று நல்கினார்,
வன் தோளான் சிறை வானம் தாயவே (4696)

*இந்த வினாடிவரை இராமனையே பரம்பொருளாகக் கருதி, மானுட வடிவுடன் கூடிய அந்த இராமனின் பெருமை எல்லையற்ற தென்றும், அவனுக்குத் தொண்டு செய்வதே தன் பிறவிப் பெரும்பயன் என்றும் கருதிவந்தான் அனுமன். வடிவழகனாகிய அந்த இராமபிரானைவிடப் பெரியதும் உயர்ந்ததும் ஆகிய எதுவும் இருக்க முடியாது என்றும் உறுதியாக நம்பினான். சம்பாதிக்கு இந்த அற்புதம் நிகழ்கின்ற நேரத்தில், அந்த இடத்தில் இராமன் இல்லை. பல காத தூரத்திற்கு அப்பால் கிட்கிந்தையில் உள்ளான் இராகவன். அப்படியிருக்க அவனுடைய நாமத்தை உள்ளன்போடு பலரும் கூறியபொழுது இந்தச் செயற்கரும் செயல் நிகழ்ந்துவிட்டது. இந்த வினாடியில் 'அவனிற் சிறந்தவை அவன் நாமங்கள்'. 'மானுட வடிவு தாங்கிய இராமனைவிட இராம நாமம் மாபெரும் வல்லமையுடையது' என்பதைக் கண்கூடாகக் கண்டுவிட்டா னாதலின், கடலைத் தாண்டவும் அரக்கர் கோட்டையுள் புகவும் வென்று மீளவும் அந்த நாமமே தனக்கு உறுதுணை யாகும் என்று உறுதியுடன் தெளிந்துவிட்டான். நாம ஜெபத்தின் வலிமை எத்தகையது என்பதைப் பத்தி மார்க்கத்திற்கு வித்தூன்றிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் விரிவாகப் பேசியபிறகு, அதை உறுதிப்படுத்தும் வகையில் கம்பநாடன் அனுமன் கூற்றாக, இராமன் என்று கூறினால் அனைத்தும் சாதகமாக மாறிவிடும்; அதைவிட உறுதி பயப்பது ஒன்றுமில்லை (4828) என்று கூறுகிறான்.*

*கடல் தாவு படலத்தை அடுத்து இருப்பது ஊர் தேடு படலமாகும். கடல் தாவு படலத்தில் அனுமனது ஆன்மிக வளர்ச்சியையும் அதனைப் பயன்படுத்தி அவன் செய்த செயற்கரும் செயலையும் கண்டோம். சுக்கிரீவனுக்கு அமைச்சுத் தொழில் பூண்டவர்களில் அனுமன் முக்கியமானவன் ஆவான். அமைச்சன் என்பவன் நண்பர், பகைவர், நொதுமலர் என்ற முத்திறத்தாரோடும் பழக வேண்டியிருத்தலின் அவர்களை எடையிடும்போது விருப்பு*

வெறுப்பை ஒதுக்கிவைத்து அவர்களை எடைபோடவேண்டும். ஒரு நிகழ்ச்சியைக் காணும்பொழுது, தான் அதில் ஈடுபட்டுவிடாமல் புறநிலையாக நின்று கணித்தலே அமைச்சனுக்கு இலக்கண மாகும். அனுமன் இத்துறையில் எத்துணை முதிர்ந்துள்ளான் என்பதைக் கவிச்சக்கரவர்த்தி ஊர் தேடு படலத்தில் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறான். இராகவனை முதலில் பார்த்த வினாடியி லிருந்தே தன்னைப் பறிகொடுத்துவிட்டு அவனுடைய சுக துக்கங்களில் முழுவதுமாகப் பங்கு கொண்டு பணி புரிந்துவரும் அனுமனைப் பொறுத்தமட்டில் இராமனுக்கு இடுக்கண் செய்த இராவணனும் அவனுடைய நாடாகிய இலங்கையும் அந்நாட்டு மக்களாகிய அரக்கரும் முழுப் பகைவர்கள் ஆகிவிட்டார்கள். இராமன் என்ற அரசனுக்கும் இராவணன் என்ற அரசனுக்கும் உள்ள பகையன்று இது. இராகவன் மனைவியை வஞ்சித்துக் கவர்ந்துசென்றமையால் மிகக் கீழோர் செயலில் ஈடுபட்டுவிட்டான் இராவணன். இந்த மாபெரும் தவறைச் செய்தவன் சாதாரணப் பகைவன் அல்லன். எனவே, அவன்மாட்டு அனுமன் பகைமை பாராட்டுவது நியாயமானதே ஆகும். காழ்ப்பு உணர்ச்சி, வெறுப்புணர்ச்சி, சினம் ஆகியவற்றோடு நிரம்பிய மனநிலையில்தான் அனுமன் இலங்கையுள் புகுகிறான். என்றாலும் என்ன? இரவு நேரத்தில் உறங்கிக் கிடக்கின்ற கும்பகருணன் (4955), வீடணன் (4969), இந்திரசித்தன் (4972), இராவணன் (5037) ஆகிய நால்வரையும் அவரவர் உறங்குமிடத்தில் மறைந்துநின்று காணுகிறான். இந்த மன நிலையிலும் முதன்முதலாக இந்நால்வரைப் பார்க்கும்பொழுது அவர்கள் ஆற்றல் முதலியவற்றைத் துல்லியமாக எடைபோட்டுவிடுகிறான். உறங்குகின்ற கும்பகர்ணனைப் பார்த்து, அவன் யாரென்று அறிந்து கொள்ளாத் நிலையிலும் சுத்த வீரனாகிய அனுமன் கும்பகர்ணனை மிக அற்புதமாக எடைபோடுகிறான். 'அரக்கர் கோனாகிய இராவணனோ இவன்' என்று நினைத்த அனுமன், அந்த எண்ணத்தை ஒதுக்கி இவன் யாரென்று தெரியா விட்டாலும் திரிமூர்த்திகளில் ஒருவருக்கு ஈடு சொல்லக் கூடியவன் இவன் என்ற கருத்தில், 'ஏவனோ இவன்?

மூவரின் ஒருவன் ஆம் ஈட்டான்' (4964) என்று பேசுவதால் பகைவரைக் குறைத்து மதிப்பிடும் பண்பு அனுமனிடம் இல்லை என்பதை உணர்கிறோம். அடுத்தபடியாக அவன் காண்பது வீடணனை ஆகும். வீடணன் யார் என்பதும், அவன் அறவாழ்வை மேற்கொண்டவன் என்பதும் அனுமனுக்குத் தெரியாது. இருந்தும் அவனது மனைக்குள் புகுந்தவுடன் அந்த வீட்டிலுள்ள எண்ண அதிர்வுகள் தூய்மையானவை என்பது புலன் அடக்கம் மேற்கொண்ட அனுமனுக்கு உடனே புரிந்துவிடுகிறது. அதைப் புரிந்துகொண்ட அனுமன் உறங்குகின்ற வீடணனின் உணர்வுகளோடு (எண்ண அதிர்வுகளோடு) தன்னுடைய உணர்வுகளையும் ஒத்திட்டபொழுது வீடணன் தூயவன் என்பதை அனுமன் உணர்ந்துகொள்கிறான். அதன் பயனாகத் தீமையே புரிந்து வாழ்கின்ற அரக்கரிடையே இப்படியும் ஒருவனா என்று வியக்கிறான். கள்ளி வயிற்றில் அகில் பிறப்பதுபோல் (நான்மணி. 6) தீமையே நிறைந்துள்ள இலங்கையில் தருமம் ஒளிந்து வாழ்வதுபோல ஒருவன் வாழ்கிறான் என்று நினைக்கிறான் அனுமன். இதனைக் கூறவந்த கவிஞன்,

> ஒளித்து வாழ்கின்ற தருமம் அன்னான்தனை உற்றான் (4970)
>
> உற்று நின்று, அவன் உணர்வைத் தன் உணர்வினால் உணர்ந்தான்;
>
> 'குற்றம் இல்லது ஓர் குணத்தினன் இவன்' எனக் கொண்டான் (4971)

என்று கூறுகிறான்.

மூன்றாவதாக, அனுமன் காண்பது இந்திரசித்தனை ஆகும். அவனைப் பார்த்தமாத்திரத்தில் அனுமனுடைய மனத்தில் தோன்றிய எண்ண ஓட்டத்தையும், முடிவையும் கவிஞன் ஒரே பாடலில் கூறிவிடுகிறான்.

> 'வளையும் வாள் எயிற்று அரக்கனோ? கணிச்சியான் மகனோ? -
>
> அளையில் வாள் அரி அனையவன் - யாவனோ? அறியேன்;

இளைய வீரனும், ஏந்தலும், இருவரும், பலநாள்
உளைய உள்ள போர் இவனொடும் உளது' என
உணர்ந்தான் (4975)

என்பது அப்பாடல் ஆகும். இதுவரை அனுமன் கண்ட மூவரையும் - அவர்கள் யாவர் என்றோ, எத்தகைய ஆற்றல் படைத்தவர்கள் என்றோ அறியாமலும் - தன் கூர்ந்த மதியால் எடைபோட்ட அனுமன், இந்திரசித்தனிடம் வரும்பொழுது மிக உயர்ந்த நிலையை அடைந்துவிடுகிறான். 'கணிச்சியான் மகனோ இவன்' என்று ஐயுறுவது நியாயமானதே. ஆனால், முன்பின் பார்த்திராத ஒருவனை உறங்கும்போது பார்த்துவிட்டு அவனுடைய பலத்தை எடைபோடுவது என்பது எத்தகைய அறிவில் உயர்ந்தவருக்கும் ஓரளவு இயலாத காரியம் என்றே கூறிவிடலாம். அப்படியிருக்க, மூன்றாம், நான்காம் அடிகளில் காணப்பட்ட முடிவிற்கு எவ்வாறு அனுமனால் வர முடிந்தது? இராம, இலக்குவரை நன்கு அறிவான் அனுமன். வாலியை உரங்கழிக்க வல்லவனும், மராமரங்களை ஓர் அம்பால் துளைக்க வல்லவனும் ஆகிய இராமனையும், சுக்கிரீவனுடைய கோட்டை மதில்களையும் கதவுகளையும் காலால் எட்டி உதைத்துத் தகர்க்க வல்லவனும் ஆகிய இலக்குவனையும் நன்கு அறிவான் அனுமன். ஆனால், உறங்குகின்றவனைப்பற்றியோ அவன் யார் என்பதையோ அவன் வீரச் செயல்கள் என்ன என்பதுபற்றியோ என்ன வென்று அறியாத அனுமன் 'இராமனும் இலக்குவனும் இவனுடன் பல நாள் போர்புரிய வேண்டியிருக்கும்' என்ற முடிவிற்கு எவ்வாறு வந்தான்?

இந்த நிலையில் இராமன் அனுமனை முதன்முதலில் சந்திக்கும் சூழ்நிலைபற்றி அறிவது பயனுடைய தாகும். யார் என்ற இராமன் வினாவிற்குத் தன் தாய் தந்தையர் யாவர், தன் பெயர் யாது, தான் செய்யும் பணி யாது என்ற விடைகளைத் தந்தான் அனுமன். அவன் கூறிய விடை சாதாரணமாக யாரும் கூறக்கூடியதே யாகும். அந்த விடையினால் இளையபெருமாள் கவரப்பட வில்லை யென்றாலும், இராகவன் தேற்றம் உற்று,

... இவனின் ஊங்குச் செவ்வியோர் இன்மை தேறி,
'ஆற்றலும், நிறைவும், கல்வி அமைதியும், அறிவும் என்னும்
வேற்றுமை இவனோடு இல்லையாம்... (3767)

என்ற முடிவிற்கு வந்தான். மேலும் தொடர்ந்து,

'மாணி ஆம் படிவம் அன்று, மற்று இவன் வடிவம்; மைந்த!
ஆணி இவ் உலகுக்கு எல்லாம் என்னலாம் ஆற்றற்கு ஏற்ற
சேண் உயர் பெருமை தன்னைச் சிக்கு அறத் தெளிந்தேன்; பின்னர்க்
காணுதி மெய்ம்மை' என்று, தம்பிக்குக் கழறி, கண்ணன் (3769)

கூறி முடிக்கிறான். அனுமன் பேசிய பத்துச் சொற்களைமட்டும் வைத்துக்கொண்டு அவனை முற்றிலுமாக அளந்துவிடுகிறான். அந்த இராம பக்தனாகிய அனுமன் இன்னார் என்றுகூட அறிந்துகொள்ளாத அரக்கனை எடைபோடுவதே வியப்பிற்குரிய தாகும். அதைவிட வியப்பிற்குரியது இராம - இலக்குவர்கள் இவனுடன் கடுமையாகப் போரிட வேண்டிவரும் எனக் கணிப்பதாகும். அனுமனது நுண்மாண் நுழைபுலத்தால் எந்த வொன்றையும் நடுநிலை பிறழாமல் எடைபோடக் கூடியவன் என்பதையும் மேலே கூறிய செய்திகள்மூலம் நன்கு அறியலாம். இதனை அடுத்து அனுமன் செய்கின்ற முடிவுகளில் ஓரேயோர் இடத்தில் சிறு பிழை ஏற்படுகிறது. பேரழகும் பெருங்கற்பும் உடைய மண்டோதரி - (உறங்குபவளைப் பார்த்து) 'இவள் பிராட்டியோ' என ஐயுறுகிறான்.

மாபெரும் அறிஞனான அனுமன் மண்டோதரியைப் பார்த்து இப்படியொரு முடிவிற்கு வரக் காரணம் யாது? இராமனை இன்னான் என்று அறிந்துகொண்டவன் அனுமன். இராமனுடைய தேவி பகைவனுடைய அந்தப்புரத்தில் முழு அலங்காரங்களோடு இருக்க முடியுமா என்ற - சாதாரண மனிதர்களுக்கும் தோன்றுகின்ற - சந்தேகம் அனுமனுக்குத் தோன்றாமல் போனது ஏன்? எளிதில் விடை கூற முடியாத இந்தப் பகுதியை ஆழ்ந்து சிந்தித்தால் விடை கூற முடியும்.

அனுமன் இவ்வாறு ஐயம் கொள்வதற்குக் காரணமாக இருந்தவன் இராமனே ஆவான். மாபெரும் துயரத்தில் ஆழ்ந்திருந்த இராகவன் யாரிடம் பேசுகிறோம், யாரைப் பற்றிப் பேசுகிறோம் என்று சிந்திக்காமல் ஒரு சிறிய பிழையைச் செய்தான். கிட்கிந்தா காண்டத்தி லுள்ள நாட விட்ட படலத்தில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. தென்திசையை நோக்கிச் செல்லுகிறவர்கள் அனுமன், அங்கதன் முதலானவர்கள் என்று முடிவு செய்யப்பெற்ற பின் இராகவன் அனுமனைத் தனியே அழைத்துச் சீதையை அடையாளம் கண்டுகொள்வதற்காக அனுமனிடம் அவளைப்பற்றி வருணிக்கின்றான். நாட விட்ட படலத்தில் 28 பாடல்களில் (4484 - 4511) இராமன் இவ் வருணனையைச் செய்கிறான். பாதாதி கேசமாகச் சொல்லப்படும் இந்த வருணனை தேவை யில்லாததுமட்டு மன்று, பொருத்த மற்றதும் ஆகும். இரண்டு காரணங்களால் இதற்கொரு சமாதானம் கூறலாம். காப்பியப் புலவர்கள் இப்படியொரு வாய்ப்பு நேரும்போழுது பெண்களை வருணிப்பது உலகக் காப்பியங்கள் அனைத்திலும் காணப்படும் ஒன்றாகும். கம்பநாடனும் இதற்கு விலக்கல்லன் என்பதனையே இப்பகுதி காட்டிநிற்கிறது. இவ்வாறு, பாதாதி கேசம் என வருணிப்பதில் தவறில்லை என்றாலும், ஈது கூறப்பட்ட இடம், சந்தர்ப்பம் என்பவை பொருத்த மில்லாதன ஆகும். அடுத்துள்ள காரணம் ஒன்று உண்டு. பிரிவுத் துயரில் மூழ்கியிருக்கும் இராகவன் சீதையின் ஒவ்வோர் உறுப்பையும் நினைத்து வருந்துதல் இயல்பே ஆகும். உடன் வருபவ னாகிய இலக்குவனிடம் இவ்வாறு பேசுதல் தகாத தாகும். அடுத்து, சுக்கிரீவனிடம் தன் மனநிலையைப் பேசலாம் என்றால், சுக்கிரீவன் மன வளர்ச்சியில் இராமனுக்கு ஐயம் உண்டு. எனவே, அவனிடம் பேசுவதும் பொருத்தம் இல்லை. இந்த நிலையில் அவன் மனத்தில் நிறைந்த அனுமனின் வளர்ச்சியையும் அறிவுத் திண்மையையும் அறிந்த இராகவன் இவ்வாறு வருணிப்பதற்கு அனுமனையே இடமாகக் கொள்கிறான். இதனால் இரண்டு குறைகள் தோன்றுகின்றன. அனுமன் சுக்கிரீவனுக்கு அமைச்சனே யாயினும் இராமனிடம்

தொண்டனாகவே பழகுகிறான். அப்படிப்பட்டவனிடம் இவ்வளவு விரிவாகச் சீதையின் அழகை வருணித்ததால் அனுமனுடைய மனத்தில் ஓர் ஓவியம் படிந்துவிட்டது. மாதர்நலம் பேணாதவனும் பிரமச்சாரியுமான அனுமன் மனத்தில் எந்தப் பெண்ணின் உருவமும் இதுவரை பதிந்ததே இல்லை. எனவே, இராமன் கூறிய அங்க அடையாளங்கள் அவனுடைய மனத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டன. நீண்ட காலம் பிரிந்து வெளிநாடு சென்றுவிட்டுத் திரும்பி வருகின்றவர்களை விமான நிலையத்தில் சந்திக்கச் செல்பவர்கள் அவர்களுடைய படங்களை வைத்துக்கொண்டு வருபவர்களை ஒப்பிட்டுப் பார்ப்பதுபோல அனுமன் மனத்தில் இராகவன் எழுதிய ஓவியத்தோடு மண்டோதரியை ஒப்பிட்டுவிட்டான் அனுமன். பிராட்டியைப் போன்ற அழகும் அவள் போன்ற கற்பின் திண்மையும் உடைய மண்டோதரியைக் கண்டு 'பிராட்டியோ' என அனுமன் சந்தேகித்ததில் தவறு ஒன்று மில்லை. ஒரு விநாடி ஐயத்திற்குப் பிறகு எந்த நிலையிலும் இராகவன் மனைவி இராவணன் அந்தப்புரத்தில் நுழைய மாட்டாள் என்ற முடிவிற்கு வந்து விட்டான். 'கற்புடைய மகளிர் பிறர் நெஞ்சு புகார்' என்பதைச் சற்று விரித்துப் பிறர் மனையிலும் புகார் என்னும் முடிவிற்கும் வந்துவிட்டான். எனவே, அறிஞனான அனுமன் மனத்தில் இப்படிப்பட்ட ஐயம் வரலாமா என்ற ஐயம் தோன்றினால் அதற்குரிய முழுப் பொறுப்பும் இராமனையே சேரும்.

இதற்கு அடுத்தபடியாக, இலங்கைவாழ் மக்களின் வாழ்க்கையைக் கவனித்த அனுமன், அந்த நகரத்தின் புறவமைப்பைக் கண்டு "நரகம் ஒக்குமால் நல்நெடுந்துறக்கம் இந் நகர்க்கு (4848) என்று கூறுகிறான். புறவமைப்பில் ஈடுபட்டு இவ்வாறு புகழ்ந்து பேசிய அனுமன் அங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்க்கையை மறைந்து நின்று கண்டு அதனை வருணிக்கப் புகுகின்றான். மூவுலகையும் வென்ற மறவன் தலைநகரில் - தேவர்கள் பணி செய்யும் தலைநகரில் - மக்களின் இன்ப வாழ்க்கைக்கு ஓர் எல்லை கூறமுடியுமோ? அதனைக் கூற வந்த கவிஞன் இரு பொருள்படப் பேசுகிறான்.

அளிக்கும் தேறல் உண்டு, ஆடுநர் பாடுநர் ஆகி,
களிக்கின்றார் அலால், கவல்கின்றார் ஒருவரைக் காணேன்
(4864)

என்பது அனுமன் கூற்றே. மேலாகப் பார்ப்பவர்கட்கு இவர்கள் பெருமகிழ்ச்சியில் திளைக்கிறார்கள் என்ற பொருள்படக் கூறுகிறான். ஆனால், அது இயற்கையான மகிழ்ச்சியா, செயற்கையான மகிழ்ச்சியா என்ற வினாவிற்கு விடை தருபவன்போல 'உவக்கின்றார்' எனறு கூறாமல் 'களிக்கின்றார்' என்று பேசுகிறான். கம்பநாடன் காலத்தில் களித்தல் என்ற சொல்லுக்கு மது அருந்தி இன்பம் அடைவதே பொருளாகும். ஒரு வேளை அந்தச் சொல்லுக்கு இந்தப் பொருள் இருப்பதை மறந்துவிடுவோமோ என்று கருதி, 'அளிக்கும் தேறல் உண்டு ஆடுநர் பாடுநர் ஆகிக் களிக்கின்றார்' என்று கவிஞன் கூறுகிறான். எல்லை மீறிய மதுப் பழக்கத்தில் தோன்றும் களிப்புக் காரணமாக இலங்கை வாழ் அரக்கர்களின் வாழ்க்கை கவலையை மறந்து வாழும் வாழ்க்கையாக அமைந்துவிட்டதைக் காணமுடிகின்றது.

நகரம், மக்கள், குறிப்பிட்ட சில பாத்திரங்கள் ஆகியவற்றை மறைந்துநின்று காண்கையிலேயே அவ்வவ்வற்றை மிக நுணுக்கமாகக் கண்டு ஆய்ந்து ஒரு முடிவுக்கு வரும் சிறப்பை அனுமன் பெற்றிருந்தமையை ஊர் தேடு படலம் காட்டி நிற்கிறது.

இக்காண்டத்தின் மூன்றாவது படலமாக அமைந்துள்ளது காட்சிப் படலம் ஆகும். ஊர் முழுவதும் தேடிப் பிராட்டியைக் காணாமையால், அசோக வனத்தில் வந்து தேடுகையில் பிராட்டியை அவன் கண்டதைக் கூறும் படலம் இது. வம்பு செய்யும் அரக்கியரிடையே 'மென்மருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்து' துவண்டுபோய் அமர்ந்திருக்கும் பிராட்டியை ஒரு மரத்தின்மேலிருந்து நோக்குகின்றான், வாயுவின் மைந்தன். கீழே இறங்கிவந்து அவளிடம் பேசி 'இவள்தான் சீதை' என்று முடிவுசெய்வதற்கு முன்னரே மரத்திலிருந்தபடியே 'இவள்தான் பிராட்டி' என்ற முடிவிற்கு அவனால் எவ்வாறு வர முடிந்தது? நுண்மாண் நுழைபுலம்

அளிக்கும் தேறல் உண்டு, ஆடுநர் பாடுநர் ஆகி,
களிக்கின்றார் அலால், கவல்கின்றார் ஒருவரைக் காணேன்
(4864)

என்பது அனுமன் கூற்றே. மேலாகப் பார்ப்பவர்கட்கு இவர்கள் பெருமகிழ்ச்சியில் திளைக்கிறார்கள் என்ற பொருள்படக் கூறுகிறான். ஆனால், அது இயற்கையான மகிழ்ச்சியா, செயற்கையான மகிழ்ச்சியா என்ற வினாவிற்கு விடை தருபவன்போல 'உவக்கின்றார்' என்று கூறாமல் 'களிக்கின்றார்' என்று பேசுகிறான். கம்பநாடன் காலத்தில் களித்தல் என்ற சொல்லுக்கு மது அருந்தி இன்பம் அடைவதே பொருளாகும். ஒரு வேளை அந்தச் சொல்லுக்கு இந்தப் பொருள் இருப்பதை மறந்துவிடுவோமோ என்று கருதி, 'அளிக்கும் தேறல் உண்டு ஆடுநர் பாடுநர் ஆகிக் களிக்கின்றார்' என்று கவிஞன் கூறுகிறான். எல்லை மீறிய மதுப் பழக்கத்தில் தோன்றும் களிப்புக் காரணமாக இலங்கை வாழ் அரக்கர்களின் வாழ்க்கை கவலையை மறந்து வாழும் வாழ்க்கையாக அமைந்துவிட்டதைக் காணமுடிகின்றது.

நகரம், மக்கள், குறிப்பிட்ட சில பாத்திரங்கள் ஆகியவற்றை மறைந்துநின்று காண்கையிலேயே அவ்வவ்வற்றை மிக நுணுக்கமாகக் கண்டு ஆய்ந்து ஒரு முடிவுக்கு வரும் சிறப்பை அனுமன் பெற்றிருந்தமையை ஊர் தேடு படலம் காட்டி நிற்கிறது.

இக்காண்டத்தின் மூன்றாவது படலமாக அமைந்துள்ளது காட்சிப் படலம் ஆகும். ஊர் முழுவதும் தேடிப் பிராட்டியைக் காணாமையால், அசோக வனத்தில் வந்து தேடுகையில் பிராட்டியை அவன் கண்டதைக் கூறும் படலம் இது. வம்பு செய்யும் அரக்கியரிடையே 'மென்மருங்குல்போல் வேறுள அங்கமும் மெலிந்து' துவண்டுபோய் அமர்ந்திருக்கும் பிராட்டியை ஒரு மரத்தின்மேலிருந்து நோக்குகின்றான், வாயுவின் மைந்தன். கீழே இறங்கிவந்து அவளிடம் பேசி 'இவள்தான் சீதை' என்று முடிவுசெய்வதற்கு முன்னரே மரத்திலிருந்தபடியே 'இவள்தான் பிராட்டி' என்ற முடிவிற்கு அவனால் எவ்வாறு வர முடிந்தது? நுண்மாண் நுழைபுலம்

*மிக்கவனும் வேதக் கடலைக் கடந்தவனும் ஐம்புல வேடரை அடக்கித் தவ வலிமையோடு மெய்யறிவும் பெற்று வாழ்பவனு மாகிய அனுமனுக்கு ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் இன்னார் என்று கண்டுகொள்வது அரியது அன்று. இரலைக் குன்றத்தில் நடந்துவரும் இராம-இலக்குவர்களை மறைவாக நின்று கண்ட அனுமன், "தேவருக்கு ஓர் தலைவர் ஆம் முதல் தேவர் எனின் மூவர்; மற்று இவர் இருவர், "(3755) என்றும் "இவர்களே தருமம் ஆவார்" (3762) என்றும் சிந்திக்கத் தொடங்கி, சில வினாகளுக்குப் பிறகு இன்னும் சில காரணங்களைச் சிந்திக்கின்றான். 'தென்புலத்து அன்றி, மீளா நெறி உய்க்கும் தேவரோதாம்?' என்றும் கூறியதோடு அமையாது ஒரு முடிவிற்கு வருகின்றான். அம் முடிவுக்குரிய காரணம் வருமாறு;*

'சங்கு சக்கரக் குறி உள, தடக்கையில், தாளில்;
எங்கும் இத்தனை இலக்கணம் யாவர்க்கும் இல்லை;
செங் கண் விற் கரத்து இராமன், அத் திரு நெடுமாலே;
இங்கு உதித்தனன் (3859)

*தர்க்க ரீதியாக ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ச்சிகளையும் அவற்றின் முடிவுகளையும் கூறிக்கொண்டுவந்து காட்சி, அனுமானம் என்ற பிரமாணங்களின் அடிப்படையில், மானுட வடிவு தாங்கிய இராமன் திருமால்தான் என்ற முடிவிற்கு அனுமன் வந்ததை இங்குக் காண்கிறோம்.. இராமனைப் பெற்ற தயரதனும் இராமனை மணந்த பிராட்டியும்கூட இந்த உண்மையை அறிந்தார்களோ என்பது ஐயத்திற்குரியது. முன்பின் பாராமல் இராமனிடம் ஒரு வார்த்தைக்கூடப் பேசாமல், தூரத்தே இருந்து கண்ட அளவிலேயே தர்க்க ரீதியாக இத்தகைய முடிவுக்கு வரக்கூடிய ஒருவனை, 'உலகுக்கு எல்லாம் ஆணி' என்று இராகவன் கூறுவதில் வியப்பொன்றும் இல்லை. இதே அடிப்படையில்தான் மரத்தின்மேலிருந்து, அரக்கியர் நடுவேயுள்ள பிராட்டியைக் கண்டமாத்திரத்தில், அவள் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசு முன்னரே அனுமன் அவள் யார் என்பதுபற்றி ஒரு முடிவிற்கு வருகின்றான்.*

'அரவணைத் துயிலின் நீங்கிய
தேவனே அவன்'; இவள் கமலச் செல்வியே' (5134)

என்றமையால் காட்சி, அனுமானம் என்ற இரண்டையும் கொண்டு உண்மையாக உள்ளவாறு அறியும் ஆற்றல் அனுமன்பால் இருந்ததைக் கவிஞன் காட்டிச் செல்கிறான். அவன் மரத்தின்மேல் இருக்கும்பொழுதே இராவணன் வருதல், பிராட்டியிடம் கெஞ்சுதல், அவள் துயருறுதல், திரிசடை தேற்றுதல் ஆகியவை இப்படலத்திலேயே நிகழ்கின்றன.

இக்காண்டத்தில் நான்காவதாக அமைவது உருக் காட்டு படலம் ஆகும். துயரம் தாங்காமல் இனி மீளும் வழியே இல்லை என்ற முடிவிற்கு வந்த பிராட்டி உயிரை விடும் முயற்சியில் இறங்கிய அந்த விநாடியில் இராமன் பெயரைக் கூறிக்கொண்டு கீழே குதித்த அனுமன் பிராட்டியின் உயிரைக் காத்தான். இப் பேருபகாரத்தை நினைத்து அவனுக்கு நன்றி பாராட்டும் முறையில் அந்தத் தாய், "உயிர் தந்தாய் உத்தம" (5297) என்றும் "அம்மை ஆய், அப்பன் ஆய அத்தனே அருளின் வாழ்வே" (5298) என்றும் "பாழிய பணைத் தோள் வீர துணையிலேன் பரிவு தீர்த்த வாழிய வள்ளலே" (5299) என்றும் நன்றி பாராட்டிவிட்டு, தாய் மகனை ஆசீர்வதிக்கும் முறையில், "உலகம் ஏழும் ஏழும் வீவுற்ற ஞான்றும், இன்று என இருத்தி" (5299) என்று ஆசி வழங்கினாள். இந்த ஆசியே பிராட்டி அனுமனை எடை இட்டுவிட்டாள் என்பதை அறிவிக்கின்றது. ஆசி கூறுபவர்கள் 'எல்லா நலன்களும் பெற்று மேலும் வாழ்க வளர்க' என்று கூறுவதுதான் மரபு. அங்ஙனமிருக்க 'இன்று என இருத்தி' என்று பிராட்டி கூறக் காரணம் யாது? உலக ஞானத்திலும் மெய்ஞ் ஞானத்திலும் தவத்திலும் தான் அடையவேண்டியது எதுவும் இல்லை என்று வளர்ந்துள்ள ஒருவனுக்கு - 'வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை யாண்டும் அஃது ஒப்பது இல்' என்ற நிலை முற்றிலும் கைவரப்பெற்ற ஒருவனுக்கு - தொண்டு செய்து வாழ்வதே அன்றி வீடும் வேண்டாம் என்று வாழும் ஒருவனுக்கு வேறு எத்தகைய ஆசியை வழங்க

முடியும்? அனைத்தும் நிரம்பியுள்ள அவனுக்கு மேலும் வந்து சேரவேண்டியது ஒன்றும் இல்லையாதலால் 'இன்று என இருத்தி' என்று வாழ்த்தினாள்.

கடலிடையே, எல்லையற்ற பலத்தால், கட்டுக்காவலால், வர பலத்தால் சூழப்பெற்றுள்ள தன்னை எவ்விதத் துணையோ, படைபலமோ இல்லாமல் தம் வில் ஒன்றையே நம்பியிருக்கும் இருவர் எவ்வாறு வந்து காக்க முடியும் என்ற ஐயம் பிராட்டியின் மனத்தை அழுத்திக்கொண்டிருக்கும். பெருஞ்சுமையான இதனைப் போக்கப் பிராட்டி பிரிந்ததி லிருந்து இராமனுக்கு வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள், சடாயு வீடுபேறு அடைதல், வாலி இறத்தல் முதலியவற்றைக் கூறி இராமனுக்கும் ஒரு பெரும்பலம் உண்டு என விளக்குகிறான் அனுமன். குரக்குப் படை என்றவுடன் மனத்தில் தோன்றும் ஐயுறவைப் போக்கப் பேருரு எடுக்கும் தன் ஆற்றலைக் காட்டி, தன் போன்ற படை வீரர்கள் ஆயிரக் கணக்கில் இராமனுக்குத் துணையாக உள்ளனர் என்றும் அனுமன் கூறுகிறான். உருக் காட்டு படலத்தில் இராகவனைப் பிரிந்த சீதையின் மனநிலையும் விளக்கப்படுகிறது. கணவன் வந்து மீட்பான் என்று ஒரு கணமும், தான் இருக்கும் இடத்தையே அறியாத ஒருவன் எவ்வாறு மீட்கப் போகிறான் என்ற நம்பிக்கை இழந்த நிலை ஒரு கணமும், மாறி மாறி வதைக்க, பிராட்டியின் காலம் கழிகிறது. இந்த அவலம் போதாது என்று நெருங்கித் துன்புறுத்துகின்ற அரக்கியர் காவல் ஒருபுறம், அடிக்கடி வந்து பெருந்துன்பத்தை விளைக்கும் இராவணன் ஒரு புறம். இந்த அல்லல்களுக்கு இடையே பட்டு இனி உய்வே இல்லையென்று உயிரைப் போக்கிக்கொள்ள முற்படும் ஒரு பெண்ணின் துயர நிலையை எடுத்து விளக்குகிறது உருக் காட்டு படலம். துயரம், நம்பிக்கை இழத்தல் என்ற இரண்டின் எல்லைக்கே சென்றுவிட்ட நிலையில் நம்பிக்கை துளிர்விடவைக்கின்ற அனுமன் வருகையும் கணவன்பற்றிய செய்தி அறிதலும் அந்நம்பிக்கையை வளர்க்கும் பகுதிகளாக அமைந்துள்ளன.

சுந்தர காண்டத்தின் ஐந்தாவது பகுதி சூடாமணிப் படலமாகும். மிகச் சிக்கலான ஒரு பிரச்சினையை

மிகவும் இரங்கத்தக்கவளாக இதுவரை காட்சி தந்த பிராட்டி திடீரென்று,

"அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ?
எல்லை நீத்த உலகங்கள் யாவும், என்
சொல்லினால் சுடுவேன்; அது, தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு என்று, வீசினேன் (5362)

என்று வீறு தோன்றப் பேசுகிறாள். விசுவரூபம் எடுத்து அனுமன் எதிரே பேசிய பேச்சாகும் இது. வில்லேர் உழவனாகிய தன் கணவனுக்கு உலகை அழிக்க வில்லின் துணை வேண்டும். கற்பின் செல்வியாகிய தனக்கு வில்கூடத் தேவையில்லை. தன் சொல்லே கருவியாகும் என்று பேசுகிறாள்.

இராமனுடைய ஆற்றலை வாலி வதையிலும் மராமரங்களிலும் கண்ட அனுமனுக்குப் பிராட்டியின் இந்தச், சொற்கள் இதுவரை மறைந்திருந்த அவளுடைய புதிய பரிமாணத்தைக் காட்டிப் பொலிவு பெறுகின்றன. சூடாமணிப் படலத்தின் தனிச்சிறப்பாகும் இது. இதே படலத்தில் திருமகளேயானாலும், மானுட உடம்பு எடுத்தால் அதற்கேற்ற வாழ்வே அமைகின்றது என்பதை அறிய ஒரு வாய்ப்பும் ஏற்படுகிறது. மனித உணர்ச்சிகள் எப்போதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. அலைகள் எழுந்து மடங்குவதுபோல உணர்ச்சிகள் மேல் எழுவதும் கீழ் இழிந்து செல்வதும் இயல்பு. காட்சிப் படலத்தில் பிராட்டியை வைத்தே கவிச்சக்கரவர்த்தி இந்த அற்புதத்தைச் செய்துகாட்டுகிறான். மனம் நொந்து மாதவிப் பொதும்பரைத் தேடிச் செல்கின்றபொழுது உணர்ச்சியின் கீழ் இழிந்துபோகும் நிலை அடுத்தபடியாக அனுமனைச் சந்தித்து இராம இலக்குவர்கள் தன்னைத் தேடி வருகின்றார்கள் என்று உணரும்பொழுது அந்த உணர்ச்சி மேல் ஓங்குகிறது. அந்த உச்ச கட்டம்தான் 'என் சொல்லினால் சுடுவேன்' என்றது. இந்த உச்ச கட்டம் நீண்ட நேரம் நிலைபெறமுடியாது. மகிழ்ச்சி, துயரம் என்ற எந்த உணர்ச்சியும் உச்ச கட்டத்தில் நீண்ட நேரம் இருக்க முடியாது. அதனை அற்புதமாக வெளிப்படுத்துகிறான் கவிச்

*சக்கரவர்த்தி, பிராட்டியின் இந்த உணர்ச்சியும் உச்ச கட்டத்தில் நீண்டநேரம் இருக்க இயலாது. அதனை அற்புதமாக வெளிப்படுத்தும் கவிச் சக்கரவர்த்தி, பிராட்டியின் இந்த உணர்ச்சி மறுபடியும் கீழிறங்கிச் செல்வதை (5372 -5387) 15 பாடல்களில் விரிவாகப் பேசுகிறான். இதில் 5372 - 5376 வரையுள்ள பாடல்கள் நம்பிக்கை இழந்த மனநிலையைக் காட்டுகின்றன. இதுவரை நடந்தவற்றையெல்லாம் கூறிய அனுமன், தான் இராமனிடம் சென்று தகவலைத் தெரிவித்தவுடன் இராமன் வானரப்படையொடு வருவான் எனத் தேற்றியும், பிராட்டி (இந்த ஐந்து பாடல்களில்) நம்பிக்கை இழந்து பேசுகிறாள். இன்னும் ஒரு மாதத்தில் வராவிடில் இராமன் மீது ஆணையாக தன் உயிரை விட்டுவிடுவேன் என்றும், தன்னை வந்து மீட்பதற்குரிய தகுதி தன்னிடம் இல்லையென்றாலும் மனைவியை இழந்து சும்மா இருந்துவிட்டா னென்று அவனுடைய வீரத்தை உலகம் பழிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் இராமன் தன்னை மீட்க வரவில்லை என்றாலும் தன்னைக் காத்து நின்ற இளைய பெருமாளுக்கு இப்பொழுது தன்னை மீட்பது கடமை என்றும் கூறிக்கொண்டே வருகின்றவள், முற்றிலுமாக மனம் உடைந்து பின்வரும் பாடலைக் கூறுகிறாள்:*

"திங்கள் ஒன்றின் என் செய்தவம் தீர்ந்ததால்;
இங்கு வந்திலனே எனின், யாணர் நீர்க்
கங்கை யாற்றங்கரை, அடியேற்குத் தன்
செங் கையால் கடன் செய்க" என்று செப்புவாய் **(5376)**

*இவ்வாறு பேசுவதால் அனுமன் வார்த்தைகளிலோ, இராமன் வரவிலோ ஐயம் கொண்டு பேசினாள் என்று நினைப்பது தவறு. எத்துணை உறுதிப்பாடு உடையவர்களாயினும் மென்மைத் தன்மையுடைய பெண்களுக்கு இத்தகைய உணர்ச்சிப் போராட்டங்கள் தோன்றுவதும் - நம்பிக்கை, நம்பிக்கையின்மை மோதல் தோன்றுவதும் இயல்பே ஆகும். சீதையும் இதற்கு விதிவிலக்கல்லள் என்பதைக் காட்டவும் கவிஞன் இவ்விடத்தைப் பயன்படுத்துகிறான்.*

பெண்களின் மென்மை காரணமாகப் பல்வேறு வகையான குழப்பங்கள் அவர்களுடைய மனத்தில் தோன்றுவது இயல்பு. மாய மான்பின்னே சென்ற இராகவன் பிராட்டிக்குக் காவலாக இளையவனை வைத்துச் செல்கிறான். இராமன் குரலில் 'இலக்குவா' என்ற அபயக் குரல் கேட்கிறது. இது அரக்கனின் சூழ்ச்சி என்பதை அறிந்துகொண்ட இலக்குவன், கவலை இல்லாது நிற்கிறான். இராமனுக்கு ஆபத்து வந்துவிட்டது என்று கலங்கிப்போன பிராட்டி உடனே இராமனைத் தேடிச் செல்லுமாறு இலக்குவனை ஏவுகிறாள். 'அந்தக் கமலக் கண்ணனை யாரென்று நீங்கள் அறியவில்லையா? பதினான்கு உலகங்களையும் அழிக்கவல்ல அவனுக்கு யாராலும் தீங்கு ஒன்றும் வராது' என்று எவ்வளவோ எடுத்துச்சொல்கிறான். எதையும் காதில் வாங்கிக்கொள்ளாத சீதை, 'இராமனிடம் ஒரு பகல் பழகியவர்கள்கூட அவனுக்காகத் தம் உயிரைக் கொடுப்பர். அத்தகைய திருமகன் அழிகின்றான என்ற செய்தியை அறிந்தும் கொஞ்சமும் துயர் உறாமல் துணிவோடு நிற்கின்ற இளையவனே! இனி உன்னிடம் பேசுவதில் பயனில்லை. நான் எரியிடை மூழ்குவேன்' என்று புறப்பட்டுவிட்டாள். (3331) 'விதிக்கும் விதியாகும் என் வில் தொழில்' (1735) என்று ஒரு காலத்தில் பேசியவன் இளையவன். நிகழ்ச்சிகளின் நடைமுறையைக் கண்டும் இராகவனே அதைத் தடுத்து நிறுத்தாமல் அதன் வழியே செல்வதைக் கண்டும் மனத்தளர்ச்சி அடைந்துவிட்டான். இது மாய மான், அரக்கர் சூழ்ச்சி, இதை நானே பிடித்துவருகிறேன் என்று இலக்குவன் கூறிய சொற்கள் அனைத்தும் அடிபட்டுப் போய்விட்டன. இறுதியாக அவன் கடமை என்று கருதியது பிராட்டியைக் காவல் செய்தது ஆகும். இப்பொழுது அதுவும் அடிபடுகிறது. இந்த நிலையில் எரியிடைப் புகுவேன் என்ற பிராட்டியை வீழ்ந்து வணங்கி, 'அன்னையே! அரசன் ஆணையை மறுத்து, நீர் இடும் ஆணையை ஏற்றுச் செல்கிறேன். வெஞ்சின விதியை யாரும் வெல்ல முடியாது போலும்' (3334) என்று கூறிவிட்டுச், செல்கிறான், பேரறிவாளனாகிய இளையபெருமாள். அயோத்தியி லிருந்து புறப்பட்டது முதல்

விதி நடத்தும் நாடகத்தைப் புறநிலையில் நின்று கவனித்து, ஏதோ ஒரு பேரிடர் வரப்போகிறது என்று தன் நுண்மாண் நுழைபுலத்தால் கணித்துவிட்டான். அடியாரின் ஏவல் செய்பவனாக வந்த அவன் இந்தப் பேரிடரைக் களைவது தன் கடமை என்று முடிவிற்கு வந்தவனாய் அதனை எதிர்பார்த்து நிற்கின்றான். எந்தப் பிராட்டியைக் காவல் செய்வது தன் தலையாய கடமை என்று நினைத்து நின்றானோ அந்தப் பிராட்டியின் வாய்ச் சொற்களாலேயே பேரிடர் புகுந்துவிட்டது. 'ஊழிற் பெருவலி யாவுள. மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' (38:10) என்ற குறளுக்கேற்பக் காக்கப்பட வேண்டியவள் சொற்கள்மூலமே பேரிடர் புகுகின்றது என்பதை அந்த நுண்ணறிவாளன் கண்டு பேசுகிறான். "போகின்றேன் அடியனேன்; புகுந்து வந்து கேடு ஆகின்றது (3334) என்றும், "பொருப்பு அனையானிடைப் போவெனேன் எனின் அருப்பம் இல் கேடு வந்து அடையும்" (3335) என்றும் உறுதிபடக் கூறுகிறான். கேடு அடைந்தது என்றும் அடையும் என்றும் நன்கு தெரிந்திருந்தும் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இவ்வளவு விரிவாக இதனைக் பேசுவதற்கு ஒரு காரணம் உண்டு. பிராட்டியைக் காத்து நின்றவன் இளையவன். அந்தக் காவலை விட்டு நீங்குவதற்கு அவன் காரணன் அல்லன். காத்து ஆள்பவனாகிய அவன் காவலை இகழ்ந்து செல்லவில்லை; யாரைக் காவல் செய்கிறானோ அவளே (சீதை) அவன் காவலை இகழ்ந்து போகுமாறு பணித்தாள். எவ்வளவு எடுத்துச்சொல்லியும் அவள் கேட்கத் தயாராக இல்லை. விதி நின்றது, அவள் மனத்தை உந்தி அவனை ஏவிற்று; அதே விதி அவன் பிடரை உந்திச் 'செல்க' எனப் பணித்தது. எனவே, சீதையின் இந்நிலைக்கு அவளே முற்றிலும் காரணம் ஆகிறாள். அசோக வனத்தில் தன் பிழையை நினைத்து வருந்துகின்ற நேரத்தில் தன்னுடைய அறிவுக்குக் குறைவான செயலை நினைத்து இராகவன் தன்னை ஒதுக்கியிருப்பானோ என்று எண்ணினாள்.

என்னை, நாயகன் இளவலை, எண்ணலா வினையேன்
சொன்ன வார்த்தை கேட்டு, "அறிவு இலன்" எனத்
துறந்தானோ? (5082)

எனவே, அசோகவனத்தில் இத்தகைய நிலைக்குத் தான் வருவதற்குரிய காரணம் இளையவனைப் பேசியதுதான் என்று உணர்கிறாள். அப்படியிருந்தும் அனுமனிடம் பேசும்போது, நடந்தவற்றையெல்லாம் மறந்துவிட்டுப் பின்வருமாறு பேசுகிறாள்.

ஏத்தும் வென்றி இளையவற்கு, ஈது ஒரு
வார்த்தை கூறுதி; "மன் அருளால் எனைக்
காத்து இருந்த தனக்கே கடன், இடை
கோத்த வெஞ்சிறை வீடு" என்று கூறுவாய் **(5375)**

பெண்களுக்கே உரிய தருக்கமுறை என்று சொல்வதுண்டு. மன்னன் ஆணையை மீறி இளையவனைப் போ எனச் சொன்னவள் அவள்தான். காவலை விட்டுச் செல்லுமாறு பணித்தவளும் அவள்தான். அப்படியிருக்க "மன் அருளால் எனைக் காத்து இருந்த தனக்கு" என்று கூறுவது வியப்பாக இருக்கிறது. எப்படியாவது தனக்கு விடுதலை வேண்டும் என்ற ஆதங்கத்தில் இலக்குவனுடைய மன நோவைத் தணிக்க வேண்டுமென்று நினைக்காமல் பேசும் பேச்சு இது. அவன் கடமையிலிருந்து தவறிவிட்டவன்போலவும், அந்தத் தவற்றிற்குக் கழுவாய் தேட வேண்டும் என்று சொல்பவள் போலவும் இக்கூற்று அமைந்திருக்கிறது. இறைவனுக்குச் செய்யும் தவற்றைக் காட்டிலும் இறைவனுடைய அடியார்களாகிய பாகவதருக்குச் செய்யும் தவறு மன்னிக்கப்பட முடியாதது. இராம அனுசனாகிய இலக்குவனுக்கு இரண்டு தவறுகளை இழைத்துவிட்ட பிராட்டி அதற்குக் கழுவாயாகத் தீக்குளிக்க நேரிடுகிறது. பகவத் அபசாரத்தைவிடப் பாகவத அபசாரம் கொடுமையானது என்ற இக்கருத்தைப் பேராசிரியர் டாக்டர் ம.ரா.போ. குருசாமி அவர்கள் 'இராமாயணச் சிந்தனை' என்ற நூலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

இதிலொரு சிறப்பு என்னவென்றால், தன்னம்பிக்கையில் இமயம் போன்று உயர்ந்து நிற்கும் அனுமனிடம் பிராட்டியை இவ்வாறு தன்னம்பிக்கை இழந்து பேசவைக்கிறான் கவிஞன். இராமனிடம் பெற்றுவந்த கணையாழியைப் பிராட்டியிடம் கொடுத்தது போல அவளுடைய சூடாமணியைப் பெற்றுச் செல்கிறான் அனுமன்.

சூடாமணியைப் பெற்றுக்கொண்ட அனுமன் இராமனிடம் செல்வதற்குமுன்னர் எப்படியாவது இராவணனைப் பார்த்துவிட வேண்டும் என்று நினைக்கிறான். முன்பின் தெரியாத இடத்தில் சிறிய உருக் கொண்டு இவ்வளவையும் சாதித்த அனுமன். இராவணனைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினான். அது நடைபெறுகிற காரியம் அன்று. தேவர்கள் முதலாயினோரும் அவனைக் காணமுடியா தென்றால் குரக்கு வடிவிலிருந்த ஒருவன் அவனைக் காணவேண்டு மென்று சென்றால், அவன் விருப்பத்தைக் கேட்பவர்கள் எள்ளி நகையாடுவார்களே தவிர, இலங்கை வேந்தனைச் சந்திக்க வழி செய்ய மாட்டார்கள். எனவே, அனுமன் தனக்கு உரிய முறையில் சிந்தித்து ஒரு முடிவிற்கு வருகிறான். பழந்தமிழ் மன்னர்கள் காலத்தில் கடிமரம் என்பது எவ்வளவு பாதுகாப்பிற்குரியதாக இருந்ததோ அதே நிலையில் இராவணன் அசோகவனத்தை வளர்த்துவந்திருக்கிறான். அவன் வந்து தங்கி மகிழ்வதற்காகச் சயித்தியம் என்ற மணி மண்டபத்தையும் கட்டியிருந்தான். எனவே அசோகவனத்தை அழித்தால் நிச்சயமாக இராவணனைச் சந்திப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும் (5435) என்று கருதிப் பொழிலை அழிக்கத் தொடங்கினான். இது ஆறாவது படலமாகும்.

அடுத்து நிற்பது கிங்கரர் வதைப் படலமாகும். தனியொரு குரங்கு எனப் பகையைக் குறைத்து மதிப்பிட்ட இராவணன் கிங்கரர்களை ஏவுகிறான். அவ்வாறு குறைத்து மதிப்பிட்டான் என்பதை அவன் இட்ட ஆணையே விளக்குகிறது. ஏதோவொரு சாதாரணக் குரங்கைப் பிடிக்கப் போகின்றவர்களை அதை அடித்து நசுக்கிவிடாமல் அதைத் தன்னிடம் கொண்டு வரவேண்டும் என்று கூறுவது போலப் பேசுகிறான்;

"வல்லையின் அகலா வண்ணம், வானையும் வழியை மாற்றி,
கொல்லலிர் குரங்கை, நொய்தின் பற்றுதிர், கொணர்திர்"
(5490)

"என்னையே நோக்கி நான் இந் நெடும்பகை தேடிக்கொண்டேன்" என்றும், "சீதையை விடுவது உண்டோ? இருபது திண்தோள் உண்டால்" (9124) என்றும் பின்னர்ப் பேசுகின்ற இராவணனின் தன்னம்பிக்கை, தன் ஆற்றல்பற்றிய தன்னம்பிக்கையாக இல்லாமல், அகங்காரத்தால் விளைந்த தன்னம்பிக்கையாக இருப்பதைக் கண்டோம். மிதமிஞ்சிய அத் தன்னம்பிக்கை சிந்திக்கும் அவனுடைய ஆற்றலைத் தடுத்துவிடுகின்றது. அதன் பயனாகப் பகையைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டான். மாற்றான் வலியைக் குறைத்து மதிப்பிடுதல் வீழ்ச்சியின் முதற்படி யாகும். அவன் நியமித்துள்ள இலங்காதேவியின் கட்டுக்காவலை அவன் அறிவான். கோட்டைக் காவல், உள்நகர்க் காவல் இத்தனையும் மீறி ஒரு குரங்கு வந்து, கண்ணின் மணிபோல் அவனால் காக்கப்படுகின்ற அசோக வனத்தையும் அழித்தது என்றால், அது ஒரு சாதாரணக் குரங்காக இருக்கமுடியாது என்பதைப் பெருவீரனாகிய அவன் சிந்தித்திருக்க வேண்டும். அவனுடைய அகங்காரம் அவன் கண்ணை மறைத்துவிட்டது. எனவேதான், இவ்வளவு அலட்சியத்துடன் 'குரங்கைக் கொல்லாமல் கொணர்க' என்று ஆணையிடுகிறான். யோசனை யற்ற இந்த ஆணையின் முடிவு உடனே தெரிந்துவிட்டது. இவர்களாவது சாதாரண வீரர்கள். பெருவீர னாகிய சம்புமாலியும் வந்து அழிகிறான். தனிப்பட்ட தேர்ச்சி பெற்ற பஞ்ச சேனாதிபதிகள் அடுத்து வந்து அழிகின்றனர். அதனைப் பஞ்ச சேனாபதிகள் வதைப் படலத்தில் கவிஞன் விளக்குகின்றான். சேனாபதிகள் அழிந்தபோதாவது இராவணன் சிந்தித்திருக்க வேண்டும். இந்திரசித்தன் தம்பியாகிய தன் இளைய மகன் அக்க குமாரனை அனுப்புகிறான். அக்க குமாரனும் வதைப்பட்ட பிறகு இராவணன் தானே போருக்குக் கிளம்புகிறான். அவனைத் தடுத்து நிறுத்திய இந்திரன் பகைஞனும் பெரும் படையுடன் புறப்படுகிறான். அப்படிப் புறப்படுவதற்கு முன்னர்த் தந்தையிடம் பேசிய பேச்சுகள் இவ்விருவரையும் ஒப்பிட்டுப் பார்க்க உதவுகின்றன. இராவணன் ஆற்றலில் எள்ளளவும் குறையாத ஆற்றலைப் பெற்றுள்ள இந்திரசித்தன் தந்தை செய்த தவற்றைத் தான் செய்ய முனையவில்லை.

ஆராயாமல், குரங்கு என்று அலட்சியப்படுத்தியது தந்தை செய்த தவறு என்பதை அழகாகப் பேசுகிறான், பாசப் படலத்தில். "தந்தையே! குரங்கின் ஆற்றலால் அது இவ்வளவு தூரம் வந்தது என்று அறிந்தும் தக்கவர்களை அனுப்பாமல் கிங்கிரர் முதலானோரை அனுப்பினாய். அடுத்தடுத்துக் கிங்கரர், சம்புமாலி, கேடு இலா ஐவர் (பஞ்ச சேனாபதிகள்) என்பவர்களோடு சென்ற படையில் ஒருவர்கூட மீளவில்லை. இத்தனை பேரையும் ஒரு குரங்கு அழித்தது என்றால் சங்கரன், அயன், மால் என்பவர்களுக்குச் சமமானது அன்றோ? தந்தையே! மேலே கூறப்பட்டவர்களோடு அல்லாமல் அக்க குமாரனையும் கொன்ற குரங்கை எளிதாக வென்று விடலாம் என்று நினைப்பது அறிவுடைமை ஆகாது. என்றாலும் நீ கவலைப்பட வேண்டா. நானே அக்குரங்கினைப் பற்றிவருவேன்' (5725-28) என்று கூறுகிறான்.

இந்திரசித்து, "ஆயினும் ஐய, நொய்தின் ஆண் தொழில் குரங்கை, யானே "ஏ" எனும் அளவில் பற்றித் தருகுவேன்" (5728) என்று கூறும்பொழுது இராவணனைப் போல் இவன் சிந்திக்காமல் செயல்பட்டான் என்று கூற முடியாது. அந்த ஒற்றைக் குரங்கு சங்கரன், அயன், மால் என்பவர்க்கு ஈடாகும் என்பதை அறிந்தே பேசுகிறான். உலகப் பொதுமறை இத்தகைய சந்தர்ப்பங்களில் ஓர் அரசன் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதை அழகாக எடுத்துக்கூறுகிறது.

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல் **(481)**

இந்திரசித்தனைப் பொறுத்தவரை குரங்கின் ஆற்றலை நன்கு அறிந்துகொண்டானாதலின், மாற்றான் வலிமையை நன்கு கணித்தான் என்பது நன்கு விளங்குகிறது. 'சாதாரணக் கணைகளால் இவனை அடக்க முடியாது. நான்முகன் படையால்தான் அடக்க முடியும்' என்று அறிந்திருந்தான் என்பதும் பெறப்படும். இதற்கேற்பத் தன் வலியைப் பெருக்கிக்கொண்டு எல்லையற்ற படைகளையும் கொண்டு இவற்றிற்கு மேலாக நான்முகன் படையையும் எடுத்துச்

செல்கின்றான் என்றால், குறளலாசிரியர் கூறும் மூவகை வலியையும் இருள்தீர எண்ணிச் செய்தான் என்பதைக் கவிஞன் பாசப் படலத்தில் விரிவாகச் சொல்கிறான்.

இராமனின் தொண்டனாகிய அனுமனுக்கு அயன் படையை எதிர்த்து வெல்வது எளிதுதான் என்றாலும், தான் தொண்டன் என்பதை அனுமன் மறப்பதே இல்லை. 'பூவியல் நறவம் மாந்தி' அடிக்கடி புந்தி வேறாகின்ற சுக்கிரீவனிடம் பேசும்போதுகூட அனுமன் தன் நிலையை மறப்பதில்லை. அகங்கார, மமகாரங்களை முற்றிலும் களைந்தவனே தொண்டனாக இருக்க முடியும். அத்தகைய தொண்டிற்கு இலக்கிய மாகிய அனுமன் அயன்படையை எதிர்க்கக் கூடியவனே யாயினும் - அதற்குரிய ஆற்றலைப் பெற்றிருப்பினும் அந்த ஆற்றலைப் பயன்படுத்தாமல் அயன்படைக்கு வணக்கம் செய்து, அதனால் கட்டுண்ணுகிறான். அயன்மேல் கொண்ட பக்தியும் மரியாதையும் ஒருபுற மிருக்க இக்கட்டை ஏற்றுக்கொள்வதற்கு மற்றொரு காரணமும் உண்டு. சர்வ வல்லமையுள்ள இராவணனைக் கண்டு, அவனோடு சில சொற்கள் பேசி அவனை எடை போட்டுச் செல்ல வேண்டும் என்பது அனுமனின் எண்ணம். தன்னை ஏவிய இராகவனிடம் சென்று சீதையைக் கண்டதையும் அவள் இருக்கும் நிலையைமட்டும் கூறினால் போதாது. மேலும், அவர்கள் இருவரும் பல நாள் போரிட வேண்டிய இந்திரசித்து முதலானவர்களைப் பார்த்துவிட்டான் ஆதலின், இத்தகைய மகனைப் பெற்ற தந்தையையும் நேரே கண்டு அவனிடம் உரையாடினால் இராமன் பகைஞனை ஓரளவு அறிந்துகொள்ள முடியும். இந்தப் பகைவனைப் பற்றிய தகவலை இராமனுக்குத் தராமல், பிராட்டியின் இருப்பைமட்டும் கூறினால் தான் ஒற்றனாக வந்த பணியை முற்றிலுமாகச் செய்தவன் ஆக மாட்டான். எனவேதான், எப்படியாவது இராவணனைக் காண வேண்டும் என்று சிந்தித்த அனுமன், அதற்குரிய ஒரு கருவியாகவே அசோக வனம், சயித்தம் முதலியனவற்றை அழித்தான். இவற்றை அழித்தால் இராவணனிடம் தன்னை அழைத்துச்

செல்வார்கள் என்று அனுமன் கருதியது நியாயமானதே ஆகும். அவன் நினைத்தது நடப்பதற்கு அயன்படைக்குக் கட்டுப்படுதல் அவசியமாகும். இராவணனைச் சந்திப்பது தான் நோக்கம் என்றால், கிங்கரர்கள், சம்புமாலி, பஞ்ச சேனாபதிகள், அக்ககுமாரன் என்பவர்களில் யாரோ ஒருவரிடம் கட்டுண்டு இராவணனிடம் சென்றிருக்கலாமே என்ற வினாத் தோன்றினால் அதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால், வீரத்தின் முழு வடிவான அனுமன் மேலே சொன்ன ஐவருள் யாரோ ஒருவரின் கட்டுக்கடங்கிச் செல்வது அவனுடைய பெருமைக்கு உகந்தது ஆகாது. குட்டுப்பட வேண்டுமென்று அனுமன் தனக்குத் தானே முடிவு செய்துகொண்டான். அது இந்திரசித்துப் போன்ற மோதிரக் கையால் இருக்கவேண்டு மென்று நினைத்ததில் தவறில்லை. மூவரில் ஒருவருக்கு ஈடானவன் என்று இந்திரசித்தனே இவனைக் குறிக்கின்றா னாதலால், தன் வல்லமையை நன்குணர்ந்தவ னாகிய இந்திரசித்தனிடம் கட்டுப்படுவதே சிறந்ததாகும் என அனுமன் கருதினான். முன்னர் வந்த கிங்கரர் முதல் அக்ககுமாரன் வரை வந்தவர்கள் அனுமனின் ஆற்றலை உணராமல், 'வந்தது ஓர் குரங்கு' என்ற எள்ளல் மனப்பான்மையோடு வந்தனர். எனவே, பகையைக் குறைத்து மதிப்பிட்டால் என்ன நேரும் என்பதை அனுமன் செய்துகாட்டினான். இந்நிலையில் அனுமன் அயன் படைக்குக் கட்டுப்பட்டான் என்றாலும், இந்திரசித்து அவனைக் குறைத்து மதிப்பிடவில்லை; இராவணனிடம் கொண்டு சேர்த்தான். இதுவரை பாசப்படலம் கூறுவதைக் கண்டோம்.

சுந்தர காண்டத்தில் பன்னிரண்டாவது பகுதி பிணி வீட்டு படலம் ஆகும். இந்திரசித்தன் ஏவிய அயன் படையால் கட்டுண்ட அனுமன், தானே விடுவித்துக்கொள்ள விரும்பாமல் இருந்தபொழுது அப்படையை ஏவிய இந்திரசித்தனே விடுவித்தான். ஆனால், ஏனைய அரக்கர்கள் பெரும் கயிற்றால் அனுமனைக் கட்ட ஒரே விநாடியில் அக்கட்டைத் தகர்த்து எறிந்துவிட்டான். இதைக் கண்ட இந்திரசித்தனுக்குப் புதிய சிந்தனை தோன்றலாயிற்று.

'உண்மையில் இவன் குரங்கு அல்லன். அயன்படையை வெல்லும் ஆற்றல் உடையவனேனும், மரியாதை காரணமாக அடங்கியிருக்கிறான்' என்பதை அறிந்து கொண்டான். இந்த நிலையில் தந்தையிடம் அனுமனைக் கொண்டு சேர்க்கிறான். இந்த விநாடிவரை அனுமனைச் "சுள்ளியில் உறைதரு குரங்கு" என்று இராவணன் பேசிவந்துள்ளான். அனுமனை நேரே பார்க்கும்போது ஆணவத்தின் வடிவமாகிய இராவணன், பகையைக் குறைத்து மதிப்பிடும் அத்தவற்றை மறுபடியும் செய்துவிடல் ஆகாது என்ற முடிவுக்கு வந்தான் அத் தவப்புதல்வன். எனவே, தந்தையின் எதிரே கொண்டு நிறுத்தி அதிகமான வார்த்தைகள் பேசாமல் ஒரேயொரு வாக்கியத்தைக் கூறித் தந்தையை வணங்கிவிட்டு நின்றான் என்று கூறுகிறான், கவிஞன். "அரி உருவான ஆண்தகை, சிவன் என்ச் செங்கணான் எனச் செய் சேவகன் இவன்" என்ற சொற்களால் எதிரே நிற்பவனை அறிமுகம் செய்கிறான் (5871).. ஒரு பாடலில் ஒரு நாடகக் காட்சியையே உருவாக்குகிறான் கவிஞன். அறிமுகம் செய்பவன் ஒருவன். அறிமுகப்படுத்தப்படுபவன் ஒருவன். யாரிடம் அறிமுகம் செய்யப்படுகிறதோ அவன் ஒருவன். இம்மூவரில் யாரை வியப்பது என்றுதான் தெரியவில்லை. உறங்குகின்ற நிலையில் ஒருவனைப் பார்த்துக் கலைகளை யெல்லாம் கற்றவனும், பேரறிவாளனுமாகிய அனுமன் "இளைய வீரனும், ஏந்தலும், இருவரும் பல நாள் உளைய உள்ள போர் இவனோடும் உளது" (4975) என்று யாரைப்பற்றிக் கூறினானோ அவன்தான் இப்பொழுது அனுமனை அறிமுகம் செய்துவைக்கிறான். யாரிடம் அறிமுகம் செய்துவைக்கிறான் என்று கூறவந்த கவிஞன், "புவனம் எத்தனை அவை அனைத்தும் போர் கடந்தவன்" (5871) என்கிறான். தந்தை, முன்னர்ச் செய்த பிழையை மறுபடியும் செய்யாமல் இருக்க வேண்டும் என்று கருதினான் இந்திரசித்தன். அதே நேரத்தில் புவனங்கள் அனைத்தையும் வென்ற ஒருவனிடம் வளவளவென்று பேசுதல் பொருத்தமுடைய தாகாது. எனவே, ஒரே வரியில் 'அரி உருவான ஆண்தகை, சிவன் எனச் செங்கணான் எனச் செய் சேவகன் இவன் (587க1) என்று அறிமுகம் செய்துவைக்கின்றான்.

தன் எதிரிலேயே தன் பகைவனைப் புகழ்ந்தான் என்று இராவணன் சினவாதிருக்க இந்த அறிமுகத்தைச் செய்துவிட்டு இரு கை கூப்பினான்.

மகனுடைய இக்குறிப்பை 'ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவமைந்தவ னாகிய' இராவணன் பழைய எள்ளலை விட்டுவிட்டு அனுமனிடம் மிகச் சீரிய முறையில் பேசத் தொடங்குகிறான். "திருமாலோ, இந்திரனோ, சிவபெருமானோ, நான்முகனோ, ஆதிசேடனோ, இவர்களுள் யார் நீ? (5975) வேள்வியில் வந்த பூதமோ, நான்முகன் அனுப்பிய தெய்வமோ (5876) யார் நீ?" என்று வினாக்களை இர்ாவணன் தொடுப்பதிலிருந்து இராவணன் எந்த அளவுக்கு மாறியுள்ளான் என்பதை அறிய முடிகிறது. புன் தொழில் குரங்கு என்று எள்ளி நகையாடினவனைக் கிங்கரர் முதல் அக்ககுமாரன்வரை அழிந்தோர் பட்டியல் மனமாற்றம் கொள்ளச்செய்தது உண்மைதான். ஆனால் அவற்றால்மட்டும் அவன் மாறிவிட்டான் என்று கூறுவதற்கில்லை. அப்படி மாறியிருப்பினும் வரிசை வரிசையாகச் சம்புமாலி முதல் அக்க குமாரன் வரையில் பலியிட்டிருக்க மாட்டான். ஓரளவு மனத்தில் யார் இவன் என்ற ஐயம் தோன்றியிருக்குமே தவிர, இத்தனை வினாக்களைத் தொடுக்கும் அளவிற்கு இலங்கேசன் மனமாற்றம் கொள்ளவில்லை. அவனால் பெரிதும் மதிக்கத் தக்கவனாகிய இந்திரசித்தனையும், அவன் கூறும் சொற்களையும் கவனத்துடன் கேட்கும் இயல்புடையவனாதலால் இந்திரசித்தன் சொற்கள் இராவணன் மனத்தை மாற்றிவிட்டன. அதிலும் பகைவன் இல்லாத இடத்தில் புகழாமல் அவனை நேரே வைத்துக்கொண்டு தந்தையினிடம் 'உருவு கண்டு எள்ள வேண்டா. இவன் சிவன், திருமால், இருவருள் ஒருவனே' என்று இந்திரசித்தன் பேசினால், அவை பொருளுடைய சொற்கள் என்று மதித்துப் போற்றினான் இராவணன். அந்த மனநிலையில்தான் 'நேமியோ, கணிச்சியோ' என்று ஆரம்பித்தான்.

இத்தனை வினாக்களுக்கும் விடை கூற வல்ல அனுமன் தான் யார் என்பதை (5878 - 5885) எட்டுப் பாடல்களில் விடை கூறுகிறான். எட்டு யானைகள் இந்த மாபெரும்

உலகத்தைத் தாங்குவது போல கம்பநாடனுடைய கடவுட் கொள்கை என்ற மாபெரும் தத்துவத்தை இந்த எட்டுப் பாடல்கள் தாங்கி நிற்கின்றன. மூலப் பரம்பொருளை எல்லாச் சமயங்களும் தத்தமக்கே உரிய முறையில் வருணித்துள்ளன. சில சமயங்கள் மூலப் பொருளுக்கு இலக்கணம் கூறவும் முற்பட்டன. இவையனைத்தையும் ஒன்று திரட்டிப் பார்த்தால் இரண்டு வகையாக அவை இச்செயலைச் செய்கின்றன என்பதை அறிய முடியும். கடவுள் என்ற தமிழ்ச் சொல்லேகூடத் தன்னுள் முரண்பாட்டைக் கொண்டதாகும். "கட" என்ற பகுதி, வாக்கு மனோலயம் கடந்தது என்பதை குறிக்கும். "உள்" என்ற விகுதி இவை அனைத்தின் உள்ளேயும் ஊடுருவி நிற்கும் என்பதைக் குறிக்கும். கடந்து நிற்கும் பொருளே உள்ளே நிற்பது என்பதும், எங்கும் உள்ளீடாக உள்ள பொருளே கடந்து நிற்பது என்பதும் சற்று விரோதமானதுதான். உண்மையைக் கூறவேண்டுமானால் எல்லாவற்றிலும் உள்ளீடாக உள்ள பொருள் அப்பொருளினுள் மட்டும் தங்கிவிடாமல் எல்லாவற்றையும் கடந்தும் நிற்பது என்ற பொருளையும் தரலாம். முரண்பாட்டினிடையே முழுமுதலைக் கண்ட பெருமை இத் தமிழர்களுக்கு உரியதாகும். இக் கருத்துக்களையெல்லாம் மனத்துட் கொண்ட கவிச்சக்கரவர்த்தி தக்கதோர் இடத்தைத் தேடிக் கொண்டிருந்தான். இந்தப் பார காவியத்தில் இரண்டு இடங்கள் மிகப் பொருத்தமாக அவனுக்குக் கிடைத்தன. உண்மையைக் கூற வேண்டுமானால், ஓர் இடத்தை அவனே தேடிக்கொண்டான். இரணியன் வதைப் படலம் என்று யுத்த காண்டத்தில் காணப்படும் பகுதி வான்மீகி முதல் எந்த இராமாயணத்திலும் காணப்படாத பகுதியாகும். பிணி வீட்டு படலத்தில் எட்டுப் பாடல்களில் சொல்லிய பாடல்கள் உபநிடத வாக்கியங்கள்போல் மிகச் சுருக்கமாக அமைந்துள்ளன. இதை விரிவாகப் பாடவே இரணியன் வதைப் படலத்தைத் தானே புதிதாகச் சேர்த்துக் கொண்டான். இனி இங்குள்ள எட்டுப் பாடல்களும் இரணியன் வதையிலுள்ள பாடல்களும் ஒரு பொதுத்தன்மையைக் கொண்டுள்ளன. இரண்டு இடங்களிலும் இருவரிடையே

நடைபெறும் உரையாடல்களே இடம் பெற்றுள்ளன. இங்கு அனுமன், இராவணன் என்ற இருவரிடையே உள்ள உரையாடல். அங்கு இரணியன், பிரகலாதன் என்ற இருவரிடையே உள்ள உரையாடல். அனுமன், பிரகலாதன் என்ற இருவரும் கற்றுணர்வோடு மெய்யறிவும் நிரம்பியவர்கள். அவர்கள் கல்வி அறிவால் தோன்றிய ஆணவத்தை (வித்யா கர்வம்) அவர்களிடத்தி லுள்ள மெய்யறிவு (பரஞானம்) அழித்து விட்டது. ஆனால், அனுமன் எதிரே உள்ள இராவணன், பிரகலாதன் எதிரே உள்ள இரணியன் இருவரும் வெற்றுக் கற்றறிவோடு நின்றவர்கள். தவ வலிமையால் நிற்பவர்கள். ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தவன் இராவணன் (6119) என்றாலும், மெய்ஞ்ஞானம் பெறாத நிலையில் உண்மையைக் காண மறுக்கிறான். ஒரோ வழி மெய்ஞ்ஞானம் வந்து உண்மைப் பொருளை அறிவுறுத்தினாலும் அவனுடைய ஆணவத்தோடு கூடிய கல்வி அறிவு அதனை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. நேமியோ, கணிச்சியோ என்று தொடங்கும் அத்தனை பாடல்களில் வினாவிய இராவணனுக்கு எட்டுப் பாடல்களில் விடை இறுக்கிறான் அனுமன். இப்பாடல்கள் இரண்டு வகையில் மெய்ப்பொருளை உணர்த்துகின்றன. உபநிடதம் நேதி என்று சொல்வதுபோல, ‘இவனில்லை, இவனில்லை’ என்று எதிர்மறை முகத்தாலும், ‘இவன்தான்’ என்று உடன்பாட்டு முகத்தாலும் நிறுவ முயல்கிறான் கம்பன். மூலப்பொருளின் இயல்பை எதிர்மறை முகத்தால் கூறப்போகும் அனுமன் கீழ்வருமாறு கூறுகிறான்:

தேவரும் பிறரும் அல்லன்; திசைக்களிறு அல்லன்; திக்கின்
காவலர் அல்லன்; ஈசன் கைலைஅும் கிரியும் அல்லன்;
மூவரும் அல்லன்; மற்றை முனிவரும் அல்லன்; ..... (5881)

மெய்ஞ்ஞான மின்மையின் மூலப்பொருளை அறியாது தவிக்கும் இராவணன் தேவர்கள் தலைவர்களாக உள்ள மும்மூர்த்திகளையே மதித்துவந்தான். அக்கருத்துப் பிழையானது என்று மறுத்துவந்த அனுமன், “சொல்லிய

அனைவரும் அல்லன் அப் புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்" (5878) என்று குறிப்பிடுகிறான். இப்பொழுது இராவணனுக்கு ஐயம் பிறக்கிறது. அவ்ன் கண்ட மும்மூர்த்திகளைப் புல்லிய வலியனோர் என்று கூறிவிட்ட பிறகு அனுமன் யாருடைய தூதன் என்ற வினா எழும் அல்லவா? எனவே, அதற்குரிய விடையை அனுமன் பேசத் தொடங்குகிறான். இதற்குரிய பாடல்கள் உடன்பாட்டு முகமாக அமைந்திருத்தல் காண்டற்குரியன்.

அனையவன் யார்? என, அறிதியாதியேல்,
முனைவரும், அமரரும், மூவர் தேவரும்,
எனையவர் எனையவர் யாவர், யாவையும்
நினைவு அரும் இரு வினை முடிக்க, நின்றுளோன் **(5879)**

'இவனுடைய தலைவன் யார்' என்று ஆவலோடு விடையை எதிர்பார்த்திருக்கும் இராவணனுக்கு விடை கூறப்புகும் அனுமன் 'மகான்கள், தேவர்கள், மும்மூர்த்திகள் போன்றவர்களும், ஏனைய பொருள்களும் எவ்வெவற்றை நினைக்கவும் முடியாது என்று கருதுகின்றனவோ அவற்றையும், அவற்றின் நினைவிற்கு அப்பாற்பட்டவற்றையும் செய்துமுடிக்கும் தரமுடையவன் என் தலைவன்' என்கிறான். இந்தப் பாடலினாலும் இராவணனுக்கு அவன் தலைவன் யாரென்று புலப்படவில்லை. அப்படிப் புலப்பட்டாலும் 'அவனுக்கும எனக்கும் என்ன சமபநதம' என்று நினைப்பது நியாயமே. தன்னலத்தின் முழுவடிவையும் பெற்று விளங்கும் இராவணன் எந்த ஒன்றையும் தன்னோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் இயல்புடையவன். எனவே, இரண்டாவது பாடலில் 'நீ மிகப் பெரிதாகக் கருதியுள்ள தவம், வர பலம், ஆயுத பலம், புகழ் ஆகிய அனைத்தையும் ஒரே அம்பால் போக்கும் ஆற்றலன் அவன்' என்ற கருத்தில் கூறுகிறான். (5880)

தவங்களைச் செய்து வரங்களைப் பெற்று, அவற்றின் பயன் தனக்கு உறுதியாகக் கிட்டும் என நம்புகின்றவன் இராவணன். இவற்றோடு அல்லாமல் மறைகளைக் கற்றமையின் தனக்கு ஞானம் உண்டென்றும் கருதுபவன் அவன். பலரோடு உசாவிக் கேள்விப் பயனையும் பெற்றவன்.

இவையனைத்திற்கும் தான் நினைக்கும் பயன் கைவரும் என்று கருதி இறுமாந்து இருப்பவன். அவனது நம்பிக்கையின் ஆணிவேரையே அசைக்கின்ற முறையில் அனுமன் விடை கூறுகின்றான்: உன்னுடைய கல்வி ஞானம், கேள்வி ஞானம், தவ வலிமை எல்லாமும் என்ன பயனைத் தரவேண்டுமென்று அவன் நினைக்கிறானோ அந்தப் பயன்களை தருமேயல்லாமல் நீ எதிர்பார்க்கும் பயன்களைத் தரா. இதற்குரிய காரணத்தை அறியவேண்டு மென்று கருதினால் நீ கற்கும் அபௌஷேய மாகிய வேதங்களின் சொற்களுக்கு அப்பாற்பட்டு அவற்றின் உண்மையான பொருள் ஆகி நிற்பவனும் (வேத ஸ்ரூபி) அறவடிவினனு மாகிய ஒருவன் உளான்'. (5882)

இராவணன் மனத்தில் நிலைகொண்டுள்ள மற்றோர் எண்ணத்தையும் அசைக்கின்றான் அனுமன். ஆயிரம் மறைப்பொருள் அறிந்தவ னாதலானும் உபநிடதங்களைக் கற்றறிந்தவ னாதலாலும் மூலப்பொருளைத் தன்னறிவு கொண்டும் இம்மறைகளின் துணை கொண்டும் அறிந்திருப்பதாகவே கருதியுள்ளான். இராவணனின் அந்த எண்ணத்தைத் தகர்க்க முற்படுகிறான் அனுமன். கற்றறிவினால் மட்டும் உண்மைப் பொருளை உணரமுடியாது என்ற கருத்தை முடிவில்லாத வேதங்களும், உபநிடதங்களும் இன்னான் என்று சுட்டிக்காட்ட மாட்டாமே அவனை ஆராயப் புகுகின்ற அறிவினுக்கு உள்ளே ஒளிந்து நிற்பவன் ஆகிய ஒருவன் அவன்' என்று குறிப்பிடுகிறான். இவ்வாறு கூறுவதில் ஒரு பெரிய பிரச்சினை தோன்றுகிறது. கல்வி, கேள்வி, வேள்வி, தவம், வேதம், உபநிடதம், அறிவு ஆகிய அனைத்திற்கும் அப்பாற்பட்டவன் என்று கூறிவிட்டால் நம்முடைய மனத்தில் ஒருவகைச் சலிப்பு உண்டாகும். பற்ற முடியாத அப்பொருளைப் பற்ற நினைத்தால் எவ்விதப் பயனும் ஏற்படபோவதில்லை என்ற சலிப்புத் தோன்றும். இப்பிறப்பில்மட்டு மல்லாமல் எப் பிறப்பிலும் நம்முடைய முயற்சியால், தவத்தால், கல்வி கேள்வியால், வேள்வியால் அதனை அடைய முடியாது என்றால், அதை விட்டுவிடுவது தவிர வேறு வழியில்லை என்ற நிலை ஏற்படும். இந்த

நிலையைப் போக்கப் பாடலின் பின்னிரண்டடிகளில் அனுமன் விடை கூறுகிறான். 'இறப்ப உயர்ந்ததாகிய இப்பொருள் சாதாரண விலங்காகிய யானை ஒன்று தன் காலை முதலை கவ்விக்கொண்டபொழுது 'ஆதிமூலமே' என்று அழைக்கவும் ஓடோடி வந்தது' என்று கூறி முடிக்கிறான்.

'காரணம் கேட்டி ஆயின், கடை இலா மறையின் கண்ணும்
ஆரணம் காட்டமாட்டா, அறிவினுக்கு அறிவும், அன்னோன்;
போர் அணங்கு இடங்கர் கவ்வ, பொது நின்று "முதலே" என்ற
வாரணம் காக்க வந்தான் அமரரைக் காக்க வந்தான்
(5883)

என்ற இப்பாடலில் முன்னிரண்டிகள் கூறவந்த பொருளின் இறப்ப உயர்ந்த தன்மையையும், பின்னிரண்டடிகள் இறப்ப எளிவந்த தன்மையையும் ஒருசேரக் காட்டுகின்றன. திறனாய்வாளர் இதனை மிக உயர்ந்ததிலிருந்து மிக இறங்கிய நிலையைக் கூறுதல் (From the sublime to the rediculous) என்று கூறுவர். மேலே கூறியவற்றால் அடையமுடியாது என்றால் நான் என்பதன் துணை கொண்டு கற்கும் கல்வியும், கேள்வி ஞானமும், செய்யும் வேள்வியும் அவனை அறிய உதவா. அதன் எதிராக நான், எனது - செயல் என்ற அகங்கார, மமகாரங்களை அறவே துறந்து 'நீயே சரணம்' என்ற நிலையில் அவனை அழைத்தால் அந்த இறப்ப உயர்ந்த பொருள் எளிவந்த தன்மையுடன் நம் கைப்படும் என்ற கருத்தைத்தான் இப்பாடலில் அனுமன் அறிவிக்கின்றான். கேவலம் ஒரு யானைக்காக ஓடோடி வந்தவனாகிய அறத்தின் மூர்த்தி சரணம் என்று அழைப்போர்க்குத் தவறாது வந்து உதவுவான் என்ற கருத்தை வலியுறுத்துகிறான்.

இத்துணை கூறிடக் கேட்டாலும் அறிவுவாதிகளுக்கு உள்ள ஒரு குறை என்னவென்றால், அந்த அறிவுவாதத்திலேயே மனம்சென்று கொண்டிருக்கும். எனவே அடுத்த பாடலிலும் அறிவின் துணை கொண்டு மூலப்பொருளின் இலக்கணத்தை வகுக்க முற்படுகிறான் அனுமன்.

மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த காரணன் - கை வில் ஏந்தி,
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி
வந்தான் (5883)

*இப்பாடலின் முன்னிரண்டு அடிகள் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கன. ஒரு பொருள் என்று கூறியவுடன் தோற்றம், இருப்பு, முடிவு என்ற மூன்றும் அதற்கு உண்டு என்ற நினைவு தோன்றும். தோற்றம், முடிவு இல்லாத ஒன்று எங்குமே இல்லையென்பதும் அறிவால் கண்ட முடிவே. இவ்வறிவால் காணப்படாத ஒன்று உண்டு; அதற்கு இந்த மூன்று நிலை இல்லை என்று எதிர்மறை முகத்தான் விளக்கம் கூறுகிறான். மேலும், மூன்று பரிமாணங்களை உடைய எந்தவொரு பொருளுக்கும் தோற்றம், இருப்பு, முடிவு என்பவை இருப்பதுபோல இப்பொருள்கள் எல்லாம் தோன்றி இருந்து மறைவதற்குரிய கால தத்துவமும் உண்டு. இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய காலத்தின் மூன்று நிலையையும் கடந்து நிற்கின்ற ஒரு பொருள் தோற்றம், ஈறு இல்லாததுபோல அப்பொருள்களுக்கு நிகழ்காலம், இறந்த கால்ம், எதிர்காலம் என்ற காலப் பரிமாணமும் இல்லை. இந்த இரண்டும் இன்மையின் அந்தப் பொருளை எந்தக் கணக்கிலும் கொண்டுவர முடியாது. இவ்வாறு பொருளை விளக்குவதால் பௌத்தருடையவாதம் போன்று எதிர்மறையாகவே அப்பொருளின் இலக்கணத்தைக் கூறுவதா என்றால், அதனை மறுத்து அனுமன் பேசுகிறான். மேலே கூறிய மூலம், நடுவு முதலியவை காலத்திற்குக் கட்டுப்பட்ட தன்மை, கணக்கில் அடங்குகின்ற தன்மை அனைத்தும் பொருள்களின் குணங்களைக் குறிப்பன. இந்தக் காலங்கள் இல்லாத பொருள் என்று கூறினால், இவை இல்லாமை என்ற குணம் பற்றிக் கொள்ளும். அதனை மறுத்துக் காரணம் என்று பேசுகிறான் அனுமன். மேலே கூறிய குணங்கள் இல்லை என்று கூறியதால் இன்மைப் பொருளே இலக்கணம் ஆகிவிடாதபடி, காரணம் என்று கூறுகிறான். மூலம், நடுவு, ஈறு என்ற மூன்று இயல்புகளையும் - தோற்றம், இருத்தல், மறைதல் என்ற காலப் பரிமாணத்தையும்*

கடந்து இவற்றை உடைய எல்லாப் பொருள்களுக்கும் ஆதி காரணமாய் உள்ளவன் என்ற பொருளைப் பெறவைக்கிறான் அனுமன்.

இறை இலக்கணத்தை ஈடு இணையற்ற முறையில் சென்ற பாடலில் விளக்கிய அனுமன், இராவணனுடைய அடுத்த வினாவை மனத்துட் கொண்டு அதற்கும் விடை தருகிறான். அப்பாடல் வருமாறு:

அறம் தலை நிறுத்தி, வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித்
திறம் தெரிந்து, உலகம் பூணச் செந் நெறி செலத்தி,
தீயோர்
இறந்து உக நூறி, தக்கோர் இடர் துடைத்து, ஏக, ஈண்டுப்
பிறந்தனன் தன் பொன் - பாதம் ஏத்துவார் பிறப்பு
அறுப்பான் (5885)

இராவணன் போன்றவர்கள் ஆட்சி செய்யும் காலத்தில் ஆட்டம் கண்டுவிட்ட அறத்தை நிலைநிறுத்தவும் மக்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை அருளோடு எடுத்துக் கூறும் வேத வழிகளைப் பின்பற்றி மக்களை வாழ வைக்கவும், இதையும் மீறித் தவறான வழியில் செல்பவர்களை அழிக்கவும், அவர்களால் துன்பமுறும் நல்லோர்களைக் காக்கவும் இவ்வுலகிடைப் பிறந்துளான் ஒருவன். இவற்றையெல்லாம் அவன் எப்படிச் செய்வான் என்று நினைக்கிறாயா? தன்னுடைய அழகிய திருவடிகளைச் சரணம் என்று அடைபவர்கள் துயரத்தைப் போக்குபவனாகவும் மீட்டும் அத்துயரம் வராதபடி அவர்கள் பிறப்பையே அழிப்பவனாக வும் உள்ளான் அவன்.

இந்த எட்டுப் பாடல்களும் 'நீ யார்' என்று இராவணன் கேட்ட ஒரே வினாவிற்கு அனுமன் தந்த விடையாகும். முதன் முதலில் இராகவனால் 'சொல்லின் செல்வன்' என்று பட்டம் தரப்பெறுகிறான் அனுமன். ஆனால், பட்டம் பெற்ற நிலையில் அவன் சொல்லின் செல்வனாக இல்லை. அதற்குரிய தகுதிகள் பெற்றிருப்பினும் அச் செல்வம் வெளிப்பட வேண்டிய நிலை அப்பொழுது இல்லை. கல்வி, கேள்வி, மெய்யுணர்வு ஆகிய அனைத்தும் பெற்றிருப்பினும் இறைக்

காட்சி அல்லது இறையனுபவம் பெறாத நிலையில் ஒருவன் சொல்லின் செல்வனாக ஆகிவிட முடியாது. இராமனைத் தரிசித்த பிறகு இவையனைத்தும் நிரம்பிவிட்ட காரணத்தாலும் இராமன் திருவாயாலேயே 'சொல்லின் செல்வன்' என்ற பட்டத்தைப் பெற்றுவிட்டதாலும் பூரணத்துவம் அடைகின்றான் அனுமன். கல்வி, கேள்வி, மெய்யுணர்வு என்பவைமட்டும் இருந்தபொழுது மூவரோ, யாவரோ என வினாப் பொருளில்தான் இராமனை நினைக்க முடிந்தது. நேரிடையாகத் தரிசனம் பெற்ற பிறகு இந்த வினாக்கள் எல்லாம் அடங்கி, அரவணைத் துயிலின் நீங்கிய தேவனே அவன், இவள் கமலச் செல்வியே (5134) என்று தேற்ற ஏகாரம் கொடுத்துப் பேசும் உறுதிப்பாடு வந்துவிட்டது, அனுமனுக்கு. அதனால்தான் இறையிலக்கணத்தையும் அந்த இறையோடு உயிர்களுக்கு உள்ள தொடர்பையும், இறப்ப உயர்ந்த அவ் இறைப்பொருளின் எளிவந்த தன்மையையும் உயிர்கள் துயர் துடைக்க அப்பொருள் மேலிருந்து கீழிறங்கி வருகிறது என்பதையும் அனுமன் விரிவாகப் பேச முடிந்தது. இராவணன் மேற்கொண்டு எவ்விதமான கேள்வியும் எழுப்ப வேண்டாத முறையில் அவன் வினாக்கள் அனைத்தையும் அவன் கேளாமலேயே மனத்துள் வாங்கிக்கொண்டு அனைத்துக்கும் ஒருசேர விடை தந்தமையின் அனுமன் சொல்லின் செல்வனாக ஆகிறான். இராவணனுடைய கல்வி, தவம் முதலியவை காரணமாகத் தருக்க ரீதியில் இறை இலக்கணத்தைக் கூறினால், ஒரு வேளை அவன் நல்லறிவு பெற்றாலும் பெறக்கூடும் என்ற நல்லெண்ணத்தினால்தான் ஏனையோரிடம் பேசாமல் இராவணனிடம்மட்டும் இவ்வளவு விரிவாகப் பேசினான். நல்லூழ் இல்லாமையினாலும் அகங்காரம் மீதூர்ந்துநின்றமையாலும் இராவணன் செவிகளில் அனுமனின் கூற்றுகள் நுழையவே இல்லை.

இதற்கடுத்தபடியாக அனுமனை யாரென்று அறிந்த இராவணன், 'வாலி நலமாய் உள்ளானா?' என்று கேட்கிறான். இவ்வினாவிற்கு விடை கூறப் புகுந்த சொல்லின் செல்வன் 'வாலி இறந்தான்' என்றுமட்டும் கூறாமல், இராவணன் மனத்தின் ஆழத்தில் பொதிந்து கிடக்கும் வினாவையும்

மனத்துட் கொண்டு, "அஞ்சலை அரக்க! பார் விட்டு அந்தரம் அடைந்தான் அன்றே வெஞ்சின வாலி மீளான்; வாலும் போய் விளிந்தது அன்றே" (5888) என்று கூறுகிறான். வாலி இறந்தான் என்றால் எவ்வளவு பெரிய போர் நடந்திருக்கும் என்ற எண்ணவோட்டம் இராவணன் மனத்தில் தோன்றியிருத்தல் உறுதி. வாலியின் பலத்தை நன்கு அறிந்தவனாகிய இராவணன் இவ்வாறு நினைப்பதில் தவறில்லை. அந்த வினாவிற்கும் விடை கூறுபவன் போல 'அஞ்சனமேனியான் தன் அடுகணை ஒன்றால் மாழ்கி, துஞ்சினன் (5888)' என்று கூறுகிறான். இராமன் செலுத்தியது ஒரே கணைதான். அடுத்த கணைக்குத் தேவையே ஏற்படவில்லை என்ற கருத்தை யெல்லாம் 'ஒன்றால்' என்ற சொல்லால் கூறிய அனுமன், சொல்லின் செல்வனாகமட்டும் அல்லாமல் சொல்லின் பெருஞ்செல்வனாகவும் ஆகிவிடுகிறான்.

உண்மையை உணர்ந்துகொள்ள மறுக்கும் இராவணன் அனுமனைக் 'கொல்' என்று ஆணையிடுவதும், தூதனைக் கொல்லல் கூடாது என்று வீடணன் தடுப்பதும் அனுமன் வாலில் தீயிடும்படி இராவணன் ஆணை இடுவதும், அந்த ஆணையைத் திரிசடை மூலமாக அறிந்த பிராட்டி அக்கினி தேவனை வணங்கி, 'அனுமனைச் சுடாது ஒழிக' என்று வேண்டுவதும், சுடாத நெருப்போடு ஆகாயத்தில் கிளம்பிய அனுமன் இலங்கை முழுவதையும் சுற்றிப் பார்ப்பதையும் பிணி வீட்டு படலத்தின் இறுதிப் பகுதி குறிக்கிறது.

அடுத்துள்ளது இலங்கை எரியூட்டு படலமாகும். அனுமன் வைத்த தீயால் வணங்காத் தலையனாகிய இராவணனும் அரண்மனையை விட்டு வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டது. இது ஏன் நிகழ்ந்தது என்று அறிய விரும்பியவனுக்குக் 'குரங்கு சுட்டது' என்றனர் உடன் உறைவோர். 'அக்குரங்கைப் பற்றுக' என ஆணை தந்தான். பற்றச் சென்ற பதினாயிரவரும் மாய்ந்தொழிந்தனர். தன் பணியை முடித்த மாருதிக்கு அழிந்த அசோகவனத்தில் பிராட்டி எவ்வாறு உள்ளாளோ என்ற ஐயம் தோன்றுகிறது.

வித்தியாதரர் சிலர் வந்து 'பிராட்டி இருந்த இடத்தைச் சுற்றித் தீயின் ஆதிக்கம் செல்லவில்லை' (6003) என்று கூறவும், மன அமைதி பெற்று மகிழ்ந்த மாருதி பிராட்டியைக் காணச் சென்றான். கண்டு, அவள் திருவடிகளை வணங்கி விடை கொண்டான். இராவணனுக்குப் பணி செய்யும் திக்பாலர்களில் ஒருவனாகிய அக்கினி அனுமன் இருக்கின்ற வரையில் மிக்க தைரியத்தோடு இலங்கையைச் சுட்டான். அக்கினி உள்ளிட்ட எண்மரும் இராவணனுக்குப் பணி செய்கின்றவர்கள். ஆதலால், மாருதி விடை பெற்றுச் சென்றவுடன் இராவணன் என்ன செய்வானோ என்று அஞ்சி அக்கினி ஓடி ஒளிந்துகொண்டான் என்ற அளவில் இலங்கை எரியூட்டு படலம் முடிகிறது.

இக்காண்டத்தின் இறுதிப் படலம் திருவடி தொழுத படலமாகும். இப்பெயர் சற்று வியப்பைத் தருவதாகும். ஒரு காரியத்தைச் செய்வதனாலும் சிறப்பைப் பெறலாம். செய்யாமற்கூடச் சூழ்நிலையைப் பொறுத்துச் சிறப்பைப் பெறலாம். இப்படலப் பெயரின் நேரடிப் பொருள், இராமன் திருவடிகளை அனுமன் தொழுத படலம் என்பதாகும். இவ்வாறு, பொருள் கொள்வதற்கு இப்படலத்தின் 22ஆம் பாடல் தடையாக உள்ளது. அப்பாடல் வருமாறு:

எய்தினன் அனுமனும்; எய்தி, ஏந்தல்தன்
மொய் கழல் தொழுகிலன்; முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன், கையினன்,
வையகம் தழீஇ நெடிது இறைஞ்சி, வாழ்த்தினான் (6028)

'இராமன் திருவடிகளைத் தொழவில்லை' என்று பாடலின் இரண்டாவது அடி குறிக்கிறது. இராமன் எதிரே நின்றும் அவன் திருவடிகளை ஒருவன் தொழவில்லை என்றால், அது தவறன்றோ என்று நினைக்கத் தோன்றும். அந்த நினைப்புத் தேவையில்லை என்பதுபோலப் பாடலின் 3-ஆம், 4-ஆம் அடிகள் விளங்குகின்றன. 'புருஷகாரபூதை' என்று போற்றிச் சொல்லப்படும் தாயின் திருவடிகளை அனுமன் வணங்கினான். எனவே, இராமன் திருவடிகளை வணங்காத தால் பிழை ஒன்றும் இல்லை என்ற விளக்கத்தைத் தருகிறான்

கவிஞன். மேலும், அனுமன் செய்த இச் செயலைக் கொண்டே இராமன் சில முடிவுகளை அறிந்துகொள்கிறான். அவை வருமாறு:

திண் திறல் அவன் செயல் தெரிய நோக்கினான்;
'வண்டு உறை ஓதியும் வலியள்; மற்று இவன்
கண்டதும் உண்டு; அவள் கற்பும் நன்று' எனக்
கொண்டனன், குறிப்பினால் உணரும் கொள்கையான்.
(6029)

ஆங்கு அவன் செய்கையே அளவை ஆம் எனா,
ஓங்கிய உணர்வினால், விளைந்தது உன்னினான்; (6030)

அவன் செயலைக் கூர்ந்து கவனித்தவனாகிய இராகவன், அனுமன் வாய் திறந்து பேசாமல் இருக்கும்பொழுது (1) வண்டு உறை ஓதியும் (சீதை) நன்றாக உள்ளாள். (2) இவன் அவளை உறுதியாகப் பார்த்துவிட்டான். (3) அவள் கற்பும் நன்று என்ற மூன்று செய்திகளைக் குறிப்பில் உணரும் இராகவன் புரிந்துகொண்டான். இதில் ஒரு சிறப்பு என்னவென்றால் அனுமன், இராகவன் ஆகிய இருவர் எதிரெதிராக உள்ளனர். அனுமனோ சொல்லின் செல்வன்; 'வடசொற் கடந்து தென்சொற் கடற்கு எல்லை தேர்ந்தவன்' இராமன். எனவே, அவனும் சொல்லின் செல்வன் என்பதாயிற்று. இரண்டு சொல்லின் செல்வர்கள் எதிரெதிராக உள்ளனர். ஆனால், யாரும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ஏன்? குறிப்பில் உணரும் ஆற்றலை உடையவன் இராகவன். எதனையும் குறிப்பால் உணர்த்தக் கூடியவன் அனுமன். எனவே, தம்பால் உள்ள சொற்களாகிய செல்வத்தைச் செலவழிக்காமலேயே செலவழிக்கும் பயனை இருவரும் அடைந்துவிட்டனர். ஒரு மாபெரும் நிகழ்ச்சியின் முடிவு என்னவாயிற்று என்று அறிந்துகொள்ள மனித மனம் துடித்துக்கொண்டிருக்கும். அந்த முடிவை அறிவதற்கு முன்னர் அது எப்படி நிகழ்ந்தது என்று விரிவாகப் பேசி, அதன் பிறகு முடிவைச் சொல்வது பல சமயங்களில் பொருத்த மற்றதாகி விடும். முடிவை அறியத் துடிக்கும் மன நிலையை அமைதிப் படுத்த அம்முடிவைச் சுருக்கமாக முதலில் சொல்லிவிட

வேண்டும். நன்முடிவு என்று அறிந்தவுடன் மனம் கொந்தளிப்பு நீங்கி, அமைதி நிலையை அடையும். அமைதி நிலை அடைந்த பிறகு அசைபோடும் மனநிலையில் முடிவு எவ்வாறு நிகழ்ந்தது என்பதை விரிவாக அறிய ஆவல் பிறக்கும். மனித மனவியலை நன்கு அறிந்தவர்கள் இவ்வாறுதான் செய்வர். மனித மனத்தின் ஆழத்தையெல்லாம் கண்டுணர்ந்த கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன் இந்த முறையைக் கையாண்டு முடிவை அறியத் துடிக்கும் இராமனுக்கு மூன்று முடிவுகளையும் குறிப்பாலேயே அனுமன் உரைத்துவிட்டான். அது நிகழ்ந்தபிறகு அமைதி அடைந்து அசைபோடும் மனநிலையிலுள்ள இராமனுக்கு 6031 முதல் 6051 வரை உள்ள இருபத்தொரு பாடல்களில் அங்கு நிகழ்ந்தவற்றை விரிவாகக் கூறுகிறான், அனுமன். இக் கூற்றுக்களில் ஒரு செய்தியைமட்டும் மூன்று முறை திருப்பித் திருப்பிச் சொல்லுகிறான். "சோலை அங்கு அதனில் உம்பி புல்லினால் தொடுத்த தூய சாலையில் இருந்தாள் (6037), மண்ணொடும் கொண்டு போனான் - வான் உயர் கற்பினாள் தன் புண்ணிய மேனி தீண்ட அஞ்சுவான்" (6036), "தீண்டிலன் என்னும் செய்கை..... வாய்மையால் உணர்தி மன்னோ" (6039). சொல்லின் செல்வன் ஒரே செய்தியை மூன்று முறை சொல்லக் காரணம் உண்டு. மூல நூலாகிய வான்மீகத்தில் சீதையை இராவணன் எடுத்துச்சென்ற முறை வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது. அது தமிழ் மரபுக்கு ஒத்துவராது என்பதால் பர்ணசாலையோடு எடுத்துச்சென்றான் என்று கம்பன் மாற்றி விட்டான் என்றாலும், இராவணன் போன்ற ஒரு கொடியவன் ஒரு அபலைப் பெண்ணைப் பலாத்காரம் செய்யாமல் இருந்திருப்பானா என்ற ஐயம் மனத்தின் ஆழத்தில் தோன்றுவது இயல்பு. அவன் பலாத்காரம் செய்யக் கூடியவன்தான். அவ்வாறு செய்யாமைக்குக் காரணம் பலாத்காரம் செய்தால் அவன் அழிதல் உறுதி என்ற சாபம் ஒன்று உண்டு என்று (6038) கூறுவதன்மூலம் பர்ணசாலை யோடு எடுத்துச்சென்றான் என்று கதையை மாற்றியதற்கு அமைதி தேடுகிறான் கம்பன். மனித மனத்தின் நெளிவு சுளிவுகளை அறிந்தவ னாகிய அனுமன் இக்காரணத்தைக் கூறாவிடின் கேட்பவனுடைய மனத்தில் உள்ள நெருடலைத்

தவிர்க்க முடியாது என்பதை நன்கு அறிந்தவன் ஆதலால் இவ் விளக்கத்தைத் தருகிறான்.

பிணி வீட்டு படலத்தில் கற்றறிவு உடையவனாகிய இராவணனிடம் இறை இலக்கணத்தை விரிவாகப் பேசுவது மூலமும், இப்படலத்தில் பிராட்டியின் நிலையை இருபது பாடல்களில் விரிவாகப் பேசுவது மூலமும் தான் சொல்லின் செல்வன் என்பதை நிலைநிறுத்திவிட்டான். செலவழிக்க வேண்டிய இடத்தில் இறுக்கிப் பிடிப்பதுதான் செல்வம் உடையோர்கட்குச் சிறந்த இலக்கணம் ஆகும். இந்த இரண்டு இடங்களிலும் மிகத் தாராளமாகச் சொற்களைப் பயன்படுத்த வேண்டிய காரணம் இருந்தமையால் சொல்லின் செல்வன் அச்சொற் செல்வத்தை வாரி வழங்கினான். 'நீ யார்' என்ற ஒரு கேள்விக்கு 32 வரிகளில் விடை கூறினான். ஒரு கேள்வியும் இராமன் கேட்காத போதும்கூட 80 வரிகளில் விளக்கம் தந்தான். செல்வத்தின் மற்றொரு சிறப்பையும் இங்கே கருதல் வேண்டும். செல்வத்தைப் பெறுபவர் அதன்பிறகு எதுவும் வேண்டாம் என்று சொல்லுகின்றளவில் வழங்கப்படவேண்டும். அதேபோல, இராவணன், இராமன் இருவருக்கும் தன் சொற் செல்வத்தை வழங்கினான் அனுமன். அந்த இருவருமே மேலும் விளக்கம் வேண்டி ஒரு கேள்வியைக் கூடக் கேட்காத அளவிற்கு அச்செல்வம் வழங்கப்பட்டது.

இவ்வளவு விரிவாகச் சொற்செல்வத்தை வழங்கிய அனுமன் மற்றோர் இடத்தில் சொற்களை அளந்து பேசுகிறான். நடந்தவற்றை அறிய இராமன் எவ்வளவு ஆவலாக இருந்தானோ அவ்வளவு ஆவலுடன் மயேந்திர மலையில் தங்கியிருந்த அங்கதன், சாம்பன் முதலானவர்களிடம் அவர்கள் விருப்பத்தை முழுவதும் பூர்த்தி செய்யாமல் பாதியில் நிறுத்திவிடுகிறான். அது ஏன் என்று கம்பனே பேசுகிறான்.

விழுப்புண்களோடு மீண்டுவந்த அனுமனை நடந்த வற்றைக் கூறுமாறு வேண்டி நிற்கின்றனர் அங்கதன் முதலாயினோர். அனுமன் என்ன சொன்னான் என்று கவிஞன் பேசுகிறான். சென்றது முதலா வந்தது இறுதியாகச்

செப்பற்பாலை (6014) என்று கேட்டுக்கொண்டனர். அதற்கு விடையாக, அனுமன் பேசியவற்றைக் கவிஞன் தன் சொற்களில் கூறுகிறான். அதற்கு ஓர் காரணம் உண்டு. சிலவற்றைச் சொல்லி, சிலவற்றைச் சொல்லாது விட்டான் அனுமன். ஏன் சிலவற்றைச் சொல்லவில்லை என்றால் அவற்றைச் சொல்லியிருப்பின் அனுமன் தன் பெருமையைத் தானே கூறியதாக முடியும்.

ஆண்தகை தேவி உள்ளத்து அருந்தவம் அமையச் சொல்லி,
பூண்டபேர் அடையாளம் கைக் கொண்டதும் புகன்று, போரில்
நீண்டவாள் அரக்கரோடு நிகழ்ந்ததும், நெருப்புச் சிந்தி
மீண்டதும், விளம்பான் - தான் தன் வெற்றியை உரைப்ப வெள்கி (6015)

தன் பெருமையைச் சொல்ல நாணமடைந்தான் அனுமன். எனினும், அவன் கூறியவற்றைக் கேட்கின்றவர்கள் அங்கதன், சாம்பவன் முதலியோர் ஆதலின் அவன் கூறாதவற்றையும் தம் நுண்ணறிவால் அறிந்துகொண்டதாக அவர்களே பேசுகின்றனர்.

'பொருதமை புண்ணே சொல்ல, வென்றமை போந்த தன்மை
உரை செய, ஊர் தீ இட்டது ஓங்கு இரும் புகையே ஓத,
கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்ட,
தெரிதர உணர்ந்தேம்; பின்னர், என் இனிச் செய்தும்? என்றார் (6016)

விரிவான பேச்சுகளில் ஒரு வரன்முறை இருப்பதைக் காணமுடியும். அங்கு நிகழ்ந்தவற்றை யெல்லாம் சொல்லி முடித்து உடனே போருக்குப் புறப்பட வேண்டும் என்று கூறி முடிக்க வேண்டியது அவனுடைய கடமையாகும். ஆனால், இதில் ஒரு சிக்கல் உள்ளது. சுக்கிரீவனுக்குத் தான், அமைச்சனே தவிர இராமனுக்குத் தொண்டனே ஆவான். ஒரு தொண்டன் தலைவனைப் பார்த்து 'நீ உடனடியாகப் போருக்குப் புறப்பட வேண்டும்' என்று கூறுவது அக்காலத்தில்

நினைத்துப் பார்ப்பதற்கு அரிதாகும். எனவே, அனுமன் பிராட்டியின் கூற்றாக வைத்து இராமன் சற்றும் தாமதியாமல் போருக்கு ' எழ வேண்டுமென்ற கருத்தைப் புரிந்துகொள்ளுமாறு அவன் கூறும் இருபது பாடல்களில் 20-ஆவது பாடலில் கூறுகின்றான்:

"திங்கள் ஒன்று இருப்பென் இன்னே; திரு உளம் தீர்ந்த பின்னை,
மங்குவென் உயிரோடு" என்று, உன் மலரடி சென்னி வைத்தாள் **(6051)**

சுந்தர காண்டத்தில் இறுதிப் படலத்தில் அவதார நோக்கம் நிறைவேற இராமனைப் புறப்படச் செய்பவன் அனுமனே ஆவான். ஒரு தொண்டன் தனக்கென வாழாமல் பிறர்க்கெனவே வாழ்பவன். தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவனே - முயல்பவனே தொண்டனாவான். சுந்தர காண்டம் முழுதும் வியாபித்திருக்கின்ற சொற்கள், செயல்கள் அனைத்தையும் கோவைப்படுத்தி ஆழ்ந்து சிந்தித்தால் அவனுக்கென அவன் சொல்லிய சொல்லோ, மேற்கொண்ட செயலோ ஒன்றுகூட இல்லையென்பது தெரியும். கடலைத் தாண்டினான். திருவடி தொழுதான். இவ் இரண்டும் யாருக்காகச் செய்தான்? அவன் அடையவேண்டியது எதுவுமே இல்லை. அவன் வேண்டும் என்று விரும்பியது எதுவும் இல்லை. எனவே, கடல் தாவுதலும் பிராட்டியைக் காணுதலும் அக்ககுமாரன் முதலானாரோடு போர் புரிதலும், அயன் படையால் கட்டுண்ணலும் இராவணனிடம் பேசுதலும், இலங்கை எரியூட்டுதலும், இறுதியாக வந்து இராகவனிடம் வந்து சீதையிருக்கும் திசைநோக்கித் திருவடி தொழுதலும் பிறர் பொருட்டாகச் செய்த தொண்டுகளே ஆகும். தீயோர் இறந்து உக நூறி, தக்கோர் துயர் துடைக்க மானுட வடிவு தாங்கி வந்த பரம்பொருள் எவ்வாறு கைம்மாறு கருதாமல் இப்பணிகளை மேற்கொண்டதோ, அப்படியே அப் பரம்பொருளிடத்தில் அடிமை பூண்ட அனுமனின் தொண்டும் அமைந்திருக்கக் காணலாம்.

சிறையிருந்தாள் ஏற்றம் கூறியது சுந்தர காண்டம் என்பர். உண்மைதான். அதில் எள் அளவும் சந்தேகம் இல்லை. அந்த

ஏற்றத்தைப் பிறர் அறியச் செய்தவன் யார்? அனுமன் இல்லையானால், சிறை இருந்தாள் ஏற்றத்தைப் பரம் பொருளைத் தவிர வேறு யாரும் அ றிந்திருக்க முடியாது. எனவே, அனுமன் பெருமையைக் கூற வந்த கவிஞன்,

"செவிக்குத் தேன் என இராகவன் புகழினைத் திருத்தும்
கவிக்கு நாயகன்.... (4966)

என்று கூறுவது வெற்றுரையன்று. சுந்தர காண்டத்தை முடித்த பிறகு கம்பன் பாடலைச் சற்று மாற்றிச் 'செவிக்குத் தேன் எனச் சீதையின் புகழைத் திருத்தும் கவிக்கு நாயகன்' என்று சொல்லலாம் போல் இருக்கிறது. சிறை யிருந்தாள் ஏற்றத்தைக் கூறுவதா? அவ் ஏற்றத்தை நாம் அறியுமாறு செய்த அனுமனைப் புகழ்வதா? தெரியவில்லை. ஆனால் ஒன்று கூறலாம்போல் தோன்றுகிறது. பரம்பொருளின் துணையாகிய பிராட்டி சிறையிருந்ததிலோ, இராவணன் கொட்டத்தை அடக்கித் தன்னைப் பன்முறை வீழ்ந்து வணங்குமாறு செய்ததோ வியப்பிற்குரியதன்று. காரணம், அவள் பரம் பொருளின் ஒரு கூறு. தன் பெருமை தான் - அறியாப் பரம் பொருளின், பிராட்டியின் பெருமையை எடுத்துக் கூற ஒரு தொண்டன் வேண்டும். அப் பரம்பொருளை உணர்தற்குரிய பர ஞானம், அவ்விலக்கணங்களை ஓரளவு புரிந்துகொள்ளக் கூடிய மெய்யறிவு, புரிந்துகொண்டாலும் அதை எடுத்துச் சொல்லக்கூடிய கல்வி, கேள்வி, எடுத்துச்சொல்லும் ஆற்றல் (சொல்வன்மை) - இவற்றை முற்றிலுமாகப் பெற்ற ஒருவனே, இராகவன், பிராட்டி இருவர் புகழினையும் திருத்த முடியும். திருத்துதல் என்ற சொல்லுக்குப் பக்குவமாகத் தயாரித்து வைப்பது என்பது பொருளாகும். "சமையலுக்குக் காய்கறி களைத் திருத்தியாய் விட்டதா?" என்று இன்றும் வழங்கும் சொற்றொடர் இப்பொருளை விளக்கும். இவை யெல்லாம் இருந்தும்கூட அகங்கார, மமகாரம் ஆகிய இருள் சூழ்ந்திருந் தால், இப்பணியைச் செய்ய இயலாது. எனவே, இவை இரண்டையும் சுட்டெரித்தவனாக இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் மனத்துட் கொண்ட கம்பநாடன் கிட்கிந்தா காண்டம் தொடங்கிச் சுந்தர காண்டம் முழுவதிலும், யுத்த காண்டத்தில் சிற்சில இடங்களிலும்

அனுமனைப் பற்றிக் குறிப்பிடுகிறான். அனுமனைப்பற்றி ஒரே இடத்தில் பல பாடல்களாகக் கூறும்பொழுது அதனை முழுவதும் மனத்தில் வாங்கிக் கொள்ள முடியாது. அதில் சில பகுதிகள் நம் மனத்தை அதிகம் கவர்வதால் பிற பகுதிகளை மனம் ஏற்றுக்கொள்வதில்லை. இதனை நன்கு அறிந்த புலவன் அப்பாத்திரம் வரும் இடங்களிலெல்லாம் சில சொற்களாலும், சில தொடர்களாலும் அப்பாத்திரப் பண்பைக் கூறிச்செல்வான். சொல்லப்பட்ட நிகழ்ச்சிக்கும் அதில் பங்கு கொண்ட பாத்திரத்திற்கும் கவிஞன் தரும் அடைமொழி வைரம் பதித்த பொன்போல் அப்பாத்திரத்தை விளக்கப் பயன்படுகிறது. உதாரணத்திற்குச் சில தொடர்களை இங்கே காணலாம்:

கல்லாத கலையும் வேதக் கடலுமே இல்லை (3768)
வன் திறல் மாருதி (3928)
வன்துணை வயிரத் திண்தோள் மாருதி (4328)
கூற்றும் உட்க வாழ்வா(ன்) (4806)
அரி உருவான ஆண்தகை (5871)
நூற் பெருங்கடல் நுனித்துணர் கேள்வியான் (5040)
செறி பெருங் கேள்வியான் (6447)
நேர் இலா அறிவன் (6447)
நவைபடா ஞானமே, கோட்படாப் பதமே (குரக்கு உரு) (3783)
தருமத்தின் தனிமை தீர்ப்பான் (3181)
அறத்துக்கு ஆங்கொரு துணையென நின்ற அனுமன் (5803)
செவ்வழி உள்ளத்தான் (3764)
கோது இல் சிந்தை அனுமன் (4294)
அழுங்கா மனத்து அண்ணல் (4791)
நீதி வல்லோன் (4478)
பழி இல்லான் (4923)
மெய்ம்மை தொடர்ந்தோன் (5422)

அனைத்தும் இருந்தும்கூடத் தான் பெறும் இறையனுபவத்தைத் தன்னுடைய முன்னேற்றத்திற்குமட்டும் பயன்படுத்து

பவனாக இருந்துவிட்டால் அவனால் பிறர் பயன் அடைய முடியாது. இவை யனைத்தையும் பெற்ற ஒருவன் தன்னலத்தைச் சுட்ட தொண்டனாக இருக்கவேண்டும். இத்துணைப் பண்புகளையும் ஒரே பாத்திரத்திற்கு ஏற்றி, அனுமன் என்ற பெயரில் உலவவிடுகிறான் கம்பநாடன். மனிதப் பண்பையும் தாண்டி நிற்கும் இவ் அனைத்தையும் ஒரு குரங்குப் பாத்திரத்தின்மேல் ஏற்றி உலவவிட்ட கம்பனை எவ்வாறு புகழ்வது என்று தெரியவில்லை. 'தொண்டு' என்ற ஒரு சொல்லின் முழு வடிவு ஆக அனுமன் படைக்கப் படுகிறான். தொண்டனிடத்து அகப்பட்டுக்கொள்ளும் பரம் பொருள்கூட அவனை விட்டு நீங்காதவ னாகிறான். உலக இலக்கியங்களில் தொண்டு என்ற ஒரு பண்புக்கு இத்தகைய ஒரு மாபெரும் வடிவம் கொடுத்த கவிஞர்கள் கம்பன் தவிர யாரும் இலர் என்பது கண்கூடு.

# யுத்த காண்டம்

*கம்பன் பாடிய இராமகாதை, வான்மீகியை அடியொற்றி ஆறு காண்டங்களாகப் பாடப்பெற்றுள்ளது என்பதை முன்னரே கண்டோம். ஆறாவதாக உள்ளதும், அளவால் முன்னர் உள்ள ஐந்து காண்டங்களுக்கும் சமமாக உள்ளதும் யுத்த காண்டம் ஆகும்.*

*கம்பனுடைய இராமகாதைப் பாடல்கள் மிகைப் பாடல்களை நீக்கிப் பார்த்தால் மொத்தம் உள்ளது, சென்னைக் கம்பன் கழகம் பதிப்பின்படி 10368 ஆகும். இதில் முதல் ஐந்து காண்டங்களின் பாடல் தொகை 6058 ஆகும். யுத்த காண்டம்மட்டும் 4310 ஆகும். என்றாலும், ஆரண்ய காண்டத்தில் வரும் கரன்வதை 192 பாடல்களும், சுந்தர காண்டத்தில் வரும் கிங்கரர்வதை முதல் பாசப் படலம் முடிய உள்ள பாடல்கள் 316 ஆகும். இவற்றையும் யுத்த காண்ட எண்ணிக்கையோடு சேர்த்தால், போர்பற்றிக் கூறும் பாடல்கள் மொத்தம் 4310 + 192 + 316 = 4818 பாடல்கள் ஆகும்.*

*இராமனுடைய சிறப்பையும், பிராட்டியின் சிறப்பையும் கூறவந்த கம்பநாடன், காப்பியத்தில் உள்ள 10368 பாடல்களில், போருக்கென்று 4818 பாடல்கள் பாடுவது தேவையா? பொருத்தமா? என்று சிந்திப்பது பொருத்தமுடையதாகும். சுந்தர காண்டத்தில் உள்ள போர்பற்றிக் கூறும் 316 பாடல்களில் போரிடுபவன் அனுமனே ஆவான். இவ்வளவு விரிவாகப் போர்பற்றிப் பாடக் காரணம் என்ன என்ற வினாவை எழுப்பி விடை காண்பது பயனுடையதாகும். இந்த நிலையில் கம்பன் தோன்றிய காலம், அன்றைய தமிழகத்தின் நிலை, அரசியல் சூழ்நிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, இந்த ஆராய்ச்சியைத் தொடங்க வேண்டும். பல்லவப் பேரரசு வீழ்ச்சி அடைந்த நிலையில், தமிழர்களாகிய சோழர்கள் நிலைபேறுடைய ஓர் அரசை நிறுவ முனைந்த காலம் அது. விஜயாலயன், முதல் பராந்தகன்*

என்பவர்களுடைய காலம்தான் சோழப் பேரரசின் அங்குரம் (முளை) தலையெடுத்த காலமாகும். தமிழர் அல்லாத பல்லவர்கள் வீழ்ச்சி அடைந்து, தமிழர்களாகிய சோழர்கள் தலையெடுத்த காலம், தமிழகத்தின் தென்கோடியில் இருந்த பாண்டியப் பேரரசும் நிலை குலைந்துவிட்ட காலம். அந்நிலையில், சோழர்கள் தம் நாட்டைப் பெரிதாக்கி நிலையான ஒரு பேரரசை நிறுவ வேண்டும் என்று கம்பன் நினைக்கிறான். வடபுறத்தில் கீழை, மேலைச் சாளுக்கியர்கள் ஆதிக்கம் இருந்துவருகின்ற காலம். காஞ்சியில் தொடங்கி கன்னியாகுமரிவரையில் வலுவான அரசாட்சி எதுவும் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் சோழர்கள் போர் செய்துதான் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்ப வேண்டும் என்பதைக் கம்பன் உணருகிறான். போர் ஒன்றுதான் வழி என்ற முடிவுக்கு வந்தவுடன் சோழர்கள் எவ்வாறு போரை மேற்கொள்ள வேண்டும் என்பதை விரிவாகச் சொல்ல விரும்புகிறான்.

இந்த நிலையில் பழைய புறநானூற்றுப் பாடல் ஒன்று.கம்பன் மனத்தில் நிழலாடுகின்றது. அக்காலத்தில் யானை, குதிரை, தேர், காலாள் என்று அரசனுடைய படைகள் நால்வகையாகப் பிரிந்து நின்றன. இந்த நால்வகைப் படையும், யாரிடம் அளவாலும், தரத்தாலும் மிகுந்துள்ளதோ அவர்களே வெற்றிக் கனியை எட்டிப்பிடிக்க முடியும் என்று பலரும் நம்பினர். இன்னும் சொல்லப்போனால் கருவிகள், எந்திரங்கள் முதலிய படைக்கருவிகளை அதிகம் பெற்றவர்களே வெற்றி எய்துவர் என்று இன்றும் நம்பப்படுகிறது. இந்த நம்பிக்கையில் மிகப் பெரிய ஓட்டை இருப்பதை அன்றும், இன்றும் பலரும் அறிந்திருக்கவில்லை. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தோன்றிய நம் முன்னோர் இதனை நன்கு அறிந்திருந்தனர் என்பதனைப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் வரிகள் நன்கு விளக்கும்.

"கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல்மறவருமென
நான்குடன் மாண்டது ஆயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" (புறம் - 55)

இப்பாடலின்படி, ஒப்பற்ற யானைப்படையும், விரைவில் பாய்கின்ற குதிரைப் படையும், நெடிய கொடி கட்டப்பட்ட தேர்ப்படையும், வைரம் பாய்ந்த நெஞ்சுடைய காலாட்படையும் என்ற நால்வகைப் படையுடன் உன் ஆட்சி, மாட்சிமை பெற்றிருந்தாலும் (மாண்டது ஆயினும்) நீ பெறும் வெற்றி இவற்றால் அன்று (பின்னர் எது எனில்) மாட்சிமைப்பட்ட (மாண்ட) அறத்தையும், அறவழியையும் அடிப்படையாகக் கொண்டே ஆகும்.

இப்பாடல், கம்பன் மனத்தில் ஒரு தூண்டுதலை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இராவணனுடைய படைபலம், வரபலம், ஆயுதபலம் என்பவற்றிற்கு ஈடு இணையே இல்லை. போதாததற்கு இவை அனைத்தையும் உடைய இந்திரசித்தன், இராமனும் கைவிதிர்க்கும்படியான கும்பகர்ணன் ஆகியோரின் துணைபலம் இவை ஒருபுறம். இராவணன் பலமனைத்தும் நான்குடன் மாண்டதாயினும், அங்கே அறம் என்பதே இல்லை. அறநெறிச் செல்லும் பழக்கத்தை அரக்கர் கோமான் என்றோ கை விட்டுவிட்டான்.

இவனை எதிர்த்து நிற்கும் இராகவன் படை குரங்குகளால் ஆனது, என்றாலும், அறமும், அறநெறியும் இராமனிடம் உள்ளன. அதனால் வெற்றி யாருக்கு என்பது தெரிந்த விஷயமே.

புறநானூற்றின் இக்கருத்தை, வளர்ந்துவரும் சோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும். அறிந்து, அதன்படி நடந்தாலொழிய அவர்கள் பெறும் வெற்றிகள் நிலைபெறாமல் போய்விடும் என்பதை அழுத்தமாகக் கூற விரும்புகிறான் கம்பன். அதனாலேயே, காப்பிய நாயகனாகிய இராமனை அறத்தின் மூர்த்தி, அற ஆழியன், அறத்தின் நாயகன் என்றெல்லாம் சந்தர்ப்பம் நேரும்பொழுதெல்லாம் இந்த அடைமொழியை இராமனுக்குக் கொடுத்துக்கொண்டே வருகிறான். தாடகை வதத்தில் தொடங்கி, முதற்போர் புரிகின்ற வரையில் இராமன் செய்த போர்கள் பலப்பல வாகும். ஆயிரக் கணக்கான படைவீரர்களைக் கொண்ட கர தூடணர்களை வென்றது முதல், தனியாக நின்ற விராதனை

வதைத்தது வரை, கும்பன் முதலானவர்களையும் வென்றது வரை இராமனுக்குத் துணையாக நின்றது அறம் ஒன்று மட்டுமே ஆகும்.

இதைக் கூறவந்த கம்பநாடன் தான் மட்டும் இக்கருத்தைக் கூறுவதாக இல்லாமல், இராமன் கூற்றாகவும் இக்கருத்தை வலியுறுத்துகிறான். முதற் போரில் வெகு வீரத்துடன் வந்த இராவணன், வீரமும் களத்தே போட்டு வெறுங்கையுடன் நிற்கிறான். அவனைப் பார்த்து அறத்தின் மூர்த்தியாகிய இராமன் கூறும் சொற்கள் நினைவில் பதிக்க வேண்டியவை.

'அறத்தினால் அன்றி, அமரர்க்கும் அருஞ்சமம் கடத்தல்
மறத்தினால் அரிது என்பது மனத்திடை வலித்தி'

(7267)

யுத்த காண்டத்திற்கு 5000 பாடல்களைக் கம்பன் ஒதுக்கியதின் இரகசியம் இதுவே ஆகும். இனி, அகிம்சையும், பொறுமையும் அனைவராலும் கைக் கொள்ளப்பட வேண்டும்.,வன்முறை தவிர்க்கப்படவேண்டும் என்று பெரிதும் வலியுறுத்தப்பெறும் இக்காலத்திற்குக் கம்பநாடன் காப்பியமே தேவையா என்று கேட்பவர்கள் சிலர் உண்டு. எல்லாப் பொருள்களையும் வன்முறை என்று பொருள் செய்வதால் வரும் தவறான முடிவாகும் இது. ஒருவருடைய முதுகிலோ, மார்பிலோ ஒரு சிறிய கத்தியால் கிழித்தால், அது வன்முறை என்றும், கொலைக் குற்றம் என்றும் கூறப்படும். ஆனால், அதைவிடப் பெரிய கத்தியைக் கொண்டு ஒருவருடைய வயிற்றைக் கிழித்து அறுவை மருத்துவம் செய்கின்றார் ஒரு மருத்துவர். அதை யாரும் வன்முறை என்றோ, கொலை என்றோ கூறுவதில்லை. ஒருவரை வாழவைப்பதற்காக அறுவை மருத்துவம் செய்யப்படுகின்றது. மக்களைக் கொடுமைப்படுத்தி, தன்னலம் ஒன்றிற்காகவே பிறர்க்குத் துயர் விளைவிக்கும் ஒருவனை, அவன் அரசனாயினும் சரி, ஆண்டியாயினும் சரி, கொல்வது அறமே அன்றி, மறம் அன்று. அபலைப் பெண்கட்கும், குழந்தைகட்கும் கொடுமை இழைக்கப்பட்டபோது ஆண்மை உடையவர்கள் அனைவரும் கொடுமை இழைப்பவர்களை வாளேந்திக் கொல்வது அறமே

என்றும், அதுவும் அகிம்சையே என்றும் மகாத்மா காந்தி கூறியதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

இதனை நன்கு புரிந்துகொண்டால், இராமன் செய்த போரும், பாண்டவர்கள் செய்த போரும் வன்முறை அன்று என்பதை அறிய முடியும். செயல் ஒன்றைமட்டும் வைத்துக்கொண்டு, அதனை வன்முறை என்றும், கொலை என்றும் பெயர் சூட்டத் தொடங்கினால், அறுவை மருத்துவமும் கொலையாகவே கருதப்பட நேரிடும். அறத்தின் அடிப்படையில் தீமையை எதிர்த்துப் போராடுகையில் தன்னலம் என்பது ஒரு சிறிதும் தலைகாட்டக் கூடாது. போருக்குக் காரணம் தன்னலமாக இருக்குமேயானால் அங்கே அறத்தின் துணை கிடைக்காது. இராமன் செய்த போர்கள் அனைத்தும், தன்னைச் சரணடைந்த முனிவர்களையும் ஏனைய மனிதர்களையும் காக்க வேண்டிச் செய்யப்பட்ட போர்களே ஆகும். எனவே, வன்முறை தவிர்ப்பது என்பது வேறு. அறத்திற்காகப் போராடுவது என்பது வேறு. அன்றியும் சமுதாயத் தலைவனாகவும், அரசனாகவும் இருப்பவனுக்குச் சில தனிப்பட்ட கடமைகள் உண்டு. அறத்தையும், நீதியையும் நிலைநாட்டத் தனி ஒருவனையோ அல்லது ஒரு கூட்டத்தையோ போரிட்டுக் கொல்வது அரசனுடைய கடமையாகும். இதன் அற அடிப்படையைக் கூறவந்த வள்ளுவர்,

> 'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
> களைகட் டதனொடு நேர்'. (குறள் - 550)

என்றார்.

எனவே, பிறர் துயர் துடைக்க இராமன் செய்த போர் வன்முறை அன்று என்பதனை மனத்தில் கொள்ள வேண்டும். வன்முறைக்கு அறத்தின் உதவி கிட்டாது என்பதனையும் அறிதல் வேண்டும்.

வளர்ந்துவரும் சோழப் பேரரசுக்கு - போர்புரிந்து, தன் நாட்டை விரிவுபடுத்த வேண்டிய சோழப் பேரரசுக்கு - சாளுக்கியர், இலங்கையர் என்ற தென் வட எல்லைகளில்

பகைவர்களால் சூழப்பட்ட சோழப் பேரரசுக்கு மிக இன்றியமையாததாகிய போர்பற்றிக் கூற வேண்டும் என்று நினைக்கிறான் கம்பன். விஜயாலயன், பராந்தகன் காலத்தில், பரஞ்சோதியார் போன்ற போர்த்தலைமை பூணும் வீரர்கள் யாரும் இல்லை. அப்படிப்பட்ட நிலையில், போர் என்றால் என்ன, அதை எதற்காக, எப்பொழுது, எந்த முறையில் மேற்கொள்ள வேண்டும், போர் நடக்கையில், கைக்கொள்ள வேண்டிய செயல் முறைகள் யாவை - என்பவற்றையெல்லாம் இராமகாதையை அடித்தளமாகக் கொண்டு விளக்க முற்படுகின்றான் கம்பன். போர்த் தந்திரங்கள்பற்றி, இவ்வளவு விரிவாகப் பாடுவதற்கு அவன் யாரிடம் இக்கலை பயின்றான் என்று தெரியவில்லை என்றாலும், போரின் அடிப்படை அறமாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தத் தவறவில்லை.

சிலம்பு, சிந்தாமணி, உதயணன் கதை என்பவற்றில், போர் பற்றிய செய்திகள் உளவேனும், கம்பநாடனுடைய யுத்த காண்டத்திற்கு அவை ஈடு இணையாக மாட்டா.

யுத்த காண்டத்தில் கடல் காண் படலம் முதல், விடை கொடுத்த படலம் ஈறாக, 39 படலங்கள் உள்ளன. முடிசூட்டு படலம், விடை கொடுத்த படலம் போக எஞ்சிய 37ம் போரும், போர்த் தொடர்புடைய செய்திகளும் கொண்டவை ஆகும். இவற்றுள் மகுட பங்கப் படலத்திலேயே போர் தொடங்கிவிட்டது என்பதை அறிய முடிகிறது. மகுட பங்கத்திற்கும், முதற்போருக்கும் இடையே அங்கதன் தூதுப் படலத்தை வைப்பதன் மூலம் அறப்போர் என்றால் என்ன என்பதைக் காட்டுகிறான் கவிஞன்.

ஒரு வகையில் நோக்குமிடத்தும் போர் தொடங்கி விட்டது என்றாலும், அங்கதனைத் தூது அனுப்ப வேண்டும் என்று இராமன் சொன்னபொழுது வலுவான காரணங்கள் பலவற்றைக் காட்டி, அச்செயல் கூடாது என இலக்குவன் மறுக்கிறான். சிறந்தது போரே என்றான் இலக்குவன்; சேவகன் முறுவல் செய்து விடை கூறுகிறான்.

"அயர்திதிலென்; முடிவும் அஃதே; ஆயினும், அறிஞர் ஆய்ந்த
நயத்துறை நூலின் நீதி நாம் துறந்து அமைதல் நன்றோ?
புயத்துறை வலியரேனும், பொறையொடும் பொருந்தி வாழ்தல்
சயத்துறை; அறனும் அஃதே' என்று இவை சமையச் சொன்னான்" (6981)

எந்த நிலையிலும், மனைவியை இழந்த நிலையிலும் கூட - இழப்பித்தவனைத் தண்டிக்க வந்த நிலையிலும் கூட அறநெறி பிறழாதவன் இராகவன் என்பதைக் காட்டுகிறான், கம்பன். வருங்காலச் சமுதாயத்திற்கும், வளர்ந்துவரும் சோழப் பேரரசிற்கும் அறவுரை கூறவந்த கம்பன் வாய்ப்புக் கிடைக்கும்தோறும், 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' (புறம் - 55) என்பதை நினைவூட்டத் தவறவில்லை.

கரன், கும்பகர்ணன், படைத்தலைவர், அதிகாயன், இந்திர சித்தன், மகரக் கண்ணன், இராவணன் ஆகிய இவ்வனைவரும் தனித்தனியே இராமனுடன் போர் செய்தனர். இந்தப் போர்களில், ஒரு போரைப்போல மற்றொரு போர் நிகழ்ந்ததாகக் கவிஞன் பாடவில்லை. அதிலும் ஒரு வியப்பு என்னவென்றால், எதிரிகள் தாம் தனித்தனியாக வந்து போரிட்டனரே தவிர, அனைத்துப் போரிலும் இப்பக்கத்தில் இராம, இலக்குவர் என்ற இருவர் மட்டுமே போர்புரிந்தனர். கரன் முதல் இராவணன் வரை உள்ளவர்கள் பல்வேறு படைக்கலங்களைக் கொண்டிருந்தமையின் ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையில் போரிட்டனர். இராம, இலக்குவர்களைப் பொறுத்தவரையில் வில், அம்புகள் என்பவை தவிர வேறுவகைப்பட்ட படைக்கலங்கள் எதுவுமில்லை என்பதை அறியும் பொழுது வியப்பு அதிகமாகிறது. அப்படி இருக்க, போர்களைப் பற்றி விரிவாகப் பாடும் கம்பன், ஒரு போரைப்போல் மற்றொரு போர் இல்லாமல், புதிய புதிய யுக்திகளைக் கையாண்டு யுத்த காண்டத்தைப் பாடுகிறான். கதை நிகழ்ச்சிகள் எதுவுமில்லாமல், போரைப் பற்றிப் பாடும்பொழுது

படிப்போருக்கு அலுப்புத்தட்டுதல் இயல்பே. ஆனால், கம்பநாடன் புதிய புதிய யுக்திகளைக் கையாள்வதால், போரைப்பற்றிப் பாடும்பொழுதுகூடப் படிப்போருக்கு அலுப்புத் தட்டுவதில்லை.

இதுபற்றி விரிவாய் பேசுவதற்கு இது இடமில்லை. என்றாலும், போர்க்களச் செய்திகள் என்று கம்பன் காட்டும் சிலவற்றைக் காண்பது பொருத்தமுடையதாகும்.

ஆரணிய காண்டத்தில் கரனுடன் நடைபெறும் போரும், சுந்தரகாண்டத்தில் அதிகாயன், அக்ககுமாரன், படைத்தலைவன், இந்திரசித்தன் ஆகியோருடன் அனுமன் நடத்திய போரும் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. கரதூடணர்களுடன் ஆரண்யத்தில் இராமன் செய்த போர் வெட்ட வெளியில் நடைபெற்றதாகும். கோட்டை, கொத்தளம் முதலிய எதுவும் அங்கில்லை. அதே போல, சுந்தர காண்டத்தில் அனுமன் செய்த போர்களும், அசோக வனத்தை அடுத்த வெட்ட வெளியில் நடந்தவையே ஆகும். வெட்டவெளியில் நடைபெறுகின்ற போருக்கும், ஒரு கோட்டையை முற்றுகையிட்டு நடைபெறும் போருக்கும் சில வேறுபாடுகள் உண்டு. இதனை மனத்தில் வாங்கிகொண்ட கம்பன், இலங்கைப் போர் தொடங்குவதற்கு முன்னர் இரண்டு பக்கத்தாராலும் படைகள் எவ்வாறு அணிவகுத்து நிறுத்தப் பெற்றன என்பதை விரிவாகக் கூறுகிறான்.

இத்தகைய போர்களில் கோட்டையைச் சுற்றி நான்கு புறங்களிலும் நான்கு பெருவாயில்கள் அமைக்கப்பட்டிருக்கும். இந்த வாயிலின் உள்ளே இருப்பவர் வாயிலின்வழி பகைவர்கள் படைகள் உள்ளே நுழைந்துவிடாமல் பார்த்துக்கொள்வதுடன், தங்கள் படைகள் கோட்டைக்கு வெளியே சென்று போர் புரியவும் உதவுகின்றனர். வெளியே உள்ள படைகள், உள்ளே இருந்துவரும் படைகளை வெல்லவும், வாய்ப்பு நேர்ந்தபொழுது கோட்டையினுள்ளே புகவும் ஆயத்தமாக இருப்பர்.

இதனை மனத்தில் கொண்டு ஒவ்வொரு வாயிலின் ளேயும், வெளியேயும் யார் யார் நிற்கின்றார்கள், அவர்கள்

யாருடைய தலைமையின்கீழ்ப் பணிபுரிகின்றார்கள் என்றும் கம்பநாடன் பேசுகிறான். இலங்கையில் கிழக்கு வாயிலை எடுத்துக்கொண்டால் அதனுள்ளே இருந்து காக்கின்ற இராவணனுடைய படைகள் சேனைத் தலைவர்களின் தலைமையின்கீழ்ப் (6963) பணிபுரிகின்றனர். அப்பகுதியை வெளியே இருந்து முற்றுகை இடும் இராமன் படைகள், நீலன் தலைமையில் (6951), அமைந்துள்ளனர். தெற்கு வாயிலின் உள்ளே மகோதரன் தலைமையில் அரக்கர் படைகளும், வெளியே அங்கதன் தலைமையில் (6951), குரங்குப் படைகளும் உள்ளனர். மேற்கு வாயிலின் உள்ளே இந்திரசித்தன் தலைமையில் (6965) அரக்கர் படைகளும், வெளியே மாருதி தலைமையில் (6950) குரங்குப்படைகளும் உள்ளனர். வடக்கு வாயிலின் உள்ளே காவல் செய்யும் அரக்கர் படை இராவணன் தலைமையிலும் (6967), வெளியே உள்ள குரங்குப்படை இராமன் தலைமையிலும் (6952) போர் புரியத் தயாராக உள்ளனர்.

இலங்கையின் அமைப்பையும், இந்தியாவின் அமைப்பையும் புவிஇயல் அடிப்படையில் இன்று பார்க்கலாம். இராமேஸ்வரம் வழியாக உள்ளே புகுந்து குரங்குப் படைக்கு எதிரே, இலங்கையின் நடுவே இராவணன் கோட்டை அமைந்திருந்தது என்று சொல்வதில் தவறில்லை. ஒரே நேராக சேதுவின் வழி இலங்கையின் உள்ளே சென்று இறங்கிய குரங்குப் படைகள் கோட்டையை அடையும் வரை கவட்டையாகப் பிரிந்து செல்கின்றன. கவட்டையின் மேல் பகுதி வடக்கு வாயிலை நெருங்கியவுடன் அதன் ஒரு பகுதி கோட்டையைச் சுற்றிச் சென்று கீழ்த்திசை வாயிலை அடைகின்றது. இறங்குதுறையிலிருந்து கவட்டையாகப் பிரிந்ததில் கீழ்ப்பகுதி மேற்கு வாயிலை அடைகின்றது. அதிலிருந்து ஒரு பகுதி பிரிந்து சென்று தெற்கு வாயிலை முற்றுகை இடுகின்றது. இவ்வாறு படைகள் கவடாகப் பிரிந்து சென்று பகைவர்களைச் சூழ்ந்துகொள்ளும் முறையை முதன்முதலாக வகுத்தவர் இரண்டாம் உலகப் போரில் பெரும் பெயர் எடுத்த ஜெனரல் ரோமல் என்ற ஜெர்மானியத் தளபதி ஆவார். இந்த முறையைப் பின்பற்றி நேசக் கட்சிகளின்

படைகளை ஆப்பிரிக்காவின் பல இடங்களிலும் சிதறடித்தவர் ஜெனரல் ரோமல். பிரசித்தி பெற்ற இந்த அணிவகுப்பு கவடாகப் பிரிந்து சென்று பகைவர்களை வளைத்தல் என்று பொருள்படும் ``encircling the enemy by Pincer movement" என்று கூறுவர். இம்முறையை ரோமல்தான் முதலில் கண்டவர் என்று போர் வரலாறு கூறுகின்றது.

ஆனால், கம்பநாடன் ரோமல் தோன்றுவதற்கு ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இதனைக் கூறியிருப்பதை மேலே கண்டோம். மேலும் நான்குபுற வாயில்களில் காவல் தலைவர்களைப்பற்றிச் சிந்திக்கும்பொழுது, வடக்கு வாயிலும், மேற்கு வாயிலுமே அதிக முக்கியத்துவம் பெற்றிருப்பதை அறிய முடிகிறது. இராமேஸ்வரத்தில் இருந்து குரங்குகள் அமைத்த பாலம் இலங்கையின் மேற்குக் கரையைத் தொடுகிறது. அதன் வழியாகச் செல்லும் படைகள் வடக்கு, மேற்கு வாயில்களை விரைவாக அடைய முடியும். எனவே, கவட்டைப் பிரிவின் வழி வரும் படைகளுக்கு ஈடுகொடுக்க வேண்டுமாமனால் வடக்கு, மேற்கு வாயில்கள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இதனை அறிந்த கம்பநாடன் வடக்கு வாயிலைக் காக்க இராவணனும், மேற்கு வாயிலைக் காக்க இந்திரஜித்தனும் இருந்தனர் என்று கூறுவதுடன், அவ்விருவருக்கும் ஈடு கொடுக்கக் கூடிய வகையில் வடக்கு வாயிலில் இராமனும், மேற்கு வாயிலில் அனுமனும் தலைமை பூண்டனர் என்று கூறுகின்றான்.

பல்லவ சாம்ராஜ்யம் வீழ்ச்சி அடைந்து, சோழப் பேரரசு முளைவிடுகின்ற அந்தக்காலகட்டத்தில் வாழ்ந்த கம்பநாடன் எந்தப் பெரும் போரையும் நேரே கண்டிருக்க வாய்ப்பில்லை. சடையப்ப வள்ளலின் அன்பில் திளைத்து, குடந்தையை அடுத்த கதிராமங்கலம் என்ற ஊரில் வாழ்ந்த கம்பன் எவ்வாறு இந்த அற்புதமான போர் முறைகளை அறிந்தானோ தெரியவில்லை. ஆனாலும் இன்று ஒரு போர் நடந்தால்கூடப் படைகள் இந்த முறையைத்தான் கையாள வேண்டும். கம்பநாடன் வெறும் கற்பனைக் கவிஞன் மட்டும் அல்லன். அரசியல் நுணுக்கங்களையும், போர் முறைகளையும் நன்கு தெளிந்த பேரறிவாளன் என்பதை அறிதல் வேண்டும்.

நான்கு வாயில்களிலும் உள்ளும் புறமும் நிற்கின்ற படைகளின் எண்ணிக்கையையும், அவற்றின் தலைமை ஏற்றிருப்போரின் பெயர்களையும் கூறிவந்த கம்பன், அதிலும் ஒரு நுணுக்கம் பேசுகிறான். வடதிசையில் இராமன் உள்ளான் என்பதால், தானே அவ்வாயிலின் காவலை ஏற்றுக் கொள்வதாகக் கூறிய இராவணன், மேல் திசையில் அனுமன் தலைமையில் எதிரிகள் உள்ளனர் என்பதை ஒற்றர் மூலம் அறிந்து அவ்வாயிலைக் காக்க இந்திரசித்தனை அனுப்புகின்றான். அவ்வாறு அனுப்பும்பொழுது மகனை நோக்கி, "மகனே! அனுமனுடைய ஆற்றலையும், போர்த்திறமையையும் நீ முன்னரே அறிந்தவன். ஆதலால் 200 வெள்ளம் சேனையுடன் மேற்கு வாயிலைச் சென்று அடைவாயாக" (6965) என்று கூறுகிறான். ஒவ்வொரு வாயிலுக்கும் 200 வெள்ளம் சேனை உள்ளே உள்ளன என்று கூறும் கவிஞன், வெளியே உள்ள குரங்குப் படை ஒவ்வொரு வாயிலுக்கும் பதினேழு வெள்ளமே உள்ளது என்று கூறுகிறான். இவற்றைக் கூறிய கவிஞன் இன்னும் ஒரு படி மேலே சென்று இம் மாபெரும் படைகளுக்கு மிக இன்றியமையாத உணவைச் சேகரித்துக் கொண்டுவந்து தருகிறவர்கள் எத்துணைப்பேர் என்று வினவுகிறான். கோட்டையின் உள்ளே உள்ள எண்ணூறு வெள்ளம் சேனைகளுக்கு உணவு வழங்கல் துறையில் ஈடுபட்டவர்கள் இருநூறு வெள்ளம் ஆவர். அதாவது அரக்கர் சேனையில் நான்கு வீரர்களுக்கு ஒருவன் வீதம் உணவு வழங்கலில் ஈடுபட்டுள்ளர். ஆனால், வெளியே உள்ள குரங்குப் படையில் 17 X 4 = 68 வெள்ளம் குரங்குப் படைக்கு உணவு வழங்க இரண்டு வெள்ளம் குரங்குகள் நியமிக்கப் பெற்றனர் (6952). இதன்படி பார்த்தால் முப்பத்துநான்கு வீரர்கட்கு ஒரு குரங்கு உணவு வழங்க ஏற்பாடாகியுள்ளது. உணவு வழங்கு துறையில் அரக்கர் படையில் நால்வருக்கு ஒருவரும், குரங்குப் படையில் முப்பத்துநான்கு வீரருக்கு ஒருவரும் அமைக்கப்பெற்றனர். இதைப் படிக்கும்பொழுது, மொகலாயப்படையும், மராட்டியப் படையும் மோதுவது பற்றி வரலாற்றாசிரியர்கள் கூறியது நினைவுக்கு வருகிறது. ஒவ்வொரு மொகலாயனுக்கும்,

அவனுக்கு வேண்டியப் பணிகள் செய்ய நால்வர் முதல் அறுவர் வரை தேவைப்பட்டனர். படைவீரர்களை விட, பணியாளர் தொகை அதிகமாக இருந்தது. மராட்டியப் படைகளைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு வீரனும் அன்றாடம் தனக்கு வேண்டிய உணவைத் தன் முதுகிலேயே கட்டித் தொங்கவிட்டிருந்தான். இதனால் மொகலாயப் படையின் எண்ணிக்கையும், தளவாடங்களும் அதிகமாக இருந்தமையின் அப்படைகள் நகர்வது மிக மெள்ளவே நடைபெற்றது. மெள்ள நகரும் அவர்களை மிக வேகமாகச் செல்லும் வாய்ப்புகள் பெற்ற மாராட்டியர் எளிதாகச் சாடமுடிந்தது.

படைகளின் எண்ணிக்கையைத் தருவதன் மூலம், குரங்குப் படை எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மிக விரைவாகச் செல்லும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது என்பதைக் கவிஞன் கூறுகிறான். உணவு வழங்கல்பற்றி இக் கவிஞன் பேசும்பொழுது எவ்வளவு நுண்மையாகப் போர் முறைபற்றி அறிந்திருக்கிறான் என நாம் அறியமுடிகிறது. அன்றும் இன்றும் போர் என்று வந்தால் ஒற்றர்கள் மிக இன்றியமையாத உறுப்பாக அமைவர். இங்கும் இராவணன் படைபலம்பற்றிய நுணுக்கங்களை இராமனுக்குக் கூற வீடணன் பயன்படுகிறான். இராமன் இலங்கைக்குள் வந்து இறங்கியதிலிருந்து, ஒவ்வொரு வாயிலுக்கும் படைகளைப் பிரித்து அனுப்புவதுவரை அவன் செயல்கள் ஒவ்வொன்றையும் ஒற்றர்கள் மூலம் அறிகிறான் இராவணன். இதிலும் கம்பன் கற்றுத் துறைபோகியவன் என்பதை அறியலாம்.

இதன்பிறகு மாவீரர்கள் ஊருக்குப் புறப்படுமுன் வீரக்கழல்அணிவதிலிருந்து, கவசம் அணிவது வரை விரிவாகக் கூறியுள்ளான் (7126. 9649. 7113, 9645). இதனை அடுத்து வாள், குடை முதலியவற்றிற்குப் பூசனை புரிதல் நல்நிமித்தம் பார்த்தல் ஆகியனவும் பேசப்பெறுகின்றன.

இத்துணை நிகழ்ந்தும் இராம, இலக்குவர்களின் வன்மைபற்றி இராவணன் குறைந்தே மதிப்பிட்டிருந்தான்

என்பதைக் கவிஞன் காட்டிக்கொண்டே செல்கிறான். இவ்வாறு அவன் கருத இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது காரணம் இராவணன் தன்மேலும், தன் பராக்கிரமத்தின் மேலும், தான் பெற்ற வரங்களின்மேலும் கொண்டிருந்த இமயம் போன்ற நம்பிக்கையாகும். மும்மூர்த்திகளும் தனக்கு நிகரில்லை என்று நினைக்கும் ஒருவன் எவ்வாறு மனிதர்களைத் தனக்குச் சமமாக நினைக்க முடியும்; இந்த எண்ணத்தில் மூழ்கியிருந்த இராவணனுக்கு மூன்று அதிர்ச்சிகள் ஏற்பட்டன. கரதூடணர்கள் 'வில் ஒன்றில், கடிகை மூன்றில் ஏறினர் விண்ணில்"-(3131) என்று கேள்விப்பட்டது முதல் அதிர்ச்சி. இராவணன் அதைச் சட்டை செய்யவில்லை. சுள்ளியில் உறைதரு குரங்கு என்று அனுமனை எள்ளி நகையாடியபின் மகன் முதலியவர்களை இழந்தும் இராவணன் தெளிவடையவில்லை. அனுமன் மூவரினும் மேம்பட்டவன் (5871) என்று இந்திரசித்தன் கூறிய பிறகு இராவணன் இரண்டாவது அதிர்ச்சியைப் பெற்றான். என்றாலும், மனிதர்களைப்பற்றி அவன் கொண்ட எண்ணம் மாறவில்லை. இந்த நிலையில் வடக்கு வாயிலின் வழியே நின்ற இலக்குவன் நாணொலி செய்தான். 'ஒரு மனிதன் இப்படி நாண்ஒலி செய்ய முடியுமா?' என்று வியக்கிறான் இராவணன்.

..............................................வீரன் தம்பி
கூற்றின் வெம்புருவம் அன்னசிலை நெடுங்குரலும் கேளா,
ஏற்றினன் மகுடம், இவன் 'என்னே இவன்! ஒரு
மனிசன்' என்னா (7159)

இலக்குவன் நாணொலி கேட்டுத் தன் மகுடத்தையே ஒரு முறை தூக்கி வைத்துக்கொண்டான்போலும். இது இலக்குவனுக்குச் செய்த வீர வணக்கம் போலும். 'இவனும் ஒரு மனிதனா?' என்று கேட்கும்பொழுது மூன்றாவது அதிர்ச்சி அடைகிறான் இராவணன்.

இக்காலப் போர்முறையிலும்கூட இருளில் போர்புரிய நேரிட்டால் ஒளி உமிழும் குண்டுகளை (flair bombs)) விமானத்தில் இருந்தோ அல்லது பீரங்கிகள் மூலமோ எதிரிகள்

பக்கம் செலுத்தி அவர்கள் நிலை அறிகின்றனர். இந்த நுணுக்கத்தையும் கம்பநாடன் பேசுகிறான்.

"கொள்ளியின் சுடர் அனலிதன் பகழி கைக்கொண்டான்;
அள்ளி நுங்கலாம் ஆர் இருட் பிழம்பினை அழித்தான்
(8629)

என்ற இப்பாடல்மூலம் இருளில் உள்ள பகைவர்களின் நிலையை அறிய ஒளி உமிழும் பாணங்களைப் பயன்படுத்தினர் என்று தெரிகிறது.

இக்காலத்தில் பெருந்தலைவர்கள், போர்த் தளபதிகள் முதலானோர் இறந்தால் அவர்களுடைய சடலம் தேசியக் கொடியால் போர்த்தப்பட்டு இடுகாடுவரை எடுத்துச் செல்லப்படும் என்பதை நாம் அறிவோம். எகிப்திய நாட்டில் பரோக்கள் ஆண்ட காலத்தில் அவர்கள் இறந்தால், பிரமிடுகளின் உள்ளே சடலங்களை வைத்து மூடிவிடுவார்கள். இந்தச் சடங்கில் முக்கியமான பகுதி என்னவென்றால், அந்த அரசர்கள் பயன்படுத்திய அத்தனை சாமான்களும், கொடி உள்பட, அவர்கள் சடலத்தின் பக்கத்தில் வைக்கப்படும். ஆகவே, இத்தகைய பழக்கம் மிகப் பழமையானது என்பதை அறிகிறோம். கம்பனும் இதனை அறிந்து தன் பாடலில் இந்நிகழ்ச்சியைப் பேசுகிறான்.

"கொற்ற வெண்குடையோடு கொடி மிடைந்து,
உற்ற ஈம விதியின் உடம்படீஇ,
சுற்ற மாதர் தொடர்ந்து உடன் சூழ்வர,
மற்ற வீரன் விதியின் வழங்கினான்"
(யுத்தகாண்டம்-மிகைப்பாடல்-1024)

போர் என்று வந்துவிட்டால் தர்ம, நியாயங்கள் பார்க்க அங்கு இடமில்லை. எப்படியாவது வென்றுவிட வேண்டும் என்பதுதான் குறிக்கோளே தவிர, 'இது முறையா? இது அறமா?' என்று பார்க்கத் தேவையில்லை என்ற கருத்து இன்றும் உலக முழுதும் பரவி உள்ளது. ஆனால், தமிழர்களைப் பொறுத்த மட்டில் போராயினும், ஆட்சியாயினும் அறத்தின்

பக்கம் செலுத்தி அவர்கள் நிலை அறிகின்றனர். இந்த நுணுக்கத்தையும் கம்பநாடன் பேசுகிறான்.

"கொள்ளியின் சுடர் அனலிதன் பகழி கைக்கொண்டான்;
அள்ளி நுங்கலாம் ஆர் இருட் பிழம்பினை அழித்தான்
(8629)

என்ற இப்பாடல்மூலம் இருளில் உள்ள பகைவர்களின் நிலையை அறிய ஒளி உமிழும் பாணங்களைப் பயன்படுத்தினர் என்று தெரிகிறது.

இக்காலத்தில் பெருந்தலைவர்கள், போர்த் தளபதிகள் முதலானோர் இறந்தால் அவர்களுடைய சடலம் தேசியக் கொடியால் போர்த்தப்பட்டு இடுகாடுவரை எடுத்துச் செல்லப்படும் என்பதை நாம் அறிவோம். எகிப்திய நாட்டில் பரோக்கள் ஆண்ட காலத்தில் அவர்கள் இறந்தால், பிரமிடுகளின் உள்ளே சடலங்களை வைத்து மூடிவிடுவார்கள். இந்தச் சடங்கில் முக்கியமான பகுதி என்னவென்றால், அந்த அரசர்கள் பயன்படுத்திய அத்தனை சாமான்களும், கொடி உள்பட, அவர்கள் சடலத்தின் பக்கத்தில் வைக்கப்படும். ஆகவே, இத்தகைய பழக்கம் மிகப் பழமையானது என்பதை அறிகிறோம். கம்பனும் இதனை அறிந்து தன் பாடலில் இந்நிகழ்ச்சியைப் பேசுகிறான்.

"கொற்ற வெண்குடையோடு கொடி மிடைந்து,
உற்ற ஈம விதியின் உடம்படீஇ,
சுற்ற மாதர் தொடர்ந்து உடன் சூழ்வர,
மற்ற வீரன் விதியின் வழங்கினான்"
(யுத்தகாண்டம்-மிகைப்பாடல்-1024)

போர் என்று வந்துவிட்டால் தர்ம, நியாயங்கள் பார்க்க அங்கு இடமில்லை. எப்படியாவது வென்றுவிட வேண்டும் என்பதுதான் குறிக்கோளே தவிர, 'இது முறையா? இது அறமா?' என்று பார்க்கத் தேவையில்லை என்ற கருத்து இன்றும் உலக முழுதும் பரவி உள்ளது. ஆனால், தமிழர்களைப் பொறுத்த மட்டில் போராயினும், ஆட்சியாயினும் அறத்தின்

அடிப்படையிலேயே நடைபெறவேண்டும் என்று கருதினர். புறநானூற்றில் உள்ள,

"ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்....." (புறம்-9)

என்ற புறப்பாடல் இக்கருத்தை வலியுறுத்துகின்றது. ஆனால், இருதரப்பினரிடைப் போர் நிகழ்ந்தால் இருவருமே அறவழியில் நின்று போரிடுவர் எனக் கூறமுடியாது. இலக்குவனுக்கும் இந்திரசித்தனுக்கும் இடையே நடைபெறும் போரில், கம்பன் இக்கருத்தை வலியுறுத்துகிறான் இலக்குவனிடம் மாயப்போர் பல செய்தும் பெரு துயரத்திற்கு ஒரே காரணம் இலக்குவன் அறவழி பிறழ்ந்து போர் செய்யவில்லை என்பதுதான். " இலக்குவன் தன்பால் உள்ள முதலவன் படையாகிய பிரம்மாஸ்திரத்தைப் பயன்படுத்த மறுத்துவிட்டான். அவன் அவ்வாறு பயன்படுத்தியிருந்தால் அது என்னைமட்டும் அழிக்காது, உலகத்தின் பெரும் பகுதியையும் அழித்துவிடுமே என்று அஞ்சிப் பிரம்மாஸ்திரத்தைப் பயன்படுத்தாமையால் நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன்" என்ற கருத்தில் தந்தையிடம் பேசுவதாக உள்ள கம்பன் பாடல் வருமாறு:

'முட்டிய செருவில், முன்னம் முதலவன் படையை என்மேல்
விட்டிலன், உலகை அஞ்சி; ஆதலால், வென்று மீண்டேன்;
கிட்டிய போதும் காத்தான்; இன்னமும் கிளர வல்லான்;
சுட்டிய வலியினாலே கோறலைத் துணிந்து நின்றான்.(9120)

இந்திரசித்தனைக் கொல்வது மிக முக்கியமானது என்றாலும், அதற்காக நான்முகன் படையை ஏவி உலகுக்கு ஊறு விளைவிக்க இலக்குவன் விரும்பவில்லை என்பதை இந்திரசித்தனே ஒப்புக்கொள்கிறான். இதுவே அறப்போர் எனப்படும். இத்துணை நுணுக்கங்களுடன் போரைப் பற்றி 9ம் நூற்றாண்டிலேயே பாடிய கவிஞன் தீர்க்கதரிசி என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கம்ப இராமாயணத்தின் கடைசிக் காண்டமாகிய யுத்த காண்டம் 39 படலங்களைக் கொண்டது. கடல் காண் படலம் தொடங்கி, விடை கொடுத்த படலம் ஈறாக உள்ள

முப்பத்தொன்பது படலங்களில் ஒரு படலம் நீங்கலாக ஏனைய அனைத்துப் படலங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதும், பொருத்தமுடையதுமாக அமைந்துள்ளன. ஆனால், யுத்த காண்டத்தோடு, ஏன் இராம கதையோடு எவ்விதத் தொடர்பும் இல்லாத இரணியன் கதை, இரணியன் வதைப் படலம் என்ற பெயரோடு மந்திரப் படலத்தை அடுத்துக் காணப்படுகிறது. காப்பியக் கட்டுக்கோப்பும், அதன் உறுப்புக்களும், அந்த உறுப்புக்கள் ஒன்றோடொன்று பொருந்தும் முறையும்பற்றி ஆய்ந்து எழுதிய தமிழகத்தின் முதல் திறனாய்வாளராகிய வ.வே.சு.ஐயர் கூட இப்படலம் காப்பியத்தோடு தொடர்பின்றி தனித்து நிற்பதைச் சுட்டுகிறார். அப்படியானால், உலகில் மிகச் சிறந்த காப்பியப் புலவனாகிய கம்பனுக்கு இப்படலத்தின் பொருந்தாமை தெரியாமலா இருந்திருக்கும்? தெரிந்திருந்தும் இப்படலத்தை இங்கே வைத்துள்ளான் என்றால், அதற்குரிய காரணத்தை ஆய்வது நலம் பயக்கும்.

இப்படலம் அமைந்துள்ள இடம்பற்றி முதலில் காணவேண்டும். இராவணன் மந்திர ஆலோசனை சபையில் மிக முக்கியமான ஆய்வுக் கூட்டம் நடைபெறுகிறது. பலர் அக்கூட்டத்தில் மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் எனப் பேசுகின்றனர். கும்பகர்ணன் இராவணனை இடித்துக் கூறும் அறவுரைகளைத் தந்ததோடு விட்டுவிட்டான். இறுதியாக இராவணன் கருத்துக்கு ஓரளவு இசைந்தும் விட்டான். வீடணன், இராவணன் தவற்றைச் சுட்டிக்காட்டிப் போர் செய்தால், வெற்றி கிட்டாது என்பதையும், இராவணன் அழிவு உறுதி என்பதையும் எடுத்துக்காட்டினான். இராவணன் கோபம் எல்லை கடந்த நிலையில் வீடணன் இரணியன் கதை சொல்வதாகக் காப்பியம் அமைந்துள்ளது. தன்னை மறந்த கோபத்தில் இருக்கும் ஒருவனிடம் 176 பாடல்களைக் கூறுவதாகப் பாடுவது முற்றிலும் பொருத்தமற்ற தாகும். அப்படியும் இரணியன் கதையை விரிவாகக் கூறிவிடுவதால்மட்டும் இராவணன் மனம் திருந்திவிடுவான் என்று எதிர்பார்ப்பதும் பொருத்தமற்ற தாகும். வீடணன் மூன்று சாபங்களை எடுத்துக்காட்டி, இராவணன் அழிவு

உறுதி என்று நிருபணம் செய்தபின்னும் இராவணன் மனம் மாறவில்லை என்றால், எங்கோ வாழ்ந்த இரணியன் கதைகேட்டு மனம் மாறிவிடுவான் என்று நினைப்பதும் அறியாமை யாகும். அப்படி இருந்தும் வீடணன் கூற்றாக இப்படலத்தைக் கம்பன் அமைப்பதன் காரணமென்ன?

நூற்று எழுபத்தாறு பாடல்களைக் கொண்ட இப்படலத்தை ஒரு குறுங்காப்பியம் என்றே பல்கலைச் செல்வர் முனைவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரும் திறனாய்வுச் செல்வர் வ.வே.சு. ஐயரும் கூறியுள்ளனர். வான்மீகி உள்பட வேறு எந்த இராமாயணத்திலும் காணப்படாத இப்பகுதியைக் கம்பன் பாடினான் என்றால், வலுவான காரணம் இருத்தல் வேண்டும்.

கம்பனுடைய காலம் 9ம் நூற்றாண்டு என்று முன்னரே கூறப்பட்டுள்ளது. தமிழகத்தின் அன்றைய நிலையைச் சற்று ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். 6ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி தொடங்கி, 8ம் நூற்றாண்டின் கடைப்பகுதி வரை உள்ள கால கட்டத்தில் நான்கு நாயன்மார்களும் பன்னிரண்டு ஆழ்வார்களும் தோன்றி, பக்தி இயக்கம் என்ற ஒன்றைப் பெரும் சூறாவளியாக மாற்றி, தமிழகத்தில் உலவவிட்டுவிட்டனர்.பாகவத புராணம் கூறுவதுபோல, பக்தியும், வைராக்கியமும் தமிழகத்தில் தோன்றி, கர்நாடகம், மகாராஷ்டிரம் வழியாகப் பிருந்தாவனம் சென்றன என்பதை அறியமுடியும். (பாகவத புராணம் அத்தியாயம் 1, பாடல் 48) நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்திற்கு முன்னரே தமிழகத்தில் புகுந்து ஓரளவின்கு வளர்ச்சியும் பெற்றுவிட்ட புத்தம், சமணம் ஆகிய இரு பெருஞ்சமயங்களும் காலூன்றி நின்றன. இவற்றை அடுத்து 8ம் நூற்றாண்டில் தோன்றிய ஆதி சங்கர பகவத்பாதர் அத்வைதக் கொள்கையை இந்தியா முழுவதும் பரப்ப முயன்றார். இந்த மூன்றும் அறிவு வாதத்தை அடிப்படையாகக் கொண்டவை. புத்த சமயம், தர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்ததாகும். அதனைப் பெரிதும் எதிர்த்த சங்கரரும் அறிவு வாதத்தையே அடிப்படையாகக் கொண்டு அத்வைதத்தை நிலைநாட்ட

முயன்றார். தமிழகத்தில் தோன்றிய நாயன்மார்கள், ஆழ்வார்கள் தோற்றுவித்த பக்தி இயக்கம் ஓரளவு சமண சமயத்தையும், பெரிய அளவில் புத்த சமயத்தையும் அமிழ்த்திவிட்டது. மூளையின் தொழிலாக உள்ள அறிவு வாதத்தால், அறிவாளிகளைத் தவிர ஏனையோரை ஒருங்கிணைக்க முடியாது என்பதனை நன்குணர்ந்த தமிழர், உணர்வின் அடிப்படையில் தோன்றும் பக்தி இயக்கத்திற்குத் தலைமையிடம் தந்தனர்.

இந்த நிலையில்தான் ஆதிசங்கரர் தோன்றி, பிரம்ம சூத்திரத்திற்கும், கீதைக்கும், பல உபநிடதங்களுக்கும் ஈரிய முறையில் அத்வைதக் கொள்கையின் அடிப்படையில் உரை அமைத்தார். இதுவும் அறிவின் அடிப்படையில் எழுந்த ஒன்றே ஆகும். அறிவுத் தெளிவின் முடிந்த எல்லையாக இருப்பவை உபநிடதங்க ளாகும். என்றாலும், இந்த உபநிடதங்களை விரித்துப் பொருள் காண்பதில் கருத்து வேறுபாடுகள் இருந்தன். என்றாலும், சங்கரருடைய அத்வைதக் கொள்கை, தமிழகத்தில் சண்டமாருதம்போல் புகத் தொடங்கிற்று. சங்கரர் காலத்திலேயே இச் சண்டமாருதம் தொடங்கிவிட்டதால் தமிழகத்தின் இயல்பானதும், பழமையானதுமான பக்தி இயக்கம் ஒளிமங்க லாயிற்று.

இந்த நிலையில்தான், கம்பநாடன் காப்பியம் இயற்றத் தொடங்குகிறான். தேவாரம், திவ்வியப் பிரபந்தம், உபநிடதங்கள் என்பவற்றில் துளையமாடியவன் கம்பன். பிரபந்தங்கள் வளர்த்த பக்தி நெறிக்கு இடம் தராமல், இறைவன், உயிர்கள், உலகம் என்ற மூன்றையும் வேறுபடுத்திக் காணாமல், பிரம்மம் ஒன்றுதவிர ஏனைய அனைத்தும் மித்தை என்று கூறும் அத்வைதம் தமிழர்களை ஓரளவு கவரலாயிற்று. அந்த உபநிடதங்களை வைத்துக்கொண்டே, பக்தி இயக்கத்திற்கு வழிகாண முற்பட்டான் கம்பநாடன். 'இது சரியா?' என்ற வினா எழலாம். முக்கியமான பத்து உபநிடதங்களை வைத்துக்கொண்டுதான் பிரம்மம் ஒன்றே உண்மை என்று பேசுகிறார் சங்கரர். அதே உபநிடதங்களை வைத்துக்கொண்டுதான் முப்பொருள்பற்றிப் பேசுகிறார்

இராமானுஜர். எனவே, ஒன்றுக்கொன்று மாறுபட்ட கொள்கைகளை நிறுவ அதே உபநிடதங்களைப் பயன்படுத்தலாம் என்பது தெளிவாகிறது.

இந்த நுணுக்கத்தைத்தான் கம்பன் பயன்படுத்துகிறான். தான் சொல்லும் இக்கருத்துக்கள், உபநிடதங்களில் காணப்படுபவையே என்பதை,

"அளவையான் அளப்ப அரிது; அறிவின் அப் புறத்து
உளவை ஆய் உபநிடதங்கள் ஓதுவ (இர.வதை 62)

என்ற அடிகள் மூலம் கவிஞனே பேசுகிறான். இரணியன் வதைப் படலத்தில் உள்ள 74,75,76, ஆம் பாடல்கள் சாந்தோக்கியம், முண்டகம் ஆகிய உபநிடதங்களின் சாரமாக - ஏறத்தாழ அதே உவமைகளை - எடுத்துப் பேசுவனவாக அமைந்துள்ளன. "காலமும் கருவியும்" என்று தொடங்கும் பாடல் "ஆலமும் வித்தும் ஒத்து அடங்கும் ஆண்மையான்" என்று முடிகிறது. இந்த அடி சாந்தோக்கிய உபநிடதத்தில் ஆறாவது அத்தியாயத்தின் பன்னிரண்டாவது கண்டத்தில் உள்ள 1,2,3 பாடல்களின் பிழிவாகும்.

முண்டக உபநிடதத்தின் மூன்றாவது முண்டகத்தின், இரண்டாவது கண்டத்தில் உள்ள எட்டாவது பாடலில் வரும் கடல், ஆறு நீர் என்பவற்றை எடுத்துக்கொண்டு ஒரு சிறிது மாற்றிக் கம்பன், இப்படலத்தின் 77 வது பாடலில் "வேலையும் திரையும் போல் வேறுபாடு இலான்" என்று பாடுகிறான்.

76வது பாடலில் உள்ள "தூமமும் கனலும் போல் தொடர்ந்த தோற்றத்தான்" என்ற கருத்து முண்டக உபநிடதத்திலும், கீதையிலும் சில மாறுபாடுகளுடன் பேசப்படுகிறது.

இவ்வளவு ஆழமாகச் சென்று உபநிடதக் கருத்துக்களைப் பேசும் பிரகலாதன் கூற்றாக இறை இலக்கணத்தை மேலே கண்டுள்ள பாடல்களில் பேசுமாறு செய்கின்றான். நாராயணன் என்பவன் மூவருள் ஒருவனாய் இருந்து, தன்னிடம் தோற்றுப்போனான் என்பதில் எல்லையற்ற

கர்வம் கொண்டு பேசுகிறான் இரணியன். திரிமூர்த்திகளில் ஒருவனாக இரணியனால் பேசப்படும் நாராயணன், எங்கும் யாவற்றிலும் நிறைந்து உள்ள விராட் ஸ்வரூபத்தின் ஒரு பகுதியே ஆகும். அதுவே முழுப்பொருள் என்று நினைத்து விடாதே. அவன் இல்லை என்று பேசும் நீயும், உன்னை அவ்வாறு பேசச் செய்யும் உன்னுள் இருப்பவனும் அந்த நாராயணனின் ஒரு பகுதியே ஆகும் என்று சொல்லவந்த பிரகலாதன், 'நீ சொன் சொல்லிலும் உளன்' என்று கூறுவது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. இல்லை என்ற சொல்லிலும், இன்மைப் பொருள் தரும் சொல்லிலும் அவனே உள்ளான் என்ற கருத்து ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. "உளன் எனில் உளன் அவன்" (திவ்வியப்பிரபந்தம் - 2683) என்று தொடங்கும் நம்மாழ்வார் பாடலின் 2வது அடி 'இலன் எனின் இலன் அவன்' எனும் இதே கருத்தை வலியுறுத்துவதைக் காணலாம்.

இரணியனுக்கு ஈடு சொல்ல முடியாத ஆணவம் தலைதூக்கிநின்றது என்பதைக் கம்பன் எடுத்துக்காட்டுகிறான். இத்தகைய ஓர் ஆணவம் அவனிடை வளர்வதற்கு அவனுடைய கல்வியும் ஒரு காரணமாகும். வேதங்களை நன்கு கற்றதனால் இந்த ஆணவம் தலைக்கேறியது. அதன் பயனாக, 'அனைத்தும் அவன்' என்ற நினைவு போக, 'அனைத்தும் நான்' என்ற அகங்காரம் வலுவடைந்தது. அவன் கற்ற அதே வேதங்களைக் கற்ற பிரகலாதனுக்கு, 'அனைத்தும் அவனே' என்ற உறுதிப்பாடு வலுப்பெற்றது. அறிவின் அடித்தளத்தில் பக்தி இருந்தால் 'அனைத்தும் அவன்' என்ற எண்ணம் தோன்றுகிறது. பிரகலாதன் நிலை இதுவாகும். எனவே, அத்வைதமும், உபநிடதங்களும் பக்தி இயக்கத்தை அமுத்திவிட்டு மேலே வர முயன்ற 9ம் நூற்றாண்டில், தமிழர்கள் கண்ட பக்தி இயக்கத்திற்குத் தலைமை இடம் தருவதற்காகவே இரணியன் வதைப் படலத்தைக் கவிஞன் பொருத்தினான் என்பதனை அறியலாம். வான்மீகம் உட்பட எந்த இராமாயணத்திலும் காணப்படாத இப்பகுதியைக் கவிஞன் புகுத்துவதற்கு இதுவே காரணமாக இருந்தது போலும். இவ்வாறு கொள்ளாமல், தேரழுந்தூரில் உள்ள திருமால் கோவிலில் காணப்பெறும்

நரசிம்மசாமி சிலையே, கம்பன் இதனைப் பாடக் காரணமாயிற்று என்று கூறுவோரும் உளர். திவ்வியப் பிரபந்தத்தில் முக்குளித்த கம்பனுக்கு, நரசிம்ம அவதாரம், பிரகலாதன் கதை என்பவை மிக நன்கு அறியப்பட்ட ஒன்றாகும். எனவே, சிலையைப் பார்த்துப் புதிய எண்ணம் தோன்றிற்று என்று கூறுவது அத்துணைப் பொருத்தமாகப் படவில்லை.

39 படலங்களுடன், இராம காதையில் தனிமுடியாய் விளங்கும் யுத்த காண்டத்தில், ஈடு இணையற்ற முறையில் பல பாத்திரங்களைப் படைக்கிறான் கம்பநாடன். காப்பிய நாயகனாகிய சக்கரவர்த்தித் திருமகன், இராம அனுஜனாகிய இளைய பெருமாள், தொண்டின் முழுவடிவாக அமைந்துள்ள அனுமன் ஆகிய மூவரும் இக்காண்டம் முழுவதிலும் வியாபித்துள்ளனர் என்பதில் வியப்பொன்று மில்லை. இவர்களை அல்லாமல் எதிரணியில் ஈடு இணையற்று விளங்கும் வீடணன், கும்பகர்ணன், இந்திரசித்து, இராவணன் என்ற பாத்திரங்கள் இக்காண்டத்தில் படைக்கப்பட்டுள்ளன.

காண்டத்தின் முன்னுரையாக அமைந்துள்ள இப்பகுதியில் இப்பாத்திரங்களின் சிறப்பை முழுவதுமாக ஆராய்வது இயலாத காரியம். எனவே, இன்றியமையாத சில பகுதிகளைமட்டும் தொட்டுக்காட்டுவது பொருத்த முடையதாக இருக்கும்.

*வீடணன்:* வான்மீகம் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை உள்ள பல்வேறு இராமாயணங்களிலும் பல்வேறு பிரச்சினைக்குரிய பாத்திரமாக விளங்குவது வீடணன் என்ற பாத்திரம். ஒவ்வொருவருடைய வாழ்விலும் சிற்சில சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாத இரண்டு கடமைகள் முன்னிற்கக் காணலாம். தனித்தனியாக நோக்கும்போது இவை ஒவ்வொன்றும் மிகச் சிறந்தவை என்பதிலும் வாழ்க்கையில் தவறாமல் கடைப்பிடிக்கப்படவேண்டியது என்பதிலும் ஐயமில்லை. இரண்டும் ஒன்றுக்கொன்று துணையாக நிற்கும் பொழுது எந்த ஒரு கடமையை மேற்கொண்டாலும், மற்றொன்று அதனால்

பாதிக்கப்படுவதில்லை. ஒன்றின் அனுசரணையாகவே மற்றொன்றும் அமைந்துவிடுகிறது.

அவ்வாறில்லாமல் இரண்டு கடமைகளும் தம்முள் முரண்பட்டு இரு வேறு வழிகளில் செல்வதாக வைத்துக்கொண்டால் அதனைத் தர்மசங்கடமான நிலை என்றுதான் கூறவேண்டும். ஏதோ ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதன்வழிச் சென்றால், மற்றொரு கடமையைத் துறந்து விட்டதாகப் பழி பேசப்படும். இந்தத் தர்மசங்கடமான சூழ்நிலையில் அகப்பட்டுக்கொண்டவன் வீடணன்.

புலத்திய முனிவரின் பேரர்களுள் இராவணன் மூத்தவன், கும்பகர்ணன் இளையவன். அவனுக்கும் இளையவன் வீடணன். இராவணன் தவறிழைக்கிறான், பிறன்மனை நயத்தல் பாவமும் பழியுமே தரும் என்பதைத் தம்பியர் இருவரும் அறிகின்றனர். வீடணனைப் பொறுத்தமட்டில் அவன் வாழ்க்கை முழுவதும் தவ வாழ்க்கையாகவே அமைந்து விட்டது என்பதை இராம காதை சுட்டிச் செல்கிறது. சிற்றுருக் கொண்டு அனுமன் இலங்கையில் உள்ள ஒவ்வொரு மாளிகையாகத் தேடிக்கொண்டு வருகிறான். ஏறத்தாழ எல்லா மாளிகைகளும் ஒரே மாதிரியாக இருக்க, ஒரே ஒரு மாளிகைமட்டும் அந்தச் சூழ்நிலைக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்கக் காண்கிறான். அதைக் கூறவந்த கம்பன்,

............................................கருநிறத்தோர்பால்
வெளித்து வைகுதல் அரிது' என, அவர் உருமேவி,
ஒளித்து வாழ்கின்ற தருமம் அன்னான்தனை உற்றான்.
(4970)

என்று பாடுவதால், வீடணனைப் பொறுத்தவரை, இலங்கையில் வாழ்ந்தாலும், இராவணன் தம்பியாக இருந்தாலும் அவன் வாழ்க்கை முற்றிலும் மாறுபட்டதாகவே இருந்தது என்பதைக் குறிக்கிறான். வெண்ணிறமுடைய தருமம் தன் உண்மையான வடிவுடன் இலங்கையில் வாழமுடியாது என்பதால் கருநிறம் பூண்டு வாழ்ந்தது என்று பேசுவதன் மூலம் வீடணனுடைய உண்மைச் சொரூபத்தைக் கவிஞன் நமக்குக் காட்டுகிறான்.

அறவழியில் நிற்பதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட வீடணன், வாழும் வீடுகூட அரக்கர் வாழ்க்கையோடு ஒன்றாமல் தனித்து இலங்கிற்று என்பதை, அது யாருடைய வீடு என்பதை அறியாத நிலையிலும் வீடணைப் பற்றி ஒன்றும் தெரியாத நிலையிலும் நுண்மாண் நுழைபுலம் மிக்க மாருதி வீடணன் வீட்டைப் பின்வருமாறு வருணிக்கிறான்:

நிந்தனை நறவமும், நெறி இல் ஊன்களும்
தந்தன கண்டிலேன், தருமதானமும்
வந்தனை நீதியும், பிறவும், மாண்பு அமைந்து
அந்தணர் மனை எனப் பொலிந்ததாம் அரோ.

( 6461)

மேலே காட்டிய இரண்டு பாடல்களையும் வைத்துப் பார்த்தால், அந்தணர் இல்லம் எனப் பொலிகின்ற ஒரு வீட்டில், ஒளிந்து வாழ்கின்ற தருமமாக வீடணன் இருக்கின்றான் என்பதனை அறிய முடிகின்றது.

வீடணன் என்ற பாத்திரத்தைப் பொறுத்தமட்டில் இரண்டு வினாக்கள் இன்றும் வினவப்படுகின்றன. அண்ணனுக்குக் காட்ட வேண்டிய நன்றியை மறந்து, சந்தர்ப்பம் கிடைத்தபொழுது பகைவனிடம் சேரலாமா என்பது முதல்வினா. அப்படியே சேர்ந்தாலும் அண்ணனைக் காட்டிக்கொடுகின்ற முறையில் பல உளவுகளை இராமனுக்குக் கூறலாமா என்பது இரண்டாவது வினா. இவ்விரு வினாக்களுக்கும் விரிவாக விடை கூறுவதற்கு இங்கு இடமில்லை என்றாலும், சுருக்கமாகச் சில கருத்துக்களைக் காண்பது நலம். இலங்கை வாழ்க்கையோடு ஒட்டாத வாழ்க்கை வாழ்கின்ற வீடணன் காட்டில் உறைகின்ற தவசிகளைப் போல வாழ்ந்து வருகிறான். இங்ஙனம் வாழ்கின்ற ஒருவன் கொழுகொம்பு கிடைக்காமல் காற்றில் அலைப்புண்டு தள்ளாடும் கொடிபோன்றவன் ஆவான். அக் கொடிக்குப் பக்கத்தில் ஒரு கொழுகொம்பு கிடைக்கும்பொழுது 'அது எத்தகைய மரம், அதைப் பற்றிப் படருவது நலமோ' என்று கொடி சிந்திப்பதில்லை. அதே போல ஒளிந்து வாழ்கின்ற

*இந்தத் தருமம் சந்தர்ப்பம் வந்தபொழுது இருந்த இடத்தை விட்டுப் பெயர்ந்துவிடுகிறது. அதுவும் அவனாகப் பெயரவில்லை. "விழிஎதிர் நிற்றியேல் விளிதி" (6372) என்று இராவணன் கூறிய பிறகே வீடணன் இலங்கை விட்டுப் புறப்பட்டான்.*

*புறப்பட்டு வானிடை நின்று, மறுபடியும் அண்ணனுக்கு ஓர் இறுதி எச்சரிக்கை செய்துவிட்டு, 'என் பிழை பொறுத்தி' (6376) என்று கூறிவிட்டுப் பெயர்கிறான். வானிடை நிற்கும்பொழுது அனலன், அனிலன், அரன், சம்பாதி என்ற அமைச்சர்கள் நால்வரும் வானிடை வந்து, வீடணனுடன் கூடுகின்றனர். இந்த வினாடிவரை இராமனிடம் செல்லவேண்டும் என்ற எண்ணம் வீடணனிடம் இருந்ததாகத் தெரியவில்லை. இராமன் பெயரைக் கேட்டதிலிருந்து வீடணனுடைய அகமனத்தின் ஆழத்தில் ஏதோ ஒரு புதிய மாற்றம் நிகழ்வதை அவன் உணருகின்றான். அந்த மாற்றத்தைத் தன்னுடன் வந்துள்ள அனலன் முதலானவர்களுக்கு வீடணன் எடுத்துக் கூறுகின்றான்.*

'அறம்தலை நின்றவர்க்கு அன்பு பூண்டனென்;
மறந்தும் நன்புகழ் அலால் வாழ்வு வேண்டலென்;
பிறந்த என்உறுதி நீ பிடிக்கலாய்' எனத்
துறந்தனென்; இனிச் செயல் சொல்லுவீர் என்றான்

(6381)

*இதிலிருந்து, இலங்கையிலிருந்து புறப்படும்பொழுது இராமனுடன் சேரவேண்டும் என்ற எண்ணத்துடன் வீடணன் வந்தான் என்று கூறுவது காப்பியத்தோடு மாறுபடுவதாகும். ஆகாயத்திலே நின்று அமைச்சர்களைப் பார்த்து 'இனிச் செயல் சொல்லுவீர்' என்று கேட்பதன்மூலம் உடன் வந்துள்ள அமைச்சரை நன்கு மதித்து அவர்கள் ஆலோசனை கேட்கும் இயல்புடையவன் வீடணன் என்பதை அறியமுடிகிறது. யாருடைய ஆலோசனையையும் கேட்காத இராவணனிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவன் வீடணன் என்பதை அறிகிறோம்.*

'யாது இனிச் செயல்' என்று கேட்ட வீடணனுக்கு, கல்வியில் மேம்பட்ட அமைச்சர்கள் பின்வருமாறு விடைகூறினர்:

'மாட்சியின் அமைந்தது வேறு மற்று இலை;
தாட்சி இல் பொருள் தரும் தரும மூர்த்தியைக்
காட்சியே இனிக் கடன்' என்று கல்வி சால்
சூட்சியின் கிழவரும் துணிந்த சொல்லினார்' (6382)

இந்த நிகழ்ச்சியை இவ்வளவு விரிவாகக் கம்பன் பாடுவதற்கு ஒரு காரணம் உண்டு. இராமன் வந்ததிலிருந்தே 'ஒரு சூழ்ச்சி செய்து அவனிடம் போகவேண்டும் என்று வீடணன் நினைத்தான்' என்று பலரும் கூறும் கூற்று முற்றிலும் தவறானது என்பதைக் காட்டவே கம்பன் இதனைப் பாடுகிறான். தீயனே ஆயினும் இராவணன்பால் அன்பு கொண்ட வீடணன் அந்த இராவணன் 'இந்திரப் பெரும்பதம் இழக்கின்றான்' (6143) என்றும், 'புத்திரர், குருக்கள், பொருஇல் கேண்மையர், மித்திரர், அடைந்துளோர், மெலியர், வன்மையோர் இத்தனை பேரையும் (6375) அழிக்கத் துணிந்தான் என்றும் நினைந்து எல்லையற்ற வருத்தம் அடைகிறான். அறத்தின் அடிப்படையில் எவ்வளவு எடுத்து ரைத்தாலும் இராவணன் கேட்கப்போவ தில்லை என்பதை அறிந்து வீடணன், நந்தி சாபம், வேதவதி சாபம், இரணியன் கதை என்பவற்றை எடுத்துக் கூறி அச்சமூட்ட முனைகிறான். இராவணன் எதற்கும் மசியப்போவ தில்லை என்பதை அறிந்து வீடணன் உறவுமுறை என்ற எஞ்சி இருந்த ஒரே கட்டை அறுத்துக்கொள்ள விரும்புகிறான். இதனை அறுத்துக்கொண்ட பின் 'மேலே என்ன செய்வது' என்று புரியாத நிலையில்தான் விண்ணிடை நிற்கின்றான். அண்ணன் என்ற உறவை அறுத்துக்கொண்டாலும், மூவுலகையும் ஆண்ட ஒருவன் வீழ்ச்சி அடைவது பொறுக்காமல் விண்ணிடை நின்றும் அறம் பல கூறுகிறான். இறுதியாக,

வாழியாய்! கேட்டியால்: வாழ்வு கைம்மிக
ஊழி காண்குறு நினது உயிரை ஓர்கிலாய்,

கீழ்மையோர் சொற்கொடு கெடுதல் நேர்தியோ?
வாழ்மைதான், அறம் பிழைத்தவர்க்கு, வாய்க்குமோ?
(6374)

என்று கூறி முடிக்கின்றான்.

நூற்றுக்கணக்கான பாடல்கள் மூலம் அண்ணனுக்கு அறம் உரைத்தவன் இறுதியாகச் சொன்ன வார்த்தைகள், "வாழ்மைதான், அறம் பிழைத்தவர்க்கு வாய்க்குமோ?" என்பதாகும். இத்துணைத் தூரம் அறத்தை நம்பிய ஒருவன், அறத்தின் மூர்த்திபால் சேர்ந்ததில் வியப்பொன்றுமில்லை. பிறந்தது முதல் இலங்கை நாகரிகத்தோடு ஒத்துப்போகாமல் கொழுகொம்பின்றி வாடிய வீடணன் என்னும் கொடி, அறத்தையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட கொடி, அறத்தின் மூர்த்தி இலங்கைக்கரையில் மறுபுறத்தில் வந்து தங்கி உள்ளான் என்பதை அறிந்தபொழுது, இடையீடு களையும், இடையூறுகளையும் கடந்து இராமனாகிய கொழுகொம்பைப் பற்றிப் படர்ந்ததில் வியப்பொன்று மில்லை.

அனைவரையும் இழந்து தனியனாய் நிற்கின்றபொழுது தான், இராவணன் இராமனை, 'இவனோதான் அவ்வேத முதற்காரணன்' என்று உணருகின்றான். அறவழியில் செல்லாத அவனுக்கே இந்நல்லுணர்வு இறுதி நேரத்தில் வந்துற்றது என்றால், மனம், மொழி மெய்களால் அறத்தையே தழுவி நின்ற வீடணனுக்கு இராமனை அறிந்துகொள்வதில் கஷ்டம் எதுவும் ஏற்படவில்லை. எனவே, வீடணன் செய்தது சரியே என்று ஏற்பதில் தவறு ஒன்றுமில்லை.

அடுத்து நிற்கும் வினா, இராமனுக்கு இலங்கையின் இரகசியங்களை இவன் ஏன் கூறவேண்டும், அப்படிக் கூறுவது துரோகமல்லவா - என்பதாகும். இதனைப் புரிந்து கொள்வதற்கு, சில அடிப்படைகளை அறிய வேண்டும். இராமனிடம் சென்றுவிட்ட பிறகு, இராவணன் உறவு முற்றிலுமாகத் துறக்கப்படுகிறது. இது சரியா என்று கேட்பதில் பயனில்லை. இன்றும்கூட இச் சமுதாயத்தில் இது நடை பெறுகிறது. ஒரு கோத்திரத்தில் பிறந்த ஒருவன், மற்றொரு

கோத்திரத்தில் உள்ள ஒருவனுக்குத் தத்தாகப் போய்விட்டால், போன அன்றிலிருந்தே பெற்ற தகப்பனுக்கும் இவனுக்கும் உள்ள உறவு துண்டிக்கப்படுகிறது. பெற்ற தகப்பன் இறந்தால் அவனுக்குக் கொள்ளிபோடவோ, பதினாறு நாள் துயரம் அனுஷ்டிக்கவோ தத்துப்போனவனுக்கு உரிமை இல்லை. இதே கருத்தை வீடணன் கூற்றாகக் கம்பன் கூறுகிறான்.

விளைவினை அறியும் மேன்மை வீடணன், என்றும் வீயா
அளவு அறு ருெமைச்செல்வம் அளித்தனை ஆயின், ஐய!
களவு இயல் அரக்கன் பின்னே தோன்றிய கடமை தீர,
இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி' என்றான்
(6506)

'அரக்கன்பின் தோன்றிய கடமை தீரவேண்டும்' என்று விரும்புகிறான் வீடணன். சாத்திரப்படி தத்துப் போனவர்கட்கு இது பொருந்தும். ஆனாலும் பெற்ற தகப்பன் உறவு முற்றிலும் நீக்கப்படுவதில்லை. அதனால் மூன்று நாள் தீட்டு தத்தாக வந்தவனுக்கு உண்டு என்று கூறுவர். ஆனால், வீடணன், தத்துப் போனபொழுது முற்றிலுமாக அந்த உறவை வெட்டிக் கொள்ள விரும்புகிறான். அதனை எவ்வாறு செய்ய முடியும் என்று ஆராய்ந்த வீடணன் ஒரு முடிவுக்கு வந்து விடுகிறான். உயிர்கள் எல்லாவகை பந்தங்களில் இருந்தும் முற்றிலும் நீங்க வேண்டுமானால் அதற்கு ஒரே வழிதான் இருக்க முடியும். இறைவனுடைய நயன தீட்சை, ஸ்பரிச தீட்சை, திருவடி தீட்சை என்ற மூன்றில் ஒன்றைப் பெற்றால் பழைய பந்தங்கள் அறவே நீங்கிவிடும். இராமனுடைய பார்வையைப் (நயன தீட்சை) பெற்றதால் பழைய பந்தங்கள் நீங்கின என்றாலும், மூன்று தீட்சைகளிலும் சிறந்ததாகிய திருவடி தீட்சை பெறுவதன் மூலம் முற்றிலும் பந்தங்களைப் போக்கிக் கொள்ள முடியும் என்பதால், "இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி' என்று "உம்பரின் ஒருமுழம் உயர்ந்த ஞானத்தம்பி" ஆகிய வீடணன் வேண்டுகிறான். திருவடி தீட்சையின் பின்னர் இறைவனுக்குப் பணி செய்யும் தொண்டர்களில் ஒருவனாகி விடுகிறான். இறைவனைத் த்விர அவனுக்கென்று எந்த உறவும் இல்லை, அவன் பணியினை நிறைவேற்றுவதே தொண்டர்களின் கடமையாகும்.

இந்த நிலைமை அடைந்துவிட்ட வீடணனுக்கும், இராவணன் தம்பி வீடணனுக்கும் பெயர் தவிர வேறு எந்த ஒற்றுமையும் இல்லை. பழைய வீடணனுக்குரிய உறவுகள், கடமைகள், நியாயங்கள் என்பவை அந்தப் பழைய வீடணன் இறந்தபொழுது (திருவடிதீட்சை பெற்றபொழுது)அவனுடன் இறந்துவிட்டன. திருவடி தீட்சை செய்யப்பெற்ற வீடணன் புதுப்பிறவி எடுத்துவிட்டான். பழைய உறவு முறையில் அவன் இன்னின்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பது அறியாமை உடையதாகும். இப் புதிய வீடணன் இப் புதுப் பிறப்பிற்குக் காரணமான இராகவன் ஏவலைச் செய்வது தவிர அவனுக்கு என்று எதுவுமில்லை. இந்த நுண்மையான கருத்தைத்தான் கவிஞன் மில்டன் தன்னுடைய சானட் பாடல் ஒன்றில் ``They also serve who stand and wait என்று பேசுகிறான். எனவே, திருவடி தீட்சைக்குப்பின் புதிய வீடணன், இராகவனுடைய விருப்பப்படி அவனுக்குத் தேவையானவற்றைச் செய்வதே முறையாகும். இராவண உறவு, வீடணனுக்கு முற்றிலும் தவிர்ந்து விட்டது என்றால் இராவணன் இறந்த பிறகு அவனுக்கு வீடணன் நீர்க்கடன் செய்வது முறையா? என்ற வினா தோன்றும். இதனை எதிர்பார்த்த கவிஞன் இராகவனே நீர்க்கடன் முதலியவற்றைச் செய்யுமாறு வீடணனுக்கு ஆணையிட்டான் என்ற குறிப்பை "நீ இவனுக்கு, ஈண்டு சொன்னது ஓர் விதியினாலே கடன் செயத் துணிதி" (கம்பன் 9917) என்ற பாடலில் கூறுகிறான். நிகும்பலை யாகம் முதலியவைபற்றி அவன் கூறினது நியாயமே ஆகும். இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டால் ஒழிய, வீடணனுடைய செயல்களைப் புரிந்து கொள்ளமுடியாது. மேலும் அவன் துரோகி என்று கூறும் தவற்றினையும் செய்ய நேரிடும். இராவணன் தம்பியாகவே வீடணனை இராமன் நினைத்திருந்தான் என்றால் வீடணனைக் கடிந்துபேசும் சந்தர்ப்பங்களுக்கு இடமே இல்லை. தன்னுடைய தம்பி என்று ஏற்றுக்கொண்ட காரணத்தினால்தான் இலக்குவன் மயக்கம் உற்றபொழுது, "என்னைக் கெடுத்தனை, வீடணா நீ" (8227) என்று பேசுகிறான்.

இன்னும் விரிவாகச் சிந்திக்க வேண்டிய இப்பகுதி இடம் கருதி இத்துடன் நிறுத்தப்படுகிறது.

*கும்பகர்ணன்:* கம்பநாடனுடைய ஈடு இணையற்ற படைப்புகளில் அனுமனைப் போலவே கும்பகர்ணனும் ஒரு சிறந்த படைப்பாவான். அவன் உடலமைப்புப் பல மலைகள் ஒன்று சேர்ந்ததைப் போல் இருக்கும். இவ்வளவு பெரிய உடம்பைப் பெற்றுள்ள அவன் மிகப் பெரிதும் விரிந்ததுமான மனத்தையும் பெற்றிருந்தான். இராவணன், கும்பகர்ணன், வீடணன் என்ற மூவரிடமும் சகோதரர்கள் என்ற உறவுமுறை போகப் பல பொதுத்தன்மைகளும் இருந்தன. மூவரும் மிகச் சிறந்த கல்வியாளர்கள். ஆயிரம் மறைகளை அறிந்தவர்கள். புத்திக் கூர்மை, வர பலம், நல்லது கெட்டது என்பவற்றை அறிந்து காணும் அறிவின் விளக்கம் ஆகிய இவை இம்மூவரிடையேயும் பொதுக் குணங்களாகும். அறம் எது என்பதை மூவரும் நன்கு அறிந்திருந்தனர். தன்னலத்தின் மொத்த உருவாய் விளங்கிய இராவணன் தன் ஆற்றல் காரணமாகவும், வர பலம் காரணமாகவும் அறத்தை உதறிவிட்டான். நாளாவட்டத்தில் அறம் என்று ஒன்று இருப்பதையே மறந்துவிட்டான். இன்னும் கூற வேண்டுமாயின், அறத்தையும் தான் வெல்ல முடியும் என்ற பயித்தியக்கார முடிவிற்கு வந்தான். இவனை அடுத்துள்ள கும்பகர்ணன் அறத்தினை நன்கு அறிந்தவன். அதன்வழி நிற்க வேண்டும் என்று நினைப்பவன். அறத்தை உணர்தல், அதன்படி நிற்க விரும்புதல் என்ற இரு துறையிலும் கும்பகர்ணனும், வீடணனும் ஒரே நிலையில் நின்றவர்கள். அதை நிலைநிறுத்த முடியாதபொழுது அதனோடு வீழ்ந்து இறக்கத் துணிந்தான் கும்பகர்ணன். வீடணன் அதைவிட்டு விட்டுத் தன் வழியே செல்லத் துவங்கிவிட்டான்.

கும்பகர்ணனுடைய சகோதர பாசம் ஈடு இணையற்றது. மந்திராலோசனையில் தர்க்க ரீதியாகப் பேசுகிறான். முரண்பாட்டில் சிக்கியவர்கள் எந்த நிலையிலும் காலூன்றி நிற்க முடியாது என்று கூறவருகின்ற அவன்

'ஆசு இல் பரதாரம் அவை அம் சிறை அடைப்பேம்
மாசுஇல் புகழ் காதலுறுவேம்" (6122)

'மாசுஇல் புகழ் காதலுறுவேம், பேசுவது மானம் (ஆனால்) இடை பேணுவது காமம்; கூசுவது மானுடரை' என்ற இப்பாடல், கும்பகர்ணனின் நுண்மான் நுழைபுலத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது. பிறன்மனை நயப்பவன் பழி பாவங்களுக்கு ஆளாகமுடியுமே தவிரப் புகழ் பெறுவது என்பது இயலாத காரியம். அதிலும் கும்பகர்ணன் பயன்படுத்தும் இரண்டு சொற்கள் ஆழ்ந்து நோக்கற்குரியன. போரிடைச் சென்று வெற்றி பெற்று வருபவர்கள் அந்நாட்டு மகளிரைச், சிறை எடுத்துவருதல் அந்நாளில் இயல்பாகக் காணப்பட்ட ஒன்றாகும். சிறை எடுக்கப்பட்டவர்களில் பலர் எதிரிகளின் மனைவிமார்களாகவும் இருத்தல் கூடும். அப்படியானால் அது தவறு என்று கூறமுடியாது. அது அன்றைய அரசு தர்மம். இராவணன் அவ்வாறு செய்யவில்லை என்பதைச் சுட்டிக்காட்டவே 'ஆசுஇல் பரதாரம்' என்ற அடை மொழியைப் பயன்படுத்துகிறான் கம்பன். அவனே 'மாசுஇல்' என்று கூறுவதும் நோக்குதற்குரியது. இராவணனின் சினத்திற்கு அஞ்சிய அனைவரும் அவன் புகழ் பாடினர். ஆனால், உதட்டளவில் பாடப்பட்ட புகழ் குற்றமுடைய புகழாகும். அப்படிபட்ட புகழைக் கும்பகர்ணன் விரும்ப வில்லை; ஆகவே 'மாசு இல் புகழ்' என்று பேசுகிறான். அன்றியும் காமவயப்பட்டவன் மான அவமானங்களுக்கு அஞ்சமாட்டான். மானத்தைக் காக்க விரும்புபவன் காமத்திற்கு இடம் தர முடியாது. குலத்து மானம் பேசும் இராவணன், மனத்துள் ஒளித்து வளர்ப்பது காமத்தையே ஆகும். இவ்வாறு முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டி அறவுரை பகர்கின்றான் கும்பன்.

இராவணனைப் பொறுத்த மட்டில் தற்பெருமை பேசித் திரிபவன், ஆனாலும் இசை, புகழ் இரண்டிலும் மிக்க விருப்பம் கொண்டவனாவான். இவ்விரண்டையுமே தன் பலத்தால், அதிகாரத்தால் பெற்றுவிட முடியும் என்று கருதுகின்றான். தற்பெருமையும், தருக்கும் கொண்டவர்கள் நடுநிலையோடு இருந்து ஒன்றை எடைபோடும் தகுதியை இழந்துவிட்டவர்கள் ஆவார்கள். எனவே, தேவர்களும், முனிவர்களும் தன்னைப் புகழ்ந்துரைப்பது வெற்றுரை

என்பதை அறியாதவனாகிய இராவணன், அவை அனைத்தும் உண்மை என்றே கருதி விட்டான்.

இதன் எதிராகக் கும்பகர்ணன் தற்பெருமையோ, தருக்கோ கொள்ளாமையால் நடுநிலையில் இருந்து எதனையும் ஆயும் மனத் திடம் பெற்றிருந்தான். இராவணன் கூட்டிய மந்திரசபையில் கும்பகர்ணன் பேசுவது அவனது கூர்ந்த மதியையும், ஆழ்ந்த சிந்தனையையும், அகன்ற கல்வியையும் அறிவிப்பதாக உள்ளது. தொடக்கத்திலேயே "நான்முகன் மரபில் வந்தவனாகிய நீ தீயினை விரும்பி மடி கட்டிக்கொண்டாய். இதன் விளைவு என்னவாகும் எ சிந்திக்கவில்லை (6118). மயன் அமைத்த உன் நகரம் அழிந்து என்று வருந்துகிறாய், உன் அரசியல் ஆடிப்போய்விட்டது என வருந்துகிறாய். இப்படி வருந்தும் நீ, மானிடச் சாதியைச் சேர்ந்தவன் மனைவியைக் கொண்டு வந்துச் சிறைவைத்தாய். முழுப் பாவிகளுக்குக்கூட இதைவிட மோசமான பழிவருமா என்பது ஐயமே (6119). என்றைக்கு மற்றொருவன் வீட்டில் வாழும் தவக்கோலம் கொண்ட பெண்மணியைக் கண்டு, ஒரு சிறிதும் இரக்கம் காட்டாமல் நீதி நூல்கள் கூறுபவற்றை மறந்து சிறையில் அடைத்தாயோ, எந்த வினாடி இச்செயலை செய்தாயோ, அந்த வினாடியே அரக்கர் புகழ் மாயத் தொடங்கிவிட்டது. கீழ்மக்கள் செய்யும் புலைத்தொழிலைச் செய்துவிட்டு இசை பெறவேண்டும் என்று நினைப்பது அறிவின்பாற்பட்ட தாகுமோ? (6121) குற்றம் இல்லாத ஒருவனுடைய தாரத்தைச் சிறை அடைப்பதும், இதற்கு முற்றிலும் பொருந்தாத குற்றமற்ற புகழை விரும்புவதும், காமத்தை மனத்தில் வைத்துக்கொண்டு, மானத்தைப் பெரிதாக மதிக்கிறேன் என்று சொல்வதும், இந்திரனை வெல்லும் ஆற்றல் உடைய நீ, இந்த இரண்டு மனிதர்களைக் கண்டு அஞ்சுவதும் எவ்வளவு பொருத்தமற்ற செயல்கள் என்பதை அறிவாயோ? (6122). இவ்வாறு தர்க்கரீதியாகப் பேசினான் கும்பன். இந்த ஐந்து பாடல்களிலும் இராவணன் பேச்சிலும், செயலிலும் உள்ள முரண்பாட்டை மிக வெளிப்படையாக அவன் எதிரிலேயே எடுத்துக் காட்டுகிறான். ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தவ னாகிய

இராவணன் ஒரு தவத்தியை, அவள் கணவன் இல்லாத நேரத்தில் இரக்கம் ஒரு சிறிதும் இல்லாமல் கவர்ந்து சிறைவைப்பது மாபெரும் குற்றமாகும். போரில் பிடித்த பெண்களைச் சிறைவைப்பது உண்டு என்றாலும், இராவணன் வஞ்சகத்தால் கவர்ந்து வந்ததும், அவள்மேல் ஆசை கொண்டிருப்பதும் அவளை விழுந்து வணங்குவதும் எவ்வளவு கேவலமான செயல்கள் எனப் பேசுகிறான். கீழ்மக்கள் செய்யும் இச்செயலைச் செய்துவிட்டு 'இசையொடும், புகழொடும் வாழவேண்டும், அரக்கர்குல மானத்தோடு வாழவேண்டும்' என்று வாய் கிழியப் பேசுகிறான். இவை இரண்டும் ஒன்று சேரா என்பதை அற்புதமாக எடுத்துக்காட்டி, "புன்தொழிலினால் இசை பொறுத்தல் புலமைத்தோ?" (6121) என்பதையும் "ஏயின் உறத்தகைய இத்துணையவேயோ?" (6118) என்றும், "பாவியர் உறும்பழி இதின் பழியும் உண்டோ" (6119) என்றும் கூறித் தர்க்கரீதியான தன் வாதங்களுக்கு முடிவாக மேலே கூறியவற்றைக் கூறி முடிக்கிறான் கும்பகர்ணன். அறிவையும் கல்வியையும் தெளிந்த சிந்தனையையும் துணையாகக் கொண்டதால் கும்பகர்ணன் அறிவின் அடிப்படையில் நின்று தருக்கம் பேசுகிறான். இவ்வாறு கும்பன் பேசக் காரணமுண்டு. இராவணனின் "ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்த" மனநிலையை நன்கு அறிந்தவன் ஆதலால் அறிவின் துணைகொண்டு அவன் தவற்றை எடுத்துக்காட்ட விழைகின்றான். இராவணனைப்பற்றிக் கும்பன் கொண்டிருந்த கருத்தாகும் இது.

மந்திரசபையில் அனைவரோடும் ஒருங்கிருந்த வீடணன் அண்ணனுக்கு அறவுரைக் கூற வேறு வழியினைக் கையாளுகிறான். அறவழி, தருக்கம் என்ற இரண்டையும் அறிந்தவன் இச்செயலைச் செய்யமாட்டான். எப்பொழுது இச்செயலைச் செய்தானோ அப்பொழுதே அவன் அறம், தருக்கம் என்ற இரண்டையும் மறந்துவிட்டான் எனத் தெரிகிறது. எனவே, கும்பகர்ணனைப் போல் அல்லாமல் வீடணன் வேறு வழியில் பேச முற்படுகிறான். காமத்தின் அடிப்படை தன்னலமும் அகங்காரமுமே ஆகும். தவறான

காம வழிப்பட்டவனுக்கு அடிப்படையில் தன்உயிர்மேல் ஆசை இருந்தே தீரும். அந்த உயிர் இருந்தால்தான் மனமும், மனத்து வழிப்பட்ட காமமும் நிலைகொள்ள முடியும். எனவே எத்துணை வீறாப்பு பேசினாலும் இராவணனுக்குத் தன் உயிர்மேல் எல்லையில்லாப் பற்று உண்டு என்ற ஆழ்ந்த மனவியலைப் புரிந்துகொண்டான், வீடணன். தருக்கத்தையும், அறிவு வாதத்தையும், புண்ணிய பாவங்களையும், நன்மை தீமைகளையும் ஒருவன் அறிந்துகொள்ளாமல் செய்வது மீதூர்ந்த காமமாகும். அந்தக் காமாந்தகாரனை மேலே சொல்லிய அறிவு, தருக்கம், கல்வி என்பவற்றால் திருத்த முடியாது. ஆனால், இச்செயலைச் செய்வதால் அவன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று கூறினால், காமாந்தகாரனும் நின்று சிந்திக்கத் தொடங்குவான். எனவே, இராவணனுடைய மனத்தின் ஆழத்தில் புதைந்து கிடக்கும் தற்காப்புணர்ச்சியைத் தூண்டிவிடுகிறான் வீடணன். கர தூடணர்கள் வதத்தை அறிந்தபிறகு, இராம இலக்குவர்கள் "கொச்சை மானுடர் அல்லர்" என்ற உண்மையை நன்கு அறிந்துகொண்டான் இராவணன். கழிபெரும் காமத்தால் தூண்டப்பெற்றுச் சீதையைக் கொண்டுவரவேண்டும் என்ற திட்டத்தை முடிவு செய்துகொண்ட உடனேயே இராவணன் அதற்குரிய வழிகளை நன்கு சிந்தித்தான். இருவருடனும் போரிட்டுச் சீதையைக் கொண்டுவருவது இயலாத காரியம். தன் ஊரில் அல்லாமல் காட்டிற்குச் சென்று சிறை எடுக்க முயன்றால் தன் படைகளைக்கூட அங்குக் கூட்டிச் செல்லமுடியாது. இராம இலக்குவர்களைத் தனியேயும் வெல்லமுடியாது, படைகளை அழைத்துச் செல்லவும் முடியாது. எனவே, தன் காரியம் நிறைவேற வேண்டுமானால் அதைச் சூழ்ச்சியால்தான் செய்யமுடியும் என்று கண்டுகொண்டான், இராவணன். இராமன் ஒருவனே, கர தூடணர்களை வில் ஒன்றினால் மூன்று கடிகைக்குள் விண்ணில் ஏற்றினான் என்று கூறினாள் சூர்ப்பணகை. இராமன் ஒருவனுடைய பலம், இத்தகையது என்றால் இப்பொழுது இலக்குவனும் உடன் இருக்கிறான். எனவே, நேரிடையாகப் போரில் புகுந்தால் தன் உயிருக்கு இறுதி நேர்ந்தாலும் நேரலாம்

என்று அஞ்சினான். எனவே, மாரீசனை மானாக அனுப்பி இருவரையும் பிரித்து, பிராட்டியைச் சிறை செய்தான். இவை அனைத்திற்கும் ஆழமாக மறைந்து கிடப்பது இராவணன் தன் உயிர்மேல் கொண்ட ஆசையே ஆகும். இந்த நுணுக்கத்தைச் சுத்த வீரனாகியன கும்பன்கூட அறிந்து கொண்டானா என்று கூறுவதற்கில்லை.

"உம்பரின் ஒரு முழம் உயர்ந்த ஞானத்தம்பி" யாகிய வீடணன் பிறர் யாரும் அறியாத இந்த ரகசியத்தை அறிந்து கொண்டான். அதை நேரிடையாகச் சொல்லாமல், சீதையைக் கவர்ந்த செயல் இராவணன் உயிர்க்கு இறுதி மூட்டும் என்று சொல்லத் தொடங்குகிறான். அதற்குரிய காரண காரியங்களைத் தேர்ந்தெடுத்து வரிசைப்படுத்துகிறான் வீடணன்.

கயிலைநாதனிடம்கூடத் தனக்குத் தோல்வி இல்லை என்று சொல்லிக்கொண்டு இறுமாந்து நிற்கும் இராவணனைப் பார்த்து "உன்னுடைய வர பலத்தை மிகுதியும் நம்பி இருக்கிறாய். ஆனால், அந்த வரத்தில் மனிதர்களாலோ விலங்குகளாலோ கொல்லப்படக்கூடாது' என்ற வரத்தை நீ பெறவில்லை. மனிதர்களால் உனக்கு இறுதி நேரலாம் என்பதற்குக், கார்த்தவீரியனிடம் நீ தோற்றதும் (6149), விலங்குகளால் உனக்குத் தோல்வி உண்டு என்பதற்கு வாலியிடம் நீ தோற்றதும் (6150) உதாரணங்களாகும். எனவே, இப்பொழுது விலங்கும், மனிதர்களும் சேர்ந்து வந்திருக்கின்றனர். ஆதலால் உன் உயிருக்கு இறுதி நேருவது திண்ணம். இம்மட்டோடல்லாமல், வேகவதி என்ற பெண்ணின் சாபத்தையும் நீ பெற்றுள்ளாய். வேகவதியே இப்பொழுது சீதையாக வந்துள்ளாள் என்பதை நீ மறவாதே (6152). இராவணனுடைய வர பலத்திடம் உள்ள ஓட்டைகளை எடுத்துக்காட்டிய வீடணன், அவன் உயிருக்கு அஞ்ச வேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது என்பதை மிக அற்புதமாக எடுத்துக்காட்டுகிறான். மேலே கூறிய மூவருள் (மனிதர், விலங்கு பெண்) எவரேனும் ஒருவர் கூட அவனைக் கொல்லமுடியும் என்பதை விளக்கமாக எடுத்துக்காட்டி,

இப்பொழுது அந்த மூன்றுமே ஒன்றாகச் சேர்ந்துள்ளது என்பதையும் கூறுகிறான். மனிதரின் பிரதிநிதியாக இராமனும், விலங்கின் பிரதிநிதியாக அனுமனும், பெண்ணின் பிரதிநிதியாகச் சீதையும் இப்பொழுது ஒன்றாகச் சேர்ந்து அவனை எதிர்ப்பதால் இறுதி நிச்சயம் என்று எடுத்துக்காட்டுகிறான். உயிரச்சம் கொண்டவனுக்கு மேலும் அச்சத்தை விளைவிக்கவே இம்முறையைக் கையாளுகின்றான் வீடணன். இவனுடைய இந்த வாதத்தை எளிதில் புறக்கணிக்கிறான் இராவணன். வாலி என்ற ஒரு குரங்கினிடம் தோற்றால் கொலைவெறி உள்ள எல்லா குரங்கும் என்னை வெல்லும் என்று நினைப்பது தர்க்கரீதியாகத் தவறு என்கிறான் இராவணன். இராவணனுடைய இந்த அலட்சிய மனப்பான்மைக்கும் காரணம் அவனுடைய தன்னம்பிக்கை, வர பலம் என்று இரண்டுமே ஆகும்.

வேறு வழியில்லாத வீடணன், இந்த இரண்டு கோட்டைகளையும் (தன்னம்பிக்கை, வர பலம்) தகர்க்க நினைத்து இரணியன் வதையைக் கூறுகிறான். இரணியனுடைய தன்னம்பிக்கை, வர பலம் என்பவை, இராவணனுடையதை விடப் பல மடங்கு உயர்ந்தவை ஆகும். மனிதரால், விலங்கால் அழிவு வரக் கூடாது என்ற வரத்தை இராவணன் பெறவில்லை. இரணியன் அந்த வரத்தையும் தனித் தனியே பெற்று வைத்திருந்தான். பெண்ணாசை உடையவன் அல்லன் ஆதலால் எந்தப் பெண்ணின் மூலமும் அவனுக்கு அழிவு வரவில்லை. அந்த வரத்திலும் ஓர் ஓட்டை இருந்தது. விலங்காலோ, மனிதராலோ அழிவு வரக்கூடாத வரம். இவை இரண்டும் சேர்ந்த நரவிலங்கு இரணியனை அழித்துவிட்டது. இவ்வாறு எடுத்துக்காட்டுகிறான், வீடணன். வீடணன் வாதம் முழுவதிலும் மானம், வீரம், புகழ் என்ற ஒன்றுபற்றியும் அவன் பேசவில்லை.

தன் கருத்துக்கு மாறுபட்ட வாதங்கள் புரிந்த் கும்பகர்ணனிடம் இராவணன் கோபம் கொள்ளவில்லை, ஆனால், அதே காரியத்தைச் செய்த வீடணனிடம் ஏன்

சினம் கொள்ள வேண்டும்? 'விழி எதிர் நிற்றியேல் விளிதி' என்று ஏன் வீடணனிடம்மட்டும் கூறவேண்டும்? வீடணனுடைய வாதங்களைப் பொறுமையாகக் கேட்ட இராவணனுக்கு ஓர் உண்மை தெளிவாயிற்று. அந்த வீடணன் தன்னுடைய அகமனத்தின் ஆழத்தில் புதைந்திருக்கிற உயிராசை என்னும் ரகசியத்தைப் புரிந்து கொண்டான்; என நினைப்பதால்தான் இராவணன் கோபம் எல்லை கடந்தது. பிறர் அறியாவண்ணம் அடிமனத்தின் ஆழத்தில் புதைத்து வைக்கப்பட்டுள்ள இந்த இரகசியத்தை வீடணன் கண்டுகொண்டது இராவணனுக்கு அதிர்ச்சியையும் கோபத்தையும் உண்டாக்கி விட்டது. வீடணனைப் பார்க்கும் தோறும், தன் அகமனத்தின் ஆழத்தைப் புரிந்துகொண்டவன் என்ற எண்ணம் தோன்றுமாதலால் இராவணன் அவனைப் பார்த்து, 'என் முகத்தில் விழிக்காமல் ஓடிப் போ' எனப் பேச நேர்ந்தது. கும்பகர்ணன், வீடணன் என்ற இருவரிடையே உள்ள வேறுபாட்டை, அணுகுமுறையை வாழ்வின் குறிக்கோள்களை இதுவரை கண்டோம்.

குறிக்கோள்களும், அணுகுமுறையும் வெவ்வேறாக ஆகிவிட்டமையின் இருவரும் வெவ்வேறு வழிகளில் சென்றுவிட்டனர். சாரமற்ற தன் வாழ்க்கைக்கு மரணமே சிறந்த பரிசு, அதுவும் இராமன் போன்ற ஒருவன் கையால் இறப்பது புகழுடைய செயலே என்கிறான் கும்பன். போர்க்களத்தில் வீடணனைச் சந்தித்த கும்பன், "புலையுறு மரணமெய்தல் எனக்கு அது புகழதேயால்" எனக் கூறிவிடுகிறான். அண்ணன் பொருட்டாகத் தன் அழிவை இரு கரம் நீட்டி வரவேற்கத் துணிந்தவிட்டான் கும்பன். எந்த வகையில் பார்த்தாலும் அவன்மேல் குற்றம் சொல்ல வழியே இல்லை. உண்டவர்குரியது என்ற ஒரு சட்டத்தை வகுத்துக்கொண்டு, அந்த வளையத்துள் இருந்து வெளிவர மறுக்கிறான். இதனாலேயே கவிஞன், கும்பனுடன் போர்தொடங்கிய இராமன் பற்றிக்கூறவரும்பொழுது "வள்ளலும் மலர்க்கரம் விதிர்ப்புற்றான்" (7621) என்று கூறுகிறான். அப்பழுக்கற்ற மாபெரும் ஆற்றல் வடிவான கும்பன் நன்றிக்கடன் என்ற ஒன்றிற்காகவே இறக்கத் துணிந்து

போர்க்களம் வந்த ஒரு மாவீரன் என்பதை அறிந்ததும் இராமன் கைகள் நடுங்கின என்கிறான் கவிஞன்.

மானம் என்பதுபற்றி இராவணன் அடிக்கடி பேசினானே தவிர அதனைப் பெரிதாகப் போற்றியதாகத் தெரியவில்லை. ஆனால், கும்பகர்ணன் மானம் என்பது பற்றி அதிகம் பேசாவிட்டாலும் சந்தர்ப்பம் வரும்பொழுது மானத்தைப் பெரிதாக நினைக்கிறான். இறக்கப்போகும் தறுவாயில் தன் முகத்தில் மூக்கு இல்லாமையை உணர்ந்து, இராமனைப் பார்த்து,

> "மூக்கிலா முகமென்று முனிவர்களும் அமரர்களும்
> நோக்குவார் நோக்காமை, நுன் கணையால் என் கழுத்தை
> நீக்குவாய்; நீக்கியபின், நெடுந்தலையைக் கருங்கடலுள்
> போக்குவாய்............................................................................"(7628)

என்று வரம் வேண்டுகிறான். இறந்த பிறகுகூடத் தன் உடலைப் பார்த்து யாரும் எள்ளி நகையாடிவிடக்கூடாது என்று நினைக்கும் கும்பகர்ணனின் மான உணர்ச்சி நம்மை வியக்கவைக்கிறது. இத்தகைய ஒரு பாத்திரப் படைப்பை வேறு எந்த இலக்கியத்திலும் காண முடியாது.

இந்திரசித்து : சுந்தர காண்டத்தின் பிணிவீட்டு படலத்தில், இந்திரசித்தின் ஒரு பகுதியை நாம் காணமுடிகிறது. இந்திரசித்தனையும், கும்பகர்ணனையும் கவிச்சக்கரவர்த்தி நமக்கு அறிமுகம் செய்யும் நேரத்தில் அவர்கள் உறங்கிக்கொண்டிருக்கின்றனர். காப்பியத்தில் உள்ள பெருவீரர்கள் வரிசையில் இருவரும் இடம் பெறுகின்றவர்கள். சாதாரணமாக, பெருங்காப்பியங்களில் பெருவீரர்களை கவிஞன் அறிமுகப்படுத்தும்பொழுது அவர்கள் போர் செய்யும் சந்தர்ப்பத்திலோ சூளுரை வழங்கும் சந்தர்ப்பத்திலோதான், அறிமுகம் செய்வர். உலகக் காப்பியங்கள் பெரும்பாலானவற்றில் இம்முறைதான் கையாளப்படும். இதற்கு மாறாக, கும்பன், இந்திரசித்து ஆகிய இருவரையும் உறங்குகின்ற நிலையில் அறிமுகம் செய்கிறான் கம்பன். உறங்குகின்ற இவர்களை மறைவாக நின்று காண்பவன்

மாருதி என்பதை மறத்தலாகாது. அறிவின் வடிவமாகிய மாருதி முதன்முதலில் இன்னார் என்று அறியாமலேயே தனித்தனியாக இவர்களைக் காண்கிறான். உறங்குகின்ற இந்திரசித்தனைக் காணுகிற மாருதியின் மனத்தில் தோன்றும் எண்ணங்களைக் கம்பன் இதோ கூறுகிறான்:

..............................கணிச்சியான் மகனோ?
அளையில் வாள் அரி அனையவன்-யாவனோ? அறியேன்;
இளைய வீரனும், ஏந்தலும், இருவரும், பலநாள்
உளைய உள்ளபோர் இவனொடும் உளது' எனஉணர்ந்தான்
(4975)

இவனை இன்துணை உடையபோர் இராவணன், என்னே
புவனம் மூன்றையும் வென்றது ஓர் பொருள் எனப்புகறல்?
சிவனை, நான்முகத்து ஒருவனை, திருநெடுமால் ஆம்
அவனை, அல்லவர் நிகர்ப்பவர் என்பதும், அறிவோ?
(4976)

பகைமை, வெறுப்பு, சினம் இவற்றால் நிறைந்த மனத்துடன் உறங்குகின்ற பகைவனைப் பார்க்கின்றான் அனுமன். அவன் இந்திரசித்து என்பதும், இராவணன் மகன் என்பதும் அனுமனுக்குத் தெரியாத நிலை, என்றாலும் அவன் போற்றி வணங்கும் இராமனும், இளையவனும் இந்த உறங்குகின்ற வீரனுடன் பலநாள் போர் செய்ய வேண்டிவரும் என்று கணித்துவிடுகிறான், இது வியப்பினும் வியப்பே! ஓர் அம்பால் இராமன், வாலியின் உரம் கிழித்ததை நேரே கண்ட அனுமன். இராமனின் வன்மையை நன்கு எடையிட்டு அறிந்தவன் அனுமன். அதே அம்பை உடைய இராமனும், அவன் தம்பியும் சேர்ந்துகூடப் பலநாள் இவனுடன் உளைய உள்ள போர் உண்டு என்ற முடிவிற்கு அனுமன் வந்தான். இந்த வியப்பு மற்றொரு வகையிலும் வெளிப்படுகிறது. மூவுலகத்தையும் வென்றவன் என்றதால் அவன்மாட்டுப் பெருமதிப்பு வைத்திருந்தான். இப்பொழுது இந்திரசித்தனைப் பார்த்தவுடன் இப்படி ஒரு துணைவன் இராவணனுக்குக் கிடைத்தவுடன் அவன் மூன்றுலகத்தையும் வென்றான் என்று

வியப்பதில் ஒரு பொருளே இல்லை என்று கருதுகிறான் அனுமன்.

ஊர்தேடு படலத்தில், இந்திரசித்தனை இவ்வாறு அறிமுகம் செய்த கவிஞன், பிணிவீட்டு படலத்தில் அனுமனோடு இந்திரசித்து போர் செய்வதை நமக்குக் காட்டுகிறான். அனுமனைப் பிணித்து இராவணனிடம் கொண்டு காட்டும்பொழுது, இந்திரசித்தனின் அறிவு திறத்தையும், பகைவரை மதிக்கும் பண்பினையும் நமக்கு எடுத்துக்காட்டுகிறான். தந்தையைப்போல் பகையைக் குறைத்து மதிக்கும் தவற்றை இந்திரசித்தன் செய்யவில்லை.

அடுத்தபடியாக இராவணன் மந்திரசபையில் இந்திரசித்தன் பேசுவதைக் காட்டுகிறான் கவிஞன். பின்னர் நாம் அவனைக் காண்பது நாகபாசப் படலத்தி லாகும். அதிகாயன் இறந்தான் என்ற செய்தி கேட்டுத் துயரத்தில் ஆழ்ந்து நிற்கும் இராவணனை இந்திரசித்தன் காணவருகிறான். அதிகாயன் இறந்த செய்தி அறிந்து, தந்தையிடம் சீறுகிறான் இந்திரசித்தன். பகைவர்களின் வன்மையைக் கரதூடனர் வதம் முதல் ஓரளவு அறிந்திருந்தும், அக்க குமாரனையும், அதிகாயனையும் இராவணன் போருக்கு அனுப்பியதே தவறு என்று ஏசுகிறான். இளம்பிள்ளைகளாகிய இவர்கள் இருவரையும் நீயே போருக்கு அனுப்பிப் பலி கடாவாக மாற்றினாய் என்ற கருத்தில்,

'கொன்றார் அவரோ? "கொலை சூழ்க!" என் ! கொடுத்தாய்;
வன் தானையர் மானிடர் வன்மை அறிந்தும் மன்னா!
என்றானும் எனைச் செல ஏவலை; இற்றது' என்னா
........................................................................................ (8008)

என்று கூறினான்.

நடந்தவற்றை அறிந்துகொண்ட இந்திரசித்தன் ஒருவாறு இலக்குவன் ஆற்றலை எடையிட்டுக் கொண்டான். எனவே, சாதாரணத் தேவர்களோடு புரிந்த போர்களில் பயன்படுத்திய

அம்புகளை, இப்பொழுது புறக்கணித்துவிடுகிறான். இரண்டு முக்கியமான கணைகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்கிறான். இந்த இரண்டும் தேவர்கள் முதலானவர்களோடு செய்த போரில் பயன்படுத்தப்படாதவை. எனவே ஆழ்ந்த சிந்தனையுடன் "பாம்பின் படையும், பாசுபதத்தினோடு" (8013) இதுவரை பாதுகாத்து வைத்திருந்தேன். அதனைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் வந்துவிட்டது என்றால், இலக்குவனைப் பாராமலேயே இந்த இரண்டும் அவனுக்குரியவை என்ற முடிவிற்கு வந்துவிட்டான். இதன் மூலம் பகைவனைத் துல்லியமாக எடை இடும் இந்திரசித்தின் அறிவுத் திறத்தை அறிந்துகொள்ளச் செய்கிறான் கம்பன். இராவணன் சீதையைக் கவர்ந்த செயலை இந்திரசித்தன் மனம் ஒப்பி ஏற்கவில்லை என்றாலும், தந்தைக்காகப் போர்புரிய வேண்டும் என்று இதுவரை நினைத்திருந்தான்., தன் அருமைத்தம்பி அதிகாயனை இலக்குவன் கொன்றுவிட்டான் என்று கேள்விப்பட்டவுடன், இந்திரசித்தன் சினம் பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்துடன் மீதூர்ந்து செல்கிறது அதனால் தந்தையை நோக்கி,

கொன் நின்ற படைக்கலத்து எம்பியைக் கொன்றுளானை
அந் நின்ற நிலத்து அவன் ஆக்கையை நீக்கி அல்லால்,
மன் நின்ற நகர்க்கு இனி வாரலென்; வாழ்வும் வேண்டேன்
(8010)

அனுமனைப் பிணித்தபோது, தந்தையின் மானத்தைக் காக்க அச்செயலைச் செய்தான். அப்போரில் பழி வாங்கும் நோக்கம் எதுவுமில்லை. அக்க குமாரனை அனுமன் கொன்றது உண்மை என்றாலும், அவனைப் பழிவாங்க நினைக்கவில்லை. ஆனால், அதிகாயன் இறந்தபிறகு, அதுவும் தான் இதுவரை காணாத இலக்குவனால் அச்செயல் நிகழ்ந்தது என்றவுடன் தன் இன மானம் காக்க, இலக்குவனை ஒழித்தே தீரவேண்டும் என்ற எண்ணம் இந்திரசித்தனை முழுவதுமாக ஆட்கொண்டது.

*போர்க்களத்தில் வருகின்ற இந்திரசித்தனைப் பார்த்து, 'இவன் யார்' என்று வீடணனைக் கேட்கிறான். வீடணன் கூறிய இரு வரி விடை சிந்திக்கவேண்டிய தாகும்.*

'ஆரிய! இவன் இகல் அமரர் வேந்தனைப்
போர் கடந்தவன்; இன்று வலிது போர்' என்றான்.

(8029)

*இலக்குவன் வினாவிற்கு மிகச் சிறந்த முறையில் விடை அளித்த வீடணன், மிக்க பய பக்தியோடு இலக்குவனுக்கு அவன் கேளாமல் இருக்கையிலும் சில அறிவுரைகளைக் கூறத் தொடங்குகிறான். இலக்குவனைப் பொறுத்தமட்டில் அதிகாயனை வென்றுவிட்ட காரணத்தால், ஒரு வேளை இந்திரசித்தையும் அதேபோல எளிதாக வெல்லலாம் என்று நினைத்திருக்கக்கூடும் என்று வீடணன் கருதியதால், இந்த அறிவுரையினைக் கூறுகிறான். அப்படி ஒருவேளை இலக்குவன் நினைத்துவிட்டால் அது பேராபத்தில் முடியும் என்று வீடணன் கருதினான். ஆதலாலும், இவ்வறிவுரைகளைக் கூறினான்.*

"எண்ணியது உணர்த்துவது உளது, ஒன்று - எம்பிரான்!
கண் அகன் பெரும்படைத் தலைவர் காத்திட,
நண்ணின துணையொடும் பொருதல் நன்று; இது
திண்ணிதின் உணர்தியால், தெளியும் சிந்தையால்.

(8030)

"மாருதி, சாம்பவன், வானரேந்திரன்,
தாரை சேய், நீலன் என்று இனைய தன்மையார்,
வீரர், வந்து உடன் உற, - விமல! - நீ நெடும்
போர் செயத் தகுதியால் - புகழின் பூணினாய் !

(8031)

*'பலரையும் துணைக்கு வைத்துக் கொண்டு, நீ இவனுடன் போர் புரிய வேண்டும்' என்று சொல்லப்புகுந்த வீடணன், தன் சொல்லை இலக்குவன் அசட்டை செய்துவிடுவானோ என்ற கருத்தில், "திண்ணிதின் உணர்தியால்" என்ற ஒரு*

எச்சரிக்கையையும் தருகிறான். தன்னுடைய அண்ணனைத் தவிர வேறு யாரையும் வீரர் என்று கருதும் இயல்வுடையவன் அல்லன் இலக்குவன். மேலும், அவனுடைய அண்ணனே முன்னர்,

> 'இலக்குவ! உலகம் ஓர் ஏழும், ஏழும், நீ
> "கலக்குவென்" என்பது கருதினால் அது,
> விலக்குவது அரிது; அதுவிளம்பல் வேண்டுமோ?.
>
> (2416)

என்று கூறினான் என்றால், இலக்குவன் தன்னைப்பற்றி என்ன நினைந்திருந்தான் என்பதையும், அது ஓரளவு உண்மயும்கூட என்பதையும் அறிய முடியும். நுண்மாண் நுழைபுலம் மிக்கவனாகிய வீடணன், இலக்குவனோடு பழகிய சில நாட்களிலேயே அவனை நன்கு அறிந்திருந்தான். ஆதலால், மிக முக்கியமான நேரத்தில் சொல்லப்படும் அறிவுரையை அவன் கவனியாமல் அலட்சியமாக இருந்துவிடக்கூடும் என்று நினைத்தே, 'திண்ணிதின் உணர்தியால்' என்று எச்சரிக்கை செய்கிறான். அடுத்தபடியாக அவன் கூறும் இரண்டு சொற்கள் சிந்திக்கத் தக்கன. "தெளியும் சிந்தையால்" என்ற சொற்கள் அவன் எச்சரிக்கைக்கு அடிக்கோடிட்டுக் காட்டுவன வாகும். 'தெளிவான சிந்தனைய முதலில் ஏற்படுத்திக்கொண்டு, பிறகு வலுவாக நான் கூறுவதை உணர்வாயாக' என்று இவ்வளவு விரிவாக ஒரே பாடலில் வீடணன் கூற்று அமைந்திருப்பது கம்பன் கவித்திறத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு.

இதனைக் கேட்ட இலக்குவன் அறிவுத் தெளிவோடு 'மேலே என்ன செய்யவேண்டும்? என்று வீடணனையே வினவலாமா' என்ற நிலைக்கு வந்துவிட்டிருக்கவேண்டும். அந்த வினாவை எதிர்பார்த்து வீடணன், அடுத்த பாடலில் விடை கூறுகிறான். யார் யாரை உடனிருத்திக் கொள்ள வேண்டும் என்று பட்டியல் இடும் அவன், முதலில் மாருதியின் பெயரைக் கூறுகிறான். இறக்குந் தறுவாயில் வாலி, இராமனை நோக்கி,

"அனுமன் என்பவனை - ஆழி ஐய!- நின்செய்யசெங்கைத்
தனு என நினைதி,.................................. (4071)

என்று கூறிவிட்டான் ஆதலாலும், இலங்கைக்கு வந்த அனுமன் செய்த போர்த் திறனைக் கண்டான் ஆதலாலும், வீடணன் இப்பொழுது மாருதியின் துணை உனக்கு வேண்டும் என்று இலக்குவனைப் பார்த்துப் பேசுகிறான். அதற்கடுத்தபடியாக, சாம்பவன், சுக்கிரீவன், அங்கதன், நீலன் என்பவர்களையும் இலக்குவன் துணையாகக் கொள்ளவேண்டும் என்று வீடணன் கூறுகிறான். இவ்வாறு கூறிமுடித்த பிறகும், 'இராமன் கையில் கோதண்டம் போன்றவனாகிய அனுமனையே கட்டிவிட்டான் என்றால், இந்திரசித்தன் வலிமை எத்தகையது எனபதை நீ அறிய வேண்டும்.' (8033) என்றும் பேசி முடிக்கிறான்.

அடுத்து, இந்திரசித்தன் அனுமன் இருவரிடையே நடைபெறும் போர் சுவையானது. நூற்றுக்கணக்கான அம்புகளை மாருதியின் உடலில் பாய்ச்சி, குருதி வெள்ளத்தில் ஓடவிடுகிறான், இந்திரசித்தன். இதன் எதிராக மாருதி, ஒரு மலையை எடுத்து இந்திரசித்தன்மேல் எறிய, அது பொடியாகிறது. மாருதி முதலிய அனைவருடைய உடம்புகளும் முள்ளம்பன்றிபோல் துளைத்துள்ள பாணங்களோடுகாட்சி அளிக்கின்றன. இலக்குவன் இவர்களைப் பார்த்தவுடன், இந்திரசிதத்ன் ஆற்றலை ஒருவாறு அறியமுடிகிறது. இலக்குவனுக்கும் இந்திரசித்தனுக்கும் நீண்ட போர் நடைபெறுகிறது. அப்போரின் கடுமையைக் கண்ட சுத்த வீரனாகிய இந்திரசித்தன், இலக்குவன் ஆற்றலை மனம் திறந்து பாராட்டுகிறான்.

அந்நரன்; அல்லன் ஆகின், நாரணன் அனையன்;அன்றேல்,
பின், அரன், பிரமன் என்பார்ப் பேசுக; பிறந்து வாழும்
மன்னர் நம்பதியின் வந்து, வரிசிலை பிடித்த கல்வி
இந்நரன்தன்னோடு ஒப்பார் யார் உளர், ஒருவர்?' என்றான.
(8121)

இவன் மனிதனல்லன், நாராயணனே ஆவான், இல்லை சிவனே ஆவான், இல்லை பிரம்மனே ஆவான் என்று

சொல்பவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கட்டும். இன்றுவரை உலகிடைப் பிறந்து, கையில் வில்லேந்திப் போர்புரிந்தவர்களுள் இவனை ஒத்தவர்கள் இதுவரை பிறக்கவில்லை என்பதே இந்திரசித்தன் பாராட்டு.

இப்பாராட்டு, இந்திரசித்தன் வாயினிலே எப்பொழுது வருகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். தேரை இழந்து, சாரதி இழந்து, கொடியையும் இழந்து தனியனாய் நிற்கின்றான், இந்திரசித்து. இந்த நிலையில் சினமும், வெறுப்பும் தலைதூக்கி நிற்பதுதான் இயல்பு. ஆனால், ஒரு கடுகளவும் காழ்ப்புணர்ச்சி என்பது இல்லாமல் தன்னை இக்கதி செய்தவனை மேலே சொன்ன முறையில் பாராட்டுகிறான் என்றால், இந்திரசித்தனுடைய சிறப்பு ஈடு இணையற்றதாய், இமயம் போல் உயர்ந்துவிடுகிறத. கீழே நின்ற இந்திரசித்தனின் கவசத்தையும் இலக்குவன் பிளந்துவிட்ட நிலையில் இந்திரசித்தன் மறைந்துவிடுகிறான்.

'அவன் எதற்காக மறைந்தான்? மேலே என்ன செய்யப்போகிளான்' என்பதை 'விளைவினை அறியும் வென்றி' வீடணன் கூடத் தெரிந்துக்கொள்ளவில்லை. போரின் இடையே கிடைத்த ஓய்வு என்று வானரர்களும், இலக்குவனும் தங்கள் காயங்களைப்பற்றிக் கவனிக்கத் தொடங்கினர். விண்ணில் மறைந்த இந்திரசித்தன், நாகபாசத்தை எய்துவிட்டு, அரண்மனைக்குத் திரும்பி விடுகிறான். இலக்குவனை வென்றுவிட்டதாகவும், இராமன் போர்க்களத்தில் தென்படவில்லை என்பதாகவும் தந்தையிடம் கூறிவிட்டு ஓய்வு கொள்ளச் சென்றுவிட்டான்.

அனைவரும் நாகபாசத்தில் பிணிப்புண்டதும், வீடணனைத் தவிர யாரும் களத்தில் நிற்கவும் இல்லை என்ற செய்தி இராமன் செவிகளுக்கு எட்ட, வெகுவேகமாக வந்த இராமன், இலக்குவன், மாருதி நிலைகண்டு கதறுகிறான். பக்கத்தில் நின்ற விடணனைப் பார்த்து, 'இலக்குவனுக்கும், இந்திரசித்தனுக்கும் போர் தொடங்கிவிட்டது என்பதை உடனே எனக்குச் சொல்லி இருக்க வேண்டும்' என்ற கருத்தில்,

"எடுத்த போர், இலங்கை வேந்தன் மைந்தனோடு இளைய கோவுக்கு
அடுத்தது" என்று, என்னை வல்லை அழைத்திலை, அரவின் பாசம்
தொடுத்த கை தலையினோடும் துணித்து, உயிர் குடிக்க, என்னைக்
கெடுத்தனை; வீடண! நீ"

(8227)

என்று இராமன் பேசுகிறான்.

இந்நிகழ்ச்சியில் வீடணன்மேல் குறைகூற எந்தக் காரணமும் இல்லை. நாகாஸ்திரத்தை இந்திரசித்தன் பயன்படுத்துவான் என்று வீடணன் எதிர்பார்க்கவில்லை. தேவர்களிடம் பெற்ற நாகாஸ்திரம் இலக்குவனை ஒன்றும் செய்யாது என்றும் வீடணன் கருதியிருத்தல் வேண்டும். அதனால்தான் அவன் இராமனை அழைக்கவில்லை. அப்படி இருந்தும், தம்பியை இழந்துவிட்டோம் என்ற துயரத்தில், இராமன் பேசிய பேச்சுக்களாகும் இவை. ஆனால், இவ்வாறு பேசிய இராகவன், கருடன் வந்து, நாகபாசத்தின் பிடியிலிருந்து அனைவரையும் மீட்டவுடன் தான் அவசரப்பட்டு வீடணனைக் குற்றங்கூறியதை நினைத்து வருந்துகிறான் என்று நினைக்க வேண்டியுள்ளது. இவ்வாறு நினைக்கத் தக்க காரணம் ஒன்று உண்டு. நிகும்பலை அழித்து, இந்திரசித்தனை வென்று, அந்த வெற்றிப் பெருமிதத்தோடு இந்திரசித்தன் தலையையும் எடுத்துக்கொண்டு இலக்குவன், அனுமன், வீடணன் ஆகிய மூவரும் இராமனைக் காண வருகின்றனர். இலக்குவன் வெற்றியை அறுபட்ட தலையின் மூலம் அறிந்துகொண்ட இராமன் மனநிலையையும் அவன் ஒரு வார்த்தைக்கூடப் பேசாமல் இருந்ததையும் கம்பன் படம்பிடித்துக் காட்டுகிறான்.

தலையினை நோக்கும்; தம்பி கொற்றவை தழீஇய பொன்தோள்
மலையினை நோக்கும்; நின்ற மாருதி வலியை நோக்கும்:

சிலையினை நோக்கும்; தேவர் செய்கையை நோக்கும்;
செய்த
கொலையினை நோக்கும்; ஒன்றும் உரைத்திலன், களிப்புக்
கொண்டான். (9181)

என்ற பாடல் மூலம் அந்த நால்வரிடையே நடைபெற்ற ஒரு நாடகத்தையே நம் கண்முன் கொண்டுவருகிறான் கம்பன். இந்த மவுனத்திற்குப் பிறகு, உதிரம் படிந்த தம்பியின் தோள்களைத் தழுவிக்கொண்டு, "சீதை என்னிடம் வந்துவிட்டதாகவே கருதுகிறேன்" என்று கூறுவதோடு, "தம்பி உடையான் பகை அஞ்சான்" என்ற முதுமொழியை மெய்ப்பித்தாய் என்றுதான் கூறினானே ஒழிய, இலக்குவன் வெற்றியைப் பாராட்டிப் பேசவில்லை. ஆனால், கடும்போர் செய்து வெற்றி பெற்ற இலக்குவனையோ அவனைத் தோளில் சுமந்து ரதம் போல் உதவிய அனுமனையோ பாராட்டாமல் விட்டுவிட்டு, இராமன் பேசும் சொற்கள் வியப்பைத் தருவதாகும். இலக்குவனைப் பாராட்டாதது மட்டுமில்லை, அதனெதிராக 'இலக்குவா! இவ்வெற்றி நின்னால் விளைந்தது அன்று, அனுமன் என்பவனாலும் அன்று, உண்மையில் இது வீடணன் தந்த வெற்றியே ஆகும்' என்ற கருத்துப்பட,

'ஆடவர் திலக! நின்னால் அன்று; இகல் அனுமன் என்னும்
சேடனால் அன்று; வேறு ஓர் தெய்வத்தின் சிறப்பும் அன்று;
வீடணன் தந்த வென்றி, ஈது' என விளம்பி மெய்ம்மை,
ஏடு அவிழ் அலங்கல் மார்பன் இருந்தனன், இனிதின்,
இப்பால். (9185)

இராமன் இவ்வாறு கூறக் காரணம் என்ன? மறைவாக நடைபெற்ற நிகும்பலை யாகத்தை அறிந்துவந்து சொன்னது பெரிய உதவிதான், மறுப்பதற்கில்லை. அந்த உதவிக்காக "வீடணன் தந்த வெற்றி ஈது" என்று இராமன் கூறுவது முறையாகுமா?

ஆழ்ந்து சிந்தித்தால், இரண்டாவது முறையாகப் பச்சாதாப மேலீட்டினால் இராமன் இவ்வாறு கூறுகிறான் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். "என்னைக்

*கெடுத்தொழிந்தனை" என்று அவசரப்பட்டுக் கூறிவிட்டு, பிறகு தான் கூறியதற்கு வருந்தி அதற்கு ஒரு கழுவாய் தேடவேண்டும் என்று நினைத்து, அதற்கு ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, வீடணன் மனப்புண்ணுக்கு மருந்திடுவது போல, 'வீடணன் தந்த வெற்றி ஈது' என்று இராமன் கூறினான் என்று நாம் நினைப்பதில் தவறில்லை. முன்னர், வாலி யார் என்று முழுவதும் தெரிந்துகொள்ளாமலே, 'நின்னைச் செற்றவர், என்னைச் செற்றார் (3812) தலைமையோடு நின்தரரமும், உனக்கு இன்று தருவென்' (3855) என்று அவசரப்பட்டு வாக்களித்துவிட்டு வாலியின் உரையாடலால் மனம் வருந்திய இராகவன், அதற்கு கழுவாய் தேடும் முறையில் "நீ இது பொறுத்தி" (4093) என்று கூறி, அங்கதனிடம் வாளைக் கொடுத்தது இராமன் பச்சாதாபத்தின் முதல் நிகழ்ச்சியாகும். இவ்வாறு கூறுவதால் இராமன் என்ற பாத்திரத்திற்கு ஒரு இழுக்கைக் கற்பித்துவிட்டதாக யாரும் நினையவேண்டியதில்லை. மனிதன் என்ற அடிப்படையில் தான் இப்பாத்திரத்தைப் படைத்து உலவவிடுகிறான் கம்பன். பண்பின் வடிவமாக உள்ள பெரியோர்கள் கூட, சில சமயங்களில் மிகச் சிறிய தவறுகளை இழைத்துவிடுவர். அவர்கள் மனிதர்கள்தான் என்பதற்கு இதுவே சான்றாகும். சூர்ப்பணகையிடத்து, உரையாடியதும், இலக்குவன் பேச்சைத்தட்டிவிட்டு, சீதை விரும்பினாள் என்ற ஒரே காரணத்திற்காக மானைப் பிடிக்கப்போனதும், வாலி யார்? என்று முழுவதும் அறியாமல் அவனைக் கொன்றதும், ஒரு பிழையும் செய்யாத வீடணனை, என்னைக் கெடுத்தொழிந்தனை என்று கூறியதும், குணமென்னும் குன்றேறிநின்ற இராகவன் போன்ற மனிதர்கள் செய்யும், அல்லது பேசும் மிகச் சிறிய பிழைகளாகும். இதனால் அவர்கள் உயர்வும், பெருமையும், சிறப்பும் எவ்விதத்திலும் குறைந்துவிடுவ தில்லை. இத்தகைய சிறு குறைகள் ஒரு பெரியவனின் வாழ்க்கையில் காணப்படாவிட்டால், அவன் மனிதனாக இருந்தும் மனிதனாகக் கருதப்படாமல், தெய்வமாகவே கருதப்படுவான். தெய்வமே ஆனாலும் மானிட உருத் தாங்கி, மண்ணிடை*

வாழவந்தால் மனிதர்களுக்குரிய சில இயல்புகள் அவர்களிடத்தும் இருந்தே தீரும். இக்குறைகளே, இப்பாத்திரங்கள்மாட்டு நாம் அன்பு செய்யவும், உறவு கொண்டாடவும் உதவுகின்றன...

'பிரபோத சந்திரோதயம்' என்ற வடமொழி உருவக நாடகத்தில் பேசப்படும் ஒரு கருத்து இங்கே நாம் கவனிக்கத்தக்கதாகும். நிர்க்குணப் பிரம்மம்கூடச்; சகுணப் பிரம்மமாக மாறும்பொழுது, அப்பிரம்மம் உலகிடை மக்களாகத் தோன்றினால், மக்களிடம் காணப்படும் சிறு குறைகள் அந்தச் சகுணப் பிரம்மத்திடமும் காணப்படும். இக் கருத்து, இராமன்பற்றி நாம் மேலே கூறிய சில கருத்துகளுக்கு அரண் செய்வதாகும்.

மாபெரும் செயலைச் செய்த இலக்குவனை இராமன் பாராட்டாமல் 'வீடணன் தந்த வெற்றி ஈது' என்று கூறியதற்கு இதுவரை கூறப்பெற்ற காரணத்தை அல்லாமல் மற்றொரு காரணமும் இருக்கலாம் என்று சிந்திக்கத் தோன்றுகிறது. கோதாவரி போன்று ஆழமும், தெளிவும் உள்ள கம்பநாடன் பாடல்களில் வரும் சில சொற்களும் சொற்றொடர்களும் அவை அமைந்திருக்கும் நிலைக்களமும் சிந்திக்கச் சிந்திக்கப் புதிய புதிய பொருள்களைத் தருவனவாக அமைந்துள்ளன. வீடணனைச் சமாதானப்படுத்த, வீடணன் தந்த வெற்றி ஈது என்று கூறினான் என்பதை எடுத்துக்கொண்டாலும், இப்பாடலில் முதலில் வரும் 'ஆடவர் திலக! நின்னால் அன்று' என்ற சொற்களை ஏன் பயன்படுத்த வேண்டும். இதைச் சொல்லாமலேகூட, வீடணன் தந்த வென்றி ஈது' என்றுகூடச் சொல்லியிருக்கலாம். அதுவே, வீடணன் மனப் புண்ணை ஆற்றுவதற்குப் போதுமானதாக இருக்கும். அப்படி என்றால் வெற்றி எக்களிப்போடு வரும் ஒருவனைப் பார்த்து, 'இந்த வெற்றி உன்னால் அன்று' என்று கூறுவதன் காரணம் ஏதோ ஒன்றிருக்க வேண்டும். வேண்டுமென்றேதான் இராகவன் இதனை இவ்வாறு கூறுகிறான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஏனென்று சிந்தித்ததில் கம்பனுடைய பாத்திரப் படைப்பில் உள்ளே ஒளிந்து நிற்கும் நுண்மைகள் வெளிப்படும்.

தொடக்கத்திலிருந்தே, இலக்குவன் என்ற பாத்திரத்தைக் கம்பன் படைத்த முறையைப் பார்த்துக்கொண்டே வந்தால், சில அடிப்படைகளைப் பார்க்க முடியும். பரம்பொருளின் வடிவாகிய இராமனிடத்து அன்பு பாராட்டுபவர்கள் பல திறத்தவர் என்பதை அறியலாம். பரதன், குகன், அனுமன் என்று மூவருடைய அன்பு (இராமபக்தி) ஈடு இணையற்றது. அந்த அன்பில் அகங்கார, மமகாரங்கள் அறவே இல்லை. சர்வ பரித்தியாகத்தின் அடிப்படையில் தோன்றிய அந்த அன்பு ஒரு தனிப்பட்ட வகையைச் சேர்ந்தது. இவர்கள் இராமனிடம் செலுத்துகின்ற அன்பில் தம்மைத் தாமே கரைத்துக்கொண்டவர்கள். அன்பே வடிவான மூவர் வாழ்க்கையில், இவர்களையும் இவர்கள் செலுத்தும் அன்பையும் பிரித்துக் காண்பது கடினம். இந்த அடிப்படையை கண்ணப்பர் புராணத்தில் சேக்கிழார், மிக விளக்கமாகத் தெளிவுபடுத்துகிறார்.

..............................யாக்கைத்
'தன்பரிசும், வினைஇரண்டும், சாரும் மலம் மூன்றும் அற
அன்பு பிழம்புஆய்த் திரிவார்....." (பெ.பு.803)

இந்த அடிப்படையில் பார்த்தால், குகன் என்ற பாத்திரம், தான் என்ற நினைவும், அந்நினைவால் உண்டாகக்கூடிய பாவ புண்ணிய விளைவுகளும், அந்தத் தானுக்குரிய ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் அற்றுப் போக, அன்பே வடிவாகக் காட்சி அளிக்கிறான் கங்கை வேடன். இந்நிலையில் குகன் என்ற ஒருவன், இராமன் என்ற ஒருவன், அந்த இராமனிடம் செலுத்தப்படும் அன்பு ஆகிய மூன்றும் மறைந்துவிட, முழுவதும் அன்புமயமாகவே காட்சி அளிப்பதைக் காணலாம். இந்த விளக்கம் ஏனைய இரண்டு பாத்திரங்களாகிய பரதன், அனுமன் என்ற இருவருக்கும் பொருந்துவதாகும்.

இதனெதிராக, இலக்குவன் இராமனிடம் செலுத்தும் அன்பு பிறிதொரு வகையைச் சேர்ந்ததாகும். இந்த அன்பில் 'தான்' மறைவதேயில்லை. 'நான் அன்பு செய்கிறேன்' என்ற எண்ணமும் மாறுவதில்லை. அதன் பயனாக என்னால் அன்பு செய்யப்படும் பொருளுக்கு நான் உதவி செய்கிறேன்,

பணி புரிகின்றேன் என்ற எண்ணம் இருந்துகொண்டே இருக்கும். இராமனுக்கு முடி இல்லை என்று தெரிந்தவுடன் இலக்குவன் பேசியதையும், செய்யத் துணிந்ததையும் நினைவில் கொள்ளவேண்டும். அதேபோல, பரதனைத் தவறாக உணர்ந்து இராமனிடம் பேசியதையும் நினைவில் கொள்ள வேண்டும். இவ்விரண்டுமே இராமன்மாட்டுக் கொண்ட அன்பினால்தான் என்பது உண்மை என்றாலும், அந்த அன்பைக் கீறிப்பார்த்தால், அதனடியில் 'நான்' என்பது தலைதூக்கி நிற்கும். இந்த இரண்டு இடங்களிலும், இராமன் வருத்தமாகவும், கேலியாகவும் பேசி, இலக்குவனின் தன் முனைப்பைத் தட்டிவிடுவதை அந்தந்தப் பகுதிகளில் கம்பன் நுண்மையாகக் கூறியிருப்பதைக் காணலாம்.

இத்துணை நடந்தும், இலக்குவன் திருந்திவிட்டான் என்று கூறுவதற்கில்லை. தன்முனைப்பால் ஓரளவு வளர்ந்து 'தானே அவன்' என்று நினைக்கும் நிலையை எட்டிவிடுகின்ற ஒரு சூழ்நிலையை முதற் போர் புரி படலத்தில் கம்பன் அற்புதமாகப் படைத்துக்காட்டுகிறான்.

முதற் போரிலேயே இலக்குவனின் பேராற்றலைக் கண்டு வியந்த இராவணன், இலக்குவனை முடிக்கக் கருதி, அயன் கொடுத்த வேற் படையை இலக்குவன்மேல் ஏவ, இலக்குவன் மண்ணில் சாய்ந்துவிடுகிறான். அப்படை இலக்குவனைக் கொல்லவில்லை என்பதை அறிந்த இராவணன் அவனைத் தூக்கிச் செல்ல விரும்பி இலக்குவன் பக்கத்தில் வந்து தன் இருபது கைகளையும் பயன்படுத்தி இலக்குவனைத் தூக்க முயல்கிறான். மாபெரும் தவமும் ஈடு இணையற்ற வலிமையும் உடைய இராவணன் இரண்டு கைகளை உடைய இலக்குவனை தன் இருபது கரங்களாலும் தூக்க முடியாமைக்கு பேரா. டாக்டர். ம.ரா.போ. குருசாமி ஒரு முறை கூறிய விளக்கத்தை இங்கு காண்பது மிகவும் பொருத்தமுடியதாகும். இராவணனின் அளப்பறிய வரம் என்னும் பாற்கடலை சில நாட்களாக சீதை என்னும் பிறை கடையிட்ட பாற்கடலைத் தயிர்கடலாக மாற்றி விட்டது. நேர்மையற்ற காமம், தன் ஆற்றல் முழுவதையும் சல்லடைக் கண்களாக துளைத்து விட்டமையின் இப்பொழுது

இராவணன் பழைய இராவணன் இல்லை. காமத்தால் வலிவிழந்த இராவணன் இப்பொழுது தூக்க முயன்றது யாரை? மணம் செய்து கொண்டும் ஏறத்தாழ பதினான்கு ஆண்டுகளாகத்தன் நாயகன் திருவடி தவிர காமம் உள்பட வேறு ஒன்றையும் தன் மனத்தில் வினாடியும் நினையாமல் உறக்கத்தையும் துறந்து பிரம்மச்சரிய விரதத்தில் தலைநின்றவனாகிய இளைய பெருமாளை் அல்லவா இராவணன் தூக்க முயலுகிறான். பிரம்மசரியத்தை காமம் தூக்க முடியாமல் போனதில் வியப்பொன்றுமில்லை. இக் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

இராவணன் முயற்சி பலியாமல் போனபொழுது, அனுமன் சேயை எடுக்கும் தாய்போல் இலக்குவனை எடுத்துச் சென்றான் என்று கவிஞன் பேசுவது இக்கருத்தை வலியுறுத்துகிறது. அனுமன் பிறந்தது முதலே மாதர் நலம் பேணாதவனாக, நைட்டிக பிரம்மச்சாரியாக இறைவன் திருவடிகளைத் தவிர வேறு ஒன்றையும் நினையாதவனாக வாழ்பவன் அல்லவா? எனவே, அனுமன் எளிதாக இலக்குவனைத் தூக்கிச் சென்றான் என்று கவிஞன் கூறுவது பொருத்த முடையதே ஆகும். பதினான்கு ஆண்டு பிரம்மச்சரியத்தை நைட்டிக பிரம்மச்சரியம் எளிதாகத் தூக்கியதில் வியப்பொன்றுமில்லை. ஆனால், கயிலையைத் தூக்கிய இருபது கைகளாலும் இலக்குவனைத் தூக்க முடியாமல் போனதற்குக் காரணத்தைக் கவிஞன் பின்வரும் பாடலில் வேறுவிதமாகக் கூறுவது சிந்திக்கத் தக்கதாகும்.

'அடுத்த நல் உணர்வு ஒழிந்திலன், அம்பரம் செம் பொன்
உடுத்த நாயகன் தான் என உணர்தலின்; ஒருங்கே
தொடுத்த எண் வகை மூர்த்தியைத் துளக்கி,
வெண்பொருப்பை
எடுத்த தோள்களுக்கு எழுந்திலன் - இராமனுக்கு
இளையான்.
(7226)

*இக்கருத்து வான்மீகியின் பால காண்டம் 18வது சருக்கம், 11, 12, ம் பாடல்களை ஒட்டி எழுந்த கருத்தாகும்.

இப்பாடலின் முதல் மூன்று அடிகளும் பலரும் பல்வேறு விதமாக உரை காண இடந்தந்து நிற்கின்றன. உணர்வு இழந்த மயக்க நிலையில் அவன் இல்லை. சிவந்த பொன்னால் ஆகிய உடையை (பீதாம்பர)உடுத்த நாயகன் ஆகிய திருமால் தானே என்று நினைந்து இலக்குவன் கிடந்தான் ஆதலின் அட்ட மூர்த்தியாகிய சிவபெருமான் இருக்கும் கைலாய மலையைப் பெயர்க்க முயன்ற இராவணன் தோள்களுக்கு இலக்குவனை எடுக்கும் ஆற்றல் இல்லாமல் போனது.

கீழே கிடக்கும் இலக்குவன், என்ன நினைத்துக்கொண்டு கிடந்தான் என்பதை முதலடியின் கடைசிப் பகுதியும், இரண்டாம் அடியும் விளக்கிச் செல்கின்றன. பாடல் இருக்கும் வகையில் இலக்குவன் தன்னைத் திருமால் என்றே நினைத்துக் கொள்கிறான் என்ற பொருள் வருகிறது. அப்படியானால் தன் முனைப்பு நீங்காத இலக்குவன் தன்னைப் பரம்பொருள் என்று நினைத்துகொண்டான் என்பது இந்நாட்டு மரபுடன் பொருந்தாத நிலையே ஆகும். அகங்காரத்தை இழக்காதவர்கள் எண்ண ஓட்டத்தில் தோன்றும் ஒரு கருத்தாகும் இது.

ஒவ்வோர் உயிருள்ளும், அந்தர்யாமியாய் இருக்கும் பரம்பொருள் இலக்குவனின் இந்த எண்ண ஓட்டத்தை அறிந்துகொண்டு இலக்குவனுக்குப் புத்தி கற்பிக்க வேண்டும் என்ற நினைவில் இருந்தான் என்று நினைப்பதில் தவறில்லை.

இந்திரசித்தனை வெல்ல முடியாத நிலையில் இலக்குவன் தானே பரம்பொருள் என்ற நிலையை விட்டுவிட்டு, சரணாகதி என்ற நிலையில் வேதங்களும், அந்தணர்களும் வணங்கத் தக்க பரம்பொருள் இராமன் என்பது உண்மையானால் இப்பிறைமுகவாளி இந்திர சித்தனைக் கொல்க என்று ஏவி, அதில் வெற்றியும் பெற்று விட்டான். அம்பரம் உடுத்த நாயகன் தான் என்ற நிலை மாறி, இராமன்மேல் பாரத்தைப் போட்டு வெற்றியும் கண்டான். இலக்குவன் முதலில் இழைத்த பிழை தானே தலைவன் என்று எண்ணியது. அப்பிழைக்குத் தண்டனை தான் 'இந்திர சித்தனை வென்றது நீயல்ல' என்ற இராமன் சொற்கள்.

இவ்வாறு பொருள் கொள்வதால், இளைய பெருமாளுக்கு ஊறு செய்துவிட்டோம் என்று வருந்தினால் அதைப் போக்க ஒரு வழிதான் உண்டு. முதற்போர்புரி படலத்தில் வரும் பாடலில் வரும் 'தான்' என்ற சொல்லுக்குப் பதிலாக தாள் (திருவடி) என்று பாடம் கொண்டால் இதனைத் தவிர்க்கலாம். அப்படியாயின் அந்த அடி 'உடுத்த நாயகன் தாள் என உணர்தலின்' என்று நிற்கும். அதாவது, நாயகன் திருவடிகளே சரணம் என்று அதற்குப் பொருள் கொண்டால் இக்குறை நீங்கிவிடும். திருவடிகளைச் சரணம் அடைந்த ஒருவனை இராவணன் தூக்க முடியவில்லை என்பதும் பொருத்தமாக அமைந்துவிடும்.

அடுத்து வரும் படைத்தலைவர் வதை, மகரக்கண்ணன் வதை என்ற படலங்கள் நாகபாசப்படலத்திற்கும், பிரம் மாத்திரப் படலத்திற்கும் இடையே வருபவை ஆகும். எதிர்பாராத விளைவுகளை உண்டாக்கும் பிரம்மாத்திரப் படலத்திற்கு முன், கற்பவர் மனத்தில் ஒரு சிறு அமைதி ஏற்படுத்துவதற்காகச் சாதாரண நிகழ்ச்சிகளைக் கொண்ட இரண்டு படலங்களை, பிரம்மாத்திரத்திற்கு முன்னர் வைக்கின்றான் கம்பநாடன்.

நாகபாசம் எய்தியமையாலேயே தனக்கு, வெற்றி கிட்டி விட்டது என மகிழ்ந்த இந்திரசித்தனுக்குக் கருடன் வரவால் இலக்குவன் முதலியோர் உயிர் பெற்றனர் என்பது தெரிந்த வுடன் நம்பிக்கை தளர்வதாயிற்று. அவனிடம் உள்ள படைக்கலங்களுள் தலைமை இடத்தைப் பெறுவது நான்முகன் படை ஆகும். முன்னரே நான்முகன் படையை ஏவ, இலக்குவன் எத்தனித்த போது, இராமன் அதனைத் தடை செய்துவிட்டான் என்பதை இந்திரசித்தன் நன்கு அறிந்திருந்தான். நான்முகன் படையின் கொடுமையை அஞ்சி இருவருமே இதுவரை அதனைப் பயன்படுத்தாமல் இருந்து விட்டனர். ஆனால், இப்பொழுது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. நாகபாசத்தைக் கருடன் வந்து தவிர்ப்பான் என்பதை இந்திரசித்தன் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. அவன் பெரிதாக நம்பியிருந்த நாகபாசம்

பிசுபிசுத்துப் போனபிறகு, அவன் இதுவரை விடக் கூடாது என்று வைத்திருந்த நான்முகன் படையைத் தொடுப்பதல்லாது வேறு வழியில்லை என்று நினைக்கிறான். அதற்கு அவன் கூறும் சமாதானம் பொருத்தமுடையதாகவே இருக்கிறது. "தன்னை ஒருவர் கொல்லவந்தால் அவரை முதலில் கொல்வதில் தவறில்லை. நான் இப்பொழுது மறைவாக நின்று நான்முகன் படையைத் தொடுக்கவேண்டும். நான் இப்படையைத் தொடுக்கப்போகிறேன் என்று அவர்கள் அறிந்தால், அதே நான்முகன் படையை அவர்கள் ஏவி, என்னுடைய பிரம்மாத்திரத்தை அழித்துவிடுவர். அதே சந்தர்ப்பத்தில் என்னைக் கொல்லவும் செய்வர். தானாக இலக்குவன், நான்முகன் படையைத் தொடுக்க மாட்டானே தவிர, என் படையைத் தடுப்பதற்கு உறுதியாக இப்படையை ஏவுவான். அவ்வாறு அவன் செய்யாமல் இருக்க வேண்டுமானால். அதற்கு ஒரே வழிதான் உண்டு. என்னுடைய மாயை புரியும் ஆற்றலால் அவர்களுக்குத் தெரியாமல் மறைந்து நின்று அவர்கள் போருக்குத் தயாராக இல்லாத நேரத்தில் "அயன் படை தொடுப்பேன்". (8532, 8533)

இந்திரசித்து தீட்டிய திட்டப்படி அவன் நடந்து கொள்ளுதற்கு ஏற்ற ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. மகரக் கண்ணன் அழிந்தபிறகு, பெரும் படையுடன் மகோதரன் இலக்குவனைச் சாட வருகிறான். அப்பெரும்போரில் இலக்குவன், சிவன் படையைப் பயன்படுத்தி அனைவரையும் அழித்து விடுகிறான். தனியனாக்கப்பட்ட மகோதரன் மறைந்து இராவணனிடம் திரும்பி விடுகிறான். களத்தில் யாரும் இல்லாத காரணத்தினால், அன்றைய போர் அதனுடன் முடிந்தது என்ற கருத்தில் இலக்குவன் முதலானோர் படைக் கலங்களைக் கீழே வைத்துவிட்டு ஓய்வெடுத்துக் கொள்ளலாயினர். எங்கும் ஒரே அமைதி நிலவ, ஓய்வில் மூழ்கியிருக்கும் இலக்குவன் முதலானவர்களைத் திடீரென்று ஆயிரக்கணக்கான அம்புகள் தாக்கின. சுக்கிரீவன், அனுமன், நீலன் முதல் இலக்குவன்வரை ஒவ்வொருவர் உடம்பிலும் ஆயிரக்கணக்கான பாணங்கள் குத்தி நின்றன. சிவந்த மேனி உடைய இலக்குவன்மேல் ஆயிரக்கணக்கான அம்புகள்

பாய்ந்து அப்படியே குத்தி நின்றமையின், பொன்மயமான மேருமலையின்மேல் ஆயிரக் கணக்கான குருவிகள் ஒரே நேரத்தில் வந்து அமர்ந்ததைப் போல ஒரு காட்சி தென்படலாயிற்று. மூர்ச்சையுற்ற நிலையில் அனைவரும் கிடக்க, அனுமன்மட்டும் ஓரளவு மயக்கம் தெளிந்தவனாய், 'நடந்தது இன்னது' என அறிந்துகொள்ள முயல்கிறான்.

களத்தின் மற்றோர் இடத்தில், இராகவன் போருக்கு வேண்டிய தெய்வப்படைகளை வைத்துப் பூசனை செய்தான். பூசை முடிந்தவுடன் அவற்றை எடுத்துக்கொண்டு களத்தில் புகுந்த இராகவனுக்கு அதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது. தம்பிமுதல் அனைவரும் மூச்சுப்பேச்சின்றி அம்புகளால் துளைக்கப்பட்ட உடம்புடன் இருத்தல் கண்டு கதறி அழுதான்.

நான்முகன் படையால் கவரப்படாத வீடணனும், கவரப்பட்டு மயக்கம் தெளிந்த அனுமனும் உரையாடிக் கொண்டு, சாம்பனைத் தேடிச் செல்கின்றனர். சாம்பனின் அறிவுரை கேட்டு, அனுமன் மருத்துமலையைக் கொணர, அனைவரும் மயக்கம் தீர்ந்து எழுந்தனர். அவர்கள் செய்த மகிழ்ச்சி ஆரவாரம் இராவணன் அரண்மனைவரைச் சென்று தாக்கிற்று.

மருத்துமலைப் படலத்தில், இலக்குவன் முதலானவர்கள் உயிர் பெற்று எழுந்ததைக் கூறி முடிக்கின்றான் கம்பன் என்றாலும், இந்நிகழ்ச்சி நடைபெறுவதற்கு முன்னர் நடைபெற்ற, சீதை களத்தைக் காணும் பகுதி பேசப்பெறுகிறது. மருத்துமலைப் படலத்திற்குமுன் உள்ள இப்படலம், பிராட்டியின் துயரத்தை, இமயத்தின் உச்சிக்கே கொண்டு செல்கிறது. 'கும்பகர்ணன் இறந்தான்' என்று கேள்விப்பட்ட பிராட்டி உள்ளே கிளுகிளுத்தாள் (7718) என்று பேசுகிறான் கம்பன். சிறை எடுக்கப்பட்டதிலிருந்து, ஆறாத் துயரமும் மகிழ்ச்சியும் மாறி மாறி அவளை ஆட்கொள்ளுகின்றன. உயிரைப் போக்கிக்கொள்ள நினைத்தபொழுது அனுமன் வந்து ஆறுதல் சொன்னான். போர் நடைபெறும் பொழுது முடிவு என்ன ஆகுமோ என்று அஞ்சி இருந்த அவளுக்கு, கும்பன் மடிந்தான் என்ற செய்தி உள்ளத்தில் கிளுகிளுப்பை

உண்டாக்கிற்று. பிரம்மாத்திரத்தால் தாக்குண்டு இறந்தவர்போல் கிடக்கின்ற இலக்குவன் அனுமன் முதலானோரைப் பார்த்தபொழுது, இனித் தனக்கு விமோசனமே இல்லை என்ற முடிவுக்கு வந்து, பிராட்டி துயரத்தின் எல்லையை அடைந்தாள். துயரமும் மகிழ்ச்சியும் மாறி மாறி வர, இறுதியாக அவள் உடைந்தே போகும் நிலை, பிராட்டி அடைந்த ஆறாத் துயரம் இந்திரசித்தனுக்கும், இராவணனுக்கும் மகிழ்ச்சியைத் தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

மயங்கிக் கிடப்பவர்களைப் பிராட்டி காணவேண்டும் என்று நினைத்த அரக்கன், லட்சக் கணக்கில் இறந்துகிடக்கும் அரக்கர் படையை அவள் காணக்கூடாது என்று, இறந்த அரக்கர் சடலங்களையெல்லாம் கடலில் விட்டு விடுகின்றனர். பிராட்டி களத்தைக் காணும்பொழுது இறந்து பட்ட அரக்கர் சடலம் ஒன்றைக்கூட அவள் காணவில்லை. மயங்கிக் கிடந்த அனைவரும் வானரப் படையினரே ஆவர்.

இறந்த அரக்கர்களின் சடலங்களைக் கடலில் இட்டது அரக்கர்களின் புத்திக்கூர்மை என்றாலும், அதனால் விளையப்போகும் பயனை அப்போது அவர்கள் உணரவில்லை. மருத்துமலையை அனுமன் கொண்டு வந்தபொழுது, களத்தில் இறந்துகிடந்த அத்துணைப் பேரும் மீட்டும் உயிா பெற்றனர். இறந்தவாகளை உயிர்ப்பிக்கும் மருத்துமலை, வானரர், அரக்கர் என்று பிரித்துப் பார்க்க போவதில்லை. இறந்த அரக்கர்கதளின் சடலங்கள் அங்கே கிடந்திருந்தால், அவைகளும் உயிர்பெற்றிருக்கும். தங்கள் பெருமையைச் சீதைக்குக் காட்ட அரக்கர் செய்த சூழ்ச்சிக்கு, அவர்களே பலியானார்கள். இந்த நுணுக்கமான விஷயத்தை அறிந்த கம்பநாடன், சீதை களம் காணப் புறப்படுவதற்கு முன்னேயே அரக்கர்கள் சடலங்கள் அப்புறப்படுத்தப்பட்டன என்று கூறுகிறான். காப்பியப் புலவனின் நுண்மாண் நுழைபுலத்திற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

அடுத்தப்படியாக, நாம் இந்திரசித்தனைச் சந்திப்பது நிகும்பலை யாகத்திலாகும். அந்த யாகம் முற்றுப்

பெற்றிருப்பின், இந்திரசித்தனை வெல்லமுடியாது என்று எடுத்துச்சொன்ன வீடணனின் அறிவுரையைக் கேட்டு இராகவன், திருமாலின் வில்லையும், அம்பறாத்தூணியையும் இலக்குவனிடம் தந்து, நிகும்பலை யாகத்தை அழிக்க அனுப்புகிறான். நிகும்பலை யாகம் இந்திரசித்தனுக்கு மட்டுமே அல்லாமல், இராம, இலக்குவர்க்கும் ஜீவ மரண போராட்டமாகும். வேள்வி முடிந்தால் இந்திரசித்தனுக்கு வெற்றி கிட்டும். இராம, இலக்குவர்கள் தப்பிக்க வேண்டுமானால், வேள்வியை முடிக்காமல் செய்ய வேண்டும். இதன் முக்கியத்துவத்தை அறிந்துகொண்ட இலக்குவன் மனத்தில் எப்பாடு பட்டாவது நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்காமல் அந்த வேள்வியை அழிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி நின்றது இயல்பே ஆகும். அவன் மனக் கருத்தை அறத்தின் மூர்த்தியாகிய இராமன் எளிதில் புரிந்துகொண்டு, நிகும்பலையை அழிக்கப் புறப்பட்ட இலக்குவனுக்குச் சில அறிவுரைகள் கூறுகின்றான். ஜீவ மரணப் போராட்டமே ஆயினும் , வில் அறம் துறந்து போர் செய்வதை விழைந்திலன் இராகவன். எனவே, தம்பியை நோக்கி, "இளையோய்! இந்தத் திருமால் வில்லையும், அம்பறாத்தூணியையும் நீ இப்பொழுது பெற்றுக்கொள்வாயாக. தெய்வப் படைகள் இத்தூணியில் உள்ளன என்றாலும் அயன் படை, முக்கணான் படை, ஆழிமுதல்வன் படை இவற்றை எக்காரணம் கொண்டும் நீ முதலில் எய்யாதே. அவன் இவற்றைப் பயன்படுத்தினால், உன்னைக் காத்துக்கொள்வதற்குமட்டும் இவற்றைப் பயன்படுத்த வேண்டுமே தவிர, நீ இவற்றை முதலில் எய்ய வேண்டாம். எய்தால் தேவையில்லா உயிர்களும் மாளும். அத்தகைய தவற்றை எது கருதியும் செய்யற்க" ( - 8936, 8937). மிக முக்கியமானதும், 'தாமா? அவர்களா?' என்ற முடிவைத் தருவதும் ஆகிய இந்தச் சந்தர்ப்பத்தில்கூடச் சக்கரவர்த்தித் திருமகன் அறத்தினின்று வழுவத் தயாராக இல்லை. இராமனுடைய பண்பாட்டிற்கு உச்ச நிலையைக் கவிச்சக்கரவர்த்தி இங்கே அமைத்துக் காட்டுகிறான். சாதாரண நிலையில் அறத்தைக் காப்பது என்பது உயர்ந்த நிலையில் உள்ள ஒரு சிலர் செய்யக் கூடியதே ஆகும்.

இப்பொழுது நிலை முற்றிலும் வேறுபட்டுவிட்டது. 'அரக்கர்களை அழித்து உங்களைக் காக்கிறேன்' என்று முனிவர்களுக்குத் தந்த வாக்குறுதியும் கோதண்டம் கையில் இருப்பவும் மனைவியைப் பறிகொடுத்தான் என்ற அவப் பெயரைப் போக்கிக்கொள்ளுவதற்குரிய சந்தர்ப்பமும் இப்பொழுது எதிரே நிற்கின்றன. இந்திரசித்தனை வென்றால் தான், இவை இரண்டும் கைகூடும். இந்திரசித்தன் அழிய வேண்டுமானால், நிகும்பலை வேள்வி தடைபட வேண்டும். எனவே, இராமனுடைய வாழ்க்கையில் எதிர்ப்பட்டுள்ள மிகப் பெரிய சோதனைக் கட்டமாகும் இது. தான் வாழ்க்கையில் செய்து முடிக்கவேண்டிய அரக்கர் அழிவு, பிராட்டி விடுதலை என்ற இரண்டு குறிக்கோள்களும் எய்தப்படவேண்டுமானால், நிகும்பலை வேள்வி அழிக்கப்பட வேண்டும் என்று வீடணன் கூறிவிட்டான். இராமனை அல்லாமல் வேறு யாராக இருப்பினும் - இலக்குவனே தனியாக இருந்திருப்பினும் எந்த வழியை மேற்கொண்டாவது நிகும்பலையை அழிந்திருப்பான்.

அறத்தின் மூர்த்தியாகிய இராகவன், எந்த நிலையிலும், எக்காரணம் கொண்டும், எந்த வெற்றியைக் கருதியும் அறவழியினின்று மாறுபடமாட்டான் என்பதை எடுத்துக்காட்ட இப்பகுதி பெரிதும் பயன்படுகிறது. தம்பி இலக்குவனுடைய மனநிலையையும், அவன் எண்ண ஓட்டங்களையும் நன்கு அறிந்துகொண்ட இராமன் இவ்வளவு விரிவாகத் தம்பிக்கு உபதேசம் செய்கின்றான். கம்பனின் பாத்திரப்படைப்புச் சிறப்பையும், அப்பாத்திரங்களின் பண்புநலனை விளக்கும் சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் என்பவற்றை உருவாக்குவதிலும் 'கம்பனுக்கு நிகர் கம்பனே' என்று சொல்லத் தோன்றுகிறது. நிகும்பலை யாகம் அழிபட்டபோது இந்திரசித்து - அனுமன் உரையாடல், இந்திரசித்தன் - இலக்குவன் உரையாடல் என்பவை படித்துப்படித்து இன்புறத்தக்கவை ஆகும். அவற்றில் வரும் ஒவ்வொரு வார்த்தையிலும், அவ்வார்த்தைகளைப் பேசும் பாத்திரங்களின் பண்புநலன்கள் வெளிப்படுமாறு உரையாடலை அமைக்கின்றான் கவிஞன்.

நிகும்பலை அழிவுக்குப் பின்னர்த் தெய்வப் படைகள் பலவற்றைச் செலுத்திப் பயன்படாமல் போகவே, தந்தையை நாடிச் செல்கிறான் இந்திரசித்தன். இந்திரசித்து வதைப் படலத்தின் முதல் பத்துப் பாடல்கள், இந்திரசித்தன் வாழ்க்கையில் ஏற்படாத ஒரு மாற்றத்தை அறிவிக்கின்றன. பிரம்மாத்திரம் என்ற படைகள் போக, புதிதாக நாராயணன் படையையும் ஏவிப் பார்த்துவிட்டான், இந்திரசித்தன். உலகம் மூன்றையும் அழிக்க வல்ல படை, இலக்குவனை ஒன்றும் செய்யாததோடுமட்டுமல்லாமல், அவனை வலஞ்செய்து போயிற்று (9119) என்பதைப் பார்த்தவுடன் இந்திரசித்தன் மனத்தில் பெருமாற்றம் ஏற்பட்டது. இந்திரன் பகைஞன் என்றும், இராவணன் மைந்தன் என்றும் வீறுடன் பேசித் தன்னை வெல்லவல்லார் இவ்வுலகிடை யாரும் இல்லை என்று தருக்கி இருந்த இந்திரசித்தன், நாராயணப் படை ஏவியவுடன் அது இலக்குவனை வலம் செய்துப் போவதைக் கண்டான். இந்த நிகழ்ச்சி அவன் கர்வத்தை அழித்ததோடல்லாமல் இதுவரை அவன் சிந்தனை செய்யாத பேராற்றல் ஒன்று மேலே இருந்துகொண்டு இங்குள்ளோர் அனைவரையும் இயக்குகிறது என்பதை முதன்முதலாக உணரத் துவங்கினான். மக்கள், தேவர், நரகர், அசுரர் முதலிய அனைவரையும் வென்றாலும், அந்த மாபெரும் ஆற்றலின் எதிரே இந்த வெற்றிகள் அர்த்தமற்றவையாகி விடுகின்றன என்பதை உணர்ந்த இந்திரசித்தன் முற்றிலும் மனம் மாறிய நிலையில் இதுவரை செய்யாத செயலைச் செய்யத் துவங்குகிறான்.

இராவணன் மைந்தனாகிய அவன் இன்றுவரை தந்தையை எதிர்த்துப் பேசி அறியாதவன். தான் தெய்வமாக வணங்கும் அத்தந்தையின் செயல்களை ஆராய்வது தன் கடமை அன்று என்று வாழ்ந்தவனாகிய அவன் இப்பொழுது மனம் மாறுகிறான். எல்லாவற்றையும் இழந்த இந்த நிலையில் தந்தையையாவது இறுதியில் காப்பாற்ற வேண்டும் என்று நினைக்கிறான். இந்த மனஉறுதியுடன் தந்தையிடம் செல்கிறான்.

வருகின்ற மைந்தனின் முகவாட்டத்தையும், உடம்பில் உள்ள காயங்களையும் கண்டுகூட இரக்கம் காட்டாத இராவணன் "படங்குறை அரவம் ஒத்தாய்; உற்றது பகர்தி" (9117) என்று பேசுவது நமக்கேகூட வெறுப்பை அளிக்கிறது. தந்தைமாட்டுக் கொண்ட அன்பாலும், மரியாதையாலும் இன்று வரை வாய்மூடி, அவன் செயல்களை யெல்லாம் பொறுத்துக்கொண்டிருந்த இந்திரசித்தன் இப்பொழுது வெடிக்கிறான். அவனிடம் ஏற்பட்ட மனமாற்றத்தை அறிவிக்கும் முறையில் கவிஞன் பாடல்களை (9118, 9119, 9120, 9121) இங்கு அமைக்கிறான். இந்த மாற்றம் நாக பாசத்தில் தொடங்கி, நிகும்பலையில் இந்திரசித்தன் மனத்தில் மலைபோல் வளர்ந்துவிட்டது. போரின் முடிவு, நாள் கணக்கில் என்ற எண்ணம் வந்தவுடன் முழுவதுமாகத் தன் மனக்கருத்தைத் தந்தையிடம் சொல்லி ஏதாவது செய்ய முடியுமா என்று நினைக்கிறான். இராமன் பரம்பொருள் என்று கூறினால், இராவணன் மனத்தில் அது எடுபடாது என்பதை அறிந்தவனாகிய இந்திரசித்தன் எதனைச் சொன்னால் அவன் மனத்தில் மாற்றம் ஏற்படக்கூடும் என்று கருதி அதைமட்டும் இங்குக் கூறுகிறான்.

"அபிசார வேள்வி யாகிய நிகும்பலை யாகத்தின் இரகசியங்களை யெல்லாம் உன் தம்பியாகிய வீடணன் அவர்களிடம் கூறிவிட்டான். நான் ஏவிய தெய்வப்படைகள் மூன்றையும் இலக்குவன் ஆற்றலால் தடுத்தேவிட்டான்" (9118). "மூன்று உலகங்களையும் அழிக்கக் கூடிய நாராயணப் படையை நான் ஏவியபொழுது அப்படை அவனை வலஞ்செய்து போவதைக் கண்டேன். உடனே புரிந்து கொண்டேன். உன் குலத்தார் அனைவரும் செய்த பாவத்தால், கொடுமையான பகையினைத் தேடிக் கொண்டாய். கோபம் ஏற்பட்டால் உலகம் மூன்றையும் இலக்குவன் ஒருவனே முடித்துக்கட்டுவான்" (9119) "கடுமையான போரின்கண் நான்முகன் படையை அவன் என்மீது ஏவவில்லை. அது ஏனென்றால் உலகத்திற்கு அதனால் ஏற்படும் அழிவை எண்ணி என்மேல் செலுத்தாமல் விட்டு விட்டான். அதனால் தான் அந்த நேரத்தில் வெற்றிகொண்டு உயிரோடு மீண்டேன்.

அவன்மேல் ஏவப்பட்டபோதும் தன்னைத் தானே காத்துக்கொண்டான். தெய்வப்படைகளின் உதவி இன்றித் தன் ஆற்றலை நம்பியே வாழ்பவன் அவன் (9120) "இவ்வாறு கூறுவதால் போருக்கு அஞ்சித் தப்பிவந்து நான் பேசுகிறேன் என்று தயவு செய்து நினைத்துவிடாதே. சீதையிடத்து நீ கொண்ட தவறான ஆசையினை விட்டுவிட்டு, அவளை அவர்களிடம் சேர்ப்பித்தால் அவர்கள் திரும்பிப் போய்விடுவார்கள். நீ செய்த பிழையையும் பொறுப்பர். உன்பால் நான் வைத்த அன்பின் அடையாளமாகவே இதனைச் சொல்கிறேன்" (9121)

இவ்வாறு கூறும் இந்திரசித்தனைக் கோழை என்று யாரும் நினைத்துவிடக் கூடாது என்று நினைத்த கவிஞன், 'இதனைக் கூறியவன் உலகெல்லாம் கலக்கி வென்றான்' என்று கூறிப் பாடலை முடிக்கின்றான். அப்பாடல் வருமாறு:

'ஆதலால் "அஞ்சினேன்" என்று அருளலை; ஆசைதான் அச்
சீதைபால் விடுதிஆயின், அனையவர் சீற்றம் தீர்வர்;
போதலும் புரிவர்; செய்த தீமையும் பொறுப்பர்; உன்மேல்
காதலால் உரைத்தேன்' என்றான் - உலகுஎலாம் கலக்கி வென்றான். (9121)

இராவணன் மந்திரசபையில் இவன் பேசிய பேச்சுக்கள் எத்தகையவை! 'நான் ஒருவனாகவே சென்று உன்பகை முடிக்கின்றேன்' என்றல்லவா கூறினான்! அப்படிப் பேசிய இந்திரசித்தன் இப்பொழுது முழுவதுமாக மாறி, ஆழ்ந்த சிந்தனையுடன் அறிவைப் பயன்படுத்தி அல்லவா இந்த முடிவுக்கு வருகிறான்! கல்வி, கேள்விகளிலும், வர பலத்திலும் இராவணனுக்கு இணையானவன் இந்திரசித்தன், ஏன்? ஆணவத்தில்கூடத் தந்தைத்குச் சளைத்தவன் அல்லன். அப்படி இருந்தும், இவ்வாறு மனம் மாறக் காரணம் யாது? தன் ஆற்றலுக்கு எதிரே ஈடுகொடுக்க முடியாமல் இந்திரனும் தேவர்களும் ஓடினார்கள். ஆதலால், இரு மானிடரையும் குரங்குக் கூட்டத்தையும் நொடிப்பொழுதில் வெல்ல முடியும் என்று அவன் நினைத்ததில் தவறில்லை. நாக பாசப்

படலத்தில், நாக பாசத்தை ஏவுவதற்கு முன்னர், தன் தேரையும் கொடியையும் சாரதியையும் இலக்குவன் அழித்தான், அடுத்துத் தன் கவசத்தையும் உடைத்தான் இவன் மனிதனல்லன்' என்ற முடிவுக்கு வந்தான். கருடன் வருகையால் நாக பாச விடுதலை கிடைத்ததும், மந்திர மலையைக் கொணர்ந்ததால் நான்முகன் படை வலியற்றுப் போனதும், இவர்கள் மனிதர்கள் அல்லர் என்ற அவன் எண்ணத்தை வலுப்பெறச் செய்தன. தான் இதுவரை பெற்றிருந்த வர பலமும் வில் ஆற்றலும் இவர்கட்கு முன் வலிவிழந்துவிடுவதை நேரே கண்டான் இந்திரசித்தன். அப்படியானால், இவர்களை வெல்ல 'அபிசார வேள்வி' போன்ற ஒன்றை ரகசியமாக நடத்தி, அதனால் பெறும் புதிய வலிமையைக் கொண்டு, இவர்களை வெல்லத் துணிந்தான். பரம ரகசியமாகச் செய்யப்புகுந்த தன் வேள்வியில் இலக்குவன் வந்ததும், அதை அழித்ததும் இந்திரசித்தன் எதிர்பாராதவை. நாக பாசம், நான்முகன் படை என்பவற்றைத் தடுக்கும் ஆற்றல் அவர்களிடம் இருந்தது என்பதைக் கண்டதனால் இவ்விருபடைகளையும் நேரடியாகச் செலுத்தாமல் மறைந்து நின்றே செலுத்தினான். போருக்குத் தயாராக இல்லாமல், கவசம்கூட அணியாமல் ஆயுதங்களைப் பற்றி இராத நிலையில் இராம, இலக்குவர்கள் ஓய்வு எடுக்கும் நேரத்திலேயே இந்த இரு படைகளையும் இந்திரசித்தன் எய்தான். இத்தகைய சந்தர்ப்பங்களில் இலக்குவனின் படைகளை எதிர்க்கும் வாய்ப்பு இல்லாமலே போய்விடும் என்று அறிந்தே, போர்த் தந்திரம் மிக்க இந்திரசித்தன் மறைந்துநின்று செலுத்தினான். அவர்கள் மயங்கியதும், அவர்கள் கதை முடிந்தது என்று அவன் எண்ணியதிலும், தந்தையிடம் சென்று உன் பகையில் பாதியை முடித்தேன் என்று கூறுவதிலும் தவறு ஒன்றும் இல்லை. கருடன் வரவு இருவருக்குமே எதிர்பாராத அதிர்ச்சியைத் தந்தது. இந்த நிலையில்தான் நிகும்பலைப்போர் நடைபெற்றது. யாகத்தை முடிக்க வழியில்லாதபோது, இதுவரை இந்திரசித்தன் பயன்படுத்தாமல் காத்து வைத்திருந்த நாராயணப் படையை ஏவினான். ஒருவேளை இலக்குவன் அதே படையை அனுப்பி தன்னைத் தான் காத்துக்

கொள்வானோ என்று கருதினான். ஆனால் நடந்தது வேறு. நாராயணப் படை இலக்குவனை வலஞ்செய்து செல்வதைக் கண்ட இந்திரசித்தன் மலைபோன்ற தன்னம்பிக்கையை இழந்து விட்டான். "வில்லாளரை எண்ணில் விரற்கு முன் நிற்கும்" வீரனாகிய இந்திரசித்தன் இனிச் செய்யக் கூடியது ஒன்றுமில்லை என்ற முடிவிற்கு வருகிறான். தன்னால் ஒன்றும் செய்யமுடியாதென்றால், தன் தந்தையாலும் ஒன்றும் செய்ய முடியாதென்ற முடிவிற்கு வந்துவிட்டான். எனவே, தந்தையையாவது காப்பாற்றலாம் என்ற எண்ணத்தில்தான். 'சீதையை விடுக, விட்டால் போதலும் புரிவர், செய்த பிழையையும் பொறுப்பர்' என்று கல்லும் கரையும் முறையில் பேசினான். ஆனால், அச்சொற்கள் செவிடன் காதில் ஊதிய சங்காக முடிந்துவிட்டது.

இராவணன் : இத்துணைத் தூரம், மகன் அனுபவத்தின் உதவியால் பேசிய பேச்சுக்களைக் கேட்ட இராவணன், அதை ஏற்காமல் தற்பெருமை பேசுகிறான்.

இந்திரசித்தனை நோக்கி, இராவணன் கூறும் சொற்கள் ஆறு பாடல்களில் இடம்பெறுகின்றன. இந்த ஆறு பாடல்கள் இராவணனின் தன்னம்பிக்கை, மனநிலை, அவன் ஆழ்மனத்தில் உள்ள எண்ணங்கள் ஆகியவற்றை வெளியிடுபவையாக அமைந்துள்ளதைக் காணலாம். அவன் பேசும் முதற்பாடல், மகனுடைய அருமை பெருமை தெரியாத அவனை எள்ளி நகையாடுவது போல் அமைந்துள்ளது. "மகனே! பட்ட வருத்தத்தால் போரினை விட்டுவிட வேண்டும் என்று நீ நினைப்பதாகத் தெரிகிறது. கவலை வேண்டாம். அந்த மனிதர்களை என் வில் ஆற்றலால் கொன்று வெற்றிக் கனியை உனக்குத் தருவேன்" (9122) என்கிறான்.

அடுத்து, "மகனே! இப்போரின் தொடக்கத்திலிருந்து இறந்தவர்க ளாகிய அவர்கள், போருக்குச் சென்று என் பகையை முடிப்பார்கள் என்றோ, இப்பொழுது உயிருடன் இருந்து இனிப் போருக்குச் செல்லப்போகிறவர்கள் வெற்றியைத் தருவார்கள் என்றோ, மாவீரன் ஆகிய நீ

அவர்களை வென்று எனக்கு வெற்றியைத் தருவாய் என்றோ நான் கருதவில்லை. இப்பகைமையைத் தேடிக்கொள்ளும் பொழுது, இந்த மூன்று பிரிவாரும் உதவுவார்கள் என்று நான் நம்பவில்லை. என்னையும் என் ஆற்றலையும் என் வில்லாற்றலையும் வர பலங்களையும் சிந்தித்துத்தான் என் பகையை நானே தேடிக்கொண்டேன்" *(9123)*

இந்த இரண்டு பாடல்களில் உள்ள கருத்துக்களை, சொற்களை இராவணன் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே அவன் அகமனத்தில் ஒரு போராட்டம் நிகழ்கிறது. இந்திரசித்தனைத் தோற்கடித்தவர்களைத் தான் வெல்ல முடியுமா என்பது ஓர் ஐயம்; தன்னோடு சம வலிமை பெற்றிருந்த கும்பனை வெற்றிபெற்றவர்களைத் தான் வெல்ல முடியுமா என்பது மற்றோர் ஐயம். போர்க்களத்திற்குச் செல்லும் கும்பகர்ணன், "என்னை வென்று உளர் எனில் இலங்கை காவல! உன்னை வென்று உயருதல் உண்மை; ஆதலால் பின்னை நின்று எண்ணுதல் பிழை; அப்பெய்வளை தன்னை நன்கு அளிப்பது தவத்தின் பாலதே" *(7368)* என்று கூறியதும் இராவணன் மனத்தில் இப்பொழுது நினைவுக்கு வருகிறது. கும்பன் போருக்குப் புறப்படுமுன் இதைக் கூறினான். மகன் போரில் ஈடுபட்டுப் பெற்ற அனுபவத்துடன் "சீதைபால் விடுதி ஆயின், அனையவர் சீற்றம் தீர்வர்" *(9121)* என்ற அதே கருத்தை வலியுறுத்துகிறான். இந்த அகமனப் போராட்டத்தில், இராவணன் மனத்தில் தான் சுவைக்கப் போவது தோல்வியையே என்ற எண்ணம் உறுதிப்பட்டுவிட்டது. இந்த எண்ணம், இந்திரசித்தனுடன் பேசும்போது அகமனத்தில் அங்குரமாக வடிவு கொண்டு, ஒருசில வினாடிகளில் பெருமரமாக முளைத்துவிட்டது. சுவரில் எழுதிய எழுத்தைப்போல் தன் எதிர்காலம் எத்தகையது என்பதை இராவணன் அறிந்துகொள்கிறான். இப்பொழுது அவனுக்குள்ளவை இரண்டே வழிகள்தான். ஒன்று, பிராட்டியை விடுவித்து, அவர்கள் சீற்றத்தைத் தணித்தல். இவ்வாறு செய்தால் மகனும் அவனும் உயிர்வாழ முடியும். இரண்டாவது வழி, போர் செய்து மடிதலே ஆகும். இந்த இரண்டு வழிகளையும் சீர்தூக்கிப் பார்த்த இராவணன் ஒரு

முடிவுக்கு வருகிறான். முதலாவது, இத்துணைப் பேரும் இறந்தபிறகு உயிர்வாழ்வதில் பயனில்லை. இதுவரையில், அவன்பால் ஓங்கியிருந்த தன்மானம், சீதையை விட்டுவிடுவதால் தேவர்கள் சிரிப்பர் என்ற எண்ணத்தை உருவாக்குகிறத. இதுவரை அவன் பெயரைக் கேட்டு அஞ்சி நடுங்கிய தேவர்கள் எள்ளி நகையாடுவதைப் பார்த்துக்கொண்டு, மானமிழந்து உயிரை வைத்திருப்பது எந்தப் பயித்தியக்காரனும் செய்ய விரும்பாததாகும். அதை மகனுக்கு விளக்கும் முறையில் பின்வருமாறு பேசுகிறான்.

'பேதைமை உரைத்தாய்; பிள்ளாய்! உலகு எலாம் பெயர, பேராக்
காதை என் புகழினோடு நிலைபெற, அமரர் காண
மீது எழும் மொக்குள் அன்ன யாக்கையை விடுவது அல்லால்,
சீதையை விடுவது உண்டோ, இருபது திண்தோள் உண்டால்" (9124)

'மகனே! உலகெலாம் அழிந்தாலும், அழியாத என் புகழொடு வாழ்ந்துவிட்டு, நீரில் தோன்றும் குமிழிபோல நிலைபேறில்லாத இந்த வாழ்க்கையை விட்டுச் செல்வேனேயானால், தேவர்களும் என் இறப்பைக் கண்டு போற்றுவார்கள். சீதையை விட்டால், இருபது தோள்கள் இருந்தும் சாரமற்ற வாழ்க்கை வாழ்ந்தான் என்று உலகம் ஏசும். சீதையை விடப்போவ தில்லை என்று பொருள்படப் பேசுவதே இராவணன் கருத்தாகும். இராவணன் மனத்தில் இப்பொழுது எஞ்சியுள்ளது சீதைபால் உள்ள தகாத காமம் அன்று; எஞ்சியுள்ளது மான உணர்ச்சியே யாகும். இந்த எண்ணம் மிக வலுவாக அவனைப்பற்றி யிருந்தது என்பதைப் பின்னரும் காணலாம்.

முக்கோடி வாழ்நாள் உடைய இராவணன், இன்றுவரை தனக்கும் ஒரு முடிவு காலம் உண்டு என்பதைக் கனவிலும் கருதினான் இல்லை. கார்த்தவீரியனிடம் தோற்றபோதும், வாலியின் வாலில் கட்டுண்டபோதும், கயிலையைப் பெயர்த்தெடுத்தபோதும், அவன் தோல்வியே கண்டான்.

இத்தோல்விகளே தன் பெருமைக்கு அடித்தளம் என்ற எண்ணத்தில் வாழ்ந்துவந்தான். ஆனால், இப்பொழுது சுள்ளியில் உறைதரு குரங்கும், இரண்டு மனிதர்களும், தன்னை எதிர்க்கின்றார்கள் என்றால், அது நகைப்பதற்குரியதாகும் என்றே எண்ணிவந்தான். சுள்ளியில் உறைகின்ற குரங்கு, மகன் அக்க குமாரனையும், பஞ்ச சேனாபதிகளையும் பிசைந்து எறிந்தது முதல் அதிர்ச்சியாகும். கும்பகர்ணனும், அதிகாயனும் போரில் பட்டது இரண்டாவது அதிர்ச்சியாகும். வில்லாளரில் முதல்வனாகிய இந்திரசித்தன் 'சீதையை விடுக' என்று அறவுரை கூறியது மூன்றாவது அதிர்ச்சியாகும். தான் இறப்பது உறுதி என்றவுடன் இரண்டு பொருள்களை அவன் விரும்புகிறான். ஒன்று, இறுதி நேரத்தில் விட்டுக் கொடுக்காமல் போர் புரிந்து மானத்தோடு இறப்பது, அப்படி இறந்தால் அந்த இராமன் பெயர் இருக்கின்றவரை தன் பெயரும் இருக்கும் அல்லவா? அப்படி நிலைபேறுள்ள புகழை அடையத் தன் உயிரைக் கொடுப்பது மிகச் சிறிய விலையாகும். இக் கருத்துப்பட அவன் பேசியதைக் கம்பநாடன் பின்வரும் பாடலில் அமைக்கிறான்.

" வென்றிலென் என்ற போதும், வேதம் உள்ளளவும், யானும்
நின்றுளென் அன்றோ, மற்று அவ் இராமன் பேர் நிற்கும் ஆயின்?
பொன்றுதல் ஒரு காலத்தும் தவிருமோ? பொதுமைத்து அன்றோ?
இன்று உளார் நாளை மாள்வர்; புகழுக்கும் இறுதி உண்டோ? (9125)

**இலக்குவனும் இந்திரசித்தும்:** தந்தைக்கும் மகனுக்கும் நடந்த உரையாடலுக்குப் பிறகு, தந்தைக்கு முன்னர்த் தான் போரில் சென்று மடியவேண்டும் என்ற முடிவுடன்தான், போருக்குப் புறப்படுகிறான் இந்திரசித்தன். இம்முறை அவன் இலக்குவனுடன் நிகழ்த்திய போரைக் கண்டு தேவர்களும் - ஏன் இலக்குவன்கூட வியப்பில் ஆழ்ந்து விடுகின்றனர். சிவன் கொடுத்த தேர் முதலியவற்றை அழித்தும், தன்

*சுயவலிமையால்மட்டும் இந்திரசித்தனை வெல்ல முடியாது என்பதை, மும்முறை அவனோடு பொருத இலக்குவன் கண்டுகொண்டான். தன் ஆற்றலைமட்டும் கொண்டு, இந்திரசித்தனை வெல்ல முடியாது என்பதைக் கண்ட இலக்குவன், இறைவனைத் துணைக்கு அழைக்கிறான். தெய்வப்படைகளை ஏவி, ஒன்றும் நடவாதபொழுது அந்தத் தெய்வத்தையே துணைக்கு அழைக்கின்றான் இலக்குவன். இறுதியாக அவன் விட்ட படை தெய்வப்படை அன்று. சாதாரண வீரர்கள் பயன்படுத்தும் பிறைமுகப் பகழியே யாகும். இப்பகழியை ஏவு முன்னர் இலக்குவன் பேசிய பேச்சுக்கள் சிந்திக்கத் தக்கவை.*

> "மறைகளே தேறத் தக்க, வேதியர் வணங்கற்பால,
> இறையவன் இராமன் என்னும் நல் அறமூர்த்தி என்னின்,
> பிறை எயிற்று இவனைக் கோறி' என்று, ஓர பிறை வாய் வாளி
> நிறை உற வாங்கி விட்டான் - உலகு எலாம் நிறுத்தி நின்றான். **(9166)**

*மறைகளே தேறத்தக்கவன், வேதியர் வணங்கத்தக்கவன் யாராக இருக்க முடியும்? பரம்பொருளாகத்தானே இருக்க முடியும்? அந்தப் பரம்பொருள், நல்லறமூர்த்தியாகி, இராமன் என்ற மானிட சட்டைதாங்கி வந்துள்ளான் என்பது உண்மையானால் இந்தச் சாதாரணப் பிறைமுக வாளி இந்திரசித்தன் கழுத்தைத் துண்டிப்பதாக என்று சபதம் செய்து, எய்த வாளி அக்கடமையைச் செய்துவிட்டது. இராமானுஜன் என்று சொல்லப்படும் இலக்குவன், இராமனின் தம்பி என்றாலும், தம்பி என்ற உரிமையோடு போர் செய்தபொழுது பயன் ஒன்றும் நிற்கவில்லை. ஆனால், இராமானுஜன் என்ற பக்தன், பரம பாகவதனாக நின்று பரம்பொருளைத் துணைக்கழைத்து 'யான்', 'எனது' என்ற அகங்கார மமகாரங்கள் அடங்கி, இது இறைவன் பணி என்ற நினைவில், ஒரு சாதாரணப் பகழியை ஏவவும், பிரம்மாத்திரம் கூடச் செய்ய முடியாத செயலை, இந்தச் சாதாரண அம்பு செய்துவிட்டது. வேறு படைக்கலங்களைப் பயன்படுத்தி,*

தன் ஆற்றலைக் கொண்டு இந்திரசித்தனைக் கொன்றிருப்பின், இலக்குவன் பெருமைப்படவும், ஓரளவு கர்வம் கொள்ளவும் அங்கே இடமிருந்திருக்கும். இறைவன் பெயரைப் பயன்படுத்தி, சாதாரண அம்பைப் போட்டு, தன் காரியத்தை முடிக்கும் இலக்குவன் வெறும் கருவிமாத்திரையாக இருக்கின்றானே தவிர, அவனுக்கு என்று தனித்துவம் எதுவும் இல்லை. அதனால்தான் போலும் அவனைக் கட்டித்தழுவிய இராமன், 'ஆடவர் திலக! நின்னால் அன்று' என்று கூறுகிறான் போலும். இராமன் இந்திரசித்துனுடன் நேரே பொருதாவிட்டாலும் அவன் பெயரில் ஆணையிட்டு எய்த அம்பே இந்திரசித்தனைக் கொன்றது. ஆதலால், கும்பனையும், இராவணனையும் போல, இந்திரசித்தனும் இராமன் கையாலேயே மடிந்தான் என்று நினைக்க இடமுண்டு.

இம்மூவரில் கும்பனும், இந்திரசித்தனும் பிழை ஏதும் செய்யாதவர்கள். ஏனைய எல்லா வகைகளிலும் - தவம் உட்பட இராவணனுக்குச் சமமானவர்கள். எனவே, பரம் பொருள், மானிடச் சட்டை தாங்கி இவ்வுலகிடை வந்து, தானே போரிட்டுக் கொல்லவேண்டிய சிறப்பைப் பெற்றனர்.

இராமானுஜன் ஆகிய இலக்குவன், நடந்துகொண்டதும் சரியானதே ஆகும். தனக்கென்று இறைவன் கொடுத்துள்ள ஆற்றலைப் பயன்படுத்தி இந்திரசித்தனைக் கொல்ல முயன்றான். அது முடியாது என்று உறுதியானவுடன் தான் இறைவனைத் துணைக்கு அழைக்கின்றான். இலக்குவன், அவனுடைய தவப்பலன், அவன் ஆற்றல், தெய்வப்படைகள் ஆகிய அனைத்தும் செய்ய முடியாத ஒரு செயலை, இறைவன் பெயரோடு சேர்ந்த ஒரு பிறைமுக வாளி செய்துமுடிக்கின்றது. இறைவனுடைய நாம மகிமை, சாம்பவானுடைய சிறகுகளை வளரச் செய்கிறது; அனுமனைக் கடல் கடக்க வைக்கிறது; ஒரு சாதாரண அம்பு இந்திரசித்தன் தலையைக் கொய்கிறது. 6ம் நூற்றாண்டுமுதல் 8ம் நூற்றாண்டுவரை, ஆழ்வார்கள் பக்தி இயக்கத்தை வளர்த்து, இறைவன் நாம மகிமையை எடுத்துக் கூறினர். 9ம் நூற்றாண்டில் தோன்றிய கம்பநாடன், இக்கருத்துக்கு அரண் செய்வதுபோல இந்த மூன்று இடங்களிலும் நாம மகிமையை வெளிப்படுத்துகிறான்.

இராவணன் : மகன் இந்திரசித்தனுடன் பேசிய சொற்களை வைத்து அவன் வாழ்வின் முடிவை இராவணன் அறிந்துகொண்டான் என்றும், எஞ்சிய நாட்களை எவ்வாறு கழிக்க வேண்டும் என்றும், இறுதிவரையில் தான் என்ன செய்ய வேண்டும் என்றும் எல்லா வகையிலும் ஆய்ந்து, தெளிந்து, ஒரு முடிவுக்கு வந்துவிட்டான் எனக் கண்டோம். இந்திரசித்தன் முடிவு இவ்வாறுதான் இருக்கும் என்று கும்பகர்ணன் முன்னரே கூறியுள்ளான். இப்பொழுது இந்திரசித்தனும் அதையே கூறினான். அப்படி இருந்தும் மறுபடியும், நிகும்பலை அழிந்த பின்னும், இந்திரசித்தனைப் போருக்கு அனுப்பினான் இராவணன் என்றால், இராவணன் மனநிலையை ஒருவாறு ஊகிக்க முடிகிறது. இந்த நிலையில் இராவணன் மனத்தில் சகோதர வாஞ்சையோ, புத்திர வாத்சல்யமோ, சீதையின்மாட்டுக் காமமோ இல்லை. குலத்து மானத்தை இறுதிவரை நிலைநிறுத்த வேண்டும் என்ற எண்ணமே உள்ளது. மூவுலகுக்கும் அச்சமூட்டிய இராவணன், மனிதனிடம் அஞ்சி ஓடினான் என்ற அபவாதத்தை அவன் ஏற்கத் தயாராயில்லை. மானம் இழந்து தான் வாழவிரும்பாத போது இந்திரனை வென்ற மகனும் வாழக்கூடாது என்ற எண்ணம் அவனுடைய அடிமனத்தில் இருந்திருத்தல் வேண்டும். அதனாலேயே அவன் இறப்பது உறுதி என்று அறிந்திருந்தும் அவனை மறுபடியும் போருக்கு அனுப்புகிறான். இவ்வளவு உறுதிப்பாட்டுடன் இராவணன் இருந்தான் என்றாலும், இந்திரசித்தன் இறந்தபொழுது அவன் நிலைகுலைந்துவிட்டான் என்பது அவன் கதறி அழும் பாடல்களில் நமக்கு நன்கு விளங்குகின்றது. இதுவரை குலத்து மானம் காக்க இட்ட பலி என்று பேசிக்கொண்டு வந்த இராவணன், இந்திரசித்து இறந்த பிறகு, அவன் மனத்தின் ஆழத்தில் புதைந்திருந்த எண்ணம் வெளிப்படுகிறது. வாய், குல மானம் என்று பேசினாலும், அடிமனத்தில் தன்னலம் நிறைந்திருந்தமையாலேயே இந்த விபரீத விளைவு ஏற்பட்டது என்பதை மகனை நோக்கி அழும்பொழுது அவனையும் அறியாது சொல்லிவிடுகிறான்.

"சினத்தொடும் கொற்றம் முற்றி, இந்திரன் செல்வம் மேவி,
நினைத்தது முடித்து நின்றேன்; நேரிழை ஒருத்தி நீரால்,
எனக்கு நீ செய்யத்தக்க கடன் எலாம், ஏங்கி ஏங்கி,
உனக்கு நான் செய்வதானேன்! என்னின் யார் உலகத்து
உள்ளார்?". (9224)

*இப்பாடலில் வரும், நினைத்தது எல்லாம் முடித்து நின்ற தனக்கு ஒரு பெண் காரணமாக, மகனுக்கு நீர்க்கடன் செய்யவேண்டி வந்ததே என வருந்துகிறான். மகன் தந்தைக்குச் செய்ய வேண்டிய நீர்க்கடனை, தந்தை மகற்குச் செய்யும் அவலநிலை வந்ததையும், அதற்குக் காரணமாய் இருந்தது ஒரு பெண்ணே என்பதையும், இராவணன் பேசும்பொழுது அவன் தந்தைப்பாசம் எவ்வளவு ஆழமானது என்பதை அறியலாம். இந்த நிலையில், பந்த பாசங்கள், விருப்பு வெறுப்பு ஆகிய அனைத்தையும் கடந்து, போருக்குப் புறப்படுகிறான் இராவணன். இதுவரை, இன்று இல்லாவிட்டால் நாளைவெற்றி என்ற எண்ணத்தில் மிதந்து வந்த இராவணன் இது இறுதிப்போர் என்பதையும் இதில் இரண்டில் ஒன்று முடிவாகிவிடும் என்பதையும் உணர்ந்து பின்வருமாறு பேசுகிறான்:*

"மன்றல் அம்குழல் சனகி தன் மலர்க் கையான் வயிறு
கொன்று, அலந்தலைக்கொடு நெடுந் சுாரிமை க்
குளித்தல்:
அன்று இது என்றிடின், மயன் மகள் அத் தொழில் உறுதல்:
இன்று, இரண்டின் ஒன்று ஆக்குவென், தலைப்படின்'
என்றான். (9667)

*இவ்வாறு வஞ்சினம் கூறித் தேர் ஏறும் இராவணன் மனநிலையை, இத்தேர் ஏறு படலத்தின் மூன்றாவது பாடலிலேயே மிக நுணுக்கமாக விளக்குகிறான் கம்பன்.*

"ஈசனை, இமையா முக் கண் ஒருவனை, இருமைக்கு ஏற்ற
பூசனை முறையின் செய்து.............................. (9644)

*இந்த அடி ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும். சிவ பக்தனாகிய இராவணன் இமையா முக்கண் இறைவனைக் கடைசி*

நாளன்றும் பூசனை செய்தான் என்று சொல்லவருகின்ற கம்பநாடன், " இருமைக்கு ஏற்ற பூசனை முறையின் செய்து" என்று கூறும்பொழுது, இராவணனுடைய ஆழ் மனம், அகமனம், புறமனம் ஆகிய மூன்றையும் படம்பிடித்துக் காட்டுவதன் மூலம் இராவணன் பெற்ற புதிய சொரூபத்தை எடுத்துக்காட்டுகிறான்.

முக்கோடி வாழ்நாள் வாழ்ந்தவன், மூவுலகம் போற்ற வாழ்ந்தவன் இறப்பு உறுதி என்று அறிந்து, அந்தச் சாவை எதிர்கொள்ளப் போகும்பொழுது எப்படி அமைதியாக இருக்க முடியும்? மனத்தை அடக்கிய பெரியவர்கள்கூட இத்தகைய சூழ்நிலையில் தடுமாற்றம் அடைதல் இயல்பே ஆகும். இந்த நிலையிலும் இருமைக்கு ஏற்ற பூசனையை ஒருவன் எவ்வாறு செய்ய முடியும்? இருமைக்கு ஏற்ற பூசனை என்ற தொடர் இம்மை, மறுமைக்கு ஏற்ற பூசனை என்று பொருள் தருவதுடன், காமிய, நிஷ்காமிய பூசனை என்றும் பொருள்படும். சாகப்போகும் ஒருவன் நிஷ்காமிய பூசனை செய்தான் என்றால், அவன் சமதிருஷ்டி பெற்று, ஸ்திதப்பிரக்ஞ நிலைபெற்ற ஒருவனாகவே இருத்தல் வேண்டும்.

நிஷ்காமிய பூசைக்கூட, மனத்தில் ஒரு சலனம் இல்லாமல் சாதாரண காலங்களில் அமைதியாக பூசை செய்தானே அதே போலத்தான் இன்றும் செய்தான் என்பதைக் குறிக்கவே கவிஞன் பூசனை முறையில் செய்து என்று கூறுகிறான். முறையில் என்ற சொல்லினால் பதட்டமோ, கவலையோ, மன உளைச்சலோ, பகைமையோ, காமமோ எதுவுமில்லாமல் மன அமைதியுடன் இருந்தால் தான் முறைப்படி பூசை செய்ய முடியும். இந்த இடத்தில் கவிஞன் இராவணன் இறுதிப் போருக்குப் புறப்படும் நிலையில் இவ்வாறு பூசனை செய்தான் என்று கூற ஒரு காரணமுண்டு. சுற்றத்தார் சுற்றப்பட ஒழுகலுக்கு நேர்மாறாகச் சுற்றத்தார் யாவரும் சாவில் படநேர்ந்த நிலையிலும், தன்னையே நேராகும் தம்பியையும் தனயனையும் இழந்த நிலையிலும் கலக்கத்திற்கு இலக்காகிய நெருக்கடி மிகுந்த அவல நிலையிலும் முறைப்படி பூசனை செய்தான். ஏன் கம்பன் இவ்வாறு கூறுகிறான்

என்றால், போர்க்களத்தில் உண்மையில் இராமன் யார் என்பதை இராவணன் அறியமுடிகிறது.

"சிவனோ? அல்லன்; நான்முகன் அலலன்: திருமாலாம்
அவனோ? அல்லன்; மெய்வரம் எல்லாம் அடுகின்றான்;
தவனோ என்னின், செய்து முடிக்கும் தரன் அல்லன்;
இவனோதான் அவ் வேத முதல் காரணன்?' என்றான்.
(9837)

இந்த எண்ணம் இராவணனுக்குத் திடீர் என்று தோன்றவில்லை. மகோதரனிடம் இராமன் பெருமையையும், வில்லாற்றலையும் இராவணன் பேசும்போதுகூட, இந்த எண்ணம் இருந்ததாகத் தெரியவில்லை. ஒரு சுத்த வீரன், மற்றொரு சுத்த வீரனைப் புகழ்வதாகவே அவ்விடம் அமைந்துள்ளது. இராமனைப் பற்றிய இப்புகழுரைகளை மாமனிடம் பேசுகின்ற அதே நேரத்தில் இராவணனின் ஆழ்மனத்தில், இராமன் பரம் பொருள் என்ற எண்ணம் அங்குரம் போல் முளைவிடுகின்றது. அந்த அங்குரத்திற்கு வித்திட்டவன் அனுமனே ஆவான். பிணி வீட்டு படலத்தில், திரிமூர்த்திகளையும் "புல்லிய வலியினோர்" (5878) என்று பேசிய அனுமன், மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய, காலமும், கணக்கும் நீத்த காரணன்" (5884) என்று இராமனைப்பற்றிக் கூறியது மாபெரும் அறிஞனான இராவணன் மனத்தில் அனுமன் இட்ட விதையாகும். இந்த விதைதான், இராவணன் மாமனிடத்தில் பேசும்பொழுது அங்குரமாக முளைத்து, இப்பொழுது இறுதிப்போரில் முழுமரமாக வளர்ந்து, எதிரில் நிற்பவன் வேத முதற்காரணன் என்பதை உணருமாறு செய்கின்றது. இருமைக்கு ஏற்ற பூசனையை மனக்கலக்கம், அவசரம் ஆகியவற்றில் உள்ளவர்கள் செய்யமுடியாது. தெளிந்த மனநிலையில் இராவணன் இருந்தமையால் இராமன் வேத முதற் காரணன் என்று உணர வைக்கின்றது.

என்றாலும், மெய்யறிவு பெற்றவர்கள்கூடப் பழைய வினைப்பயத்தால் அதனை இழந்துவிடுதல் உண்டு என்பதைப் பல பெரியோர்களின் வரலாறுகள் நமக்கு காட்டுகின்றன. ஆதலால், இந்த வினாடிவரை சமதிருஷ்டியும், மெய்யறிவும்

பெற்று, வேத முதற் காரணனை நேரே தரிசித்தும், அவ்வழியில் மேலே தொடரமுடியாதபடி அவனுடைய ஆணவம் தடைசெய்கின்றது. ஆன்மாக்களை மூன்று வகையாகப் பிரிக்கும் சைவசித்தாந்திகள் ஆணவம், கன்மம், மாயை என்ற முக் குற்றங்களையும் உடையவர்கள் சகலர் என்றும், ஆணவம், கன்மம் என்ற இரண்டு குற்றங்களை மட்டும் உடையவர் பிரளயாகலர் என்றும் ஆணவம் மட்டும் உடையவர்கள் விஞ்ஞானகலர் என்றும் கூறுவர். எனவே, மெய்ப்பொருளைத் தரிசனம் செய்துகூட ஆணவத்திலிருந்து விடுபடாமல்

"யாரேனும் தான் ஆகுக! யான் என் தனி ஆண்மை
பேரேன்; நின்றே வென்றி முடிப்பென்; புகழ் பெற்றேன்;
நேரே செல்லும் கொல்லும் எனில் தான் நிமிர்வென்றி,
வேரே நிற்கும்; மீள்கிலேன்' என்னா, விடலுற்றான்.

(9838)

ஏனைய குற்றங்களிலிருந்து முழுதும் நீங்கியவனாகிய இராவணன் விஞ்ஞானகலர் என்ற ஆணவத்தின் சொரூபமாகக் காட்சி அளிக்கின்றான்.

கொண்டது விடாமையும், புகழ் பெறவேண்டும் என்ற விருப்பமும் ஆணவத்தின் பயனாக விளைபவை. 'என் தனி ஆண்மை பேரேன்; நின்றே வென்றி முடிப்பென்; புகழ்பெற்றேன்;' என்று அவன் கூறுவது, இறுதிக் குற்றமாகிய ஆணவத்தின் வெளிப்பாடே ஆகும்.

இராவணன் வதைப் படலத்தை அடுத்துக் காணப்படுவது மீட்சிப் படல மாகும். இப்படலத்தில் முக்கியப் பகுதி பிராட்டியின் தீக்குளிப்பு ஆகும். இராகவன் மானின் பின்னே சென்றிருக்கையில் இலக்குவனை மனங் கலங்கிய நிலையில் கடிந்து பேசிவிட்டாள் பிராட்டி என்று சொல்கிறோமே தவிர அவள் பேசியதைக் கூறும் பாடல்கள் அப்படி நினைக்க இடம் தரவில்லை.

'ஒரு பகல் பழகினார் உயிரை ஈவரால்;
பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டும், நீ

வெருவலை நின்றனை; வேறு என்? யான் இனி,
எரியிடைக்கடிது வீழ்ந்து இறப்பென், ஈண்டு' எனா (3331)

"இராகவனிடம் ஒரு பகற்பொழுது பழகினவர்கள்கூட அவனுக்காகத்தன் உயிரையே தந்து விடுவர். அவன்பின் பிறந்த இளையனாகிய நீ அப்பெருமகன் அழிகிறான் என்ற செய்தி அறிந்தும் உடல் பதறாமல் நிற்கின்றாய். இது தவிர நான் சொல்வதற்கு வேறு ஒன்றுமில்லை. தீயில் மூழ்கி என் வாழ்நாளை முடித்துக்கொள்வது தவிர வேறு வழியில்லை" என்று பொருள்படும் இச் சொற்கள் அவள் துயரத்தை அறிவிக்கின்றதே தவிர வேறு இல்லை. பெண் என்ற காரணத்தால் இராமனுடைய உண்மை சொரூபத்தை அறியாமல் அவனுக்கு கேடு வந்து விட்டது என்று அஞ்சுகிற நிலையில் 'வெருவலை நின்றனை' என்று பேசுகின்றவளின் மனநிலையை கவிஞன்,

என்று அவன் இயம்பலும், எடுத்த சீற்றத்தள்
கொன்றன இன்னலள், கொதிக்கும் உள்ளத்தள்
நின்ற நின்நிலை இது, நெறியிற்று அன்று'------
------------------------------------------------ (3330)

என்ற பாடலில் கூறுகிறான். பொங்கிய சீற்றமும், கொதிக்கும் உள்ளமும் ஒன்று சேர்ந்தவழி அறிவு அங்கு தொழிற்படவில்லை. எனவே இராமனுடைய உண்மை நிலையை அறியாதது போலவே இலக்குவனுடைய உண்மை நிலையையும் அறியாது பேசுகிறாள். நீ இப்பொழுது பதறாமல் நிற்கின்ற நிலை நன்னெறியில் செய்வோர்கள் செய்யும் செயலன்று என்ற கருத்தில் 'நின்ற நின்நிலை நெறியிற்று அன்று' என்று பேசிவிட்டாள். அரச குமாரனாகப் பிறந்தும் மனைவியைத் துறந்தும் வனத்திடை வந்து பல ஆண்டுகள் ஊனையும் உறக்கத்தையும் மறந்து தலைவன் பணி தலைநிற்கும் ஒருவனைப் பார்த்து அவனுடைய மனநிலையையே ஐயுற்று பேசுபவள் போல பிராட்டி பேசியது மிகக் கொடுமையானது தான், என்றாலும், இவ்வார்த்தைகளைக் கேட்ட இளைய பெருமாள் அவளிடம் சினம் கொள்ளவில்லை. அதற்கு மாறாக பச்சாதாபமே கொள்கிறான். யாரென நினைந்தீர்

கமலக் கண்ணனை என்று அவன் இராகவன் ஆற்றலை விரிவாக எடுத்துக்கூறியும் தெளிவாகச் சிந்திக்கும் ஆற்றலை இழந்துவிட்ட பிராட்டி முன்பின் யோசியாமல் 'நின்றநின் நிலை, இது நெறியிற்று அன்று' என்று கூறியது மிகக் கொடிய வார்த்தை எனினும் அது பேசப்பட்ட சூழ்நிலையையும், பேசியவள் மனைவி ஸ்தானத்தை வகிக்கும் பெண் என்பதையும் அறிந்தால் அவளை மன்னிப்பது எளிதாகும்.

இலக்குவன் இராமனிடம் சென்றபொழுது அவனைக் கண்ட இராகவன் திடுக்குற்று வந்த காரணம் பற்றி வினவ, இளையோன் தேவியின் துயரத்தையும், தான் போகாவிட்டால் அவள் தீ இடைபுக முயன்றதையும், கேடு வரும் என்று தான் அஞ்சுவதையும் எடுத்து கூறினான். அண்ணன் தம்பி ஆக இருவரும் அவள்மாட்டுச் சினமோ, வெறுப்போ கொண்டதாக எக்குறிப்பும் இப் பாடல்களில் இல்லை. அவள் பெண்மையின் காரணமாக தோன்றிய அச்ச உணர்வின் காரணமாக இவ்வாறு பேசினாள் என்று நினைத்தார்களே தவிர வேறு இல்லை.

அதன்பிறகு விரைவாக நடந்த செயல்கள் பிராட்டியைக் கதிகலங்கச் செய்துவிட்டன. தன்னைக் காத்து நின்றவனை மனம் நோகும்படிப் பேசி தானே போகச் சொல்லியது எவ்வளவு அறியாமை உடையது என்பதை அசோகவனத்தில் இருக்கும்பொழுது அமைதியாகச் சிந்திக்கின்றாள். இராம பக்தியில் ஈடு இணையற்று விளங்கிய ஒரு பெருமகனைத் தரக் குறைவாக பேசியதை அறிந்த இராமன், தன்னை அறிவிலள்; அரசியாக இருப்பதற்கு தகுதியற்றவள் என்று நினைந்து ஒதுக்கிவிட்டானோ என்று அஞ்சுகிறாள்.

என்னை, நாயகன், இளவலை, எண்ணலா வினையேன்
சொன்ன வார்த்தை கேட்டு, "அறிவு இலள்" எனத்
துறந்தானோ?
---------------------------------- (5082)

தான் முன்பின் யோசியாமல், இராமானுஜனாகிய இளையவனைப் பேசியது எத்துணைப் பெரிய தவறு என்று இப்பொழுது அவளால் உணர முடிகின்றது. இராம பக்தனைப்

பார்த்து நீ நடந்து கொள்வது சரியில்லை என்று அண்ணன் மனைவி பேசினால் இதைவிடப் பெரிய தவறு வேறு இருக்க முடியாது. ஆகவே, இவ்வாறு நினைந்து நினைந்து இளையவனுக்கு அறிந்தோ அறியாமலோ பெருந்தவறு இழைத்துவிட்டோம் என்ற குற்றவுணர்வு பிராட்டியின் மன ஆழத்தில் வலுவாகப் பதிந்து விட்டது.

குற்ற உணர்வினால் வருந்துகின்ற பிராட்டியின் இளைய பெருமாளும் விரைவில் சந்தித்து அயோத்தி சென்று ஒரே இடத்தில் வாழவேண்டிய சூழ்நிலை உருவாகிக் கொண்டு இருக்கிறது. குற்ற உணர்வுடைய ஒருத்தி எவ்வளவுதான் மறக்க முயன்றாலும் இலக்குவனைப் பார்க்கும் போதெல்லாம் அந்த குற்ற உணர்வு அவளுடைய மனத்தில் நெருடிக் கொண்டே இருக்கும். எனவே, அக்குற்றம் போகவேண்டு மானால் இலக்குவனால் தான் ஒரு தண்டனையை அடைய வேண்டும். அதுவே தான் செய்த குற்றத்திற்கு கழுவாய் என்று நினைக்கிறாள் பிராட்டி.

இதனை நன்கறிந்து கொண்ட இராகவன், பிராட்டியை நெருப்பில் விழ முற்படும் நிலைக்கு அவளை ஏசுகிறான். நெருப்பில் விழ முடிவுசெய்த பிராட்டி இலக்குவனைப் பார்த்து 'நீ எனக்கு நெருப்பு அமைத்து தா! என்று வேண்டுகிறாள். நெருப்பு அமைக்க வேண்டுமானால் இலங்கை வாசியான வீடணனை அல்லவா அவள் கேட்டிருக்க வேண்டும்? அதை விட்டுவிட்டு இலங்கைக்கு முற்றிலும் புதியவனான இளையவனை நோக்கி, தீ அமைத்து தா என்ற கேட்பதிலிருந்தே அவனால் தனக்கு தண்டனைத் தரப்பட்டால் தன் குற்ற உணர்விலிருந்து கழுவாய் தேடிக்கொள்ள முடியும் என்று அவள் விரும்புகிறாள் என்பதை நன்கு புரிந்துகொள்ள முடியும். அக்னிப் பிரவேசம் என்ற இந்த முழுநிகழ்ச்சியும் பிராட்டியின் குற்ற உணர்வைப் போக்க அறத்தின் மூர்த்தியாகிய இராகவன் நடத்திய நாடகமே என்பதை நன்கு விளங்கிக் கொள்ளலாம். தீ அமைக்க என்று பிராட்டி கேட்டவுடன் நடுங்கிப் போன இலக்குவன், அண்ணன் முகத்தைப் பார்க்கிறான்.

"இளையவன்தனை அழைத்து, 'இருதி, தீ' என,
வளை ஒலி முன் கையாள் வாயின் கூறினாள்;
உளைவுறு மனத்தவன் உலகம் யாவுக்கும்
களைகணைத் தொழ, அவன் கண்ணின் கூறினான்
(10029)

என்ற இப்பாடலின் 3வது அடியில் உள்ள கண்ணின் கூறினான் என்ற தொடர், இது ஒரு நாடகம் என்பதை இளையவனுக்கு இராகவன் உணர்த்தினான் என்று பொருள் கொள்ளுமாறு நிற்கிறது. கம்பநாடனுடைய காவியத்தில் வரும் பிராட்டியின் அக்னிப்பிரவேசம் ஏனைய இராமாயணங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருப்பதைக் காணலாம். மனவியலை நன்கு அறிந்த கவிஞனே இத்தகைய தொரு சூழ்நிலை உருவாக்கி, அதனை அக்னிப் பிரவேசத்தில் முடிக்க முடியும்.

அடுத்துள்ள திருமுடிசூட்டு படலத்தில் முடிசூட்டலைக் கூறும் கவிஞன் பாடியுள்ள அரியணை அனுமன் தாங்க என்ற பாடல் அனைவரும் அறிந்த ஒன்றாகும். இப்பாடலின் தனிச் சிறப்பு என்னவென்றால், முடிசூட்டப்பட்டவன் பெயரைக் குறிக்காமலேயே 'வசிட்டனே புனைந்தான், மௌலி' என்று முடிக்கிறான் கவிஞன். முடிசூட்டப்பட்டவனைச் சுற்றி நிற்பவர்கள் வரிசையாகக் கூறப் பெறுகிறார்கள். அரியணை அனுமன் தாங்கினான்; பரதன் வெண்குடை கவித்தான்; இருவரும் (இலக்குவ, சத்ருக்கனர்) கவரி வீசினர். அங்கதன் உடைவாள் ஏந்தினான்; இவர்களுக்கு இப்பணி வழங்கப்பட்டதன் நுணுக்கத்தைக் காண்டல் வேண்டும். அகங்கார, மமகாரங்கள் அறவே செற்று இராம பக்தி சாம்ராஜ்ஜியத்தில் மூழ்கித் தங்களையே இழந்தவர்கள் அனுமன், பரதன் என்ற இருவருமாவர். அதிலும் பக்தியோடு தொண்டும் கலந்த முழுவடிவம் அனுமன். அவன் அரியணைத் தாங்கினான் என்றால் இராமன் ஆட்சி என்பது தொண்டு என்ற அடித்தளத்தின்மேல் அமைந்துள்ளது என்று அறிய முடியும். தன்னலமற்ற பக்தியில் திளைத்தாலும் ஆயிரம் இராமர்கட்குச் சமமானவன் என்று மற்று ஓர் அன்பே

வடிவான குகனால் சான்றிதழ் தரப்பெற்றவன் பரதன் என்றாலும் தலைவன் பணி தலைநின்றவனாய் பதினான்கு ஆண்டுகள் ஆட்சி புரிவது தன் கடமை என்று அறிந்தவுடன் விருப்பு, வெறுப்பற்ற சமநிலையில் நின்று ஆட்சி புரிந்தவன் ஆதலால், அன்போடு கூடிய கடமை உணர்ச்சிக்கு பரதன் எடுத்துக்காட்டாவான். எனவே அவன் குடை கவிக்கிறான் என்றால், இராமராஜ்ஜியம் தொண்டு என்ற அஸ்திவாரத்தில் மேலும் விருப்பு வெறுப்பற்ற கடமை என்ற குடையின் கீழும் அமைந்திருத்தலை கவிஞன் உருவகமாகப் பேசுகிறான்.

இவை இரண்டிற்கும் அடுத்தபடியாக அன்போடு கலந்த தொண்டின் வடிவமாகிய இலக்குவன் ஒருபுறம் கவரி வீசுகிறான். இராமகாதை முழுவதிலும் ஒரே ஒரு பாட்டில் தோன்றிமறையும் அன்பின் வடிவான சத்ருக்கனன் மற்றொரு பக்கம் கவரி வீசுகிறான். எனவே இராமன் என்ற அறத்தின் மூர்த்தி மேலும், கீழும், பக்கங்களிலும் அன்பு, கடமை, தொண்டு என்பவற்றால் சூழப்பட்டுள்ள ஓர் உருவகத்தை இந்த ஒரு பாடலில் கவிஞன் தந்துவிடுகிறான். காந்தி அடிகள் கூறிய இராமராஜ்ஜியத்திற்குக் கம்பனை விடச் சிறந்த விளக்கம் தந்தவர் வேறுயாரும் இலர். ‘அங்கதன் உடைவாள் ஏந்த’ என்ற தொடர் மிக நுட்பமானதாகும். பகை என்று கருதப்பெற்று கொல்லப்பட்டவனாகிய வாலியின் மகன் அங்கதன் ஆவான். அரசனுக்குரிய அதிகாரச் சின்னமாகிய உடைவாள் பகைவனின் மகன் கையில் சென்றது என்றால், அதுவும் விரும்பித் தரப்பெற்றது என்றால் இராமன் ஆட்சியில் வாளுக்கு வேலையில்லை என்ற கருத்தை சொல்லாமல் சொல்கிறான் கவிஞன். உடைவாள் பிடிக்க என்று சொல்லாமல், உடைவாள் ஏந்த என்று கூறியதால் வாளைப் பயன்படுத்தும் நாட்கள் ஒழிந்து விட்டன. அது அலங்காரப் பொருளாக ஏந்தப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கவே ‘ஏந்த’ என்ற சொல்லை பயன்படுத்துகிறான் கவிஞன். இந்த ஒரு பாடலில் கம்பன் கண்ட இராம காதையின் முழுச் சிறப்பும் இடம் பெறுவதைக் காணலாம்.

இந்நிகழ்ச்சியை அடுத்து இராகவன் பரதனுக்கு இளவரசு பட்டம் சூட்டிப் பொறுப்பு முழுவதையும் அவனிடம்

தந்துவிட்டு அமைதியான வாழ்வு மேற்கொண்டான் என்ற ஒரு பாடலைக் கவிஞன் கூறுவது நம் சிந்தனையைத் தூண்டுகிறது. அப் பாடல் வருமாறு:-

விரத நூல் முனிவன் சொன்ன விதி நெறி வழாமை நோக்கி,
வரதனும், இளைஞற்கு ஆங்கண்மா மணி மகுடம் சூட்டி,
பரதனைத் தனது செங்கோல் நடாவுறப் பணித்து, நாளும்
கரைதெரிவு இலாத போகக் களிப்பினுள் இருந்தான் மன்னோ **(10331)**

இப்பாடல் சற்று வியப்பைத் தருவதாகும். முடிசூடிய சில நாட்களிலேயே பரதனுக்கு இளவரசு பட்டம் கட்டவேண்டிய சூழ்நிலை என்ன வந்தது. அறுபதனாயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்த தயரதன் தன் கண்மணி போன்ற இராமனுக்கு இளவரசு பட்டம் சூட்ட வேண்டும் என்று நினைத்தானே தவிர உண்மையில் தானாக அதிகாரத்தை விட்டுக் கொடுக்க விரும்பியதாகத் தெரியவில்லை. அவனது வாழ்வு முழுவதையும் எவ்வாறு கழித்தான் என்பதை இதோ கம்பன் பேசுகிறான்:

ஈந்தே கடந்தான், இரப்போர்கடல்; எண் இல் நூண் நூல்
ஆய்ந்தே கடந்தான், அறிவு என்னும் அளக்கர்; வாளால்
காய்ந்தே கடந்தான், பகைவேலை; கருத்து முற்றத்
தோய்ந்தே கடந்தான், திருவின் தொடர்போக பௌவம் **(172)**

முதல் மூன்று அடிகளோடு, நான்காவது அடியில் கூறப்பட்ட பொருள் இயைபுடையதாகத் தெரியவில்லை. முதல் மூன்று அடிகளில் கூறப்பட்ட கடமைகளை விடாது செய்த ஒருவன் எவ்வாறு அறுபதினாயிரம் மனைவியருடன் இன்ப வெள்ளத்தில் வாழ முடியும் என்ற வினா தோன்றத்தான் செய்கிறது. போகக் கடலில் திளைத்திருந்த ஒருவன் மற்றவற்றில் மனம் செலுத்துவது இரண்டிலும் முழுத் தன்மை பெறாத ஒரு நிலையைக் குறிக்கும். சீவகனின் தந்தை சச்சந்தன் வரலாறு இதற்கு எடுத்துக் காட்டாகும். மேலும் அறுபதினாயிரம் மனைவியருடன் வாழ்கின்ற ஒருவன்,

இன்ப அன்பு வாழ்க்கையில்கூட முழுவதுமாக தோய முடியாது. ஒருவன் - ஒருத்தி என்றிருக்கும் பொழுதுதான் அந்த வாழ்க்கை முழுத்தன்மை உடையதாகும். அதிலும் இடையிடையே அரசனுடைய கடமைகள் குறுக்கிடுமாயின் அது முழுத்தன்மைப் பெறாத போக வாழ்க்கையாகும்.

இந்த எண்ண ஓட்டத்தை மனத்திற்கொண்டு இராமனுடைய வாழ்க்கை எவ்வாறு அமைந்தது என்று பேசத் துவங்குகிறான் 'விரத நூல் முனிவன் சொன்ன' என்ற பாடலில், அமைதியான இன்ப வாழ்க்கை என்பது இடையூறு அற்றதாக இருக்க வேண்டும். அதிகாரம் நிரம்பிய அரச வாழ்க்கையும் இன்பம் தருவதுதானே என்று கூறினால் அங்கே ஒரு பிரச்சனை தோன்றுகிறது. அதிகாரத்தின் ஆணிவேர் 'நான்' என்பதாகும். இந்த நான் பெரிதாக வளர்ந்துள்ள நிலையில்தான் அதிகார வாழ்க்கை அனுபவிக்க முடியும். என்றுமே இராமனைப் பொறுத்தமட்டில் அதிகார வாழ்வில் ஈடுபாடு உடையவன் அல்லன் என்பதைக் 'காதல் உற்றிலன்; இகழ்ந்திலன்; 'கடன் இது' என்று உணர்ந்தும்........ அப்பணிதலை நின்றான் (1382) என்ற பாடலில் கவிஞன் நன்கு எடுத்துக்காட்டியுள்ளான். அரசாட்சி பாரம் எனக் கருதிய இராகவன் மற்றோர் அறத்தின் மூர்த்தியாகிய பரதனிடம் அதனை ஒப்படைத்துவிட்டு தன் தேவியோடு இன்பவாழ்க்கை நடத்தினான் என்ற பாடலின் நான்காவது அடி பேசுகிறது.

அதிகாரம், இன்பவாழ்க்கை என்ற இரண்டையும் ஒன்று கலந்ததால் தசரதன் வாழ்க்கை முழுத்தன்மை பெறவில்லை. அவனுடைய இன்பவாழ்க்கையும் அறுபதினாயிரத்தால் வகுக்கப்பட்டபொழுது தன் சிறப்பை இழந்துவிட்டது. அவன் மகனாகிய இராகவன் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்காமல் முழுவதுமாகத் தக்க பத்திரமாகிய பரதனிடத்தில் தந்து விட்டதால் அக்கவலை நீங்கி விடுகிறது. அவனுடைய இன்ப வாழ்க்கை ஒருத்தியோடு அமைந்ததால் அதுவும் முழுத்தன்மை பெற்றதாகிவிடுகிறது. எனவே, தந்தை செய்ய இயலாத பலவற்றை தனயன் செய்து காட்டினான் என்று சொல்லும்

முறையில், விரத நூல் முனிவன் என்ற பாடலை அமைத்துள்ளான். ஆழ்ந்து சிந்திக்க சிந்திக்க இராகவன் என்ற தனிமனிதனுடைய வாழ்வு முழுவதையும் படம்பிடித்துக் காட்டுவதாய் அமைந்திருத்தலைக் காணலாம்.

பெருங்கேடு விளைந்து அசோகவனத்தில் சிறை இருக்கும் பொழுது தான் செய்த பிழை நினைத்து வருந்தினாள் சீதை என்பதை "என்னை இளவலை எண்ணாலா வினையை சொன்ன வாசகங்கேட்டு அறிவிலர் எனத் துறந்தானோ" என்ற பாடலில் கவிஞன் பேசுகிறான். அவளுடைய மனத்தில் இருந்த குற்ற உணர்வைப் போக்கிக்கொள்ளவே தீப்பாயும் நிகழ்ச்சியைக் கம்பன் பாடுகிறான்.

அடுத்துள்ள விடைகொடுத்த படலத்தில் ஒரு பகுதி நம் மனத்தில் ஆழமாகப் பதிக்க வேண்டிய ஒன்றாகும். அயோத்தி மீண்ட இராகவன் முடி சூடிக்கொண்டு தன்னுடன் இருந்த குகன், சுக்கிரீவன் முதலியோருக்கு தக்க பரிசுகளைக் கொடுத்து விடை கொடுத்து அனுப்புகிறான். இறுதியாக எஞ்சுபவன் அனுமன் ஆவான். அவனுக்கு என்ன பரிசு கொடுப்பதென்று இராமனுக்கே புரியவில்லை. கைம்மாறு கருதாமல் அனுமன் செய்த தொண்டுகளை யெல்லாம் அவ்வப்போது பாராட்டி உள்ளான் இராகவன். மருத்துமலை வந்தபொழுது அனுமனை நோக்கித் தழுதழுத்த குரலில், "ஐயனே! தசரதன் பிள்ளைகளாகிய நாங்கள் நால்வரும் முன்னரே இறந்துவிட்டோம். இப்பொழுதுள்ள நால்வரும் உன்னிடம் பிறந்த பிள்ளைகளாவோம் என்ற கருத்தில், "நின்னில் தோன்றினோம் நெறியில் தோன்றினாய்" (8812) என்று இராகவன் கூறித் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான். தந்தையின் ஸ்தானத்தில் இருக்கும் ஒருவனுக்கு எந்தப் பரிசினைத் தந்தாலும் அது குற்றமாகிவிடும். எனவே, இராகவன் அனுமனை நோக்கி,

"மாருதி தன்னை ஐயன் மகிழ்ந்து, இனிது அருளின் நோக்கி,
'ஆர் உதவிடுதற்கு ஒத்தார், நீ அலால்? அன்று செய்த

பேர் உதவிக்கு யான் செய் செயல்பிறிது இல்லை:
பைம்பூண்
போர் உதவிய திண்தோளாய்! பொருந்துறப் புல்லுக!'
என்றான். (10351)

இப்பாடலில் உள்ள புதுமையையும், நுணுக்கத்தையும் சிந்திக்க வேண்டும். தமிழ்நாட்டு மரபுப்படி ஒருவரை ஒருவர் தழுவும் பொழுது, தழுவினவர் ஆளுமை மிக்கவர் என்றும் தழுவப்பட்டவர் ஒருபடி குறைந்தவர் என்றும் கருதுவது இயல்பு. இராமன் அனுமனைத் தழுவி யிருந்தால் மிகச் சிறப்புடைய செயல் மரபுக்கு ஒத்ததாகும். ஆனால், "அனுமனே! நீ என்னைப் பொருந்துறப்புல்லுக!" என்று பேசுகிறான் கோசல நாடுடை வள்ளல். இன்றுவரை சீதைக்கும், இலக்குவனுக்கும், பரதனுக்கும் உரியனவாக இருந்த அத்தோள்கள் அவர்களைப் புல்லினவே தவிர, அவர்களால் புல்லப்படவில்லை. தொண்டின் பரிணாமமாக விளங்கும் அனுமனைப் பார்த்து, நீ என்னைப் புல்லுக என்று இராகவன் கூறும்பொழுது, தன்னைவிடத் தன் நாமத்தையே ஜெபிக்கும். அகங்கார, மமகாரங்களற்ற தொண்டனாகிய அனுமனை ஒருபடி உயர்த்திவிடுகிறான். இராகவன் பரம்பொருள் ஆதலின், தொண்டனை, பக்தனை என்னைப் புல்லுக என்று சொல்லும் பொழுது ஒரு தொண்டனின் பிடியில் பரம்பொருள் அகப்பட்டுக்கொள்ளுகிறான். குறியீட்டு முறையில் சொல்வதானால், பக்தனின் இருதயத்துக்குள், பரம்பொருள் புகுந்துவிட்டான் என்பதையே இது குறிக்கிறது.

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே"

என்று வள்ளலாரும் "பக்தி வலையிற் படுவோன் காண்க" என்று மணிவாசகப் பெருந்தகையும் "இறைவனோ தொண்டர் உள்ளத்து அடக்கம்" என்று ஔவையும் கூறியது எவ்வளவு பொருத்தமானது என்பதை அறியமுடிகிறது.

யுத்த காண்டத்தில் இன்னும் ஆராயப்படவேண்டிய பகுதிகள் பற்பல இருப்பினும், இடமின்மை கருதி இத்துடன் நிறுத்தவேண்டியுள்ளது. இந்த ஒரு காண்டத்தைமட்டும்

வைத்துக்கொண்டு இராம, இலக்குவர்கள் என்பவர்கள்பற்றிப் பாத்திரப்படைப்பு என்ற தலைப்பில் சிந்திக்க முற்பட்டால் அது ஒரு தனி நூலளவு விரியும் ஆதலால் இங்கு விடப்பட்டுள்ளது.

பாலகாண்டம் தொடங்கி, ஒவ்வொரு காண்டமாகப் பார்க்கும்பொழுது காப்பியம் என்பதை விட்டுவிட்டுக் கவிதை என்ற முறையில் பார்த்தால்கூடக் கவிதைச் சிறப்பு பாலகாண்டத்தில் மாணிவடிவம் பெற்ற அனுமனைப்போல் தொடங்கி, அந்த அனுமன் மால் என வளர்ந்து நிற்பது போல் யுத்த காண்டத்தில் இந்தக் கவிஞனின் கவிதைச் சிறப்பும் ஒவ்வொரு காண்டத்திலும் பெருவளர்ச்சி பெற்று யுத்த காண்டத்தில் கவிதை உலகில் - பிற மொழிக் கவிதைகள் கூட - உவமை சொல்ல முடியாதபடி இணையற்ற ஒரு முறையில் சிறந்து நிற்பதைக் காணலாம். இக்கவிஞன் பயன்படுத்தாத விருத்தபா முறையே இல்லை என்பதை அறியலாம். கலிவிருத்தம் என்று ஒரு வகைப் பாடலை செய்யுள் இலக்கணம் குறிக்கின்றது. அந்தக் கலிவிருத்தங்களில் 40வகையை உண்டாக்கிய பெருமை கம்பனுக்கே உண்டு. நதியில் படகு செல்வது, கருடன் பறந்து வருவது போன்ற நிகழ்ச்சிகளைக்கூடக் கவிதையின் ஓசைச் சிறப்பால் நம்முடைய மனக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தும் ஆற்றல் இக்கவிஞன்பால் உண்டு. இறைத் தத்துவம், இறை இயல்பு என்பவற்றை வெளிப்படையாகக் கூறாவிடினும், சொற்களை அமைக்கும் முறையில் இக்கருத்துக்கள் உள்ளடங்கி இருக்குமாறு பாடும் ஆற்றல் கம்பனுக்கு உரியதாகும்.

தனிமனிதர்கள், அவர்கள் கூடிய சமுதாயம், அவர்களை ஆளும் தலைவன், தனிக் குடும்பம் என்பவற்றை யெல்லாம் உள்ளடக்கிய காப்பியம் பக்திக் காப்பியமாகமட்டும் அமையாமல், வாழ வேண்டிய வகையை விரித்துக் கூறும் சமுதாயக் காப்பியமாகவும் அமைந்துள்ளது தமிழர்கள் செய்த தவப் பயனே ஆகும்

## சொல்லடைவு
## (எண் : பக்க எண்)


அகங்காரம் - தற்பெருமை 127
- காட்டிக் கொடுத்துவிடும்
அகங்கார, மமகாரம் இன்மை 201
அகத்திணை இயல் 31
அகந்தைக் கிழங்கு 163
அகிம்சை - மகாத்மா கருத்து 251
அச்சத்தால் நைவு 189
அஞ்ஞான மூட்டம் 158
அடிமன ஏக்கம் 35
அடுக்கிய குற்றச் சாட்டு 100
அடுக்கிய பொய் 120
அணிவகுப்பு 254
அத்யாத்ம ராமாயணம் 6
அத்வைதம் - சங்கரர் 20 263
அந்தக்கரணம் 161
அந்தணர் இல் 269
அபரஞானம் 184
அபிசார வேள்வி 306
அபௌருஷேயம் 232
அம்பரீடன் - நரபலி 36
அம்பிகாபதி - கம்பன் மகன் 46
அம்பின் வாய் அறிவு 144
அமரத் தன்மை 114
அமுத தாரைகள் 187
அயன்படை - அவமதித்து அகறல் ஆகாது 229
அயோகா - இயாகோ 63
அயோத்தி 32
அரசின் கொற்றம் 248
அரசியல் அறிவுரை 171
அரம்பை முதலியோர் 119
அருப்பம் இல் கேடு 220
அல்லார் பெற்ற அதிகாரம் - அழிவு 147
அவதார நோக்கம் 101
அவதாரப் பயன் 104
அவல நிலை - அனைவர் இழப்பு 317
அவனிற் சிறந்த அவன் நாமங்கள் 205
அவித்தல் - நிலைமாற்றம் 159
அழகி - பரிசுப்பொருள் - அரசற்கு 121
அழுக்கு மூட்டை - உள்/வெளி 155
அளவு இகந்த இரக்கம் 167
அளி பொழி கடைக்கண் 76
அற்புதச் சூழ்ச்சி 124
அறநெறி முதற்று 248
அறம் - கார் உரு 268
அறம் வழீ இ 170
அறம் - ஈகை; கடமை 34
அறிவு - தர்க்கம் 263
- பௌத்த வாதம்
அறுந்த உறவு 273
அன்பின் அவதி 186
அன்பினால் மூண்ட சினம்
அன்பின் பரிமாணம் 99
அன்பு, ஆணை - இருசிறை 198
அன்புப் பிழம்பு 88

அன்ன கட்டுரை 153
- பொருள்கோடலில் பிழை
அனுமன்
- அறிமுகம் 227
- ஐயுறல் 211
- விசுவரூபம் 197
அனுமானம் 213
அனுமான அறிவு 114
ஆசலம் புரிவ 40
ஆண்மை பேரேன் 310
ஆணவ வகைகள் 16
ஆணவ வெளிப்பாடு 319
ஆதிக்கம் பரப்பல் 248
ஆதி நிறங்கள் 140
ஆமை - ஐந்தடக்கல் 201
ஆழ்வார்கள் 263
ஆன்மா 186
ஆன்மிகச் செல்வன் 26
ஆன்மிகம் - விளக்கம் 12
இச்சா மாத்திரம் 103
இடர் இலா முகம் 72
இடைச் செருகல் 29
இடை மறுத்தல் 153
இந்திரப் பெரும்பதம் 113
இந்திரர் அமிழ்தம் 168
இமாலய நம்பிக்கை 259
இயற்கை வருணனை 30
- தன்மை நவிற்சி
இயற்கை வளம் 44
இரண்டில் ஒன்று 316
இராச விசுவாசம் 193
இராம நாமம் 204
- ஈதைகள் தீர்ப்பது
இராமன்
- அறத்து ஆழியான் 244
- அறநாயகன் 244
- அற மூர்த்தி 244
- உறுதி கூறல் 166
- தசரதன் சொல்மறான் 78
- தான் தன் அறியான் 163
இராமயண தனிச்லோகி 47
இராமாயணம் 29
- அத்யாத்மம் 165
- கம்பன்
- வால்மீகி
இராமானுஜன் 100
இராவணன் 104
- வரபலத்தன்
- மறைவலான்
- நான் உரு
இரிசிகன் - பிள்ளைவிற்க.... 36
இருமைக்கு ஏற்ற பூசனை 317
இருள் தீர எண்ணல் 225
இலக்குவன் 125
- அயோமுகி கொல்லான்
- கைங்கர்ய பரன்
- சாலை சமைப்பான்
- தெப்பம் அமைப்பான்
- முன்னவற்கினியான் 98
- மூண்ட சினம் 98
- விதி எள்ளுவான் 97
இலட்சிய நகர் 30
இலட்சிய நாடு 30
இழுக்கம் - இரக்கம் 167
இளையவற் கவித்த மோலி -
திருவடி 273

இறுதியில் இயைவு -
நல் உணர்வு 272
இறுமாந்திருப்பன் 232
இறையருள் 17
இறையனுபவம் 143
இறைவன்
- இலக்கணம் 110
- சேர்தல் 109
- ஞான மார்க்கம் 110
- துதிப் பாடல்கள் 110
- பக்தி மார்க்கம் 110
இன்பத்து எல்லை 211
இன்பத்துறை எளிமை 147
இன்ப வேட்கை 57
இன்று என இருத்தி 215
இனமானம் 286
ஈதல் - செல்வத்துப்பயன் 34
உச்சநீதி மன்றம்
- மேல்முறையீடுஇன்மை 49
- முடிந்தமுடிவு - தீர்ப்பு 49
உசாத்துணை நால்வர் 270
உடன் உறை கடிய நோய் 118
உடையார், இல்லார் 32
உடைவாள் 174
- அதிகார அடையாளம்
உடோப்பியா 37
- கற்பனை நகர்
உணர்ச்சி அலைகள்
- ஏற்ற, இரக்கம் 217
உணவு சேகரம், விநியோகம் 257
உதவி- உபத்திரவம் தரும்? 183
உபநிடதம் 20, 111, 265
உம்பரின் உயர்ந்த தம்பி 280
உம்பி 87
உம் பிழைக்கு உலகைச்
சினப்பதா 117
உய்கதி 158
உயிர் அச்சம் 281
உயிர்ப்பற்று 280
உருக்காட்டு படலம் 215
உலகம் ஏழும் ஏத்தல் 176
உலகு கலக்குவன் 307
உள் உணர்வு 108
உளவியல் விளக்கம் 15
உறக்க நிலைக் காட்சி
- இந்திரசித்தன் 283
- கைகேயி
- கும்பகருணன்
- மண்டோதரி
உறக்கம் 76
-அளிபொங்கக் கிடத்தல்
உறங்குவார் முகம்
- கண்டு களித்தல் 206
எண்ண அதிர்வு 207
எண்ண ஓட்டம் 30, 364
எருமை - பால் சோர விடல்
- அன்னம், சாலி பெறல்
எல்லை மீறல் - பாசம் 65
எழாச் சினம் 116
எள்ளல் மனப்பான்மை 226
எளிவந்த தன்மை 107, 233
என் கேள்விக்கு
என்ன பதில்? 159
என்றி - என்பாய் 155

ஏன் அழைத்திலை 291
ஐந்தடக்கல் 201
ஐந்தவித்தல், ஆற்றல் 196
- அனுமற்குரிய
ஐந்தொழில் - விளக்கம் 56
ஐயுறல் இயல்பே 192
ஒண்கணை 259
ஒப்பில் போலி 20
ஒரு சார்புத் தகவல் 137
ஒழுக்க நெறிகள் மாறுபடற்கு
உரிய 153
ஒளிகால் உருவக் கணை 259
ஒளித்து வாழ் தருமம் 207
கட்டு தவிர்ந்தது ஏன் 226
கடமை உணர்ச்சி
- தான் கலவாதது 50
கடவுள் 229
கட + உள்; கடவு + உள்
கடவுள் கொள்கை 229
- கம்பன், பாரதி 114
கடவுள் கொள்கை 229
- அனுமன்
- பிரகலாதன்
கடன்மை - காத்தல் 216
கடிமரம் வருந்தல் 222
கண்ணின் கூறல்
- நாடகக் குறிப்பு 323
கணமேயும் காப்பரிது 92
கணை தெரிதல் 286
கதிராமங்கலம் 256
கர்மயோகி 570
கர்ம வீரம் 182
கரன் வதை 105, 123
கருப் பொருள் 31
கலி விருத்தம், நாற்பது 329
கழல், கவசம் பூணல் 208
கழிவிரக்கம் 180
களித்தல், மகிழ்தல் 212
- குடி வெறி
களை கட்டல் 251
கற்பனைச் சமுதாயம் 36
கற்பனைத் திளைவு 35
கன்யா சுல்கம் (II - 107) 65, 67
- தயரதன்
(மாற்றமுனைதல்)
- கூனி (மறவாதாள்)
- கைகேயி (மறந்தவள்)
- இராமன் அறிவான்
- பரதன் - குறிப்பாக
அறிவிக்கப் பெறல்.
காட்சிப் பிரமாணம் 145, 192
காத்த அவற்கே கடன் 221
காதலால் உரைத்தல் 307
காந்த மாமணி 76
காப்பான் - அழிப்பானா? 117
காமவெறி - அறிவு மயக்கம் 120
- அரக்கர் இயல் 124
காமவெறி
- குல மானம் போட்டி 126
- பழி வாங்கல் 120
காமாந்தகாரன் -
உயிர்ப்பற்று 279
கால் வண்ணம் 55
காலாதீதன் 234

காவல் இகழ்தல் 220
கிளுகிளுப்பு 57, 301
கீதை 51
கீழ்ந்து கீழ்ப்போதல் 164
கீழ் மகன் 87
குகன்
- அற்புதப் படைப்பு 89
- அன்பின் வடிவம் 86, 104
- அன்புப் பிழம்பு 88
- பரதன் நன்கு அறிதல் 91
குசலம் விசாரித்தல் 47
குதர்க்க வாதம்
கும்பகருணன்
- அற வழியன் 275
- சகோதர பாசம் 275
- நடு நிலை ஆய்வு 277
- முரண்பாடு சுட்டல் 276
குரக்குப் போர் 180
- கல், கட்டை, நகம், பல்
குருநாதர் 26
குழந்தைச் செல்வம் 46
குற்ற உணர்வு 322
குறிக்கோள் இன்மை 57
குறிக்கோள் - தன்மை 45
- அணுகுமுறை வேறுபடல் 282
குறிப்பால் உணர்த்தல் 239
குறிப்பில் உணர்திறன் 184, 235
'குறுங்காப்பியம்' 263
- என்பார் - தெ.பொமீ; வ.வே.சு.
குன்றின் அனையான்
- குன்றினான் 293
குன்று மொய்த்த குருவி 301
கூர்த்த நோக்கு 185
கூனி 0
- கொல்ல இளையவன் முனைதல்
கெடுத்தனை வீடணா 291
கைகேயி
- கணவன் காக்க முனைதல் 71
- தியாகி 71
- வரம் நினைவூட்டல் 68
- வாய் வாளாமை 72
கைம்பெண் தோற்றம் 194
கை வண்ணம்
- செறுநர்த் தேய்த்தல் 55
கொழுந்தி 87
கொற்றவன் ஏவல் மீறற்க 81
கோசலம் - வான்மீகம் அதிகம் கூறவில்லை 35
கோட்டை முற்றுகை 255
ச(க)க் களத்தி 67
சகோதர பாசம் 275
சங்க காலம் 33
சங்கப் பாடல் 30
சடையப்பன் - பழுமரம் 34
சண்டமாருதம் - மாயாவாதம் 264
சத்திய தர்சனம் 27
சந்திரஹாஸம் 116
- சங்கரன் வாள்
சமதர்ம சமுதாயம் 33
சம திருஷ்டி 45, 51, 317

சமய தத்துவ விளக்கம் 25
சமுதாய இயலார் 44
சமுதாயக் காப்பியம் 0
சமுதாய வாழ்க்கை 41
சர்வ பரித்தியாகம் 71
சரணா கதி 23
ஸ்திதப் பிரக்ஞை 51, 85, 317
சாதல் நீங்க
அமிழ்து அளித்தல் 144
சாபம் உண்டு - ஆருயிர்
காத்தது 240
சாபமிடின் - தவ வன்மை
குன்றும் 103
சாலையில் இருந்தவள் 240
சாவு எதிர் நோக்கல் 317
சிலப்பதிகாரம் 31
சிறந்த அரசன்
- இராவணன் 125
சிறை இருந்தாள் ஏற்றம் 44
சுந்தர காண்டம்
- பெயர்ப் பொருத்தம் 199
சீதை
- கான் தரை மேவல் 99
சீவ மரணப்போராட்டம் 303
சுக்கிரீவன்
- துணை கொள்க 131
சும்மா இரு; சொல் அற 154
செருக்கறுப்பு 184
செல்வக் கேசவராயர் 19
செருக்கு 184
செருகு கவிகள் 29
சென்னைக் கம்பன்
கழகப் பதிப்பு 29
- ஐயம் அகல்கிலது

சேவா மனப்பான்மை 183
சைன ராமாயணம் 6
சொல் சாலும் - சுடற்கு 217
சொல் ஓவியம் 21
சொல் மறா மகவு 78
சொல்லின் செல்வன் 236
சௌந்தர்யம்
- உரு 198
- குணம் 199
- தவம் 200
- பக்தி 199
- புலனடக்கம் 200
- வீரம் 200
ஜெனரல் ரோமல் 255
ஞானத்தில் வீரம் 183
தயரதன் - இராமனையே
அறியான் 64
-பரதனையும் அறியான் 64
-பிள்ளைப் பாசம் 52
-வீடு பெறான் 73
தர்மகர்த்தா முறை 34
தர்ம சங்கடம் 49, 82, 268
தருக்க இயல் 22
தலைவன் பண்புகள்
- முன்னிலைப் பராவல் 106
தவம்
- உற்ற நோய் நோன்றல்
- உயிர்க்கு உறுகண்
செய்யாமை 102
தற்கொல்லியை முற்கொல்லி 300
தன்பெருமை தான்
அறியான் 195

தன்மானம் 311
தன்னம்பிக்கை -
அபரிமிதம் 223, 309
தன்னை இழத்தல் 295
தாடகை வதை- பெண்
கொலை அன்று 50
தாமஸ் மூர் 37
தாரக மந்திரம் - ஸ்ரீராம் 139
திண்ணிதின் உணர்தல் 288
திணைப் பிரிவு 31
தியாகி 27
திருத்தல் - செவ்விதாக்கல் 244
திருவடி தொழுதல் (பயன்) 201
திருவாசகம் 187
தீட்சை
- அம்பின் வாய் 141
- ஸ்பர்ஸம்- தீண்டல் 140
- திருவடி 106
- நயனம் 140
தீர்ந்திலன் குலத்து மானம் 315
தீராப் பகைமை 102
துணை கோடல்
- யாவர்க்கும் நன்று 130
துறக்கம்
-நரகம் ஒக்கும் 211
துறந்தும்
- உம்மைச் சிறப்பு 178
தூது - அறச்சார்பு 252
தூ மொழி 86
தெரிந்து செய் தவறு 179
தெரிந்தே தீமைக்குத் துணை
போதல் 132
தெரியக் காணல் 137
தெளிக சிந்தை 288
தெளிந்த மன நிலை 318
- இராமனை உணர்தல்
தேசியக் கொடி போர்ப்பு 200
தேர்வு - குறைந்த தீமை 136
தேரழுந்தூர் - நரசிம்மர்
சிலை 267
தேவர்கள்
- ஐயம் 202
- குறுக்கீடு 96
தொண்டர் - நால்வர் 183
- அவர் தமுள் வேறுபாடு
தொண்டு 201
- உருக் கொண்டது 134
தோன்றாத் துணை 204
தோல்விகள் 311
- கயிலைப் பேர்வு
- கார்த்தவீரியனிடம்
- வாலியிடம்
நகரங்கள்
- உறையூர் 41
- காஞ்சி 41
- காவிரிப்பூம் பட்டினம் 31
- மதுரை 31
நகரச் சிறப்பு 46
நகர வாழ்க்கை 41
- நியூயார்க் 43
- லண்டன்
- வாஷிங்டன் 43
நகை வர நாணுட்கொளல் 138
நடுநிலைப் பிறழ்வு இன்மை 209

நம்பிக்கை - இன்மை 218
- தளிர் விடல் 215
நல் ஈரப் பயன் 204
நன்றி உணர்வு 35
நன்றிக் கடன் 282
நன்றி தெரிவித்தல் 327
நாட்டுக்குச் சிறப்பு 38
- மன்னனா ? மக்களா
நாடக மயில் 6
நாடு
- கோசலம் 31
- சோழ (ன்)
- பாண்டியம்
நாம சங்கீர்த்தனம் 205
நாம மகிமை 314
- கடல் தாண்டுவிக்கும்
- சிறகு வளர்க்கும்
- தலை கொய்யும்
நாய் - நைச்சிக பாவம்
- மாணிக்கவாசகர் 165
- வாலி 165
நாரணன் படை
- வலம் செய்து போதல்309
நாலாயிர திவ்ய பிரபந்தம் 46
'நான் யார் ?' 228
- விளக்கம்
நிமித்தம் பார்த்தல் 258
நிரம்பினான் 171
நில வருணனை 31
நிலை தாழ்தல் -
நிலத்தில் தாழ்தல் 278
நிறை அரசு 171
நின்ற நின் நிலை 320
- நாவினால் சுட்ட வடு
நினைந்து செய் கொடுமை 63
நீடு நினைந்து உளைதல் 322
நீர்க்கடன்
- செய்க எனக்கு 218
- பரதன் உரியன்
அல்லன் 65
நெஞ்சு புகார் 211
நேதி - உபநிடதம் கூறும் 230
நைட்டிகப் பிரமசாரி 297
நொய்ம்மைப் பகுதி 12
பக்தி இயக்கம் 31, 111, 263
பக்தி இலக்கியம் 111
- திருமுறை, பிரபந்தம் 112
பக்திக் காப்பியம் 329
பக்தி வலை 328
பக்தி வைராக்கியம் 329
பகவத், பாகவத அபசாரம் 221
பகை நண்பொடு இல்லான் 144
பகை பாராட்டும் பண்பு 181
பகைவர் பட்டியல்
பகைவன் பாராட்டு 290
பசி தீர் பண்பு 203
பசிப் பிணி 203
பட்ட நல்வலம் பாகம் 134
படைக்கலப் பூசை 301
படைக்கலம் ஈகை 115
படைத்துணை ஆகமாட்டான் 149
படைத் தலைவர் 255
பணி தலை நிற்றல் 82
பதசாரம் 15

பரசுராமன்
- ஆணவத்தன் 52
- தவ பலத்தன் 52
- மிகு சினத்தன் 53
- மூவேழ் முறை
களைகட்டவன் 52
- வீழ்ச்சி 55
- வேத வித்தின் மகன் 53
பர ஞானம் 230
பரஞ்சோதி - சிறுத்தொண்டர்
- விலைப் பொருட்டால்
மகப் பெறலாம் 36
பரதன்
- இராமன் அனையான் 65
- ஐந்தடக்கல் (ஆமை) 96
- சூளுரை 93
- தாயிடம் சினம் 92
- நன்கறிந்தார் இருவர் 93
பரதன் புதிர் 93
- முழு வளர்ச்சி 96
பரம்பொருள் துணை 313
பரம்பொருள் - பஞ்சபூதம் 107
பரிந்துரை நுணுக்கம் 131
பரிவு - இடுக்கண் தரும் 96
பல்லவர் வீழ்ச்சி 32, 248
பழைய சட்டம்
- புது விளக்கம் 49
பற்று - புகல், திருவடி 45
பருந்துப் பார்வை 5
பவித்திரம் 88
பழி வளர் செவிலி 72
பறவைக்கு நீர்க்கடன் 128
பன்னசாலை - இலக்குவன்
சமைத்தது 240
பாசத்தால் கட்டுண்டது
ஏன் 225
பாதாதி கேச வருணனை 210
பால காண்டம்
-வான்மீகி பாடவில்லை 20
பிரபோத சந்திரோதயம் 294
பிரம்மசர்ய விரதன் 294
பிரம்மசர்யத்தை
- காமம் வெல்லாது 297
பிரமன் - புலத்தியன்
- விச்சிரவசு
- இராவணன் 268
- (அயன் மகன் மகன்
மகன்)
பிரவசன கர்த்தாக்கள் 29
பிழைப்பு இழைப்பரோ 90
பிள்ளைத் தமிழ் 47
பிள்ளைப் பிராயம்
- பாடாதது ஏன் 46
பிள்ளையோ பிள்ளை
- விற்பனை 36
பிறர்க்கு என முயலுநர் 182
பிறவிக் கடல் 200
பிறை முகப்பகழி 313
புகழ் எனின்
-உயிரும் கொடுக்குவர் 115
புகழ்க்கு இறுதி ஏது 312
புகும் கேடு 220
புதிய சொரூபம் 317
புதிய பரிமாணம் 96

புதுப்புது உத்திகள் 253
- போர் முறை
புருஷகார பூதை 238
புலத்தியன் 268
- பேரன் - பௌலஸ்தியன்
புலனடக்கம் 40, 196, 201
புலை உறு மரணம் 282
புனல் விளையாட்டு 56
பூசனை 317
- கவலை, காமம், பகைமை, பதட்டம், மனஉளைச்சல் இன்றி
பூவை (மனைவி) பிரிவு
- விளக்கம்
- காரண காரியம் 191
பெண் என நினையல்
- அங்காரதாரை 203
பெண் கொலை
- பண்பன்று 49
பெண்மதிப் பேதைமை 219
பெண்மை
- வடிவம், தன்மை 49
பெரியவாச்சான் பிள்ளை 47
பெரியாழ்வார் 47
பெரியோர் சிறு தவறு 293
பெருங்கதை 31
பெருங்காப்பியம்
- இராமாவதாரம் 33
- பெரிய புராணம் 33
- சாம்ராஜ்ய எழுச்சி / வீழ்ச்சி 32
பெருந்தொழிலதிபர் 43
- தந்நலத்தில் பொது நலம்
பெரு நன்று ஆற்றல்
- சிறு தவறு 136
பெரு வணிகர் 43
- தந்நலத்தில் பொது நலம்
பொது மக்கள் தொடர்பு 47
(311 - / III - 333)
பொருந்தா விடை 153
பொறுத்தி
- தாங்கு, மன்னிக்க 171
போக பௌவம் 325
- விளக்கம்
போட்டிச் சமுதாயம் 4
போர் - அனுமன் 247
316 பாடல்கள்
போர்க்குறிப்பு 247
4818 / 12,000
போர்ப்புறம் 254
- இணைப்பு காண்க
போர்ப் பெருங்கோலம் 94
போர் பற்றிப் பாட வாய்ப்பு 122
போரிடை ஒய்வு 300
பௌராணிகர்
- கதை பரப்புநர் 29
மக்கள் மன வளம் 39
மக்கள் வளம் 44
மக்கள் 37
- நாடு / நகரம்
- மதுரைக் காஞ்சி
மகன் பலி 315
மடமான் 86

| | |
|---|---|
| மடவோர் காட்சி | 283 |
| மணிமேகலை | 31 |
| மதுர பாவனம் | 182 |
| மந்திரம் | |
| - சொற்சிறப்பு | 59 |
| - வடிவுண்டு | 139 |
| (மந்திர திருஷ்டா) | |
| மந்திராலோசனை | 61 |
| மராட்டியர் - போர் | 258 |
| மருத நில வர்ணனை | 31 |
| - சம்பந்தர் பாடல்கள் | |
| மலை வருணனை | 31 |
| - சம்பந்தர் பாடல்கள் | |
| மற்றீண்டு வாரா நெறி | 186 |
| மறைந்திருந்து தாக்கும் | |
| மர்மம் | 134 |
| மன்னராட்சி | 31 |
| மன்னிப்பு கோரல் | 175 |
| மன்ற மாசற்ற | |
| - சில சொலல் | 227 |
| மனத் தொய்வு | 23 |
| மன நிலை ஐயுறல் | 320 |
| மன் நெருடல் | 35 |
| மனம் மனை புகார் | 213 |
| மன மாற்றம் | 306 |
| மன வண்ணம் | 55 |
| மனவியலார் | 44 |
| மனவியல் அறி திறன் | 189 |
| மனித சமுதாயம் | |
| - பிரதி பலிப்பு | 132 |
| மனையின் நீங்கல் | 237 |
| மாசில் புகழ் அவாவல் | 276 |
| மாதர் நலம் பேணாமை | 211 |
| மாற்றம் | |
| - அனுபவம் | 143 |
| - மனநிலை | 143 |
| மாற்றான் வலி | 224 |
| மானம் பேணல் | 283, 311 |
| மீ மனிதன் | 246 |
| முண்டக உபநிடதம் | 265 |
| முடி சூட்டு | |
| - குறிப்பு | 323 |
| மும்மலக் கட்டு | 319 |
| முரணில் முழு முழுதல் | 107 |
| முழு மாற்றம் | 159 |
| முழுமை மனிதர் | 44 |
| முனிவரர் | 103 |
| மூக்கரிவு | 128 |
| மெய்ஞ்ஞானம் | 230 |
| மெய்ம்மைப் பட்டியல் | 185 |
| மெல்லியல் | 218 |
| - Weeker Sex | |
| - குழப்பம் மிகும் | 219 |
| மொக்குள் - யாக்கை | 311 |
| மௌன நாடகம் | 292 |
| யாரையோ நீ | 228 |
| ரூப சௌந்தர்யம் | 199 |
| வஞ்சினம் | 93, 316 |
| வசிட்டர் | 48 |
| வர துஷ்பிரயோகம் | 168 |
| வரிசிலைக் கல்வி | 289 |
| வளம் | 41 |
| கனி, நீர், மண் | |
| மனம், விளைச்சல் | |

வள்ளன்மை 34

வழிபடு தெய்வம்

கண் காணல் 158

வழுவாய் - கழுவாய் 173, 322

வறுமைக் கோடு 43

வன்முறைத் தவிர்வு 250

வாங்கு - ஏந்து, வளை 53

வாய்த்த வாய்ப்பு வழுவற்க 146

வாலி 194

- அனுமனை நன்கு அறிவான்

- இராமனை அறிவான் 137

- உறுதிப் பொருள் கூறல் 144

- வரம் வேண்டல் 148

வானப் பிரஸ்தம் 79

விஜயாலயன் 247

விச்சிரவசு

- குபேரன்

- (வைச்ரவணன்)

விசுவரூபம் 197

விசுவாமித்திரன் 48, 51

- காயத்ரி மந்திரம்

- பிரம்ம ரிஷி 51

- புதிய உலகு செய்தான்

விடை பெறா வினாக்கள் 150

வித்யா கர்வம் 230

விராட் ஸ்வரூபம் 266

விராதன் 101

விருப்பு வெறுப்பு இல்நிலை 142

விருந்து பரிமாறல் 191

வில் அறம் துறப்பு

- வேண்டும் என்றே 170

வில்லார் தோள்

- கருத்துடை அடை 188

விளையாட்டரங்கம் 43

வினவற்க - வினை செய், அன்றி வீடு 81

வீட்டரசு 172

வீடணன் 104

- தந்த வெற்றி 292

- தவ வாழ்க்கை 268

வீடு பேறு

- இலக்கணம் 110

வீடும் வேண்டா 214

வீரம் கொலை அன்று 250

வீரம் பாராட்டல் 284

வீழ்ச்சி - முதற்படி 223

வீறு சால் உரை 217

வெஞ்சிறை வீடு 221

வெஞ்சின விதி - வேறல் அரிது 219

வென்றி உரைக்க

- வெள்கல் 242

வேண்டுகோள் மறுத்தல் 216

வேதஸ்வரூபி 232

வேதவதி 280

வேள்வி -

இந்திரப் பெரும்பதம் 113

வேறல் அரிது 219

வைத வாய் வாழ்த்தியது 163


*****

## பின் இணைப்பு
## போர்ப் புறம்
## பணி

### வானர சேனை

வடக்கு வாயில் 6952
தலைமை : இராமன்
சேனை : 17 வெள்ளம்
தெற்கு வாயில் 6951
தலைமை : அங்கதன்
சேனை : 17 வெள்ளம்
கிழக்கு வாயில் 6951
தலைமை : நீலன்
சேனை : 17 வெள்ளம்
மேலை வாயில் 6950
தலைமை : மாருதி
சேனை : 17 வெள்ளம்
உணவு, விநியோகம்
தலைமை : வீடணன்
சேனை : 2 வெள்ளம்
ஆக 70வெள்ளம்
6952, 8703

### அரக்கர் சேனை

வடக்கு வாயில் 6967
தலைமை : இராவணன்
சேனை : 200 வெள்ளம்
தெற்கு வாயில் 6964
தலைமை : மகோதரன்
சேனை : 200 வெள்ளம்
கீழை வாயில் 6963
தலைமை : பிரகத்தன்
சேனை : 200 வெள்ளம்
மேலை வாயில்
தலைமை : இந்திரசித்தன்
சேனை : 200 வெள்ளம்
நெடுநகர் காப்பு,
உணவு விநியோகம்
தலைமை : விரூபாக்கன்
சேனை : 200 வெள்ளம்

### போர்க்கோலம் பூணல்
### 9645

1. கவசம் பூணல்
   7113, 7127, 7347
   (இக் கவசம் மடைமாண்டது; போரமை புணர்ப்பிற்று)
2. காலண கழல்
   7126, 9649
3. கச்சொடு செறித்த கதிர்வாள்
   7125, 9646
4. கேடகம் ஏந்தல்
   7606
5. விரல் புட்டில் (கோதை) பூணல்
   7128, 9650
6. தூணி தூக்கல் 7130
   தோள் : மலை
   தூணி : புற்று
   (உவமம்)
7. (இடக்கை) வில் ஏந்தல்
   7112, 7132
8. சங்கம் முழக்கல்
   இராவணன் 9731
   பாஞ்சசன்னியம்
   தானே முழங்கல் 9732

9. கொடி உயர்த்தல்

உருமு
கருடன் 9790
(தானே அமர்தல்)
சீயம் 7381
பேய்
வீணை 7117, 9789

10. தும்பை சூடல்
7113, 7131, 9657
தும்பையொடு துளவம் (இராமன்) சூடல்
கவட்டிலை ஆர், துளவு, தும்பை
( ஃசூரியன்மரபு - சோழன்)

11. நாண் தெறித்தல்
குணத்வனி
7112, 7139, 7158, 7240
இவ் ஒலி கேட்டு இரியல் போவர் பகைவர். இலக்குவன் குணத்வனி கேட்ட இராவணன் 'என்னே இவன் ஒரு மனிசன்' எனல் 7159

12. கொடி வீழ்த்தல்
9789

13. ஏறு தேர்க்கு இயற்று வழிபாடு
9665

14. படைகட்கு வழிபாடு
8628

15. இருளில் ஒளி பெற அனலிப் பகழி
3620, 8629

## வானர வீரர்

| | |
|---|---|
| அங்கதன் | 6714 |
| அனுமன் | 6448 |
| இடபன் | 6891 |
| கவயன் | 6889 |
| கவயாக்கன் | 6889 |
| கனகன் | 8617 |
| குமுதன் | 6889 |
| குமுதாக்கன் | 6889 |
| கெந்தமாதனன் | 8618 |
| கேசரி | 6890 |
| சங்கன் | 6892 |
| சதவலி | 6891 |
| சரபன் | 6891 |
| சுசேடணன் | 8618 |
| சுக்கிரீவன் | 6420 |
| தம்பன் | 8617 |
| ததிமுகன் | 6892 |
| துமிந்தன் | 6403 |
| நளன் | 6674 |
| நீலன் | 6439 |
| பனசன் | 6717 |
| மயிந்தன் | 6403 |
| முரபன் | 6890 |
| வினதன் | 8618 |

## அரக்க வீரர்

| | |
|---|---|
| அகம்பன் | 8535 |
| அதிகாயன் | 7737 |
| அரன் | 6377 |
| அனலன் | 6377 |
| அனிலன் | 6377 |
| இந்திரசித்தன் | 6128 |
| இராவணன் | 6072 |
| கஞ்சுகி | 7272 |
| காலன் | 7849 |

| | |
|---|---|
| கும்பகருணன் | 6117 |
| கும்பன் | 7962 |
| கும்பானு | 7078 |
| குலிசன் | 7849 |
| சம்பாதி | 6377 |
| சாரன் | 6773 |
| சார்த்தூலன் | 6953 |
| சிங்கன் | 8410 |
| சுகன் | 6773 |
| சுபாரிசன் | 7096 |
| சூரியன் பகைஞன் | 6113 |
| சோணிதக் கண்ணன் | 8410 |
| தாருகன் | 7846 |
| திரிசிரத்தன் | 7901 |
| துன்முகன் | 6101 |
| தேவாந்தகன் | 7890 |
| நராந்தகன் | 7934 |
| நிகும்பன் | 6959 |
| பிசாசன் | 6112 |
| பிரகத்தன் | 6085 |
| புகைநிறக் கண்ணன் | 6115 |
| போர் மத்தன் | 7940 |
| மகரக் கண்ணன் | 8408 |
| மகோதரன் | 6092 |
| மயிடன் | 7758 |
| மருத்தன் | 7278 |
| மனகதி | 7278 |
| மாமேகன் | 7278 |
| மாபெரும்பக்கன் (மகா பார்சுவான்) | 6108 |
| மாலி | 6959 |
| மாலியவான் | |
| வச்சிர தந்தன் | 6098 |
| வச்சிரமுட்டி | 7068 |
| வன்னி | 9284 |
| வயமத்தன் | 7953 |
| வாயுவேகன் | 7278 |
| விரூபாக்கன் | 6966 |
| வீடணன் (அப்பாலான்) | |
| வேள்விப் பகைஞன் | 6114 |

## அரக்க மாதர்

| | |
|---|---|
| • தானிய மாலை | 7991 |
| திரிசடை | 8692 |
| • மண்டோதரி | 9229 |

(• புலம்பல் சிறப்பின)

## பேரிசை, போரிசை இயங்கள்

| | |
|---|---|
| அம்பலி | சங்கம் |
| உறுமை | செண்டை |
| ஊளமை | தக்கை |
| கம்பலி | தார்முரசம் |
| கரடிகை | திமிலை |
| கண்டை | துடி |
| கணுவை | தூரி |
| குறடு | பம்பை, பணவம் |
| கும்பிகை | பாண்டில் |
| கொட்டி | பேரி |
| சகடை | முரசம் |
| | வேய் |